A CRITICAL STUDY OF MULLAI-T-TINAI IN SANGAM LITERATURE

A THESIS RE-SUBMITTED FOR THE DEGREE OF
DOCTOR OF PHILOSOPHY
OF THE
UNIVERSITY OF MADRAS

OCTOBER 1977



BY

J. ANNAMALAI, M. A.,
ASSISTANT PROFESSOR OF TAMIL
PRESIDENCY COLLEGE,
MADRAS - 600 005

டாக்டர் மெ. சுந்தரம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
தலைமைத் தமிழ்த்துறைத் தலைவர்,
மாநிலக் கல்லூரி,
சென்னை-600 005

மேற்பார்வையாளர் சான்றிதழ்

'சங்க இலக்கியத்தில் முல்லைத்திணை' என்னும் தலைப்புள்ள ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் (Doctor of Philosophy) பெறுவதற்காக மாநிலக் கல்லூரித் தமிழ் பேராசிரியர் திரு ம. [illegible], எம்.ஏ. அவர்கள் 1970 அக்டோபர் முதல் 1977 அக்டோபர் வரை ஆய்வு நிகழ்த்தி எழுதியதாகும். இதன் எப்பகுதியும் வேறு பட்டத்திற்கோ தகுதிக்கோ அளிக்கப் பெறவில்லை என்பதையும் இது அவருடைய சொந்த முயற்சியின் பயன் என்பதையும் நான் சான்றளித்து வழங்குகிறேன்.

சென்னை-600 005.

(மெ. சுந்தரம்)

Dr. M. Sundaram, M.A., M.Litt., Ph.D.,
Chief Professor of Tamil,
Presidency College,
Madras - 600 005

CERTIFICATE BY THE SUPERVISOR

This is to certify that the thesis on 'A Critical Study of Mullai-t-tinai in Sangam Literature' resubmitted by Thiru J. Annamalai, M.A., is a record of research work done by the candidate during the period of study under me from October 1970 to October 1977 and that the thesis has not previously formed basis for the award of any Degree, Associateship, Fellowship or other similar title.

Madras 600 005.

(M. SUNDARAM)
Supervisor

Chief Professor & Head of the Dept. of Tamil
Presidency College, Madras-5

உறுதியுரை

சங்க இலக்கியத்தில் முல்லைத்திணை (A Critical Study of Mullai - t - tinai in $S_a$ngam Literature) என்ற இந்த ஆய்வுக் கட்டுரை, சென்னைப் பல்கலைக்கழகத்தின் டாக்டர் பட்டம் (Doctor of Philosophy) பெறுவதற்காக, நானே சொந்தமாக எழுதியது என்றும், இது நானே சொந்தமாகச் செய்த ஆராய்ச்சியில் உருவானதென்றும், இதற்கு முன்னர் வேறு எந்த தகுதிக்கும் (Degree) டிப்ளோமாவுக்கும் (Diploma) இணைப்பட்டப்படிப்புக்கும் (Associateship) பெல்லோஷிப்புக்கும் (Fellowship) இது அடிப்படையாக அமையவில்லை என்றும் இதன் உறுதி கூறுகிறேன்.

சென்னை-600 005

(இ. தங்கமணி)

CERTIFICATE BY THE CANDIDATE

This is to certify that this thesis 'A Critical Study of Mullai-t-tinai in Sangam Literature', Resubmitted by me for the Degree of Doctor of Philosophy, University of Madras, is an original work, that it represents independent research done by me and that this has not previously formed the basis for the award of any Degree, Diploma, Associateship, Fellowship or other similar title.

Madras.

(J. ANNAMALAI)

காணிக்கை

முதல்-கரு-உரிப்பொருள்கள்

நிலைமண்டில ஆசிரியப்பா

பண்டைப் புலவர் இயற்கையை நோக்கித்
தமிழகச் சான்றோர் தகைசால் வகையே
நாவலர் மெச்ச நவின்றனர் நயந்தே;
அவைதாம்,
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.
முல்லை பெய்பழ மொழிந்த நாட்டின்
முற்கால் வைத்த மொழிந்த சிறப்பர;
'புலாற் பெயர்பெறும் புறமைத் திணையே'
என்பர் சிலரோ; 'இருபொருள் உரிப்பொருள்
தன்றற் பெற்றதத் தகைசால் பெயரே'
என்றனர் சிலரோ; எனினும், புலாற்
பெற்ற காரணப் பெயரே தலைமைச்
சாற்றினர் மேலோர்; தகைசால் நிலைக்
காடும் காட்டிடைக் கலந்தச் சார்ந்த
இடமே இயம்பினர்; இவையதற் பொருளாம்;
காலம் மாலையும் கார்ப் பருவம்;
குறும்பொறை நாடன் குறிச்சி சிறப்பின்
தலைவன்; கற்பின் தவறாத் தலைவி
மனைவி; தலைவன் மறுபெயர் குறும்பன்;
இடையர் ஆயர் அறவா ஆய்ச்சியர்;
மாயோன் தெய்வம் ஆகும்; காமம்
சாமமும் தெய்வமாய்ச் சாற்றல் ஒம்பு.
கருந்தொடு காயா குருந்தும் மரங்கள்;
முல்லை முல்லை குவளையும் மலர்கள்;
கான வாரணம் கருப்பும் பறவை
புல்லும் விலங்காய்ப் பொருந்த மெய்ய;
ஏறுகோட் பறையும் இயம்புகா நாரும்
முல்லையாழ் என்னாம் மொழிந்தனக் கருவிகள்;
ஆநிரை மேய்த்தல், முதிரா வரகு
அரிதல் முதலன முல்லையர் தொழிலே.

பாடு வெய்பத பகலுள்; குரவ
காவ்யா டேக் கஞ்ஞமார் தட்டம்;
உவராய்க் கோடல் உற்று வரத
முந்தை சாமை முதலிய பொருள்கள்;
உத்துமீர் காவ்யா(ம்) உவத்தேத கோடலம்
மற்றவர் மனவினைக் குற்றதற் சிறப்பாம்
வேற்றைப் பொருளோ ஆவைத்தநல் வாழ்வே
முன்னோர் நிலையில் முன்னிய துவ்வே.

தலைவன் — தலைவி — செவிலி — தோழி

தன்னிய நிலைத் தலைவன் தலைமகன்
பிரிவில் தலைவி பேதை நிலையைய்
சென்றுறு தலைவி கற்றும் செவிலியும்
தோழியும் தேதூதும் சொல்லி துற்றவர்;
'இல்லெ வரவர்; இல்லை நீங்கி' என
தெய்வம் வாழ்த்துவர்; நீத்தால் மிகுத்தவர்;
எல்லாம் காட்டுவர் நீம்பி உசாவுவர்;
துயர் மக்களின் தலைவும் உயர்ந்தோர்
தலைமகன் தலைவி தாயைத் தேர்வோர்;
வாட நலிந்தநால் வாடிய தலைவி
காகா வற்றுக் கழிய நாட்டம்
ஒருவ ஒப்பதெய் தேடிய பகைவர்
போலவே தலைவன் பெட்பில் நல்லறி
இதனை பாடாத் தூதெல் எல்லை
வற்றேதோர் கழிதம் எற்புறக் கதியர்;
என்றனம் தனியெரும் வளாற்ற அதிலை
அதிர மகிழ்கிறேன்! துவற்றும் இல மகளே.

புறக்கூற்றுக்கள் — உவமை — வரலாறு

களவுப் புணர்ச்சி அறு தொழிலும்
ஏற தலைவோன் எதிர்பெற மங்கையை
நம்மவர் புகழும் நடத்திரை துணை;
நீலம் புனைநர் எதிராயர் மகிர்;
கைத்தில் பரிசேம மாதுற வீரமாய்;

'பூந்தொடைத் தூப்பவர் கோலும்
கோவலர் வாழ்க்கையினர் கொழும்பா டிடை;'
பாலும் தயிரும் பசும்புல் நெய்யும்
விற்பர் மகளிர்; வீட்டு நெய்யில்
பிசைவைப் கொண்டு வெறும் வாக்கல்
வாக்கில் செவ்வ வழுத்தினைப் பெறக்குவர்;
நடுகல் பெய்க்கும் விலைட ருவர்
தோளில் உறியும் தைதவு உடையும்
தொட்டையும் கொடும் கோல்வாள் மதுத்த
பிலேயும் உடையர்; விருவிர மாவ
குயிர கறப்பர், தலைதரும் பாலோ
ஒக்கூட மாமிதை மொல்லதால் காக்கவே
பாலினைத் தாழிப் பரட வழிப்ப
எட்டல் பிற்றல் காம்மத்தால் கடைவர்;
வெண்ணெய் பெருக்கம் கீடம் வாங்கி;
வேகம் பொறுமிருக் கீழட்டி செய்தயிர்
ஒருகொட் பறைய நீவத்தவர் புகைப்பர்
ஏழ நாழுவோர் ஒற்றர் காவ
பிடட்டில் மாவைமி பெருக வழித்த
நீர் பவ்வை தேர்ந்த சேவகவைக்
காவர்; குறிவ் கொல்லேற்றம் கொட்டுமை
நூக்கிவோன் நக்கை குயர் மகளிர்
மனையும் புகார் விரவியெ வெய்யும்
பிரிகல் வழிமை முரப்புமும் சிறுந்தவை
முக்கை கவியும் முக்கைப் பாட்டும்;
சக்கப் புகல் சாற்றிய வெல்லாம்
சீரிட முக்கைத் பிணைமி சிறப்பே;
வைகல்மொழுமியர் பூக்கும் நல்லவை
முலக் போலம் முல்லை முகிய
விடியால் எல்ல செல்விய வெல்லும்
நம்பிக் நயிநால் போலம் எப்படி
நம்பிக்கை மறால் நல்லிறம் போலம்
எட்டும் சிறந்தால் நிலமியர்; தாவிப,
பூட்டைக் கறியும் புறப்புற வளமைகள்
தொக்கும் பாதவர் தோமய புவர்;

ஏற நறிய இலேளைப் பற்றிக்
கரிய உவமைக் கௌவும் பெற்றிய;
உள்ளத் தெழும் ஒப்பமை நுவைநாம்,
கற்றிலே உரைத்த சொற்றவ சென்றும்
நுவைத் தாமா நல்லிசைத் திரைபதி
தமையவே கர்த்தன பேரமை தென்றும்
தச்சா நடைபுத் தகவுறு வாய்ந்த
வியன் போற்ற வெண்மை தென்றும்
கரிய நுலேக்கும் சொத்தகை ஆப்பாம்,
நக்கீரர் முதலிய நல்லிசைப் புலவர்
தற்றிய வேட்ட நாட நறுவாம்
நாட்டைத் புகழ்ந்த நன்றமை புலமை.;
சொல்லேறு நறிய சொற்றம் வாய்த்தமிழ்
நவர் முறைமை நல்மற உவர்;
பாண்டிய மன்னர் பல்புகழ் பரவுவர்;
நவை பஃறுளி யாற்றொடும் முனி
மலையும் கடல்கொள் மாய்த்தமிழ் கடாம்
மேவும் கன்னையும் ஏற்ற சிறப்பினைப்
பாவலர் புலவர் பன்னுவித் திளைபவே;
தமிழ்நாட் டரசும் நற்சொல் பலவும்
அமிழ்தம் தமிழால் அன்புவித் திளைய
பாவரும் இலக்கிய வழக்கு தமிழ்ச்
சமைந்த தலைத்த தலைசிய முறையை-
புலமைச் சுவைட மேற்கொண் டுப் பெயர்க்
காக்கைக் காலமே வழியும் கழிந்தே.

உள்ளுறை

படங்கள்

பின்னிணைப்பு

நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழகம் 1970 அக்டோபர் முதல் இவ்வாய்வினை மேற்கொள்ள உதவி வழங்கியமைக்கு நன்றியுடையேன். இவ்வாராய்ச்சிக்கு அன்பும் ஆதரவும் நல்கிய முன்னாள் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திருவாளர் பத்மஸ்ரீ நெ.து. சுந்தரவடிவேலு, எம்.ஏ., எல்.டி. அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி. குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கவியலா நிலையில் என் வேண்டுகோளுக்குப் பரிவு காட்டி மேலும் 1976 ஏப்ரல் வரை கால நீட்டிப்பு வழங்கியமைக்கும் மறுமுறைக்கு 1977 அக்டோபர் வரை உதவி வழங்கியமைக்கும் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திருவாளர் பத்மபூஷண் டாக்டர் என். மால்கம் ஆதிசேஷய்யா, எம்.ஏ., பிஎச்.டி. அவர்களுக்கு மிகவும் நன்றி செலுத்தக் கடப்பாடுடையேன்.

சென்னை, மாநிலக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி. அவர்கள் என்னைத் தம்பால் 1970 அக்டோபர் முதல் 1977 அக்டோபர் வரை ஆராய்ச்சி ஆசிரியராக ஏற்றுக்கொண்டு பல்லாற்றானும் ஆராய்ச்சிக்குரிய வழிமுறைகளை வகுத்துத் தந்து வழிகாட்டி உதவியமைக்கு என் வாழ்நாள் முழுதும் நன்றிக் கடப்பாடுடையேன். அவ்வாறே அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் வ.சுப. மாணிக்கம், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி. அவர்களுக்கும் மதுரைப் பல்கலைக்கழக இணைத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் இராம. பெரிய கருப்பன் (தமிழண்ணல்), எம்.ஏ., பிஎச்.டி. அவர்களுக்கும் நன்றிக் கடப்பாடுடையேன். இவ்வாய்வுக் கட்டுரையை மெய்ப்பார்த்து உரிய நற்கருத்துகளை வழங்கிய பெரியார் சென்னை மகாவித்துவான் மே.வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்களுக்கும், சென்னைப் பல்கலைக்கழகத் திருக்குறள் துறைத் தலைவர் வித்துவான் மு. சண்முகம் பிள்ளை அவர்களுக்கும் மிகவும் நன்றியுடையேன். இவ்வாய்வுரை சிறப்புற அமையவும் முழு உருப்பெறவும் அவ்வக் காலங்களில் என்னை ஊக்குவித்தருளிய சென்னை, பச்சையப்பன் கல்லூரி முன்னாள் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம்.லிட். அவர்களுக்கும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி. அவர்களுக்கும் டாக்டர் ந. சஞ்சீவி, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி. அவர்களுக்கும் என் உளமார்ந்த பணிவான நன்றி. நிழற்படங்களுக்கு உதவிய ஓவியர் திரு [illegible] அவர்களுக்கும் என் நன்றி.

நூல் பெயர்ச் சுருக்கம்

அகம்:	அகநானூறு
இறையனார்:	இறையனாரகப் பொருள்
ஐங்:	ஐங்குறுநூறு
ஐந்.எழு:	ஐந்திணை எழுபது
ஐந்.ஐம்:	ஐந்திணை ஐம்பது
கம்ப:	கம்பராமாயணம்
கலி:	கலித்தொகை
களவழி:	களவழி நாற்பது
குறிஞ்சிப்:	குறிஞ்சிப்பாட்டு
குறுந்:	குறுந்தொகை
சிலம்பு:	சிலப்பதிகாரம்
சிறுபாண்:	சிறுபாணாற்றுப்படை
சீவக:	சீவக சிந்தாமணி
சேந்:	திசேந்தன் திவாகரம்
திணை.ஐம்:	திணைமொழி ஐம்பது
தொல்:	தொல்காப்பியம்
நம்பி:	நம்பியகப்பொருள்
நற்:	நற்றிணை
நெடுநல்:	நெடுநல்வாடை
பட்டினப்:	பட்டினப்பாலை
பதிற்:	பதிற்றுப்பத்து
பரி:	பரிபாடல்
புறம்:	புறநானூறு
புற.வெ:	புறப்பொருள் வெண்பா மாலை
பெரும்பாண்:	பெரும்பாணாற்றுப் படை
பொருநர்:	பொருநராற்றுப் படை
மதுரைக்:	மதுரைக்காஞ்சி
முருகு:	திருமுருகாற்றுப் படை
முல்லைப்:	முல்லைப் பாட்டு

முன்னுரை

தமிழக வரலாற்றிலே சங்ககாலம், பொற்காலம். அக்காலம், இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது. சங்ககால மக்களின் அகவாழ்வையும் புறவாழ்வையும் ஒருசேரக் காட்டும் காலக்கண்ணாடிகளாகத் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப் பாட்டு ஆகிய நூல்கள் சிறந்து விளங்குகின்றன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைகளுள் முல்லைத் திணையின் முதல், கரு, உரிப்பொருள்கள் மேற்கூறிய நூல்களில் பலவாறு விதந்தோதப் படுகின்றன. தொல்காப்பியம் முல்லைத்திணையை முதற்கண் வைத்து 'முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்' எனவும், 'முல்லை முதலா' எனவும் போற்றுவதை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே 'காரும் மாலையும் முல்லை' என முல்லைத்திணைக்குரிய பெரும்பொழுது சிறு பொழுது ஆகியவற்றையும், 'மாயோன்' என முல்லைநிலத் தெய்வத்தையும், 'ஆயர்' என முல்லை நில மக்களையும் முதற்கண் கூறியுள்ளமை சிறப்பாகச் சுட்டத்தக்க செய்தி களாகும். மேலும், முல்லைத்திணையின் உரிப்பொருளாகிய இருத்தலை ஏனைய திணை களின் உரிப்பொருட்களுக்கு நடுவாக, 'புணர்தல் பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல்' எனக் குறிப்பிட்டதையும் கண்டு தெளிதற்குரியதாகும்.

தொல்காப்பியம் முல்லை நிலத்தை 'மாயோன் மேய காடுறை உலகம்' என முதற்கண் வைத்துப் போற்றியிருத்தலைப் போல எட்டுத்தொகையுள் முதல் நூலாகிய நற்றிணை மாயோனை முதற்கண் கடவுள் வாழ்த்தில் 'மாநிலஞ் சேவடி யாக' எனப் போற்றித் தொடங்கியிருத்தலைத் தனிச்சிறப்பாகக் கருதலாம். பத்துப்பாட்டுத் தொகுதியில் உள்ள அகம் சார்ந்த நூல்களுள் முல்லைத்திணைக்குரிய முல்லைப்பாட்டு முதற்கண் இடம் பெற்றுள்ளமையும் கண்டு அறிதற்குரியது. அவ்வாறே சங்கமருவிய காலத்துத் தோன்றியதாகக் கருதப்படும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள 'கார் நாற்பது' அகம் சார்ந்தவற்றுள் பிற திணைகள் பெறாநிலையில் முல்லைத்திணைக்கு மட்டும் உரிய ஒரு நூலாய் முதற்கண் விளங்குவதும் கண்டு தெளிந்துகொள்ளத்தக்கது.

இவ்வாறு முல்லைத்திணைக்குரிய முதல் கரு உரிப்பொருள்கள் சங்ககாலத்திற்கு முன்னும் பின்னும் பலவாறு சிறப்பிக்கப்பட்டிருந்தமை அறிந்த நிலையில் முல்லைத்திணைப் பற்றிய ஓர் ஆய்வுக் கட்டுரையை எழுத வேண்டும் என்னும் பேரவா தோன்றிற்று. அவ்

வெளிவந்திருக்கும் உரைகளையும், பேராசிரியர் பி.டி. சீனிவாச ஐயங்காரின் தமிழர் வரலாறு (History of the Tamils), மறைமலை அடிகளாரின் முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, டாக்டர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரின் முல்லைப்பாட்டு (Mullai-p-pattu), டாக்டர் மு. வரதராசனாரின் முல்லைத்திணை ஆகிய நூல்கள் அமைந்தன. மேலும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் முல்லைத்திணை பி.எச்.டி. பட்ட ஆய்வுக்கு மேற்கொள்ளப்படவில்லை என்பதும் மற்றுமொரு காரணமாய் அமைந்தது. இதுவரையில் ஐந்திணைகளுள் பாலைத்திணையைத் திரு ஆர்.சே. நாகு அவர்களும், மருதத் திணையைத் திரு வி.டி. மாணிக்கம் அவர்களும், நெய்தல் திணையைத் திரு டி. முத்து கண்ணப்பன் அவர்களும் ஆய்ந்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர்.

2381 சங்கப் பாடல்களுள் 1862 பாடல்கள் அகப்பாடல்களாகத் திகழ்கின்றன. இவற்றுள் 237 பாடல்கள் முல்லைத்திணைக்குரியவையாய் விளங்குகின்றன. அவை முறையே நற்றிணை 30, குறுந்தொகை 45, ஐங்குறுநூறு 100, பரிபாடல் 3, கலித்தொகை 17, அகநானூறு 40, முல்லைப்பாட்டு 1, நெடுநல்வாடை 1 என அமைகின்றன. மேற்கூறிய 237 பாடல்களையும் புலவர் எழுபத்தெழுவர் பாடியுள்ளனர். இவற்றுள் ஆசிரியர் பெயர் காணாப் பாடல்கள் 6. முல்லைத்திணையை மட்டும் பாடிய புலவர் ஒன்பதின்மர். எட்டுத்தொகையில் முல்லைத்திணையைப் பாடிய புலவராய்ப் பேயனும், முல்லைத்திணையை மட்டும் பாடிய புலவராய் நல்லுருத்திரனும் திகழ்கின்றனர். பத்துப்பாட்டில் முல்லைத்திணையை மட்டும் பாடிய புலவராய் நப்பூதனார் விளங்குகிறார். மேற்கூறிய 237 பாடல்களுக்கு மேல் வேறு உரிப்பொருள்களைக் கொண்ட முல்லைத் திணை ஆய்வுக்கு உரிய சான்றுகளாய் அமைகின்றன. டாக்டர் ஆர்.சே. நாகு, டாக்டர் வி.டி. மாணிக்கம், டாக்டர் டி. முத்து கண்ணப்பன் ஆகியோர் தம் ஆய்வு நூல்கள் முல்லைத்திணை ஆய்வுக்குப் பெருந்துணையாய் அமைகின்றன.

இன்றியமையாமை கருதிப் பத்துப்பாட்டில் பெரும்பாணாற்றுப்படையும், பதினெண் கீழ்க்கணக்கில் ஐந்திணையும் இன்ன பிறவும் ஒரோவழி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாய்வுரை, ஏழு பிரிவாகப் பகுக்கப்பட்டு பதினொரு இயல்களில் ஆராயப் படுகிறது. அவை வருமாறு:

1. முல்லைத்திணை, 2. தெய்வம், 3. ஊர், 4. செடி கொடி மரங்கள் 5. விலங்குகள், பறவைகள், 6. முல்லைத்திணை மாந்தர், 7. உவமை நயம்,

8. பழக்கவழக்கங்கள், 9. வரலாற்றுக் குறிப்புகள், 10. முல்லைத்திணைப் புலவர்கள், 11. முடிவுரை.

1. முல்லைத்திணை

முல்லை, குறிஞ்சி, முல்லைத்திணைக்குரிய முதல் கரு உரி, நானிலத்துள் முதன்மையானது முல்லை நிலம், முல்லைப் புறவம் எனவும் பெயர்பெறும், முல்லை வளமை முதலிய செய்திகள் ஆராயப்படுகிறது. மேலும், 'முல்லை என்ற பெயர் பூவால் பெற்ற பெயரா, ஒழுக்கத்தால் பெற்ற பெயரா?' என்பதும் ஆய்வு செய்யப் படுகிறது. முல்லைத்திணைக்குரிய காலம் மாலையும் சிறப்பாய்வு செய்யப்படுகின்றன. கார், மாலை, பற்றி புலவர்களின் கார்காலம் குறித்த வரும் தொடர்கள், மேகத்தின் தோற்றம், உயிர்களின் பெரும் பெயர்ச்சி, மாலைப்பொழுது, மாலைக்கால நிகழ்ச்சிகள் முதலியன விளக்கப்பட்டுள்ளன.

2. தெய்வம்

முல்லையின் மாயோன் பெரும் தமிழ்ச்சிறப்புகள் பரிபாடல் முதல் இலக்கியங்களில் படுகிறது. தெய்வ வழிபாட்டு முறை, மாயோன் திருவுரு, திருமால் பெருமை, திருமால் அவதாரம், திருமால் திருவடி, தொல்காப்பியர் நிலம் முதலியன சிறப்பாக நோக்கப்பட்டுள்ளன.

3. ஆயர்

முல்லை மக்கள், ஆயர் நிரை மேய்த்தல், ஏறு தழுவல் ஆயர்தம் கொண்டாட்டம், குழல் இசைத்தல் முதலிய பொருள்கள் இதன்கண் ஆராயப்பட்டுள்ளன. ஆயர், போர்வீரர் என்றும் தொழில்வகை முல்லைப்பாடல்களில் இருவகையாக இடம் பெறுகின்றனர் என்பதும், நச்சினார்க்கினியர் முல்லைக்கலிப்பாடல்கள் பெறுகின்றன என்பதும் காட்டப்பட்டுள்ளன. முல்லைக்கலியில் மட்டுமே காணும் ஏறு தழுவல் குறிப்புச் சிறப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

4. செடி கொடி மரங்கள்

'செடி கொடி மரங்கள்' என்னும் தலைப்பில் முல்லை, பிடவம், தளவம், தோன்றி முதலிய செடி கொடிகளும் கொன்றை காயா முதலிய மரங்களும் சிறப்பாக விளக்கப்படுகின்றன. மேலும், முல்லைத்திணைப் பாடல்களில் இடம் பெறும் பிற செடி கொடி மரங்களான தாழை, கள்ளி, உடம்பு, வெட்சி, வேம்பு

முதலானவைகளும் குறிக்கப்படுகின்றன. 'முல்லை' என்னும் சொல் பெறும் பொருள்களும் ஆராயப்படுகின்றன. முல்லைத்திணையில் செடி கொடி மரங்கள் பெறும் எல்லா இடங்களும் குறிக்கப்படுகின்றன. இவற்றுள் முல்லைக்கொடி முதலிடம் பெறுவதும் சுட்டுத்தெரப்படுகிற(து)

5. <u>விலங்குகள், பறவைகள்</u>

மான், முயல், காட்டுக்கோழி, மயில் முதலியவை இப்பகுதியில் குறிப்பிடப் படுகின்றன. மான்களைப்பற்றிய செய்திகள் இரலையும் பிணையும் தனியிடம் பெறுகின்றன. திணைப்புனங்களும் காடு மடப்பிணையும் இணைந்து பேசும் இடங்கள் எடுத்துக்காட்டப் படுகின்றன. குதிரை, பாம்பு, தேரை, குயில், காக்கை, கோழி, முயல், வானம்பாடி முதலியவையும் குறிக்கப்படுகின்றன.

6. <u>முல்லைநில மாந்தர்</u>

இப்பகுதியில் முல்லைத்திணையில் இருந்த ஒழுக்கம், தலைவன், தலைவி, தோழி முதலிய மாந்தர் நிலை பற்றி ஆராயப்படுகிறது. கற்பியலில் தலைவன் கூற்றே முதலிடம் பெறுகிறது என்பதும், அடுத்துத் தலைவி, தோழி முதலானோர் இடம் பெறுகின்றனர் என்பதும் விளக்கப்படுகிறது. தலைவன் தலைவி முதலானோரிடம் கற்புநெறிப் பாங்கு புலவர் குறிக்கப் படுகின்றனர். தலைவன் தலைவி கற்பனையில் மிகுதி முறையே விளங்குமாறு, நெஞ்சொடு கிளவி நாடகம் நயமுடையதாய் எடுத்துக்காட்டப்படுகிறது. தலைவன் தேர்ப்பாகற்கு உரைப்பதே மிகுதி என்பதும், தலைவி தோழிக்குரைப்பதே மிகுதி என்பதும் தெரிந்துரைக்கப் பட்டுள்ளன. செவிலி, பாணன், பாகன், முதலியோர் கூற்றுகளும் குறிக்கப்படுகின்றன. தலைவி ஆற்றியிருக்கும் பண்பு நயமுடைத்து என்பதும், தலைவியின் பண்பு நலமெல்லாம் போற்றிப் புலவர் பேரழகாகவே உரைத்த என்பதும், இக்காலத்தைப் பற்றிய தலைவன் கூற்று மிகுதியாய் இடம் பெறுகின்றது என்பதும் சிறப்பாக ஆய்வு செய்யப்படுகின்றன. மேற்கூறியவையெல்லாம் தலைவன் கூற்றும் கேட்போரும், தலைவனும் புலவர்களும், இன்ப துன்பம், பாசறைக் கூற்றும் தலைவியும், தலைவி கூற்றும் நாடகமும், இருத்தல் ஒழுக்கம், கற்பின் சிறப்பும், தலைவிக்கு உற்ற துணை, தோழி பலவும் காட்டி வற்புறுத்தல், தோழி பலவும் மறுத்தல், செவிலியின் சீர்மை, கற்பின் சிறப்பும் முதலிய தலைப்புகளில் நன்கு ஆராயப்படுகின்றன.

7. உவமை நலம்

பதிற்றுப்பத்துப் பாடல்களில் காணும் உவமை நலம் பலவாறு சிறப்பிக்கப் படுகிறது. இச்சிறப்புகள் உவமை மரபு, உவமை வகை, உவமும் பயனும், உவமும் வினையும், பல்பொருள் உவமை நலம், புராண இதிகாச உவமைகள், உவமை வளமை, உள்ளுறை உவமம் முதலிய தலைப்புகளில் விளக்கப்பட்டிருத்தல் காணலாம். பதிற்றுப்பத்தில் 325 இடங்களில் வரும் உவமையும் பொருளும் தரப்படுகின்றன.

8. பழக்க வழக்கங்கள்

இவ்வியலில் பழக்க வழக்கங்கள் பல தலைப்புகளில் தொகுக்கப்படுகின்றன. அணிகள் என்ற தலைப்பில் கிண்கிணி, பொன் தாலி முதலியவை எடுத்துக்காட்டப்படுகின்றன. 'இதிகாச புராணச் செய்திகள்' என்ற தலைப்பில் [illegible] முதலியவை பேசப்படுகின்றன. 'சகுனம்' என்பதில் காக்கை கரைதல், பல்லி ஒலித்தல், விரிச்சி கேட்டல், கொடி கட்டுதல் முதலியவை குறிப்பிடப்படுகின்றன. 'மகளிர்' என்னும் தலைப்பில் மடக்கொள்கை, அருந்ததி கற்பு, விருந்தோம்பல் முதலியவை சிறப்பிக்கப்படுகின்றன. இவ்வாறே ஏனைய பிறவும் ஆராயப்படுகின்றன.

9. வரலாற்றுக் குறிப்புகள்

சேரவேந்தர்களுள் பாண்டியர்போல, 'முரசு', 'இயக்கு', 'கொல்லிச்சிகரு' எனச் சிறப்பிக்கப்படுகிறது. பரணர் 'தும்பில்' என்பதும் பார் 'தும்பி என்ன வளை யானை' எனக் குறிக்கப்படுகிறது. 'அறுமலம்' என்பதும் சிறப்பிக்கப்படுகிறது. சோழர்களில் 'பெரும்பூட்சென்னி' சிறப்பும், பழையன் என்னும் சோழர் படைத் தலைவன் வீரமும் கூறப்படுகின்றன. தலைநகர்களில் உறந்தையும் துறைமுகங்களில் தொண்டியும் இயம்பப்படுகின்றன. சேரர் படைத்தலைவர்களுள் குறிப்பாக மறவன், கணையன், நன்னன் முதலானோர் கூறப்படுகின்றனர். கடையெழு வள்ளல்களுள் நள்ளியும், பெண்களுள் மக்களுள் 'பெரிய அருமகள்' பிறர்க்குரியாள் பண்பும் சிறப்புப் பெறுகின்றனர்.

10. முல்லைத்திணைப் புலவர்கள்

இவ்வியலின்கண் முல்லைபாடிய புலவர் ஒன்பதின்மர் குறிக்கப்பட்டுள்ளனர். பேயனார், நல்லுருத்திரனார், இடைக்காடனார், நப்பூதனார் முதலிய புலவர்தம் பாடல்கள் ஆராயப்படுகின்றன. பெரும்பாற் புலவர்களுள் ஒக்கூர் மாசாத்தியார் முதலிடம் பெறுவது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஔவையார், காக்கை பாடினியார் ஆகிய புலவர்களும் சிறப்பிக்கப்படுகின்றனர். மேற்கூறிய புலவர்தம் பாடல்களுள் பயின்றுவரும் பொருள்கள் ஐங்குறுநூற்றின் அமைதி, மலர்க்காட்சிகள், ஆனாயின் இடப்பக்காட்சி, கலிப்பாடல்களின் பொருள்நோக்கு, ஏறு தழுவலின் சில மரபுகள், முதற் பொருள் கருப்பொருட் காட்சிகள் இடையனின் தோற்றம், முல்லையும் வள்ளியும், பெரும்பெயல் பகுதிகள், பார்ப்பன மகளிர், கானமும் முல்லையும், இல்லறமும் வாழ்க்கையும், விலங்கினங்களின் அன்பு வாழ்க்கை நெடுநல்வாடையும் முல்லைப்பாட்டும் பகுதிகளும் முதலிய தலைப்புகளில் ஆராயப்படுகின்றன.

11. பகுதி இரண்டாக முடிவுரை அமைகிறது. இம்முடிவுரையை அடுத்துப் பின்னிணைப்பு இடம் பெறுகிறது. பின்னிணைப்பில் சோலை, தொட்டக்கலைத்துறைத் தலைவர் டாக்டர் வி.எஸ். மாதவராவ் அவர்களின் கடிதம், முல்லைத்திணைப்பாடல்களும் கற்றலும், வரைவு - பொருள் விளக்கப்பட்டியல், முல்லைச்சிறப்புச் சொற்கள், முல்லையும் பொருள் வகையும், அகமும் சிறப்புத்தொடர்களும், புக்கவும் தொடர்களும், வந்த தொடரே மீண்டும் வரும் இடங்கள், முந்தையில் அகப்பாடல்கள், முல்லைத்திணைப் புலவர்கள் பாடிய பாடல்களின் பட்டியல், முல்லைத்திணையை மட்டும் பாடிய புலவர்கள், நூற்பட்டியல் ஆகியவை இடம்பெறுகின்றன.

அகத்திணை

திணை

தொல்காப்பியர், செய்யுளியலில் செய்யுளுறுப்புகளைக் கூறும்போது,

> 'திணையே கைகோள் கூற்றுவகை என்றா
> கேட்போர் களனே காலவகை என்றா
> பயனே மெய்ப்பாடு எச்சவகை என்றா
> முன்னம் பொருளே துறைவகை என்றா'[1]

என்று [illegible] குறிப்பிடுவர்.

(திணை என்ற சொல் 'திண்' அல்லது 'திட்' என்ற வேர்ச் [illegible] பிறந்தது.[2] திணை என்பது ஒழுக்கத்தினையும் நிலத்தினையும் குறிக்கும் சொல்.)[3]

([illegible] கண்டதையும் கேட்டதையும் [illegible]. கண்டு பொருள் என்பது கண்ணால் பார்த்த பொருளைப் பற்றிப் பாடுவது போலவும், கேட்ட பொருள் என்பது காதால் கேட்ட பொருளைப் பற்றிப் பாடுவது போலவும் [illegible].)

திணை அகத்திணை (Subjective) புறத்திணை (Objective)என இரு பாற்படும். அகத்தையும் உணர்ச்சியையும் பொருளாகக் கொண்ட திணையே அகத்திணை (Personal or subjective poetry or the poetry of self delineation and self expression) எனப் போற்றுவர் மேலை நாட்டு அறிஞர்.[4] அகத்திணை ஏழு வகைப்படும். அவை கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை எனப் பெயர் பெறும். இதனைத் தொல்காப்பியர்,

> ('கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
> முற்படக் கிளந்த எழுதிணை என்ப'[5])

என வரும் நூற்பாவால் குறிப்பிடுவர். தொல்காப்பியர், அகத்திணை ஏழாகக் [illegible], [illegible] ஐந்திணைகளை [illegible]. டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் 'திணை என்பதற்கு [illegible] ; [illegible]; [illegible] - [illegible] - [illegible]'[6] என்ற [illegible].

---

1. தொல். பொருள். 310.
2. Srinivasa Iyengar, P.T., History of the Tamils, p.3.
3. [illegible] 1 பக்.23; [illegible] 11 [illegible] தமிழ் [illegible] பகுதி 3, பக்.1874.
4. Hudson, W.H., An Introduction to the Study of Literature, p.96.

மேலும், ஒரு திணையின் கைக்கிளை பெருந்திணைக்கு நிலம் இல்லை என்பது நம் முடிபு. எனவே, திணை ஏழாயினும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணையே அகத்திணையாம் என்பது பெறப்படும்.

இதனைத் தொல்காப்பியர் 'நடுவண் ஐந்திணை'[7] 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை'[8] எனச் சிறப்பிப்பர். நிலம் ஐந்தாயினும், அவற்றுள் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நான்கினை மட்டுமே தனி நிலங்களாக அமைந்த நிலத்திற்குரிய மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய தெய்வங்களோடு இணைத்துக் கூறுவர் தொல்காப்பியர். அந்நூற்பா வருமாறு:

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே'[9]

பாலை நிலத்தைத் தனி நிலமாகத் தொல்காப்பியர் குறிப்பிடவில்லையாயினும் இளங்கோவடிகள் தம் காப்பியத்தில் அதனைத் தனி நிலமாகக் குறிப்பிடுவதைக் காண்கிறோம். அதனை,

'முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்கு துயருறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்'[10]

என வரும் இளங்கோவடிகள் வாக்குத் தெளிவுபடுத்துகின்றது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைகளின் சிறப்பைத் தனிநாயக அடிகள் 'இவ்வைந்து நிலப் பாகுபாடு மக்கள் இனத்தின் சிறந்த தோற்ற வரலாற்றையும் நாகரிகத்தின் முன்னேற்றத்தையும் காட்டுகின்றது என்பதைப் புவியியலாரும் மக்களியலாரும் மேல்போகிய அளவில் ஒப்புக் கொண்ட கருத்தினர்'[11] எனக் குறிப்பிடுவர். 'இவ்வைந்திணைப் பாகுபாடு, மக்கள் தாம் ஒரு நிலத்திலிருந்து இன்னொரு நிலத்திற்குப் பெற்ற நாகரிக வளர்ச்சியைக் காட்டும்'[12] என்பார் திரு பி.டி. சீனிவாச ஐயங்கார். வி. இராம சந்திர தீட்சிதர் ஐந்திணையைப் பற்றிக் குறிப்பிடும்போது 'ஐந்திணையின் வாழ்க்

7. தொல். பொருள். 2.
8. தொல். பொருள். 89.
9. தொல். பொருள். 5.
10. சிலப். காடு காண். 11. 64-66.
11. Thaninayagam, X.S., Landscape and poetry, p.39.
12. Srinivasa Iyengar, P.T., History of the Tamils, p.63.

மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் காணும் நெறி முறைகள், பழக்க வழக்கங்கள், சமுதாய மதிப் பாடுகள் ஆகியவற்றில் வேறுபடுகின்றன'[13] எனப் புலப்படுத்துவர்.

இலக்கியத்திலே வந்தவற்றுள் பாடற்பொருளாய்ப் பயின்றுவருவன மூன்று. அவை 'முதல், கரு, உரி' எனப்படும். இதனை,

'முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை'[14]

என வரும் தொல்காப்பிய நூற்பா புலப்படுத்தும்.

முதற்பொருளாக நிலமும் பொழுதும் வகுக்கப்படும்.

கருப்பொருள்களாகத் தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ் என்பன வகுக்கப்படும்.

உரிப்பொருள்களாகப் 'புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல்' என்பன கொள்ளப்படும். இவற்றினை முறையே,

'முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே'[15]

'தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப'[16]

'புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே'[17]

என வரும் தொல்காப்பிய நூற்பாக்களால் அறியலாம்.

<u>உரிப்பொருளே உயிர்நிலை</u>

மேற்கூறிய மூன்றனுள் முதற்பொருளோடு கருவும், கருப்பொருளோடு உரியும், தொடர்புபட்டுச் சிறந்து வரும். ஒன்றைக் கூறின் (உரிப்பொருளாகிய அகவொழுக்கத்தின் நிலைக்களமாக முதற்பொருளும் கருப்பொருளும் அமைகின்றன எனலாம்.)

இதனை நச்சினார்க்கினியர், 'புலனெறி வழக்கிடைப்பயின்ற பொருட்கேனை ஆராயுங் காலத்து முதலும் கருவும் உரிப்பொருளும் என்ற மூன்றேயாம். அவைதாம்

---

13. Ramachandra Dikshitar, V.R., Studies in Tamil Literature and History, p.274.
14. தொல்.பொருள்.3.
15. தொல்.பொருள்.4.
16. தொல்.பொருள்.20.
17. தொல்.பொருள்.16.

செய்யுட் செய்யுங்கால் ஒன்று ஒன்றிற் சிறந்து வருதலுடைய என்றார்'[18] எனத் தெளிவு படுத்துவர். மேலும் கரு உரிப்பொருட்குச் சிறந்த பின்னணியாக (Background of the theme) முதற்பொருளும் கருப்பொருளும் திகழுமாற்றை அறிகிறோம். இனி, முல்லைத்திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்களைக் காண்போம்:

தொல்காப்பியத்தால் அறியலாகும் இம்முதல் கரு உரிப்பொருள்கள், தொல்காப்பிய உரையாசிரியர்களாய இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோரின் உரைகளைத் தழுவியும், இறையனார் அகப்பொருள் உரை, நம்பி அகப்பொருள் விளக்கம் ஆகியவற்றின் துணைகொண்டும் பின்வருமாறு தரப்படுகிறது.

<u>முல்லைத்திணைக்குரிய முதல் கரு உரிப்பொருள்கள்</u>

<u>முதற்பொருள்:</u>

நிலம்: காடும் காடு சார்ந்த இடமும்.
பெரும்பொழுது: கார்.
சிறுபொழுது: மாலை.

<u>கருப்பொருள்:</u>

தெய்வம்: மாயோன்.
உணவு: வரகு, சாமை, முதிரை (அவரை துவரை முதலியன).
மா: மான், முயல்.
மரம்: கொன்றை, குருந்து, புறவு.
புள்: காட்டுக்கோழி, மயில், சிவல் (கவுதாரி).
பறை: ஏறுகோட்பறை, முரசு.
தொழில்: நிரை மேய்த்தல், வரகு களை கட்டல், கடாவிடுதல், கொல்லேறு தழுவுதல், குரவைக் கூத்தாடல், கான்யாறாடல் முதலியன.
யாழ்: முல்லையாழ்.
பூ: முல்லை, குல்லை, பிடவம், தளவம், தோன்றி.
நீர்: கான் யாறு.
ஊர்: பாடி, சேரி, பள்ளி.
தலைமகன் பெயர்: அண்ணல், குறும்பொறை நாடன், தோன்றல்.
தலைமகள் பெயர்: கிழத்தி, மனைவி.
மக்கள் பெயர்: ஆயர், ஆய்ச்சியர், இடையர், இடைச்சியர்.

<u>உரிப்பொருள்:</u>

இருத்தலும் இருத்தல் நிமித்தமும்.

"It is the horrible characteristic of poetry that its materials are to be found in every subject which can interest the human mind".[19]

என்ற கருத்தை முல்லைத்திணைப் பாடல்களின் முதல், கரு, உரிப்பொருள்களுக்கும் மிகப் பொருத்தமுடைத்து எனலாம்.

---

18. தொல். பொருள். நச். 3 பக்.6.
19. Elezabeth Drew, Discovering poetry, p.17-18.

திணைப்பெயர்க் காரணம்

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் பெயர்கள் திணைகளுக்கு ஏற்பட்ட காரணத்தை உரையாசிரியர் இருவகையாகக் கூறுவர். ஒன்று, பூவின் பற்றி அவ்வாறு சிறப்புக் காரணமாக வழங்கப்பட்டமை. மற்றொன்று, ஒழுக்கக் காரணமாக வழங்கப்பட்டமை.

பூவால் வந்த பெயர்

[பூவின் சிறப்புக் காரணமாகவே திணைகள் பெயர் பெற்றன என்ற கருத்தை இளம்பூரணரும், நாற்கவிராச நம்பியும் குறிப்பிடுகின்றனர்.] அதற்கு இளம்பூரணர் உரையினைக் காண்போம்:

'முல்லை குறிஞ்சி என்பன இடுகுறியோ, காரணக் குறியோ?' எனின் அவை காரணம் பற்றி ஆசிரியர் இட்டதோர் குறி என்று கொள்ளப்படும். என்னை காரணம்? எனின்,

'நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்' (முல்லைப்பாட்டு - அடி 8-10)

என்றமையால், காடுறை உலகிற்கு முல்லைப்பூச் சிறந்தது ஆகலான்....
இவ்வாறு குறியிட்டார் என்று கொள்ளப்படும்'[20] என்பர்.

நாற்கவிராச நம்பி, 'குறிஞ்சி முதலிய பெயர் நிலத்திற்கு எய்தியவாறு எவ்வாறெனின், உலகத்தார் வழக்கில் பெரும்பான்மையாய் வரும் பொருளை.] அதனாலும், குறிஞ்சியும் பாலையும் மருதமும் நெய்தலும் என்னும் பொருட்கள் அவ்வந் நிலத்திற்குச் சிறந்தனவாதலால், அவற்றாற்பெற்ற பெயர் எனலாம். என்னை? 'முல்லைத் தன்பொருத்... எனக் கொள்க'[21] என்பர்.

ஒழுக்கத்தால் வந்த பெயர்

{ஒழுக்கத்தின் சிறப்புக் காரணமாகவே திணைகள் பெயர் பெற்றன என்ற கருத்தை [illegible], நச்சினார்க்கினியரும் குறிப்பிடுகின்றனர்.] அதற்கு நச்சினார்க்கினியர் உரையினைக் காண்போம்:

'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்ற ... இவ்வொழுக்கமெல்லாம் இவற்றைப் பற்றிய ஒழுக்கமாதலின், ... முல்லையுள்ளிட்டனவும் பொருள் [illegible]

---
20. தொல். பொருள். இளம். 5 பக். 10.
21. நம்பி. 6 பக். 12-13.

றி, நெய்தல், முல்லை முதலிய பூவாற்பெயர் பெற்ற நிலவொழுக்கங்களின், அவ்வத் திணைக்குரிய பூக்களும் உரியனவாகவும் அவற்றின் பெயர் கொண்ட உரிப்பொருள் [illegible] [illegible] [illegible]'[22] என்றும் கூறுவர்.

வையாபுரியார், 'ஒழுக்கமே நிலை என்பதும். குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது. எங்ஙனம்? விளக்காகிய சுடர் இருந்த இடமும் விளக்கு எனப்பட்டது போல'[23] எனச் சான்று காட்டி விளக்குவர். எனவே, இவர் ஒழுக்கம் சார்ந்த இடமே முல்லை எனக் கூறுகிறார் என்பது புலனாம்.

பிறர் கருத்து

(மேற்கூறிய [illegible] தொல்காப்பியர் கருத்திற்கு எதிரான முல்லை முதலிய நிலங்கள் பூவின் சிறப்புக் காரணமாகவே பெயர் பெற்றன என்பது அறிஞர் பெரும்பான்மையினர் கருத்தாம்.) அவர்களுள் பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள், 'இப்பெயர்கள் மரம் அல்லது பூ விசேடங்களைக் குறிப்பன என்பதும், முல்லை முதலியவற்றின் மிகுதி அல்லது சிறப்புப் பற்றி அந்நிலங்கட்குப் பெயர்கள் வழங்கலாயின என்பதும் புலவர் '[illegible] குறிஞ்சி சான்ற வெற்பு' (மதுரைக்காஞ்சி 300), 'மருதம் சான்ற மருதத் தண்பணை' (சிறுபாண். 186), 'முல்லை சான்ற முல்லையம் புறவு' (சிறுபாண். 169), 'பாலை சான்ற சுரம்' (சிறுபாண். 314) எனப் பூ அல்லது அதன் முதற்பொருளின் சிறப்புப் பற்றி அந்நிலங்கள் குறிப்பிடுதல் நோக்குக. இவ் வையாபுரியாரும் நச்சினார்க்கினியரும், இந்நிலப்பெயர்கள் அவற்றின் ஒழுக்கமாக மேலே கூறிய உரிப்பொருட்களுக்கு வழங்கலாயின என்பர். ... ஆயினும், (இவ்வொழுக்கத்தையும் உணர்த்தற்கு இவ்வாறு பூவை அடையாளமாகக் கொண்டொழுகுதல் பண்டைத்தமிழர் வழக்கமாம்.) (இப் புறத்திணையொழுக்கமாகிய நிரை கவர்தல், மீட்டல் முதலியவற்றுக்கு, வெட்சி, கரந்தை முதலிய பூக்களை அடையாளமாகக் கொண்டமையாலும் விளங்கும்.) ... எனவே, அகத்திணையொழுக்கங்கட்கும் அவ்வப் பூக்களை அடையாளமாகக் கொண்டு ஒழுகுதல் மரபு. அகத்திணையாக இவற்றைக் குறிஞ்சி முதலிய ஒழுக்கங்கள் முல்லை முதலாகப் பெயர் பெற்றன என்று கொள்ளுதல் பொருந்தும்'[24] என்பர்.

நாவல் பெயர்கள் பற்றித் திரு ரா. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் கூறும் போது, 'நாவலை நிலைகளாகப் பெயர்கள், அவ்வந்நிலத்திற்குரிய பூவின் பெயராகவே

---

22. சோம. பொருள். தமிழ். 5 பக். 14.   23. மேலது. பக். 24.
24. இராகவையங்கார், மு., தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, பக். 29.

அமைந்தன. பின்னர், அவற்றினைக் குறிக்கும் அப்பெயர்களே வழங்கலாயின. .... பூவினை வைத்து, ஒரு நிலத்திற்குப் பெயர் ஏற்பட்டதாயின், ... அப்பூவினைச் சிறப்பாகக் கொண்டிருந்த காலம் பற்றியதேயாகும். இதை வடநூலார் 'அபேதோபசார நியாயம்' என்பர் எனக் குறிப்பிடுகின்றார்.[25]

திரு. பி.டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள், 'வேறுபட்ட குறிஞ்சி முதலிய மலர் களாலேயே பெயர் பெற்றன. ஒவ்வொரு மலரும் ஒவ்வொரு நிலத்திற்கே உரியதாகச் சிறந்தன' எனக் குறிப்பிட்டுள்ளார்.[26]

இவ்வாறே, 'மரம் அல்லது பூவின் பெயரினாலேயே நிலங்கள் பெயர் பெற்றன' என்று திரு. வி.ஆர். தீட்சிதர் அவர்களும்,[27] 'எந்தப் பூ அதிகமாகக் குறிக்கப்படுகிறதோ, அதுவே அந்நிலத்தின் பெயராக அமைந்தது' என்று தனிநாயகம் அடிகளும்[28] கூறியுள்ளனர்.

திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள், 'மரப் பெயரால் நாட்டுப் பெயர் அமைவதுண்டு என்பதற்கு 'ஏற்றூர் நாடு, தெங்கின நாடு, நாவலந்தீவு' என்பன போன்ற எடுத்துக்காட்டுகளே உள. ஒரு நிலத்து வாழும் மக்கள் அந்நிலக் காட்டுப் பொருள்களாலேயே அந்நிலத்தின் உரிமை அறிந்தனர் என்பதை நாம் அறிவோம். ஆதலாலேதான் கிடைத்தற்கரிய பொருள் பெருமை, ஒரு பொருளின் மிகுதி காட்டியே அறிந்தனர் ஆதலாம். ஆதலின், அந்நிலப் பொருள்களாலேயே அறிந்த மக்கள், அப்பொருள்களின் தொகுதியால் நிலத்திற்குப் பொருந்தினால் பெயர் அமைந்தன் என்பதே தெளிவுபடுத்தும்'[29] எனக் குறிப்பிடுவர்.

முல்லை என்னும் சொல் பெரும் பொருளைக் குறிக்கும் தமிழ் அகராதி முல்லை என்பது மல்லிகை வகையுள் ஒன்றான பூவினை (Arabian Jasmine) குறிக்கின்றது[30] எனக் குறிப்பிடுகின்றது. தமிழ்க் கலைக்களஞ்சியம், 'முல்லைநிலத்தின் முல்லை மலரைச் சிறப்பித்ததால் பயிரின் பெயரைப் பெற்றது'[31] எனக் கூறுகிறது.

நச்சினார்க்கினியர் தம் உரையில் முல்லை என்பது இருத்தலைக் குறிக்கும் எனக் கூறுவாரோடு திரு. மு.ப.கா. சுந்தரம் அவர்கள், 'முல்லை என்பது [illegible]

---

25. சமயநூலாசிரியர், கா., பழந்தமிழர் நாகரிகம், பக்.39-40.
26. Srinivasa Iyengar, P.T. History of the Tamils, p.68.
27. Ramachandra Dikshitar, V.R. Studies in Tamil Literature and History, p.273.
28. Thaninayagam, X., Landscape and Poetry, p.102.
29. செந்தமிழ்ச் செல்வி, மே. 1960, பக்.5-7.
30. தமிழ் அகராதி, பகுதி 6, பக்.3280.
31. கலைக்களஞ்சியம், பகுதி எட்டு, பக்.442.

[illegible] என்ப போலும். புறப்பொருள் வெண்பாமாலையில், [illegible], ஏறாண் முல்லை, வல்லாண் முல்லை, பாசறை முல்லை முதலிய துறைகளைக் காணலாம். ...முல்லை [illegible] பிரிந்த [illegible] தலைவனை [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] முல்லையாமே... [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. ...ஆகவே, [illegible] [illegible] [illegible] [illegible] முல்லை என் [illegible] பெயராயிற்று'[32] என்பர்.

இனி, தொல்காப்பியர், நச்சினார்க்கினியர் முதலியோர்தம் கருத்துக்கேற்ப முல்லைத் திணைப் பாடல்களின் அமைப்பைக் காண்போம்.

<u>'முல்லை நிலம்' என்ற [illegible] பெற்ற பெயரே</u>

சங்க இலக்கியங்களாகிய எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் இடம் பெற்றுள்ள முல்லைத் திணைப் பாடல்களின் மொத்த எண்ணிக்கை 237.[33] இவற்றுள் முல்லைத் திணைப் பாடல்களில் காடு [illegible] முல்லைப்பொருள்களின் மொத்த எண்ணிக்கை 72. 72 முல்லைப்பொருள்களில் 60 சொற்கள் முல்லைப் பூவினைக் குறிக்க [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].[34] எனவே, முல்லைத்திணைக்கு முல்லைப் பூவின் [illegible] [illegible] [illegible] பொருந்தும் என்று தொல்காப்பியர் தம் [illegible]

---

32. செந்தமிழ்ச்செல்வி. மே. 1960, பக். 5-7.

33. குறு. 21,42,59,69,81,87,97,99,115,121,139,142,161,169,181,221,238,242,248,266,280,316,321,361,364,367,371,374,381,394 (30)
நற். 21,24,64,68,86,94,99,99,108,110,126,140,155,162,167,183,186,188,190,191,193,194,210,220,221,233,234,240,242,251,270,275,279,287,289,314,319,323,344,358,37[illegible],382,387,391,400 (45)
ஐங். 401-500 (100)
பதி. 10,12,20 (3)
கலி. 101-117 (17)
அகம். 4,14,24,34,44,54,64,74,84,94,104,114,124,134,144,154,164,174,184,194,204,214,224,234,244,254,264,274,284,294,304,314,324,334,344,354,364,374,384,394(40)
முல்லை. (1) நெடுநல். (1).

34. குறு. 59:[illegible]; 69:5; 169:5; 240:1; 321:3; 361:1; 367:8 (7)
நற். 108:[illegible]; 102:3 ([illegible]); 186:[illegible]; 188:1 ([illegible])
193:6; 220:[illegible]; 221:1; 234:[illegible]; 240:3; 323:4; 358:7; 382:1;
387:1 (15)
ஐங். 408:[illegible]; 412:1; 422:2; 437:3; 446:1; 448:[illegible]; 454:3; 476:2; 490:2; 492:2; 494:2 (11)
கலி. 101:49; 103:6; 105:54; 107:6; 108:15; 109:42; 113:[illegible]; 115:5; 117:11; 117:12 (10)
அகம். 64:8; 94:5; 124:11; 134:5; 144:3; 164:6; 184:9; 204:7; 234:13; 244:4; 254:15; 314:19; 324:15; 354:7; 394:5 (15)
முல்லை. 9 (1); நெடுநல். 130 (1).

உரிப் பொருளோடு முல்லை நிலத் தலைவியும் உரிப்பொருளையும் பெற்றுத் திகழ்கிறது என்பது நினைவிற்கொள்ளத்தக்க ஒரு செய்தியாகும்.

__நிலத்தின் அமைப்பான முல்லையும்__

காடும் காடு சார்ந்த பகுதியும் கொண்ட முல்லை நிலம், 'காடுறை உலகம்'[35] எனச் சிறப்பிக்கப்படுகிறது. முல்லையை forest என்றும் pastoral tract என்றும் கூறுவர்.[36] பி.டி. சீனிவாச ஐயங்கார் The woodal land between the highlands and the lowlands[37] என்று குறிப்பிடுவர். மலைக்கும் வயலுக்கும் இடையில் முல்லை மருதம் நெய்தல் என்னும் நானிலத்தின் முதல் நிலமாகக் கூறப் படுகின்றது. தொல்காப்பியம், 'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் சொல்லிய முறையான்'[38] எனவும், 'முல்லை முதலாச் சொல்லிய முறையான்'[39] எனவும் கூறுகின்றது. தொல்காப்பிய உரையாசிரியருள் ஒருவரான இளம்பூரணர், 'நடுவண் ஐந்திணை' என்பதற்கு 'நடுவணதாகிய ஐந்து வகை நிலம், முல்லை குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்பனவாம் என முல்லை நிலத்தை முதலில் குறிப்பிடுவர்.[40]

நம்பியகப் பொருள் 'அகத்திணை முதலிய' என்ற நூற்பாவுக்கு உரை கூறுவோர் 'கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணையென'[41] எனக் குறிப்பிடுவதும் ஈண்டு நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

நச்சினார்க்கினியர் முல்லை நிலம் முதலில் வைக்கப் பட்டமைக்குக் காரணம் கூறுகையில், 'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்ற முறை எங்ஙனம் வைத்தாரெனின் ... கற்பொடு பொருந்திக் கணவன் சொற்பிழையாது இல்லிருந்து நல்லறம் செய்தல் மகளிரது இயல்பாதலின், அது முற்படக் கிளக்கப்பட்டது'.[42] எனக் குறிப்பிடுவதால் முல்லை நிலத்தின் சிறப்பும் புலனாகும். முல்லை நிலத்தின் சிறப்பைக் கூறுமிடத்து பி.டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள், தம் நூலில் 'Herdsman' என்ற பகுதியில் முல்லையும் அதைச் சார்ந்த பகுதிகளுமே முதன் முதலில் மக்களின் உறைவிடமாக இருந்தது என்பர், ...

35. தொல்.பொருள்.5. 36. தமிழ் லெக்சிகன் பகுதி 6, பக்.3280.
37. Srinivasa Iyengar, P.T., History of the Tamils, p.3.
38. தொல். பொருள்.5. 39. தொல்.பொருள்.30.
40. தொல்.பொருள்.நூற்.2, பக்.7.
41. தொல்.பொருள்.486, பக்.520.
42. தொல்.பொருள்.நச்.5, பக்.14.

பரந்த புகழைக் கொண்டது என்றும், நாகரிக வளர்ச்சிக்குக் காரணமாக அமையும் என்றும் முல்லை நிலத்தாயினடைய வழக்கிய கோன், கோ என்ற சொற்கள் பின்னர் முறையே அரசர் தலைவன், அரசர்கோன், சக்கரவர்த்தி வழக்கு, மீட்பு நாட்டு மன்னன், செங்கோல் என்ற பொருளைப் பெற்றன'[43] என்றும் குறிப்பிடுகின்றார். திரு. வி.ஆர். ராமசந்திர தீட்சிதர் அவர்கள் 'முல்லை நிலம் சமுதாய அமைப்புத் தோற்றம் சிறந்த நிலம்'[44] என்று குறிப்பர். டாக்டர் மு.வ. அவர்கள் 'மக்கள் வேட்டையாடு நிலைத்த வாழ்வு வாழ்ந்து நாகரிகத்தை வளர்ப்பதற்கு ஏற்ற நிலப்பகுதி என்றும் ஆடு மாடுகளை ஓட்டிப்போய் மேய்ச்சல் தேடி அலைந்த வாழ்க்கை மாறி ஓரிடத்தில் நிலைத்து உழவுத் தொழில் செய்த வாழ்க்கை முல்லை நிலத்தில் அமைந்திருக்கிறது'[45] என்று புலப்படுத்துவர்.

டாக்டர் மா.இரா. ராச மாணிக்கனார் அவர்கள் முல்லை நிலத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'தொல்காப்பியர் மாயோனையுடைய முல்லையை முதலில் வைப்பதேன்? ஆடு மாடுகளை ஆநிரை மேய்த்த ஆயர் நிலமாகிய முல்லை பண்பட்ட மக்களுடைய வாழ்க்கை நிலத்தை முதல் நிலம் என்று பார்த்தார். பிற பகுதி மக்கள் பண்பட்டவர் அல்லரோ தொல்காப்பியர்? இல்லை, மாயோனை முதலில் கொண்டு வைத்த தொல்காப்பியத்தை வைப்புமுறை செய்தலே தக்கது என்று நினைத்தார். தொல்காப்பியம் 'மாயோன் மேய காடுறை உலகு' என்று குறிப்பிடுவர்.[46]

திரு. ச. சோமசுந்தர பாரதி அவர்கள், 'நீர் வளமின்றி மழையை நம்பி வாழும், நிலத்தைப் பண்படுத்தி, முதலில் பயிர்த்தொழில் செய்து, பல புல வகைகளை மேய்த்து ஆயர் முல்லை நிலத்தைக் கொண்டார் என்றும் கூறுவர். இதை மாற்ற நினைத்தவர் தொல்காப்பியர். 'தொல்லை முறையால் சொல்லவும் படுமே' என்ற விதியைக் கருதினார்'.[47] திரு. ச.கி. நாயுடு அவர்கள் 'முல்லைத் திணையில் வாழ்க்கையில் பண்பாடு உண்டு'[48] என்று பாராட்டுவர்.

தொல்காப்பியத்தில் முல்லை நிலம் முதல் நிலமாகக் குறிப்பிடப்பட்டதற்குக் காரணம் பின் வரும் கருத்துகளால் நன்கு புலப்படும். அவை பின்வருமாறு:

---

43. Srinivasa Iyengar, P.T., History of the Tamils, pp.9-11.
44. Ramachandra Dikshitar, V.R., Studies in Tamil Literature and History, p.176
45. வரதராசன், டாக்டர் மு., முல்லைத்திணை, பக்.5.
46. ராச மாணிக்கனார், டாக்டர் மா.இரா., தொல்காப்பிய நெறி, பக்.168.
47. சோமசுந்தர பாரதி, ச., பழந்தமிழர், பக்.13.
48. நாயுடு, ச.கி., தொல்காப்பியர் கண்ட தமிழர் சமயம், பக்.222.

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற வைப்புமுறை கலையியல் முறை. குறிஞ்சி, முல்லை மருதம், நெய்தல் என்ற வைப்புமுறை அறிவியல் முறை.

முல்லை நிலம் நாட்டுப்புற வாழ்வைக் (Pastoral life) காட்டும் மருத நிலம் நகர வாழ்வைக் (Town life) காட்டும்.

முல்லையில் காதலர் பிரிந்த துன்பம் இல்லற நெறியில் ஆற்றியிருந்தலைக் காட்டும். (Virtuous suppression of grief) பாலையும், நெய்தலும் நீட்ட இரங்கத்தக்க துன்பத்தைக் காட்டும். (Long and pitiful expression of grief).

முல்லையில் வேளிரும் குறுநில அரசு அமைதல், மருதத்தில் முடிவேந்தரும் பேரரசு அமைதல்.

குதிரைகளைச் செல்வமாகக் கூறுதல், பகைவர் குதிரைகளைக் கவர ஏற்படும் போர், கோவலர் முனைச்செய்தல், குதிரை இடையர் உழவராதல், ஆடை நெய்தல் ஆகியவற்றில் முல்லை நிலம் முன்னோடியாய் இருத்தல்.

களவு, கற்பு என்னும் கைக்கோளுள் முல்லை கற்பியலும் குறிஞ்சி களவியலும் அமைதல்.

முல்லையின் பிரிவு இல்லற வாழ்வில் நிகழும் புறமைப் பிரிவாக அமைதல்.

'வஞ்சி தானே முல்லையது புறனே' என்பதில் அமையும் பொருத்தம் பிறதிணைகளின் சிறந்த அமைப்பாகும்.

ஆயர் பல பெயர் மக்களிடையே பொதுவாக வழங்கிச் சிறப்பவர் என்பதை ஆயர், இடையர், பொதுவர் என்ற சொற்கள் பொருளுற அமைதல்.

ஆநிரை வரையில்லாமல் கைக்கு பட அமையும் பாடி வீடு. சேர்ந்த வாழும் சேரி. 'கோ' வால் வந்த கோன், கோவலர் என்ற தலைமைப் பொருட்சொற்கள். கொடுங்கோலால் வந்த செங்கோல்.

கற்பு நிறை பண்பே மாயோனாக அமைதல். பெருஞ்சமயத்தின் அடிப்படை அமையும் காடு. இவற்றை எல்லாம் கொழிக்கும் தட்பவெப்பம்.

நிலைக்கண் 'முல்லை முதலா' எனக் கூறல்.

<u>முல்லைப் புறம் வஞ்சியின் பொருத்தம்</u>

தொல்காப்பியனார் புறத்திணையியலின்கண் ஒவ்வொரு புறத்திணைக்கும் இணையாக ஓர் அகத்திணையைக் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் முல்லைக்குப் புறமாக அமைவ

வஞ்சியாகும். இதனை, 'வஞ்சி தானே முல்லையது புறனே'[49] என்று கூறுவதால் அறிகிறோம். இவ்வஞ்சித் திணைக்கு முல்லைப்பாட்டில் வரும்,

> 'கான்யாறு தழீஇய அகனெடும் புறவில்
> சேணாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
> வேட்டுப்புழை அருப்பம் மாட்டிக் காட்ட
> இடுமுட் புரிசை ஏமுற வளைஇப்
> படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி' - 24-28

என்ற அடிகளை உரையாசிரியர் மேற்கோளாகக் காட்டியிருப்பது ஈண்டு அறிதற்குரியது.

பிற திணைகளை விட முல்லைக்குக் கூறப்பட்ட வஞ்சி பொருத்தமுற அமைவது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. இதனைக் குறித்துத் திரு டாக்டர் ந. செயராமன் அவர்கள், 'சங்க இலக்கியத்தில் பாடாண் திணை' என்னும் நூலில் குறிப்பிடும்போது, 'இவ்வகை பெரும் பொருத்தமுள்ள திணைகள் வஞ்சியும் முல்லையுமாகும். ஏனெனில், தலைவி முல்லைத்திணைக்குரியவளாய்க் காத்திருத்தல் இருக்கத் தலைவன் படையெடுத்துச் சென்று பாசறையில் இருப்பான். முல்லைத்திணையின் பாசறைச் செய்தியும் பாசறையின் முல்லைச் செய்தியும் இடம் பெறுவதைக் காணலாம். இவ்வாறு வஞ்சியும் முல்லையும் இணைந்திருப்பது போலப் பிற திணைகள் இணைந்திருப்பதாகத் தெரியவில்லை'[50] என்று கூறுகின்றார்.

புறத்திணையில் முல்லை

தொகை நூல்களாகிய புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய நூல்களில் வல்லாண் முல்லை,[51] மூதின்முல்லை,[52] ஏறாண் முல்லை,[53] முல்லை,[54] காவல் முல்லை[55] ஆகிய துறைகளைச் சார்ந்த பாடல்கள் உள. புறப்பொருள் வெண்பா மாலையில் வாகைப் படலத்தில் அரச முல்லை, பார்ப்பன முல்லை, அவைய முல்லை, கணிவன் முல்லை, மூதின் முல்லை, ஏறாண் முல்லை, வல்லாண் முல்லை, காவல் முல்லை, பேராண் முல்லை, மற முல்லை, குடை முல்லை, சால்பு முல்லை ஆகியவைகளும், பொதுவியற்படலத்தில் முல்லை, கார் முல்லை, தேர் முல்லை, நாள் முல்லை, இல்லாண் முல்லை, பகட்டு முல்லை, பாண் முல்லை, கற்பு முல்லை ஆகியவைகளும் காணப்படுகின்றன.[56] மேற்கூறியவை புறத்திணை இயலில் கூறப்பட்டாலும் அகமும் புறமும் இணைந்திருப்பதைக் காண்கிறோம். இதற்கு ஆதாரம் கூறவே தொல்காப்பியர் 'வஞ்சி தானே முல்லையது புறனே' என்று கூறினார் எனலாம்.

---

49. தொல்.பொருள்.64.
50. செயராமன், டாக்டர் ந., சங்க இலக்கியத்தில் பாடாண் திணை, பக்.37.
51. புறம் 170,178,179,180,181,313-325.
52. புறம் 279,288,289,(முல்லை) 306,308,312, 326-335.
53. புறம். 86, 296.
54. பதிற். 81.
55. பதிற். 89.
56. பு.வெ. 17,28,31.

<u>முல்லைத் திணையின் பிற பெயர்கள்</u>

முல்லைத்திணைப் பாடல்களை மேலைநாட்டார் Pastoral என்று கூறுவர். முல்லைத் திணைப் பாடல்களுள் முல்லைநிலத்தைக் குறிக்க வழங்கும் சொற்கள் பல. அவற்றுள், காடு,[57] கானம்,[58] (கான், கான,) [illegible],[59] கொல்லை,[60] செந்நிலம்,[61] செஞ்சுவல்,[62] புறவு,[63] புறம்,[64] புன்புலம்,[65] மென்புலம்,[66] முதுவு,[67] முல்லை,[68] அம்புலம்,[69] என [illegible] சொற்கள் [illegible]. இவற்றுள் புறவும் கானமும் மிகுதியாக வந்துள்ளன. புறவு 53 இடங்களிலும் கானம் 26 இடங்களிலும் வந்துள்ளன.

இதனால் முல்லை நிலத்திற்கு வழங்கும் சொற்களில் 'புறவு' என்னும் சொல்லே முதலிடம் பெறுவதைக் காணலாம். (ஐங்குறுநூற்றில் புறவில் பாடிய முல்லை [illegible] புறவு [illegible] பொருந்தியுள்ளது.) ஓரம்போகியார் 'புறவணிப் பத்து' (431-440) முல்லை நிலத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

மேற்கோள்களிலிருந்து காணும் 'கொல்லை', 'முல்லை' என்னும் சொற்களைப் பற்றி டாக்டர் வ.சுப.மாணிக்கனார் [illegible], 'புன்செய் [illegible] காடுகளை வெட்டித் திருத்தி [illegible] கொல்லையெனப்பட்டது'[70] என்று குறிப்பிட்டுள்ளார்.

---

57. ஐங். 404:2; கலி. 117:11; அகம். 154:10; 164:14; 304:5; 394:13; முல்லை. 101 (7)
58. நற். 238:1; 321:3; 394:1; குறு. 21:4; 183:7; 319:[illegible]; ஐங். 425:3; 430:[illegible]; 433:3; 461:[illegible]; 465:3; 499:2; பதி. 30:10; கலி. 106:4; 108:27; 113:23; 115:15; அகம். 4:7; 134:1; 164:7; 184:6; 314:3; 344:6; முல்லை. 24, 97. நெடுநல். 129 (26).
59. நற். 321:9; அகம். 14:8 (2).
60. நற். 266:1; குறு. 108:2; அகம். 194:13 (3).
61. நற். 321:1; அகம். 154:4; 304:6; முல்லை. 97 (4).
62. அகம். 194:4 (1).
63. நற். 21:9; 59:9; 69:5; 121:5; 142:8; 161:5; 221:5; 321:1; 361:4. குறு. 108:2; 220:5; 233:4; 242:3; 391:[illegible]; ஐங். 404:5; 405:4; 406:[illegible]; 411:3; 412:3; 413:1; 414:4; 415:2; 416:1; 417:1; 418:2; 419:4; 420:3; 421:2; 424:1; 462:5; 485:4; 494:2; 495:8. அகம். 34:[illegible]; 74:[illegible]; 84:9; 104:[illegible]; 114:3; 134:6; 154:1; 184:7; [illegible]; 274:10; 234:10; 254:16; 274:10; 284:11; 314:5; 3[illegible]4:5; 354:4; 3[illegible]4:5; முல்லை. 24 (53).
64. நற். 266:1; குறு. 155:1; 188:2; 220:1; அகம். 94:10.
65. குறு. 183:7; ஐங். 421:3; அகம். 284:7; 394:10.
66. ஐங். 407:4; 489:2. 67. நற். 304:5. 68. அகம். 14:7.
69. நற். 59:8; ஐங். 469:[illegible]; அகம். 94:12.
70. [illegible], [illegible], பக். 31, 117.

முல்லை நில வருணனை

நில வருணனைக்காக நிலம் பாடப்படுவதை ஐந்திணைகளுள் சிறப்பாக முல்லை பாலை ஆகிய இரு திணைகளில் காண்கிறோம். முல்லை நிலம் பெறும் வருணனைச் சிறப்புகள் பல. முல்லை நிலம் சிவந்த நிறமுடையது என்பது, 'செந்நிலன்',[71] 'செந்நிலப் புறவு',[72] 'செந்நிலப் பெருவழி',[73] 'செந்நில மருங்கு',[74] 'செம்புலப் புறவு',[75] எனவரும் தொடர்களால் புலனாகிறது.

முல்லை நிலம் தண்மை பரப்பித் திகழ்வதை, 'மென்புலத் தன்ன செம்புலப் புறவின்',[76] 'தண்ணறும் புறவு',[77] 'தண்ணம் புறவு',[78] என்றும், செம்மண்ணைத் தீண்டி வந்தாற்போல விளங்குவதை, 'செம்மண் உடைய செந்நில மருங்கின்'[79] என்றும், பன் மலர்களால் பரந்து சிறந்தமாற்றை, 'மலரணி புறவு',[80] 'செந்நில மருங்கிற் பன்மலர் தாஅய்'[81] என்றும், கானம் விழாக்கோலம் பெருவழியாய் விளங்குவதை, 'கான நந்திய செந்நிலப் பெருவழி'[82] என்றும், செவ்வரக்கிட்டுவைத்தாற் விளங்குமாற்றை, 'அரக்கத் தன்ன செந்நிலப் பெருவழி'[83] என்றும், வானைக் கிழித்தாற்போல விளங்கும் பெற்றியை, 'உக் கிழித் தன்ன செந்நிலன்'[84] என்றும் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

மனக்காட்சியால் முல்லை நிலம் பெறும் அழகு 'மைப்பு இலைச் சிதறிச் செம்பெறு வைப்பு'[85] எனத் தெளிய மனம் கமழும் அழகைக் காட்டியாகும். அவற்றுள், சில வருமாறு.

காயா அஞ்சனமாய், கொன்றை பொன்னாய், கோடல் அங்கையாய், தோன்றி குருதியாய்ப் பூத்து விளங்கும் முல்லை நிலமும்,

'செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் கால
கோடல் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி'[86]

என வரும் அடிகளிற் போற்றக் காண்கிறோம்.

---

71. அகம். 194: 4.
72. நற். 321: 1.
73. அகம். 14: 1.
74. அகம். 304: 6.
75. நற். 221: 5.
76. நற். 221: 5.
77. ஐங். 494: 2.
78. அகம். 274: 12.
79. அகம். 304: 6.
80. ஐங். 485: 4.
81. ஐங். 495: 1.
82. முல்லை. 97.
83. அகம். 14: 1.
84. அகம். 194: 4.
85. பரி. 17.
86. முல்லை. 93-97.

சிறிய பூவையுடைய முல்லையின் தேன்மணம் கமழும் புதிய மலரெல்லாம் புள்ளி களையும் வரிகளையும் உடைய யானையின் முகம் போலப் புதர்களிடத்தே அழகு பொருந்த மலரும் காட்சி கவின் கொள்ளக் காட்டுவாரும். இதனை,

> 'சிறுவீ முல்லைத் தேங்கமழ் பசுவீ
> பொறிவரிக் கைம்மான் புகர்முகம் கடுப்பத்
> தண்புதல் அணிபெற மலர!...'[87]

என வரும் அடிகள் புலப்படுத்தும்.

பலவகை மலர்களும் பூத்துத் திகழும் முல்லை நிலமுழுவதும் காணின் தனிமையெல்லாம் தீரும் என்றும் உரைப்பர்,

> 'செறிந்த மருங்கிற் பன்மலர் தாஅய்ப்
> புலம்புதீர்ந் தினிய வாயின புறவே'[88]

என வரும் அடிகளில் திகழக் காண்கிறோம்.

நீலமணி நிறத்தை ஒக்கும் காயா மலரும், செம்பவளத்தை ஒக்கும் தம்பலப்பூச்சியும் கலந்துப் பொலியும் காட்சி முல்லை நிலத்திற்கே தனிப் பெருமை காட்டுவதாகும். இவ்வழகிய காட்சி, அகநானூற்றில் களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை என்னும் முப்பிரிவுகளும் இடம் பெற்ற விதமும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வியற்கைக் காட்சியை,

> 'காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
> ஈயல் மூதாய் வரிப்பப் பவளமொடு
> மணிமிடைந் தன்ன....'[89]

> 'மணிமருள் பூவை அணிமலர் இடையிடைச்
> செம்புற மூதாய் பரத்தலின் ...'[90]

> 'மணிமிடை பவளம் போல அணிமிகக்
> காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
> ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்ப'[91]

என வரும் அடிகள் தெளியக் காட்டுகின்றன.

முல்லை நிலத்தே துள்ளிக் குதித்தோடும் மான்களின் காட்சி கவினைக் காட்டுவதாய் நிலைபெறும். அவற்றுள், சிறிய குட்டியைத் தழுவிக்கொண்ட நல்ல நடையினையுடைய இளைய பெண்மான், தன் திரிந்த கொம்பினையுடைய கலைமானோடு சேர்ந்த மரத்தின் நிழலில் தங்கும்

---

87. நற். 246: 1-3.
88. ஐங். 495: 1-2.
89. அகம். 14: 2-4.
90. அகம். 134: 3-4.
91. அகம். 304: 13-15.

காட்சி முல்லை நிலத்தில் காணும் அழகினைக் காட்டியதாகும். அப் பாடலடிகள் வருமாறு:

'சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
வலந்திரி மருப்பின் அண்ணல் இரலையொடு
அலங்குசினைக் குருந்தின் அல்குநிழல் வதியும்'[92]

இவ்வாறு மானும் புள்ளும் மகிழ்வு மிக, மரஞ்செடி கொடிகளால் சிறந்து விளங்கும் முல்லை நிலக் காட்சிகள் பல, சங்கப் பாடல்களில் அங்கங்கே மிளிரக் காண்கிறோம்.

இலக்கியத்தை அழகுபட அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைக்காது இயற்கையாகவே, அந்நோக்கம் அதனின் வெற்றிபெற அமைக்கப்படுமேயானால் அவ்விலக்கியத்தை எல்லோரும் போற்றுவர் என்பதை 'Literature is not composed in order to be beautiful; we judge it to be beautiful when it has succeeded in its aim'[93] எனக் கூறி நிறுவுவர். இக்கருத்து, முல்லைத்திணைப் பாடல்களில் காணும் இயற்கைச் சிறப்புகளுக்கு மிகப் பொருத்தமுடையது எனலாம்.

---

92. அகம். 304: 8-10.

93. Abercrombie, L., Principles of Literary criticism, p.45.

கார்

காலம் வரையறை

முல்லைத்திணைக்குரிய காலம் கார் காலமாகும். இதனைத் தொல்காப்பியர், 'காரும் மாலையும் முல்லை'[1] எனக் கூறுவர். கார் காலம் முல்லைத்திணைக்குரிய பெரும்பொழுதாகவும் மாலைக்காலம் சிறுபொழுதாகவும் அமையும். இனி, கார் காலத்தையும் மாலைக் காலத்தையும் தனித்தனியே காண்போம்.

கார் காலம்

கார் காலம் முல்லைத்திணைக்குரிய பெரும்பொழுதாம் (The long period of the Season) [illegible]. முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்னும் [illegible] பெரும்பொழுது[2] கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் [illegible] பெரும் பொழுதுகள் (The six long period of the season) கார் காலம் [illegible].[3]

[illegible] 'Winter' [illegible]. [illegible] 'Coldest season of the year'[4] [illegible].

டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள் கார் காலத்தையும் கூதிர் காலத்தையும் [illegible] கார் காலம் "The early rainy season" என்றும், கூதிர் காலம் "The later rainy season" என்றும் [illegible].[5]

கார் காலத்தை [illegible], '[illegible]' எனக் கூறுவர்.[6]

[illegible] கார்த்திகை [illegible] தொடக்கமாக [illegible]. [illegible] என்றும் [illegible] தொடங்கி மாதங்களை [illegible] என்றும் [illegible].[7] [illegible]

1. தொல். பொருள். 6 2. தொல். பொருள். [illegible] 2 பக். 7.
3. தொல். பொருள். 6.
4. Oxford Dictionary, Vol.X, Part II, p.130.
5. Ilakkuvanar, S., Tholkappiyam with critical studies, p.390.
6. [illegible] 6 பக். 10.
7. [illegible] 6 பக். 15.

மரபு இற்றைக்கு 7000 ஆண்டுகட்கு முற்பட்டது என்பர்.[8] டாக்டர் சி. இலக்குவனார் தமிழர் மலையாள நாட்டில் ஆண்டுத்தொடக்கம் ஆவணியிலிருந்தே கொள்ளப்பட்டது என்றும் இன்று சித்திரை முதலாகத் தொடக்கப்படுகிறது என்றும் கூறுவர்.[9]

கார் காலம் மற்றும் பழமையிற் புதுமையாய் எல்லா உயிர்கட்கும் ஒரு புதிய எழுச்சியை ஒரு புதிய இன்ப வாழ்வை ஆண்டுதோறும் தொடங்கித் தருகின்றமையால் ஆண்டின் தொடக்கம் ஆவணி என்ற அமைத்தமை மிக்க பொருத்தமுடைத்து எனலாம். கார் காலம் முல்லை நிலத்திற்கு அமையுமாற்றை ஆராயும் உரையாசிரியர்களுள் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இளம்பூரணர், 'முல்லையாகிய நிலமும் வேனிற் காலத்து வெப்பம் உழந்த மரமும் புதலும் கொடியும் தளிர்த்து இடந்தொறும் பூக்கள் மலர்தற் கலி பெறும் ஆதலின், அதற்கு அது சிறந்ததாம்.[10] என்பர். நச்சினார்க்கினியர் 'பிரிந்து மீளும் தலைவன் திறமெல்லாம் பிரிந்திருந்த ஆற்றி வருதலை முல்லைப் பொருளாக்கிப் பிரிந்த போதின் நிகழ்ச்சிகளெல்லாம் பாலையாக்கலின், அப்பிரிவு போது மாறிய மீட்சிக்குத் தலைவி இருத்தற்கும் உபகாரப்படுவது கார் காலமாம் அன்றே? வினைவயிற் பிரிந்த மீள்வோன்... விரைவின் வரும் காலம்... வெப்பமும் தட்பமும் மிகாது இடை நிகர்த்ததாகி எவ் வுயிர்க்கும் இன்பம் செய்து வரும் இளவேனிற்கு நீரும் நிழலும் பயந்தாலும் ஆர்பதம் மிக்க நீரும் நிழலும் பெறுதலின் எனைத்தும் மாவும் புள்ளும் துணையோடின்புற்று விளையாடுவன கண்டு தலைவற்கும் தலைவிக்கும் காமக்குறிப்பு மிகுதலானும்' என்பர்.[11] [முல்லைத் திணைக்குரிய கார் காலம், பெரும்பொழுது ஆறுபடும் முதல், தொடக்கம் ஆவணித் திங்களுக்கும் கொள்ளப்படும் என்பது அறியற்பாலது.]

மகாகவி காளிதாசர் தம் ருதுசம்ஹாரத்தில் கார் காலத்தை 'The rainy season has come down like a king'[12] எனக் குறிப்பிடுதல் ஈண்டு நினைவு கூர்தற்பாலது.

---

8. அபிதான சிந்தாமணி கா. பஞ்சாங்க நாட்காட்டி பக்.42.
9. Ilakkuvanar.C., Tholkappiyam with critical studies, p.399.
10. தொல்.பொருள்.அகத்.12 பக்.13.
11. தொல்.பொருள்.நச்சி.6 பக்.16.
12. Ritusamhara, Canto II, p.6.

கார்ப்பருவம்

முல்லைத்திணைப் பாடல்களில் 'கார்' என்னும் சொல் வரும் இடங்கள் 61.[13] இவை யாவும் கார்ப்பருவத்தைக் குறிக்க வந்தவையாகும். இவற்றுள் 25 இடங்களை ஐங்குறுநூறு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கார் காலம் குறித்து வரும் தொடர்கள்

முல்லைத்திணைப் பாடல்களில் கார் காலம் குறித்து வரும் தொடர்கள் பல. அவற்றுள், 'ஆர்கலி ஏற்றொடு கார்'[14] 'கார்செய் காலை'[15] 'கார்செய் தன்றே கவின்பெறு கானம்'[16] 'கார்தொடங் கின்றே காலை'[17] 'கார் வியன்புலம்'[18] 'தலைஇய தண்கார்'[19] 'நறுந்தண் கார்'[20] 'புலம்பு கொண்ட கார்'[21] 'கார் மழை'[22] என வருவன குறிப்பிடத்தக்கன.

கார் மழை வரவால் உலகம் பொலிதல்

கார்காலத்தொடு மழையை இணைத்துக் கூறப்படும் பாடல்கள் பல உள.[23] கார் மழை வரவால் எல்லா உயிர்களும் புத்துணர்வும் புது வாழ்வும் பெறுகின்றன. காரும் மழையும் எதிர்கொண்டு வருகின்றன என்பதைக் கூறும் புலவர், வறண்ட ஞாலம் தளிர்ப்ப, கானம் கவின, வேனில் வெம்மை நீங்கக் காடு அழகு பெற, பெருநிலம் குளிர, பெருநிலம் மலர் பரப்ப, நிலத்துத் துன்பம் நீங்க, தலைவி தலைவனை நினைக்க நகை வருகின்றன எனப் புலப்படுத்தியுள்ளனர். இவற்றை,

---

13. நற்.99:8; 115:7; 242:5; 248:4; 289:6; 316:9 (6)
    குறு.21:4; 65:3; 66:5; 126:5; 148:5; 162:2; 186:1; 188:2; 233:4; 251:4; 382:5 (11)
    ஐங்.411:2; 413:5; 417:1; 427:2; 433:3; 441:2; 448:4; 451:1; 452:2; 453:3; 454:3; 455:2; 461:2; 462:1; 465:2; 468:2, 3; 476:1; 484:1; 491:1; 492:5; 493:3; 496:2; 497:3; 499:2 (25)
    பரி.12:15; 20:10 (2)
    கலி.105:24; 106:5; 109:1 (3)
    அகம். 4:7; 14:20; 54:3; 134:2; 144:3; 194:16; 204:5; 234:1; 304:16; 314:7; 334:13; 364:9; 374:13; 394:4 (14)
14. குறு.186:1.
15. ஐங்.465:1.
16. அகம்.4:7.
17. ஐங்.493:3.
18. குறு.188:2.
19. நற்.316:9.
20. குறு.126:5.
21. அகம்.304:16.
22. ஐங்.484:1.
23. நற்.289; ஐங்.433, 448, 452, 455, 461, 476, 484, 488; அகம்.4, 134, 204, 234, 314, 334.

'வறந்த ஞாலம் தணிப்ப ...
... . கார்செய் தன்றே'[24]

'கார்பெயற் கெதிரிய கானமு முடைத்தே'[25]

'வேனில் நீங்கக் கார்மழை தலைஇக்
காடுகவின் கொண்டன்று பொழுதே'[26]

'இருநிலங் குளிர்ப்ப'[27]

'காரார்ப் பெய்த கடிகொள் வியன்புலத்து'[28]

'நிலவரை யல்லல் நிறைத்த'[29]

'பெருவிறற் காதலி கருதும் பொழுதே'[30]

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென'[31]

என வரும் அடிகள் அழகுபடக் கூறுகின்றன. கானம் கார்காலத்தின் முதற் பெயலைப் பெற்று விளங்கும் சிறப்பை நக்கீரனார் 'தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்து'[32] எனக் கூறி யுள்ளமை ஈண்டு நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

<u>மழை பெய்யும் காட்சி</u>

மழை பெய்யும் காட்சியும் முல்லை நிலத்திற்கே உரிய அரிய தனிக்கவினுடன் பொலிகின்றது. இத்தகைய மழை பெய்யும் காட்சிகளின் வருணனைகள் பல பாடல்களில் இடம் பெறுகின்றன.[33]

கடல் நீரை முகந்து எழுச்சி பெறும் மேகம் இடியொடும் இந்திர வில்லொடும் மின்னலொடும் உலகு மறையப் பொழியும் காட்சிகள் பலவாறு சிறப்பித்துச் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள் மேகமானது எழிலி, மை, வானம், கார், முகில் எனப் பல பெயர்களைப் பெறுவதும் பெருமுழக்கத்தோடு தோன்றும் காட்சி, 'ஆர்குர லெழிலி'[34] 'ஆர்கலி யெழிலி'[35] 'அதிர லேறொடு'[36] 'தண்குர லெழிலி'[37] 'கடுங்குரல்... கார்'[38] 'உடலேறு'[39]

---

24. ஐங். 452: 1-2. 25. ஐங். 433: 3. 26. ஐங். 484: 1-2.
27. ஐங். 470: 1. 28. கலி. 109: 1. 29. பரி. 10: 3.
30. ஐங். 488: 2. 31. நெடுநல். 1-2. 32. முரு. 9.
33. நற். 42, 89, 99, 364, 371; ஐங். 418, 437, 440, 458, 462; அகம். 24, 54, 74, 124, 164, 274, 304, 344, 364.
34. ஐங். 411: 1. 35. ஐங். 428: 2. 36. ஐங். 469: 3.
37. குறு. 314: 2. 38. நற். 289: 5-6. 39. பரி. 20: 2.

எனப் பலவாறு கூறப்படுவதும் பெருமழையோடு தோன்றும் காட்சி, 'அழிதுளி...கார்'[40] 'விசும்பதிர...பெயல்'[41] 'ஏற்றொடு கார்'[42] 'கழங்குறழ்...எழிலி...கட னிமைப்பப் பெயல்'[43] 'மின்னெடு...தளிபொழி'[44] 'முற்றுபு பெய்தலின் முதிர்முகில்'[45] எனச் சிறப்பிக்கப் படுவதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. மேலும் மழையைச் சிறப்பிக்கும் புலவர்கள் வாடை பெய்யும் பல பாடல்களில் இக்கருத்தைக் கூறியுள்ளதைக் காண்கிறோம்.[46]

மேகத்தின் எழுச்சி

மழை பொழியும் காட்சியை உவமை நயத்தால் சிறப்புறக் காட்டும் இடங்கள் பல. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

மேகம் உலகை வளைத்து மழை பொழிய வானத்தே எழுந்த அழகுக்காட்சி, மாவலி மன்னன் வார்த்த நீரால் உலகை வளைக்க நிமிர்ந்த திருமால்போல உள்ளமையை முல்லைப் பாட்டுப் பின்வருமாறு கூறுகிறது.

'நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடு கொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை'[47]

நீர் கொண்ட மேகம்

சூல் கொண்ட மகளிர்போல நீர் கொண்ட மேகம் வானத்தே செல்லாது மலைகளில் பொழியும் காட்சியைக் குறுந்தொகை,

'சூன்முதிர் மகளிர் போல நீர்கொண்டு
விசும்பிவர் கல்லாது தாங்குபு புணரிச்
செழும்பல் குன்ற நோக்கிப்
பெருங்கலி வான மேர்தரும் பொழுதே'[48]

என வரும் அடிகளால் சுவைபட விளக்குகிறது.

---

40. ஐங். 411: 1-2. 41. ஐங். 469: 3-4. 42. குறு. 186: 1.
43. குறு. 314: 1-3. 44. பரி. 12: 1-3. 45. பரி. 20: 3.
46. நற். 89, 364; ஐங். 456, 457, 460, 470, 471, 479; அகம். 264, 294; குறு. 110.
47. முல்லைப். 1-6. 48. குறு. 287: 5-8.

<u>பெருமழையால் விளைவன</u>

மேகமானது யானைகள் சிதறி விழுந்தன போலப் பனிக்கட்டிகளோடு பெய்யும் காட்சியை,

'இருவிசும் பிவர்ந்த கருவி மாமழை
நீர்செறி நுங்கின் கண்சிதர்ந் தவைபோல்
.... தண்வரல் ஆலியொடு
பருஉப்பெயல் ....'[49]

என வரும் அடிகளில் காணலாகும்.

மேகம், இடி முழக்கத்தோடும், மின்னலோடும் பெருமழையைப் பொழியுங்கால் பாம்பு வலி அழியும் என அறிகிறோம். இக்கருத்தமைந்த பாடலடிகள் வருமாறு:

'பருவஞ் செய்த கருவி மாமழை
....
உரவுரும் உரறு நீரின் பரந்த
பாம்புபை மழுங்கல் .....'[50]

'கடுவிடு முருமிற் பாம்புபை மடிய
இடியொடு மயங்கி யிமிழ்ந் தன்றே'[51]

'இருவிசும் பதிர முழங்கி அரநலிந்து
இகுபெயல் அழிதுளி தலைஇ வானம்
பருவஞ் செய்த பானாட் கங்குல்'[52]

<u>மலர்க் காட்சி</u>

கார் மழையால் மலர்கள் பல மலர்ந்து விளங்கும் எழில் மிகு காட்சிகள் உள்ளத்தை ஈர்ப்பன. இன்பம் தருவன. இக்காரணம் பற்றியே மலர்கள் 'கார் மலர்'[53] எனப் பெயர் பெற்றன போலும்.

நிலவு போன்ற அரும்புகளை உடைய முல்லை, தளவப் பைங்கொடியைத் தழுவி மெல்ல மலரும். இதனை,

'தளவின் பைங்கொடி தழீஇப் பையென
நிலவி னன்ன நேரரும்பு... முல்லை'[54]

எனவரும் அடிகளால் அறிகிறோம். கொன்றையும், பிடவமும், தோன்றியும் மலரும் காட்சியை,

---

49. அகம். 304: 1-4.
50. நற். 238: 5; 8-9.
51. குறு. 391: 3-4.
52. அகம். 274: 1-3.
53. அகம். 208: 23; பதிற். 21: 33; மதுரைக். 613.
54. ஐங். 454: 1-3.

'குரும்பல் கோதை கொன்றை மலர
.... கார்தொடங் கின்றே'[55]

'பிடவம் மலர ....
கார்கலிக் கொண்ட காலம்'[56]

'கண்ணக விருவிசும்பிற் கதழ்பெயல் கலந்தேற்ற
தண்ணறும் பிடவமுந் தவழ்கொடித் தளவமும்
வண்ணவண் தோன்றியும் வயங்கிணர்க் கொன்றையும்'[57]

என வரும் அடிகளில் காண்கிறோம்.

<u>வினையிற் பிரிந்தார் மீளும் காலம்</u>

கார் தொடக்கும் பருவத்தே வேந்தர் போர் வினையை மேற்கொள்ளார். அது கார் காலம் மழை மிகு காலமாதலால் போர் நடைபெறா என்பதும் போர் வினையால் பிரிந்தவர் தத்தம் இல்லம் நோக்கிச் செல்லும் காலமாக அமைகிறது என்பதும் புலனாகின்றன. இக் கருத்தினை,

'.......... கார்தொடங் கின்றே
வேந்துவிடு விழுத்தொழில் ஒழிய
யாந்தொடங் கிய வினைப்புறந் தரவே'[58]

என வரும் அடிகளால் அறிகிறோம்.

<u>உயிரினங்கள் பெறும் பேருவகை</u>

உயிரினங்கள் கார் மழையால் பெறும் இன்பம் புலனாகும் தொடக்கத்தில் இன்பமாய் விளங்கும். இதனைப் பல காட்சிகள் அழகுறக் காட்டுகின்றன. தேரைகள் பள்ளந்தோறும் ஒலிக்கும்; பறவைகள் மேடுதோறும் ஒலிக்கும்.

'அவல்தொறுந் தேரை தெவிட்ட மிசைதொறும்
வெங்குரற் புள்ளின மொலிப்ப.......
கார்தொடங் கின்றே..... ....'[59]

ஏறுகள் முழக்கும். மான் தன் பிணையொடு திரியும்,

'ஏறுமீ சிறப்ப வேறுதி நிறக்க
மாதர் மான்பிணை மறியொடு மறுகக்
கார்தொடங் கின்றே'[60]

---

55. ஐங்.497:1;3.
56. ஐங்.499:1-2.
57. கலி.102:1-3.
58. ஐங்.428:2-4.
59. ஐங்.453:1-3.
60. ஐங்.493:1-3.

இரலை தன் துணையொடு நீர் உண்டு துள்ளிக் குதித்தோடுவதும் பெருந்த மர நிழலின்கண்ணே உறைவதும் கண் கொள்ளாக் காட்சிகள்.

'வன்பரற் றெள்ளறல் பருகிய இரலைதன்
இன்புறு துணையொடு மறுவந் துகளத்
தான்வந் தன்றே தளிதரு தண்கார்'[61]

'சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
வலந்திரி மருப்பின் அண்ணல்இரலையொடு
அலங்குசினைப் பொதும்பில் அல்குநிழல் வதிய
....
.... காரெதிர் கானம்'[62]

மயில் இடியொலியைக் கேட்டு ஆரவாரிக்கும்.

'பொய்யிடி அதிர்குரல் வாய்செத்து ஆலும்
இனமயில்'[63]

'அரும்பொறி மஞ்ஞை யால .....
.... காரெதிர் கானம்'[64]

தேரைகள் தட்டைப்பறை ஒலியைப்போல, சிறு பல்லியம் எற்ற ஓசைக்கருவி போல, ஆகுளிப்பறைபோல ஒலிக்கும்.

'.... .... தேரை
தட்டைப் பறையிற் கறங்கும்'[65]

'நெடுநீ ரலல பகுவாய்த் தேரை
சிறுபல் லியத்தின் நெடுநெறிக் கறங்க'[66]

'ஏறுடைப் பெருமழை பொழிந்தென அவலே
ஆகுளிப் பறையின் வரிகையில் கறங்க'[67]

நீலமணி நிறத்தையொத்த காயாவும் செம்பவள நிறத்தையொத்த தம்பலப் பூச்சியும் மணியிடை பவளமாய்த் திகழும் காட்சி ஒரு காட்சியாகும்.

'மணியிடை பவளம் போல அணியிகக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்பப்
புலவளி கொண்ட காரெதிர் கானம்'[68]

'Poets are the rulers of men's spirits more than the philosophers, whether mental or physical'[69]

என்ற கொள்கை புலவர் தம் கார்காலக் காட்சிகளில் அழகுறப் பொலிவதைக் காண்கிறோம்

---

61. குறு. 65: 1-3.
62. அகம். 304: 8-10, 16.
63. நற். 248: 7-8.
64. அகம். 304: 12, 16.
65. குறு. 193: 2-3.
66. அகம். 154: 2-3.
67. அகம். 364: 2-3.
68. அகம். 304: 13-16.
69. Shairp, J.C., Aspects of Poetry, p.105.

மாலை

மாலைக்காலம்

மாலைக்காலம் முல்லைத்திணைக்குரிய சிறுபொழுதாம் (The short period of the season)எனினும் சிறப்புடையது. மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு என்னும் அறுவகைச் சிறுபொழுதுகளுள் (The six short period of the season) மாலை முதற்கண் இடம் பெறுவது அறிதற்குரியது.[70] ஆங்கிலத்தில் Evening என்று பெயர் பெறும். ஆக்ஸ்போர்டு அகராதி மாலைக் காலத்தை 'The close of the day, usually, the time from about sunset till bedtime' எனக் குறிக்கிறது.[71] மாலைக் காலத்திற்கு விளக்கம் தரும் இளம்பூரணர், "மாலையாவது இராப்பொழுதின் முற்கூறு; பத்து நாழிகை அளவுடையது" என்பர். மாலைப்பொழுது முல்லைத் திணைக்கு அமையுமாற்றை ஆராயும் உரையாசிரியர்கள் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் குறிப்பிடுகின்றனர். இளம்பூரணர், 'மாலைப்பொழுது இந்நிலத்திற்கு இன்றியமையாத முல்லை மலருங்காலம் ஆதலானும், அந்நிலத்துக் கருப்பொருளாய ஆநிரை வருங்காலமாதலானும், ஆண்டுத் தனியிருப்பார்க்கு இவை கண்டுழி வருத்தம் மிகுதலின், அதுவும் சிறந்தது ஆயிற்று' என்பர்.[72] நச்சினார்க்கினியர், 'புல்லை மேய்ந்த கொல்லேற்றோடே புனிற்றுக் கன்றை நினைந்து மன்றிற் புகுதரவுந் தீங்குழலிசைப்பவும் பந்தர் முல்லை வந்து மணங்கமழ்தலும், வருகின்ற தலைவற்கும் இருந்த தலைவிக்குங் காமக் குறிப்புச் சிறத்தலின், அக்காலத்து மாலைப்பொழுதும் உரித்தாயிற்று'[73] என்பர்.

மாலைப் பகுப்பு

முல்லைத்திணைப் பாடல்களில் 'மாலை' என்னும் சொல் 45 இடங்களில் இடம் பெறுகின்றது.[74] இவை யாவும் மாலைக் காலத்தைக் குறிக்க வருவனவேயாகும். இவற்றுள் குறுந்தொகை 15 இடங்களைப் பெற்றுள்ளமை அறிதற்குரியது.

---

70. தொல். பொருள். 6. 71. The Oxford Dictionary, Vol.III, Part II, p.336
72. தொல். பொருள். இளம். 12 பக். 13. 73. தொல். பொருள். நச்சி. 6 பக். 16.
74. நற். 69: 9; 89: 11; 169: 9; 181: 9; 238: 4; 321: 5; 361: 6; 364: 11-
குறுந். 64: 2; 155: 6; 162: 2; 188: 4; 220: 6; 234: 3; 5; 6; 240: 7; 314: 3; 319: 5; 344: 6; 358: 5; 387: 2; 391: 6 - (15)
ஐங். 410: 1; 421: 1; 476: 4; 486: 1; 489: 2 - (5)
பரி. 10: 1; 112: 114 - (3)
அகம். 14: 12; 54: 12; 64: 16; 74: 15; 104: 13; 114: 6; 124: 13; 204: 7; 214: 15; 234: 14; 324: 15; 364: 13 - (12)
முல்லை. 6 - (1)
நெடுநல். 44 - (1)

மாலைப்பொழுது குறித்து வரும் தொடர்கள்

மாலைப்பொழுது பெறும் அடைமொழித் தொடர்கள் பல. அவற்றுள் 'அம்பல் மாலை'[75], 'அருவில் மாலை'[76], 'உயிர்செலத் துனைதரு மாலை'[77], 'எதிர்மாய் மாலை'[78], 'கமழும் மாலை'[79], 'கையறு மாலை'[80], 'கொலைகுறித்தன்ன மாலை'[81], 'சிறுபுன் மாலை'[82], 'நனைநகு மாலை'[83], 'பனிகூர் மாலை'[84], 'புலம்புகொள் மாலை'[85], 'புல்லென் மாலை'[86], 'பெரும்புன் மாலை'[87], 'மாரி மாலை'[88], 'முல்லை மாலை'[89], 'முல்லை மலரு மாலை'[90], 'மையல் மாலை'[91] என வருவன சில அறியற்பாலன. இவற்றுள் பெரும்பான்மையவும் பிரிந்தார்க்குத் துன்பம் தரும் என்னும் பொருளில் வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. முல்லைத்திணைப் பாடல்களைப் போலப் பிறதிணைப் பாடல்களிலும் மாலைப்பொழுது 'நாரில் மாலை'[92], 'பையுள் மாலை'[93], 'கானயத்.. மாலை'[94], 'புன்கண் மாலை'[95], 'மாலை மாமழை'[96] எனக் குறிக்கப்படல் அறியற்பாலது.

உணர்ச்சி மிக்க மாலைக்கால வருணனைகளைக் கூறும் தொடர்களை ஆராயும் காலத்து 'In the case of a good poet, 'In a single line, sometimes in a single epithet, the poet can flash upon out imagination a picture that shall seem filled with passionate emotion'[97] எனக் கூறும் வின்செஸ்டர் கருத்தை மிகப் பொருத்தமாகப் பெறுகின்றன எனலாம்.

இனி, மாலைக் காலம் எவ்வெவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றது என்பதைக் காண்போம்

மாலைக்கால நிகழ்ச்சிகள்

மாலைக் காலத்தில் எல்லோரும் வினைமுடித்து இல்லம் மீள்வர். இதனை,

'பலர்புகு தரூஉம் புல்லென் மாலை'[98]

எனப் புலப்படுத்துவதால் அறிகிறோம்.

---

75. ஐங்.476:4. 76. நற்.69:9. 77. நற்.364:11.
78. நற்.321:5. 79. நற்.169:9. 80. குறு.387:2.
81. அகம்.364:13. 82. அகம்.114:6; முல்லைப்.6.
83. அகம்.54:12. 84. குறு.358:5.
85. குறு.314:3; அகம்.64:16. 86. குறு.162:2; அகம்.234:14.
87. ஐங்.486:1. 88. அகம்.214:15.
89. அகம்.204:7; 324:15. 90. ஐங்.489:2.
91. நற்.181:9. 92. குறு.118:2. 93. குறு.172:2.
94. குறு.189:5. 95. குறு.338:4. 96. குறு.200:5.
97. Winchester, C.T., Some Principles of Literary Criticism, p.135.
98. குறு.162:2.

பசுக்கள் மேய்வதற்கு நீண்ட வழியிற் செல்ல, அவற்றின் கன்றுகள் மாலைக் காலத்தே அவை தங்கும் மன்றத்தைத் தலையெடுத்துப் பார்த்து வருந்தும்.

'பல்லா நெடுநெறிக் கன்றுவருந்தெனப்
புன்றலை மன்ற நோக்கி மாலை
மடக்கட் குழவி அலவந் தன்ன
நோயே மாகுதல்'[99]

பருத்த மடியையுடைய பசுக்கள் தம் கன்றுகளை நினைத்துப் பாலொழுகப் பிற பசுக்களை விட்டு நீங்கி வீட்டத்தே மீளும்.

'..... வீங்குமுலைச் செருத்தல்
பால்வார்பு குழவி புள்ளி நிரையிறந்
தூர்வயிற் பெயரும் புன்கண் மாலை'[100]

மாலைக்காலத்தே பசுக்கள் இனிய பாலைச் சுரந்து தம் கன்றுகளை நினைந்து அழைக்கும் குரலொடு மன்றம் செல்லும்.

'வீங்குமாண் செருத்த தீம்பால் பிலிற்றக்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரு
மாலை ....'[101]

பாம்புப் புற்றினைக்குத்தி, கொம்பில் மண்கொண்ட ஏறு தனது இளைய பசுவினைத் தழுவி வீட்டத்தே மீளும்பொழுதில் தம் கன்றுகளை நினைந்து அழைக்கும் குரலினவாய், இனிய மணியோசையுடன் தொழுவத்தே புகும்.

'பாம்புறை புற்றத் தீர்ம்புறம் குத்தி
மண்ணுடைக் கோட்ட அண்ணல் ஏஎறு
உடனிலை வேட்கையின் மடநாகு தழீஇ
ஊர்வயிற் பெயரும் பொழுதிற் சேர்புடன்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரும்
ஆபூண் தெண்மணி ஐதியம் பின்னிசை
புலம்புகொள் மாலை'[102]

கோவலர் குழலோசை

கோலுடைய இடையர் கொன்றைக் குழலிசைத்துப் பின்னே நடந்து வர, பசுக்கள் தம் பெருத்த மடி சுரைய வேண்டி, தம் கன்றுகளிடத்தே கனைக்கின்ற குரலுடையவாய் விரைந்து மனைதோறும் செல்லும்.

---

99. குறு.64: 1-4.
100. குறு.344: 4-6.
101. அகம்.14: 10-12.
102. அகம்.64: 10-16.

'.... .... கோற்றைக் கோவலர்
கொன்றையம் குழலர் பின்றைத் தூங்க
மனைமனைப் படரும் .... மாலை' [103]

மணியோசையும் கோவலரின் கொன்றைக் குழலோசையும் ஒலிக்க, மாலையானது பிரிந்தோர் உயிர் செல வரும்.

'ஈர்மணி இன்குரல் ஊர்நணி இயம்பப்
.... கோவலர்
கொன்றையந் தீங்குழல் மன்றுதோறு இயம்ப
உயிர்செலத் துனைதரு மாலை' [104]

'துனைதருமாலை' என்பதனால் மாலை வரவின் விரைவினை உணரலாம். இந் நிகழ்ச்சியின் சித்திரத்தை,

'அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை' [105]

எனத் திருவள்ளுவர் அழகுறத் தீட்டிக் காட்டியிருத்தல் ஈண்டு அறிதற்குரியது.

<u>தலைவனைப் பிரிந்துறை மகளிர் காணும் மாலை</u>

மாலைப்பொழுது பிரிந்தார்க்குக் கொல்லுதல் போலவும் வேல் கொண்டு தாக்குதல் போலவும் வரும்.

'கொலைகுறித் தன்ன மாலை' [106]

'புல்லுந ரில்லார் நடுக்கச் சிறுமாலை
கொல்வார் போல வரும்' [107]

'.... .... வேல்கொண்
டெறிவது போல மெலிந்து' [108]

தலைவனைப் பிரிந்து தவித்துறையும் மகளிர்க்கு மாலைப்பொழுது துன்பம் தருவதை இவை வெளிப்படுத்தும். கூடியோர்க்கு இன்பப் பொழுதாய் அமையும் இம்மாலை பிரிந்தார்க்கு மிகத் துன்பமாலையாம். வெள்ளி வீதியார் என்னும் புலவர், மகளிர் பெறும் மாலைத் துன்பம் பரந்த பூமியைப் போல் பெருந்துன்பம் தரும் என்பதை,

---

103. அகம்.54: 10-12.
104. நற்.364: 8-11.
105. குறள்.1228.
106. அகம்.364: 13.
107. ஐந்.எழு.17: 3-4.
108. ஐந்.ஐம்.7: 3-4.

'மாலை, நிலம்பரந் தன்ன புன்கணொடு
புலம்புடைத் தாகுதல் அறியேன் யானே'[109]

எனக் குறிப்பிடுதல் ஈண்டு அறிதற்குரியது.

<u>மாலை மலரும் முல்லைக்காட்சி</u>

மாலைக் காலத்தே முல்லை மலரும் செய்தி பல பாடல்களில் இடம் பெறுகின்றன. அவை வருமாறு:

'.... .... முல்லை மலரும்
மாலை'[110]

'...... முல்லை மலரு மாலை'[111]

'.... முல்லை மாலை....'[112]

முல்லை முதலான மலர்கள் மாலைக்காலத்தில் மலரும் என்றும் போதுச்செய்தியை 'நனைநறு மாலை'[113] எனும் தொடர் புலப்படுத்தக் காண்கிறோம்.

<u>மாலையில் மாவும் புள்ளும்</u>

மாலை வருகையைச் சுவைபடக் கூறும் குறுந்தொகை, மானேறு மடப்பிணையைத் தழுவிப் புதலின் மறைந்து ஒடுங்கவும், ஆண் யானைகள் பெண் யானைகளோடு சேர்ந்து மலையிடம் அடையவும் வரும் எனக் கூறுவதால் விலங்கினத்தே அகவாழ்வு பொலிவு பெறுவதைக் காண்கிறோம்.

'மானேறு மடப்பிணை தழீஇ மருள்கூர்ந்து
கானு நண்ணிய புதல்மறைந் தொடுங்கவும்
கையுடை நன்மாப் பிடியொடு பொருந்தி
மையணி மருங்கின் மலையகஞ் சேரவும்
மாலை வந்தன்று ....'[114]

இங்கே களிறு பிடியொடு கலந்து களிப்புடன் மலையகம் சேரும் காட்சி, கூடுவோர் பால் நிலவும் இன்பக் காட்சியை நினைவுறுத்துகிறது.

பறவை, விலங்கு, மலர், குழல் ஆகியவை மாலைக்காலத்தில் பெறும் சிறப்பினை நற்றிணை பின்வருமாறு கூறுகின்றது.

---

109. குறுந். 386: 4-6.
110. குறுந். 234: 2-3.
111. நற். 489: 2.
112. அகம். 204: 7; 324: 15; குறுந். 188: 1, 4; 387: 1-2.
113. அகம். 54: 12.
114. குறுந். 319: 1-5.

பறவைகள் தம் பிள்ளைகளிருக்கும் கூட்டிற்குச் சென்று தங்கவும், இரலை தன் பிணையைத் தழுவவும், முல்லை மலரவும், தோன்றி விளக்காய்த் தோன்றவும், பசுக்களின் மணியோசை ஆயர் குழலோசையோடு சேர்ந்து ஒலிக்கவும் மாலை வரும்.' இவற்றை,

'பறவை பார்ப்புவயின் அடையப் புறவின்
மாவெருத்த இரலை மடப்பிணை தழுவ
முல்லை முகைவாய் திறப்பப் பல்வயின்
தோன்றி தோன்றுப் புதல்விளக் குறுஅ
மதர்வை நல்லான் மாசில் தெண்மணி
கொடுங்கோற் கோவலர் குழலோ டொன்றி
ஐதுவந் திசைக்கும் அருளில் மாலை'[115]

என வரும் அடிகள் உணர்த்தும்.

---

115. நற். 69: 3-9.

தெய்வம்

தெய்வ வழிபாட்டு மரபு

தெய்வ வழிபாடு மிகு தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புடையது. மக்கள் தெய்வத்திற்குப் படிமம் வைத்தமை, நன்றிக் கடன் பல செலுத்தியமை, தெய்வம் காக்கும் என்று கருதி வழிபட்டமை, இன்ன பிற யாவும் அவர்தம் தெய்வ வழிபாட்டுச் சிறப்பை நன்கு எடுத்துக்காட்டும். இச்சிறப்புகளை,

'மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய'[1]

'கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்திறம்'[2]

'தெய்வம் வாழ்த்தலும்'[3]

'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப'[4]

என வரும் தொல்காப்பிய நூற்பாக்கள் நன்கு புலப்படுத்துகின்றன.

தொல்காப்பியர் காலத்தே தெய்வம் என்பது பெயர்ச்சொல்லாகவும் உயர் திணைச் சொல்லாகவும் வழங்கியமை 'தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவி'[5] என்றும்,

'காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வருஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வருஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன'[6]

என்றும் வரும் நூற்பாக்களால் புலனாகும்.

முல்லை நிலத் தெய்வம்

முல்லை நிலத் தெய்வம் மாயோன். தொல்காப்பியனார், 'மாயோன்'[7] என்னும் சொல்லினை இரண்டு இடங்களில் குறிப்பிட்டுள்ளமை அறிதற்குரியதாகும். கருப்பொருள்களில் தெய்வத்தை முதற்கண் கூறி நானிலங்களைச் சிறப்பிப்பதுபோல் முதற்பொருள் முல்லை நிலத்தே மாயோனை முதற்கண் கூறித் தொடங்கியிருத்தல் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வுண்மை 'மாயோன் மேய காடுறை உலகமும்'[8] என வரும்

---

1. தொல். பொருள். 30: 1.
2. தொல். பொருள். 148: 4.
3. தொல். பொருள். 113: 7.
4. தொல். பொருள். 415: 1.
5. தொல். சொல். 4: 3.
6. தொல். சொல். 58: 1-6.
7. தொல். பொருள். 5: 1; 63: 9.
8. தொல். பொருள். 5: 1.

அடியாகத் தெரிகிறது. மேலும், எட்டுத்தொகை நூல்களில் முதல் நூலாகக் கருதப் படும் (நற்றிணையின் 'மாநிலஞ் சேவடியாக...' எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்துப் பாடலும்,) பரிபாடலின் காணும் முதல் நான்கு பாடல்களும் மாயோனுக்கு உரியதாக அமைந்திருத்தல் ஈண்டு அறிதற்குரியது.

<u>மாயோனின் முதன்மை</u>

தமிழ் இலக்கியங்கள் மாயோனுக்கு முதலிடம் கொடுத்துச் சிறப்பிப்பதைப் போற்றும் பேராசிரியர் மே.வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள் 'தமிழிலக்கியம் மாயோனை வேத முதல்வன் (The God Supreme) எனப் போற்றுகின்றது. இந்நிலை வடமொழியிலுள்ள வேதம், உபநிடதங்களுக்குச் சமமானதாகும்'[9] என்றும் குறிப்பிடு கின்றார். மாயோன் பற்றிய தொன்மைச் சிறப்பினைப் புகழும் டாக்டர் இரா. சாரங்க பாணி அவர்கள், 'பண்டைக்காலத் தமிழர்கள் இயற்கையை வழிபட்டனர். முல்லை நிலத்தினர் இயற்கை எழிலை – அடவியின் அடர்த்தியான கருமையை – மாயோன் எனக் கருதிப் போற்றிப் புகழ்ந்தனர். காட்டில் மலர்ந்த காயாம் பூவினையும் அந்நில மக்கள் பரவி ஏத்தினர். இம்மலர்கள் அவர்கட்குத் திருமாலின் நிறத்தை நினைவூட்டின. மன்னர் களைப் பாராட்டும்போது, புலமைச் செல்வர்கள் அவர்களைத் திருமாலுக்கு ஒப்பிட்டுப் பாடுவர். இவ்வகை வாழ்த்து தொல்காப்பியத்தே பூவைநிலை எனப்படும்'[10] எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வழக்கே 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும்'[11] எனப் புகழப்படுகிறது.

<u>மாயோனின் திருவுரு</u>

மாயோன் திருவோண நாளில் பிறந்தவன். இதனை, 'மாயோன் மேய ஓண நன்னாள்' என வரும் அடியால் அறிகிறோம்.[12]

மாயோனின் நிறம் கருமை. இதனை 'மாயோன்'[13], 'மால்'[14] என்ற சொற்கள் நன்கு புலப்படுத்தும்.

---

9. Venugopal Pillai, M.V., Vaishnavism in Tamil Literature, A Glimpse of Tamilology, p.17
10. சாரங்கபாணி, டாக்டர் இரா. பரிபாடல் திறன், பக். 129.
11. திருவாய்மொழி பதிகம் 34, பா. 8.
12. மதுரைக். 591.
13. நற். 32: 1; பரி. 3: 10; மதுரைக். 591.
14. கலி. 107: 32; முல்லை. 3.

மாயோன் கருமை நிறத்தோடும் நீல நிறத்தோடும் திகழ்வதை,

'நீனிற உருவின் நெடியோன்'[15]

'நீல மேனி நெடியோன்'[16]

என வரும் அடிகளால் தெளியலாகிறது.

[புலவர், காயாம்பூவினைத் திருமாலின் நிறத்திற்கு உவமித்துச் சிறப்புச் செய்வர். இது பூவை நிலை எனப்படும். இதனை,

'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்'[17]

எனவும்,

'கறவை காவலன் நிறனொடு பொரீஇப்
புறவலர் பூவைப் பூப்புகழ்ந் தன்று'[18]

எனவும் வரும் அடிகள் தெளிவாக்குகின்றன. இப்பூவை நிலையை விளக்கும் இளம்பூரணர், 'மாயோன் முதலாகிய தேவர்களோடு உவமித்தலே பூவை நிலை'[19] என்று திருமாலைத் தொடக்கமாகக் கொண்டு பொதுவாகக் கூற, டாக்டர் உ.வே. சாமிநாதையர், 'திருமாலின் திருவுருவோடு உவமித்துக் கூறும் காயாம் பூவைப் புகழ்தல்'[20] என்று சிறப்பாகத் திருமாலையே குறிப்பிட்டுள்ளார்.]

<u>திருமால் புகழ் பாடும் சங்கப்பகுதிகள்</u>

திருமால் புகழ் பாடும் சங்க நூல்களுள் பரிபாடல் குறிப்பிடத்தக்கது. கிடைத்துள்ள 22 பாடல்களுள் திருமாலுக்குரியவை 6 பாடல்கள் ஆகும். பரிபாடல் திரட்டில் காணும் மற்றுமோர் பாடலையும் உடன் கூட்ட, திருமாலுக்குரியவை 7 பாடல்கள் என அறிகிறோம். அவை வருமாறு:

---

15. பெரும்பாண். 402.
16. சிலப். 5: 172.
17. தொல். பொருள். 63: 9-10.
18. பு.வெ. 192.
19. தொல். பொருள். இளம். 63.
20. புறநானூறு டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக். 656.

பா.எண்.	பாடியோர்	இசைவகுத்தோர்	அடியளவு	பண்
1	?	?	65	
2	கீரந்தையார்	நன்னாகனார்	76	பாலையாழ்
3	கடுவன் இளவெயினனார்	பெட்டனாகனார்	94	ஷ
4	ஷ	ஷ	73	ஷ
13	நல்லெழுநியார்	?	64	நோதிறம்
15	இளம்பெருவழுதியார்	மருத்துவன் நல்லச்சுதனார்	66	ஷ
பரிபாடல் திரட்டு 1	?	?	82	?
மொத்தம் 7	4	3	520	2

<u>பரிபாடலில் திருமால்</u>

பரிபாடல் கடவுள் வாழ்த்து என்னும் பகுதியைத் தனியாக முதற்கண் பெறாத நிலையில் முதற்கண் அமைந்துள்ள திருமால் பற்றிய பாடல்களை கடவுள் வாழ்த்தாகப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. அம்மட்டோடு சங்க நூல்களில் இசை அடையில் தொகுக்கப்பெற்ற ஒரே நூல் என்ற போற்றும் பெருமை உடையதாகவும் இது திகழ்கிறது. மேற்கூறிய பாடல்களிற் காணும் இறைமையாகிய கருத்துக்களைக் காண்போம்.

திருமாலைப் பாடிய நால்வருள் கடுவன் இளவெயினனார் என்னும் புலவர் ஒருவரே இரண்டு பாடல்களைப் பாடிய பெருமை உடையவர் என்பதும் திருமாலின் பெரும்பாலான அவதாரங்களையும் புராணக் கதைகளையும் குறிப்பிட்டுள்ளார் என்பதும் ஈண்டு நினைவு கூர்தற்குரியதாகும்.

<u>திருமால் அவதாரம்</u>.

அவதாரங்களுள் கண்ணன்,[21] வாமனன்,[22] நரசிங்கம்,[23] வராகம்,[24] பலதேவன்,[25] ஆகிய ஐந்து அவதாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. புராணக் கதைகளுள்

21. பரி. 3:31; 83; ப. திரட்டு. 1:5.
22. பரி. 3:20 ஒப்பு. கலி. 124:1; பெரும்பாண். 29-31.
23. பரி. 4:10-21.
24. பரி. 4:22-24.
25. பரி. 4:38-40.

திருமாலின் உந்தித்தாமரையில் நான்முகன் தோன்றியது,[26] திருமால் அன்னப்பறவையாய்த் தோன்றித்தன் சிறகால் வெள்ளத்தைப் புலர்த்தியது,[27] விண்ணவர்க்கு அமுது அளித்தது,[28] அவுணர்களை அழித்தது[29] ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும். மேற்கூறியவற்றுள் நரசிங்க அவதாரத்தால் பிரகலாதன் பெற்ற பெருவாழ்வும் இரணியன் பெற்ற பேரழிவும்,

'பிருங்க லாதன் பலபல பிணிபட
வலந்துழி ... ._....
நன்று நட்டவ னம்மார்பு முயக்கி
ஒன்றுநட்டவ னுறுவரை மார்பிற்
படிமதஞ் சாம்ப வொதுங்கி
இன்ன லின்னரொ டிடிமுர சியம்ப
வெடிபடா வொடிதூண் டடியொடு
தடிதடி பலபட வகிர்வாய்த்த வுகிரினை'[30]

என வரும் அடிகள் வாயிலாகக் காண்கிறோம். குதிரை வடிவில் வந்த கேசி என்னும் அரக்கனை அழித்தவர் என்பதை,

'கஞ்சன் எஞ்சும் பெயரொடு கஞ்சன்
எரிசினங் கொன்றோய்'[31]

என வரும் அடிகளில் காணலாம்.

நான்முகன் திருமாலின் உந்தித்தாமரையில் தோன்றிய சிறப்பை,

'மலர்ந்த
தாமரைப் பூவினுட் பிறந்தோனுந் தாதையும்
நீயென மொழியுமா லந்தண ரருமறை'[32]

என வரும் அடிகளால் அறிகிறோம்.

<u>திருமால் பெருமை</u>

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'[33] என்ற திருமூலர் கருத்தை கடுவன் இளவெயினார் பாடலில்கண், ஒரு முன்னோடிக் கருத்தாகப் பல நிலைகளில் நிலைபெற எய்துவதைக் காண்கிறோம். அவற்றுள் திருமாலை முருகன், அயன், சிவன் எனக் கூறுதல்[34] பலதேவன், முருகன் ஆகியோர் தம் கொடிகள் திருமாலுக்குரியவை எனப் பகர்வதும்[35]

---

26. பரி. 3: 11-13. 27. பரி. 3: 25-26.
28. பரி. 3: 33-34.
29. பரி. 3: 54-56; ஒப்பு. 2: 36-49; கலி. 52: 5; மதுரைக். 590-591.
30. பரி. 4: 12-13; 16-21. 31. பரி. 3: 31-32.
32. பரி. 3: 12-14; ஒப்பு பரி. 3: 93-94; பெரும்பாண். 403-405.
33. திருமந்திரம், ஏழாம் தந்திரம், அதிகாரம் 38, பா. 3.
34. பரி. 3: 37-40. 35. பரி. 4: 38-40.

சிவன் மாலுக்குரியன் என்ற கூற்றும்[36] உலகத்தே அனைத்துப் பொருளாய் உள்ளவர் திருமால் என்ற சாற்றலும்[37] திருமால் பகைவர் நட்பர் எனப் பிரித்தறியாதவர் என்பதும்[38] ஈண்டு நினைவிற் கொள்ளத்தக்கவாகும். திருமால் ஆயிர மேனிக்கும் தலைமையைக் 'கோவல'[39] என்றும், இலக்குமியின் கணவராய் விளங்கும் சிறப்பை, 'திருவின் கணவ'[40] என்றும் போற்றக் காண்கிறோம். சிலப்பதிகாரத்தால் அறியலாகும் திருமால் பெருமைகள் பல. அவற்றுள், திருவரங்கத்தில் பள்ளி கொண்ட காட்சி, திருவேங்கடத்தில் நின்ற திருக்கோலம், வஞ்சமாய் மாவலியின் வஞ்சம், மூவுலகை ஈரடியால் அளந்த பெருமை, கடல் கடைந்த ஆற்றல், கடல் வண்ணன் இலக்கும் திருவுருவம், திருமால், பெரியவன், கரியவன், மாயவன், நாராயணன் எனப் பல பெயர்களால் பொலியும் சீர், 'கேளாத செவியென்ன செவியே காணாத கண்ணென்ன கண்ணே, ஏத்தாத நாவென்ன நாவே' எனப் புலவர் பெறும் இன்பம் ஆகியவை ஈண்டு அறிதற்குரியன.[41]

<u>மாயோன் மார்பில் மணியும் மலர்மகளும்</u>

திருமாலின் மார்பில் விளங்கும் நித்தில மதாணி மதிபோன்றும் மார்பிலுறை திருமகள் மதிக்கண் உள்ள மறுபோன்றும் தோன்றும் காட்சியைக் கீரந்தையார்,

'பூவண் கவைஇய வாரணி நித்திலம்
நித்தில மதாணி யத்தகு மதிமறுச்
செய்யோள் சேர்ந்தநின் மாசில் வகலம்'[42]

என்ற கூற்றால் அறிகிறோம். திருமால் கருடக் கொடியைப் பெற்றவன் என்பதைச் 'செவ்வாய் உவணத் துயர்கொடி யோயே'[43] எனச் சிறப்பிக்கின்றார்.

<u>நீல மேனியின் காட்சி</u>

திருமாலின் நிறம் மேகம், காயாம்பூ, கடல், இருள், நீலமணி ஆகியவற்றினை ஒக்கும் என்னும் அழகிய கருத்தினை ஒருசேர நல்லெழுநியார்,

'கார்மலர்ப் பூவை கடலை இருள்மணி
அவையைந்து முறழு மணிகிளர் மேனியை'[44]

எனப் போற்றுகின்றார்.

---

36. பரி. 4: 67-69. 37. பரி. 4: 25-32.
38. பரி. 3: 56-57; பரி. 4: 53-55. 39. பரி. 3: 83.
40. பரி. 3: 90. 41. சிலம்பு. காடுகாண். 35-53 ஆய்ச்சி. 32-3
42. பரி. 2: 29-31.
43. பரி. 2: 60. ஒப்பு. கலி. 145: 64; புறம். 56: 6; முருகு. 148-151.
44. பரி. 13: 42-43.

திருப்பாற்கடல் நடுவே ஆயிரம் தலை உடைய ஆதிசேடன் மீது துணையும் கூடிய திருமால் அறிதுயில் கொண்டுள்ள இனிய காட்சி,

> 'தண்டை ஏறும் பாற்கட லொப்பன்
> மின்னவிர் சுடர்மணி ஆயிரம் விரித்த
> கவைநா வருந்தலைக் காண்பின் சேக்கைத்
> துணைக் கூடிய அறிதுயி லோனும்'[45]

என வரும் அடிகளில் பொலியக் காண்கிறோம்.

<u>திருமாலின் முன்னோன்</u>

திருமாலும் பலதேவரும் வேறுவேறு நிறத்தினையும் தொழிலினையும் உடையவரேனும் திருமாலையே கண்ணனாக — பலதேவனாக வழிபட்ட வரலாற்றைக் காண்கிறோம். இதனை,

> '..... வேறுவே றுருவின் ஒருதொழில் இருவர்த்
> தாங்கு நீணிலை ஓங்கிருங் குன்றம்'[46]

என இளம்பெருவழுதியார் கூறக் காண்கிறோம்.

<u>ஐம்படை தாங்கிய மாட்சி</u>

திருமால் ஐம்பெரும்படைகளாகிய வளை, ஆழி, வில், வாள், தண்டு என்பவற்றினைப் பெற்று விளங்கும் காட்சியை,

> 'வலம்புரி வாய்நேமியவை
> வரிசிலை வயவம்பினவை
> புகரிணர்சூழ் வட்டத்தவை புகர்வாளவை'[47]

என வரும் அடிகளில் கண்டு உணரலாம்.

<u>குருந்தொசித்த அற்புதம்</u>

திருமால், நெடியோன் எனப் புகழப்படுவதை 'நெடியோ னன்ன நல்லிசை'[48] 'நெடியோன் மகன்'[49] என வரும் தொடர்கள் புலப்படுத்துகின்றன. ஆய மகளிர் தொழுநையாற்றங்கரையில் நீராடும்போது பலராமன் வர, அவ்வேளை நாண் மறைந்து நின்ற அம்மகளிர் தழையாடை அணிந்துகொள்ளக் குருந்த மரமேறி அதனைத் திருவடியாலே தாழச் செய்தவன். இதனை,

---

45. பரி. 13: 26-29; ஒப்பு கலி. 105: 71-72; பெரும்பாண். 371-373.
46. பரி. 15: 13-14.
47. பரி. 15: 59-61.
48. பதிற். 15: 39.
49. கலி. 140: 8.

'.... .... வடாஅது
வண்புனல் தொழுநை வார்மணல் அகன்றுறை
அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல்'[50]

என வரும் அடிகள் புலப்படுத்துகின்றன.

<u>இராமன் செய்தி</u>

இராமபிரான் தம் சுற்றத்தோடு போர்பற்றிய மறைபேச இருந்தமைக்கு இடையூறாக, பறவைகள் ஒலி செய்தமையால் அவ்வால மரத்தே அதன் ஒலிகளைத் தம் கையைக் கவித்து அவித்தார். இச் செய்தியை,

'வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் அழுங்கல் ஊரே'[51]

என வரும் அடிகளில் காண்கிறோம்.

இனி, முல்லைத்திணைப் பாடல்களின் வழி நின்று மாயோன் சிறப்பினைக் காண்போம்.

<u>மாயோனின் சிறப்பு</u>

மாயோன் புகழ் பாடும் நூல்களுள் கலித்தொகையும் முல்லைப்பாட்டும் குறிப்பிடத்தக்கன.

மாயோனைக் குறிக்க வரும் சொற்களுள், 'செல்வன்'[52] 'திகிரியான்'[53] 'தெய்வமால்'[54] 'நீனிற வண்ணன்'[55] 'நேமியான்'[56] 'புகழ்நேமி'[57] 'மாஅல்'[58] 'மாயோன்'[59] என வருவன சிறப்பாக எடுத்துக் கூறத்தக்கன.

மாயோன் தெய்வ வடிவத்தோடு பலராமன் காமன் ஆகியோர்தம் வடிவும் இருந்தமையைக் காண்கிறோம். பலராமன் பனைக்கொடியும் பால்நிற நிறமும் கொண்டு திகழ்வதை,

'....... .... பனைக்கொடிப்
பால்நிற வண்ணன்'[60] ....

என்னும் பகுதியால் அறியப்பட்ட ஒரு குண்டலத்தை அணிந்தவன் என்பதனை.

---

50. அகம். 59: 3-6.
51. அகம். 70: 13-17.
52. கலி. 108: 55.
53. கலி. 104: 78.
54. கலி. 107: 32.
55. கலி. 104: 38.
56. கலி. 105: 9, 72.
57. கலி. 104: 9.
58. முல்லைப். 3.
59. கலி. 103: 55.
60. கலி. 104: 7-8.

'ஒரு குழையவன்'[61]

என்னும் சிறப்பைக் கூறுவதைக் காண்கிறோம்.

கோயில் செல்லும் மகளிர் காமனுக்குப் பாலிகைப் படைப்பர் என்னும் வழக்கத்தை,

'படையிடுவான் மகளிர் காமன் மடையடும்
பாலொடு கோட்டம் புகின்'[62]

எனக் கூறுவதால் அறிகிறோம்.

திருமால் உலகை வளைத்து அளந்தவன். வானளவு உயர்ந்தவன். மேகநிறம் கொண்டவன் என்பதை, 'நனந்தலை யுலகம் வளைஇ'[63] என்றும், 'நிமிர்ந்த மாஅல்'[64] என்றும், 'கோடுகொண்டெழுந்த எழிலி'[65] என்றும் வரும் அடிகள் தெளிவுபடுத்துகின்றன.

திருமாலும் திருமகளும்

திருமால் திகிரி, வலம்புரிச்சங்கு ஆகியவற்றைப் பெற்றுத் திகழ்பவன் என்பதை, 'வலியுறுள் நேமியான் வாய்வைத்த வளை'[66] என்றும், 'நேமியொடு வலம்புரி'[67] என்றும் கூறும் அடிகள் நினைவு கூர்கின்றன.

திருமகளைப் பெற்றுச் சிறக்கும் மார்பினன் திருமால் என்பது, 'திருமறு மார்பன்'[68] 'மாதாங்கு'[69] எனக் கூறுமாற்றால் தெளிவாகிறது.

பாற்கடலில் பள்ளிகொண்டவன்

முழங்குகின்ற கடலில் திருமால் ஆதிசேடன்மீது பள்ளி கொள்ளும் அழகினை,

'பாடிமிழ் பரப்பகத் தரவணை அசைஇய'[70]

என வரும் அடியால் காண்கிறோம்.

திருமாலுக்குரிய குரவைக்கூத்து

திருமாலுக்குரிய கூத்து, குரவைக் கூத்தாகும். பண்ணமைந்த இசை தாளத்தொடக் குரவையாடி அழியாத் தெய்வத்தை வணங்கும் சிறப்பை, 'பண்ணமையின் சீர்க் குரவை'[71] என்றும், 'குரவை தழீஇ... தோயா விருப்புடைத் தெய்வம் பரவுதும்'[72] என்றும் கூறப்பட்டுள்ளமை ஈண்டு அறிதற்குரியது.

---

61. கலி. 105:11.
62. கலி. 109:19-20.
63. முல்லை. 1.
64. முல்லை. 3.
65. முல்லை. 5.
66. கலி. 105:9.
67. முல்லை. 1-2.
68. கலி. 104:10.
69. முல்லை. 2.
70. கலி. 105:71.
71. கலி. 102:35.
72. கலி. 103:75-76.

தெய்வமாலின் நிறம்

மாயோனின் கரிய நிறமும் வெண்சங்கும் என தழுவும் தொழுவத்துக் காரி ஏறு பாடியிருக்கும் சிறப்பும் நயமுடைத்தாகும். காரி ஏற்றின் கரிய நிறத்தை,

'திருமறு மார்பன்போல் திறல் சான்றகாரி'[73]

எனவும், காரி ஏற்றின் சங்குபோன்ற நெற்றிச்சுட்டி பெற்றமையை,

'..... .... வளைபோல
..... விளங்குஞ் சுரிநெற்றிக் காரி'[74]

என்னும் கூறுமாற்றால் தெளிவின் புலனாகும்.

யாவும் 'தெய்வ மால்' செயலே என்று மக்கள் போற்றி வாழ்ந்தமையை ஏறு தழுவல் காட்சி நன்கு உறுதிப்படுத்துகிறது. பொதுவனின் சென்னி முல்லை ஒரு மகளின் கூந்தலில் விழ அதனை அவ்வாய மகள் போற்றிச் சூடும் அச் செய்தி அறிந்த பெற்றோர், 'தெய்வமால் காட்டிற்று'[75] என அப் பொதுவனுக்கே மணம் செய்வித்து மகிழ்ந்தார்கள் என்க அவர் தம் திருமால் பக்திதான் என்னே!

மாயோனின் சிறந்த வீரச்செயல்களில் பாம்பால் சூழப்பட்ட மதியை விடுவித்ததும் கம்சனின் ஏவலால் குதிரை வடிவில் தோன்றிய கேசி என்னும் அரக்கனை அழித்ததும் குறிப்பிடத்தக்கவாகும். இவற்றை,

'பான்மதி சேர்ந்த அரவினைக் கோள்விடுக்கும்
நீனிற வண்ணன் ....'[76]

'மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய்பகுத் திட்டுப் புடைத்தஞான் றின்னன்கொல்
மாயோன் ....'[77]

என வரும்அடிகள் தெளிவாக்கும்.

திருவிக்கிரமச் செய்தி

மாயோனின் அவதாரங்களில் ஒன்று திருவிக்கிரம அவதாரம். மாவலி மன்னன் வார்த்த நீர் தம் கைகளில் வீழ திருமால் உலகத்தை எல்லாம் அளந்துக் கொண்டு நிமிர்ந்த அத் திருவிக்கிரம அவதாரச் சிறப்பினை நப்பூதனார்,

---

73. கலி. 104:10.
74. கலி. 105:9-10.
75. கலி. 107:33.
76. கலி. 104:37-38.
77. கலி. 103:53-55.

'நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல்'[78]

என வரும் அடிகளில் புலப்படுத்தியிருத்தல் ஈண்டு நினைவுகூர்தற்குரியதாகும். 'புலவனின் அநுபவத்தைச் சொற்களின் அமைப்பு விளக்கி விடுமாம் ஆயின், அந்த அநுபவத்தை ஒருமைப்படுத்தி முழுமையாக்கிக் காட்டுவது என்பதே அவர்தம் இலக்கியத்திறத்தைத் தரும் உண்மை வடிவம் ஆகும்,'[79] எனக் கூறும் வின்செஸ்டர் அவர்களின் கருத்து மாயோனைப் பற்றிய பாடல்களில் கவிதைப் பொலிவினைக் காண்கிறோம்.

---

78. முல்லை. 1-3.
79. Winchester, C.T., Some Principles of Literary Criticism, p.183.

ஆயர்

முல்லை நில மக்கள்

முல்லை நில மக்கள் ஆயர்கள். கால்நடைகளைப் பேணுபவர்களே (Pastor) எனக் கூறும்.[1] 'ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே'[2]
எனத் தொல்காப்பியர் ஆயரை முல்லைத் தலைவரைக் குறிப்பிடுகின்றார். ஆயர் என்ற சொல் ஆ என்ற சொல்லோடு அர் விகுதி சேர்ந்து ஆயர் ஆயிற்று எனலாம். உரையாசிரியர், 'ஆயர் என்பார் நிரை மேய்ப்பார்' என்றும், 'ஆடு பற்றி வாழ்வாரை இடைமக்களாகிய' என்றும், 'பொதுவர்', 'ஆயர்' என்பன 'ஆன் பற்றி வரும்' என்றும் குறிப்பிடுவர்.[3]

நச்சினார்க்கினியர் முல்லை நில மக்கட்பெயர்களாக 'கோவலர், இடையர், ஆயர், பொதுவர், கோவித்தியர், இடைச்சியர், ஆய்ச்சியர், பொதுவியர் ஆகியோரைக் குறிப்பிடுவர்.[4]

திவாகரம் முல்லை நில மக்கள் பெயர்களையும் மகளிர் பெயர்களையும் 'முல்லையார், கோவலர், இடையர், பொதுவர், ஆய் மக்கோர், குடவர், பாலர், தொறுவர், கோவித்தர், அண்டர், கோபாலர், ஆயர், குழுவர், ஆய்ச்சியர், தொறுவியர், பொதுவியர், குடத்தியர், இடைச்சியர்'[5] எனக் குறிப்பிடுகிறது.

மேற்குறித்த சொற்களுள் ஆயர், கோவலர் என்னும் சொற்களே முல்லைத்திணைப் பாடல்களில் மிகுதியாக வந்துள்ளன. ஆயரை அடுத்து, பொதுவன், பொதுவர், இடையன் என்ற சொற்கள் இடம் பெறுகின்றன. இவைகளின் எண்ணிக்கை முறையே 20,10,15,8,5, என அமைகின்றன.[6] பொதுவன் என்ற சொல் எல்லா ஆயர்க்கும் பொதுவான சொல்லாக முல்லைக் கலியில் மட்டுமே காணப்படுகின்றது. மேலும் ஆய்ச்சியர்களைப் பொதுவனின் மகள் எனக் கூறி அழைக்கப்படுகிறது.

---

1. The Encyclopaedia Britannica, p. [illegible]
2. தொல். பொருள். 23
3. தொல். பொருள். நச். 23 பக். 20.
4. தொல். பொருள். நச். 20 பக். 48.
5. திவாகரம், மக்கட்பெயர்த் தொகுதி பக். 40.
6. ஆயர் - கலி. 101:34,47; 102:30; 103:33,37,47,71; 104:6,20, 72; 105:7,50; 107:20,25; 108:9,50; 110:1; 113:7, 10; 115:4 (20)
   கோவலர் - நற். 69:8,266:1,289:7,364:9,371:8; குறு. 358:6; ஐங். 470:3; கலி. 106:4; புறம். 14:7,54:10,74:10,214:12, 264:4,314:8; முல்லை. 15; பெரும். 3 (16)
   பொதுவன் - கலி. 101:16,22,26,44; 102:37; 103:42,52; 104:63,74,31,64; 107:34; 111:7; 112:3,21 (15)
   பொதுவர் - கலி. 101:49; 103:8,22,57; 105:27,47; 106:17,24 (8)
   இடையன் - நற். 142:4,169:7; அகம். 94:4,274:8,394:13 (5).
7. கலி. 101:46.

ஆயரும் நிரை மேய்த்தலும்

ஆயர் காடுகளில் வாழ்பவர் என்பது 'கானத் தலைவர்',[8] 'கானுறை இடையர்'[9] என வரும் தொடர்களால் புலனாகிறது. ஆடு மாடுகளை மேய்த்தலே ஆயர்களின் தலையாய தொழிலாகும். இத்தொழில் காரணமாக ஆயர் பல பெயர்களால் குறிக்கப்பெறு கின்றனர். அவற்றுள் 'ஆயர்',[10] 'ஆயர் மகன்',[11] 'ஆய மகள்',[12] 'ஆய்த்தி',[13] 'இடைச்சியர்',[14] 'இருபெயர் கோவலர்',[15] 'இடை மடமகள்',[16] 'குடஞ்சுட்டவர்',[17] 'கோட்டினத் தாயர்',[18] 'கோவினத் தாயர்',[19] 'புல்லினத் தாயர்',[20] 'நல்லினத் தாயர்'[21] என வருவன குறிப்பிடத்தக்கன. இவ்வாயர் ஆநிரை மேய்ப்பவர் என்பது 'மாமேய்... பொதுவன்',[22] 'மாமேய்ப்போன்'[23] எனும் கூற்றால் அறிகிறோம். பெரும் பாணாற்றுப்படை ஆயமகளை 'நலமாமேனி... ஆய்மகள்'[24] எனக் கூறிச் சிறப்பிக்கிறது. மாமை நிறத்திற் குறிப்பை டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் 'மாந்தளிர் நிறத்தைப் போன்ற அழகிய நிறம்' என்று குறிப்பிடுவர்.[25] மேலும், ஆயர் பசுநிரை மேய்ப்பவராயும் ஆட்டுக் கூட்டங்களை மேய்ப்பவராயும் குறிக்கப் படுகின்றனர். இதனை, 'துய்த்தலை மறிகள்'[26] என்றும், 'அதிரலைவானடை பொதுவன்'[27] என்றும் வருவதால் அறிகிறோம்.

ஆயர், 'கல்லாப் பொதுவன்'[28] 'கல்லாக் கோவலர்',[29] 'வருகட்சொற் கோவலர்'[30] என்று அடைமொழியுடன் பெயர்களால் குறிக்கப்படுவதை ஈண்டு நினைவிற்கொள்ளத் தக்கதாகும்.

'கல்லாப்பொதுவன்' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'சாத்திரங்களைக் கல்லாதபடி இயல்பாயமைந்த அறிவுடையன்'[31] எனக் குறிப்பர். 'கல்லாக் கோவலர்' என்பதற்குத் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், 'தம் தொழிலன்றிப் பிற தொழிலைக் கல்லாத ஆயர்'[32] எனக் குறிப்பிடுவர். எனவே, தம் குலத்திற்குரிய தொழிலை

---

8. நற். 210:1. 9. அகம். 394:13. 10. கலி. 108:9.
11. கலி. 107:25. 12. கலி. 109:12. 13. கலி. 108:9.
14. கலி. 106:32. 15. அகம். 214:12. 16. நற். 266:3; குறு. 221:4.
17. கலி. 107:2; 109:3; 113:9. 18. கலி. 103:33.
19. கலி. 103:37. 20. கலி. 103:47.
21. கலி. 113:10. 22. கலி. 103:36-37. 23. கலி. 108:38.
24. பெரும்பாண். 160-162. 25. பத்துப்பாட்டு. டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக். 276.
26. பெரும்பாண். 175.
27. கலி. 102:37; 108:10. 28. கலி. 112:3. 29. அகம். 74:16.
30. கலி. 106:4. 31. கலித்தொகை கழகப் பதிப்பு பக். 359.
32. அகநானூறு, களிற்றியானை நிரை, கழகப்பதிப்பு, பக். 161.

யன்றி வேறு எதனையும் கல்லாதவர் ஆயர் என்பது விளங்கும். 'குலவித்தை கல்லாமற் பாகம் படும்' என்னும் பழமொழியும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

இம்மாடுகளை மேய்க்கும் ஆயர்தம் தொழிலைப் புலவர்கள் பல வேறு வகையில் சிறப்பித்திருப்பது, அவர்தம் வாழ்வு அத்தொழிலோடு பின்னிப் பிணைந்திருப்பதையும் அவர்தம் பண்பாட்டுச் சிறப்பும் பெருமையும் ஒருசேர பிரதிபலிப்பதையும் எடுத்துக்காட்டுகின்றன. அவற்றுள் 'பல்லாக் உடையவர்' எனப் போற்றும் சிறப்பும், அவைகள் புல் உள மேய்புலம் காட்டியும், காட்டுக்கிடையைக் காக்கும் திறமும், கையில் 'கொடுங்கோல்' கொண்டு காட்டியும் நிலத்தில் கோலினை ஊன்றி நிற்கும் பொலிவும், தோளின் மீது உறியை கொண்டு அசையும் அழகும் வெள்ளாட்டுக் குட்டிகள் ஆயர்களின் சிறுவர்களோடு துள்ளி விளையாடும் பெருமிதக் காட்சியும் படிக்கப் படிக்கச் சுவைநலம் பெருகும் பகுதிகளாகும். இச்செய்திகளை, 'பல்லா தந்த.. கோவலர்'[33] 'பல்லாக் கோவலர்',[34] 'பல்லா... ஆயர்',[35] 'புதுமேய வருந்த மறுந்தடைநல்லான்',[36] 'மறந்தலைத் தொகுத்த '... இடையன்',[37] 'கொடுங் கோற் கோவலர்',[38] 'கோற்கைக் கோவலர்',[39] 'தண்டுகாலூன்றிய',[40] 'தண்டுகால் ஊன்றிய தனிநிலை இடையன்',[41] 'மெய்ம் மறைப்பச் சேர்த்த உறி',[42] 'கையமைந்த கோலமைந்த கையர்',[43] '..... .... வெண்ணெய் வெண்மறி புல்லினை ... குட்டி'[44] என வரும் பாடற்பகுதிகள் தெளிவுறப் புலப்படுத்துகின்றன. மேலும் ஆயர், சந்தன பொருந்திய பசுந் தோளொடு காட்டும் நல்லவர் என்பது,

'சுற்றமைந்தியைந்த தோளொடு காவல் தம்பி'[45]

என வரும் பெரும்பாணாற்றுப்படை அடியால் தெரிய வருகிறது.

கோவலர் குறிப்பாக மேய்க்கும் காலத்தே கையில் கொடுங்கோலுடன் காணப் படுவர். இக்கொடுங்கோலுக்குத் திரு. ப. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் தரும் விளக்கம் ஈண்டு எண்ணற்குரியது. 'கொடுங்கோல் என்பது வளைந்த கோல் என்று பொருள்படும்... ஆடுமாடுகளுக்கு வேண்டிய தழைக்காக உயர்ந்த பெரிய கிளைகளை இக்கோல்களால் தாழ வளைப்பர்.... கொடுங்கோல் என்பது கொடுமையைத் தரும் கோல் என்று பொருள்படும். இங்கு செய்யும் செயலை எதிர்ப்பது இவர் கோல். ஆதலின் அவையும் நல்லவை

33. நற். 364:9.
34. குறு. 333:6; ஐங். 476:3.
35. அகம். 264:5-6.
36. அகம். 14:9.
37. அகம். 94:4.
38. நற். 69:9; அகம். 74:15-16; முல்லைப். 15; நெடுநல். 3.
39. அகம். 54:10.
40. நற். 142:6.
41. அகம். 274:8.
42. கலி. 108:11.
43. கலி. 101:40.
44. அகம். 104:9-11.
45. பெரும்பாண். 176.

பிறிதொன்றும் இவரில்லை'[46] என்பதே அவர்தம் விளக்கமாகும். ஆயர்தம் பசுக்கள் தெய்வத் தன்மை உடையதால் அவற்றைக் கொல்வது மிகப்பெரிய பாவம் என்ற செய்தி இலக்கியங்களிலும்[47] செப்பேடுகளிலும்[48] தொன்மை மிக்க வரலாற்றுச் செய்தியாக உள்ளதைக் காண்கிறோம்.

உழவு

ஆயர் ஆநிரைகளை மேய்த்தல் தொழிலில் முன்னேறியவராய் விளங்கியதைப்போல உழவுத் தொழிலிலும் முன்னேறியவராய் விளங்கியவர் என்பது 'வினைஞர்',[49] 'வேளாளர்',[50] 'வயலோர்',[51] 'தண்டலை உழவர்'[52] என்றும் சொற்கள் அவர்பால் வழங்குவதால் புலனாகிறது. தங்கள் வீட்டுக்கொல்லையில் உழவினைச் செய்யும் ஆற்றலுடையவர் என்பது 'கொல்லைக் கோவலர்'[53] 'கொல்லை யுழவர்'[54] 'வினைஞர் கொல்லை [illegible]'[55] என வரும் அடிகளால் தெற்றெனத் தெரியவருகிறது. மேலும், ஆயர் உழவுத்தொழிலில் படிப்படியாய் முன்னேற்றம் பெற்றமையும், பிறகு உயர் நிலைகளில் நிலைத்து வாழ்ந்தமையும் நமக்குப் புலனாகின்றன. இவ்வுண்மை தொல்காப்பியத்தில் காணும் கருப்பொருள்களாகிய உணவு, செய்தி, ஊர் ஆகியவற்றிற்கு உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோர் தந்துள்ள விளக்கத்தை நோக்கும்போது தெற்றெனத் தெரியவருகிறது.[56] இவற்றுள் ஊர் என்பது இளம்பூரணர் உரையில் இடம் பெறாமை குறிப்பிடத்தக்கது. இனி, இளம்பூரணர் உணவு, செய்தி ஆகியவற்றிற்குத் தரும் உரையினைக் காண்போம்:

உணவு - வரகும் முதிரையும்
செய்தி - நிரை மேய்த்தல்

நச்சினார்க்கினியர் உணவு, செய்தி, ஊர் ஆகியவற்றிற்குத் தரும் உரை வருமாறு:

உணவு - வரகும் சாமையும் முதிரையும்
செய்தி - நிரை மேய்த்தலும் வரகு முதலியன களை கட்டலும் கடா விடுதலும்
ஊர் - பாடியும் சேரியும் பள்ளியும்

இவற்றால் முல்லை நில மக்கள் படிப்படியாக உழவுத்தொழிலில் வளர்ச்சி பெற்றமையை அறிகிறோம்.

---

46. கோதண்டபாணி பிள்ளை, கு., நெடுநல்வாடை, பக். 99-101.
47. தொல். பொருள். 60; புறம் 9:1; சிலப். 21:53.
48. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 302, 374.
49. நற். 121:1.
50. பரி. 20:63.
51. ஐங். 459:5.
52. நற். 97:9.
53. நற். 266:1; 289:7.
54. அகம். 194:13.
56. [illegible]

முல்லை நிலத்தில் காணும் உழவுத்தொழில் வளர்ச்சியினை ஆராயும் திரு.கா. சிவத்தம்பி அவர்கள், 'இடையர், ஆயர்' என்ற சொற்களின் மூலமாக அவர் ஆடு மாடுகளை மட்டும் மேய்த்தலோடு உழவுத்தொழிலும் மேற்கொண்டவர் என்பதைப் புலப்படுத்தும் என்றும், உழவுத் தொழில் திணை மயக்க நிலையை முல்லை, மருதம் ஆகிய திணைகள் குறிக்கின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.[57]

ஆயர் உழவுத்தொழிலைச் செய்தமையைப் பெரும்பாணர் அம்பாத ஆயர்தம் உழவுத்தொழிற்கருவிகள் புலப்படுத்துகின்றன. கொட்டிலைச் சூழ உருளையும் கலப்பையும் சார்த்தி வைக்கப்பட்ட நீண்ட சுவர் புகைசூழ் காணப்படும் என்பது அவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும். இதனை,

'குறுஞ்சாட் டுருளையொடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டில்'[58]

என வரும் அடிகளால் அறியலாம்.

ஆயர் வரகு விளைவித்துத் தொழிலால் பெருஞ்செல்வத்தைப் பெற்றனர் என்பது ஆயர்தம் வரகுக்குதிர், பிடிக்கூட்டத்தை போல விளங்கும் என்றும், வரகுத் திரிகை யானைக்காலை ஒத்திருக்கும் என்றும் கூறப்படுகின்றமையால் வெளிப்படும்.

'பிடிக்கணத் தன்ன குதிருடை முன்றிற்
களிற்றுத்தாள் புரையும் திரிமரப் பந்தர்'[59]

<u>குடில்</u>

ஆயர்தம் குடில்கள் வரகுக்கற்றையால் வேயப்பட்டிருந்தன, 'கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்'[60] எனவும், சிறு வாயில் அமைந்து கதவுகள் கழிகளால் கட்டப்பட்டவை, 'செற்றை வாயிற் செறிகழிக் கதவின்'[61] எனவும் வரும் அடிகளால் அறியலாகும்.

ஆட்டுக்குட்டிகள் தறுகை உள்ளக் குடில் கால்களில் கட்டப்பட்டிருப்பது,

'... ... ... மதிய
[illegible] யாத்த வேய்கால் குரம்பை'[62]

---

57. Sivathambi,K., An analysis or the anthropological significance of the economics activities and conduct-code ascribed to Mullai-tinai An proceedings of the second International Conference Seminar of Tamil Studies, Kuala Lumpur-Malasia, 1966, Vol.I, p.3?4-25.

58. பெரும்பாண்.188-189.
59. பெரும்பாண்.186-187.
60. பெரும்பாண்.150.
61. பெரும்பாண்.149.
62. பெரும்பாண்,147-148.

எனவும், முல்லையில் வெள்ளாடும் செம்மறியாடும் கட்டப்பட்டிருந்தன,

> 'நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்
> கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்'[63]

எனவும் வரும் பகுதியால் தெரியவருகின்றன.

> 'அதளோன் துஞ்சும் காப்பின் உதள'[64]

என்பதனால் இடைய முதியோர் தோற்பாயில் உறங்கும் செய்தி வெளிப்படுகிறது.

<u>வீளை</u>

வாயைக் குவித்து ஒலியெழுப்பும் 'வீளை' என்னும் குறிப்பொலியை அறியும் ஆடுகள் பிற புலம் புகாது மயங்கி அப்புலத்தே தங்கும் சிறப்பினை,

> '... ... ... மடிவிளி
> சிறுதலைத் தொழுதி ஏமார்த்த அல்கும்'[65]

என வரும் அடிகளும்,

ஆயர்தம் வீளை ஒலியைக் கேட்டு ஓடி விளையாடும் ஆட்டுக்குட்டிகளைக் கவரப் பார்க்கும் குறுநரி அஞ்சி ஓடும் என்பதை,

> 'மடிவிடு வீளை கடிதுசென் றிசைப்பத்
> தெறிமறி பார்க்கும் குறுநரி வெரீஇ... போகும்'[66]

என வரும் அடிகளும் புலப்படுத்துவதைக் காண்கிறோம்.

ஆடுகள் இடம் விட்டுப்பெயரும்பொழுது ஆயர் வீளை ஒலி எழுப்ப, அவ்வொலி கேட்கும் குறுமுயல்கள் புதரில் ஓடி ஒளியுமாற்றை,

> '... இடையன் யாடுதலைப்பெயர்க்கும்
> மடிவிடு வீளை வெரீஇக் குறுமுயல்
> மன்ற இரும்புதல் ஒளிக்கும்'[67]

என வரும் அடிகளால் அறிகிறோம்.

<u>குழல்</u>

ஆயர் ஆடுமாடுகளை மேய்த்தபின் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் குழலிசைத்து இன்பம் கண்டனர். இவ்வோய்வு நேரமே ஆயரிடையே புல்லாங்குழலோசையைத் தோற்றுவித்தது என்பர் திரு. பி.டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள்.[68] ஆயர்தம் குழல் வகைகளை

---

63. பெரும்பாண். 152-153.
64. பெரும்பாண். 151.
65. நற். 142: 6-7.
66. அகம். 274: 9-11.
67. அகம். 394: 13-15.
68. Srinivasa Iyengar, P.T., History of the Tamils, p.11.

கொன்றையும் ஆம்பலும் குறிப்பிடத்தக்கன. ஆயர் நீண்ட கொன்றைக் காயால் செய்த தீங் குழலை ஊதுவர் என்பது,

'ஆகுவி கொன்றைத் தீங்குழல் மாதீயர்'[69]

என்னும் அடியால் தெரிகிறது.

கன்றுகளோடு கூடிய மறவைப் பலவினங்கள் காடுதோறும் திரியக் கோவலர் குழல் இசைத்து மகிழ்ப்படுத்துவர். இதனை,

'... ... ... கன்றொடு
மறவைப் பல்லினம் புறவுதொறு உகளக்
குழல்வாய் வைத்தனர் கோவலர்'[70]

என வரும் அடிகள் தெரிவிக்கின்றன.

மாலைக்காலத்தே வீடு திரும்பும் ஆனிரைகளின் மணியோசையோடு ஆயரின் குழலோசையும் ஒலிக்கும் சிறப்பினை,

'மதரிவை நல்லான் மாலின் தெய்யுள்
கொடுங்கோற் கோவலர் குழலோ டொன்றி
ஐதுவந் திசைக்கும் ... மாலை'[71]

என வரும் அடிகளும்,

கொன்றைக் குழலிசைக்க ஆவினம் தம் பிள்ளை மெல்ல வந்து மனைதோறும் சேர்ந்து புகுதலை,

'கொன்றையங் குழலர் பின்றைத் தூங்க
மனைமனைப் படரும் நனைநகு மாலை'[72]

என வரும் அடிகளும் புலப்படுத்துகின்றன.

ஆயர், ஆனிரைகள் வீடு திரும்பும் மாலைக்காலத்தே, ஆம்பற்குழலில் செவ்வழிப் பண், ஆம்பற்பண் ஆகியவற்றினை இசைக்கும் பெற்றியைப் பெற்றவர் என்பதை,

'ஆபெயர் கோவலர் ஆம்பலொ டலறும்
பையுள் நல்லியாழ் செவ்வழி வகுப்ப'[73]

எனவும்,

'ஆம்பற் குழலாற் பயிர்பயிர்'[74]

---

69. கலி. 106:3.
70. அகம். 354:3-5.
71. நற். 69:7-9.
72. அகம். 54:11-12.
73. அகம். 214:12-13.
74. கலி. 108:62.

எனவும் கூறுவதால் அறிகிறோம். அவர் முல்லையைப் போற்றும் இயல்பினர், வண்டு தொடுத்த மகிழ்ந் தலை வழியே புகுந்த காற்று ஒலிப்பும் இசை, குழல் குரல் போல இசைத்தது என்பர்.[75] பேராசிரியர் அண்ணா அவர்கள் 'இசைக்குழலின் ஒலியைக் கேட்டது இடம் இடம். இந்த இசை பயின்ற இசை ஒலிக்குழலிற்கு, முல்லையைப் பாடி வந்தவரே ஆயர்' என்ற கருத்தை நன்கு நிறுவுகிறார்கள்.[76]

முல்லை நிலத்துக்கு வந்த நெடுமோகனையாய் விளங்குவது,

> 'முல்லைத்தொடர் வியரே கோவலர்
> தமக்கோர் வழியும் கண்ட வாலே'[77]

என வரும் அடிகள் தெரிவிக்கின்றன.

<u>குரவை கூத்தும் தெய்வ வழிபாடும்</u>

ஆயர் குரவை கூத்தினையும் தெய்வம் வழிபடுதலையும் போற்றினர். தண்ணுமையின் தாளம் பல் தழுவ குரவை கூத்தினை,

> 'தண்ணுமைப் பாணி தளரா தெழூஉ
> பண்ணமை யின்சீர்க் குரவை'[78]

என வரும் அடிகளும், சீரிய புகழுடைய தெய்வம் பரவுதலை,

> 'தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்'[79]

என வரும் அடியும் தெரிவிக்கின்றன.

<u>உடையும் பூண்களும்</u>

ஆயர்கள் சூடும் பூக்களுள் முல்லை,[80] தளவம்,[81] தோன்றி,[82] கொண்டல்,[83] பிடவம்,[84] குல்லை,[85] கொன்றை,[86] குருந்தம்,[87] காயா,[88] ஆகியவை குறிப்பிடத்தக்கன. இவற்றுள் வெண்மையான முல்லை மலரைச் செம்மையான தோன்றி மலரொடு வண்டுகள் மொய்க்க விரவிச் சூடும் அழகினை,

> '... ... ... இடையன்
> தண்கமழ் முல்லை தோன்றியொடு விரைஇ
> வண்டுபடத் தொடுத்த நீர்வார் கண்ணியன்'[89]

என வருமடிகளில் காண்கிறோம்.

---

75. அகம். 228: 5-8.
76. அண்ணாவின் பொன் மொழிகள், பக். 6.
77. நற். 371: 8-9.
78. கலி. 102: 34-35.
79. கலி. 103: 76.
80. குறு. 221: 1; 358: 6-7.
81. கலி. 103: 2.
82. அகம். 94: 5.
83. அகம். 264: 3.
84. கலி. 103: 2.
85. கலி. 103: 3.
86. கலி. 103: 1.
87. ஐங். 439: 2.
88. கலி. 103: 1, 52: 108: 10.
89. அகம். 94: 4-6.

மேலும், மலைநாட்டுத் தலைவன் பெருமிதமுடையவன் என்பதை 'மலைநாடன் கண்ணி பொதுவன்'[90] எனப் போற்றப்படக் காணலாம். கோவலர் சிறப்பாக முல்லை மலர்களைச் சூடுவர் என்பதை, 'கோவலர் கண்ணி... முல்லை மென்றோள்'[91] 'காயாம்பூக் கண்ணிப் பொதுவன்'[92] 'முல்லைப்பூங் கண்ணிப் பொதுவன்'[93] 'முல்லைக் கண்ணிக் கோவலர்'[94] என வரும் தொடர்கள் புலப்படுத்துகின்றன.

உடைகள்

ஆயமகளிர் காழகம் உடுத்துப் பெற்ற மடந்தையர் என்பது, 'கைவளைக் காழகம் உடையிரும் மயிரே'[95] என வரும் தொடரால் புலனாகும்.

ஆயர் பாலினை விலை கூறி விற்பவர் என்பது, 'பால்நொடை இடையன்'[96] என வரும் தொடரால் புலப்படும். மோர் விற்கும் தொழில் ஆயமகளிர்க்கே தனிச் சிறப்புடையது என்பது புலப்படுத்தப்படும்.

ஆயமகளிர் மோர் விற்கும் தொழிலை மேற்கொண்டவர் என்பதனை, 'நகைமாறி யாய்மோர் கொள்வீர்'[97] 'நகைமாறிப் ... பெயர்த்தாள்'[98] 'மோர்மாறு மகளிர்'[99] என வரும் தொடர்கள் குறிக்கின்றன.

மேலும், புள் எழப் போகிய விடியல் எழுதல்;[100] புலிக்குரல் போல மத்தம் ஒலிக்கத் தயிர் கடைதல்;[101] பொருளீட்டும் பானை உறையமைத்த வெண்ணெய் எடுத்தல்;[102] தயிர்ப்புள்ளி உடைய மோர்ப்பானையைப் பூவால் செய்த சும்மாட்டின் மேல் வைத்து நாள்தோறும் மோர் விற்றல்;[103] மோர் விற்பதால் கிட்டும் நெல் முதலிய தானியங்களால் சுற்றத்தை உண்ணச் செய்தல்.[104] நெய்யை விற்கின்ற விலைக்குக் கட்டிப் பசும்பொன் கொள்ளாது எருமையையும், பசுவையும், நாகினையும் வாங்குதல் முதலியவை குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் நெய் விலைக்குக் கட்டிப் பசும்பொன் கொள்ளா நிலையை

'நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்'[105]

என வரும் தொடர்கள் புலப்படுத்தியிருத்தல் நோக்கத்தக்கது.

ஆயமகளிர், பல்வகைப் பால் முதலியன பாத்திரம் கொண்டுவந்து விற்றல்,

90. கலி.105:64. 91. குறு.358:6-7. 92. கலி.103:52.
93. கலி.111:7. 94. ஐங்.439:2. 95. கலி.108:4.
96. நற்.142:4. 97-99. கலி.106:44; 108:5; 105:7.
100. பெரும்பாண்.155. 101. பெரும்பாண்.156. 102. பெரும்பாண்.158.
103. பெரும்பாண்.159-160. 104. பெரும்பாண்.163.
105. பெரும்பாண்.164-165.

கன்றுகளைக் கட்டல், கறவைக் கலத்தைப் புலத்திற்குக் கொண்டு செல்லல், உணவைக் கொண்டு போதல், கன்றுகளை மேய்த்தல் ஆகியவற்றையும் மேற்கொண்டனர் என்பது,

'தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாம்
தாம்பிற் பிணித்து'[106]

'கலத்தொடியாஅம் செல்வுழி நாடிப் புலத்தும்'[107]

'இலத்துளாவெல் லேஎருக் கன்றொடு செல்வதோ'
'புலத்தளா வெலீஇப் புகாவுத்தரல் கொடுப்பதோ'[108]

'தினைக்காலுள் யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ'[109]

என வரும் அடிகளால் புலனாகிறது.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மாதரியைச் சிறப்பிக்கும்போது, 'தீதிலள் முதுமகள் செவ்வியள் அளியள் மாதரி' என்றும் அவள் குலத்தவரை, 'ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும் கோவலர்' என்றும் கூறியுள்ளமை ஈண்டு அறிதற்குரியது.[110] ஔவையார் ஆயர்களை 'அறவை நெஞ்சத் தாயர்' எனப் போற்றுவர்.[111]

ஊ

ஆயர்கள் முல்லை நிலத்து ஊர்கள் பாடி, சேரி, பள்ளி எனக் குறிக்கப்படுகின்றன.[112] மேலும் முல்லை நிலத்து ஊர்களாகச் சிறுகுடி, குறும்பு என்பனவும் குறிக்கப்படுகின்றன.[113] திரு. ஈ.எஸ்.டபிள்யூ. சேனாதிராசா அவர்கள், 'பாடியும் சேரியும் மக்கள் குடியிருப்பு உறைதற்குரிய சிறு வேலியோட்டுடன் கூடிய வீடுகள்' எனக் குறிப்பிட்டுள்ளார்.[114] புலவர் தேவநேயப்பாவாணர் அவர்கள், 'கட்டட மற்றும் கூரை வேய்ந்த வரையற்ற தாற்காலிக வீடுகளைக் கட்டிக்கொண்ட நிலத்தார் 'பாடி' எனப்பட்டது என்றும் அச்சொல் படுத்தல் - தங்கல் - தாங்காலிருத்தல் எனப் பொருள்படும் என்றும், வீடுகள் செறிந்திருந்தமையால் அவ்வூர் 'சேரி' எனப்பட்டது என்றும் குறிப்பிடுவர்.[115] டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள், பாடி என்பது சோலை சார்ந்த நிலப்பரப்பில் அமைந்த இருப்பிடத்தை' என்றும்

---

106. கலி. 111: 1-2.
107-108. கலி. 110: 16; 108: 32; 31.
109. கலி. 108: 33.
110. சிலப். 15: 122-123; 120-121.
111. புறம். 390: 1.
112. தொல். பொருள். நச். 18.
113. நற். 169: 10; கலி. 103: 36; 108: 56; 107: 1.
114. Tamilian Antiquary (1909) Vol.5, p.14.
115. தேவநேயப்பாவாணர், தமிழர் வரலாறு, பக். 50.

அவற்றிற்கு ஆயர் பாடி, காட்டுப் பாடி, முல்லைப்பாடி முதலிய ஊர்களின் பெயர்களே இதற்குச் சான்றுகளாய் அமைகின்றன என்றும்,[116] சேர்ந்து வாழ்ந்த இடம் 'சேரி' எனப்பட்டது என்றும்,[117] குறிப்பிடுவர். சேரி என்பது தொடக்கக் காலத்தில் சேர்ந்து மக்கள் வாழ்ந்த இடத்தினையும் ஒதுப்பு என்பது ஒதுப்பு என்றும் ஆட்சியத்தை புடைய பெரும்பர் வாழ்ந்த பகுதியையும் குறிக்க வழங்கியது எனலாம்.

---

116. Sethu Pillai, R.P., Words and their significance, p.29.
117. சேதுப்பிள்ளை, டாக்டர் ரா.பி., ஊரும் பேரும், பக்.63.

உட்பகுதி

முல்லைக்கலி

கலித்தொகையில் முல்லைக்கலி நான்காவதாக இடம் பெற்றுள்ளது. 150 பாடல்களில் 17 பாடல்கள்[1] முல்லைக்கலிக்குரியவையாகும். 'கலி' என்னும் பா வகையால் அமையும் இவ்வகைப்பாடல்கள் சங்க இலக்கிய அகப்பாடல்களிலிருந்து வேறுபடுகின்றன. மேலும், இப்பாடல்கள் தனித்தனியாக அமையாமல், இவை உரையாடல்களாய் அமைவன ஆகின்றன. முல்லைக்கலியின் 17 பாடல்களும் களவு வாழ்க்கையைப் புலப் படுத்துகின்றனவே அல்லாமல், கற்பு வாழ்க்கையைப் புலப்படுத்துவனவாக அமையவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். முல்லைத்திணைக்குரிய தலைவி ஆற்றி இருத்தல், தலைவன் பாசறை இருப்பு, வினை முற்றி மீளல் ஆகிய பகுதிகளும் காணப்படவில்லை. முல்லைக்கலியில் ஆயர்கள் தலைமக்களாய் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.[2] உரையாசிரியர்கள் முறைக் குறிப்பால் முல்லைக்கலியின் பாடல்களைப் பின் வருமாறு பகுக்கலாம்:

1. ஏறு தழுவல்[3] 2. பகற்குறி[4] 3. வரைவுடம்பட்டமை[5] 4. அறத்தொடு நிற்றல்[6] 5. நொந்த மனம் வருந்த மாற்றல்[7] 6. தலைவன் தலைவி உரையாடல்[8]

ஏறுதழுவல் சிறப்பு

ஏறு தழுவல் சங்க இலக்கியத்தில் குறிப்பாகக் கலித்தொகையில் - முல்லைக் கலியில் மட்டுமே பேசப்படுகிறது. அதற்குப் பின் சிலப்பதிகாரத்தில் பேசப்படுவதைக் காண்கிறோம். 'ஏறு தழுவல்' என்பது, கொல்லேற்றைத் தழுவி அடக்குதலாகும். இஃது 'ஏறுகோள்' என்றும் வழங்கும். இக்காலத்திலேயே இது 'காளைப்போர், சல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு' எனப் பல பெயர்களில் வழங்குகிறது. சிறப்பாக, தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம், நெல்லை ஆகிய மாவட்டங்களிலேயே தைத்திங்களில் மாட்டுப் பொங்கலன்று ஒரு பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

மேலைநாட்டில் இஃது Bull-fight என வழங்குகிறது. 'கிரீஸ் நாட்டில் சிறப்பாக 'தெசலி' (Thessaly)பகுதியில் ஆடவர் காளையுடன் போரிடுவர் என்றும்,

---

1. கலி.101-117.
2. தொல்.பொருள்.22-23.
3. கலி.101-107.
4. கலி.108-110. 112, 113, 116.
5. கலி.115.
6. கலி.111.
7. கலி.114.
8. கலி.117.

ஸ்பெயின், போர்ச்சுகல், மெக்ஸிகோ நாடுகளில் காளைப்போர் முக்கியமான தேசியப் பொழுதுபோக்கு விளையாட்டாக இன்றும் நடைபெறுகிறது என்றும், இது ஸ்பெயினில் ஏப்ரல்-நவம்பர் மாதங்களில் நடைபெறும் என்றும் குறிக்கிறது.[9]

பிரிட்டானிக் கலைக்களஞ்சியமும்[10] எவரிமேன் (Everyman's) கலைக்களஞ்சியமும்[11] இவ்வேறு தழுவலைப் பற்றிக் குறிப்பிடுவன இங்கு அறியற்பாலன. இவற்றில் ஒரு காலம் ஸ்பெயின் நாட்டில் ஒரு தேசிய விளையாட்டாக விளங்கியமையும், கிரீட் மத்தியதரைக் கடல் விளையாட்டில் சிறப்புற்றமையும், ரோமானிய சாம்ராச் காலத்தில் அழிந்த ஒரு தலைமுறைக்குப் பின் போர்த்துகீசியர் காலத்தில் இடம் பெற்றமையும், கிரீட், ரோம், போர்ச்சுகல், பிரான்ஸ், மெக்ஸிகோ முதலிய நாடுகளில் சிறந்த விளங்கியமையும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. மெக்ஸிகோவில் 15ஆம் நூற்றாண்டில் ஏற்றம் பெற்றது என்றும் அக்காலத்தில் புதியதாக வரும் மக்கள் பட்டம் சூட்டு விழா, திருமண விழா, குழந்தை பிறந்த தின விழா, புனித நாட்களில் காளைச்சண்டை நடைபெறும் என்பதை குறிக்கிறது. அரசாங்க வருமானம் குறைந்தால், அதனை ஈடு செய்ய, இக்காளைச்சண்டை நடைபெற்றதை குறிப்பிடுகின்றன. இன்றும் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஒரு பெருவிழாவாக நடைபெறுகிறது. மெக்ஸிகோவில் 'பிளாசா' என்ற இடத்தில் நடக்கும் 'மெட்டடோர்' காளைச்சண்டை உலகப் புகழ் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.[12]

இனி, முல்லைக்கலிப் பாடல்களால் அறியலாகும் செய்திகளைக் காண்போம்:

<u>அ. ஏறுதழுவல் கோட்பாடு</u>

முல்லைக்கலியின் 17 பாடல்களில் 7 பாடல்கள் ஏறு தழுவலைப் பற்றியவை.[13] வீரமும் காதலும் பிணைந்த காட்சியே ஏறு தழுவல். 'கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும் புல்லாளே ஆய மகள்'[14] என்பதற்கு ஏற்ப ஏறு தழுவி வெற்றி பெறுபவரே தலைவியை மணக்கலாம் என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டதைப் பல பாடல்களில் காண்கிறோம்.[15] இக்கொள்கையை முல்லைக்கலியில் மட்டுமே காணப்படும் 'ஏறுகோட்பாடு'

---

9. கலைக்களஞ்சியம், தொகுதி நான்கு, பக்.518.
10. The Encyclopaedia Britannica (1763). Vol.4, p.372.
11. Everyman's Encyclopaedia, Vol.3 (1931-32) p.123.
12. தினத்தந்தி, இதயம் பேசுகிறது, மணியன், மெக்ஸிகோ பயணக்கதை, பகுதி 1.2, பக்.12,14,08,09,21,11,76; 28.11.76.
13. கலி.101-117. 101-107.
14. கலி.103:63-64.
15. கலி.102,103,104,106.

அமைந்தமைந்த முறையை ஒரு பாடலில் காண்கிறோம்.[16] முல்லைக்கலியில் ஏறு தழுவற்பகுதியை, 'ஏறுகளின் வருணனை, ஏறுதழுவும் ஆயர்களின் வருணனை, ஏறு தழுவும் காட்சியின் வருணனை' என மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். இவற்றுடன் குரவை ஆடலும், திருமாலைப் போற்றலும், பாண்டியனைப் புகழ்தலும் இடம் பெற்றுள்ளமை ஏறு தழுவல் பாடல்களின் தனிச் சிறப்புகள் எனலாம். ஏறு தழுவற்பாடல்கள் நாடகம் போன்ற இருவர் உரையாடலாய் நேர்முக வருணனையாய் அமைவதைக் காண்கிறோம். 'குத்தல் தவிப் பெறும்', 'நல்லாள் பெறாஉம்', மெய்தோள் தவப் பெறும்'[17] 'திருமாமெய் தீண்டலர்' 'மருமமும் புல்லாரே'[18] என வரும் தொடர்கள் கொல்லேறு கொள்வாரின் இன்ப துன்பங்களைப் புலப்படுத்தும் சிறப்புடையவை. ஆயர்தம் வாழ்வில் ஏறு கோடல் ஓர் உரிமைக்கொள்கையாய் அமைவதை,

> 'போரேற்று அருந்தலை அஞ்சலும் ஆய்ச்சியர்
> காரிகைத்தோள்காணப் பெறுதலும் இல்லிரண்டும்
> ஓராங்குச் சேறல் இலவோஎம் கேளே
> கொல்லேறு கொண்டான் இவள்கேள்வன் என்றார்
> சொல்லும் ... செல்வன்தன் கேள்வன் நமரோ'[19]

என வரும் அடிகள் காண்கிறோம். இக்கொள்கை முறைகள் சிலப்பதிகாரத்தில்

> 'மல்லல் மழவிடை ஊர்ந்தார்க் குரியளிம்
> முல்லையம் பூங்குழல் தான்'

> 'ஆ நிற வெள்ளை அடர்த்தார்க் குரியளிப்
> பூவைப் புதுமல ராள்'[20]

எனப் பலவாறு சித்திரிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். ஏறு தழுவி மணக்கும் இம்மணத்தினை நச்சினார்க்கினியர் என்பவர் மணத்தினை ஒன்று அசுர மணத்தில்பாற்படுத்திக் கூறுவர்.[21] அசுர மணம், முல்லைக்கலியில் ஏறு தழுவல் மணத்தினும் வேறானது என்பதை புலவர் குழந்தை அவர்கள், 'முல்லையில் அறியப்படாத ஒருவன் கொல்லேறு கொண்டிடும், வில்வேற்றியும் அவனுக்கு ஒருத்தியை அவள் பெற்றோர் கொடுக்கும் அவ்வகை அசுர மணம். முல்லைக் கலியி

---

16. கலி.102.
17. கலி.104:20,22,24.
18. கலி.102:10,103:64.
19. கலி.106:40-45.
20. சிலப்.17:3, 4-7.
21. அசுரமாவது: கொல்லேறு கோடல், திரிபன்றி எய்தல், வில்லேற்றுதல் முதலிய செய்து கோடல். தொல்.பொருள்.நச்சி.92. பக்.3.

வரும் ஏறு தழுவலோ களவொழுக்கமொழுகி வரும் காதலியின் தந்தை அவள் காதலனை கொள்ளும் ஒரு வகை வீரக் குறிப்பாகும். அவ்வாறெனினும் ஏறு தழுவல் முல்லைத்திணையாகாது எனக் கூறுவர்.[22]

ஏறு தழுவல், உள்ளப் புணர்ச்சியின் எதிரொலி வெற்றியாகும். இதனை டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள், 'காளையை அடக்கியவனுக்கே பெண் கொடுப்பது முல்லை வழக்கம். எவன் அடக்கினும் அவனுக்குப் பெண் மணப்படுவாள். மணப்பட வேண்டுமன்றோ? காளையை அடக்கியவனை விரும்பாத போதும் மணக்க வேண்டுமா? அவ்வாறாயின் மணம் அகத்திணைக்கு முரண்.

'கோளாளர் என்னொப்பார் இல்லென நம்மானுள்
தாளாண்மை கூறும் பொதுவன் நமக்கொருநாள்
கோளாளன் ஆகாமை இல்லை அவற்கண்டு
வேளாண்மை செய்தன கண்' (கலி.101)

என்றபடி ஏறு தழுவா முன்பே தலைமகளும் தலைமகனும் உள்ளப்புணர்ச்சி உற்றனர் என ஆசிரியர் (நல்லுருத்திரனார்) புலப்படுத்துகிறார், ஏறுகோள் வழக்கம் அகத்திணைக்கு இயைந்து ஒழுகின்றது'[23] எனக் குறிப்பிட்டுள்ளமை ஈண்டு அறிதற்குரியது.

ஏறு தழுவுதற்கு உரிய ஆயர் நல்லினத்தாயராவர். அவர்கள் கோட்டினத் தாயர்,[24] கோவினத்தாயர்,[25] புல்லினத்தாயர்,[26] என வழங்கப்பெறுவர். நச்சினார்க்கினியர் இவர்களை முறையே 'எருமைத்திரளையுடைய ஆயர், பசுத்திரளையுடைய ஆயர், ஆட்டினத்தையுடைய ஆயர்' எனக் கூறுவர்.[27]

போதவர், கொன்றை, காயா, வெட்சி, பிடவம், தளவம், முல்லை, குல்லை, கோடல் ஆகிய பூக்களால் ஆன கண்ணியைச் சூடி ஏறு தழுவும் விழாவிற்குச் செல்வர்[28] என்பதை அறிகிறோம்.

ஏறு தழுவும் பொதுவர், நீர்த்துறை, ஆலமரம், மராமரம் ஆகியவற்றில் வீற்றுறையும் தெய்வங்களை முறையாகத் தொழுது, பின்பு தொழுவத்தே பாய்வர் என்பது,

'துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும்
முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ'[29]

என வரும் பாடற்பகுதியால் தெளிவாகிறது.

---

22. குழந்தை புலவர், முரசொலி பொங்கல் மலர், ஏறு தழுவல், பக்.35-38 (195
23. மாணிக்கம் டாக்டர் வ.சுப., தமிழ்க்காதல், பக்.412-413.
24-26. கலி.103:33;37;47.
27. கலித்தொகை கழகப்பதிப்பு, பக்.319.
28. கலி.103:1-3.
29. கலி.101:13-14.

ஆயர் ஏறு தழுவுதற்கு அஞ்சாதவர் என்பதை, 'காரி கதனஞ்சான்,'[30] 'சேஎய் சினனஞ்சான்,'[31] 'புள் ளுலக்கம் ... நோக்குத்தான்'[32] 'வெள்ளேறு கதனஞ்சான்'[33] என வரும் தொடர்கள் புலப்படுத்தும்.

ஏறு தழுவலைக் காணும் மகளிர்

ஏறு தழுவலைக் காணப் பரண்மிசைக் கூடும் மகளிர், பிடவம், தளவம், தோன்றி, கொன்றை, தழை, கோதை, இழை என்பவற்றை அணிபவராயும், முல்லை முகையும், முருந்தும் நிரைத்தாலொத்த பல்லினை உடையவராயும், பெருமழைக்கண்ணினராயும், மடப்பம் சேர்ந்த சொல்லினராயும், பொன்னுற் செய்த மகரக்குழையை அணிந்த காதின ராயும் காணப்பட்டனர் என்பதை அறிகிறோம்.[34]

ஏறுகளின் விடுநிலை

தொழுவத்தே புகுந்த ஏறுகள் உண்டாக்கிய புழுதிப்படலக் காட்சி, பெருமழை பெய்த வேனிற் காலத்தே மலைக்குகையில் சிங்கமும், குதிரையும், யானையும், முதலையும் ஒன்று சேர்ந்த காட்சியாய் விளங்கும்.[35]

ஏறுகள் தொழுவத்தே வழியிடையில் தீயும், காற்றும், காலனும், கூற்றுவனும் உயிர்களைப் பற்றி விடாது சுழன்று திரியுமாறுபோலச் சுற்றித் திரியும்.[36]

ஏறுகள், 'அடலேறு,'[37] 'உடலேறு,'[38] 'கொல்லேறு,'[39] 'நல்லேறு'[40] 'மறையேறு'[41] எனப் பல அடைமொழிகளால் அவ்வேறுகளின் கொம்புகள் 'கூர்ச்சிபோல் கோடு'[42] 'நுதிவைக் கோடு'[43] 'கொல்வேற்றுக் கோடு',[44] 'கொலைவேற்றுக் கோடு'[45] என வரும் தொடர்களால் சிறப்பிக்கப்படுகின்றன.

ஏறுடன் பொருதும் காட்சி

பொருநர் ஏறுகளோடு பொருதும் காட்சிகளும் அதனைக் காண்பார் கூற்றும் காட்சிகளும் எத்தனை எத்தனை! ஆயினும்,

'எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்பு
கலங்கினர் பலர்'[46]

எனவும்,

30-31. கலி.104:21;25.　　32-33. கலி.101:15;16. 27-28.
34. கலி.102:2-5;103:6-9.　　35. கலி.103:18-21.
36. கலி.105:20-22.　　37. கலி.102:31.
38. கலி.102:32.　　39. கலி.103:65;104:23;71;106:36.
40. கலி.101:41;105:56;106:38,43;107:3.
41. கலி.103:38.　　42. கலி.101:8.
43. கலி.101:29.　　44. கலி.103:63.
45. கலி.103:72;104:63-64.　　46. கலி.102:21-24.

'தொழுவினுள் புரிபு புரிபு புக்க பொதுவரைத்
தெரிபு தெரிபு குத்தின ஏறு'[47]

எனவும் வரும். நுதலி கழுத்துச் சொல்லி விலங்கைக்கும் பேறுடைய; காப்பாளரை நடுக்குறச் செய்வன.

தொழுவத்தே புகும் ஏறுகள் 'காரி, குரால், சேய், புகர், வெள்ளை' என்பவை குறிப்பிடத்தக்கன. இவ்வேறுகளின் நிறம் முதலானவை திருமால், சிவன், முருகன், இந்திரன், பலராமன் என்னும் தெய்வங்களோடு ஒப்புநோக்கிச் செய்யப்படுகின்றன. ஏறுகள் பொதுவரைச் சாக்குத்திக் குலைப்பதன் தோற்றம் மேற்கூறிய தெய்வங்களோடும், இலக்கியப் பொருள்களோடும், மாபாரதத்தோடும், புராணங்களோடும் இணைத்துப் பேசப்படுகின்றன. இவற்றின் புராணக்கதைகளோடு இணைத்துப் பேசல் முல்லைக்கலியில் மட்டுமே காணப்படுகிறது. இச்சிறப்பை நான்கு பாடல்கள் 7 இடங்களில் பெற்றுள்ளன.[48] சிவன் கூற்றவன் நெஞ்சைப் பிளந்த காட்சி இரண்டு பாடல்களிலும் மாபாரதக் காட்சிகள் மூன்று இடங்களிலும் கூறப்பட்டுள்ளன.[49]

இனி, ஏறுகளைப் பற்றிய இலக்கியமயமான கருத்துகளைக் காண்போம்:

காரி

முல்லைக்கலியில் 10 இடங்களில் குறிக்கப்படுகிறது.[50] காரியை, நச்சினார்க்கினியர் 'கரிய ஏறு' எனக் குறிப்பர்.[51] பெரும்பாணாற்றுப்படை, 'காரேறு' என்னும் தம்முள் ஒன்றையொன்று போருதும் தன்மையுடையன என்றும் கூறுகிறது.[52] இது செங்காரி என்றும் வரும்.[53] காரியின் கரிய நிறம் திருவாழி மறுவை உடைய திருமால் போன்று கரிய கொம்பை உடையது. மதி விரித்தாற்போன்றும், நேமியான் சங்கு போன்றும் நெற்றிச் சுட்டியை உடையது. நீலமணி போன்ற மலையின் அருவியைப் போல் வெள்ளிய கால்களை உடையது. இதனை, 'திருமறு மார்பன்போல் திறல்சான்ற காரி'[54] 'வைமருப்பின் காரி'[55] 'கடிகுறித் தன்ன கானெற்றிக் காரி'[56] 'நேமியான் ...

---

47. கலி.103:22-23.   48. கலி.101,103-105.
49. கலி.101,103,101 (2) 104 (1).
50. கலி.101:21.103:12,40,104:10,21,36,39.105:10,39,68.
51. கலித்தொகை 101:21 பக்.624.
52. பெரும்பாண்.210.   53. கலி.105:39,68.
54. கலி.104:10.   55. கலி.104:21.
56. கலி.101:21.

வளைபோல ... கரிநெற்றிக்காரி'[57] 'மலிதிரை ... அலை போல ... வெண்காற் காரி'[58] என வரும் அடிகளால் அறியலாம். இவற்றில் காரி என நிறமுடைய இளைத்தப் பெயரை குறிப்பிடுகின்றன. இது கொலைத்தொழிலை உடையது; வலிமை உடையது. சினமுடையது. இவற்றை, 'கொலையேற்றுக் காரி'[59] 'திறல்சான்ற காரி'[60] 'காரி கதன்'[61] என வரும் அடிகளால் அறியலாம். காரி என்ற பெயரில் ஒரு வள்ளலும்[62] கடவுளும்[63] (காரியுண்டிக் கடவுள்) இடம் பெற்றிருப்பதைக் காணலாம். திருமால் 'செங்கண் காரி'[64] என்ற பெயரால் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

'காரி' ஏற பொற்பலைச் சாடுக் குடர் சொரியக் குத்திக் குலைப்பதன் தோற்றம் பழி முடியும் உருவுடைய சிவன் எருமையூர்தியுடைய கூற்றுவன் நெஞ்சைப் பிளந்து, குடரைக் கொண்டு இழுத்தான் போல உள்ளது எனக் கூறுவதை ஒரு பாடலில் காணலாம்.[65]

பால்போன்ற வெள்ளிய எருதினைக் குத்திப் பாய்ந்தானைப் பொருத இலை காரி, அப்பொழுதினைக் குத்தும் தோற்றம், பால் போன்ற மதியை விழுங்க முயன்ற பாம்பினை விடுவிக்கும் நீலநிற வண்ணனைப்போலத் தோன்றுவதை,

'பால்நிற வெள்ளை எருத்தத்துப் பாய்ந்தானை
நோனாது குத்தும் இளங்காரித் தோற்றம் ...
பால்மதி சேர்ந்த அரவினைக் கோள்விடுக்கும்
நீல வண்ணனும் போன்ம்'[66]

என வரும் அடிகளால் அறியலாம்.

பல தலைவர் உயிரும் கைகொடுக்கத்திற்குக் காரணமாகச் செங்காரி அமைவதை

'செங்காரிக் கோட்டிடைப்
புக்கக்கால் புக்கான் நெஞ்சு'[67]


என வரும் அடிகளால் அறியலாம்.

'காரி கதனஞ்சான் பாய்ந்தானைக் காமுற்ற
வேரி மலர்க்கோதை'[68]

என்ற சிலப்பதிகார அடிகள் இங்கு நினைவு கூர்தற்குரியன.

---

57. கலி.105:9-10.
58. கலி.103:11-12.
59. கலி.104:73.
60. கலி.104:10.
61. கலி.104:74.
62. சிறுபாண்.95,110.
63. மலைபடு.83.
64. பரி.3:81.
65. கலி.101:21-26.
66. கலி.104:35-38.
67. கலி.105:68-69.
68. சிலப்.17:6:1.





குரால்

இது இரண்டு பாடல்களில் குறிக்கப்படுகிறது.[69] செப்பேடுகளில் 'குராப்பசு' எனக் குறிக்கப்பட்டுள்ளது.[70] சிற்ப சாஸ்திரத்தில், 'சிவப்புச் சித்தி' என்றும் கலைக் களஞ்சியத்தில் 'கபில பசு' என்றும் வழங்கப்படுகின்றது.[71] இது சிவந்த நிறமுடையது; சிவபெருமானுடன் இணைத்துப் பேசும் சிறப்புடையது.

குரால், முக்கண்ணன் உருவம் போல் சிவந்த நிறமுடையது. சிவபெருமானின் நீலமணி போன்ற கழுத்தை ஒத்த இயல்பும் உடையது. இச்சிறப்புகளை,

'முக்கண்ணா னுருவேபோல் முரண்மிகு குராலும்'[72]

'பெரும்பெயர்க் கடவுளின் கணிச்சிபோல் நுதிபோல
இரும்பிண னெருத்தின் வெந்திறல் குராலும்'[73]

என வரும் அடிகளிற் காணலாம்.

வெள்ளை

இது வெள்ளை என்ற சொல்லால் 5 இடங்களிலும் வெள்ளேறு என்ற சொல்லால் 1 இடத்திலும் குறிக்கப்பட்டுள்ளது.[74] 'வெள்ளைச் சித்தி' என்றும் ' Rishar ' என்றும் வழங்கும். பலராமனுடன் இணைத்துப் பேசும் சிறப்புடையது. புகலைச் சிலப்பதிகாரம், 'பால் நிற வெள்ளை' எனக் கூறுகிறது.[75]

வெள்ளை ஏற்றின் வெண்மை, பால் நிற வண்ணன் பலராமன் போன்றும்,[76] சிவந்தமை, பலராமனின் சிவந்த மாலை போன்றும்,[77] செவிப்புறத்தே உள்ள தனிய சிவந்த புள்ளிகள் செவ்வானத்து மீன்கள் போன்றும்[78] விளங்கும்.

வெள்ளை ஏறு தன் கோட்டால் பொதுவனைக் குலைப்பதன் தோற்றம் துரோணரைக் கொன்ற அரசனின் தலையைத் திருகும் நச்சுவத்தாமாவைப் போன்றது என்றும், பொதுவனோடு பாய்ந்து தாவிப் பாயும் வெள்ளை, கரும் பாம்பினால் சிறிது விழுங்கப்பட்ட சந்திரன் வானத்திலே செல்வது போன்றது என்றும் புலவர் புனைந்துரைப்பர்,

---

69. கலி.104:12.105:14.
70. S.I.I.III p.121.
71. கலைக்களஞ்சியம் 3, பக்.583.
72. கலி.104:12.
73. கலி.105:13-14.
74. கலி.101:27,103:14;104:8,35,105:12;கலி.103:48;105:44.
75. சிலப்பு.17:12.1.
76. கலி.104:8.
77. கலி.105:11-12.
78. கலி.103:13-14.

'... ... ... வெள்ளை
நுதிநுனைக் கோட்டாற் குலைப்பதன் தோற்றம் ...
... ... தந்தையைக் கொன்றானைத்
தோன்றி நிரைவாள் போலும்'[79]

'இடைப்பாயும் வெள்ளேறு ...
வான்பொரு வானத்தரவின்வாய்க் கோட்பட்டுப்
போதரும் பால்மதியும் போலும்'[80]

என வரும் பாடற்பகுதிகளில் காண்கிறோம். இவ்வெள்ளை ஏறு தமிழக நாட்டுப் பாடல்களில் 'மறை வெள்ளை' எனச் சிறப்பிக்கப்படுகிறது.[81]

சேஎ

இது மூன்று பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது.[82] மத்தியப் பிரதேசத்தில் 'Nimari' என்று வழங்கப்படுகிறது; சிவந்த நிறமுடையது; முரட்டு உழைப்புப் பெரும் சிறப்புடையது.

சேய் ஏற்றின் நிறம் முருக்கம் சிவந்த நிறம் போன்றும், வெள்ளைக்கால் முருகனுடைய வென்றிவேல ஒத்தும் திகழ்வது.

'வெல்வல்லான் நிறமேபோல் வெருவந்த சேயும்'[83]

'வேல்வலா னுடைத்தாழ்ந்த விரித்துவெள் கலிவைப்ப
...... வெள்ளாற் சேயும்'[84]

எனக் கலியால் அறிகிறோம்.

இச்சேய் முறிந்த திங்களைப்போல வளைந்த கொம்புடையது என்பது,

'முறிந்த திங்கள்போல்
வளைபு மறிந்த கோடன் சேயும்'[85]

எனக் கூறுவதால் வெளிப்படும்.

புகர்

இது நான்கு இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது;[86] கபில நிறமுடையது; புத்திரமேடு உழைப்புப் பெரும் சிறப்புடையது.

---

79. கலி.101:27;29;31-32.
80. கலி.105:44-46.
81. தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள் பக்.49.
82. கலி.103:16,104:14,105:18.
83. கலி.104:14.
84. கலி.103:17-18.
85. கலி.103:15-16.
86. கலி.104:43;105:16;66;107:8.

இது வச்சிரப்படையையுடைய இந்திரனின் ஆயிரம் கண்களைப் போலப் பல புள்ளிகளையும் கட்சுழிகளையும் கொண்டது என்பது,

'மின்னுடை வச்சிரத்தோன் ஆயிரங் கண்ணேய்க்கும்
கண்கொள் பல்பொறிக் கடுஞ்சினப் புகரும்'[87]

என வரும் அடிகளால் புலப்படும்.

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'[88]

என்ற பேர் அறக்கொள்கையைப் புகர் எருது கொண்டது என்பது, தன்னைச் சார்ந்து வீழ்ந்த பொதுவன்மேற் செல்லாது திரும்பியது என எடுத்துக் கூறுமாற்றால் அறியலாம். இவ்வினிய காட்சியை,

'... ... ... மெய்சார்ந்து
கோள்வழுக்கித் தன்முன்னர் வீழ்ந்தான்மேற் செல்லாது
மீளும் புகரேற்றுத் தோற்றங்காண்'[89]

என வரும் அடிகளில் பார்த்து மகிழலாம். புகர் இனப் பசுக்களை உடைய ஆயமகள் 'புகரினத்து ஆயமகள்' எனச் சிறப்பிக்கப்படுவதை ஒரு பாடலில் காணலாம்.[90]

புல்லேறு

இஃது ஒரு பாடலில் குறிக்கப்பட்டுள்ளது;[91] வலிமை மிக்கது. புல்லேற்றைப் பொதுவனைச் சாகக்குத்திக் குலைப்பதன் தோற்றம், துரோபதையின் கூந்தலை கை நீட்டிய துச்சாதனன் நெஞ்சத்தைப் பிளந்து உயிரைப் பருகி தன் வஞ்சினத்தை நிறைவேற்றிய வீமசேனனைப்போல உள்ளது என்னும் மகாபாரதக் கருத்தை,

'.... வலிமிகு திறலொடும் புல்லேற்றுக்கு
நோக்கஞ்சான் கொண்டு பொதுவனைச் சாக்குத்திக்
கோட்டிடைக் கொண்டு குலைப்பதன் தோற்றம் ...
துரோபதையின் கூந்தற்கை நீட்டியான்
நெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவண் தன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்'[92]

என வரும் அடிகள் புலப்படுத்துகின்றன.

இவ்வாறு முல்லைக்கலியில் காணும் ஏறுகள் பிற்காலத்தே ஆயிரம் வகை எனச் சொல்லும் அளவிற்குப் பெருகியதை முக்கூடற்பள்ளு 'இந்த விதத்திலும் டாலிருந்தால் மெய்

87. கலி.105:15-16.
88. புறம்.55:12.
89. கலி.104:46-48.
90. கலி.105:66.
91. கலி.101:13.
92. கலி.101:15-20.

காளைபட்ட' (109) எனக் கூறியுள்ளமை அறிதற்குரியது.

<u>பொருவலும்_உவமையும்</u>

பொதுவர் ஏறுகளோடு போர்புரிந்து நிகழும் காட்சிகள் பல. அவற்றுள் ஒரு சிலவற்றைக் காண்போம்:

இடி முழக்கமாய் வாத்தியங்கள் ஒலிக்க, வானத்து மேகக் கூட்டம்போல் புகைப்படலம் எழ, மகளிர் தனி நிலையாய் நிற்க, பொதுவர்தம் போர்க்கள ஆரவாரத்தில் புழுதிப்படலம் வானை முட்ட தொழுவினைப் பார்த்தனர். பாய்ந்தோடிச் சிலர், கொம்பைப் பற்றி மார்புடன் தழுவினர். சிலர் கழுத்திலே திமிலைப் பற்றிக் கிடந்தனர். சிலரோ, தோளுக்கு நடுவே கழுத்தைப் புகவிட்டுப் பிடித்தனர். சிலர் தப்பாத ஏறுகளின் கொம்புகள் தம்மேல் படுதலை ஏற்றுக்கொண்டனர்.[93]

அம்மட்டோ! மகளிர், 'இஃது ஒத்த கண்ட', 'இஃது ஒத்த கண்ட' எனப் பொதுவர் ஏறு தழுவலை வியக்கும் காட்சியன்றோ எத்தனை! முல்லைத்தாயர்களில் எருமையினத்தாயர் மகன் தார்போல் தழுவியும், பசுவினத்தாயர் மகன் தும்பிபோல் ஊர்ந்தும், ஆட்டினத்தாயர் மகன் திங்கள் மறுவினைப் போலத் தழுவியும் கிடக்கும் காட்சிகள் ஒருபுறம். பசுவினத்தாயர் மகன் காற்றைப் போல வந்த காரியை அடக்கி அதன் மேல் தோன்றும் தோற்றம், எருமை எதிர்த்து உயிர் கொண்டவன் நெஞ்சைக் காலால் உதைத்துச் சீற்றமொடு பிளந்த சிவன் தோற்றம்போல் எனக் கூறும் பகுதியும், காரிகம் புள்ளி குடைய புல்லினத்தாயர் மகன்தன்மேல் பாய்ந்த சிவந்த எதிரியைச் செவியுடன் பற்றிக்கொண்டு அதனைப் புரட்டி வாகை பெறும் தோற்றம் பொலிவுறுபவர் கூற்றத்து குதிரையின் வாயைப் பிளந்து கொன்ற மாயோன் ஒப்பதாயிருந்ததுவே என நெஞ்சம் நடுங்குமோ எனக் கூறும் பகுதியும் கற்போர்க்கு நனி சுவைக்கும் சுவை நலம் வாய்ந்த பகுதியாகும். அப்பாடற்பகுதிகள் வருமாறு:

'.... காற்றுப்போல் வந்த கதழ்விடைக் காரியை
.... கணத்தோடு பட்ட .... அதன்
மேற்சென்று நின்ற பொதுவன் .....
எருமை நெஞ்சம் வகிர்பு இட்டுச்
சீற்றமொ டாருயிர் கொண்டுதான் நிலைகொள்'[94]

---

93. கலி.105:24-32.

94. கலி.103:40-44.

'ஏனை வேகமொடு ... தன் மேற்சென்ற
சேஎச் செவிமுதற் கொண்டு பெயர்த்தொற்றுங்
காயாம்பூங் கண்ணிப் பொதுவன் ....
மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய்பகுத் திட்டுப் புடைத்தஞான் றின்னன்கொல்
மாயோனென் றுட்கிற்றென் னெஞ்சு'[95]

தொழுவத்தே ஏறுகளின் கொம்புகளில் சிக்கி வீழ்ந்த பொதுவர்தம் குடர்களைப் பருந்துகள் எடுத்துச் சென்று பறந்தன. அப்பருந்துகளின் வாய்க்குத் தப்பி ஆலமரத்தின் மேலும் கடம்ப மரத்தின்மேலும் வீழ்ந்த குடர்கள் அம்மரங்களில் உறையும் தெய்வங்களுக்கு இட்டுப் பின் சுழற்றி எறிந்த மாலைபோல் விளங்கின என்பதை,

'ஏறுதங் கோலஞ்செய் மருப்பினால் தோண்டிய வரிக்குடர்
ஞாலக்கொண் டெழூஉம் பருந்தின் வாய்வழீஇ
ஆலுங் கடம்பும் அணிமார் விலங்கிட்ட
மாலைபோல் தூங்குஞ் சினை'[96]

என வரும் அடிகளால் அறிகிறோம்.

<u>தழுவும் ஏற்பும்</u>

ஏறு தழுவும் பாடல்களில் களவொழுக்கச் செய்திகள் மிகுதிப்பட அமைகிறது. களவிய வாழ்வு கற்பு வாழ்வாகத் திகழ்ந்து அமைக்கும் உணர்ச்சி உள்ளத்தைப் பல இடங்களில் காண்கிறோம். அவற்றுள், 'ஏறு கொள்வதில் எம்மை ஒப்பார் இல்லை என்ற வீரம் பேசும் பொதுவன் ஒருநாள் உறவினர் அனைவரும் போகப் போவதில்லை'[97] 'சேவை இல எதிர்த்து எற்றவை தாங்கியவன் மார்பிலே முன்பு எல்லை செய்த நெற்றியார்களின் சாயமாக தழுவாத இரேன்! அவர் எருப்பினும் எருக்க. அதனை இழிவாக மகள் பெறாதாக என்றான்'[98] 'காரியின் சினம் அடக்கிய பொதுவனுக்கே எம்மவர் கொடுக்கச் செய்தது அவர் எடுத்தார் உச்சி மிகுந்தது போலாயிற்று'[99] 'செங்காரிக் கொம்பிடையே புகுந்து தழுவிய போதே என் நெஞ்சு அவன்பால் சென்றுவிட்டது. பின்பு என்னைச் சேர்த்தார் என்ன கொடுப்பது'[100] 'நமிர்ப்புள்ளியை பாய்ந்த தோளான் கொல்லேற்றைத் தழுவிப் புண்பட்டவனின் குருதி கலந்த மயக்கமாக தழுவுதால் எம் தோளில் அழுகு பட்டுமோ;

---

95. கலி.103:50-55.
96. கலி.106:26-29.
97. கலி.101:43-45.
98. கலி.104:65-68.
99. கலி.104:74-76.
100. கலி.105:67-69.

துணிவும் சிறந்ததே'.[101] 'இவள் ஊலக் கொல்லேற கொண்டாள் என்ற ஊரார் சொல்லினைக் கேட்டவாறே யாம் மோர் விற்ற வரும் இன்பச் செல்வத்தை என் காதலன் தருவானே'.[102]

'மாசற்ற தூயமகள் சுந்தரன் எனது பொதுவனின் காளைய விற்ற எனக் கேட்டறிந்த தந்தை, தமையன்மார் எல்லோரும் சேர்ந்த 'தெய்வமால்' இவளுக்கு இவனைத் திருமணமாகக் கொண்டு வந்த காட்டுற்ற என மகிழ்ந்த ஒப்பொருளுக்கே மணம் செய்க் குறித்தார்'.[103]

'நான் அவனுடைய மனைவி, நீ அவர் மகளாகி அவன் என்னை விரும்பு வானேல், நீ அவனை விரும்புவாயானால், இன்னை தொந்தரவுகொள்வதற்கு ஏதும் இல்லை'.[104] என வரும் கருத்தைப் பலவிடங்களிலும் இங்குப் பயிற்பவராகும்.
பேராசிரியர் ஜெயின் அவர்கள், மகளிர் தம் குற்ற ஒப்புக்கைப் பற்றி, 'When the woman is passionately in love and her love is reciprocated by the man she loves, she can defy her father, even the whole world and disregard public opinion if need be'

எனக் குறிப்பிடுவது கருத்தக்கது.[105]

---

101. கலி.106:37-39.
102. கலி.106:43-45.
103. கலி.107:31-35.
104. கலி.107:20-22.
105. Jain, Prof. A.P., Shakespeare's conception of ideal womandhood , p.37.


பைங்கொடி முல்லை[1]
பூக்க முல்லை[3]

செடி கொடி மரங்கள்

முல்லைத்திணைக்குரிய கருப்பொருள்கள் பல. அவற்றுள் செடி, கொடி, மரம், விலங்கு, பறவை ஆகியவற்றின் பெயர்களை உரையாசிரியர்கள் குறிப்பிடுவர். இங்கு இவை முல்லைத்திணைக்குரிய என்ற வரையறையைக் குறிப்பிடினும், அவை பிற திணைகளுடன் கலந்து வருதலும் உண்டு. அதனைத் 'திணை மயக்கம்' என்பர்.

'எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்,
வந்த நிலத்தின் பயத்த வாகும்'[1]

என வரும் தொல்காப்பிய நூற்பாவால் அதனை அறியலாம்.

இனி, இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் வழி நின்றும் இலக்கியங்கள் வழி நின்றும் செடி, கொடி, மரம், விலங்கு, பறவை ஆகியவற்றைக் காண்போ

முல்லை நிலத்திற்குரிய பெருஞ்சிறப்புடைய முல்லைப்பூத் தொடங்கி முதற்கண் செடி கொடிகளின் பூக்களைப் பற்றிக் காண்போம்.

முல்லை நிலத்திற்குரிய பூக்களாக முல்லை, பிடவம், தளவம், தோன்றி, குல்லை ஆகியவை கூறப்படுகின்றன. இவற்றுள் முதல் மூன்று இளம்பூரணராலும்,[2] முதல் நான்கு நச்சினார்க்கினியராலும்,[3] தளவம் நீங்கலாக ஏனைய மற்ற நான்கும் நாற்கவிராச நம்பியாலும்[4] சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

முல்லை

'நறுமலர்கள் மாந்தர்தம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன. வண்ண மலர்கள் கண்ணுக்கு விருந்தாய் அமைவதுடன் அவற்றின் அழகிய தோற்றம் பார்ப்பவர் மனத்திற்கும் மகிழ்ச்சியூட்டுகிறது; தொலைவில் உள்ள மனிதரையும் பிராணிகளையும் தன்னிடத்திற்கு ஈர்க்கும் தன்மையுடையது. இதன் நறுமணம் மோப்பதற்கு மிகவும் இனிது. மலர்களை 'மண்ணின் செல்வங்கள்' என்று வருணிப்பது மிகையாகாது'[5] எனப் புகழ்ந்து கூறும் நறுமணக் கூறு தனிச்சிறப்புடையது முல்லை மலர்.

முல்லை என்னும் சொல் முல்லைப் பூவிற்கே சிறப்பாக வழங்கப்படுகிறது. இச்

1. தொல்.பொருள்.21.
2. தொல்.பொருள்.இளம்.20.
3. தொல்.பொருள்.நச்சி.18.
4. நம்பி.22.
5. தினமணி, இலக்கிய கட்ட மலர்கள், 3.7.1974.

[illegible] முல்லைத்திணைப் பாடல்களில் காணும் 72 சொற்களில்[6] 60 சொற்கள் முல்லைப் பூவினைக் குறிக்கின்றனவாகப் புலப்படுகின்றன. முல்லை என்னும் சொல் வடமொழியில் 'மாலதி, சுமனா, யூதிகா, அம்பஷ்டா' என வழங்கும்.[7]

முல்லை என்பது மௌவல் என்றும் பெயர் பெறும்.[8] தேவாரம், 'கொடி' என்றும் சொல்லால் முல்லையைக் குறிக்கிறது. அம்முல்லை நிறைந்த இடத்து அமையும் கோயில் 'கொடிக் கோயில்' என்றும் அழைக்கப்படுகிறது. இதனைக் 'குற்றமறியாத பெருமான் கொடிக்கோயில்'[9] எனப் போற்றும் திருஞானசம்பந்தர் திருவாக்கால் அறியலாம். மேலும், முல்லை என்னும் பெயரால் தலங்கள் பெயர் பெற்றமையை, 'செண்பகச் சோலை சூழ்ந்த முல்லை வாயிலாய் தேவர்தம் அரசே'[10] என வரும் அடியால் அறிகிறோம். மேற்கூறிய முல்லை, மௌவல், கொடி ஆகியவற்றுள் செடி நூலார் 'Jasminum Auriculatum'[11] 'Jasminum Officinale', 'Jasminum Sambac'[12] என்னும் பெயர்களால் வழங்குவர். இன்று இம்முல்லை மலைச் சோலை மிகவும் பரவலாகப் 'பாரி முல்லை'[13] என்ற பெயரிட்டு வழங்குகிறது. பிரிட்டானியக் கலைக்களஞ்சியம், முல்லையைப் புதர்ச்செடியாகவும் கொடியாகவும் குறிக்கிறது. முல்லை 100 இனங்களைக் கொண்ட தென்பதையும் அவற்றுள் 40 வகைகள் பிரிட்டிஷ், வட அமெரிக்காவில் இடம் பெறுகின்றன என்பதையும் அறிகிறோம். முல்லையின் இலை இலை வடிவம் கொண்டதாயும் தனித்த இலைகளைக் கொண்டதாயும் மூன்று இலைகளைக் கொண்டதாயும் தோன்றும் என்பர். மேலும் புதர்ச்செடி உடையதாய் 12 அடி முதல் 20 அடி வரை வளர்வதாக

---

6. நற். 59:8; 69:8; 142:10 (அரும்பு) 169:5; 240:1; 321:5; 361:1; 367:8 0-1 - 7.
குறு. 108:3; 126:3 (கொடி); 162:3; 3; 186:2; 188:1; 1; 193:6; 220:3; 221:1; 234:2; 240:3; 275:1 (கொடி); 323:4; 358:7; 382:1; 387:1 - 17 - 2 - 15.
ஐங். 408:1; (பல்) 2; 412:1; 422:2; 437:3; 446:1; 448:5; 454:3; 476:2; 478:5 (பல்) 480:2; 492:2; 494:2 - 13 - 2-1
கலி. 101:49; 103:8; 105:54; 107:8; 108:15; 42; 111:4(கொடி) 113:25; 115:5; 117:11; 12 - 11 - 1 - 10.
அகம். 4:1 (கொடி) 14:7 (நிலம்) 74:8 (கொடி) 84:8; 94:5; 124:11; 134:5; 144:3; 164:8; 174:5 (கொடி) 184:9; 204:7; 234:13; 244:4; 254:15; 274:13 (அரும்பு) 284:10 (கொடி) 314:19; 324:15; 364:7; 384:5; - 21 - 6 - 15.
முல்லை. 9. - 1; நெடுநல். 130. - 1.
7. அமரகோசம் (நிகண்டு) காண்டம், 2 பாட்டு 72.
8. நற். 115:6; 316:2; பரி. 12:77, [illegible]. 81.
9. சம்பந்தர் தேவாரம், இரண்டாம் திருமுறை, பதிகம் 167, பா. 10.
10. சுந்தரர் தேவாரம், பதிகம் 69, பா. 3.
11. சாமி, பி.எல்., சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், பக். 56.
12. Samy, P.L., Journal of Tamil Studies, Sep. 1972, p.132.

படராது பிறவற்றைத் தழுவியே படரும் தன்மையுடையதாய், மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை பூக்கும் என்றும் அறிகிறோம்.[14]

முல்லை நிலம் பரப்பிய விளக்கம் ஆகிய, 'முல்லை வியன்புலம்'[15] என்றும், அம்முல்லை நிலம் முல்லை மலரால் அழகு பெறுவதை 'முல்லையம்புறவு'[16] என்றும் சிறப்பிக்கப் படுகின்றன. முல்லை மலர் மென்புலத்தும் கானகத்தும் விளைவதை 'மென்புல முல்லை'[17] என்றும் 'கான முல்லை'[18] என்றும் சிறப்பிக்கப் பெறுவதும் அறியலாம்.

முல்லை, கொடி வகையைச் சார்ந்தது. இக்கொடி 'பூங்கொடி முல்லை'[19] 'முல்லை மென்கொடி'[20] 'பைங்கொடி முல்லை'[21] 'கொழுங்கொடி முல்லை'[22] 'முல்லை .... முகைக்கொடி'[23] 'நெடுங்கொடி முல்லை'[24] 'கார்க்கொடி முல்லை'[25] 'கொடி முல்லை'[26] 'குறுங்கொடி முல்லை'[27] என வரும் தொடர்கள் புலப்படுத்துகின்ற பொருளாற்றப்படும், முல்லைக் கொடியின் நீல நிறத்தை 'நீல முல்லை'[28] எனச் சிறப்பிக்கிறது. இதன், முல்லைக் கொடியைப் புனைந்தும், பூ, மொட்டு, பகைமை, வளைவு, நிலம் ஆகியவற்றோடு ஒருசேரச் சிறக்கப் பாடியுள்ளமையைக் காட்டுகிறோம்.

முல்லைக்கொடி கார்காலத்தில் பூக்கும் இயல்பினது. 'தச்சரிச் சீறு ... முல்லை'[29] 'கார்தலை மலர்ந்த ... முல்லை'[30] 'வெண்புறத் தந்த ... முல்லை ... தண்கார்'[31] 'முல்லை ... தண்கார்'[32] என வரும் பாடற் பகுதிகள் இச்செய்தியை அறிவிக்கின்றன. இக்கருத்தைத் திருத்தக்க தேவர் 'கார் தோன்ற வேம லுமுல்லை'[33] என்பர். முல்லை மலர் கார்காலத்தைத் தொடர்ந்து வரும் கூதிர் காலத்திலும் காணப்படும் தன்மையைக்

---

14. Jasmine. Botanically, Jasminum, a genus of shrubs or climbers.. and comprising about 100 species, of which 40 or more occur in the gardens of great Britain and North America... The leaves are pinnate or ternate or sometimes apparently simple, consisting of one leaflet. The common white Jasmine,... grows to the height of 12 and sometimes 20 ft., its stem is feeble and requires support. The fragrant white flowers bloom from June to October - Encyclopaedia Britannica, 14th Ed., Vol.12, p.969.
15. ஐங். 13:7.
16. அகம். 304:5; சிறுபாண். 169.
17. நற். 489:2.
18. நற். 321:3.
19. குறுந். 126:3.
20. குறுந். 186:2.
21. நற். 308:1; நற். 476:2; அகம். 74:6; 144:3; ஐங். 9:5; பதி. 15:2.
22. அகம். 184:9.
23. அகம். 174:5-6.
24. நற். 422:2.
25. நற். 21:2.
26. சிலப். 116:1.
27. சிலப். 26:2.
28. பொருநர். 221.
29. அகம். 144:3.
30. குறுந். 188:1-2.
31. குறுந். 126:3-5.
32. குறுந். 188:1-2.
33. சீவக. 1931.

'கதிர் முல்லைக் குவிகாய் அலரி'[34]

எனக் கூறுவது கொண்டு உணரலாம்.

சிறந்த நான்கு பூக்களுள் முல்லையும் ஒன்றே என்பது,

'அடலருந் துப்பின் ... ...'
.... குருந்தே முல்லையென்று
இந்நான்கு அல்லது பூவும் இல்லை'[35]

என வரும் பாடலால் தெரிகிறது.

மாலைக் காலத்தே முல்லை மலர் மலரும் என்பது 'முல்லை ... மாலை',[36] 'மாலை முல்லை',[37] 'எல்லை போகிய முல்லை'[38] எனக் கூறுவதால் அறியலாம்.

பசிய இலைகளையும் சிறிய மலர்களையும் உடையதென்பது, 'பாசிலை முல்லை'[39] 'சிறுவீ முல்லை'[40] எனக் கூறுவதால் புலனாகிறது.

இம்மலர் வெண்ணிறம் உடையது. இதனைப் 'பால்போல் முல்லை',[41] 'வால்வீ மலர்ந்த முல்லை',[42] 'வெண்முகை'[43] என வருவனவற்றால் அறியலாம். இதனை மதுரைக் காஞ்சி 'வெண்மையின வெண்பூ...முல்லை'[44] எனச் சிறப்பிக்கிறது.

முல்லை நறுமணம் பெற்றது என்பது, 'நறை முல்லை',[45] 'மணிவண் முல்லை',[46] 'நறுமண முல்லை',[47] 'முல்லை நறுமலர்'[48] எனக் கூறுவதால் தெரிகிறது. கலித்தொகையில் பாலைக்கலி இதனை 'மட மௌவல்'[49] எனக் கூறுகிறது.

முல்லை மாலைக்காலத்தில் விரிவதால் மணம் பரப்பும் சிறப்புடையது என்பது 'விரைமுல்லை ... மாலை மணக்கும் மாலை'[50] எனக் கூறுவதால் தெரிகிறது.

முல்லை மலர் சிறிய வடிவினது. இதனை, 'சிறு முல்லை'[51] 'சிறு முல்லை'[52] என்பவற்றாலும், இதன் முகைகள் வெண்மையாயும் கூர்மையாயும் திகழ்வதை 'முல்லை முறுவல்'[53] 'முல்லை வைந்நுனை'[54] என்பவற்றால் தெரியலாம்.

---

34. நற். 306:5.
35. புறம். 335:1-3.
36. ஐங். 409:[illegible]; நற். 220:3-6; 387:1-2; அகம். 204:7.
37. குறு. 162:2-3.
38. குறு. 234:2-3.
39. கலி. 107:6.
40. குறு. 108:3 ஒப்பு புறம். 117:9.
41. அகம். 314:19.
42. ஐங். 437:3.
43. குறு. 162:3.
44. மதுரைக். 280-281.
45. நற். 367:6; அகம். 84:8; 164:6; முல்லைப். 9.
46. அகம். 204:7.
47. அகம். 94:5.
48. [illegible]. 6:1.
49. கலி. 14:3; 27:4.
50. நற். 169:5-9.
51. நற். 340:1 ஒப்பு குறு. 348:3.
52. கலி. 105:54; 117:11.
53. நற். 59:8-9.
54. அகம். 4:1.

காடுகளில் மலர்கின்றமையால் கானப் படரும். இது 'முல்லை ஊர்ந்த கல்லிவர் வேலி'[55] என்றும் அழைக்கப்படுகின்றது. இதனைக் குறிஞ்சிப் பாட்டு 'கல்லிவர் முல்லை' எனக் கூறுகிறது. மலை வழிகளில் இது காணப்படும் என்பதை 'முல்லை தாய கல்லதர்ச் சிறுநெறி'[57] எனக் கூறுதல் தெரிவிக்கிறது.

புதர்,[58] கள்ளிச் செடி,[59] வேலி மரம்[60] ஆகியவற்றின் மேல் இது படர்வது உண்டு.

காட்டிலுள்ள முல்லை 'கான முல்லை'[61] என்றும் வீட்டிலுள்ள முல்லை 'மனை மௌவல்'[62] என்றும் பெயர்பெறுகின்றன.

முல்லையை இல்லத்தே நட்டு வளர்த்தனர் என்பதை 'மனைநடு மௌவல்'[63] என்னும் தொடர் உணர்த்துகின்றது. இதனுடன், 'இல்லவர் முல்லை',[64] 'மனைவளர் முல்லை'[65] என்ற சிலப்பதிகாரத் தொடர்களும் தெரிவிக்கின்றன.

முல்லை அரும்பு நிலவு போன்றும் வெருகு சிரித்தாற்போன்றும் விளங்குவதை, 'நிலவி னன்ன ... நேரரும்பு'[66] என்றும் 'வெருகு சிரித் தன்ன .. [illegible]'[67] என்றும் கூறுதல் காணலாம்.

முல்லையும் பற்களும் ஒப்புமையாகப் பேசப்படுதலைப் பல பாடல்களில் காணலாம்.[68] முல்லை அரும்பு போல அணில் பற்கள் இருப்பதனை,

'... ... .. முகைத்தலை
[illegible]'[69]

என்ற அடிகள் புலப்படுத்தும்.

முல்லை மலர்கள் தோற்றமும் நாற்றமும் மணமும் என்பது,

'முல்லையொடு தோன்றி தோன்ற'[70]

என்பதனால்,

'தோன்றி ... மௌவலொடு ... நாறும்'[71]

என்பதாலறியலாகிறது.

---

55. குறு. 275: 1. 56. [illegible]. 77. 57. நற். 346: 1.
58. நற். 248: 1-3; [illegible] புறம். 352: 4. 59. நற். 169: 4-5.
60. திணை.மா. 105: 2-4. 61. நற். 321: 3. 62. நற். 115: 6.
63. நற். 115: 6. 64. சிலப். 4: 27. 65. சிலப். 13: 120.
66. [illegible]. 454: 2-3. 67. குறு. 220: 4-5.
68. குறு. 126: 2-5; 162: 3-4; 186: 2-3; 240: 3; கலி. 103: 5-6; 108: 15-16; திணை.நூற். 22: 3. 69. பொருந. 112-113.
70. அகம். 164: 6. 71. நற். 115: 5-6.

தளவொடு முல்லை சேர்ந்த மரத்தே படரும் இயல்பு காட்டியுள்ள, 'முல்லை.. தளவொடு... சேர்ந்து கொடிக்கொத்தும் கொண்டு'[72] என வரும் அடிகள் புலப்படுத்தும்.

முல்லையும் தளவும் ஒருசேரப் பூத்துத் திகழ்வதைப் பல பாடல்களில் புலவர்கள் பாடியுள்ளார்கள். சான்றாக, 'முல்லை ... தளவொடு ... சேர'[73] என்றும், 'தளவின் ... தகர ... முல்லை'[74] என்றும் 'பல்பூந் தளவொடு முல்லை'[75] என்றும், 'தளவம் முல்லையொடு தலைஇ'[76] என்றும் 'முல்லை தளவொடு போதவிழ'[77] என்றும் வருவன ஈண்டுச் சுட்டத் தக்கன.

முல்லை மலர் கற்பொழுக்கத்தைக் குறிக்கும் என்பதை 'முல்லை சான்ற கற்பின் மெல்லியல்',[78] 'வாலிய வரிவை முல்லை மலைய'[79] என வரும் அடிகளால் புலனாகின்றது. இக்கருத்தினை நச்சினார்க்கினியர் 'முல்லை போற்றத்தக்க கற்பினையும்'[80] என்று குறிப்பிடுவர்.

முல்லை, முல்லையங் கொடி போன்ற பெயர் பெற்று வரும் என்பது 'முல்லை பாட'[81] 'முல்லை நல்யாழ்'[82] என்ற குறிப்பால் தெரிகிறது.

இனி, இம்மலர்த் தொடர்பான ஒரு சில இனிய செய்திகளைக் காண்போம்.

பாரி என்பவன் கொழுகொம்பில்லா முல்லைக் கொடிக்குத் தேர் வழங்கிச் சிறப்பித்தமை,

> 'பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
> நாத்தழும்பு இருப்பப் பாடா தாயினும்
> கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
> பரந்தோங்கு சிறப்பின் பாரி'[83]

என்றும்,

---

72. திணைமா. நூ. 105: 2-4.
73. குறு. 382: 1-3.
74. ஐங். 454: 1-3.
75. கலி. 108: 42.
76. அகம். 254: 15.
77. ஐந். எழு. 24: 2.
78. நற். 142: 10-11; அகம். 274: 13-14; சிறுபாண். 30.
79. ஐங். 408: 2.
80. பத்துப்பாட்டு, டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக். 152.
81-82. ஐங். 408: 1; 478: 5.
83. புறம். 200: 9-12.

'... ... ... தேருடன்
முல்லைக் கீந்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி'[84]

எனவும்,

'சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரி'[85]

எனவும் வரும் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

மக்கள் முல்லை மலரை மங்கலப் பொருளாகக் கருதி விரும்பிச் சூடுவர். இச்சிறப்புடைய மலரை ஒல்லையூர் நாட்டு மக்கள் ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் இறந்த பொழுது சூடவில்லை என்பதை,

'இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே?'[86]

என வரும் அடிகளில் குடவாயிற் கீரத்தனார் புலப்படுத்தியிருப்பது ஈண்டு அறியற்பாலது.

பேகன் என்னும் வள்ளல், தன் நன்னாடு முல்லையை வேலியாகக் கொண்ட பெருஞ்சிறப்பினன் என்பது,

'முல்லை வேலி நல்லூ ரானே'[87]

என வரும் அடியால் தெரியவரும்.

மகளிர் மாலைக்காலத்தே முல்லை மலரை நெல்லொடு தூவி இல்லுறை தெய்வத்தை வணங்குவர் என்பதனைச் சிலப்பதிகாரம் போற்றி உரைக்கிறது. இதனை,

---

84. புறம். 201: 2-5.
85. சிறுபாண். 89-91.
86. புறம். 242: 1-6.
87. புறம். 144: 14.

'அகனகர் எல்லாம் அரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகல்மாய்ந்த
மாலை மணிவிளக்கம் காட்டி இரவிற்கோர்
கோலம் கொடியிடையார் தாம்கொண்டார்'[88]

என வரும் அடிகள் தெளிவாய்த் தெரிவிக்கின்றன.

<u>பிடவம்</u>

சங்க இலக்கியப் பாடல்களில் பிடவம் 17 இடங்களில் குறிக்கப்பெறுகிறது.[89] பிடவம் புதர்ச்செடியாகும். இதனை, 'பிடவ் .. குறும்புதல்'[90] 'குறும்புதற் பிடவ்'[91] எனக் கூறுதல் தெரியவருகிறது. இப்பிடவத்தினைப் [illegible] 'Randia malabarica' எனக் குறிப்பிடுவர்.[92] ஆனால் சு. சதாசிவம் பிள்ளை அவர்கள் பிடவம் ஒரு 'மரமாகும்' எனக் கூறுவர்.[93] இது 'பிடவம்' 'பிடவு' 'பிடாஅ' எனக் குறிக்கப்பட்டுள்ளது.[94]

இதுவும் முல்லை போலக் கார்காலத்தில் பூக்கும் என்றும் அந்தி மாலையில் பூக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

'கார்தோற்ற ... பிடவும் ... மலர்ந்தன'[95]
'...... தலைப்பெயல் கலித்த ... பிடவம்'[96]
'பிடவ ... மாலை அந்தி'[97]

என வரும் அடிகளால் அறியலாம். இப்பிடவம் வளைந்த அடிப்புறத்தையுடையது. 'குறுங்கால் பிடவின்'[98] எனக் கூறுதல் புலனாகும். பிடவம் உயர்ந்த மலையில் வளரும் என்பதை 'ஓங்குமலைச் சிலம்பிற் பிடவு'[99] எனக் கூறுதல் தெரிகிறது. பிடவம் சிறிய கரிய கொம்புகளையும், கூர்மையான அரும்புகளையும், செறிந்த பூக்களையும் உடையதென்பது, 'சிறுகரும் பிடவின்', 'பிடவின் கூர்முகை அரும்பு', 'நெருங்குகுலைப் பிடவம்' என வரும் அடிகளாற் புலப்படுதல் காணலாம்.[100]

---

88. சிலம்பு.9:1-4.
89. நற்.99:9; 238:3; 242:1 - (3); குறு.251:3 - (1); ஐங்.412:2; 435:3; 461:1; 499:1 - (4); கலி.101:2; 102:2; 103:2 - (3); அகம்.34:1; 154:4; 184:7; 304:11; 344:3 - (5) முல்லைப்.25 (1)
90-91. அகம்.34:1; 154:4.
92. [illegible], P.L., Journal of Tamil Studies, Sep. 1972, p.102.
93. [illegible]
94. முல்லைப்.25, நற்.246:8; கார்.32:4. 95. நற்.99:8-10.
96. கலி.101:1-2.
97. நற்.238:3-4. 98. அகம்.344:3.
99. அகம்.147:1. 100. அகம்.34:1; 183:11; 23:4.

பிடவம் வெண்மையான பூக்களை உடையது என்பது, 'வெண்டலை'[101] 'வெண்பிடவு'[102] என வரும் சொற்களால் புலப்படும். பிடவ மலர்களை நற்றிணைப் பாடலொன்று 'இலையில் பிடவம் ஈர்மலர்'[103] எனக் கூறுகிறது.

நிலவொளி போல முகைகளை மலரச் செய்யும் என்பதை

'... ... ... நிலவெனத்
தொகுமுகை விரிந்த முடக்காற் பிடவின்'[104]

என வரும் அடிகளில் காண்கிறோம்.

பிடவ அரும்புகள் கொத்துக்கொத்தாய் மலரும் என்பது,

'...... கலியிற் பிடவுமுகை தகைய'[105]

என்னும் அடியால் தெரிகிறது. முட்களைப் புறத்தே உடையது என்பது 'முட்புறப் பிடவம்'[106] எனக் கூறுவதால் தெரிகிறது.

இது குளிர்ச்சியும் மணமும் உடையது என்பதும் இதன் மணம் நெடுந்தூரம் கமழும் என்பதும் புலவர்தம் குறிப்புகளால் போதரும். 'தண்ணறும் பிடவம்'[107] 'செறு பிடவம்'[108] என வரும் அடிகள் இதற்குச் சான்று.

பிடவம் தன் நீண்ட காம்பில் மலர்களைப் பெற்றுத் திகழும். மாலையில் மலர செய்யும். இதனை,

'குறும்புதற் பிடவின் நெடுங்கால் அலரி'[109]

எனவும்,

'சிறுகரும் பிடவின் வெண்டலைக் குறும்புதல்
கண்ணியின் மலரும்'[110]

எனவும் வரும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

பிடவம், கொன்றை, தளவம், குருந்தம் ஆகியவற்றோடு மலரும் என்பது, 'பொன்னேர் கொன்றையொடு பிடவுத்தலை அவிழ'[111] 'தளவமொடு பிடவலர்ந்த'[112] 'பிடவம் குருந்தொடு மலர'[113] என வரும் அடிகளால் தெரிகிறது. பிடவூர் என்றும் சோழ நாட்டு ஊர் பிடவ மலர்ச்சிறப்பால் ஏற்பட்ட ஊர் போலும்'.[114]

---

101. அகம். 34:1.
102. அகம். 184:7.
103. நற். 242:1.
104. அகம். 344:2-3.
105. ஐங். 461:1.
106. கலி. 101:2.
107. கலி. 102:2.
108. முல்லை. 25.
109. அகம். 154:4.
110. அகம். 34:1-2.
111. நற். 246:7-8.
112. ஐங். 412:2.
113. ஐந். 36:1.
114. புறம். 395:10.

தளவம்

தளவம் 14 இடங்களில் பேசப்படுகிறது.[115] இது கொடி வகையைச் சேர்ந்தது. இதனை 'தளவப் பூங்கொடி அவிழ'[116] 'தளவின் பைங்கொடி'[117] 'தவழ்கொடித் தளவம்'[118] என்பவற்றால் புலப்படுத்தப்பட்டுள்ளன. இதனைச் செம்முல்லை, Jasminum Pubescens என்று குறிப்பிடுவர்.[119] நச்சினார்க்கினியர் 'செம் முல்லைப்பூ' என்பர்.[120]

தளவக்கொடி புதரில் படரும் என்பது, 'புதலிவர் தளவம்'[121] எனக் கூறுவதால் தெரியவரும். அது மிகுதியாக மலர்களைத் தரும் என்பதனைப் 'பூமலி தளவம்'[122] என்ற தொடர் காட்டும். தளவம் செறிந்த மரங்களில் தழுவியவாறு படரும்.[123]

தளவும் கொன்றை, பிடவம்போலக் கார்காலத்தில் பூக்கும்.[124]

தளவும் முல்லையும் பல பாடல்களில் ஒருசேரப் பாடப்பட்டுள்ளன.[125] தளவமொடு தோன்றி, பிடவம் ஆகிய மலர்கள் இணைத்துப் பேசப்படுவதையும் காண்கிறோம்.[126]

தளவமலர் செந்நிறமுடையது.[127] இது கிளிப்பறவையின் வாய் போன்ற செந்நிறமுடையது என்பது 'தளவின் கிளவாய்ச் செம்முகை'[128] என வரும் அடியால் வெளிப்படும்.

தளவம் பனிச்சியின் தன்மையை உடையது என்பது 'பனிப்பூந் தளவம்'[129] 'பனிவார் தளவின்'[130] எனக் கூறுவதால் தெரிகிறது.

நீண்ட பெருவழியில் இது மலர் பரப்பி விளங்கும் என்பது 'தளவப்பிணி அவிழ்ந்த தண்புறப் பெருவழி'[131] என்பதால் புலப்படுகிறது.

தோன்றி

தோன்றி, காந்தள், கோடல் ஆகியவை ஓரினத்தைச் சார்ந்தவையாம். தோன்றி 9 இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.[132]

---

115. நற்.242:2 - (1); குறு.382:3 - (1); ஐங்.412:2; 422:2; 440:3; 447:2; 454:1; 499:1 - (6); கலி.102:2; 103:?; 108:37; 42 - (4); அகம்.64:4; 264:15 (2).
116. நற்.242:2. 117. ஐங்.454:1. 118. கலி.102:2.
119. Cary, P.L., Journal of Tamil Studies, Sep.1972, p.102.
120. பத்துப்பாட்டு, டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, ப.490.
121. நற்.242:2. 122. குறு.382:3. 123. திணை.மா.
124. குறு.382:1-3. 125. குறு.382:1-3; 93:3; 1?5:3-
126. ஐங்.412:1; 499:1; கலி.102:2. ஐங்.454:1-3; கலி.100:42.
127. அகம்.23:3. 128. ஐங்.447:2; குறுந் நற்.61:2; கார்.36:1-2.
129. கலி.108:42; ஐங்.447:2.
130. ஐங்.447:2. 131. அகம்.64:4.

தோன்றி செங்காந்தள் என்னும் பெயர் பெறும் என்பதனை டாக்டர் உ.வே. சாமிநாதையர் ஐங்குறுநூறு 440ஆம் பாடலில் தோன்றி என்பதற்கு செங்காந்தள் எனக் குறிப்புரையில் தெரிவிக்கிறார்.[133] இதனைச் செடி நூலார் Gloriosa superba என்பர்.[134]

தோன்றியொடு முல்லை, காயா, கொன்றை ஆகியவை இணைந்துக் கூறப்படுவதை, 'முல்லை தோன்றியொடு', 'முல்லையொடு தோன்றி', 'காயா... தோன்றியொடு' 'கொன்றை..தோன்றியொடு' எனவரும் அடிகளில் காணலாம்.[135]

தோன்றி மலர் 'ஒண்சுடர்த் தோன்றி'[136] 'செம்பூந் தோன்றி'[137] 'சுடர்புரை தோன்றி'[138] 'தோடார் தோன்றி'[139] 'மலர்ந்த தோன்றி'[140] '[illegible] தோன்றி'[141] எனப் பலவாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது. கபிலர் 'சுடர்ப்பூந் தோன்றி'[142] எனக் குறிப்பர்.

தோன்றி புதர்களில் தம் அரும்புகளை விளக்காக [illegible] தோற்றுவிக்கும் என்பர,

'தோன்றி தோன்றுபு புதல்விளக் குறுஉ'[143]

எனவும்,

'சுடர்புரை தோன்றி புதல்தலைக் கொளாஅ'[144]

எனவும் வரும் அடிகளால் தெரியவருகிறது. தோன்றி, கார்த்திகை விளக்கை ஒத்து விளங்கும் என்பதை 'கார்த்திகை ... விளக்கின் பூத்தன தோன்றி'[145] என வரும் அடிகளால் புலனாம்.

நற்புதல் ஏறிய தோன்றி அழகுபெறத் தோன்றும் என்பதை,

'செம்பூந் தோன்றியொடு நற்புதல் அணிய'[146]

என வரும் அடி காட்டுகிறது.

தோன்றி மலர் செந்நிறத்தைக் கொண்டது என்பது 'தோடார் தோன்றி

---

133. ஐங்குறுநூறு டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக். 105.
134. Samy, P.L., Journal of Tamil Studies, p.103.
135. அகம்.94:5; 164:6; ஐங்.420:2; நற்.221:1-2.
136. ஐங்.440:3.
137. நற்.221:2.
138. அகம்.364:6.
139. முல்லை.96.
140. ஐங்.420:2.
141. கலி.101:3.
142. குறிஞ்சி.90
143. நற்.69:6.
144. அகம்.364:6.
145. கார்.26:1-3.
146. நற்.221:2.

குருதி பூப்ப'[147] என வரும் அடியால் தெளியலாகிறது. இதனை அகநானூறு 'எரியுருத் தோன்றியொரு' என்ற சிறப்பித்தலால் இதன் செந்நிறத் தன்மை விளங்கும்.[148]

காந்தள்

காந்தள், 3 பாடல்களில் குறிக்கப்படுகிறது.[149] இது கொடி வகையாகும். காந்தள், செங்காந்தள் வெண்காந்தள் என இரு வகைப்படும். இதனை, 'செங்காந்தள்'[150] 'காந்தள் வள்ளி'[151] என்ற தொடர்களால் அறியலாம். மலைபடுகடாம், இதனை, 145, 519ஆம் அடிகளில் கூறக் குறித்துள்ளது. காந்தள் நெடிய மலையில் தோன்றும் என்பதைப் பொருநராற்றுப்படை 'நெடுவரை மிசைய காந்தள்' (33) என்று கூறுகிறது. காந்தள் மலர் மென்மையானது என்பது 'காந்தள் மெல்விரல்'[152] என வரும் அடியால் புலனாகும். மேலைநாட்டுப் பூக்கும் என்பது 'கொழுமலை காந்தள்'[153] 'குலைக் காந்தள்'[154] என வரும் அடிகளால் தெரிகிறது. மாலையாற் எடுத்தும் இதன் நிறம், 'மாட மலிந்த காந்தள்'[155] என்ற கூறுவர். குறிஞ்சியும் மன்னும் கடவுள என்பது 'காந்தள் தம்மை மலர்'[156] என்ற அடியால் புலனாகும். நெடிய கேற்றுதே மலர்ந்த மணம் பரப்பும் சிறப்பை, 'நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தள் போதவிழ் மலர் நாறும்'[157] என்ற அடிகளில் காணலாம். வெண்காந்தள் இதழ்கள் சில உடைத்தாய்ப் போலத் தோன்றும். இதனை, 'வளையென, காந்தள் வள்ளிதழ்'[158] என வரும் அடிகளால் அறியலாம்.

முகை, காந்தளின் அரும்பு நிலை ஒத்தது என்பதை, 'காந்தளஞ் சுருப்பு விரிவன அன்ன ... முகை'[159] என்ப் பட்டினப்பாலை கூறுகிறது. காந்தள் குலையாக் கவிழ்ந்து மலரும் என்பது, 'காந்தள் குலைப்பு'[160] 'குலைப்பு ... காந்தள் அவி மலர்'[161] 'காந்தள் மெல்விரல்'[162] 'கைபோல் காந்தள்'[163] என்ற தொடர்களால் புலனாகும். குருதி போலவும் தீ போலவும் இருக்கும் என்பது, 'காந்தள் குருதி'[164] 'குருதி பூவின் குலைக்காந்தள்'[165] என வரும் அடிகளால் தெரிகிறது. காந்தள் மலர் கடவுளுக்கு உரியதாகும் என்பது, 'கடவுட் காந்தள்'[166] என்ற அடியால் தெரிகிறது.

---

147. ஐங்குறு. 96.
148. அகம். 218: 20.
149. நற். 161: 7; அகம். 4: 15; குறு. 107: 1.
150. குறு. 185: 6.
151. நற். 161: 7.
152. குறு. 167: 1.
153. சிறுபாண். 167.
154. பெரும்பாண். 371-372.
155. நற். 14: 7.
156. குறிஞ். 196-1
157. அகம். 4: 15-16.
158. நற். 161: 6-7.
159. பட்டினப். 153-1
160. மலைபடு. 336.
161. அகம். 108: 15-16.
162. குறு. 167: 1
163. நற். 355: 2.
164. நற். 54: 3.
165. குறு. 1: 4.
166. அகம். 152: 17.

<u>கோடல்</u>

இஃது ஏழு இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.[167] இது கொடி வகையாகும். கோடற்பூக்களை நச்சினார்க்கினியர் தம் உரையில் செங்காந்தட் பூவாகவும் வெண்கோடற் பூவாகவும் குறிப்பிட்டுள்ளார்.[168] திரு. பி.எல். சாமி அவர்கள், காந்தட் பூக்களில் இரண்டு வகை உண்டு என்றும், அவை செங்காந்தள், கோடல் என்ற பெயர் பெறும் என்றும் அவற்றுள் தோன்றி என்பது செங்காந்தள் என்றும் கோடல் என்பது வெண்காந்தள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.[169] கோடல், கார்காலத்துப் பூக்கும். இதனை, 'காலேற்ற ... கோடலம் மலர்ந்தன'[170] 'தண்ணறுங் கோடல் துடுப்பெடுப்பக் கார்'[171] என வரும் பாடல்கள் வழி அறியலாம். கோடலின் பூக்கள் வரிசையோடு கூடிய வெண்மைக் கோடுடையது என்பது 'வரிவெண் கோடல்'[172] என்பதால் புலனாகிறது. நீண்ட இதழ்களை உடையது என்பது 'கோடல்நீளிதழ்'[173] என்ற தொடரால் தெரிகிறது.

அத்துடன் கோடல் பூக்கள் நெருப்பை ஒத்த வெண்தாமரைபோன்ற இதழ்களை உடையதாயும் இருக்கும் என்பது 'வெண்கூட் நிறைந்த வெண்குருத்தின் கோடல்'[174] என்ற தொடரால் புலனாகிறது.

கோடலின் பூத்த மலர்கள் பாம்பு படம் விரித்தாற்போன்றும், முகைகள் நகங்களை போன்றும், கோடலின் வெண்குருத்துகள் சங்குப் போன்றும் வெள்ளை போன்றும் விளங்கும் எனப் போற்றி உரைக்கின்றனர். இவற்றைக் காட்டுவன,

> 'வெற்கிள வரவின் பையரும் நல்ல
> நல்லறும் கோடல் முகிழ் மலர'[175]
>
> 'பாம்பின் தலைபோல் ... கோடல்'[176]
> 'கோடல் குவிமுகை அங்கை அவிழ'[177]
> 'இலங்கிற... வெண்குருத்தின் கோடல்'[178]
> 'கோடல் துடுப்பெடுப்ப'[179]
> 'வெள்ளை வாய்ந்த கோடல்'[180]
> 'கொழுமடற் றன்ன கோடல்'[181]

---

167. நற்.99:9; கலி.101:4; 103:3; ஐங்.154:7; 264:3; முல்லைப்.95; நெடுநல்.5.
168. கலித்தொகை; கழகப்பதிப்பு, பக்.307. பத்துப்பாட்டு, டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக்.491.
169. சாமி, பி.எல்., சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், பக்.72-73.
170. நற்.99:8-10. 171. ஐந்.எழு.17:1. 172. ஐங்.264:3.
173. நெடுநல்.5. 174. கலி.101:4. 175. ஐங்.154:6-7.
176. கார்.11:3. 177. முல்லைப்.95 178. கலி.101:3-4.
179. ஐந்.எழு.17:1. 180. திணை.மா.119:4. 181. ஐங்.23:6.

என வரும் பாடற்பகுதியில் காணலாம். சங்கம் மருவிய கால நூலாகிய திணைமாலை நூற்றைம்பதில்,

'வண்டுலாம் பாம்பாய் விரவாய் வலையினாய்
வெண்டலையாதி தந்தொடை'[182]

என்ற வரி மேதாவியார் காட்டும் வருணனையும் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கதாம்.

<u>குல்லை</u>

குல்லை, முல்லைத்திணைப் பாடல்களில் இரண்டு இடங்களில் மட்டுமே பேசப் படுகிறது.[183] இது செடி வகையாகும். கஞ்சங்குல்லை என்றும், கஞ்சா என்றும் வழங்கும். 'கஞ்சங் குல்லை கஞ்சா வாகும்'[184] என்பது, பிங்கல நிகண்டு. இது மராஅம் என்றும் வெட்சி என்றும் வழங்கும்.[185]

பொதுவர் ஏறு தழுவும் காலத்தே கஞ்சங்குல்லைப் பூவாலும் பிற பூக்களாலும் ஆன கண்ணியை மலைந்திருப்பர்.

'குல்லையும் குருந்தும் கோடலும் ....
.... மயங்கிய மலைந்தனர்'[186]

இடையர் குல்லையைச் சூடுவர் என்பது, 'குல்லைக் கண்ணி வடுகர்'[187] என்னும் அடியால் தெரிகிறது. குல்லைமலர் தளவம், குருந்தம் என்பவற்றோடு இணைத்துப் பேசப் பெறும்.[188]

குல்லை முதலான மலர்கள் வையையாற்றின் இருகரைகளிலும் மலர் பரப்பித் திகழும் எனக் காட்டுவார் நல்லழிசியார்.[189]

குறவர் மனையும் மகளிர் மனையுட அதிரலின் பூவிலே இலைகளோடு பறித்துச் சூடுவர் என்பது, 'மறுகில் குல்லை இலையுடை நறும்பூ'[190] என வரும் அடியால் புலனாம்.

இனி, முல்லைத்திணைப் பாடல்களில் குறிப்பிடப்பெறும் பிற செடி கொடிகளைக் காண்போம்:

---

182. திணை. நூ. 110: 3-4.
183. பரி. 12: 79; கலி. 103: 3.
184. பிங். 2874, ஒப்பு பத்துப்பாட்டு டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக். 64, 126.
185. நற். 376: 5 கழகப்பதிப்பு, பக். 634.
186. கலி. 103: 3.
187. குறு. 11: 5.
188. கலி. 103: 2-3.
189. பரி. 12: 79-81.
190. குறு. 201.

ஈங்கை

ஈங்கை என்பது, நான்கு பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது.[191] ஈங்கையை, நச்சினார்க்கினியர் 'இண்டு'[192] என்பர். செடி நூலார் 'Mimosa rubicaulis' என்று வழங்குவர்.

ஈங்கை கொடியாகவும் புதராகவும் விளங்கும் சிறப்புடையது என்பது, 'வெண்கொ[illegible] ஈங்கைப் பைம்புதல்'[193] 'புதலிவர் ஈங்கை'[194] என வழங்குவதிலிருந்து அறியலாம். பூக்கள் வெண்மையாகவும் அவிழ்ந்தவிடத்து சிவப்பாகவும் இருக்கும்; அதன் கொடிய நீண்ட முட்களை உடையது; தளிரும் மலரும் உடையது. இவ்விவரங்கள் பல பாடல்களில் குறிக்கப்படுகின்றன.[195] இம்மலரின் பஞ்சுபோன்ற அழகிய மென்மை பொடியின் மெல்லிய தோற்றத்தைப் பெறும் என்பது 'நெருங்கிய ஈங்கைப் பூவின் அன்ன [illegible]'[196] எனக் கூறுவதால் தெரிகிறது.

ஈங்கை பனிக்கால் தளிர் காலத்தில் மலரும்.[197] 'ஈங்கையின் பனிக்குக் கொடி படரும் என்பது, 'பனிநிற .. வெண்கொடி ஈங்கைப் பைம்புதல் அருகு'[198] என வரும் அடிகளால் தெரிகிறது.

உழுந்து

உழுந்து, மூன்று பாடல்களில் குறிக்கப்படுகிறது.[199] இதைச் செடிநூலார் Phaseolus mungo glaber என்று குறிப்பர்.

இது செடி வகையாகும். இது செவ்விய தாளினை உடையது என்பது 'செங்கால் உழுந்து'[200] என்ற அடியால் தெரிகிறது. இது மயிர்கள் அமைந்த அகன்ற இலைகளை உடையது என்பதை 'மயிர்க்காய் உழுந்தின், அகலிலை'[201] என்ற அடிகளால் அறியலாம். முன்பனிக் காலத்தில் முதிரும் என்பது, 'இரும்பனிப் பருவத்த மயிர்க்காய் உழுந்தே'[202] என்ற அடியால் புலனாம். உழுந்தின் முதிர்ந்த காய்களை மான்கள் அருந்தும் என்பது 'உழுந்தின், ஊழ்ப்படு முதுகாய் உழையினம் கவரு'[203] என்ற அடிகளால் தெரிகிறது.

---

191. நற். 181:4; குறு. 110:5; ஐங். 456:3; அகம். 294:6.
192. பத்துப்பாட்டு டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக். 491.
193. ஐங். 456:3. 194. அகம். 294:6.
195. குறு. 110:5-6; 380:5-6; நற். 205:9; 193:1-2; அகம். 357:1; 306:3.
196. நற். 181:4-5. 197. குறு. 110:5-6; கலி. 31:3-6; அகம். 252:9-10.
198. ஐங். 456:2-3. 199. நற். 89:5. 200. குறு. 68:1.
201. நற். 89:5-6. 202. நற். 89:5. 203. குறு. 68:1-2.

வயலையொடு சேர்ந்த ஊதுமலர் வகையாகக் குறிப்பிடுவதை, 'ஊழ்த்த நாற்றமுள்ள வயலை'[204] என வரும் அடிகளால் அறிகிறோம். ஊழ்த்து பருப்பினை நிரம்பக் கட்டிச் செல்லும் பொன்னை, 'ஊழ்த்த வீழ் பெய்த கொழுங்கனி மிதவை'[205] எனக் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

கள்ளி

கள்ளி இருபது பாடல்களில் குறிக்கப்படுகிறது.[206] இது செடி வகையைச் சார்ந்தது. இதைச் செடி நூலார் Euphorbia என்று வழங்குவர்.

இது பாலை நிலத்திற்குரியது. கள்ளி, கள்ளி நிலத்தே செழித்து வளரும். இதனை 'கள்ளி போகிய களரி'[207] என வரும் அடிகளால் அறிகிறோம். இது காளையின் கொம்பினைப் போன்ற வளைந்த முள்ளினை உடையது. 'காளை மூரிக்கோடன்ன கவைமுள் கள்ளி'[208] போன்ற அடிகள் உணர்த்துவது, 'கள்ளி போகிய'[209] 'பொரிஅரைக் கள்ளி'[210] என வருவனவற்றால் புலப்படும். கிளிகள் பழத்தை போன்ற தன்மையுடையதால் 'அரம் தலைக் கள்ளி'[211] எனக் குறிப்பிடப்படுகிறது. இது அரிய கிளைகளையும் முட்களையும் உடையது என்பது, 'முண்டகம் கோடு உடைய முள்ளிக் கள்ளி'[212] எனவரும் அடியால் தெரிகிறது. கள்ளியின் நிழல் கூடத் தப்பாது வற்றிவிடும் என்பது, 'கள்ளி நிழல் கடவுள் வாழ்த்தி'[213] என்ற அடியால் வெளிப்படும்.

குருக்கத்தி

இது பதினொரு பாடல்களில் குறிக்கப்படுகிறது.[214] இது நீண்ட கொடி வகையைச் சார்ந்தது. இதனை 'குருகு'[215] என்றும் 'மாதவி'[216] என்றும் வழங்குவர். செடிநூலார் Hiptage Madablata என்று வழங்குவர்.[217] இது நெடுங்கொடியாயும் பசுமையுடையதாயும் விளங்குவதை 'நெடுங்கொடிப் பாலை'[218] 'பைங்குருக்கத்தி'[219] 'பாசிலைக் குருகு'[220] என வரும் தொடர்கள் புலப்படுத்தும்.

இது, பெரிய கொடியாகவும், பாம்பின் உருவம் போல அடர்த்தியாகவும் காற்றில் மரத்தை சுற்றிப் படரும் என்ற கபிலர் குறிஞ்சிப் பாட்டில் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.[221]

---

204. நற். 211: 1-2. 205. அகம். 86: 1. 206. நற். 169: 4; அகம். 184: 8.
207. புறம். 225: 7; 245: 3. 208. புறம். 322: 1-2.
209. புறம். 322: 2. 210. குறு. 154: 5. 211. நற். 169: 4.
212. அகம். 184: 8. 213. புறம். 260: 5. 214. நற். 97: 6.
215. கலி. 92; நற். 97: 6; பெரும்பாண். 376. 216. சிலப். 2: 18.
217. சாமி, பி.எல்., சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், பக். 180.
218. பெரும்பாண். 376. 219. நற். 97: 6; குறிஞ்சி. 90.
220. [illegible] 221. [illegible]

<u>குவளை</u>

இது, நாற்பது சங்கப்பாடல்களில் குறிக்கப்படுகிறது.[222] குவளை, கருங்குவளை, செங்குவளை என இது வகைப்படும். இது மருதநிலத்திற்குரியது. செடி [illegible] Blue nelumbo என்பர். இது செங்கழுநீர் எனவும் வழங்கும்.[223] பசிய தண்டினை உடையது என்பதைப் 'பைந்தாட் குவளை'[224] எனவும், சாதிக்கப் போன்ற நிறமுடையது என்பதை, 'நீலக்கருங் குவளை'[225] எனவும், கரிய பெரிய இதழ்களை உடையது என்பதை, 'மாயிதழ்க் குவளை'[226] 'கருநெய்தற்குவளை'[227] எனவும் நேரிய காம்புடையது என்பதை, 'குவளைக் குறுந்தாள் நாண்மலர்'[228] எனவும் மணக்கின்ற நறிய இதழ்களை உடையது என்பதை, 'நாறிதழ்க் குவளை'[229] எனவும் தண் மலராய் மணமலராய் விளங்கும் என்பதை, 'தண்ணறுங்குவளை'[230] 'பனிமலர்க்குவளை'[231] 'பசுநீர்க்குவளை'[232] 'தண்கயத்து...குவளை'[233] எனவும் சுனை, வயல், நாழி முதலியவற்றில் மலரும் என்பதை, 'சுனைக்குவளை'[234] 'பொய்கைக் குவளை'[235] '[illegible] குவளை'[236] 'தண்கயக் குவளை'[237] 'நாழிக்குவளை'[238] எனவும் குறிப்பிட்டுள்ளதைக் காண்கிறோம். இதுபோன்று பல காணப்படுகின்றன.[239]

கண்ணிற்குக் குவளையை உவமையாகக் கூறப்படுவதைப் பல பாடல்களில் காண்கிறோம்.[240] இவற்றுள், 'கண்போல் நீலம்'[241] 'குவளை மலர் என்றெழில் மழைக்கண்'[242] 'குவளை உண்கண்'[243] என வருவன குறிப்பிடத்தக்கன.

கூந்தல், குவளை மணம் வீசும். இதனை, 'குவளை நாறும் கூந்தல்'[244] 'குவளை கமழும் ...[illegible]'[245] 'குவளை கமழும் கூந்தல்'[246] என்ற கூற்றால் அறிகிறோம்.

---

222. நற்.367:8; குறு.167:3; 270:6; ஐங்.500:2.
223. பத்துப்பாட்டு உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக்.403.
224. முருகு.22. 225. பெரும்பாண்.293.
226. நற்.105:6; அகம்.301:2; புறம்.105:2. 227. சிலம்பு.13:184.
228. குறு.270:6-7.
229. குறு.62:2. 230. அகம்.358:5. 231. ஐங்.225:2.
232. புறம்.153:7. 233. அகம்.180:5. 234. அகம்.308:11.
235. நற்.204:3; அகம்.128:9. 236. ஐங்.277:5.
238. அகம்.105:11. 237. திருச்சிற்.63.
239. குறு.291:6; 321:2; 342:4-5; 346:4; ஐங்.299:2; 500:2; கலி.41:30-31; புறம்.132:5; அகம்.395:1.
240. நற்.6:3; 161:2; 167:3; 205:6; 271:6; 391:8-10; குறு.13:5; 107:3; 339:6; ஐங்.72:3; 73:3; 277:5; அகம்.129:16; 179:12; 105:1; 295:13; புறம்.348:6.
241. நற்.161:2. 242. நற்.6:3. 243. நற்.167:3; அகம்.179:
244. நற்.262:7; குறு.300:1. 245. நற்.105:8-10.
246. ஐங்.225:2-4.

வேளை மலரொடு, செங்காந்தள், முல்லை, குவளை, அதிரல் என்னும் மலர்களைச் சேர்த்து மாலையாகக் கட்டுவர் என்பது 'வேளையொடு தொடுத்த நறுமுல்லை'[247] 'வேளையொடு பொதிந்த குவளை'[248] 'அதிரற் போதொடு வேளை'[249] என வரும் அடிகளால் அறிகிறோம்.

தாமரை

இஃது இரண்டு தொகைப் பாடல்களில் குறிக்கப்படுகிறது.[250] இதைச் செடி நூலார் Nelumbiumspeciosum என்று குறிப்பர். இது கொடி வகையாகும். இதில் செந்தாமரை, வெண்டாமரை என இரு வகை உண்டு. இது மருத நிலத்திற் குரியது. தாமரை பொய்கையில் மலரும் என்பது 'பொய்கை பூத்த தாமரை'[251] 'நீர்கவிந்த தாமரை'[252] 'குளிர் பூந்தாமரை'[253] எனக் கூறுமாற்றால் புலனாகும். மேலும் செந்நிறம் கமழ்கின்ற மலரும் சிறப்புடையது என்பதை, 'செந்நிற தாமரை'[254] 'கமழ்ந்த தாமரை'[255] 'செழுமிற் பூத்த ... தாமரை'[256] என வரும் அடிகளால் அறிகிறோம். செம்மையான இதழுடையது என்பது 'செவிதழ்த் தாமரை'[257] என்பதால் தெரிகிறது.

இது மணமுடையது, பசுமையான அகன்ற இலைகளை உடையது, பல மலர் என விளங்குவது, நீண்ட தாளுடையது. இதன் சிறப்புகளை, 'விரைமலர்த் தாமரை'[258] 'பாசடைத்தாமரை'[259] 'தாமரை நீர்மிசை நிமிர்ந்த நெடுந்தாள் அலரி'[260] 'தாமரைப் பன்மலர்'[261] எனக் கூறுமாற்றால் அறிகிறோம்.

செந்தாமரையும் வெண்டாமரையும் 'செவிதழ்த் தாமரை'[262] 'தாமரை வான்முகை'[263] எனக் கூறப்படுவதைக் காண்கிறோம்.

இது முள்ளந்தாளை உடையது என்பதைப் பல பாடல்களில் காண்கிறோம்.[264] பெரும்பாணில் 'முட்டாள் தாமரை' 'முள்ளரைத் தாமரை' என்றே குறிக்கப்பட்டுள்ளது.

---

247. நற். 367: 8.
248. குறு. 59: 3.
249. அகம். 223: 14-15.
250. ஐங். 424: 3; கலி. 112: 2.
251. ஐங். 6: 4.
252. அகம். 16: 1.
253. கலி. 112: 1-2.
254. புறம். 27: 1.
255. ஐங். 53: 3; 94: 4.
256. புறம். 397: 19.
257. புறம். 397: 19.
256. சிறுபு. 6: 148.
259. கலி. 73: 2.
260. அகம். 186: 3-4.
261. நற். 260: 2.
262. புறம். 397: 19.
263. குறுந். 127: 2.
264. பொரு. 73; சிறுபாண். 183; மதுரைக். 249; பெரும்பாண். 114; குறிஞ்சிப். 80; கலி. 79: 2.

தாமரையால் குளம் அழகு பெறுவதைக் 'குளத்தவி தாமரை'[265] என்ற அடி புலப்படுத்தும். தாமரை நெருப்புப்போல விளங்கும் என்பதைப் பல பாடல்கள் காட்டுகின்றன.[266]

தாமரை, புதல்வர்க்கும், தலைவிக்கும் உவமையாகக் கூறப்படுவதைக் காண்கிறோம். 'தாமரையன்ன நின்...புதல்வன்'[267] 'தாமரை..இதழ்புரை'[268] கண்ணிற்கும் பாதத்திற்கும் உவமையாகக் கூறப்படுவதை, 'தாமரைக்கண்'[269] 'தாமரை...அடி'[270] என வரும் அடிகளால் அறிகிறோம்.

இது தெய்வத்தோடு இணைத்துப் பேசும் சிறப்புடையது. இதனைத் 'தெய்வத் தாமரை'[271] 'கடவுட் தாமரை'[272] என்ற கூற்றாலும் அறியலாம். திருமாலின் உந்தித்தாமரையில் அயன் தோன்றினன் என்பதை, 'தாமரை பயந்த..நான்முக'[273] 'நான்முகற் பயந்த பல்விதழ்த் தாமரை'[274] என வரும் அடிகளால் அறிகிறோம்.

<u>பகன்றை</u>

இஃது இருபத்து மூன்று பாடல்களில் குறிக்கப்படுகிறது.[275] இதைச் செடி நூலார் Gulancha என்று குறிப்பர். இது கொடி வகையாகும்; இதனைச் சிவதையென்றும் சிவப்பிகையென்றும் கூறுவர். இது படரும் தன்மையுடையது என்பது, 'இவர் பகன்றை'[276] என்ற கூற்றால் தெரிகிறது. நச்சினார்க்கினியர் பகன்றையை 'மலர்வில்லாத பகன்றைப்பூ'[277] என்பர். இது குளிர்ச்சித் தன்மையுடையது என்பது 'பனிப்பகன்றை'[278] 'பனித்துறைப் பகன்றை...மாமலர்'[279] என்ற கூற்றால் அறிகிறோம். பெரிய இலைகளை உடையதாயும் தப்புதராயும் தோன்றும் என்பதை, 'பேரிலைப் பகன்றை'[280] 'தப்புதற் பகன்றை'[281] என வரும் அடிகளில் காண்கிறோம். பகன்றையின் பூ வெண் போல முகிழ்த்து ஆடையைப் போல அகன்று விளங்கும் என்பது, 'வெள்ளை விரியும் .... பகன்றை'[282] 'பருஉத்திரி கடுக்கும், பேரிலைப் பகன்றை'[283] என்ற கூற்றால் தெரிகிறது. பகன்றையின் பூக்கள் வெண்ணிறமுடையன. இதனை, 'வால்பூ'[284] 'வான்மலர்'[285] 'பவியது'[286]

---

265. கலி. 22:15.
266. பெரும்பாண். 159; அகம். 6:16; 106:1; 116:1; புறம். 11:17; 29:1; 364:3.
267. ஐங். 424:3-4.
268. கலி. 77:1-2.
269. கலி. 39:2.
270. கலி. 13:11-13.
271. சிறுபா. 73.
272. மதுரைக். 710.
273. முரு. 164-165.
274. பெரும்பாண். 403-404.
275. ஐங். 456:2; அகம். 24:3.
276. பொருந. 195.
277. கலி. 73:2; பதி. 440.
278. புறம். 16:14.
279. புறம். 235:18.
280. அகம். 219:3.
281. அகம். 255:11.
282. நற். 86:2-3.
283. குறு. 330:3-4.
284. குறு. 330:4.
285. ஐங். 97:1.
286. ஐங். 456:2.

'வாலிய மலர்'[287] என வரும் தொடர்களால் அறியலாம். எருவை நரலைப் போலக் காய்ந்த பசுந்தினை உடையது என்பதை 'வளை.. அவரை.. காய்ப் பசுங்கொடி'[288] என்ற வரிகளால் அறிகிறோம். புதர்களில் கிளியின் மூக்குப் போல வெள்ளிய மலரும். என்பது, 'புதல்தொறும்... தோன்றிய பாசிலை வாலிய மலர்'[289] என்ற வரிகளால் தெரிகிறது.

பித்திகம்

இஃது ஆறு பாடல்களில் குறிப்பிடப்படுகிறது.[290] செடி நூலார் Large flowered Jasmine என வழங்குவர். இது கொடி வகையாகும். இதனைப் பிச்சிப்பூ என்றும், சிறுசண்பகம் என்றும் வழங்குவர்.[291]

இது மாரிக்காலத்தில் மலரும் என்பதை 'மாரிப் பித்திகத்து'[292] என வரும் தொடரால் அறிகிறோம். இத்தொடர் பல பாடல்களில் வருகின்றது.[293] இது பசிய காம்பினையுடையது என்பது 'பைங்காற் பித்திகத்து'[294] என வரும் தொடரால் புலனாகும். குவிந்த இதழ்களை உடையது என்பதை 'குவிந்த அலர்'[295] என்ற தொடரால் அறிகிறோம். அழகிய இதழ்களை உடைய இம்மலர்கள் தொடுத்த அலரி என்பது, 'பித்திகத் தாயின முகை அதனொடு வெண்கோடு ...'[296] என்ற வரிகளால் தெரிகிறது. குறிஞ்சி மகளிர் பித்திகத்தை விலைகூறி விற்பர் என்பது, 'குறிஞ்சியொடு, பித்திகை விரவுமலர் கொள்ளீரோ... ...தலைமகளே'[297] என வரும் அடிகளால் தெரிகிறது.

முசுண்டை

இது ஆறு பாடல்களில் கூறப்படுகிறது.[298] இதைச் செடி நூலார் Leather-berried bindweed Rivea ornata என்று கூறுவர். இது கொடி வகையாகும். திருமுருகாற்றுப்படை 'கொழுங்கொடி முசுண்டை'[299] என்று கூறும். செறிந்த குவிந்த இலைகளை உடையது என்பது, 'பல்பிணி [illegible] முசுண்டை'[300] என்ற அடியால் புலனாகும். முசுண்டை அரும்புகளை உடையது என்பது,

---
287. அகம். 217: 8.
288. அகம். 24: 2-3.
289. அகம். 217: 6-8.
290. நற். 97: 7; குறுந். 94: 1; நெடுநல். 22.
291. பத்துப்பாட்டு டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக். 401. [illegible], கழகப்பதிப்பு, பக். 167.
292. குறுந். 168: 1.
293. குறுந். 222: 5; 94: 1; அகம். 42: 1; 295: 19.
294. நெடுநல். 40.
295. நற். 314: 3.
296. [illegible] 117-118.

'எயிறுகழி முகைமுட'[301] என வரும் அடியால் தெரிகிறது. புல்லிய கொடியாய் விளங்குவதை, 'புதல்கொடி முகைமுட'[302] என்ற தொடர் வெளிப்படுத்தும். செறிந்த தளிருடையது என்பதனை, 'குறுமயிர் முகைமுட'[303] என்ற அடியால் அறிகிறோம். வெண்ணிறப் பூக்களை உடையது என்பது, 'வாய்ப்பூ'[304] 'வாலிதழ் விரிந்த'[305] 'வெண்பூ'[306] 'வால்மூ மறை'[307] என வருவனவற்றால் புலனாகும். முல்லைக் கொடியோடு முகைமுட இணைத்துப் பேசப்படும். இதனை, 'முல்லைக் குருந்தொடு முகைமுட'[308] என்பதனால் அறிகிறோம். இது விடியற்காலத்து மலருவதாகக் கூறப்படுவதை 'வானம் மீமிசை தகைய ... முகைமுட'[309] என வரும் அடிகளால் அறிகிறோம்.

முல்லைத்திணைப் பாடல்களில் காணும் செடி கொடிகளைப் பற்றிய சிறந்த அடைமொழிகளும் தொடர்களும் (epithets) புலவர் தம் கூர்ந்த அவதானத்தையும் அறிவாற்றலையும் புலப்படுத்துவன என்பதையும் இவற்றைப்போல்வனவற்றை பெருவாரியாக எடுத்துப் பெய்தனர் என்பதையும் தெளிவாய்க் காண்கிறோம்.

---

301. மதுரைக். 281, அகம். 235: 9.
302. நெடுநல். 13, மலைபடு. 101.
303. அகம். 264: 2.
304. நெடுநல். 13.
305. மலைபடு. 101.
306. அகம். 94: 2.
307. அகம். 264: 2.
308. புறம். 320: 1.
309. அகம். 264: 1-2.

கொன்றை

முல்லை நிலத்திற்குரிய மர வகைகளாகக் கொன்றை, குருந்து, புதல், காயா முதலியவை குறிப்பிடுகின்றன. இவற்றுள் முதல் இரண்டு நச்சினார்க்கினியராலும்,[1] முதல் மூன்று இளம்பூரணராலும்,[2] பூவை நீங்கலாக ஏனைய மற்ற மூன்றும் நாற்கவிராச நம்பியாலும்[3] சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

கொன்றை மரம் 27 இடங்களில் குறிக்கப்பெறுகிறது.[4] இதனைச் செடி நூலார் 'Cassia fistula' என்று அழைப்பர்.[5]

கொன்றை மரம் காட்டிலும் மலையிலும் வளரும் என்பது, 'கொன்றைக் கானம்'[6] 'இருங்கோடை மிசை ... கொன்றை'[7] 'குன்றத்துக் கொன்றை'[8] என வரும் பாடற்பகுதிகளால் புலனாகிறது.

கொன்றை மரத்தின் அடிப்பகுதி கருமை, பருமை, பசுமையுடைத்தாயும் விளங்கும். இதனை, 'கருங்கால் கொன்றை'[9] 'நெடுந்திரள் கொன்றை'[10] 'பைங்கால் கொன்றை'[11] என வரும் தொடர்களால் அறியலாம். பொரிந்த அடிப்பகுதியை உடையது என்பது, 'பொரியரை வெதிர்த்த ... கொன்றை'[12] என்பதனால் தெரிகிறது.

கொன்றை மலர்கள் கார் காலத்தில் மலரும் என்பதனை,

'... ... பூப்பூத்த கொன்றைக்
கானம் காரென ...'[13]

'... கொன்றை ... கொடியிடை குறித்த
... கார்'[14]

---

1. தொல். பொருள். நச். 18. 2. தொல். பொருள். இளம். 20.
3. நம்பி. 22.
4. நற். 99:9; 221:4; 242:3; 364:10; 371:1 – (5)
குறு. 21:3; 66:1; 148:3; 183:1; 233:2 – (5)
ஐங். 412:1; 420:1; 430:1; 432:2; 435:3; 436:3; 458:1; 462:2; 497:1; 500:1 – (10)
கலி. 102:3; 103:1; 106:3 – (3); அகம். 4:2; 54:11; 364:5 – (3)
முல்லை. 94 – (1).
5. Swamy, B.L., Journal of Tamil Studies, p.102.
6. குறு. 21:3-4. 7. ஐங். 430:1.
8. நற். 371:1. 9. ஐங். 430:1.
10. குறு. 66:1. 11. அகம். 4:2.
12. நற். 141:3. 13-14. குறு. 21:3-4; 66:1-5.

'... ... ... கொன்றை
கானக் கெந்தி பாயிற்'[15]

'கொன்றை ... காரெதிர் புறவி னதுவே'[16]

என வரும் பாடற்பகுதிகள் புலப்படுத்துகின்றன.

கொன்றையின் பூக்கள் கொத்தாய் மலரும் என்பது, 'கொன்றை ஒள்ளிணர்'[17] 'கொன்றை ... மிணர்'[18] 'கடியிணர்க் கொன்றை'[19] 'இணர்க்கொன்றை'[20] 'நிரையிணர்க் கொன்றை'[21] 'முறியிணர்க் கொன்றை'[22] என வரும் தொடர்களால் புலனாகின்றது.

கொன்றையின் மலர்கள் பொன் போல மலரும். இதனை, 'பொன்... மலர்க் கொன்றை'[23] 'பொன்செய் கொன்றை'[24] 'பொன் ... புரையும் கொன்றை'[25] 'கொன்றை...அடர்பொன்'[26] 'சுடுபொன் அன்ன கொன்றை'[27] 'பொலங்கலி கொன்றை'[28] 'நன்பொன் அன்ன ... கொன்றை'[29] 'ஆய்பொன் கொன்றை'[30] 'கொன்றை நன்பொன்'[31] 'பொன்பேர் கொன்றை'[32] எனப் புலவர் அழகுறக் கூறியுள்ளனர்.

கொன்றை நெருப்பென மலரும் என்பது, 'நாறிணர்க் கொன்றை வெயில் ஏர்ப'[33] என்ற கூற்றால் தெரிகிறது.

கொன்றையின் பேரரும்புகள் தலைவியின் மாலையைப் போன்றும் பொன்னால் செய்யப்பட்ட கிண்கிணிகளைப் போன்றும் தோன்றும். இதனை,

'தலைவேயா பொலஞ்செய் கிண்கிணிக்
காசி அன்ன போதின் கொன்றை'[34]

என வரும் அடிகளால் காண்கிறோம்.

கொன்றை மலரின் இதழ்கள் பொன் தகடு போல ஒளி விடும் என்பது,

'... ... ... கொன்றை
அடர்பொன் என்ன சுடரிதழ் பகரும்'[35]

என்பதால் புலப்படும்.

15-16. ஐங். 148: 3-5; 233: 2-4.
17. நற். 221: 4.
18. ஐங். 66: 1, 4.
19. ஐங். 436: 2-3.
20. கலி. 102: 5; 103: 1; ஐந். எழு. 18: 2.
21. அகம். 364: 5.
22. முல்லை. 94.
23. நற். 221: 3.
24. நற். 242: 3; ஐங். 420: 1; 432: 2.
25. குறு. 21: 2-3.
26. ஐங். 430: 1-2.
27. ஐங். 432: 2.
28. ஐங். 435: 3.
29. ஐங். 436: 2-3.
30. அகம். 364: 4-5.
31. முல்லை. 94.
32. [illegible]
33. [illegible]

கொன்றையின் கிளைதோறும் தொங்குகின்ற பூங்கொத்துகள் பொற்காசினைத் தொடுத்திட்டாற்போலவும், சுடர் விடும் பொன் அணிகலன்களைத் தொடுத்திட்டாற் போலவும் விளங்கும் காட்சியினை,

'பொன்தொடர்ந் தன்ன தகைய நன்மலர்க்
கொன்றை ஒள்ளிணர் கோடுதொறும் தூங்க'[36]

'அம்பொன் அவிரிழை [illegible]
நீடிணர்க் கொன்றை கவின்பெறக் காடுடன்'[37]

என வரும் பாடற்பகுதிகள் புலப்படுத்துகின்றன.

கவலைக் கிழங்கைத் தோண்டுவதால் உண்டான அகன்ற சிறு குழியில், கொன்றையின் ஒள்ளிய மலர்கள் நிரப்பப்பெற்றுச் செல்வர்களின் பொன் வைக்கும் பேழையின் மூடியைத் திறந்தாற்போலத் தோன்றும் என்பது,

'கவலை கெண்டிய அகல்வாய்ச் சிறுகுழி
கொன்றை ஒள்வீ தாஅய்ச் செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன'[38]

என்னும் அடிகளால் நன்கு புலனாகும்.

கொன்றை மலர்கள், காயா, குருந்தம் என்பவற்றின் மலர்களோடு பூத்துத் திகழும் காட்சி,

'காயாம் குருந்தக் கொன்றை'[39]

எனவும்,

'.... .... கொன்றை
குருந்தோ டலமரும்'[40]

எனவும் வரும் பாடற்பகுதிகளால் வெளிப்படும். பிடவம், கோடல் என்னும் மலர்களுடன் இணைத்துப் பேசும் சிறப்புடையது என்பது, 'பிடவுங் கொன்றையுங் கோடலும்'[41] என வரும் அடியால் தெரிகிறது.

கொன்றை மாலை போலப் பொலியும் காட்சி, 'கொன்றைக் கோதை',[42] 'கோதை. கொன்றை'[43] என வரும் தொடர்களால் புலனாகும். அழகுமிக்க பசந்த கற்றையையும் கொன்றை விளங்கும் என்பது,

---

36. நற். 221: 3-4.
37. அகம். 364: 4-5.
38. குறுந். 233: 1-3.
39. நற். 371: 1.
40. குறுந். 148: 3-4.
41. நற். 99: 9.
42. ஐங். 462: 2.
43. ஐங். 497: 1.

'மாலை மூழ்ந்தவன் வந்தோர் நலவே'[44]

''கொன்றைப் பூவின் பசந்த உண்கண்'[45]

என வரும் அடிகளால் புலப்படும்.

கொன்றையின் புதிய பூக்கள், பொன்னால் செய்த தலையணிகலன் கோர்த்துக் கட்டிய மகளிர் கூந்தலைப் போலத் தோன்றும் என்பதை,

'பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பின் தோன்றும் புதுப்பூங் கொன்றை'[46]

என வரும் அடிகளால் வெளிப்படும். கொன்றை மரம் பொன் அணிகலன் அணிந்த மகளிர் போன்று விளங்குவதை,

'இழையணி மகளிரின் ... சுடரின் கொன்றை'[47]

என நற்றிணைப் பாடற்பகுதி சிறப்பிக்கின்றது.

கொன்றையின் மலர் பொருந்திய காய்கள் மகளிர் குழல்போல விளங்கும். இதனை,

'குனிர்கொய்க் கொன்றைக் குழற்பழ ஊழ்த்தன'[48]

என வரும் அடியால் அறிகிறோம். இக்கொன்றைக்காய் யானை முகத்தில் போர் முகபடாம் போல விளங்குவதை,

'விழவின் யானைப் புகர்முகத்து அணிந்த
பொன்செய் ஓடைப் புனைநலம் கடுப்பப்
புழற்காய்க் கொன்றை'[49]

என வரும் நற்றிணைப் பாடற்பகுதியால் அறிகிறோம்.

குருந்தம்

குருந்த மரம் ஒன்பது இடங்களில் குறிக்கப்படுகிறது.[50] இதனைச் செடி நூலார் Atlantia monophylla என்று அழைப்பர்.[51]

---

44. ஐங். 458:4.
45. ஐங். 500:1.
46. குறு. 21:2-3.
47. நற். 302:1-2.
48. ஐங். 458:1.
49. நற். 296:2-4.
50. நற். 321:9; குறு. 148:4 – (2)
ஐங். 430:3; 439:2 – (2)
கலி. 103:3; 111:7; 113:25 – (3)
அகம். 194:14; 304:10 – (2)
51. Samy, P.L., Journal of Tamil Studies, p.103.

குருந்த மரம் மாயோனின் சிறப்புக்குரிய மரமாய்த் திகழ்வது. யமுனை ஆற்றின் நீர்த்துறையில் ஆயர் மகளிர் தழையாடையின்றி அலைந்தகொண்டிருக்க, குருந்த மரக் கிளைகள் வளைந்திட மிதித்துத் தந்தருளியவன் எனத் திருமால் சிறப்பிக்கப்பட்டுள்ளதை,

'... ... ... வடாஅது
வண்புனல் தொழுநை வார்மணல் அகன்துறை
அண்டர் மகளிர் தண்தழை உடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல் போல'[52]

என வரும் பாடற்பகுதியால் அறிகிறோம். 'குருந்தொசித்த மாயவன்'[53] என்ற தொடர் ஈண்டு நினைவு கூர்தற்குரியது.

குருந்த மரம் மலையிலும் காட்டிலும் வளரும் என்பது,

'குருந்தவிழ் குறும்பொறை'[54]

எனவும்,

'..... குருந்தங் கோடலும் ....
கல்லவுங் கடத்தவுங் .....'[55]

எனவும் வரும் அடிகளால் புலப்படும்.

குருந்த மரம் மென்மையற்ற வலிய கிளைகளையும் வளைந்த கிளைகளையும் உடையதென்பது,

'வல்லிணர்க் குருந்தின் வாங்குசினை'[56]

என வரும் அகநானூற்றடியால் தெரியவருகிறது. இது கரிய பெரிய மரமுடையது என்பது, 'மாயிருங் குருந்த'[57] என்ற அடியால் தெரிகிறது.

குருந்த மலர் நறுமணமுடையதென்பது, 'நாறுசினை'[58] எனக் கூறுதலால் புலனாகிறது. இது வெள்ளிய கொத்தான மலரும் என்பது 'குருந்தின் குவியிணர்'[59] என்ற தொடரால் புலனாகும்.

குருந்தமும் கொன்றையும் ஒருசேர மலரும். இதனை,

'... ... ... கொன்றை
குருந்தொ டலம்வரும் ....'[60]

'கொன்றையொடு மலர்ந்த குருந்தே'[61]

என வரும் அடிகளால் அறிகிறோம்.

---

52. அகம். 59: 3-6.
53. சிலப். 17: 21: 3.
54. நற். 321: 9.
55. கலி. 103: 3-4.
56. அகம். 194: 14.
57. குறிஞ்சிப். 95.
58. அகம். 85: 12.
59. கார். 15: 2.
60. ஐங். 145: 3-4.
61. ஐங். 436: 3.

கோவலர் தோன்றி மலர்ந்த கண்ணியைச் சூடினர்; தோன்றியொடு முல்லை மலரையும் சேர்த்த அணிந்தனர். இவற்றை,

'தோன்றிக் கண்ணிக் கோவலர்'[62]

என்றும்,

'தோன்றியும் கண்ணி பொறைய'[63]

என்றும்,

'முல்லை தோன்றியொடு [illegible]'[64]

என்றும் வரும் அடிகள் புலப்படுத்துகின்றன.

கொன்றை மலர் தோன்ற [illegible] மலர்ந்தவர். [illegible], [illegible] [illegible] [illegible] போல [illegible] தோன்றுவ [illegible] இதனால். [illegible] [illegible] [illegible] [illegible] தோன்றும். [illegible] காட்சியை,

'கொன்றை [illegible] [illegible]'[65]

என்றும்,

'... ... ... தோகை
காமர் [illegible] பரப்பி ...
.... தோன்றி [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]'[66]

என்றும்,

'[illegible] [illegible] [illegible] [illegible]
.... [illegible] [illegible]
[illegible] தோன்றி [illegible] [illegible]'[67]

என்றும் வரும் பாடற்பகுதிகள் காட்டுகின்றன.

<u>காயா</u>

காயா, முல்லைப் பாடல்கள் 14 இடங்களில் குறிக்கப்படுகின்றது.[68] இதனைச் செடி என்றும் Memecylon edule என்றும் கூறுவர்.[69] இதன் [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible], '[illegible] [illegible]' [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] '[illegible] [illegible] [illegible]' என [illegible].[70]

---

62. ஐங்.439:1. 63. கலி.111:7. 64. கலி.113:25.
65. அகம்.194:13. 66. அகம்.194:11-12; 14-15. 67. அகம்.304:8
68. நற்.242:4; 371:1 - (2); குறு.183:5 - (1); ஐங்.412:1; 420:2 - (2); கலி.101:5; 103:1; 52; 108:10; 43 - (5) அகம்.14:2; 304:14; 374:13 - (3); முல்லை.93 - (1).
69. [illegible], P.L., Journal of Tamil Studies, p.102.
70. புறம்.8; 56; 59.

காயா மலரின் [illegible] என்பது, 'காயாஞ் செம்மல்'[71] என வரும் தொடரால் தெரிகிறது. இம் மலர் நிறம் கொண்டதென்பது, '[illegible] நீல காயா'[72] எனக் கூறுதலால் புலனாம்.

காயா செறிந்த இலைகளையும் மென்மையான பசுமையிலைகளையும் [illegible] பெற்றுத் திகழ்வதை 'செறியிலைக் காயா'[73] 'பசுமைக் காயா'[74] 'மென்மைக் காயா'[75] 'காயா ... [illegible] செம்மல்'[76] எனக் கூறுவதிலிருந்து தெரிகிறது. காயாவின் மலர்கள் கொத்தாக மலரும் என்பது, 'பல்லிணர்க் காயா'[77] என வரும் தொடரால் தெரிகிறது.

காயா மலர்கள் குலை, பொதி, மென்மை வாய்ந்த கிளைகளில் பூத்திருக்கும் என்பது,

> 'பன்மலர்க் காயாங் குறுஞ்சினை கஞல'[78]
> 'காயாம் பூங்கொம்பு பெருஞ்சினை'[79]
> 'காயா மென்சினை'[80]

எனக் கூறுவதால் வெளிப்படும்.

காயா மலரும் வீழ்ந்தே கொண்டிருக்கும் மலர் என்பது, ''காயாஞ் செம்மல் தாஅய்'[81] என வரும் அடியால் தெரிகிறது.

காயா மலர் நீலமணியின் நிறத்தையுடையதென்பது, பல பாடல்களில் காணப்படுகிறது. அவற்றுள், 'மணியை ... காயா'[82], 'காயா ... மணி'[83] 'மணி ... போல ... காயா'[84] 'மணிமருள் பூவின காயா'[85] 'மணிநிறப் பூவை'[86] என வருவன குறிப்பிடத்தக்கன. பொருநர் ஆற்றுப்படை 'மணிக்காயா' எனக் கூறுவது [illegible] அறியத்தக்கது. (201)

காயா அஞ்சனம் போன்ற நிறத்தொடு மலரும் என்பது, 'காயா அஞ்சன மலர'[87] என்ற அடியால் புலப்படும்.

காயாவின் நிறத்தையும் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] காட்டி, நிலவுலகு பசுமை [illegible] [illegible] [illegible] போன்ற [illegible] [illegible]

---

71. நற். 371:1.
72. அகம். 133:8.
73. முல்லை. 93.
74. நற். 242:4.
75. கலி. 103:1.
76. அகம். 374:13-1[illegible]
77. [illegible] 70.
78. நற். 242:4.
79. [illegible] 183:5.
80. அகம். 108:14.
81. நற். 371:1.
82. நற். 242:3-4; ஐங். 420:1-2.
83. அகம். 14:2-4.
84. அகம். 304:13-14; 374:13.
85. கலி. 101:5.
86. அகம். 134:3.
87. முல்லை. 93.

புலவர் ஒரு சொல்லோவியமாகத் தீட்டியுள்ளனர்,

'காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் வரிப்பப் பவளமொடு
மணிமிடைந் தன்ன குன்றம்'[88]

'மணிமிடை பவளம் போல அணிமிகக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப'[89]

'ஏறுமோட்டு மூதாய் தேரை தேய
மணிமண்டு பவளம் போலக் காயா
அணிமிகு செம்மல் ஒளிப்பன மறைய'[90]

நீல நிறக்காயாவின் மலர்களிடையே சிவந்த புறத்தையுடைய மூதாயும் நல்ல முல்லைப்பூக்களும் பரவியிருக்கும் காட்சி ஓவிய வல்லான் தீட்டிய ஓவியம் போன்ற முல்லை நிலத்தே விளங்குவதை,

'மணிமருள் பூவை அணிமலர் இடையிடைச்
செம்புற மூதாய் பரத்தலின் நன்பல
முல்லை வீகழல் தாஅய் வல்லோன்
செய்கை அன்ன செந்நிலப் புறவின்'[91]

என வரும் பாட்டுப்பகுதி வெளிப்படுத்தும்.

காயா மரத்தின் பெருஞ்சினை மெல்லிய மயிலின் கழுத்தைப்போலத் தோன்றுவதை

'புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயில் எருத்தில் தோன்றும்'[92]

என வரும் அடிகளால் அறிவோம்.

காதலர் காயா நிறைந்த தண்பொழிலிடத்தே சந்திப்பர் என்பது,

'தளிக்காயாந் தண்பொழில் எம்மொடு வைகி
பலிபடச்செல்லாய்நம் ஊர்க்கு'[93]

என்ற கூற்றால் வெளிப்படும்.

---

88. அகம். 14: 2-4. 89. அகம். 304: 13-15.
90. அகம். 374: 12-14. 91. அகம். 134: 3-6.
92. நற். 183: 5-6; ஒப்பு சிறுபாண். 165.
93. கலி. 108: 43-44.

புதல்

புதல் முல்லைத்திணைப் பாடல்களுள் 25 இடங்களில் குறிக்கப்படுகிறது.[94] புதல், 'தண்புதல்'[95] 'பைம்புதல்'[96] 'பசும்புதல்'[97] 'காமர் புதல்'[98] 'இரும்புதல்'[99] 'செம்புதல்'[100] என்று சிறப்பிக்கப்பட்டுள்ளன. புதல் என்பதனைப் படர், தூறு, இறும்பு என்று பலவாறு கூறுவர். சிறுசெடி கொடிகளும் புல் பூண்டுகளும் நெருங்கி வளர்ந்துள்ள பகுதியே புதல் எனப்படும். இதனையே இந்நாளில் 'புதர்' என வழங்குவர். புதல் மறைவிடமாக மறைவுடையது என்பதை மறைக் காட்டி, 'கொண்டல் மலர்ப் புதல்' (508) என்று கூறுகிறது. புதல், கார் காலத்தே பசுமையுடனும் நீலமணி நிறம் போன்றும் விளங்கும் என்பது, 'கார்த்தலை மணந்த பைம்புதல்'[101] 'மணிநிற இரும்புதல்'[102] என வரும் அடிகளால் தெரிகிறது.

புதல்மேல் நறுமணம் கொண்ட பல பூக்கள் பூத்துத் திகழும் அழகுக் காட்சியைப் புலவர் பலவாறு சிறப்பித்துள்ளனர்.[103]

அதிரல், அவரை, ஈங்கை, கொன்றை, தளவம், தோன்றி, பகன்றை, பீர்க்கு, முல்லை என்னும் கொடிகள் புதல்மேல் படர்ந்து மலரும் காட்சி தனிமையுடையது என்பது, ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அவற்றுள், தோன்றிப்பூக்கள் விளக்குப் போன்று மலரும் காட்சியை,

'தோன்றி தோன்றுபு புதல் விளக்குறுத்த'[104]

எனவும்,

பொன்போன்று பீர்க்கு மலரும் காட்சியை,

'... ... ... பொன்னென
இவர்கொடிப் பீர இரும்புதல் மலரும்'[105]

எனவும்,

பஞ்சுபோன்ற ஈங்கையின் காட்சியை,

'துய்த்தலைப் பூவின் புதலிவர் ஈங்கை'[106]

எனவும்,

---

94. நற். 69:6; 221:2; 242:2; 248:3 (4); குறு. 98:4; 110:3; 240:1; 242:3; 319:2; 382:2 (6); ஐங். 416:2; 438:2; 456:3; 463:1; 464:2; 498:1 (6); பரி. 20:102 (1); அகம். 34:1; 104:7; 154:4; 294:6; 364:6; 394:15 (6); முல்லை. 25 (1); நெடுநல். 14 (1).
95. நற். 221:2.
96. குறு. 98:4; ஐங். 438:2; 456:3.
97. குறு. 240:1; ஐங். 464:2.
98. ஐங். 416:3.
99. அகம். 394:15.
100. அகம். 34:1; 154:4.
101. அகம். 133:5.
102. நற். 302:4; அகம். 202:8.
103. ஐங். 438:2; 463:1; பரி. 20:102.
104. நற். 69:6.
105. ஐங். 464:1-2.
106. அகம். 294:6.

ஈங்கைக் கொடி பின்னிப் படர்ந்த புதலின்மேல் வெண்மையான பகன்றை பூக்கும் காட்சியை,

'பகன்மதி உருவின் பகன்றை மாமலர்
வெண்கொடி ஈங்கைப் பைம்புதல் அணியும்'[107]

எனவும்,

கிளிமூக்குப் போல் அவரை மலரும் இயல் காட்சியை,

'பனிப்புதல் இவர்ந்த பைங்கொடி அவரைக்
கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு பன்மலர்'[108]

எனவும்,

முசுண்டை பீரமொடு மலரும் காட்சியை,

'முசுண்டை ... பீரமொடு புதற்புதல் மலர'[109]

எனவும்,

மயிற்பீலியின் கண்களைப் போலக் கருவிளை மலர்ந்த விளக்கக் காட்சியை,

'... ... ... புதல
பீலி ஒண்பொறிக் கருவிளை'[110]

எனவும்,

சிறுவீ முல்லை புதல் அணிபெற மலரும் காட்சியை,

'சிறுவீ முல்லை ... ...
தண்புதல் அணிபெற மலர'[111]

எனவும் கூறும் பகுதிகள் சான்றாக இடம்பெற்றுள்ளனவாகும்.

ஒரு மலர்க்கொடியில் பன்மலர்கள் பூத்தொத்துப் பூத்துத் தோன்றும் காட்சியோடு இரு மலர்க்கொடிகளின் மலர்களும் திகழும் காட்சியைப் புலவர் கண்டு களித்துள்ளனர். அவற்றுள், முல்லையும் தளவமும் ஒருசேரப் பூத்துக் குலுங்குவதை,

'.... பைங்கொடி முல்லை .... பூத்தமிசைப்
பூமலி தளவமொடு தேங்கமழ்பு கஞல'[112]

என்றும்,

செந்நிற காயாவும் பொன்னிறப் பீரமும் ஒருசேரத் திகழ்வதை,

'காயாப் பொன்போல் பீரமொடு புதற்புதல் மலர'[113]

என்றும்,

---

107. ஐங். 456: 2-3.   108. குறு. 240: 1-2.   109. நெடுநல். 13-1
110. குறு. 110: 3-4.   111. நற். 248: 1-3.   112. குறு. 382: 1-
113. நெடுநல். 13-14.

நீலக்குவளையும் ஒன்றிய தோற்றமும் மலரும் காட்சியை,

'மணிக் கடப்ப மாநிறக் குவளை
ஒன்றுபு தொக்கியொரு தண்புதல் அவிழ'[114]

என்றும் புலப்படுத்துகின்றார்.

முல்லை மலர்ந்த புதலின் தோற்றம், புள்ளியையும் வரியையும் உடைய யானையின் புகர் முகம்போல அழகுபடத் தோன்றும் என்ற கருத்து இதை விளக்கிக்காட்டி,

'சிறுவீ முல்லைத் தேங்கமழ் பசுவீ
பொறிவரி நன்மான் புகர்முகம் கடுப்பத்
தண்புதல் அணிபெற ... ...'[115]

என வரும் பாடலால் விளக்கப்படுகிறது.

அரும்பு புதரிடையே தோன்ற வண்டுகள் ஒலிக்கும் என்பதை,

'.... .... நாதாரித்து
வண்டுகளும் பரந்தன காமர் புதலின்'[116]

என்றும்,

கானப் புதரிடையே மான் பிணையைத் தழுவி மறைந்து ஒடுங்கும் காட்சியை,

'மானேறு மடப்பிணை தழீஇ மருள்கூர்ந்து
கான நண்ணிய புதல்மறைந் தொடுங்க'[117]

என்றும் கூறும் பகுதிகள் அழகுற எடுத்துரைக்கின்றன.

குட்டையான முயல்கள் மன்றத்திலுள்ள புதரில் ஒளிந்துகொள்ளும் என்பது,

'... ...., குறுமுயல்
மன்ற இரும்புதல் ஒளிக்கும்'[118]

என்ற அடிகளால் புலப்படுகிறது.

இவ்வாறு பிற விலங்குகளும் புதரில் வாழும் என்ற செய்தியை 'மாபுதல் சேர'[119] என்ற தொடர் தெரிவிக்கிறது.

இனி, முல்லைத்திணைப் பாடல்களில் காணும் பிற மரங்களைப் பார்ப்போம்:

---

114. நற். 221: 1-2.
115. நற். 248: 1-3.
116. ஐங். 416: 2-3.
117. குறு. 319: 1-2.
118. அகம். 394: 14-15.
119. ஐங். 496: 1.

அத்தி

அத்தி, அரசு, ஆல் என்னும் தாவரங்களில் ஒற்றுமையான பண்புகள் காணப் படுகின்றன. இவற்றில் வெண்மையான பால் உண்டு. இலைகள் தடியானவை. பூக்கள் மிகவும் நுண்மையானவை; எண்ணற்றவை. அத்தி இந்திய நாட்டு அத்தி (Ficus Glomerata) 30-40 அடி வளரக்கூடியது.[120] அத்தி இரண்டு சங்கப்பாடல்களில் குறிக்கப்படுகிறது.[121] இது அதவம் என்றும் வழங்கும். இஃது ஆற்றங்கரையில் வளர்வது; வெண்மையான கிளைகளை உடையது. நண்டுகள் வாழும் சிறப்புடையது; அத்திப்பழம் இனிமையானது. குரங்குக் குட்டியின் சிவந்த முகம், அத்திப்பழம் போன்றது. இச் சிறப்புகளை,

> 'ஆற்றயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து
> எழுகுளிறு மிதித்த ஒரு பழம்'[122]
>
> 'அதவத் தீங்கனி அன்ன செம்முகத்
> துய்த்தலை மந்தி'[123]

என வரும் அடிகளில் காண்கிறோம்.

'அத்தி' என்ற பெயர் சேர சோழ நாடுகளில் சிறந்த படைத்தலைவர்க்கும் சிறந்த நடிகர்க்கும் வழங்கியமையை அறிகிறோம்.[124]

ஆல்

இதனை மரவகை (Ficus bengalensis) என்பர்.[125] விழுதுகள் மிகுதியாக உண்டாகி, படர்ந்து நீண்டு போகும் கிளையைத் தாங்கி நிற்கும். இது போன்ற தாவரங்கள் (Hemi-epiphytes) எனப்படும். இம்மரம் நிக்ரோதம், கான் மரம், தொன்மரம், பழமரம், பாலி, கோளி, பூதம், சிவம், பப்பதம், வடம் எனப் பல பெயர்களைப் பெறும்.

ஆல், இரண்டு சங்கப் பாடல்களில் குறிக்கப்படுகிறது.[126] இது பூவாது காய்க்கும் மரமாகும். இக்காரணம் பற்றியே ஆலமரம் 'கோளி ஆலம்'[127] என்ற வழக்கினைக் காண்கிறோம். இது தொன்மைச் சிறப்புடையதாய், 'மக்கள் கூடும்

---

120. கலைக்களஞ்சியம் 1, பக்.75.
121. அகம். 44:7; குறுந். 24:3.
122. குறு. 24:3-4.
123. நற். 95:3-4.
124. அகம். 44:7; 376:10; 396:13.
125. கலைக்களஞ்சியம் 1, பக். 4
126. கலி. 101:13; 106:20.
127. மலைபடு. 268; புறம். 254:7.

பொதுவிடமாய்த் திகழ்வது என்பதை 'தொன்மூ தாலத்து அரும்பணைப் பொதியில்'[128] எனக் கூறுமாற்றால் அறிகிறோம். இது பருத்த அடியை உடையது; பல விழுதுகளைக் கொண்டது; பெரிய கிளைகளை உடையது; புல்லிப்பானையைப் போன்ற சிறிய பொருந்திய பழத்தை உடையது. இவற்றை 'ஆலமரம்'[129] 'பல்வீழ் ஆலம்'[130] 'ஆலத்துத் தடவுச்சினைப் பல்பழம்'[131] 'புறக்குடத் தன்ன கவிழ் வாலும்'[132] என வரும் அடிகளில் காண்கிறோம். இது பெருநிழல் கொண்டது; இளைப்பாறுதற்குரியது. இதன் காய்களைச் சுற்றமாய்த் தங்கும். இதில் பறவைகள் இசைக்குரியவை போல ஒலிகளை எழுப்பும். இச்சிறப்புகளை, 'கோளியாலத்துக் கொழு நிழல்'[133] 'ஆல நீழல் அசைவு நீக்கி'[134] 'காய்மா ... பெருங்கிளை, பழிச்சி ஆலத் தலைப்புள்ளை ஏறி'[135] 'கோடுபல முரஞ்சிய கோளியாலத்துக் கடியத் தன்ன பறவைப் புள்ளி'[136] என வரும் பாடலடிகள் கூறுகின்றன.

ஆலமரம், கடவுள் உறையும் இடமாகக் கருதி வழிபாடு செய்யும் மரபு உடையது என்பது, 'கடவுள் ஆலத்து'[137] 'ஆலமும் ... மறையுடைப் பராரை'[138] என வரும் அடிகளால் தெரிகிறது. சிவன், திருமால், முருகன் என்பவர் ஆலமரத்தைக் கடவுளாக 'ஆலமர் செல்வன்'[139] 'ஆலமர் கடவுள்'[140] 'ஆல்கெழு கடவுட் புதல்வன்'[141] எனக் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இராமன் இலங்கைக்குப் படையெடுத்தல் பற்றிய மறைகளை ஆராய்கையில் பறவைகள் ஆலமரத்தே ஒலிகளை எழுப்ப, அவற்றை இராமன் அடக்கிய என்பதை அகநானூற்றுப் பாடலொன்றால் அறிகிறோம்.[142]

பருந்தின் காவற்றந் தப்பிய பேடைகள் ஆலமரக் கிளைகளில் தொங்குவ, ஆலமரத்தினின்றும் உறையும் தெய்வத்திற்கு இட்ட மாலைகளைப் பிடித்து அறுத்து எடுத்துத் தொங்குவதைப் போன்றது என்பதை கலிப் பாடலொன்றால் அறிகிறோம்.[143] மேலும் ஆலமரத்தின் பெயரால் 'ஆலங்கானம்' 'திருவாலங்காடு' என்ற வழங்கும் தொன் மரபையும் காண்கிறோம்.

---

128. அகம். 251:6; குறு. 15:2.
129. புறம். 58:2.
130. அகம். 70:16.
131. புறம். 199:1.
132. நற். 303:1.
133. புறம். 50:2.
134. நற். 76:3.
135. அகம். 319:1-2.
136. மலைபடு. 268-69.
137. நற். 343:4.
138. கலி. 101:13-14.
139. சிறுபாண். 97.
140. புறம். 198:9.
141. முரு. 256.
142. அகம். 70:15-17.
143. கலி. 106:20-20.

கடம்பு

இது முல்லைப் பாடலொன்றில் குறிக்கப்பட்டுள்ளது.[144] வெண்கடம்பு செங்கடம்பு என்றும் பிரிவுடையது. பருத்த அடியும் திரளையும் கொண்டது என்பது 'பராரை மராஅத்த'[145] 'திரி ... பிணர்க்கடம்பின்'[146] என வரும் அடிகளால் புலனாம். 'கோதை போலப் பூக்கும் என்பது 'கடம்பின் உலையார் கோதை'[147] 'உலைந்த கோதை'[148] என வரும் அடிகளால் வெளிப்படும். வெண்மை நறுமணங்களை உடையது என்பதை, 'வெண்போழ்க் கடம்பொடு'[149] 'வண்டுக் கடம்பின் நறுமலர்'[150] என வரும் அடிகளிற் காண்கிறோம். கடவுட்கே காவல் மரமாய் விளங்கும் சிறப்பினை, 'மறுநீர் ... கடம்பு'[151] 'கடம் ஓங்கு கடம்பு'[152] என்ற தொடர்களால் அறிகிறோம். கடம்ப மரத்தில் கொடியினைக் கட்டுவர். கயிற்றினைக் கட்டுவர். இதனை, 'கடம்புகொடி யாத்துக் கண்ணி சூட்டி'[153] என்ற அடியால் அறிகிறோம். கடம்பு முருகக் கடவுளுக்கு உரியது என்பது, 'கடம்பின் ...நெடுவேள்'[154] 'கடம்பமர் நெடுவேள்'[155] என்ற தொடர்களால் புலனாம். கடம்பமரத்திலும் ஆலமரத்திலும் தெய்வமேறிய நீட்ட மாலைகளை விசி எடுத்தெறிந்தும் காட்சியானது பருந்தின் வாய்ப்பட்டுத் தப்பிய பாம்பின் தொங்கல்போல் உள்ளமை, 'ஆலும் கடம்பும் அணிமார் விலக்கிட்ட, மாலை போல் தூங்கும் பிணை'[156] என வரும் அடிகளால் தெரிகிறது. கடம்பு கார் காலத்தே நறுமணம் பரப்பும் என்பது, 'கார்நறுங் கடம்பின்'[157] என்ற தொடரால் புலனாம்.

குரா

இது முல்லைப்பாடலொன்றில் குறிக்கப்படுகிறது.[158] இது குரவமென்றும் வழங்கும்; பாவை நிகர்த்தப்படுவது; 'கொம்பியா எழுபாட்டிக்கா' என்றும் வகையைச் சாற்றுகிறது.[159]

இது குறுமையானது; நீட்ட கிளைகளை உடையது; நறுமணப் பூக்களை உடையது. இச்சிறப்புகள், 'குறுங்கால் குரவின் ... நறுவீ'[160] 'குரவ நறுவீ'[161] என வரும் அடிகளால் புலனாம். முல்லையில் அரும்பு தோன்றும் என்பது, 'முல்லை .. குரவு அரும்பினவே'[162] என வரும் அடியால் தெரிகிறது. இது குறிய காம்பும்

---

144. கலி. 106:28.
145. முரு. 10.
146. குறிஞ்சி. 176.
147. சிறுபாண். 69.
148. நற். 326:1.
149. அகம். 98:16.
150. பெரும்பாண். 203.
151. அகம். 127:4.
152. அகம். 347:4.
153. அகம். 382:3.
154. மதுரைக். 613-614.
155. பெரும்பாண். 75.
158. நற். 266:2.
159. கலைக்களஞ்சியம் 4, பக். 62-63
160. நற். 56:1.
161. ஐங். 369:4;
162. நற். 224:2-

குவிந்த வெண்மை பூக்களும் கொண்டது என்பது, 'செம்மொத் குரவின் குவியிணர் வாங்கி'[163] என்ற அடியால் வெளிப்படும். அரும்புகள் அரவின் பற்களைப் போன்றவை என்பதை, 'அரவு எயிற்று அன்ன அரும்பு முதிர் குரவின்'[164] என்ற அடியால் அறிகிறோம். மலரும் அரும்பும் கமழ்ந்து விளங்கும். இதனை, 'பல்பூ படரிய பசுந்தளிர் குரவம்'[165] என்ற அடியால் அறிகிறோம். குரவின் பூவைப் பாவை என்ற வழங்குவது மரபு. இதனை, 'நறும்பூங் குரவம் பயந்த, செய்யாப் பாவை'[166] என்ற அடி புலப்படுத்தும். குரவ மலருடன் மரவ மலர் இணைத்துப் பேசும் சிறப்புடையது என்பது, 'குரவ மலர மரவம் பூப்ப'[167] என்ற அடியால் தெரிகிறது. கொத்தாய் மலரும் தன்மையுடையது என்பது, 'பல்லிணர்க் குரவம்'[168] என்ற தொடரால் புலனாகும். இது நெடியதாய்ச் சிறப்புடையது என்பதை, 'குரவின் குவியிணர் வாங்கி, உருள் நெடு நெடுமகள் கூட'[169] என வரும் அடிகளால் அறிகிறோம்.

ஓமை

இது பாலை நிலத்திற்குரியது; முல்லைப் பாட்டொன்றில் குறிக்கப்படுகிறது.[170] இஃது வைரமாய், உயர்ந்த இமயமலையில் வளரும்; காய்ந்த பட்டையை உடையது. இவற்றை, 'ஓமையோங்கு உயர்வரை இமயத்து உச்சி'[171] 'செங்குழை, அலந்தலை ஓமையத்த'[172] என வரும் அடிகளால் அறிகிறோம். வெண்மை நிறமுடையதாய்ப் பரந்த காடாய் விளங்கும் என்பது, 'வெள்ளோமை வியன்காட்டு'[173] என்ற அடியால் தெரிகிறது. இறந்தவர் உடலைத் தின்னும் விருப்பால் பருந்து இம்மரத்தே வீற்றிருக்கும் என்றும் வாடிய மரத்தில் ஒளிந்து வாழும் என்றும் கூறுவதை, 'ஓமைத்தலை அஞ்சுவருப் பருந்து'[174] 'அலந்தலை ஓமையத்து இருந்த ஊமண்'[175] என வரும் அடிகளிற் காண்கிறோம். ஓமை மரத்தே சிலந்தி வலையைப் பின்னும் என்பது, 'அலந்தலை ஓமையத்து வலந்த சிலம்பி'[176] என வரும் அடியால் தெரிகிறது.

---

163. நற். 266:2.
164. அகம். 237:3.
165. குறு. 341:1.
166. ஐங். 344:2-3.
167. ஐங். 357:1.
168. குறிஞ்சிப். 69.
169. நற். 266:2-3.
170. அகம். 394:1.
171. நற். 369:7.
172. அகம். 107:10-11.
173. அகம். 145:5.
174. குறு. 285:6-7.
175. நற். 394:1-2.
176. அகம். 111:5.

<u>நொச்சி</u>

இது இருபது பாடல்களில் குறிக்கப்படுகிறது.[177] இதனை இல்லத்தின்கண் வளர்ப்பர். இதனை, 'மனைநொச்சி நிழல்'[178] 'மனைவளர் நொச்சி'[179] 'நொச்சி மனை'[180] 'மனைமர நொச்சி'[181] 'மனையுறை நொச்சி'[182] எனக் கூறுமாற்றால் அறியலாம். இது குறுமையானது; கரிய கொம்புடையது; மென்மையான கிளைகளை உடையது. இதனை, 'நாறுவீநொச்சி ... மாக்கிளை'[183] 'கவை நொச்சி'[184] 'நொச்சி மெல்கிளை'[185] என வரும் தொடரில் காணலாம். இது மயில் அடிபோன்ற இலையை உடையது. இதனை, 'மயிலடி இலைய மாக்குரல் நொச்சி'[186] 'மயிலடி அன்ன மாக்குரல் நொச்சி'[187] என வரும் தொடர்கள் குறிக்கும். இது நீலப் பூங்கொத்துக்களை உடையது என்பது, 'மாக்குரல் நொச்சி'[188] 'கருங்குரல் நொச்சி'[189] 'மணிமருண்டன்ன மாக்குரல் நொச்சி'[190] 'நொச்சி மா அரும்பு'[191] 'மணியின் நொச்சி'[192] என வரும் தொடர்கள் தெரிவிக்கும். நொச்சி வேலியாக வருவதை 'நொச்சி ... வேலியாகு புதல்'[193] 'நொச்சி வேலி வயிற்றா'[194] 'வேலியாகு மலிர்ந்த மாக்குரல் நொச்சி'[195] எனக் கூறுமாற்றால் அறியலாம்.

நொச்சியை மாலையாகச் சூடுவர் என்பது, 'நொச்சிக்கோதையர் சூடு'[196] என வரும் தொடர்கள் தெரிவிக்கும்.

<u>வாழை</u>

இது இருபது பாடல்களில் குறிக்கப்படுகிறது.[197] வாழை 'பெருவாழை'[198] 'சோலை வாழை'[199] 'பூங்குலை வாழை'[200] 'செங்குலை வாழை'[201] எனப் பலவா

---

177. நற்.115:6.
178. பெரும்.185.
179. குறுந்.367:4.
180. அகம்.203:17-18.
181. நற். 246:3.
182. அகம்.21:1.
183. அகம்.23:11-12.
184. அகம்.275:17.
185. அகம்.250:14.
186. நற்.115:5; ஐங்.138:3.
187. நற்.305:2.
188. ஐங்.138:3.
189. புறம்.271:2.
190. புறம்.272:1.
191. நற்.207:1.
192. நற்.164:9.
193. நற்.115:5-6.
194. அகம்.21:1.
195. அகம்.117:1.
196. நற்.200:2; 293:1.
197. ஐங்.460:3.
198. பெரும்.208.
199. மலைபடு.131; நற்.232:2.
200. அகம்.141:20.
201. அகம்.302:1.

வழக்கப்படுவதைக் காண்கிறோம். வாழை மலையில் தனிவளரும் என்பது 'வாழை ஓங்கிய ... சிலம்பில்'[202] 'சிலம்பிற்போகிய செழுங்கோல் வாழை'[203] எனக் கூறுமாற்றால் தெரிகிறது. இது பெரிய அடியை உடையது. கொழுவிய மடலையுடையது. மிருதுவான வளைந்த காய்களை உடையது. இவற்றை, 'வாழை முழுதும்'[204] 'கொழு மடல் வாழை'[205] 'கோழிலை வாழைக் கோள்முதிர் பெருங்குலை'[206] 'வாழைக் கொடுங்காய் குலை தொறூஉக் கனியும்'[207] என வரும் அடிகளில் காண்கிறோம். இது நெருங்கிய இலைகளை உடையது என்பதைத் 'ததைஇலை வாழை'[208] என்ற தொடரால் அறிகிறோம். மகளிர் கூந்தலுக்கு வாழைப்பூவைக் கூறுவர் என்பது, 'வாழை.. மகளிர் ஓதி'[209] 'வாழைப் பூவெனப் பொலிந்த ஓதி'[210] என வரும் அடிகளால் தெரிகிறது.

<u>வெட்சி</u>

இது முல்லைப் பாடலொன்றில் குறிக்கப்படுகிறது.[211] வெட்சியின் சிறப்பை 'வெட்சிக்காலம்' என்ற புறநானூற்றுத் தொடர் கூறுகிறது.[212] இது சிவந்த காலை உடையதாயும் சிறிய பெரிய பூக்களை உடையதாயும் விளங்கும் என்பது 'செக்கால் வெட்சிச் சீறிதழ்'[213] 'வெட்சி மாமலர்'[214] என வரும் அடிகளால் புலனாகும். புள்ளித்தழைகளை உடையது என்பது, 'புள்ளிலை வெட்சி'[215] என வரும் அடியால் தெரிகிறது. 'சிலம்பின் காய் போன்றுபோல மொட்டு முதிர்ந்த தோற்றம் இதற்கு, 'இதழ்வழிச் சிலம்பின் முகைப்புரையும் வெட்சி'[216] என வரும் அடியால் அறிகிறோம். இது பறித்த மலர்களோடு இணைத்துப் பேசப்படும் என்பது, 'பறித்த வெட்சி'[217] எனக் கூறுமாற்றால் தெரிகிறது.

---

202. நற். 227:7.
203. அகம். 302:1.
204. ஐங். 307.
205. நற். 355:3.
206. அகம். 2:1.
207. கலி. 43:24-25.
208. ஐங். 460:3.
209. நற். 225:3-4.
210. சிறுபாண். 21-22.
211. கலி. 103:2.
212. புறம். 202:1.
213. முல். 21.
214. புறம். 100:5.
215. கலி. 103:2.
216. அகம். 133:14.
217. திருமு. 63.

வேம்பு

இது இருபத்தொன்பது பாடல்களில் குறிக்கப்படுகிறது.[218] செடி நூலார் இதை 'Azadirachta indica' என்ற மரவகையைச் சார்ந்தது என்பர். இது 'மன்ற வேம்பு'[219] எனக் குறிக்கப்படுகிறது.

'பொரிந்த பெரிய அடியை உடையதாயும் பெரிய கரிய கிளைகளை உடையதாயும் விளங்கும் என்பது, 'பொரியரை வேம்பின்'[220] 'பராரை வேம்பின் படுசினை'[221] 'பராரை வேம்பின்'[222] 'கவடுசினை'[223] எனக் கூறுமாற்றால் புலனாகும். தளிர்கள் வாளரத்தின் வாய்போன்ற விளிம்பை உடையன. இதனை, 'அரவாய் வேம்பின் அங்குழைத்தெரியல்'[224] என்ற அடியால் அறியலாம். மென்மையான இலைகளை உடையதாய் கொத்தாய் மலரும் என்பது, 'கோடுயர் வேம்பின் கோட்டினை'[225] என்ற அடியால் தெரிகிறது. புல்லிய காம்பும் சிறிய இலையும் உடையது என்பதை, 'புன்காழ்ச் சிறியிலை வேம்பின்'[226] எனக் கூறுதலால் அறியலாம். கரிய காம்பும் ஒள்ளிய பூவும் உடையது என்பது, 'கருங்கால் வேம்பின் ஒண்பூ'[227] என்ற அடியாலும் செழுமையான வெண்பூக்களை உடையது என்பது, 'வேம்பின் நுனைய காய்'[228] என்ற அடியாலும், வேலிற்கு வேப்பந்தழை அணிவர் என்பது, 'வேம்புதலை யாத்த நோன் காழ்'[229] என்ற அடியாலும், பாண்டியர்க்குரிய மாலையாய் விளங்குவது என்பது, 'வாடா வேம்பின் வழுதி கூடல்'[230] என்ற அடியாலும், வேப்பிலை, நீலோற்பல மலரொடும், உழிஞை மலரொடும் சூடுவர் என்பது 'வேம்பின் வெறிகொள் பாசிலை நீலமொடு சூடி'[231] 'வேம்பு ஒண்டளிர் உழிஞைப் பவரொடு மிடைந்த'[232] என்ற அடிகளால் அறியலாம். வேப்பிலையை மனை இறைப்பில் செருகும் மரபுண்டு. இதனை 'வேம்புமனைச் செரீஇ'[233] என வரும் அடியால் அறியலாம். இது தெய்வத்திற்குச் சூட்டும் சிறப்புடையது என்பது 'தெய்வஞ்சேர்ந்த...வேம்பின்'[234] என வரும் அடியால் புலனாகும்.

இவ்விலக்கியப் பாடல்களில் காணும் மரங்களும் பூக்களும் புலவர்தம் ஒத்துணர்வால் (Sympathetic feelings) பல ஒற்றுமைக் காட்சிகளைப் பெறுகின்றன என்பது அழகாலும் நிறத்தால், பண்பால், உவமையால் சிறக்கும் பேறுடையன என்பதையும் இத்தகைய புலவர்தம் அறிவிப்புக் காட்சிகள் (Sensuous-enjoyment) இயற்கையோடு இயைந்த ஒன்றென்றும் நிலைபெறும் என்பதையும் சிறக்கக் காண்கிறோம்.

218. குறு.24:1; நெடுநல்.176. 219. புறம்.76:4; 79:2; 371:1.
220. நற்.3:2. 221. நற்.218:7. 222. குறு.309:4. 223. பொருந.
224. பொருந.144. 225. பெரும்பாண்.59. 226. நற்.103:1-2.
227. குறு.24:1. 228. குறு.281:3. 229. நெடுநல்.176.
230. [illegible]



'திரிமருப் பிரலையொடு மடமான்'

செய். 93.

விலங்குகள்.

முல்லை நிலத்திற்குரிய விலங்குகளை மானும் முயலுமே குறிக்கப்படுகின்றன. இளம்பூரணரும் நாற்கவிராச நம்பியும் மான், முயல் என்று குறிக்க நச்சினார்க்கினியர்[1] 'உழை, புல்வாய், முயல்' என்று குறிப்பர். இவற்றுள் உழை என்னும் சொல் முல்லைத் திணைப் பாடல்களில் இடம் பெறாமை ஈண்டு அறியத்தக்கதாகும்.

மான்

ஆண் மானையும் பெண் மானையும் சுட்டும் இடங்கள் 31. அவற்றுள் இரட்டையும் இணைந்தும் குறிக்கும் இடங்கள் 18.[2] தனித்தும் பொதுவாகவும் குறிக்கும் இடங்கள் 13.[3] மான்களை விலங்கு நூலார் இருவகையாகப் பிரிப்பர். அவை, இரலை இனம் (Antilope); மற்றொன்று, கலை இனம் (Deer). இவற்றுள் இரலை இன மான்களின் கொம்பில் கிளைகள் இல்லை. கலை மான்களின் கொம்பில் கிளைகள் உண்டு. முல்லைத் திணைப்பாடல்களுள் இரலை என்னும் மான் வகையே பெரும்பாலும் 15 இடங்களில் குறிக்கப்படுகிறது. இரலை என்பது, ஆண் மானைக் குறிக்கும். இது 'புல்வாய்' என்றும் பெயர் பெறும்.

'இரலையும் கலையும் புல்வாய்க் குரிய'[4]

என்பது தொல்காப்பியம். 'புல்வாய்க்கலை'[5] 'புல்வாயிரலை'[6] என வரும் தொடர்கள் ஈண்டு அறியத்தக்கன.

இரலை மான் கருநிறமுடையது என்பது,

'.... ....; இருங்கோட்டு
இரலை சேக்கும் பரலுயர் பதுக்கை'[7]

---

1. தொல். பொருள். நச்சி. 18.
2. இரலை துணை. குறு. 65:1-2; அகம். 154:8-9.
   இரலை பிணை நற். 69:4; 121:3-4; குறு. 183:3-4; அகம். 14:5-6
   34:4-6; 74:9; 304:8-10; 314:5-6.
   மரப்பிணை குறு. 319:2; அகம். 134:10-12; 234:10-11.
   கலை பிணை அகம். 184:11-12; மான் இரலை நற். 242:7-10.
   முல்லைப். 99. மான் பிணை ஐங். 401:1; 434:2.
3. இரலை குறு. 220:2; அகம். 4:3; 194:5; எயினம் நெடுநல். 91.
   பிணை ஐங். 493:2; கலி. 104:22; புள்ளி குறு. 391:2;
   புல்வாய் அகம். 284:10; மருட்கலை அகம். 224:11
   மா. ஐங். 485:4; 492:3; 496:1; கலி. 108:46.
4. தொல். பொருள். மரபு. 590.
5. பத்துப்பாட்டு டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு. பக். 285.
6. புறம். 374:2.
7. அகம். 91:9-10.

என வரும் அடிகளால் புலப்படுகிறது. இக்காரணம் பற்றியே இரலையை Black Buck என்று ஆங்கிலத்தில் வழங்குகின்றனர் போலும்! இரலை கருமை நிறமுடையதாயினும், அதன் அடிப்புறம் வெண்மையாகக் காணப்படும் என்பது,

'வெண்புறக் குடைய ... இரலை'[8]

எனக் கூறுவதால் தெரிகிறது. கருமை நிறம் சிறப்பாக இரலையின் கழுத்திற்குக் கீழ் படுவதை 'மாவெருத் திரலை'[9] என்னும் தொடர் வெளிப்படுத்தும்.

இரலைமானின் கொம்புகள் பலவாறு சிறப்பிக்கப்படுவதைக் காண்கிறோம். அவற்றுள் முறுக்கிய கொம்புகளையுடையது என்பதைக் காட்டும் 'திரிமருப்பிரலை'[10] என்னும் தொடர் 7 இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. கொம்புகள் முறுக்கியவாறு நேராய் வளர்வதால் 'நெறிகோட் டிரலை'[11] என்றும் வளைப்புக்கள் முறுக்கியவாறு வரும் தன்மையை 'வலந்திரி மருப்பின் ... இரலை'[12] என்றும், இரும்பை முறுக்கிவிட்டாற் போன்ற கரிய பெரிய கொம்புகளையுடையது என்பதை,

'இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பின் ... இரலை'[13]

என்றும் செருப்பின் முன் உள்ள இரண்டு தோல் வார்கள் பிரிந்த முறுக்கினைப் போலக் கொம்புகள் உள்ளதால்,

'தொடுதோல் வாரின் வைபோழ்ந் தன்ன
முருகிரி மருப்பி னண்ண லிரலை'[14]

என்றும்,

காயாம்பூவின் பூக்கள் முதிர்ந்து விழுந்த பின் தோன்றும் கொத்தினைப் போல இரலைக்கொம்பு திரிந்து காணப்படுவதை,

'... ... ... புல்லிணர்
காயா வாடு ஓரு புதிர்ந்த
கொழுங்கொம் பன்ன திரிமருப்பு'[15]

என்றும்வரும் பாடற்பகுதிகள் குறிப்பிடுகின்றன. மறவரின் நாடு மான் கொம்புகளை

---

8. அகம். 139 : 10.
9. நற். 69 : 4. புறம். 256 : 8; ஐங். 232 : 3.
10. அகம். 4 : 3-4; 14 : 6; 34 : 3-4; 154 : 8; 304 : 9; 314 : 6. முல்லை. 99.
11. குறு. 183 : 3-4.
12. அகம். 304 : 9.
13. அகம். 4 : 3-4.
14. " 34 : 3-4.
15. அகம். 134 : 9-11.

போல முயக்கிடு திரிதரும் தாழ்ந்திருக்கும் எனக் காட்டும் கலித்தொகைக்காட்சியும் ஈண்டு நினைவுகூரத்தக்கதாகும்.[16]

இரலையின் பெண் பாலினைக் குறிக்கும் சொல் பிணை. பெண் மானைப்பற்றிய பாடல்கள் 'பிணை', 'பிணா' என்னும் சொற்களாலேயே குறிக்கப்படுகின்றன. அவை நிறம், அழகு, மருட்சி, புள்ளி, கண்ணுடை ஆகியவற்றோடு விளக்கப்பெறும். இதனை, 'மடப்பிணை'[17], 'காமர் பிணை'[18], 'மாதர் மான்பிணை'[19], 'மருட்சி மான்'[20], 'புள்ளி மடப்பிணை'[21] 'தெறிநடை மடப்பிணை'[22] என வரும் தொடர்கள் புலப்படுத்துகின்றன.

இரலை மான்கள் கூட்டமாய் வாழும் என்பதை,

'இரலை நன்மான் இனம்பரந் தவைபோல'[23]

என்றும், கான் நடந்தும், வெண்ணிற களரோடு அறல்பட்ட மணலிடத்தும், இரலைக் காட்டகத்தும், காடும் பறந்தலையிலும் மானினக் கூட்டமாகப் பரவி வாழும் என்பது

'வறிதுபெயர் களரி'[24], 'வெண்கல் அரிமணல்'[25]

'இரலையம் காட்டு ... வதியும்'[26], 'பரல அடைய'[27]

என்னும் பாடல்களால் அறியப்படுகிறது. மானினம் மலையில் வாழ்வதை 'மானினம் கலித்த மலை'[28] எனக் கூறுவதால் அறிகிறோம்.

மான்கள் வரகின் கதிர், அறுகம்புல், பசும்புல் ஆகியவற்றை இரையாகக் கொள்ளும் என்பதை,

'... ஈரிலை வரகின்
கவைக்கதிர் கறித்த'[29]

எனவும்,

'புதுப்புன வரகின் இரலை மேய்ந்த'[30]
'பைம்புல் உகள'[31]
'புல்லருந் துகள'[32]

எனவும் வரும் அடிகளால் அறிகிறோம்.

---

16. கலி. 15:5-7.
17. நற். 69:4; குறு. 310:1.
18. அகம். 154:9.
19. ஐங். 493:2.
20. அகம். 74:10.
21. அகம். 104:12.
22. அகம். 234:10.
23. அகம். 104:6.
24. நற். 242:7.
25. அகம். 74:7.
26. நற். 121:4.
27. அகம். 4:4.
28. புறம். 138:2.
29. நற். 121:2-3.
30. குறு. 220:1-2.
31. அகம். 314:6.
32. அகம். 14:6.

இரலை தன் துணையுடன்போலும் காட்சிகள் பல. அவற்றுள் இரலை தன் பிணையைத் தழுவியிருக்கும் அன்பு நிலையை,

> '... ... ... புறவின்
> மாவெருத்த இரலை மடப்பிணை தழீஇ'[33]

எனவும், துள்ளி விளையாடும் காட்சியை,

> '.... .... இரலைத்
> தெறிப்பு துணையொடு மறுகுந் தகை'[34]

எனவும், தெளிந்த நீரைப் பருகி நிற்கும் அழகினை,

> 'திரிமருப் பிரலை தெள்ளறல் பருகிக்
> காமர் துணையொ டேமுற வதிய'[35]

எனவும், வரகு வயலிடத்தே தங்கும் காட்சியை,

> '.... .... வாங்குகதிர் வரகின்
> திரிமருப் பிரலையொடு மடமா னுகள'[36]

எனவும் கூறியிருத்தல் பல்தொகை நூல்களும் இயம்பும் பகுதிகள். இது போலும் பல காட்சிகள் இடம் பெற்றுள்ளன.[37]

இரலை தன் பிணையொடும் சிறு குட்டிகளொடும் போலும் இனிய காட்சி யின்பத்தையும் புலவர் கண்டு களித்துப் பாடியுள்ளனர். அவற்றுள், இரலை கருவுற்ற பிணை மானுக்கு இலைக் கெழுந்த அறுகம்புல்லின் கொழுந்தினைக் கடித்து, தெளிவுற்ற தழைய நீண்ட மரத்தினடியிடத்தே அசை போடும் கருவுடைய பிணை மான் படுத்துறங்கத் தான் புறத்தே காவல் காக்கும் அழகினை,

> '.... .... இரலை
> செறியிலை புதலிற் செங்கோல் மெல்லுரன்
> மறியொடு மருங்கில் மடப்பிணை இருத்தித்
> தெள்ளற றுறிய வாரிமணல் வடகரை
> மெல்கிடு கவுள அறுகுபுறங் காக்கும்'[38]

எனவும்,

---

33. நற். 69: 3-4.
34. குறு. 65: 1-2.
35. அகம். 154: 8-9.
36. முல்லை. 98-99.
37. நற். 121: 2-5; குறு. 183: 3-4, 319: 12, அகம். 14: 5-6; 104: 11-12 ஒப்பு. அகம். 133: 17-18.
38. அகம். 34: 4-8.

களர் நிலத்தே பிணை மான் தன் குட்டிகளுடன் இரிந்தோட, அதனைத் தேடிச் செல்லும் இரலையின் காமர் நெஞ்சை,

'கழிந்துபெயர் களரில் போகிய மடமான்
விழிக்கண் பேதையொடு இனன்இரிந்து ஓடக்
காமர் நெஞ்சமொடு அகலாத்
தேடூஉ நின்ற இரலை ஏறே'[39]

எனவும்,

மாலைக் காலத்தே பிரிந்த மானினத்தைத் தேடிச் சேர்க்கும் கலை மான் ஒன்றின் சாய்புக் காட்சியை,

'பெருமான் இனம்பிரி தனிய கலையே
பதிபால் மாலை ஆர்ப்ப விளிக்கும்'[40]

எனவும், தன் சிறிய குட்டிகளைத் தழுவிய பிணை மான் இரலையொடு சேர்ந்த மரநிழலிடத்தே தங்கியிருத்தலைக் கூற,

'சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
.... அண்ணல் இரலையொடு
அலங்குசினைக் குருந்தின் அல்குநிழல் வதிய'[41]

எனவும் நவ்வி மான் குட்டி பருத்தற்குக் காரணமாம் மானும் பிணையும் போற்றும் காட்சி,

'மறியிடைப் படுத்த மான்பிணை'[42]

எனவும், முல்லைப் பூக்களை முல்லைக் காட்டிலே மழை பெய்து தெளிந்த நீரைப் பருகி கலைமான் தன் பிணையொடு வாழும் வாழ்வை,

'..... கொழுங்கொடி முல்லை
ஆர்கழல் புதுப்பூ உயிர்ப்பின் நீக்கித்
தெண்ணீர் பருகிய திரிமருப் பெழிற்கலை
புள்ளியம் பிணையொடு வதியும்'[43]


எனவும் வருவன எல்லாம் கண்கொள்ளாக் காட்சி ஓவியங்களாம்.

'சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக் – கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும்'[44]

என்ற பாலையின் கொடுமை நிலை முல்லை நிலத்து மான்களுக்கு இல்லாமை நன்கு அறியப் படுகிறது.

---

39. நற். 242: 7-10.
40. அகம். 199: 11-12.
41. அகம். 304: 8-10.
42. ஐங். 401: 1.
43. அகம். 184: [illegible]-12.
44. ஐந். ஐம். 38: 1-[illegible].



முயல்

முயல் 5 இடங்களில் குறிக்கப்படுகின்றது.[45] முயல் குறிய தோற்றமுடையதால் 'குறுமுயல்'[46] எனச் சிறப்பிக்கப்படுகிறது. விலங்கு நூலார் இம்முயலை 'Lepus nigricollis' என்பர்.[47]

முயல்கள் புன்புலமாய் உள்ள காட்டுநாடாகிய முல்லை நிலத்தில் வாழும் என்பதை 'குறுமுயல் ... புன்புலத் தலைய'[48], 'குறுமுயல் ... புன்புல வைப்பின்'[49] 'முயல் வினைப் புன்புல நாடன்'[50], 'முயல் ... வன்புலக் காட்டுநாட் டதுவே'[51], 'பதுக்கை உகளும் முயல் ... புறவில்'[52] என வருவனவற்றால் புலனாகும். மேலும், முயல் புதரில் புகுந்து தன் உடலைக் குவித்து ஒடுங்கிப் படுத்துக் காத்திருப்பதை, 'கோட்டவரி குறுமுயல்'[53], 'குறுந்தூறு குவிந்த'[54], 'புதல் ஒடுங்கிய'[55] என வரும் தொடர்கள் தெரிவிக்கின்றன.

முயல் சிறியவாயுடைய தெளிவான பார்வை குவிந்த கண்களையுடையது. தன் காய மயிரால் ஆகிய போர்வை உடையது. உயர்ந்த அகன்ற செவிகளை உடையது. இத்தகைய முயல் உருவத் தோற்றத்தை,

'சிறியிலை நெல்லிக் காய்கண் டன்ன
குவிஇக் கண்ண குரல குறுமுயல்
....'
குடந்தை யஞ்செவி ... .'[56]

என்பன ஆகிய புலப்படுத்தும். முயலின் செவியைப் பெரும்பாணாற்றுப்படை, 'தாமரைப் புல்லிதழ் புரைவு, நெடுஞ்செவி'[57] என்று கூறுகிறது. புறநானூறு, 'பெருஞ்செவி'[58] 'நெடுஞ்செவி'[59] என்று கூறுகிறது.

முயல், வரகின் பசுந்த பொதிக்கதிரினை அருந்தும் என்பதை,

'குடந்தை வரகின் விரைபரி அருந்து'[60]

என வரும் அடி தெரிவிக்கிறது.

---

45. நற்.59:5; குறு.421:2; அகம்.284:2; 384:5; 394:14.
46. அகம்.284:2; 394:14.
47. பி.எல்.சாமி, சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், பக்.401.
48. அகம்.284:2; 284:7.
49. அகம்.394:14;16.
50. குறு.421:2-3.
51. நற்.59:3;6.
52. அகம்.384:5.
53. அகம்.284:4.
54. அகம்.394:15.
55. குறு.421:2.
56. அகம்.284:1-2;4.
57. பெரும்பாண்.114-115.
58. புறம்.333:3; 334:2.
59. புறம்.339:4.
60. அகம்.284:3.

தன் துணையொடு கொடிகளிடையே மறைந்து உறங்கும் முயல், காடு தழுவிய மலைச்சாரலின் சிறுகுடி முற்றத்தே நீர்ப்பரப்பு பருகி வாழும். இவ்வியல் காட்சியை,

'இன்றுயில் வதிந்த துணையொடு போகி
முன்றில் சிறுநிறை நீர்கண் டுண்ணும்
புன்புலந் தழீஇய பொறையுறை சிறுகுடி'[61]

என வரும் அடிகள் இனிது காட்டுகின்றன.

முயற்குட்டிகள், வரகின் கவைக்கதிர் மிக்க முல்லை நிலத்துச் சிறு கால்களின் தாவிச் செல்லும் அழகு,

'..... .... தாஅய்
முயற்பறழ் உகளும் முல்லையம் புறவிற்
கவைக்கதிர் வரகின் சீறூ ராங்கண்'[62]

என்ற கூற்றால் தெரிகிறது.

காடுறை இடையன் எழுப்பும் சீழ்க்கை ஒலி கேட்டும், புனக்காவலர் வீசும் தெறித்த ஓசை கேட்டும் முயல்கள் அஞ்சி ஓடும்; புதரில் ஒளியும்; புதரில் ஒடுங்கும். இவ்வுண்மை,

'காடுறை யிடையன் யாடுதலைப் பெயர்க்கும்
மடிவிடு வீளை வெரீஇக் குறுமுயல்
மன்ற இரும்புதல் ஒளிக்கும்'[63]

எனவும்,

'மாலை வெண்காழ் காவலர் வீச
நறும்பூம் புறவின் ஒடுங்குமுயல் இரியும்'[64]

எனவும் வரும் அடிகளால் தெளிவாகிறது. 'Nature is often employed in poetry as a back-ground or setting to human emotion or action'[65]

எனக் கூறும் ஹட்சன் என்பார் கூற்றின்படி முயலும் சிறந்த பின்னணியை முல்லைப்பாடல்களில் தோற்றுவித்துள்ளமையைக் காண்கிறோம்.

இனி முல்லைத்திணைப்பாடல்களில் குறிக்கப்படும் பிற விலங்குகள், அவை, நீர்வாழ்வனவற்றைக் காண்போம்:

---

61. அகம். 284: 5-7.
62. அகம். 384: 4-6.
63. அகம். 394: 13-15.
64. ஐங். 421: 1-2.
65. Hudson, W.H., An Introduction to the study of literature, p.323.

<u>பரி</u>

சங்கப் பாடல்களில் பரி 15 இடங்களிலும்,[66] புரவி 13 இடங்களிலும்[67] கலிமா 7 இடங்களிலும்,[68] குதிரை 2 இடங்களிலும்[69] குறிக்கப்பட்டுள்ளன. பரி விரைந்து செல்லும் செலவினை உடையது என்பது, 'விரைசெலல் கலிமா'[70] 'கடும்பரி'[71] 'கதழ்பரி'[72] 'விரைசெலல் குதிரை'[73] 'விரை பரி'[74], 'கடு புரவி'[75], 'விரைபரி கலிமா'[76], 'கடுநடைப் புரவி'[77], 'கலைப்பரி'[78], 'பாய்பரி கலிமா'[79], என வரும் தொடர்களால் புலனாகும். இவற்றுள் 'கடும்பரி' என்னும் தொடர் பல இடங்களில் இடம் பெறுதல் அறியற்பாலது. நாணத்தை ஒத்த செலவில் பிறழ்படாது ஓடும் என்பது, 'பாசி பிணையா மாண்வினைக் கலிமா'[80] என்ற தொடரால் தெரிகிறது.

புரவி பிடரி மயிரினை உடையதென்பது, 'புல்லுளைக் கலிமா'[81] 'பிடியுளைக் கலிமா'[82] 'பல்லுளைப் புரவி'[83], 'கத்தக் குதிரை'[84], 'கொய்சுவல் புரவி'[85] என வரும் தொடர்களால் தெரிகிறது. இவற்றுள் கத்திரிகையால் கொய்து மட்டம் செய்யப்பட்ட பிடரியை உடையது என்பதைக் கூறும் 'கொய்சுவல் புரவி' என்னும் தொடர் பல இடங்களில் இடம் பெறுதல் அறியற்பாலது. இப்பிடரி மயிரினை மருதன் நாகனார், 'பன்மயிர்க் கொய்சுவல்'[86] என்றும் காப்பியாற்றுக் காப்பியனார், 'செவ்வுளைக் கலிமா'[87] என்றும் கூறுவர். புறநானூறு, 'அவிர் உளைப் புரவி'[88] என்றும், 'அலங்கு உளை இவுளி'[89] என்றும் கூறுகிறது. வளைய உடைந்தாற் நிமிர்ந்த செலவினை மேற்கொள்ளும் என்பதை, 'வள்பரி'[90] 'நிமிர்பரி'[91] என வருவனவற்றால் அறியலாம். கூர்மையான நகம் அமைந்த குளம்பை உடையது என்பது, 'கூர் உகிர் மாட்ட குளம்பின்'[92] என்னும் அடியால் தெரிகிறது.

---

66. நற். 121:9; ஐங். 465:1; 474:3; 489:5; அகம். 14:10; 54:8; 64:6; 104:6; 124:10; 154:11; 194:17; 314:10; 334:12; கலி. 103:18; முல்லை. 102.
67. நற். 81:3; 181:11; ஐங். 422:1; பரி. 20:16; அகம். 4:8; 124:10; 154:11; 254:12; 314:8; 334:11; 344:9; 354:7; பொருந. 93.
68. நற். 127:8; 361:3; அகம். 114:16; 134:7; 204:2; 234:4; பொருந. 179.
69. கலி. 103:53; அகம். 14:18.
70. நற். 121:8;
71. அகம். 104:6; 194:17; 334:12.
72. ஐங். 474:3.
73. அகம். 14:10.
74. அகம். 64:6.
75. அகம். 154:11.
76. அகம். 234:3-4.
77. அகம். 354:7.
78. முல்லை. 102.
79. பொருந. 179.
80. அகம். 360:11.
81. அகம். 234:4.
82. நற். 121:8.
83. பொருந. 93.
84. கலி. 103:8.
85. அகம். 4:8; 124:10; 154:11.
86. கலி. 90:8.
87. பதிற். 38:7.
88. புறம். 2:13.
89. புறம். 197:1; 382:4.
90. நற். 121:9; ஐங். 489:5.
91. ஐங். 465:1; அகம். 344:9.
92. கலி. 96:25.

நாவிச் செல்லும் செலவினை 'வாலுளை பாவை வயங்குதொழிற் கலிமா'[93] என்றும், நடைகள் விரைந்து செல்வதை, 'விரைந்த பரி'[94] என்றும், கையால் இழுத்துச் செலுத்தும் செலவினை, 'கைகவர் வயங்குபரி'[95] என்றும் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

குதிரைகள் வானத்திலே பாய்ந்து பறக்கும் அன்னங்களைப் போலப் பறக்கும். இதனை, 'நிரைபறை அன்னத் தன்ன விரைபரி ... கலிமா'[96] 'வயங்கு சிறை அன்னத்து நிரைபறை கடுப்ப ... புரவி'[97] என்னும் அடிகளால் அறிகிறோம். நக்கீரனார் என்னும் புலவர், 'புள்ளியற் கலிமா ... கலிமா'[98] என்று குறிப்பிடுகிறார். குதிரை காற்றின் விரைவும் என்பது, 'காலியற் புரவி'[99], 'காற்றுறழ் பாய்ந்த ... இவுளி'[100] என்னும் அடிகளால் தெரிகிறது. இக்கருத்து மதுரைக்காஞ்சி[101], புறநானூறு[102] என்னும் நூல்களிலும் குறிக்கப்பட்டுள்ளது.

பொன் அணிகலன்கள் பூட்டப்பட்டுத் திகழ்வதை, 'பொலம்படைக் கலிமா'[103] எனவும், தேருடன் நான்கு குதிரைகள் பூட்டப்பட்டு விரைவதை, 'நால்குடன் பூண்ட கடும்பரி'[104], 'நால்குடன் பூண்ட காலியற் புரவி'[105] என வரும் அடிகளால் அறிகிறோம். தேரும் பரியும் இணைந்து பேசுமாற்றை, 'பரிநெடுந்தேர்'[106], 'திண்தேர்ப் புரவி'[107] என்ற கூறுகளால் அறிகிறோம்.

குதிரைகள் கட்டும் இடத்தை, 'பணை நிலை'[108] என்றும், பந்தியில் கட்டி நிற்றலை வெறுக்கும் தன்மையை, 'பணைநிலை முனைஇய புரவி'[109] என்றும், தாவும் மாட்சிமைப்பட விளங்குவதை, 'தாவா புரவி'[110], 'மாண்வினைப் புரவி'[111] என்றும், நீர் விரைதலை ஒத்த விரையும் செலவினை, 'நீரிழி வன்ன நிமிர்பரி'[112] என்றும், விசும்பைக் கடந்தோடுவது போன்ற செலவினை, 'விசும்புகடப் பன்ன ... கலிமா'[113] என்றும், அலைக்கும்

---

93. அகம். 134:7.
94. அகம். 14:18.
95. அகம். 124:10.
96. அகம். 234:3-4.
97. அகம். 334:10-11.
98. நற். 78:9.
99. அகம். 314:8; 334:11.
100. அகம். 224:5.
101. மதுரைக் காஞ்சி 387-388, 440.
102. புறநானூறு, 178:2; 197:1; 229:28; 304:3; 369:7.
103. நற். 361:3; அகம். 114:16.
104. அகம். 104:6.
105. அகம். 334:11.
106. அகம். 314:10.
107. பரி. 20:16.
108. அகம். 254:12; நெடுநல். 93.
109. அகம். 254:12; நெடுநல். 93.
110. நற். 181:11.
111. நற். 81:3.
112. ஐங். 405:1.
113. நற். 361:3.

ஆகிய [illegible] பெயரையும், [illegible] நிலைப்பாட்டினையும் உடையதென்பதை '[illegible]' [114], '[illegible] புறவு' [115] என்னும் பாடல்வரிகள் விளக்கும். '[illegible]' [116] என்றும் கூறப்படுவதைக் காண்கிறோம். அவ்வாறே நற்றிணை, [illegible] [illegible] பெயர்பெறுவதையும் காண்கிறோம். [117]

[illegible] ஒலியைப் பெருமிக, [illegible] [illegible] [illegible] [118] [illegible] [illegible] பாடு [illegible] [illegible] பெரிய [illegible] போலத் தோன்றும். [119]

[illegible] [illegible] [illegible] [illegible] போலத் தோன்றும் என்பதை,

'[illegible]
[illegible]' [120]

என வரும் அடிகளால் தெரிகிறது.

பருந்து

பருந்து இரண்டு [illegible] பாடல்களில் குறிக்கப்படுகிறது. [121] [illegible] பற்றி, 'புலவுப் பருந்து' [122] என வழங்கும். [illegible] [illegible] போன்ற [illegible] [illegible] உடையது. [illegible], '[illegible] பருந்து' [123] என வரும் அடியால் அறிகிறோம். '[illegible] பருந்து' என்றும் தொடர் பல பாடல்களில் காணப்படுகிறது. [124] [illegible] [illegible] உடையது என்பதை, '[illegible] பருந்து' [125], '[illegible] பருந்து' [126] என்ற தொடர்கள் புலப்படுத்தும். [illegible] '[illegible]' [127] என்ற தொடரால் அறிகிறோம். பருந்தின் [illegible] [illegible] போலப் பருந்து [illegible] [128] [illegible] [illegible] போன்றும் [129] [illegible] [illegible] [illegible] போலும் [130] [illegible]. [illegible], [illegible] போன்றும் [illegible] [illegible] போன்றும் [illegible] [illegible] '[illegible] ... [illegible]' [131], '[illegible] ... பருந்து' [132]

---

114. அகம். 54: 8.
115. அகம். 4: 8.
116. அகம். 304: 2.
117. நற். 270: 8-9; அகம். 148: 7.
118. அகம். 224: 2-3.
119. அகம். 224: 6-7.
120. அகம். 224: 7-8.
121. அகம். 84: 6; 84: 9.
122. அகம். 88: 4.
123. அகம். 84: 6.
124. மலைபடு. 153; நற். 92: 7; 98: 3; 386: 1; குறு. 266: 1; 267: 1; அகம். 277: 8.
125. குறு. 261: 2; 262: 1.
126. அகம். 18: 6; 322: 10.
127. நற். 82: 7; 386: 1; குறு. 266: 1; 267.
128. நற். 98: 2.
129. அகம். 178: 2.
130. அகம். 277: 7.
131. அகம். 178: 1.
132. அகம். 322: 10.

என வரும் அடிகளில் காண்கிறோம். இந்த உரம் போன்ற நிலையை உடையது என்பதை, 'உரற்றலைக் கேழற் பன்றி'[133] எனக் கூறுவதால் அறிகிறோம். வயலைச் செடியின் வேரை உண்ணும் விருப்பமுடையது.[134] சிறுதினையைத் தின்று வயிறு நிறைந்த மலைப் பக்கத்தே துணையொடு வாழும் என்பதை, 'சிறுதினை மேய்ந்த தறுகட் பன்றி, துறுகல் அடுக்கத்துத் துணையொடு வதியும்'[135] எனக் கூறுவதால் அறிகிறோம். பன்றிகளை ஓட்டுதற்குக் காவலர் கொம்பூதுவர் என்பது 'சிறுகட் பன்றிப் பெருநிரை கதுவ .. காவலர் ஊதும் வளைகோட்டு இசை'[136] என வரும் அடிகளால் தெரிகிறது.

<u>பாம்பு</u>

எட்டுத் தொகைப் பாடல்களில் பாம்பு குறிக்கப்படுகிறது.[137] பாம்பின் கொடுமையைத் தெரிவிக்கப்பட 'கடும்பாம்பு'[138] எனக் கூறும். பாம்பு புற்றில் வாழும் என்பது, 'பாம்புறை புற்றத் தீர்ந்துறை'[139] என்ற அடியால் புலனாம். இக் கருத்து, பல பாடல்களில் இடம் பெறுகின்றது.[140] முதுமரம், மலைக்கோட்டை, மலைப் பிளவு முதலிய இடங்களில் பாம்பு வாழும் என்பதை, 'பாம்புறை மருதின் ஓங்குசினை'[141], 'அளைப்புகு பாம்பின்'[142], 'பாம்புடை விடர்'[143] என வருவனவற்றால் அறிகிறோம்.

பாம்பு வசிற செல்வம் இரு வகையில் சார்ந்தது. மலையில் வாழ்வது 'வரையுறை பாம்பின்'[144] என்றும், நிலத்தில் தெருவில் வாழ்வது, 'நிலக்கோள் பாம்பின்'[145] 'நல்பாம்பு வழங்கும் நெறியில்'[146] என்றும் கூறுவதால் அறிகிறோம். இது அழகிய பல புள்ளிகளை உடையது; அரவு போன்ற நச்சுடையது.[147] நாகப் பாம்பு போன்ற வரிமயாம் இருக்கும் என்பது, 'மணிமெயிற் றரவு'[148], 'பாம்பின் வைஎயிற்று'[149], 'வள்ளெயிற்று அரவு'[150] என்பவற்றால் தெரியவரும். பாம்பு படமுடையது என்றும் செய்தி பல பாடல்களில் வருகின்றது.[151] இவற்றுள், 'பைந்தலைப் பாம்பு'[152] 'அரவம்'[153] என வருவன குறிப்பிடத்தக்கவை.

---

133. புறம். 15:4.
134. நற். 98:3.
135. ஐங். 262:1-2.
136. அகம். 94:9-11.
137. நற். 238:9; அகம். 64:10; 324:13; குறு. 190:4 (அரவு); 391:3; கலி. 104:37; 105:45 (அரவு) முல்லை. 70.
138. [illegible]. 49.
139. அகம். 64:10.
140. பெரும். 277; நற். 336:8-9; பதிற். 45:2; புறம். 329:6.
141. பெரும். 232.
142. அகம். 391:13.
143. அகம். 362:1.
144. பெரும். 72.
145. குறு. 134:6.
146. குறு. 354:4.
147. நற். 75:1-3; 157:3-4; குறு. 190:3.
148. புறம். 126:19.
149. புறம். 260:16-17.
150. அகம். 340:10
151. பொருந. 69; நற். 75:2-3; 238:8; குறு. 185:5; 190:4; பரி. 11:3; புறம். 17:39.
152. பொருந. 69.
153. நற். 75:2.

பாம்பு மாணிக்கத்தை உடையது என்பதைப் பல பாடல்களில் காண்கிறோம்.[154] இவற்றுள், 'பாம்பு மணி உமிழ்' (குறிஞ்சிப்.221), 'பாம்பின் திருமணி' (அகம்.92:11-12) 'சேய்மணி' (அகம்.372:13) 'அரவுமிழ் மணி' (புறம்.294:8) என வருவன அறிதற்குரியன.

பாம்பு இடியால் அச்சுற்று அழியும் என்ற கருத்து, பல பாடல்களில் உள.[155] இவற்றுள், 'கடிதிடி யுருமிற் பாம்புபை மடிய' (குறுந்.391:3), 'பாம்புடன் றிசைக்கும் உரு' (நற்.383:8), 'அரவின் பைந்தலை துமிய உரறும்' (குறுந்.190:3-4), 'அரவுத்தலை பனிப்ப, இடி' (புறம்.77:38) என் வருவன நினைவு கூர்தற்குரியன.

பாம்பு யானைக்கும், செங்காந்தளுக்கும், வெள்ளருவிக்கும், தம்பிக்கும் குரா மலருக்கும் உவமிக்கப்பட்டுள்ளது.[156] அவற்றுள் வெட்டுண்ட யானையின் துதிக்கைக்கு அடியுண்ட பாம்பினை, 'வெருஉப் பாம்பு பதைப்பன்ன பருஉக்கை' என்ற முல்லைப் பாட்டில் உவமிக்கப்படுவது அறிதற்குரியது.

அரவு மதியினை விழுங்கும் என்னும் கருத்து, பல பாடல்களில் காணப்படுகின்றது.[157] அவற்றுள், 'பால்மதி சேர்ந்த அரவு' (கலி.104:37) 'அரவின்வாய்க் கோட்பட்டுப் போதரும் பால்மதி' (கலி.105:45-46) என வருவன குறிப்பிடத் தக்கன.

பாம்பு ஆடைகளோடும் அணிகலன்களோடும் இணைத்துப்பேசப்படுவதைக் காண்கிறோம்.[158] ஐந்து தலைகளையும் ஆயிரம் தலைகளையும் கொண்ட பாம்பும் உண்டு என்பதை அறிகிறோம்.[159]

---

154. குறிஞ்சிப்.221; குறுந்.239:4-5; அகம்.92:11-12; 192:11; 372:13 நற்.255:10; கலி.50:6; அகம்.193:11; புறம்.294:8.
155. நற்.114:9-10; 129:7-8; அகம்.202:10-11; 238:8-9; 383:8; குறுந்.158:1-2; 190:3-4; 268:3-4; 391:3; புறம்.17:38.
156. முல்லைப்.69-70; குறுந்.185:5-6; பரி.11:3; குறுந்.235:1-2; 239:4-5; அகம்.237:3.
157. சிறுபாண்.185; குறுந்.190:3-4; 395:4; பரி.10:76; 11:9-10; அகம்.313:7; கலி.104:37; 105:45-46; 140:17; 144:22.
158. பொருநர்.83; புறம்.383:9-11; 397:15; புறம்.393:15-16; 398:27; பரி.4:43-48;
159. கலி.62:13; பரி.3:59.

திருமால் கடலின்கண் அரவணையில் துயிலுங்காட்சி, 'பாடிமிழ் பரப்பகத்து அரவணை - மேயினாய்'[160] என வரும் அடிகளால் கூறப்படுகிறது. நல்ல பாம்பு, 'நல் அரா'[161] எனக் கூறப்பட்டுள்ளது.

தேரை

இஃது ஐந்து பாடல்களில் குறிக்கப்படுகிறது.[162] முதல் பிளந்த வாயைக் குறிக்கும் 'பகுவாய்த்தேரை'[163] என்ற தொடர் இரு பாடல்களில் காணப் படுகிறது. கார்காலத்தில் தேரை ஒலிக்கும் ஒலியைக் குறிப்பாக டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் 'தெவிட்டல்' என்று குறிப்பர்.[164] மேலும், 'தேரை தெவிட்ட'[165] என்ற தொடர் ஐங்குறுநூற்றில் மூன்று இடங்களில் வருவது அறியத்தக்கது. நற்றிணையில் 347ஆம் பாடல் தேரையை 'வெளில் தேரை' என்று குறிக்கிறது. தேரையின் ஒலியைப் போல, சில்லரி, குதிரைத்தார் மணி, கிண்கிணி முதலியவை ஒலிக்கும்.[166] தேரை ஒலிக்கக் கார்காலம் தொடங்கும் என்பது, 'தேரை தெவிட்டக், கார் தொடங்கின்றே'[167] என வரும் அடிகளால் தெரிகிறது.

----

160. கலி.105:71-72.
161. குறு.43:4.
162. குறு.193:2; அகம்.154:2; ஐங்.453:1, 460:1; 494:1.
163. குறு.193:2; அகம்.154:2.
164. ஐங்குறுநூறு டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு பக்.190.
165. ஐங்.453:1; 460:1;494:1.
166. அகம்.301:19-20; ஐந்.எழு.23:1; கலி.86:8-9.
167. ஐங்.460:1-2.

பறவைகள்

முல்லைத்திணைக்குரிய பறவைகளாகக் காட்டுக்கோழி, சிவல், மயில் ஆகியவை குறிக்கப்படுகின்றன. இவற்றுள் காட்டுக்கோழியை மட்டும் இளம்பூரணர்[1] குறிப்பர். நச்சினார்க்கினியர்,[2] காட்டுக்கோழி, சிவல் ஆகியவற்றைக் குறிப்பர். இதனுள் சிவல் பறவை முல்லைத்திணைப் பாடல்களுள் குறிக்கப்பெறாமை நினைவுகூர்தற்குரியது. காட்டுக்கோழி, சிவல், மயில் என்னும் மூன்றும் இறையனார் அகப்பொருள் உரையில்[3] குறிக்கப்பட்டுள்ளன. குறிஞ்சிக்குரிய மயில் முல்லைக்கும் கூறியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

காட்டுக்கோழி

நான்கு இடங்களில் முறையே 'காட்டுக்கோழி'[4], 'கானவாரணம்'[5] 'குப்பைக்கோழி'[6], 'வாரணம்'[7] எனக் குறிக்கப்பட்டுள்ளது. இது 'கானக்கோழி' என்ற பெயரால் பொருநர் ஆற்றுப்படை (222), மலைபடுகடாம் (510) புறநானூறு (320:11) ஆகிய நூல்களில் குறிக்கப்பட்டுள்ளது. மனைக்கோழி வேறு, கானக்கோழி வேறு என்பதை, 'மனைக்கோழி பைம்பயிர் இன்னே, கானக்கோழிக் கவர்குரலொடு' எனப் புறநானூறு (395:9-10) வேறுபடுத்திக் காட்டுவதைக் காண்கிறோம்.

இக்கோழி காட்டில் வாழும் என்பது 'கான வாரணம்', 'கானக்கோழி' என வரும் தொடர்களால் புலப்படும்.

உருக்குற்ற நெய்யில் பாலைச் சிதறினாற்போலக் கடைகின்ற நிறத்தையும் அழகிய பல புள்ளிகளையும் உடையது. கண்டாரை விருப்பம் கொள்ளச் செய்யும் சிறப்புடையது. இதனை,

> 'உருக்குறு நறுநெய் பால்விதிர்த் தன்ன
> அரிக்குறல் மடற்ற அந்தண் பல்பொறிக்
> காமரு தகைய கானவாரணம்'[8]

என வரும் அடிகள் சிறப்பிக்கின்றன. கான வாரணம் தேரையைப் போன்று ஒலிக்கும் என்பதை, 'தேரையின் குரல்போன்ற குரலையுடைய கடா எனுமாம்' என்று பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் குறிப்பிட்டுள்ளமை அறிதற்குரியது.[9]

---

1. தொல்.பொருள்.இளம்.20.
2. தொல்.பொருள்.நச்சி,18.
3. இறையனார் அகப்பொருள்.1,பக்.21.
4. குறு.242:1.
5. நற்.21:8.
6. குறு.234:4.
7. அகம்.64:9.
8. நற்.21:6-8.
9. நற்றிணை நானூறு மூலமும் உரையும், பக்.30.

உச்சிக்கொண்டையைப் பெற்றுத் திகழும் சிறப்பை, 'குடுமிக்கோழி'[10] எனக் குறிப்புள்ளமையால் அறியலாம்.

கானக்கோழிச் சேவல் கழுத்து ஒள்ளிய புள்ளிகளை உடையது என்பது,

'கானக் கோழி ... சேவல்
ஒண்பொறி யெருத்தில்'[11]

எனக் கூறுவதால் தெரிகிறது. தமிழ்க் கலைக்களஞ்சியம், காட்டுக்கோழி (Jungle fowl) கழுத்தில் மயிர்போன்ற சிறகுகள் மிக அழகாகப் புள்ளிகளைப் பெற்றிருக்கும் எனச் சிறப்பிக்கிறது.[12]

நீண்ட இரவு விடியும்பொழுது கோழி கூவும் என்பது,

'குடுமிக் கோழி நெடுநக ரியம்பும்
பெரும்புலர் விடியல் ...'[13]

என வரும் அடிகளால் அறியப்படுகிறது.

கார் மழையால் நீர் வளத்தைப் பெற்ற செம்மண் நிலத்தே வாரணம் மேயும் காட்சியினை,

'... ... ... பெயல
கடுநீர் வரித்த செந்நில மருங்கின்
விடுநெறி ஈர்மணல் வாரணஞ் சிதற'[14]

என வரும் அடிகள் புலப்படுத்தும்.

கான வாரணம் முல்லை நிலத்தே ஈரமணலைத்தோண்டி நாங்கூழ்ப் புழுவைக் கவர்ந்து தன் பெடைக்கு ஊட்டும் அன்புள்ளத்தை,

'கான வாரணம்
பெயனீர் போகிய வியனெடும் புறவில்
புலரா வீர்மணல் மலிரக் கெண்டி
நாளிரை கவர மாட்டித்தன்
பெடை நோக்கிய பெருந்தகு நிலையே'[15]

என வரும் பாடலடிகளில் காண்கிறோம்.

---

10. குறு.234:4. 11. குறு.242:1-2.
12. கலைக்களஞ்சியம், தொகுதி மூன்று, பக்.444.
13. குறு.234:4-5. 14. அகம்.64:7-9.
15. நற்.21:8-12.

கான வாரணம் பெறும் பெரும்புலவர் தம் ஓவியக் காட்சிகளை நுகருங்கால், 'Painting is drumb poetry and poetry is speaking painting'[16] என்ற கூற்று அபர்கிரோம்பியின் கருத்து நிலைபெற எய்துவதைக் காண்கிறோம்.

மஞ்ஞை

முல்லைத்திணைப் பாடல்களில் மஞ்ஞை[17] 7 இடங்களிலும், மயில்[18] 8 இடங்களிலும், தோகை[19] 2 இடங்களிலும் ஆக 17 இடங்களில் குறிக்கப்படுகின்றன. மஞ்ஞை முல்லைத்திணைக்கும் உரியதாகக் கூறப்பெறும்.[20] காட்டிலும் புறத்திலும் வாழும் என்பதை 'கான மஞ்ஞை'[21], 'மயில் ... வியன்புறத்த'[22] எனக் கூறுதலால் புலனாகும். மயிலினம் கூட்டமாய் வாழ்வதை, 'இனமயில்'[23], 'மயிலினம்'[24] என வரும் தொடர்களும் மென்மைத்தன்மையும் செருக்கும் உடையதென்பதை 'மென்மயில்'[25] 'மெல்லியற் கலிமயில்'[26] என வரும் தொடர்களும் வெளிப்படுத்தும்.

மஞ்ஞை, நீல மணி நிறத்தையும் உச்சிக்கொண்டையையும் நீண்ட தோகையையும் அரிய புள்ளிகளையும் பிளவுபட்ட கண்களையும் பெற்றுத் திகழும் அழகினைப் புலவர்கள்,

'மணிநிற உருவின் தோகை'[27]
'குடுமி நெற்றி நெடுமாத் தோகை'[28]
'அரும்பொறி மஞ்ஞை'[29]
'.... பொறிக்கண் மஞ்ஞை'[30]

என வரும் அடைமொழித் தொடர்களால் புலப்படுத்தியுள்ளனர்.

மேலும், 'பல்பொறி மஞ்ஞை'[31], 'மஞ்ஞைக் கலாபம்'[32], 'கலவ மஞ்ஞை'[33], 'வரிப்பொறி மஞ்ஞை'[34], 'மணிநிற மஞ்ஞை'[35], 'மாமயில்'[36] என வருவனவும் அறிதற்குரியன.

---

16. Abercrombie,L., Principles of literary criticism, p.151.
17. குறு.194:3, 251:1, 301:7; ஐங்.413:2, 492:1; அகம்.304:12; முல்லைப்.84.
18. நற்.115:5, 248:8; குறு.183:6; கலி.103:50, 108:38; அகம்.334:13, 344:6; நெடுநல்.99.
19. ஐங்.431:3; அகம்.194:11.
20. இறையனார் அகப்பொருள். பக்.21
21. குறு.194:3.
22. அகம்.334:13.
23. நற்.248:8.
24. அகம்.344:6.
25. குறு.183:6.
26. நெடுநல்.98-99.
27. ஐங்.431:3.
28. அகம்.194:11.
29. அகம்.304:12.
30. குறு.391:7.
31. முரு.122.
32. சிறுபாண்.264.
33. மலைபடு.235.
34. அகம்.108:12.
35. பரி.17:40.
36. புறம்.56:7.

காயாமலர்களையும், அவைகள் நிறமும் மயில் எருத்த வண்ணத்தைப் பெறுவதை, 'காயா ... பெருஞ்சினை மென்மயில் எருத்தின் தோன்றும்'[37] 'மயில் எருத்த வண்ணத்து மாயோய்'[38] என வரும் அடிகளில் காண்கிறோம். நொச்சி மரத்தின் இலை மயிற்பாதம் போன்று விளங்குவதை, 'மயிலடி இலைய மாக்குரல் நொச்சி'[39] என்னும் அடியால் அறிகிறோம். இக்கருத்து நற்றிணையின் 305:2ஆம் அடியிலும் காணப்படுகிறது.

கார் காலத்தே, கார் முழக்கத்தைக் கேட்டும் மயில்கள் [illegible] ஆரவாரிக்கும்; ஆடும். இதனைப் பல பாடல்கள் சிறப்பிக்கின்றன. அவற்றுள்,

'பொய்யிடி அதிர்குரல் வாய்செத்து ஆலும்
இயல்மயில் மடக்கணம்'[40]

'வானேர் பிரங்கு மொக்கே வதனெதிர்
கான மஞ்ஞை கடிய வேங்கும்'[41]

'.... .... மஞ்ஞை யாலக்
கார்தொடங் கின்றே பொழுதே'[42]

'இனமயில் அகவும் கார்கொள் வியன்புனத்து'[43]

என வருவன குறிப்பிடத்தக்கன. கார்காலத்தே வேங்கை மரம், குருந்தமரம், கடம்ப மரம் ஆகியவற்றின் கிளைகளில் தோன்றி அகவும் என்பது, 'பூத்த வேங்கை ... ஆடும் .. மஞ்ஞை ... பலர்புகழ்ந்தின் நாட்கிளை இருந்த ... அகவும் .. நற்கார்'[44] 'மராத்த நெடுஞ்சினைச் சேர் மயில் ஆலும்'[45] என வரும் அடிகளால் தெரிகிறது.

கலிமயில் இன்ப ஓசை கொம்போசையாய்க் கேட்பார் மருள விளக்கும் என்பது,

'கலிமயில் கலாவம் கலிமலி விளியே'[46]

என வரும் அடியால் தெளிவாகும்.

கானகத்தே மயில்கள் மகளிர் கூடும் தோற்றத்தைப் போல ஆடும். இதனை,

'... ... ... மகளிர்
கைமாய் தோள் கூப்பப் பயவெய
மயிலினம் பயிலும் மரம்பயில் கானம்'[47]

என வரும் அடிகளால் அறிகிறோம்.

---

37. குறு.183:5-6.
38. கலி.108:38.
39. நற்.115:5; குறு.138:3.
40. நற்.248:7-8.
41. குறு.194:2-3.
42. ஐங்.413:2-3.
43. அகம்.334:13.
44. அகம்.85:10-14.
45. கலி.36:2.
46. நெடுநல்.99.
47. அகம்.344:4-6.

குருந்தமரக்கிளைகளில் கிளி கூடுகளிற் போன்ற மயில் வீற்றிருந்த நிலையும் பெற்றியை,

'வண்டு வேக் குருந்தின் வாங்குசினை பழுந்த
கிளைகுடி மகளிர் கிளிபடப் பயிலும்'[48]

எனவும், புனத்தே வரகின் பிரிவுபட்டுக் கிளைத்துள்ள கதிர்களை கரிய புறத்தைக் கொத்தித் தின்னும் மயிலின் வாழ்க்கையை,

'... ... பெரும்புன வரகின்
கவைக்கதிர் இரும்புறம் கவர உண்ட
... ... தோகை'[49]

எனவும் வரும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

மகளிர் நடக்கத்திற்கு அம்பு தைத்த மயிலை உவமை கூறுவர் என்பது,

'மேவர மஞ்ஞையி னசைஇ'[50]

எனக் கூறுமாற்றால் தெரிகிறது. மழையால் மயில் அகவ அது குளிரால் கவிந்த என்று பேகன் என்ற வள்ளல் போர்வையைப் பெற்ற சிறப்புடையது மஞ்ஞை. இதனை,

'வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
பெருமகன் ... பேகன்'[51]

என்ற அடிகளில் காண்கிறோம். இக்கருத்தை,

'படாஅ மஞ்ஞைக் கீத்த .. பேகன்'[52]

எனப் பரணர் வாக்கிலும் பொலிவுற அறிகின்றோம்.

இனி, முல்லைத்திணைப் பாடல்களில் குறிக்கப்படும் பிற பறவைகளைக் காண்போம்.

அன்னம் (Swan)

நிற வெண்மையும் கம்பீரமும் வாய்ந்த பெரிய நீர்ப்பறவை. ஆணும் பெண்ணும் ஒரே மாதிரி இருக்கும். அன்னங்களில், ஊமை அன்னம் (Mute Swan), சீழ்க்கை அன்னம் (Whistling swan), கரு அன்னம் (Black swan) கருங்கழுத்து அன்னம் (Black necked swan) எனப் பல வகை உண்டு.[53] சங்க இலக்கியப் பொருட்களில் அன்னமும் ஒன்று என்பது அறியப்படுகிறது. புறநானூறு 'அன்னச் சேவல்' எனக் கூறுகிறது.[54]

---

48. அகம்.104:14-15.
49. அகம்.194:9-11.
50. முல்லைப்.84.
51. சிறுபாண்.84-86.
52. புறம்.141:11-12.
53. கலைக்களஞ்சியம் 1, பக்.273.
54. புறம்.67:1.

அன்னம் பற்றி பல பாடல்களில் குறிக்கப்படுகிறது.[55] மெல்லிய இறகுகளையும் சிவந்த குறுகலான கால்களையும் உடையது. இதனை, 'மென் சிறை செங்கால் அன்னம்'[56] 'குறுங்கால் அன்னம்'[57] எனக் கூறுமாற்றால் அறிகிறோம். இது 'தோலடியை உடையது.'[58] 'தூய நிறத்தை உடையது' என்பதை 'தூமயிர் எகினம்'[59] 'அன்னத் தூ நிறத் தூவி'[60] என்ற தொடர்களால் அறியலாம். அன்னங்கள் வெண்ணிறத் தொகுதியாய் விளங்கும். 'அன்னத்து வெண்தோடு'[61] என்பது காண்க.

செந்நெல் வயல்களில் அன்னம் உறங்கும்[62] இஃது அழகிய மென்னடையை உடையது என்பது 'மென்னடை அன்னம்'[63] எனக் கூறுவதால் அறிகிறோம்.

தண்ணிய மணல் பரவிய குளிர்ந்த நீர் நிலையிடத்தே அன்னங்கள் வரிசையாய்ப் பறக்கு

'தண்ணீர் பரந்த தண்ணயம் மருங்கில்
நிரைபறை அன்னத்து'[64]

என்பது காண்க. மனையகத்தே அன்னம் தன் பெடையுடன் விளையாட்டயர்வதை,

'தூமயிர் எகினம்
துணையொடு திளைக்கும் காப்புடை வரைப்பில்'[65]

என வரும் அடிகளால் அறிகிறோம்.

காக்கை (Crow)

காக்கையில் சாம்பல் நிறக் கழுத்தைக் கொண்ட வீட்டுக் காக்கை (House crow) கறுப்பான அண்டங்காக்கை (Jungle crow)என்னும் இரு வகை உண்டு. நீண்ட [illegible] காக்கைகளுக்கு அதிக புத்தியும் ஒரு விதப் பகுத்தறிவும் தந்திரமும் இருப்பது கவனிக்கத் தக்கது. இவை பல விதமாய்க் கரை, அழைப்பு, எச்சரிப்பு முதலிய கருத்துகளைத் தமக்குள் ஒலியால் குறிப்பிட்டுக்கொள்ளும்.[66]

இது ஒரு பாடலொன்றில் குறிக்கப்படுகிறது.[67] இது கரிய நிறமுடையதாயும் இருட்டின் நிறம் போன்றும் தோன்றும் என்பது 'கருங்காக்கை'[68] 'மைந்நிற உருவின்... காக்கை'[69] எனக் கூறுவதால் தெரிகிறது. கழுத்தில் சிறு வெண்மை நிறமுடையது என்பது

---

55. அகம்.34:12; (எகினம்) 234:3 நெடுநல்.92.
56. நற்.356:2.
57. நெடுநல்.92; குறு.300:6; அகம்.320
58. ஐங்.106:2.
59. அகம்.34:12.
60. நெடுநல்.132.
61. குறு.304:5-6.
62. நற்.73:8.
63. அகம்.279:14-15.
64. அகம்.234:2-3.
65. அகம்.34:12-13.
66. கலைக்களஞ்சியம் 3, பக்.417-418.
67. நற்.367:1.
68. பொருநர்.184; ஐங்.391:1.
69. அகம்.327:15.

'சிறுவெண் காக்கை'[70] என வரும் தொடரால் அறிகிறோம்.

காக்கையின் கண்கள், 'பசுங்கண் காக்கை'[71] 'கொடுங்கண் காக்கை'[72] 'கருங்கட் காக்கை'[73] 'மணிக்கட் காக்கை'[74] எனப் பலவாறு சிறப்பிக்கப்படுவதைக் காண்கிறோம். அது சிவந்த வாயை உடையது என்பது 'காக்கைச் செவ்வாய்'[75] என வரும் அடியால் தெரிகிறது. காக்கையின் வாய் 'மணிவாய்க் காக்கை'[76] 'வாய்வல் காக்கை'[77] 'கூர்வாய்ப் பேடை'[78] எனப் பலவாறு கூறப்படுவதைக் காண்கிறோம். கடலில் வாழும் காக்கை என்பது 'கடற் காக்கை'[79] 'பெருங்கடற் காக்கை'[80] 'கடற்சிறு காக்கை'[81] என வரும் அடிகளால் தெரிகிறது. கானத்தே வாழும் என்பது 'கானக் காக்கை'[82] என்ற அடியால் புலனாகும். காக்கை பெருங்கூட்டத்துடன் ஒரு மரத்தே தங்கும் என்பதை, 'மாநிறப் பெருங்கிளை மிடைந்து ஒலித் தலைக்குசினை ஏறி'[83] என வரும் அடிகளால் அறிகிறோம். அது கடவுளுக்குப் படைக்கும்போது இட்ட பலியுணவை உண்ணும் என்பது, 'இட்ட கடவுள் ... உருபலி அருந்திய ... காக்கை'[84] என்னும் அடிகளால் தெரிகிறது. அது பிள்ளையைத் தழுவிச் சுற்றத்தைக் கூவி உண்ணும் பண்புடையது என்பதை, 'நறும்புகைப் பிள்ளை தழீஇக் கிளைபயிர்ந்த ... வெண்சோறு ... கவர்வ நன்மனை'[85] என வரும் அடிகளால் அறிகிறோம்.

கிளி (Parrot)

கிளிகளில் கல்லிக்கிளி (Lorikeet) பஞ்சவர்ணக்கிளி (Macaw) நெஸ்டார் கிளி (Nestors) எனப் பல வகை உண்டு. இது பழைய காலத்திலிருந்து இந்தியாவில் வீட்டுப் பறவையாய் வளர்க்கப் பட்டிருக்கிறது. இதற்குப் பேசக்கூடிய ஆற்றல் இருப்பதால் இதைச் செல்லமாய் வளர்க்கிறார்கள்.[86] தூது விடும் பொருள்களில் கிளி ஒன்றாய் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இது நான்கு முல்லைப்பாடல்களில் குறிக்கப்படுகிறது.[87]

---

70. நற்.31:2; 231:4; 345:4; 358:9; ஐங்.161:1; 170:1; குறு.334:1; 246:1; 313:1.
71. நற்.258:8.
72. நற்.367:1.
73. ஐங்.314:2.
74. அகம்.327:15.
75. நற்.272:1; குறு.334:1.
76. அகம்.319:1.
77. புறம்.238:3; 362:17.
78. நற்.367:1.
79. நற்.272:1; குறு.334:1.
80. ஐங்.161:1; 170:1.
81. அகம்.170:10.
82. புறம்.342:1.
83. அகம்.319:1-2.
84. நற்.343:4-5.
85. நற்.367:2-5.
86. கலைக்களஞ்சியம் 3, பக்.713.
87. குறு.240:2; அகம்.34:14; 194:15; 324:3.

இதைக் கிளி என்றும் வழங்குவர். கிளியின் கால் கூர்மையான நகம் போன்றது என்பது 'கிளி வாய் வள் உகிர்'[88] என வரும் அடியால் தெரிகிறது. கிளி வளைந்த அலகை உடையது என்பது, 'கொடுவாய்க் கிளி'[89] 'வளைவாய்க் கிளி'[90] 'கிளி வளைவாய்'[91] 'வளைவாய்ச் சிறகி'[92] எனக் கூறுமாற்றால் அறிகிறோம். இது சிவந்த வாயை உடையது என்பது 'செவ்வாய்ப் பைங்கிளி'[93] 'செவ்வாய்ச் சிறகி'[94] என வரும் அடிகளால் புலனாம். கிளி, கழுத்தில் சிவந்த ஆரத்தை உடையது. இதனைச் 'செந்தார்ப் பைங்கிளி'[95] 'செந்தார்க் கிளி'[96] 'பைந்தார்க்கிளி'[97] என வருவன கொண்டு அறிகிறோம். இது தளிரின் பசுமை நிறமுடையது என்பது 'தளிரியற் கிளி'[98] என வரும் அடியால் அறிகிறோம்.

இது பசிய புறத்தினையுடையது என்பது 'பைம்புறக்கிளி'[99] என்னும் தொடரால் அறியலாம். இது வலிய இறகுடையது என்பது 'வன்பறை மடக்கிளி'[100] என்னும் தினைப் புனத்தே படியும் என்பது 'சிறுதினைப் படுகிளி'[101] என்னும் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம். மகளிர் தினைப்புனத்தே கிளிகளை இசைத்து ஓட்டுவர். இதனைக் 'கிளிகடி பாடல்' என்பர்.[102] மகளிர் கிளிகளை ஓட்டும் செய்திகள் பல பாடல்களில் வருகின்றன.[103] இவற்றை 'கிளிகடி மகளிர்'[104] 'தினைக்கிளிகடி'[105] 'கிளிகடி மரபு'[106] என வருவன உணர்த்தியன.

கிளி, மகளிர்க்கு உவமையாகப் பல பாடல்களில் கூறப்பட்டுள்ளது.[107] இவற்றுள், 'கிளிமழலை மென்சாயலார்' (பட்டினப்.150) 'கிளிபுரை கிளவியாய்' (கலி.13;18;20:7) என வருவன குறிப்பிடத்தக்கன. மகளிர் கிளியை முன் கையில் ஏந்தி, உரையாடுவர். இதனைச் 'செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி, மழலை இன்சொல் பயிற்றி நாணுடை அரிவை'[108] என வரும் அடிகளால் அறிகிறோம். காவலர் கிளிகளை ஓட்டும்

---

88. பொருநர்.34.
89. பெரும்பாண்.227.
90. பெரும்பாண்.300.
91. குறுந்.67:1-2.
92. குறுந்.141:1.
93. நற்.102:1; 147:3; ஐங்.294:
94. அகம்.193:4-5.
95. அகம்.34:14.
96. அகம்.242:6; 308:3-4.
97. அகம்.192:4-5.
98. அகம்.324:3.
99. நற்.13:9.
100. அகம்.38:11-12.
101. அகம்.32:5; 308:10.
102. அகம்.118:13.
103. மதுரைக்.291; குறிஞ்சிப்.44; குறுந்.142:2; 198:5; 217:1; நற்.104:6; அகம்.194:15; ஐங்.283:3.
104. அகம்.194:15.
105. குறுந்.217:1.
106. குறிஞ்சிப்.44.
107. பட்டினப்.150; நற்.301:4-5, ஐங்.375:3; கலி.13:18; 20:7.
108. அகம்.34:14; 15-18.

போல நல் அழகினைக் கொண்ட நெடுங்கழுத்தினையுடையது.[109] நாரை, கொக்கைப் போல இருக்கும். இதனை, 'நாரைக் கிளை'[110] என வரும் தொடரால் அறியலாம்.

குடிஞை (Owl)

இது குறுந்தொகைப் பாடல் ஒன்றில் குறிக்கப்படுகிறது.[111] இது கூகை, பேராந்தை, கோட்டான் என்ற பெயர்களை உடையது. இது, கொல்லை உலக்கைத்த எனும் ஒலியைப் போன்றும் பறை ஓசையைப் போன்றும் ஒலிக்கும் என்பது 'பொய்ச்சொல் கொல்லையில் இசை தெரிப்ப'[112] 'கடுங் குரல'[113] 'பகலில் கூகை கட்பக் குரல விளிப்ப'[114] என வரும் அடிகளால் அறியலாம். இது கூர்மையான கண்களை உடையது என்பது 'வெள்ளைக் குடிஞை'[115] என்பதால் தெரிகிறது. மனிதர்கள் அஞ்சும்படியான ஒலியுடைய ஓசையால் ஒலிக்கும் என்பது, 'குடிஞை ... குரல, கல்லெறி இசையின் இரட்டும்'[116] என வரும் அடிகளால் அறியலாம்.

குயில் (Cuckoo)

வசந்த காலம் வருகையில் குயில்கள் பரபரப்புடன் கூவும்; பலபலப்பாக கூட்டமாய் இருக்கும். பெண் குயில், பழுப்புக் கறுப்பு நிறத்தில் வெண்புள்ளிகளைப் பெறும். குயில் தன் முட்டைகளையிட்டு அடைகாத்துக் குஞ்சு பொரித்து வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதில்லை. குயில் முட்டையைப் பொரித்து வளர்க்கும் கடமை காகங்களையே சேரும். குயில் இனத்தில் 'Common hawk-cuckoo' என்னும் இனமும் உண்டு.[117]

இது குறுந்தொகைப் பாடலொன்றில் குறிக்கப்படுகிறது.[118] குயில் கரிய நிறமுடையது. இதனை 'இருங்குயில்'[119] என்னும் தொடர் புலப்படுத்தும். இது சிவந்த கண்களையும் கரிய நிறத்தையும் உடையது. இதனை, 'செங்கண் இருங்குயில்'[120] என்னும் தொடரால் அறியலாம். இது நீலமணியின் நிறத்தினை உடையது என்பது, 'மணி நிற இருங்குயில்'[121] என வரும் தொடரால் புலப்படும். குயில் இனிய குரலுடையது என்பது 'குயிற் பெடை இன்குரல் அகவ'[122] என்ற அடியால் தெரிகிறது. 'தண்பொழில் சோலையும் மாமரத்திலும்

109. அகம்.12:6-7.　　110. குறு.240:1-2.
111. நற்.394:2.　　112. நற்.394:3.
113. பொருந.210; புறம்.170:6-7.　　114. மலைபடு.140-141.
115. அகம்.19:5.　　116. அகம்.89:3-5.
117. கலைக்களஞ்சியம் 4, பக்.46-47.　　118. நற்.97:3.
119. நற்.243:4; 246:4; குறு.192:3; ஐங்.340:3; கலி.33:25. அகம்.25:6
120. நற்.118:3; 224:5; 229:19; ஐங்.346:3.
121. அகம்.25:6.　　122. குறு.341:2.

கள் வாழும் என்பதை, 'நறும்பொழிற் குயில்'[123]

'மாநனை கொழுதி மகிழ்குயில் ஆலும்
நறுந்தண் பொழில்'[124]

'இணர்ததை மாஅத்த புணர்குயில் விளித்தொறும்'[125] 'தண்காவில் குயில் கூவும்'[126] 'மலியும் பொங்கர் மகிழ்தரக் குயில்'[127] எனக் கூறுமாற்றால் அறியலாம். குயில் தன் பெடையுடன் புணர்தல் வேள்விப் புகையை வெறுத்து நீங்கும்.[128] அதிரல் முகை குயிலின் வாய் போல இருத்தல், 'குயில்வா யன்ன கூர்முகை அதிரல்'[129] எனவரும் அடியால் புலனாகும்.

குயிலோசை பிரிந்தாரின் வேட்கையால் நெஞ்சைப் பிளப்பதைப் போல் துன்பம் தரும் என்பதை

'நெஞ்சுநெகிழ எஃகெறிந் தாங்குப்
பிரிவு புலம்பி நுவலும் குயில்'[130]

என வரும் பாடலடிகளால் அறியலாம்.

<u>சிரல்</u> (King Fisher)

இது பல புலவர் பாடல்களில் குறிக்கப்படுகிறது.[131] இதனைச் சிச்சிலிப் பறவை என்றும் கூறும். டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் 'மீன்கொத்தி'[132] என்பர். குறுநூறு, 'சிச்சிரல்' (106:4) எனக் கூறும். இது பொன்னிற வாயும் நீலமணி போன்ற நிறத்தையும் உடையது என்பது 'பொன்வாய் மணிச்சிரல்'[133] 'மணிச்சிரல்'[134] என வரும் தொடர்களால் தெரிகிறது. இது நீராடும் மகளிர் தம் மகரக் குழையினை இரை எனக் கருதி எடுத்துச் செல்லும் என்பதை அறியலாம்.[135] தளவம், சிரல்வாய் போன்ற [illegible], 'சிரல்வா யுற்ற தளவின்'[136] 'தளவின் சிரல்வாய்'[137] என வருவனவற்றால் அறியலாம்.

கள்ளிச் செடி சிரற் பறவையின் தலையைப் போன்ற தோற்றம் என்பது, 'சிரல் தலைக் கள்ளி'[138] என்பதால் அறியலாம். சிச்சிரல் இரை மீன்களை அருந்தும் என்பது, 'வராஅல் நடந்திய சிச்சிரல்'[139] என்ற அடியால் தெரிகிறது. சிரல் சிறகினைப்போல மலர் தோன்றுவதை, 'சிரற்சிற கேய்ப்ப அலர்'[140] என வரும் அடியால் அறியலாம்.

---

123. சிறுபாண்.4.
124. நற்.9:10-11.
125. நற்.157:5.
126. கலி.30:7-8.
127. அகம்.279:12.
128. பட்டினப்.54-56.
129. புறம்.269:1.
130. நற்.97:2-3.
131. நற்.169:4; ஐங்.447:2; அகம்.324:10.
132. குறுந்தொகை பதிப்பு, பக்.187.
133. சிறுபாண்.181.
134. பெரும்பாண்.313.
135. பெரும்பாண்.312-313.
136. நற்.61:6.
137. ஐங்.447:2.
138. நற்.169:4.
139. அகம்.286:6.
140. அகம்.324:10.

<u>செம்பூழ்</u>

இது ஒரே பாடலொன்றில் குறிக்கப்படுகிறது.[141] இது காடைவகையாகும். இதைக் குறும்பூழ் என்றும் வழங்குவர். இது குறுங்காலினையும் கருமையான கழுத்தினையும் உடையது என்பது 'குறுங்கால் கறையணற் குறும்பூழ்'[142] என்ற அடியால் புலனாகும். இது கரிய மாலையைச் சூடியது போன்ற கழுத்தினை உடைய சிவந்த பறவை. இதனை, 'கருந்தாள் மிடற்ற செம்பூழ்ச் சேவல்'[143] என்ற அடியால் அறியலாம். பசிய தினையைக் கவரும் என்பது 'பைந்தினை யுணங்கல் செம்பூழ் கவரும்'[144] என்ற அடியால் தெரிகிறது. இதனை நெய்யிட்டுப் பொரித்து, தொடுகறியாக உண்பர் என்பதை, 'நெய்கனி குறும்பூழ் காயம் ஆக ஆர்பதம்'[145] என்ற அடியால் அறியலாம்.

வண்டு (Bee)

இது 12 [illegible] பாடல்களில் குறிக்கப்படுகிறது.[146] இது பிரசம் (ஐங்.406:3), சுரும்பு (ஐங்.416:3), தும்பி (கலி.105:42) எனப் பலவாறு பெயர் பெறும். திருத்தக்க தேவர் சுரும்பு, வண்டு, தேன், ஞிமிறு என நான்கு இனங்களைச் சிறப்பாகக் கூறுவர்.[147] இது சில புள்ளிகளையும் வரிகளையும் உடையது என்பது 'பொறிவரி வண்டு'[148] 'வரி வண்டு'[149] எனக் குறிப்பதால் அறியலாம். இது நுண்ணிய சிறகுகளை உடையது என்பது 'வரிவண் சிறகின் வண்டு'[150] 'நுண்சிறை வண்டு'[151] என வரும் அடிகளால் தெரிகிறது. மென்மையான சிறகுகளை உடையது என்பதை 'மென்சிறை வண்டு'[152] 'வண்டின் நுண் சிறை'[153] 'குறுஞ்சிறை வண்டு'[154] 'நுண்சிறை வண்டினம்'[155] 'நுண்சிறை வண்டின் மென்பறைத் தொழுதி'[156] என வரும் அடிகளில் காணலாம். அறுகாலுடையது என்பதை 'அறுகால் வண்டு'[157] என்ற தொடரால் அறியலாம்.

---

141. ஐங்.469:1.
142. பெரும்பாண்.204-205.
143. அகம்.63:7.
144. ஐங்.409:1.
145. புறம்.389:1-2.
146. நற்.238:3; குறு.370:2, ஐங்.406:3 (பிரசம்) 416:3 (சுரும்பு) 447:3; 489:1; அகம்.104:2; 164:5; 204:6; 234:12; கலி.105:42 (தும்பி) முல்லைப்.8.
147. சீவ.892.
148. அகம்.164:5; 160:6.
149. நற்.249:6; குறு.260:1; கலி.60:2; அகம்.269:12.
150. நற்.399:3.
151. கலி.118:11.
152. அகம்.41:13.
153. அகம்.204:6.
154. ஐங்.447:3.
155. ஐங்.489:1.
156. அகம்.234:12.
157. கலி.35:9.

வண்டின் ஒலியை யாழிசையோடு இணைத்துக் குறிக்கும் தொடர்கள் பல காணப்படுகின்றன.[158] இவற்றுள் 'யாழிசை யினவண் டார்ப்ப (முல்லைப்.8) 'சீறியாழ் யாணர் வண்டின் இம்மென இமிரும் (நற்.30:3) 'யாழ்போல வண்டார்க்கும் புறவு (கலி.32:9) 'வண்டுயா ழாக' (அகம்.82:6) என வருவன குறிப்பிடத்தக்கன. 'தேனுண்டு களித்த வண்டுகள் புதரிடையே ஒலிக்கும் என்பது, 'தாதார் பிரசமூசும்'[159] 'தாதார்ந்த, 'களிச்சுரும் பரற்றும் காமர் புறவின்'[160] எனக் கூறுமாற்றால் தெரிகிறது.

முல்லை நிலத்தே வண்டுகள் ஒலிக்கும். இதை 'வண்டு ஆர்க்கும் தண்ணறும் புறவின்'[161] என்ற அடியால் புலனாகும். பல மலர்களுடன் இணைந்த, வாய் திறப்ப, பட, ஆரந்த எனப் பலவாறு கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அம்மலர்களுள் பிடவம் (நற்.183,238), காந்தள் (நற்.399, குறுந்.265; ஐங்.226), தும்பல் (குறுந்.370) முல்லை (அகம்.104) மௌவல் (அகம்.128), நெய்தல் (அகம்.130), கோதை (அகம்.208) என வருவன குறிப்பிடத்தக்கன.

முல்லை மலரை வண்டுகள் மூசும் இதனை 'முல்லை..தாவி, மாதர் வண்டொடு சுரும்புபட'[162] என வரும் அடிகளால் அறிகிறோம். இது முல்லை மலரில் காந்தாரப் பண்ணினை இசைக்கும் என்பதை 'முல்லைசேர் தீந்தேன், காந்தாரம் பாடும் களிற்று'[163] எனக் கூறுமாற்றால் அறிகிறோம். வண்டு பெறும் சிறப்புத்தொடர்கள் பல. அவற்றுள், 'வண்டின் அஞ்சிறைத் தொகுதி'[164] 'வண்டு ஆர்த்தும் சுந்தளாள்'[165] 'வண்டுமிர் இன்னிசை'[166] 'வண்டு மூழ்மாலை'[167] 'வண்டு நறநாற்றம்'[168] 'வண்டுபடு கண்ணி'[169] என வருவன அறிதற்குரியன.

வௌவால் (Bat)

இது முல்லைப்பாடலொன்றில் குறிக்கப்படுகிறது.[170] இது 'மாச்சிறைப் பறவை' எனக் குறிக்கப்படுகிறது. கரிய சிறகினை உடையதாய் உயர்ந்த மரக்கிளைகளில் வாழும் என்பது 'செழுயர் சினைய மாச்சிறைப் பறவை'[171] என்ற அடியால் தெரிகிறது. ஊன் போன்ற பற்களை உடையதாய் மாமரத்தே உயர்ந்த கிளைகளில் தொங்கும் என்பதை

---

158. முல்லைப்.8; பொருந.211, குறிஞ்சிப்.147-148; கலி.32:9;36:3; 131:9; அகம்.82:6; 104:2; நற்.30:6.
159. ஐங்.406:3.
160. ஐங்.416:1-2.
161. அகம்.104:2.
162. நற்.366:5-6.
163. திணை.மா.நூ.100:3-4.
164. அகம்.204:6.
165. கலி.1:10.
166. நற்.323:9.
167. குறுந்.97:8.
168. நற்.56:2.
169. மதுரை.199; அகம்.191:3.
170. அகம்.244:2.
171. அகம்.244:2.

'மாஅத்த முள்ளெயிற்று வாவல், ஓங்கல் அஞ்சினைத் தூங்கு தவ்வும்'[172] என்ற அடிகளால் அறியலாம். வளைவு கொண்ட அழகிய சிறகினை உடையது என்றும் மாலையில் பழமரங்களை நாடிச் செல்லும் என்றும் கருத்தினைத் 'தாஅ அச்சிறை நொப்பறை வாவல், பழுமரம் படரும் பையுள் மாலை'[173] என வரும் அடிகளில் காண்கிறோம். வாவலுக்கு மாலைக் காலம் உரிது (A bird of evening) என்பதை, 'வாவலுகக்கும் மாலை'[174] எனக் கூறுவதால் அறிகிறோம். வாவல் விளைதொறும்பறந்து செல்லும் போது பலத்த ஒலியைப் பெறும் என்பர,

'வெவ்வளி உழந்த வாவல் விளைதொறும்
... நன்கூர் உறைப்ப'[175]

என்னும் அடிகளால் புலனாகும்.

வாவலின் கண்ணும் சிறகும் பெரும் சிறப்பினைத் திரு. காலின்ஸ் என்ற புலவர்,

'Now air is hush'd save where the weak eyed bat, with short shrill flits by on leathern wing'[176]

எனக் குறிப்பிட்டதை ஈண்டு அறிதற்குரியது.

வானம்பாடி (Indian Skylark)

பல நூற்பாடல்களில் குறிக்கப்படுகிறது.[177] இதைச் சாதகப்புள் என வழங்குவர்; பறவை நூலார் 'Alauda Gulgula' இன வகையைச் சார்ந்தது என்பர்.

'தளி உணவின் தற்பாடிய புள்' (பட்டினப்.2-3) என்பதிலுள்ள 'புள்' என்பது வானம்பாடியைக் குறிக்கும் என்று நச்சினார்க்கினியர் கூறுவர்.[178]

'வானம்பாடி மழை நீர்த்துளியை உணவாகக் கொள்ளும் என்பது 'தளி உணவின் ...புள்...புயல்'[179] 'துளிநசை வேட்கையான் மிசைபாடும் புள்'[180] 'துளி நசைப் புள்'[181] என வரும் அடிகளால் தெரிகிறது. மேலும் வானம்பாடி 'மேகத்தைப் பார்த்து துளியை வேண்டி பாடுமாறுபோல' என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளமை ஈண்டு அறிதற்குரியது.[182] 'வானம்பாடியின் அயர் மழை நீரால் தீரும்' என்பதை 'வானம்பாடி வறங்களைந்து'[183] என்னும் அடியால் அறியலாம்.

---

172. நற்.87:1-2.
173. குறுந்.172:1-2.
174. அகம்.339:3; 378:2.
175. நற்.279:3-4.
176. Collins, W., The Evening, p.9-10.
177. ஐங்.418:1.
178. பத்துப்பாட்டு டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக்.531.
179. பட்டினப்.3-4.
180. கலி.46:20.
181. புறம்.198:25.
182. சீவக.2837 ந.உரை.
183. ஐங்.418:1.



'செல்க தேரே நல்வலம் பெறுந

நாணுடை அரிவை மாணலம் பெறவே'

அகம். 34.

முல்லைத் திணை மாந்தர்

தலைவன்

கற்பு நிகழ்த்தற்குரியோர்

ஐந்திணை, காதலை – அக உணர்வை – அடிப்படையாகக் கொண்டது. [இவ்வைந்திணையும் கற்பு நிகழ்த்தற்கு உரியவர் பல்லோர். இதனை,

> 'பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
> சீர்த்தகு சிறப்பின் கிழவன் கிழத்தியொடு'[1]

> 'பாணன் கூத்தன் விறலி பரத்தை
> யாணம் சான்ற அறிவர் கண்டோர்'[2]

என வரும் தொல்காப்பிய நூற்பாக்களால் அறிகிறோம்.]

தலைமக்கள் பண்பு நலன்

தலைவன் தலைவிக்கு உரிய பண்புகள் பத்து. அவை வருமாறு:

> 'பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
> உருவு நிறுத்த காம வாயில்
> நிறையே அருளே உணர்வொடு திருவென
> முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே'[3]

தொல்காப்பியர் தலைமக்கட்குப் பொருந்தாத பண்புகளாக, அழுக்காறு, கொடுமை, தம்மைப் பெரியராக நினைத்தல், புறங்கூறுதல், கடுஞ்சொல் கூறுதல், பொச்சாப்பு, முயற்சியின்மை, குடிப்பிறப்பு, இன்புறல், பேதைமை, மறதி, தான் காதலிக்கப்பட்டாரைப் போல்வாரைக் கண்டவழி அவர் போல்வார் என ஒப்பிட்டு நினைத்தல் ஆகியவைகளைக் கூறுவர்.[4]

தலைமகன் குலத்தில் மிக்கோனாய்[5] தலைவியின் நலனைப் புகழ்ந்து கொள்ளும்[6] நிலையை உடையவனாய் விளங்குபவன் என்பதைக் காண்கிறோம். தலைமகன் 16 வயதும் தலைமகள் 12 வயதும் உடையவராகத் திகழ்வர் என்பர் செப்புவர்.[7] [தலைவன் தலைவியின் உணர்வுகள் காமப்பொருள் பற்றிப் பல பொருள்கள் மேல் வெளிப்படும்.[8]]

---

1. தொல்.பொருள்.490.
2. தொல்.பொருள்.491.
3. தொல்.பொருள்.269.
4. தொல்.பொருள்.270.
5. தொல்.பொருள்.90.
6. தொல்.பொருள்.179.
7. தொல்.பொருள்.90.
8. தொல்.பொருள்.194.

தலைவன்

தொல்காப்பியர் அகப்பாடல் மாந்தருள் தலைவன் தலைவி ஆகியோர் தம் பண்புகளை மட்டுமே இலக்கணத்திற்குரியவாகக் கூறுவர்.

தலைமகன் பெறும் பெருமை, அறிவு ஆகிய இலக்கணப் பண்புகளை, 'பெருமையும் உரனும் ஆடூஉ மேன'[9] எனக் கூறுவர்.

தலைமகன் தலைமகளை வரையாது பிரிதல் இல்லையென்பதை 'வரையாது பிரிதல் கிழவோற் கில்லை'[10] என வரும் நூற்பாவால் அறியலாம்.

தலைவன் மாட்டு நிகழும் கூற்றுக்களை 'ஒன்றாத் தமரினும்'[11] எனத் தொடங்கும் நூற்பாவால் அறியலாம்.

தலைமகன் கூற்று வகைகளாக முப்பத்தொன்பதினைக் கற்பியலில் காணலாம். அவற்றுள்,

'கரணத்தின் அமைந்து முடிந்த காலை
நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்
எஞ்ச கலைப்பயின் திசை தொட்டு
வாரோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென
அடிசிலும் பூவும் தொடுதற் கண்ணும்
புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்
வேற்றுநாட் டகல்வயின் விழுமத் தானும்
பேரிசை ஊர்திப் பாகர் பாங்கினும்
அருந்தொழில் முடித்த செம்மற் காலை
விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்
மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும்
கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்'[12]

என வருவன முல்லைக்குரியன எனலாம்.

பிரிவு களவிலும் கற்பிலும் நிகழும். தலைவன்பால் ஏற்படும் பிரிவின் வகை ஆறு என்பர்.

---

9. தொல்.பொருள்.95.
10. தொல்.பொருள்.139.
11. தொல்.பொருள்.44.
12. தொல்.பொருள்.144.

'ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்
றாங்க ஆறே அவ்வயிற் பிரிவே'[13]

தொல்காப்பியர் பிரிவின் வகைகளைத் தொல்.பொருள்.27,30,185 ஆகிய நூற்பாக்களில் கூறுவர்.

பிரிவில் ஓதற்பிரிவே முதலில் நிகழும் என்பர் பேராசிரியர்.[14] வேந்தர்க்குப் பிரியும் பிரிவு முறைப்படுத்தப்பட்டு அமையும். இதனை, 'வேந்துறு தொழிலே யாண்டினது அகமே'[15] எனக் கூறுமாற்றான் அறியலாம். தலைவன் வினை முடிந்த பின்னாலே இடையில் தங்குவது இல்லை. ஏனெனில், தலைவன் தன் உள்ளம் போல உற்றுழி உதவும் குதிரை இருப்பதால் விரைவாகத் திரும்புவான்.

'வினையிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை
உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியற் கலிமா உடைமை யான'[16]

பகைவயிற்பிரிந்து செல்லும் தலைவன், பாசறைக்குத் தலைவியோடு செல்வது மரபன்று.

'எண்ணரும் பாசறைப் பெண்டொடும் புணரார்'[17]

அவ்வாறே பொருட் பிரிவிலும் செல்லாமையை, 'முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை'[18] எனக் கூறுதலால் அறியலாம்.

பிரிவில் தலைவன் தலைவியின் முன்னர் தன்னைப் புகழ்ந்துகொள்வான்.

'கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி
கிழவோன் வினைவயின் உரிய என்ப'[19]

வினைமேற் கொண்டிருக்குங்கால் தலைவியின் நினைவு எழாது; வினை முடிந்த வெற்றிக்காலத்துத் தோன்றுதல் வெளிப்படையாகும்.

'கிழவி நிலையே வினையிடத்து உரையார்;
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்'[20]

---

13. இறையனார். 35.
14. திருக்கோவையார், பக்.364.
15. தொல்.பொருள்.187.
16. தொல்.பொருள்.192.
17. தொல்.பொருள்.173.
18. தொல்.பொருள்.37.
19. தொல்.பொருள்.179.
20. தொல்.பொருள்.184.

<u>முல்லைத்திணை மாந்தர்</u>

முல்லைத்திணைப் பாடல்களுள் முல்லை மாந்தராக, தலைவன், தலைவி, தோழி, செவிலி, பாணன், உழையர், சுற்றத்தார், பாகன், காதல் உணர்ந்தோர், கண்டோர், பரத்தை, பெருமுது பெண்டிர் எனப் பன்னிருவர் இடம் பெறுகின்றனர். இவர்கள் முறையே 91, 56, 53, 15, 4, 3, 2, 1, 1, 1, 1, 1, என்ற வரிசையில் கூற்றுகளைப் பெறுகின்றனர். இனி, இவர்களுள் முதலிடம் பெறும் தலைவனைக் காண்போம்.

<u>முல்லைநிலத் தலைவன் பெயர்</u>

தொல்காப்பியர் நிலத் தலைவர்களாகத் தலைமக்களையும் பொதுமக்களையும் குறிப்பிடுவர்.[21] முல்லைப்பாடல்களில் (முல்லைக்கலியைத் தவிர) தலைமக்களே தலைவர்களாக உள்ளனர். முல்லைக்கலியில் மட்டும் பொதுமக்களாகிய ஆயர்கள் தலைவர்களாக உள்ளார்கள். முல்லைப்பாடல்களில் வரும் தலைவர்களுள் பெரும்பான்மையோர் போர் வீரரே. 'போர்வல் இளையர் தாங்கலம் வாழ்த்த'[22], 'வென்வேல் இளையர் இன்புற' 'விரைப்பரி வருந்திய வீங்குசெலல் இளையர்'[24] என வரும் அடிகளால் முல்லைப்பாடல்கள் தலைவர்கள் நாட்டுத் தலைவர்களாகவும், குறுநில மன்னர்களாகவும் விளங்கினார்கள் என்பதை அறிகிறோம்.

முல்லைநிலத் தலைவன் பெயர்களாக, 'கானகநாடன்', 'குறும்பொறை நாட. 'தோன்றல்', 'அண்ணல்' என்பவை விளக்கும்.[25] இவற்றுள் 'குறும்பொறை நாடன்'[26] 'தோன்றல்'[27] என்னும் பெயர்கள் முல்லைத்திணைப்பாடல்களில் சிறக்க அமைகின்றன. மேலும், 'குறும்பல் பொறைய நாடு கிழவோன்'[28] 'புறவின் நாடன்',[29], 'புறவின் நாடு கிழவோன்'[30], 'புன்புல நாடன்'[31], 'மென்புல வைப்பின் நாடு கிழவோன்'[32] 'வன்புல நாடன்'[33], 'வரையக நாடன்'[34], 'முனைநல் ஊரன்'[35], 'நல்லக ஊரன்'[36], 'செம்மல்'[37], 'பாணர் பெருமகன்'[38], 'மறங்கெழு குரிசில்'[39] ஆகிய பெயர்கள் கூர்ந்து அறிதற்குரியனவாகவும் தொன்மைச் சிறப்புடையனவாகவும் விளங்குகின்றன.

---

21. தொல்.பொருள்.22-24.
22. அகம்.74:8.
23. அகம்.104:3.
24. நற்.21:1.
25. பிங்கல நிகண்டு.547.
26. அகம்.4:13.
27. ஐங்.500:5; அகம்.394:12.
28. ஐங்.404:4.
29. ஐங்.405:4; 424:1.
30. ஐங்.406:4.
31. ஐங்.421:3.
32. ஐங்.407:4.
33. ஐங்.469:2.
34. ஐங்.498:5.
35. புறம்.14:21.
36. ஐங்.459:8.
37. குறுந்.242:6.
38. ஐங்.458:3.
39. ஐங்.471:3.

தலைவன் கூற்றுக் கேட்போர்

தலைவன் கூற்றுகளின் மொத்த எண்ணிக்கை 91. அவை வருமாறு:

நற்றிணை	குறுந்தொகை	ஐங்குறுநூறு	கலித்தொகை	அகநானூறு	
21,42,59, 81,139, 142,161, 169,221, 242,321, 371,374.	99,162, 233,270, 323,400	411-420, 422, 426-430 441-450 477,478, 479, 481-495	109	24,34,44, 54,64,84, 94,114, 124,134, 144,154, 164,174, 204,214, 224,234, 244,254, 274,284, 304,334, 344,374	
மொத்தம் 13	6	45	1	26	91

அவற்றுள் பாகற்குக் கூறியவை 44;[40] தலைவிக்குக் கூறியவை 19.[41] பாசறைக்கண் கூறியவை 15.[42] பாணற்குக் கூறியவை 3.[43] நெஞ்சிற்குக் கூறியவை 2.[44] தோழிக்குக் கூறியது 1.[45] முல்லைக்குக் கூறியது 1.[46] கண்டார்க்குக் கூறியது 1.[47] மழையை வாழ்த்திக் கூறியவை 2.[48] கைக்கிளையாய்க் கூறியது 1.[49] வேந்தர்க்குக் கூறியது 1.[50] புறவு நோக்கிக் கூறியது 1.[51] தலைவன் கூற்றுகளில் செலவு இடம் பெறாமை குறிப்பிடத்தக்கது. தலைவன் கூற்றுகளில் பிரிவைப் பெறுபவை 24.[52] இவற்றுள் 10 கூற்றுகள் (ஐங்.) வினை முற்றி வந்த தலைவன் தலைவிக்குக் கூறியவை என்பது குறிப்பிடத்தக்கது.

---

40. நற்.(10): 21,42,59,81,142,161,221,242,321,371.
    குறு.(3): 233,323,400.
    ஐங். (12): 422,425,481-490.
    அகம்.(19): 34,44,54,64,94,114,124,134,154,204,224,234, 244,254,274,284,334,344,374.
41. ஐங். (19): 411-419, 426-430, 491-495.
42. ஐங்.(9): 442-450.
    அகம்.(6): 24,84,164,174,214,304.
43. ஐங். (3): 477, 478, 479.
44. நற். (1): 169; அகம்.(1): 144.
45. குறு.(1): 99.
46. குறு.(1): 162.
47. நற்.(1): 374.
48. நற்.(1): 139; குறு.(1):270.
49. கலி(1): 109. 50. ஐங்.(1):441. 51. ஐங்.(1):420.
52. நற்.139; குறு.99,270,400; ஐங்.411-419, 426-430, 491-495; அகம்.254.

தலைவன் கூற்று மிகுந்த நூல்கள்

தலைவன் கூற்றுகளுள் மிகுதியானவற்றைப் பெறும் நூல்கள் ஐங்குறுநூறும், அகநானூறுமாகும். இவற்றின் எண்ணிக்கை முறையே 45, 26 என்று காணப்பெறுகின்றன. தலைவன் பாசறை இருத்தல், தலைவி மையாற்றி இருத்தல், தலைவன் வினைமுற்றி மீளல், தலைவன் தலைவியுடன் கூடி மகிழ்தல் ஆகிய பகுதிகள் இந்நூற்பாடல்களில் பொலியக் காணலாம்.[53]

தலைவன் புலவர்கள்

தலைவன் 91 கூற்றுகளைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 28.[54]

தலைவன் கூற்றுகளை மிகுதியாகப் பாடிய புலவர் பேயனார். பாடிய பாடல்கள் 48. இடைக்காடனும், மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனாரும் முறையே ஐந்தைந்து பாடல்களைப் பாடி இரண்டாமிடத்தைப் பெறுகின்றனர்.[55] தலைவன் கூற்றுகளுள் ஆசிரியர் பெயர் காணப்படாதன மூன்று.[56] பெரும்புலவர்களாகிய ஔவையாரும், கபிலரும் முல்லைப்பாடல்களால் தலைவன் கூற்றுகளைச் சிறப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.[57]

---

53. ஐங்.442-450; அகம்.224,244; ஐங்.481-490; 411-415.
54. 1. அகம்பன்மாலாதனார் நற்.81; 2. ஏர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார் அகம்.64; 3. ஆவூர் மூலங்கிழார் அகம்.24; 4. இடைக்காடனார் நற்.142; அகம்.274; 284; 304; 374; 5. ஔவையார் நற்.371; குறு.99; 6. கபிலர் நற்.59; 7. கருவூர்ப் பவுத்திரன் குறு.162; 8. குடவாயிற் கீரத்தனார் நற்.42; அகம்.44; 9. கொற்றங் கொற்றனார் அகம்.54; 10. சீத்தலைச் சாத்தனார் அகம்.134; 11. சேந்தம் பூதனார் அகம்.84; 12. நல்லுருத்திரனார் கலி.109; 13. நன்பலூர்ச் சிறுமேதாவியார் அகம்.94; 14. பதடிவைகலார் குறு.323; 15. பாண்டியன் பன்னாடு தந்தான் குறு.270; 16. பெருந்தலைச் சாத்தனார் அகம்.224; 17. பேயனார் குறு.233, 400; ஐங்.411-420; 422; 425-430; 441-450; 477-479; 481-495; அகம்.234; 18. பேரி சாத்தனார் அகம்.214; 19. பெருங்கௌசிகனார் நற்.139; 20. பொதும்பில் புல்லாளங் கண்ணியார் அகம்.154; 21. மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் நற்.321, அகம்.144; 174; 244,344; 22. மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் நற்.221, அகம்.124,254; 23. மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார் அகம்.204; 24. மதுரைக் கூத்தனார் அகம்.334; 25. மதுரைத் தமிழ்க் கூத்தன் நாகன் தேவனார் அகம்.164; 26. மருதன் இளநாகனார் நற்.21; அகம்.34; 27. வன்பரணர் நற்.374; 28. விழிகட் பேதைப் பெருங்கண்ணனார் நற்.242.
55. குறு.233, 400; ஐங்.411-420; 422; 425-430; 441-450; 477-479; 481-495; அகம்.234 -(48); நற்.142; அகம்.274,284, 304, 374 (5); நற்.321; அகம்.144, 174, 244, 344.
56. நற்.161, 169; அகம்.114.
57. நற்.371; குறு.99; நற்.59.

கற்பும் சிறப்பும்

கார்கால மாலைக்காலத்தே பல்வித மலர்கள் மணம் பரப்பித் திகழும். மாவும் புள்ளும் பிரியாது உறையும். தலைவியோ, தலைவன் குறித்த கார்காலம் வரும் வரையில் 'கற்பெனப் படுவது சொல்திறம் பாமை'[58] எனத் தலைவன் சொற்பிழையாது இல்லறத்தை நல்லறமாகச் செய்து ஒழுகுவாள். குறித்த பருவத்தில் தலைவன் வருகையைக் காம உணர்வோடு எதிர்பார்த்து ஆற்றியிருக்கும் பண்பு தலைவிக்கே உரியது. கார்காலம் வந்தும் தலைவன் வாராமையால் ஏற்படும் பிரிவுத் துன்பம் தலைவிக்கு துன்பமிகு; எனினும், அத்துன்பம் பிறர்பால் காக்கப்படுவது. இவ்வாறு வெளிப்படுத்துவது தலைவிக்குரிய இலக்கணமாகாது; பண்பாகாது. இக்காரணம் பற்றியே முல்லைத்திணைப்பாடல்களுள் இடம் பெறும் தலைவருடைய 91 கூற்றுகளில் 70 கூற்றுகள், தலைவி பெறும் பிரிவுத் துன்பத்தின் பல்வேறு நிலைகளை தெள்ளத்தெளிவாய் நெஞ்சோடு விளக்குகின்றன. மேலும், தலைவி உறும் துன்பத்தையெல்லாம் தலைவன் பாசறையில் கூறும் கூற்றுகளாகவே (44) சிறப்பாகப் பெறப்படுகின்றன என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும்.

பிரிவுத்துன்பத்தின் அளவைக் குறிப்பன, பாலை, முல்லை, நெய்தல் ஆகிய பாடல்களில் காணலாம். பாலையில் பிரிவு நீட்ட பிரிவாகவும் நெய்தலில் பிரிவு இரக்கத் தக்க பிரிவாகவும் அமையும்போது, முல்லையில் பிரிவு ஆற்றியிருத்தல் பிரிவாக அமைவது குறிப்பிடத்தக்கது. இதனை, 'The Palai region were symbolic of long symbolic of long separation and while 'mullai' represents the heroines virtuous suppression of grief and 'neydal' the pitiful expression of grief. Between these three regional there is a progressive length of separation, progressive element of danger and consequents progressive sorrow'[59]
எனத் தனிநாயக அடிகள் விளக்கக் காண்கிறோம்.

தலைவன் தலைவி கூற்றுகளில் காணும் ஆற்றியிருக்கும் பண்பு, குறிப்பாக, தலைவனை நோக்கிக் கூறும் கூற்றுகளில் தலைவி பாசறைக்கண் இருந்த கூறும் கூற்றுகளிலும் சிறக்க அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

---

58. ஔவையார், கொன்றை வேந்தன், 14.
59. Thaninayagam,S., Nature in ancient Tamil Poetry, p.102.

<u>பாகற்குக் கூறிய கூற்றும் துறையும்</u>

தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லிய 44 கூற்றுகளை, 1. வினைமுற்றி மீள்வோன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.[60] 2. வினை முற்றி மீளுந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.[61] 3. வினை முற்றிப் பெயரும் தலைவன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.[62] 4. வினை முற்றி மறுத்தரா நின்ற தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.[63] 5. வினை முற்றி மறுத்தரா நின்ற தலைமகன் கார் கண்டு பாகற்குச்சொல்லியது.[64] 6. வினை முற்றி மறுத்தரா நின்றான் பாகற்குச்சொல்லியது.[65] 7. பட்ட பின்றை வரையாது சென்று வினை முற்றி மீளும் தலைமகன், தேர்ப்பாகற்குச்சொல்லியது.[66] 8. வினை முற்றியான் பாகற்கு உரைத்தது.[67] 9. வினை முற்றி வந்த தலைமகன் தேர்ப்பாகனைத் தலையளித்தது.[68] 10. மீள்வான், தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.[69] 11. வினை முற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.[70] 12. வினை முற்றி மீண்ட தலைமகன் பாகற்குரைத்தது.[71] 13. வினை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.[72] 14. வினை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குரைத்தது.[73] 15. வினை முடித்து மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.[74] 16. தலைமகன் தேர்ப்பாகற்குரைத்தது.[75] 17. தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.[76] 18. வினை முற்றி வந்தெய்திய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.[77] 19. பாசறை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.[78] எனப் பல துறைகளில் காண்கிறோம்.

இவற்றுள், வினை முற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது; வினை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது; வினை முற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது என்ற அமைப்புடைய துறைகள் முறையே 10,8,6 என்ற வரிசையில் பாடல்களைப் பெற்றுள்ளன. வினை முற்றி மீண்ட தலைமகன் என்பதற்குப் போர் செய்யும் வினையை முடித்தவன் எனவோ, பொருளீட்டும் வினையை முடித்தவன் எனவோ பொருள் கொள்ளலாம் எனினும், போர்ப்பொருட்டுப் பிரிந்த தலைவனையே பெரும்பாலும் காண்கிறோ

---

60. நற்.21,42,59,321.
61. நற்.142; ஐங்.425; அகம்.44,64,94,114.
62. நற்.161.
63. நற்.221.
64. நற்.242.
65. நற்.371.
66. குறு.233.
67. குறு.323.
68. குறு.400.
69. ஐங்.422.
70. ஐங்.481-490.
71. அகம்.134.
72. அகம்.34,154,204,224,224,244,284,334,344.
73. நற்.81.
74. அகம்.54.
75. அகம்.124.
76. அகம்.234,274.
77. அகம்.254.
78. அகம்.374.

தலைவன் தேர்ப்பாகற்குச் சொல்லிய பாடல் ஒன்றும் காணப்படவில்லையாயினும், அகநானூற்றின் 94ஆம் பாடல் வினை முற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச்சொல்லியது; தலைமகன் பாகற்குச் சொற்றதூஉமாம் என இரு துறைக்கும் ஏற்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

அகநானூற்றின் 284ஆம் பாடல், 'வினை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது; தன்னெஞ்சிற்குச் சொல்லியதூஉமாம்' என இரு துறைக்குரியதாய் அமைந்துள்ளது.

களவு வெளிப்பட்ட பிறகு வரைவாக சென்ற வினை முற்றி மீளும் தலைமகன், தேர்ப்பாகற்குச் சொல்லியது என்னும் துறை, குறுந்தொகையில் 233ஆம் பாடலில் மட்டும் காணப்படுகிறது. இக்குறும்பாடல், பொருள்வயிற் பிரிந்த தலைவனைக் காட்டுகிறது எனலாம்.[79]

'வல்லியற் புரவி' (அகம்.234:9) 'கடுமா' (அகம்.334:15) எனக் கூறுவதால் வினையிற் பிரிந்த தலைவன் மீண்டு வருவதற்கான குதிரைத் தேர் தாமதமில்லை என்பதும், அதற்கேற்றவாறு பாகன் குதிரையை விரைந்து செலுத்தினான் என்பதும் புலனாம்.[80]

தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறும் கூற்றுகள் பெரும்பாலும் 'கரணத்தின் அமைந்து முடிந்த காலை'[81] என்னும் நூற்பாவின் வரும் 33 கூற்றுகளில் 'பேரிசை ஊர்திப் பாகர் பாங்கினும்' என்னும் கூற்றில் அடங்கும் எனலாம்.

இன்ப உணர்வுகள்

தலைவன் பாகற்குக் கூறிய கூற்றுகளில் தலைவி பற்றிய இன்ப உணர்வுக் குறிப்புகள் பல இடம் பெறுகின்றன. அவற்றுள்,

'கான வாரணம் ஈரயம் பெற்றுப் பெடையொடு நம்முடன் நோக்குகின்ற தலைவி பாராய்!' எனத் தலைவியால் தான் பெறும் இன்பம் புலப்படுத்துதல்.[82] இல்பொருளால் தலைவி ஆற்றாமை மிகுந்ததை மறந்திருப்பாள் என நினைத்தல்.[83] தலைவியின் விருந்தயர் விருப்பா வாகிய புன்னகையைக் காண விரும்பல்.[84] புல்லிருந்து நல்லறம் செய்யும் தலைவியை 'முல்லை சான்ற கற்பின் மெல்லியல்' எனப் பாராட்டல்.[85] தலைவன் வருகையைத் தலைவிக்குக்

---

79. இறையனார். 28, பக்.133.
80. தொல்.பொருள்.192.
81. தொல்.பொருள்.144.
82. நற்.21.
83. நற்.42.
84. நற்.81.
85. நற்.142; அகம்.274.

கிளர்ச்சைப் புள்ளினம் கரைந்த தெரிவித்தல்.[86] தலைவி புதல்வன் தலையிடம் சென்று 'வந்தீக எந்தை' எனும் இனியசொல்லைக் கேட்க விரும்பல்.[87] மடமான் பிணையோடு செல்ல பிணை மாலைத் தேரும் காட்சியால் தலைவி பால் தன் அன்பின் மிகுதியை வெளிப்படுத்தல்.[88] 'மாலைப்பொழுதே வருவதனை நோக்கி வருந்தலனே' எனல்.[89] 'மறை பொருளைக் கண்டு அழுவன்' எனல்.[90] 'தலைவியைப் பிரிந் திருக்கும் நாள் நன்மைப் பயனற்றது' எனக் கூறல்.[91] 'தலைவியின் காம நோயைக் களைந்த தேரோடு தலைவியின் உயிரையும் தந்தாய்!' எனப் பாகனைப் பாராட்டல்.[92] தலைவியின் பொறுத்தற்கரிய துன்பத்தைத் தீர்க்க விரைதல்.[93] 'தோள் நலமுடையாளின் நினைவுத் துன்பத்தை விலக்குவாய்' எனல்.[94] 'தலைவியைக் காண ஒரு பொழுது ஆராய் தீரும்!' என வருந்தல்.[95] தலைவியின் நுதல் நலமும் மெய்க்கவினும் பெற விரைதல்.[96] 'தலைவியின் மாலைத் துயர் நீக்கி நெஞ்சம் உவக்க விரைக!' எனல்.[97] முல்லை மலரும் மாலைத் துன்பம் நீக்க இனிய சொல்லை உடையாளைக் காண விரைதல்.[98] செந்தார்ப்பைங்கிளிய முன்கையில் ஏந்தி மழலை இன்சொற்களைப் பயிற்றுவிக்கும் நாடு அரிவையின் மாலைப் பெற விரும்புதல்.[99] 'தலைவியின் பண்புடை ஆகத்த இன்துயில் பெறுவேன்!' எனக் கூறல்.[100] 'நெடுவே, என் மனையுள் விளையாட வருவையாயின், நினக்கும் என் பால் தருவேன்' எனக்கூறும் தலைவியைக் காண துடித்தல்.[101] 'புலம்புகொள் மாலைக் காலத்தே தலைவியின் கையறு நிலை நீக்க விரைக' எனல்.[102] தலைவியின் கற்பை 'மாசில் கற்பின் அரிவை' எனப் போற்றல்.[103] 'சேக்கையிடத்தே தலைவி இன்புற விரைக' எனல்.[104] மானுடன் புணரும் பிணைமான் தெரிந்து மயிலொடு கேட்பின் புணரா தொழியும் என இரங்கி 'மெல்லச் செலுத்துக!' எனத் தலைவியின் மென்மை உள்ளத்தைப் புலப்படுத்தல்.[105] 'மாமை நிறமுடையாள் வருத்தம் நீக்க விரைக' எனல்.[106] 'வளைகொள் இவ்வியிர்த்தனை' என வருந்தலனைப் போற்றல்.[107] 'பசலையள் நுதல் பிரப்பிப்பு விட விரைக!' எனல்.[108] மழைக்கால் சிறப்பு

---

86. நற்.161. 87. நற்.221. 88. நற்.242.
89. நற்.321. 90. நற்.371. 91. குறு.323.
92. குறு.400. 93. ஐங்.425. 94. ஐங்.481.
95. ஐங்.482. 96. ஐங்.483,485. 97. ஐங்.486,487.
98. ஐங்.489,490. 99. அகம்.34. 100. அகம்.44.
101. அகம்.54. 102. அகம்.64. 103. அகம்.114.
104. அகம்.124. 105. அகம்.134. 106. அகம்.154.
107. அகம்.224. 108. அகம்.234.

அரும்பெறலுடையாள் அவரைக் களைய விரைதல்.[109] 'நம்மிடமே நினைவைக் கொண்டவன்' என நல்தலைவனைப் போற்றல்.[110] 'நம்மினும் காமம் மிகக்கொண்டு தலைமையுள்ள மாமைநிறத்தவள்' எனப்புகழ்தல்.[111] 'தலைவியின் உள்ளம், ஒளியல் கந்தல், விரைதல் ஆகியவைகளைக் காண விரைக!' என.[112] 'பசலைத் துன்பம் நீங்கி நகைமுகம் காண விரைக!' என.[113] 'அரிவை விருந்தெதிர் கொள விரைக தேரே!' என.[114] என்பவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இத்தகைய இன்பங்கள் தலைவன் பாகற்குக் கூறும் கூற்றுகளில் இடம் பெறுமாற்றைக் காணும்போது 'I am sad, I am happy, often I sing, often I sorrow, now I grow thin and now put on flesh, for love has divided himself in my heart into joy and sadness. Love shows the qualities in the midst of laughter and tears'[115]

என்ற கருத்துகள் நிலைபெறுமாற்றைக் காட்டுகிறும்.

<u>ஊர்_பெயர்</u>

தலைவன் பாகற்குக் கூறும் கூற்றுகளில் தலைவி வாழும் ஊர் முல்லை நில வளத்தோடு பலவாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது, பெரும்பாலும் இறுதியில் பாடலின் அடிகளில் இடம் பெறும். 'ஊர, ஊர்' என்ற சொற்களால் பொதுவாக முடியும். ஒரு சில ஊர்ப்பெயர்களையும் காட்டுகிறும். அவை வருமாறு

'வன்புலக் காட்டுநாட் டதுவே
.... உறைவோள் ஊரே'[116]

'பொய்யா யாணர்
மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே'[117]

'...... வன்புலக் காட்டுநாட் டதுவே அம்புடைந்
தாரிலச் சிறந்த சாயல் இருந்திறை யூரே'[118]

'நிறைநிலை குறையி வெருவுஞ் ஊரே'[119]

---

109. அகம்.244. 110. அகம்.254.
111. அகம்.284. 112. அகம்.334.
113. அகம்.344. 114. அகம்.374.
115. Maurice Valency, In Praise of love, 8., p.157.
116. நற்.59,6;8. 117. நற்.142:8:11.
118. அகம்.94:12-14. 119. அகம்.124:16.

'மந்திக் கடும்பொடு பயிற்றப்
பெருங்களி றோரீ மரத்தொடு தம்மை'[120]

'... உயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும்
வரைகோ ளறியாச் சொன்றி...நந்தை
ஊரே'[121]

'காம்தெற் படப்பையான் சிறுகுடி...மடந்தை'[122]

'முல்லைப் படப்பை .....
காமர் புறவின் அதுவே காமம்
தணிக்கும் நாட்கொள் பயக்கிய
அம்மா அரிவை உறைவின் ஊரே'[123]

'அரும்பு அவிழ ... நல்குடவாயில் அன்னேன்'[124]

'இலங்கெழு வியன்கர்'[125]

'புறவடைத் திருந்த உறைவின் நல்லூர்'[126]

குறுந்தொகையின் 233ஆம் பாடல் தலைவியின் ஊரை 'நந்தை ஊர' எனக் குறிப்பிடுவதை அறிகின்றோம். இவ்வாறு புறநானூற்றில் வள்ளல் பேகன் பாடலில் 'வேலோன் ஊர'[127] எனக் கூறப்படுகிறது.

தலைவன் பாங்கற்குக் கூறும் கூற்றுகளில் பல இன்றியமையாத செய்திகள் காணப்படுகின்றன. அவை வருமாறு:

தலைவன் பாங்கற்குக் கூறும் கூற்றுகளில் தலைவி பற்றிய சொல்லோ தொடரோ இல்லாத பாடல்கள் சில இடம் பெறுகின்றன.[128] அவ்வாறே பாங்கன், குதிரை, தேர், ஆகியவை இடம் பெறும் பாடல்கள் இரண்டு உள.[129]

தலைவி, ஊரும் ஊர்ப்பெயர் பெரும்பாலும் சொல்லப்படவில்லை. எனினும், 'நல்குடவாயில் அன்னேன்'[130] என உவமையோடும் 'வானம் சிறுகுடி...மடந்தை'[131] என ஊர்ப்பெயரோடும் இரண்டு இடங்களில் வருதலைக் காண்கிறோம்.

'பிரிந்த தலைவியானவள் கற்றலைச் சிலிர்ப்ப உடை செய்வாள்', என்பதை 'மற்றும் கூந்தல்'[132] எனக் கூறுவாற்றல் அறிகிறோம். கல்லவி கொலைவனைப் பிரிந்த

---

120. நற்.321:9-10. 121. குறு.233:4-7.
122. அகம்.204:12,14. 123. அகம்.204:10-13.
124. அகம்.44:15,16. 125. அகம்.224:17.
126. அகம்.234:15. 127. புறம்.322:10.
128. நற்.21,24; அகம்.134. 129. அகம்.274,204.
130. அகம்.44:18. 131. அகம்.204:12:14.
132. நற்.42:8.

காலத்து, 'மையிருங் கூந்தல் நெய்யணி மறப்ப'[133] இருந்தமை ஈண்டு ஒப்பு நோக்கற்குரியது.

தலைவியின் நிலையைத் தலைவன் பாணன் தூதால் அறிவதை ஒரு பாடல் கூறுகிறது.[134]

இல்லிருந்து வாழும் பொழுதைப் போர்த்தொழிற்பொருட்டு தலைவன் பிரிவான். மேலும், அகநானூற்றில் 204ஆம் பாடல், பாசறையில் வருந்திய பிரிந்த தலைவனைக் காட்டுகிறது எனலாம். 'பார்ப்பன மகளிர் சாரல் புறத்த'[135] என்ற அடியால் அப்பாடல் தலைவன் பார்ப்பனத் தலைவனாய் இருந்தமை காண்கிறோம்.

சோழன் பெரும்பூண் சென்னி சேரனோடு புரிந்த போர் பற்றிய பாடல் ஒன்றைக் காண்கிறோம்.[136] பாகனைப் பற்றியும், தேர், குதிரை, ஆகியவற்றைப் பற்றியும் எடுத்தோதும் ஒரு பாடலாக அகநானூற்றில் 94ஆம் பாடல் உள்ளது.

'வேந்து...வினை முடித்தனன் கடுமதி' என ஊக்குவிக்கும் பாகனை ஒரு பாடலிற் காண்கிறோம்.[137]

தலைவிபால் விரைந்து சேர்ந்த பாகனை இரண்டு பாடல்களால் புகழ்ந்து பாராட்டுதலைக் காண்கிறோம்.[138]

ஐங்குறுநூற்றில் 'தேர்வியங்கொண்ட பத்து' (481-490) என்னும் பகுதியில் காணும் பாடல்கள் தேர்ப்பாகனை விரைந்து செலுத்த ஏவுதலைக் கொண்டதாகும்.

'வலங்கொள் தொழிலும் இப்பயிர்த் தணை' எனத் தலைவி தோழியால் கவி உற்றிருக்கும் நிலையை அகநானூற்றில் 224ஆம் பாடல் காட்டுகிறது.

<u>தேரும் புரவியும்</u>

கார்காலம், மாலை ஆகியவற்றைக் காட்டு, 'நிலம் பிளக்கும் கொம்படியும் தேரினை விரைவாகச் செலுத்துக' என்பதைப் புலப்படுத்தும் பகுதிகள் பல உள.

'வல்லைக் கடுமதி தேரே!'[139] 'வல்விரைந்து கடுமதி பாக!'[140] 'இவ்விறைக் கடுமதி பாக!'[141] 'கடவுக் கடுமதி பாக!'[142] 'நீரும் பெருவழி நீண்டபோழுது செல்க பாக!'[143] 'வல்வாய் ஊதி உவந்துறக் கடவுக..பாக!'[144]

---

133. சிலப்பு.4:50.
134. அகம்.244.
135. நற்.321:4.
136. அகம்.44.
137. அகம்.254.
138. அகம்.254; நற்.400.
139. நற்.321:8.
140. ஐங்.482:2.
141. ஐங்.493:3.
142. ஐங்.484:3.
143. நற்.221:6-7.
144. அகம்.54:5-6.

'வல்லோன் பூட்டிய நெடுந்தேர் யாத்த வலவ!'[145] 'புரவி, நெடுங்கொடி மிடைந்த கடுமதி'[146] 'நோன்பிணி பாய்ந்து கரிய பரிப்ப ... கடுமதி'[147]

நெடுந்தேரின் வலிமை, வேகம், மணி, கொடுஞ்சி முதலியவற்றினைச் சிறப்பிக்கும் தொடர்கள் பல. அவற்றுள்,

'செல்வ நெடுந்தேர்'[148] 'நல்வினை நெடுந்தேர்'[149] 'கடும்பரி நெடுந்தேர்'[150] 'வல்லை நெடுந்தேர்'[151] 'மாண்வினை நெடுந்தேர்'[152] 'கொடுஞ்சி நெடுந்தேர்'[153] என வருவன குறிப்பிடத்தக்கன.

நெடுந்தேர்க் குதிரை, காற்றாய், பறவையாய், நினைவு ஒப்பதாய், நிழல் ஒளியாய் விரைவதைப் பல பாடல்கள் காட்டுகின்றன. தாற்றுக்கோலால் குதிரை விரைவுபடுத்துவதையும் காட்டுகின்றன. அவை வருமாறு,

'காலென மருள'[154] 'புள்ளியற் கலிமா'[155] 'நினைவுறு மனத்தின் அன்ன விரைபரி'[156] 'வாங்குசினை அலங்கிய நிறைபறை கடுப்ப, நால்உடன் பூட்டிய கால்வல் புரவி'[157] 'நிமிரொலிப் பல்லவ நிமிர்பரிப் புரவி'[158] 'நீட்டா வலவன் நீண்ட நாற்செலற் கேள்வி வலவ!'[159] 'முட்கோல் ஓச்சுதி வலவ!'[160]

தேர்ப்பாகனின் அறிவுடைமைச் சிறப்பை 'மதியுடை வலவோய்'[161] 'மதியுடை வலவ'[162] 'நுண்ணறி வலவ'[163] எனத் தலைவன் பாராட்டுதலைக் காட்டும்.

'மாலை வருவதற்குள் விரைந்து செல்வாய்' என்பதை, 'எல்லிடை யுறு வரைய வல்லே...இயக்குமதி'[164], 'இன்றைக் கடுமதி பாக'[165] என வருவனவற்றால் அறியலாம்.

தலைவன் பாகனுக்குக் கூறும் கூற்றில் முல்லை நிலம், கார் காலம் முதலியவற்றின் வருணனைச் சிறப்புகள் பெரும்பாலும் இடம்பெறுகின்றன.[166] இவ்வருணனைச் சிறப்புகள் தலைவன் இருந்த பாசறையிலிருந்து வரும் வழியில், தலைவியோடு கூடும் காதலுக் காட்சியால் பொலிவடைகின்றன.

---

145. அகம்.244:12-13.
146. அகம்.234:16-17.
147. அகம்.334:14-15.
148. நற்.221:7.
149. அகம்.204:9.
150. ஐங்.422:1.
151. ஐங்.425:3.
152. ஐங்.490:3.
153. அகம்.334:12.
154. அகம்.234:7.
155. ஐங்.401:4; 486:5; அகம்.64:2.
156. அகம்.234:3.
157. அகம்.334:10-11.
158. அகம்.344:9.
159. நற்.21:4-5.
160. ஐங்.481:3.
161. குறு.400:5.
162. ஐங்.487:3.
163. அகம்.134:8.
164. அகம்.344:7-11.
165. அகம்.124:13.
166. நற்.161, 221, 242, 371; குறு.233; ஐங்.484, 489; அகம்.54, 64, 134,

உடையார்தம் சிறப்புகளைக் கூறும் பாடல்கள் பல.[167]

பாசறைக் கூற்றும் முறையும்

வேந்தர்க்கு உற்றுழிப் பிரிந்த தலைவன் பாசறைக்கண் இருந்து கூறிய 15 கூற்றுகளை,

1. வேந்தற்கு உற்றுழிப்பிரிந்த தலைமகன் வினைமுடியாமையிற் பாசறைக்கண் இருந்த பருவ வரவின்கண் சொல்லியது.[168] 2. பாசறைக்கண் இருந்த தலைமகன் பருவ வரவின்கண் தலைமகளை நினைந்து நெஞ்சொடு புலந்து சொல்லியது.[169] 3. பாசறைக்கண் இருந்த தலைமகன் பருவ வரவின்கண் உருவு வெளிப்பாடு கண்டு சொல்லியது.[170] 4. வேந்தற்கு உற்றுழிப்பிரிந்த தலைமகன் தான் வினை முற்றி மீளும் வேட்கையொடு பருவ வரவின்கண் தலைமகளை நினைந்துச் சொல்லியது.[171] 5. வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் பருவம் வந்தவிடத்தும் மீளப்பெறாது அரசன் செய்தியும் பருவத்தின் செய்தியும் தன் செய்தியும் கூறி ஆற்றுவது.[172] 6. பாசறைக்கண் வேந்தனொடு வினைப் பொருட்டால் போந்திருந்த தலைமகன், தன்வேந்தன் மாற்று வேந்தர் தருதிறை கொண்டு மீளாமைப் பொருட்டுத் தானும் மீட்சிக்குத் தேர் சமைத்த எல்லைக்கண்ணே அவ்வரசன் பொருத்தம் தவிர்ந்து மீட்டும் வினைமேற் கொண்டானாகச் சொல்லியது.[173] 7. வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் வினை முற்றாமையிற் பாசறைக்கண் இருந்து தன் மனக்கருத்து உரைத்தது.[174] 8. தலைமகன் பருவம் கண்டு (தலைவியை நினைந்து) சொல்லியது.[175] 9. தலைமகன் பாசறை இருந்து சொல்லியது.[176] 10. பாசறைக்கண் இருந்த தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.[177] எனப் பல துறைகளில் காண்கிறோம்.

பாசறைக் கூற்றும் தலைவியும்

பாசறைக் கூற்றுகள் யாவும் போர் வினை முடியாத நிலையில் தலைவியை நினைந்துக் கூறும் கூற்றுகளாக நெஞ்சொடும் செய்திகளாக இருக்கக் காண்கிறோம். இவற்றைத் தொல்காப்பியர் 'பாசறைப் புலம்பல்'[178] என்று கூறுவர்.

---

167. நற்.142,371; அகம்.94,224.
168. ஐங்.442-444.
169. ஐங்.445.
170. ஐங்.446.
171. ஐங்.447.
172. ஐங்.448.
173. ஐங்.449.
174. ஐங்.450.
175. அகம்.24.
176. அகம்.84.
177. அகம்.164,174,214,304.
178. தொல்.பொருள்.44:19.

பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியின் அருந்ததி போன்ற கற்புடைய மனையையும் புதல்வனையும் காணலாம் எனக் கூறும் தலைவன்றன் உள்ளத்தைக் காட்டுகிறது ஒரு பாடல்.[179]

வேந்த வினை விடின் தலைவியின் நுதல், தோள், கூந்தல், அகல் அல்குலின் நலம் பெற விரும்பும் காதலைக் கூறும் பாடல்கள் உள.[180]

தலைவியின் நெடுநீடாத நினைவால் நெஞ்சொடு புலந்துகொள்ளும் தலைவனையும் ஒரு பாடலில் காண்கிறோம்.[181]

தலைவன் தலைவியின் உருவு வெளிப்படக் கண்டு மாயோயே' எனக் கூறுவதை ஒரு பாடல் குறிக்கிறது.[182] பிறிதொரு பாடல் தலைவன் தலைவிக்குக் கூறிய கூற்றும்[183] காணப்படுகிறது.

கார் காலம் வந்ததும் பாசறைத் தனிமையைக் கண்டு வருந்தும் தலைவன், பகைவர் நடுங்கும் கொடுமையும் கொள்ளாத நெஞ்சின் வேந்தன் 'பாசறையில் [illegible], வாடையால் [illegible] மாயோள், காலையில் [illegible], புலம்பு [illegible], மாண்ட [illegible]!' எனக் கூறும் காட்சிகள் பல பாடல்களில் காணப்படுகின்றன.[184]

நெஞ்சமே வேந்தன் [illegible] மன்னன் [illegible] பொற்புடையவும் விடக்கி, 'எப்போது தலைவியை அடைவோம்!' என்று [illegible] செய்யும் உள்ளத்தைத் தலைவன் அறியாயோ? அறியாள். [illegible] மாரி [illegible] பெரும்புலம்புடையள் பெருமே! பசலை [illegible]! [illegible] [illegible] [illegible] [illegible] என்னும் மழையைச் சொரியுமே! [illegible]? பழைய [illegible] எல்லாம் தவிர்ந்த வளர்ந்த புலம்பு பெருமே. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]!' என எண்ணும் தலைவனை அடையக் கூறும் ஒரு பாடல்.[185]

[illegible]

தலைவன் விட்ட [illegible] [illegible] [illegible] பாசறைப் '[illegible] பாய, [illegible] [illegible] [illegible] [illegible] நீலம் [illegible] [illegible] [illegible] [illegible] காதலியின் சொல்லைச் சொல்லுக!' என்கிறான் ஒரு தலைவன். தலைவியின் சொற்கள் [illegible]

---

179. ஐங்.442.
180. ஐங்.443,447,448,449,450.
181. ஐங்.445.
182. ஐங்.446.
183. ஐங்.416.
184. குறு.24,84,164,214,304.
185. குறு.174.

மருத்தாய் நிலைமை பயக்குமாதலால், 'புல்லம் சொல்லாக நீசொல்லே!' என்று கூறுகின் மற்றொரு தலைவன்.[186]

வேறு தெருவில், 'வயல்நிலம் தலைவிக்குச் சிறிய உணர்த் தலைவனை பிரிக்கின் நீர் மிக வருந்தி எய்தவேன்', எனத் தலைவியால் பாணனைத் தூது விடுக்கும் தலைவனை மற்றொரு பாடலில் காண்கிறோம்.[187]

தலைவியாலிருந்து வந்த தூதரிடம் தலைவியின் மாற்றம் கேட்டு பிரியும் தலைவனை ஒரு பாடல் காட்டுகிறது.[188]

குறுந்தொகையின் 24ஆம் பாடல், தந்தைக்கும் முல்லைக் காவல் வீரர் உடையான் வாழும் ஒரு தலைவியைக் காட்டுகிறது.

கார் காலச் சிறப்புகள் பல பாடல்களில் இடம் பெறுகின்றன.[189]

'மாலைக்காலத்தில் வேலன் நுகைக்கும் செல்வப்புதல் தலைவியின் உயிர் வருந்தும்' எனக் கூறுகிற ஒரு பாடல்.[190]

குறுந்தொகையின் 304ஆம் பாடல், 'செய்த வினையை முடித்தபின் விரைவாகச் சென்று தலைவன் வருவான்' எனக் கூறி தோழி புலம்பிடும் தலைவியைக் காட்டுகிறது.

வினை முற்றி மீளும் தலைவன், தேர்ப்பாகனிடம், 'பாகனே! நீக்கமுடிய புறப்படுமாறு எம்மவளை விரைவில் அடைய விருந்தினர் புகுவது போல மக்களை எய்த கூறி மகிழ்வதை ஒரு பாடல் காட்டுகிறது.[191]

குறுந்தொகையின் 99ஆம் பாடல், பொருள் பொருட்டுப் பிரிந்த தலைவனைக் காட்டுவதாக அமைந்துள்ளது. இப்பாடல், 'பிரிந்த விடுத்த எம்மை நினைத்தீரோ?' என்று கேட்ட தோழிக்கு, 'உள்ளேன்; நினைத்தேன்; நினைந்த மறப்பேன்;' என எப்பொழுதும் தலைவியை நினைத்திருத்தலைப் புலப்படுத்தும்.

தலைவன் முல்லையை நோக்கி, 'முல்லையே, வாழி! வினை முற்றி மீளும் எம்மைப் பார்த்து வெண்பல்லைக் காட்டிச் சிரிக்கிறாயா?' எனக் கூறுவது போல அமைகிறது இப்பாடல்.[192]

ஆசிரியர் பெயர் தெரியாத நற்றிணையின் 190ஆம் பாடல், 'நெடுந்தேர்ப் பாகனே!, விரைந்து செலுத்துவாயாக, தலைவியின் துன்பம் தீர நம் வருகையை

---

186. ஐங்.478,479.
187. ஐங்.477.
188. ஐங்.441.
189. குறுந்.84,164,174,214,304.
190. குறுந்.214.
191. நற்.374.
192. குறுந்.162.

அறிவரியாக அருந்தியம்பும்!' என நெஞ்சிற்குக் கூறுவதைக் காண்கிறோம்.

தலைவியின் பிரிவு எண்ணலாலே அவளை அகற்றிவிடும் காதலும் தலைவன் அறவழிச் செல்லுவேன் நமர் எனத் தொழிலிடம் கூறி வருந்தியும் அன்று யாம் பெரும் வெற்றித் திருவினை நம் தமர் சொல்லக் கேட்பின் மயக்கம் பெற்றன் போலப் பேதைமை எய்துவன்!' என வினை முற்றிய ஒரு தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறி மகிழ்கின்றான்.[193] இது 'Joy without suffering is fire without flame' என்பதை நினைவூட்டுகிறது போலும்!

தலைவன் மழையை வாழ்த்திப் பாடக்காண்கின்றோம்.[194]

வினை முற்றி வந்த பின்வீட்டிற்கு தலைவியுடன் புகுந்த தலைவன், பெய்த கார் மழையை நோக்கி, 'வையிற்று ஏமாகப் பலர் தொழ வாழ்வதாக!' என வாழ்த்து வதை ஒரு பாடல் காட்டுகிறது.[195] பிறிதொரு பாடல், செயல்வினை முடித்த செம்மல் உள்ளமொடு தலைவியிடம் புகுந்த தலைவன் மழையை நோக்கி, 'நல்லை மன்ற!' என வாழ்த்துதல் காட்டும்.[196]

தலைவன் கூற்றில் கைக்கிளையாக வரும் பாடல் ஒன்று கலித்தொகையில் காணப்படுகிறது.[197] காதலியிடம் பலவாறு வேண்டியும் அவள் மனம் இரங்கா நிலையில் கண்ட காதலன், 'மறப்பின் நல்லாள் மருந்தவள்' எனக் கூறித் தன் ஒருதலைக் காமத்தை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

மடித்த பருவத்து எய்தும் தலைவன் புறவை நோக்கி, 'மலர்களோடு தூவும் எழிலி புறவே' வாழுநர் துணிவின் நுந்தை காவலரும்', எனக் கூறும் பாட லொன்று உளது.[198]

__தலைவிக்குக் கூறிய கூற்றுகள்__

தலைவன் தலைவிக்குக் கூறிய 19 குறிப்புகள் மூன்று பிரிந்த பகுதியில் முன்னே வந்த தலைவன் தலைவியுடன் கூடி மகிழ்ந்தது.[199] 2. தலைவனே சொல்லுகள் போலத் தலைவி நடிப்பாள் கூறியது.[200] 3. உடன் போக்கிற்குக் கடன் தலைவன், தலைவிக்குச் சொல்லியது.[201] 4. புணர்ந்துசெல்ற தலைவன் மாலைநேரத் தலைவிக்குக் காட்டிச் சொல்லியது.[202] 5. நாளைத் தலைவன் வினை முடித்துத் தலைவியி

---

193. அகம்.144.
194. நற்.139; ஐங்.270.
195. நற்.139.
196. ஐங்.270.
197. கலி.109.
198. அகம்.420.
199. அகம்.411-415.
200. அகம்.416-417.
201. அகம்.418.
202. அகம்.419.

கவற்சி தீரச் சொல்லியது.[203] 6. 'பிரிவுற்றோய்!' என்று புலம்பிய தலைவிக்குப் பிரிவொழிந்ததற்குரிய காரணத்தைச் சொல்லியது.[204] 7. வேந்தற்கு உற்றுழிப் பிரியும் தலைவன், தலைவிக்குக் கூறியது.[205] 8. வினை முற்றிப் புகுந்த தலைவன், தலைவிக்குச் சொல்லியது.[206] என்ற துறைப்பிரிவுகளைப் பிரித்துக் காணலாம்.

இப்பிரிவுகள் முல்லைத் திணையில் 'கிழவன் பாராட்டுப் பத்து (411-419) 'விரவுப்பத்து' (426-430) 'வரவுச் சிறப்புரைத்த பத்து' (491-495) என்னும் பகுதிகளில் இடம் பெறுகின்றன.

தலைவனும் தலைவியும்

'தலைவன் தலைவிக்குக் கூறிய கற்பனையில் பலவற்றுள்ளும் பிரிந்த தலைவன் இப்பருவத்திற்கு முன்னே வந்து.. தலைவிக்கு உரைத்தது' என்ற துறையும் 'வினை முற்றிப்புகுந்த தலைவன், தலைவிக்குச் சொல்லியது' என்ற துறையும் இத்தகைய பாடல்களை முறையே முற்றத்தப் பாடல்களைப் பெறுகின்றன.

தலைவன் தலைவியுடன் கார் காலப் பொலிவு கண்டு மகிழ்வதாகக் கிழவன் பாராட்டுப் பத்து அமைந்துள்ளது. (411-419).

'நீயே அடர்ந்தாம் மேவிய பொருளே;
உளமே அடர்ந்த நாம் உள்ளியுறவே;
இவளொடு ஆடும் இளமை
இவரால் அம்ம இனியவிர் புனிதே!'[207]

என்று தலைவன் தலைவியிடம் பேசி மகிழும் காட்சி, கிழவன் பாராட்டுப் பத்தின் மூலமே காணப்படுகிறது.

வினைமுற்றிப் புகுந்த தலைவியின் உருவு வெளிப்பாடு கண்டு 'மாதர் மடவோய்!' என்று தலைவன் பேசுவதாக ஒரு பாடல் உள்ளது.[208]

'பிரிவுற்றோய்!' என அழைத்த தலைவியின் துயரையும் கார் கால வருகையையும் கண்டு போருடைய வேந்தன் பாசறை வாரான் (ஐங்.427) எனச் சொல்லொழிந்த தலைவன் பேசும் காட்சிகள் நான்கினை விரவுப்பத்தில் காண்கிறோம்.[209]

---

203. ஐங்.426.
204. ஐங்.427, 428, 430.
205. ஐங்.429.
206. ஐங்.491-495.
207. ஐங்.415.
208. ஐங்.418.
209. ஐங்.426-428; 430.

வருதும் சிறப்புடைத்த பந்தர் நிலவின் நலன்களுடன் கூடிப்பொலிவதனை அழகுற நினைத்துப்பேசுவதைக் காண்கிறோம். 'நிலவே நுதல் வந்தவர் நம்முறையினை ! காண்டுக் கிடந்தேம்' (ஐங்.492) எனப் பேசக் காட்சியுள்ளன.[210]

நிலவும் நிலவிற்குக் கூறப் பற்றுக்கு கார்காலத் தொடக்கமும், மற்றும் பலவாற சிறப்பிக்கப்படுவதைக் காண்கிறோம். அவை வருமாறு,

> 'ஆர்கலி வெற்றி மழையும் சிறப்பக்
> கார்தொடங் கின்றே காமர் புறவே'[211]
>
> 'கார்தொடங் கின்றே பொழுதே'[212]
>
> 'கார்கலந் தன்றே, புறவே'[213]
>
> 'காரெதிர் பொழுதே'[214]
>
> 'ஆர்கலி வெற்றி மேகந்தொடங் கின்றே'[215]
>
> 'கார்தொடங் கின்றே காலை'[216]

'The two pillars upon which a theory of criticism must rest are an account of value and an account of communication'[217]

என்ற ரிச்சர்ட்ஸ் கருத்திற்கு ஏற்றவாறு இலக்கிய மதிப்பும், உணர்த்தும் திறமும் நிலவைக் கூறுவதில் ஒருசேரப் பொலிவதைக் காண்கிறோம்.

---

210. ஐங்.491,493,495.
211. ஐங்.411:1-2.
212. ஐங்.413:3.
213. ஐங்.417:1.
214. ஐங்.427:2.
215. ஐங்.428:2.
216. ஐங்.493:3.
217. Richards.I.A., Principles of literary criticism, pa.25.



'பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லை
நகுமே தோழி நறுந்தண் காரே'
குறு. 126.

தலைவி

பண்பு நலன்

தொல்காப்பியர் பெண்டிர்க்குரிய பண்புகளை,

'செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான'[1]

எனக் கூறுவர். மேலும் தலைவிக்கு உரிய அச்சம், நாணம், பேதைமை ஆகிய நால்வகைப் பண்புகளை,

'அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப'[2]

என்றும் கற்பியல் நூற்பாவில் வாயிலோர் கூற்றில்,

'கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்ற மோம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்'[3]

என்றும் கூறுவர்.

நாணும் மடமும் பெண்மைக்குரியவாதலின் தலைவியின் வேட்கையானது குறிப்பினும் இடத்தினும் புலப்படுமேயன்றி, வெளிப்படையாகப் புலப்படா. (தொல். பொருள். 106) களவின் கண் தலைவிக்கு நிகழும் கற்பனைத் தொல்காப்பியம் 109, 110ஆம் பாடல்களில் கூறக் காண்கிறோம்.

தலைவிக்கு உயிரைக்காட்டிலும் நாணம் சிறந்தது. அதனினும் சிறந்தது, கற்பு. அதனை,

'உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்
தொல்லோர் கிளவி'[4]

என வரும் நூற்பாவால் அறிகிறோம்.

தலைமகன் பிறள் வேறுபட்டு வருந்துங் காலத்துத் தலைமகள் பிரிவைத் தன் உறுப்புகள் அழிந்தன போலப் பொறுக்கும் வகையாற் கூறுதலும் உண்டு.

---

1. தொல். பொருள். 206.
2. தொல். பொருள். 96.
3. தொல். பொருள். 150.
4. தொல். பொருள். 111.

'வண்ணம் திரிந்து புலம்புங் காலை
உணர்ந்த போல உறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையாற் புணர்க்கவும் பெறுமே'[5]

கற்பியலில் காணும் தலைவியின் கூற்றுகள்,

'அவனறி வாற்ற அறியும் ஆகலின்
ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்
உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின்
பெருமையின் திரியா அன்பின் கண்ணும்
கிழவனை மகடூஉப் புலம்பு பெரி தாகலின்
அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்
இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும்
கயந்தலை தோன்றிய காமர் நெய்தல்
நயந்த கிழவனை நெஞ்சுபுண் ணுறீஇ
நளியின் நீக்கிய கிழவை நிலையும்'[6]

என வருவன முல்லைத்திணைக்குரியன ஆகும்.

[முல்லைநிலத் தலைவி, 'கிழத்தி, மனைவி' என்ற பெயர்களால் குறிக்கப் படுகிறாள்.[7]

முல்லைத்திணைப் பாடல்களில் தலைவியைக் குறிக்கும் சொற்கள் பல இடம் பெறுகின்றன. அவற்றின் எண்ணிக்கை பின்வருமாறு:[8] தலைவி 29, மனைவி 1, மனையோள் 4, மாயோள் 6. முல்லைத்திணைப் பாடல்களில் கிழத்தி என்ற சொல் இடம் பெறாமை [illegible].]

இனி, முல்லைத்திணைப்பாடல்களால் அறியலாகும் தலைவியின் சிறப்புகளைக் காண்போம்.

---

5. தொல்.பொருள்.109.
6. தொல்.பொருள்.145.
7. புறநானூறு 1, பக்.22.
8. தலைவி: நற்.42:12; 61:7; 321:7; 367:7; 374:9; குறு.323:6
ஐங்.404:1; 406:2; 413:4; 414:3; 420:4; 466:4;
482:1; 483:4; 492:4; 495:5; 497:4.
பரி.12:4; அகம்.4:17; 34:10; 104:16; 114:15;
164:15; 274:8; 284:13; 324:2; 374:18; 384:7
[illegible].1:6 (29)
மனைவி நற்.121:11 (1)
மனையோள் ஐங்.410:2; அகம்.14:14; 224:11; 394:10 (4)
மாயோள் நற்.130:7; 371:3; ஐங்.446:2; அகம்.174:14; 304:21;
முல்லைப்.21 (6).

தலைவி கூற்றுக் கூறுகள்

தலைவி கூற்றுகள் மொத்த எண்ணிக்கை 56.

நற்றிணை	குறுந்தொகை	ஐங்குறுநூறு	கலித்தொகை	அகநானூறு	
69,97, 230,289, 364,381.	21,24,64, 65,94,98, 108,110, 126,140, 155,183, 186,188, 190,191, 193,194, 220,221, 234,240, 279,289, 314,319, 344,387, 391	451-460 473-476	111,114	74,194, 264,294, 364	
மொத்தம் 6	29	14	2	5	56

தோழிக்குக் கூறியவை 44.[9] தலைவனிடம் கூறியவை 9.[10] பாணற்குக் கூறியவை 3.[11] மேற்கூறியவற்றின் மிகுதியான கூற்றுகளைப் பெறும் நூல்களாகக் குறுந்தொகை 29 பாடல்களையும் ஐங்குறுநூறு 14 பாடல்களையும் பெற்றுத் திகழ்கின்றன. தலைவி கூற்றில் சிறந்த பாடல் ஒன்று காண்க.[12]

9. நற்.(3): 97,289,364
   குறு.(27): 21,64,65,94,98,108,110,126,140,183,186,188,190,191,193,194,220,221,234,240,279,289,314,319,344,387,391.
   ஐங்.(7): 453,454,455,456,457,459,475.
   கலி.(2): 111,114.
   அகம்.(5): 74,104,264,294,364.
10. நற்.(3): 69,230,381; குறு.(2): 24,155;
    ஐங்.(4): 451,452,458,460;
11. ஐங். (3): 473,474,476.
12. குறு.193.

முல்லைப் புலவர்கள்

முல்லைத் திணையைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 37.[13]

முல்லைத் திணைக்குப் புலவர் பெயர் காணாப் பாடல் ஒன்று.[14]

முல்லைத் திணையை மிகுதியாகப் பாடிய புலவர் பேயனார். பாடிய பாடல்கள் 14. ஒக்கூர் மாசாத்தியார் மூன்று பாடல்களையும் ஔவையார், கந்தரத்தனார், நல்லுருத்திரனார் ஆகியோர் இரண்டிரண்டு பாடல்களையும் பாடியுள்ளனர்.[15]

பெரும்புலவராகிய பரணர், முல்லைப்பாடலால் முல்லையைச் சிறப்பித்துள்ளமை அறிதற்குரியது.[16]

இருத்தல் ஒழுக்கம்

முல்லைத்திணையின் உரிப்பொருள் இருத்தலாகும். இருத்தலாவது, தலைவன் குறித்த கார் காலம் வரும்வரை தலைவி ஆற்றியிருக்கும் ஒழுக்கமாகும். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நானிலத்தில் முல்லை முதற்கண் வைக்கப்பெற்றுச் சிறப்புறுதல் போல ஐந்திணைத்தல் ஒழுக்கம் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐந்தினை ஒழுக்கங்களுள் நடுவண் அமைந்து நடுநிலைக்கு ஏற்றாற்போல உறைவிடமாய்

---

13. 1. அரிசில் கிழார் குறு.193; 2. இடைக்காடனார் அகம்.194; 3. இளங்கீரந்தையார் குறு.148; 4. உம்பற்காட்டு இளங்கண்ணனார் அகம்.264; 5. ஒக்கூர் மாசாத்தியார் குறு.126,186,220; 6. ஓதலாந்தையார் குறு.21; 7. ஔவையார் நற்.381; குறு.183; 8. கங்குல் வெள்ளத்தார் குறு.387; 9. கதக்கண்ணனார் குறு.94; 10. கதப்பிள்ளையார் குறு.64; 11. கந்தரத்தனார் நற்.238; குறு.155; 12. கழார்க்கீரனெயிற்றியார் அகம்.294; 13. கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார் நற்.364; 14. கிள்ளி மங்கலங்கிழார் குறு.110; 15. குறுங்குடி மருதனார் குறு.344; 16. கொல்லன் அழிசி குறு.240; 17. கோக்குள முற்றனார் குறு.98; 18. கோவர்த்தனார் குறு.194; 19. கோவூர் கிழார் குறு.65; 20. சேகம்பூதனார் நற்.69; 21. தாயங்கண்ணனார் குறு.319; 22. நல்லுருத்திரனார் கலி.111,114; 23. பரணர் குறு.24; 24. பாண்டியன் மாறன் வழுதி நற்.97; 25. பூதம்புல்லனார் குறு.190; 26. பெருங்கண்ணனார் குறு.289; 27. பேயனார் ஐங்.451-460;473-476;14; 28. பேரி சாத்தனார் குறு.314; 29. பொன்மணியார் குறு.391; 30. மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் குறு.188; 31. மதுரைக் கவுணியன் பூதத்தனார் அகம்.74; 32. மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார் அகம்.364; 33. மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனார் நற்.289; 34. மருதன் இளநாகனார் குறு.279; 35. மிளைப் பெருங்கந்தன் குறு.234; 36. முதுகொற்றனார் குறு.221; 37. வாயிலான் தேவன் குறு.108.
14. குறு.191.
15. ஐங்.451-460; 473-476 (14); குறு.126,186,220 (3); நற்.381; குறு.183; நற்.238; குறு.155; கலி.111,114.
16. குறு.24.

[illegible]

Each of us when separated is always looking for his other half. Such a nature is prone to love and ready to return love. And when he finds his other half the pair are lost in an amazement of love and friendship and intimacy and one will not be out of the other's sight, as I may say, even for a moment, these are they who pass their loves with one another, yet they could not explain what they desire of one another'.[17]

[illegible] 'For an ideal woman, her husband is the centre of life' [illegible]

[illegible]

[illegible]

[illegible]

---

17. Maurice Valency. In praise of love. p.27.

<u>தலைவி தோழிக்குக் கூறிய கூற்றுகள்</u>

56 கூற்றுகளில் தலைவி தோழிக்குக் கூறிய 44 கூற்றுகளாவன,

1. பருவம் கண்டாற்றாளாய தலைவி உரைத்தது.[19] 2. பிரிவிடை ஆற்றாளாய தலைமகள் சொல்லியது.[20] 3. பருவ வரவின்கண் தலைமகள் ஆற்றாளாய்ச்சொல்லியது.[21] 4. ஆற்றாளாய தலைமகள் சொல்லியது.[22] 5. பருவங் கண்டு அழிந்த தலைமகள் உரைத்தது.[23] 6. பருவ வரவின்கண் ஆற்றுமெனக் கவன்ற தோழிக்கு உரைத்தது.[24] 7. பிரிவிடை ஆற்றுமெனக் கவன்ற தோழிக்கு உரைத்தது.[25] 8. வரவிடை ஆற்றுமெனக் கவன்ற தோழிக்கு உரைத்தது.[26] 9. காமம் கண்டு வேறுபட்டாளெனக் கவன்ற தோழிக்குச் சொல்லியது.[27] 10. பிரிவிடைப் பருவ வரவின் ஆற்றுமெனக் கவன்ற தோழிக்குச் சொல்லியது.[28] 11. பருவங்கண்டு ஆற்றுமெனக் கவன்ற தோழிக்கு 'ஆற்றுவல்' என்பது படச் சொல்லியது.[29] 12. பருவம்பெற்ற வற்புறுத்தத் தலைமகள் சொல்லியது.[30] 13. வற்புறுத்தும் தோழிக்கு உரைத்தது.[31] 14. வம்புறை எதிரழிய கூறியது.[32] 15. பிரிவிடைப் பருவங்கண்டு சொல்லியது.[33] 16. தலைமகள் வரைவிடை மெலிந்தது.[34] 17. 'வருவர்' எனச் சொல்லிய தோழிக்கு உரைத்தது.[35] 18. 'நல்ல கனவும்' எனப்பட்டுக் கிழத்தி உரைத்தது.[36] 19. பருவ வரவின்கண் கிழத்தி உரைத்தது.[37] 20. ஆற்றுவிக்கும் தோழிக்குச் சொல்லியது.[38] 21. '... காதலர் வருவர்', எனக் கேட்ட தலைமகள் சொல்லியது.[39] 22. தன் மெலிவு கண்டு இரங்கிய பாணனைத் தோழிக்கு மகிழ்ந்து கூறியது.[40] 23. பருவங்கண்டு ஆற்றாமை மீதூரச் சொல்லியது.[41] 24. தோழியைத் தலைவனை வரைவு கடாவி யாங்கு அறத்தொடு நிற்க வேண்டுமென்றது.[42] 25. ... தலைவன் வரைவு வேண்டி உடன்பட... தலைவி தம்பரிவு உடன்பாடத் தோழிக்குக் கூறியது.[43] எனப் பகுத்துக்காணலாம்.

---

19. நற்.97, ஐங்.453.
20. குறு.190.
21. ஐங்.454.
22. ஐங்.456.
23. குறு.66,98,108,110,126,180; அகம்.304.
24. குறு.183, 186,194.
25. குறு.191.
26. குறு.240.
27. குறு.289.
28. குறு.391.
29. குறு.21,94.
30. குறு.140.
31. குறு.221,270,314,344; அகம்.7, 294.
32. குறு.319,387; அகம்.264.
33. நற்.289.
34. நற்.364.
35. குறு.64.
36. குறு.193.
37. குறு.220,234.
38. ஐங்.455,457.
39. ஐங்.459.
40. ஐங்.475.
41. அகம்.194.
42. கலி.111.
43. கலி.114.

<u>தலைவியும் பாணனும்</u>

தலைவி பாணற்குக் கூறிய 3 கூற்றுகள்,

1. தலைவன் பிரிந்த நாட்டிற்செல்லேன்', என்ற பாணற்குத் தலைவி சொல்லியது.[44] 2. பிரிவிடைக் குறிப்பை அறிந்து 'யான் ஆடு செல்ல நல்லேன் கொண்டிவன்' என்ற பாணன் கேட்பக் கூறியது.[45] 3. 'பிரிவாற்றாமை நலனும் உண்டோ? நீ வேறுபடுகின்றது எவ்வெ?' என்ற பாணற்குத் தலைவி கூறியது.[46] என வரும் கூற்றுகளைக் காண்கிறோம்.

<u>தலைவியும் தனி மொழியும்</u>

தலைவி தனி மொழியாய் உரைத்த 6 கூற்றுகள்,

1. பிரிவு குறித்தவழிச் சொல்லியது.[47] 2. புலம்புற்றது.[48] 3. பருவ வரவின்கண் சொல்லியது.[49] 4. பாசறையிலிருந்து வந்தார் தூது செய்தி கேட்டு குறித்தவழிச் சொல்லியது.[50] 5. பகைமேல் பிரிகின்ற பொழுது கேட்ட தலைவி கூறியது.[51] 6. பருவ முதிர்ச்சி கண்டு குறித்தவள் உரைத்தது.[52] எனப் பகுத்துக் காணலாம்.

<u>கற்புச் சிறப்பு</u>

தலைவி தோழிக்குக் கூறும் கூற்றுகளில் சில குறைகள் பாட வேறுபாடு பெறுகின்றன. குறுந்தொகையின் 110ஆம் பாடல் 'பருவங்கண்டு ஆற்றாத தலைவி தோழிக்கு உரைத்தது; தலைவனைத் தோழி கண்டு தலைவனைத் தோழி வற்புறீஇயதூஉமாம்' என்றும், நற்றிணையின் 264ஆம் பாடல், 'பருவங்கண்டு வருந்திய தலைவி தோழிக்குச் சொல்லியது; தோழி தலைவற்குச் சொல்லியதூஉமாம்' என்னும் குறைகளைப் பெற்றுள்ளன. இவ்விரு குறைகளையும் தலைவி தோழிக்குக் கூறியது எனக் கொள்வதே பொருத்தமுடையதாகும்.

'பருவங்கண்டு பிரிந்த தலைவன் உரைத்தது, வற்புறுத்தும் தோழிக்கு உரைத்தது' என்னும் குறைகள் முறையே 7, 8 பாடல்களைப் பெற்றுள்ளன குறிப்பிடுகிறது.

தலைவன் தலைவிக்குக் கூறிய கற்ப உடன் பெயரை குறிப்பிடுகின்றது.

---

44. ஐங்.473.
45. ஐங்.474.
46. ஐங்.476.
47. நற்.69; குறு.24.
48. நற்.238; குறு.155.
49. நற்.381.
50. ஐங்.471.
51. ஐங்.453.
52. ஐங்.458,460.

தலைவி தோழிக்குக் கூறும் கூற்றுகளில் கார் செய் காலை வருந்தும் தலைவியின் துயர் நிலை புலனாய் சித்திரிக்கப்படுகிறது.

இரலை, தன் பிணையொடு உகளும் கார்ப்பருவத்தே தலைவன் வாராமையால், 'இருக்கும் உயிரொடு இருக்கின்றீர்களோ!' என்று கேட்பது போல், இக் கார் வந்தது. 'இனி என் செய்வேன்!' என வருந்துகிறாள் ஒரு தலைவி.[53]

'பேதையாம் பித்திகம் கார்ப்பருவம் வருவதுபோல் மலர்ந்துவிட்டது. யான் நொந்து மயங்குவேன்!' எனக் கூறும் தலைவி, 'நள்ளிரவில் முழக்கும் இடி ஓசையைத் தமியர் கேட்டால் இனி உடையாமல் இருப்பரோ!' என அச்சத்தைக் காட்டுகிறது ஒரு பாடல்.[54]

'மேகத்தின் ஒலியும் நறுக்கொன்றை நலியமழையின் தூவாரமும் ஒலிக்க, என் பேதை நெஞ்சம் பெரிய கலக்கத்தை அடையும்' என வருந்தும் தலைவியை ஒரு பாடலிற் காண்கிறோம்.[55]

'தேரை தெவிட்ட, புறவின் ஒலிப்ப, கார் தொடங்கிற்று. அவர் தேர் காணாது என் கண்களோ நீர் சொரிந்து தொடங்கின', என்கிறாள் ஒரு தலைவி.[56]

'கார் வரின் தளவும் முல்லையும் மலரும். தலைவர் தேர் வரின் என் மாமை நிறம் கூடப் பெறும்', என்ற புதிய அழகைப் பெறத் துடிக்கிறாள் ஒரு தலைவி.[57]

'மேகம் முழக்கும் புன்கார் காலத்தே ஒரு சிறிதும் மறந்தறியா என் மட நெஞ்சம், அவரை நினைந்த வண்ணமே உள்ளது' என இல்லாள் பண்பைக் காட்டுகிறது ஒரு பாடல்.[58]

'முல்லையும் பரப்பெல்லாம் செம்மூதாய் வரிப்ப, முல்லை மலர, இரலையை நோக்கும் மடப்பிணையின் மருண்ட நோக்கைக் கண்டொறும் நின்னை நினைந்து வருவேன் என அன்று சொல் பல சொல்லிச் சென்றவர்தம் மாலைக் குழலிசையால் உருகுவது, எவ்வாறியானேன் தோழி!' எனக் 'கார், மாலை' எனும் இரு பொழுதாலும் வருந்தும் தலைவியைக் காட்டுகிறது ஓர் அகநானூற்றுப் பாடல்.[59]

---

53. குறு.65.
54. குறு.94.
55. குறு.194.
56. ஐங்.453.
57. ஐங்.454.
58. ஐங்.457.
59. அகம்.74.

'கொன்றை, தோன்றி, முல்லை, பிடவம் மலர்க் கார் தொடங்கியது. காதலரோ, வெற்றி வேட்கையொடு பாசறையின்கண் உள்ளார். கொடிய பிரிவுத் துன்பமாகிய இந்நோயைக் கடப்பதற்கு யாது செய்வேன்!' என வருந்தும் பத்தினித் தலைவியை ஐங்குறுநூற்றின் 364ஆம் பாடல் காட்டுகிறது.

முல்லைத் தலைவி தோழிக்குக் கூறும் உறுதியான கருத்து,

'Love is not irrational; it is not promoted by superficial and fleeting attractions, but it is based on enduring elements of character and actuated by sympathy between soul and soul'[60]

என அறிஞர் கூறுவது மிகையாகாது. மேலும், தன் உள்ளத்தே தலைவியைக் கொண்ட அன்பு நெஞ்சினையுடைய தலைவனை,

'Love is a true affection which is born of the heart and of the eyes, without doubt that the eyes make it flower and the heart cause it to bear fruit'[61]

எனக் கூறுவதும் நோக்கும்.

பாசறைக்கண் உறையும் தலைவன் தலைவியின் நலத்தையும், பாலன் நல் பண்பு நலத்தையும் எண்ணி நலம் படக் கூறுவதைக் காணலாம்.

'பசிய் உக்கின் செவ்வு நீ நயந்தவனாகில், எம்மோடு பல நடப்படார் செய்த போர்வலர் போல எம்மை மறவாது எம் திறத்தைக் கருதுவதாக!' எனத் தலைவனிடம் புதல்வன் தலைவியை ஒப்புவித்து காணலாம்.[62]

'முல்லை மலரும் நம் மாலையும் உடைத்தோ நீவிர் சென்ற நாடே' என்ற தலைவி பேசும் மாலைத் துன்பத்தைக் காட்டுகிறது ஒரு பாடல்.[63]

'குறிய் கொடிய் செறிந்த நானிலவயாடு சென்ற தம் காதலரை நம் வயதை உடன்றவர் நினைக்க 'தலைவன்' எனக் கூறியதை, நல்லவன் பாணனை நம்மோடு' எனப் பாணனைப் பாராட்டும் தலைவியை ஐங்குறுநூற்றின் 474ஆம் பாடல் காட்டுகிறது.

தலைவி தோழிக்குக் கூறிய கூற்றில் 'சிறியாழ்ப் பாணன் எம் வாயில் தோன்றும் நலிந்த கைவும் உறம் நும் தோற்பிப் பெரிய புதல்வனோடு! பிரிந்த காதலர்

---

60. Jain Prof. S. A., Shakespeare's conception of ideal womanhood, p.4.
61. Maurice Valency, In praise of love, p.129.
62. ஐங்.473.
63. ஐங்.476.

தலைவியின் 'தம்மோன் போலான் பேரன்பினனே', எனப் பாணன் அன்பைப் பாராட்டும் தலைவியை ஒரு பாடலில் காண்கிறோம்.[64]

தலைவி, பருவம் கண்டு ஆற்றாளாய்த் தன் மொழியால் உரைத்த கற்றாளில் கார் காலத்தைப் பற்றி உச்ச நிலையில் (Climax) கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

'மேகமே, பீடு மழைப் பொழிந்து மாலையில் அவர் நிலை அறியுமோ என்று கூற நின்று வருகச் சான்றோர் செய்கையற்ற. நீ இடிக் குரல் பாம்பின் படத்தை மறுக்கச் செய்வதற்கு, அவர்தம் கைவா நெஞ்சைக் கலங்கச் செய்யாமையின் நீ மிக்க இன்மை அறிவாய்!' என்ற தலைவி அறிந்த கருத்தை ஒரு பாடலிற் காண்கிறோம்.[65]

'கார்ப்பருவம் வந்துவிடவும், கையறப் பிரிந்தோர் தேரேறி நம் மனைக்கண் விரைந்தாய்ப் போந்த நல்லோன் யாவனோ?' எனத் தேர்ந்து விருந்தைப் பெறு தலைவி ஆற்றாமைச் சொல்வதை ஒரு பாடலில் காண்கிறோம்.[66]

தலைவியின் கற்றாளில் கார் காலத்தைச் சிறப்பிக்கும் பாடல்கள் பல உள.[67] அவற்றுள்,

> 'பருவஞ் செய்த கருவி மாமழை' (நற்.239).
> 'மையல் மருங்கின் மலையகத் தோரவும்
> மாலை வந்தன்று மாரி மாமழை' (குறுந்.319)
> 'கருவிரல் புருவிற் பாம்புமை வலிய
> இடியொடு மயங்கி மின்னிமிழ்ந்த தன்றே' (குறுந்.391)
> 'கறங்குப வெழிலி கார்செய் தன்றே' (ஐங்.462)
> 'மாதிரம் புதையப் பாஅய்க் காலீண்டு
> ஏற்றுடைப் பெருமழை' (அகம்.364)

என வருவன குறிப்பிடத்தக்கன.

தலைவி பெருவும் மாலைக்காலத்தைப் பல தொடர்கள் சிறப்பிக்கின்றன. அவற்றுள், 'உயிர்செலத் துணைபோமாலை'[68], 'புலம்பு கொள் மாலை'[69], 'மயங்கு மாலை'[70], 'புன்கண் மாலை'[71], 'கொலை குறித்தன்ன மாலை'[72], 'அருஞ் மாலை'[73], 'அம்பல் மாலை'[74], என வருவன குறிப்பிடத்தக்கன. இவை போன்ற பல உள்ளன.[75]

---

64. ஐங்.478. 65. நற்.238.
66. ஐங்.451.
67. நற்.289,364; குறுந்.65, 94,108; 186, 190,289,314; ஐங்.455,476; அகம்.74,264,294.
68. நற்.364. 69. குறுந்.314.
70. குறுந்.387. 71. அகம்.74.
72. அகம்.364. 73. நற்.69.
74. ஐங்.476. 75. [illegible]

மாலைக் காலத்தே தலைவி பெருந் துன்பம் மிகக்கொள்ளுவது என்பதைப் பல பாடல்கள் காட்டுகின்றன.

'வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிந்த தலைமகன், சொல்லிய பருவம் நீட்டிக்கின்றான். இன்னும் சில நாள் கழிந்த 'உயிர் செகுத்து விடுமோ மாலை' மாரியொடு கூடிய 'பலநாள்வாழலேன்' என்கிறாள் ஒரு தலைவி.[76]

'மாலைக்காலத்தில் மேய்ச் சென்ற நாம்பசுக்களின் வரவை எதிர் பார்த்து வருந்தும் கன்றுகளைப் போல, யாம் நோயொடு துறந்தும் சேயர் சேய் நாட்டோர் எனச் செயலற நிற்கும் வருத்தம் தலைவியின் ஏக்கத்தைக் காட்டுகிறது ஒரு பாடல்.[77]

முல்லை முகை முற்றின. முல்லை நிலம் முல்லையொடு முற்றின. எல் மாலையும் கழிக மாலை வந்தது. இவர், இறை தெரிந்தோர் வாரார், என்கிறது ஒரு பாடல்.[78]

'முல்லை மலரும் இன்று பொழுது, மாலை என்மனார் புலவர். இவள், எல்லைப் போக்கிய துணையிலோர்க்கு விடியலும் மாலை பகலும் மாலை' என்ற மாலைத் துயரின் உச்சநிலையைப் புலப்படுத்துகிறாள் ஒரு தலைவி.[79]

பகலில் தவிர் மடி நெடும்பகை நோக்கித் துன்பேன் என்ற ஒரு தலைவி, 'மாலையின் கடலில் மூழ்கிய கப்பலைப் போல நான் மறைவுபாதலால் துன்புறுவேன்' என்கிறாள்.[80]

'மாலை நிலத்தைக் கடந்து சென்றவர், புலம்புகொள் இம்மாலைக்காலத்தே நலம் வாரார் தோழி!', எனத் தலைவி தன் வேட்கையைப் புலப்படுத்துகின்ற ஒரு பாடல்.[81]

'மானேறு மடப்பிணையைத் தழுவும், யானை பிடியொடு பொருந்தும் மாரி மாமழை மாலை வந்தது. என் நன்னலம் சிதைத்தோர் இன்னும் வாராராயின், நம் இன்னுயிர் என்னாம்!' என்ற நடுக்கும் தலைவியைக் காட்டுகிறது ஒரு பாடல்.[82]

தலைவி பலவும் கண்டு துன்புற்றுத் தனி மொழியாய் உரைத்த கருத்துகளும் மாலைத்துன்பம் நிலைச் செய்தியாய் நிலைமையைக் காட்டுகின்றன.

---

76. நற்.364.
77. குறு.64.
78. குறு.188.
79. குறு.234.
80. குறு.240.
81. குறு.314.
82. குறு.319.

'பறவை, கூட்டினை நாடிய, கறவை கன்றினைத் தேட, முல்லை வாய் திறப்ப, தோன்றி தோன்ற, நல்லான் மணி ஒலி கோவலர் குழலொடு ஒலித்திசைக்கத் தோன்றும் புல்லென் மாலை, தனிமையுற்ற தலைவோர் செய்த நாட்டுக்குத் தோன்றும், வினைமேற்கொண்ட பருவம் வருத்திய வருவோர்', எனத் தலைவன் உள்ளத்தைப் புலப்படுத்திக்கொண்ட ஒரு தலைவியை ஒரு பாடலிற் காண்கிறோம்.[83]

'மாலைப் பொழுது வந்தது. மாலை நனி விருந்து அயரும் தலைவனுடைய தேர் வரும் என்னும் உரை வந்திலது' என விருப்புற விரும்பும் தலைவியைக் காட்டுகிறது ஒரு பாடல்.[84]

தலைவியின் பிரிவுத்துன்பத்தை மிகுதிப்படுத்தும் மலர்க்காட்சிகள் பல உள. மாலைப் பொழுதில் முல்லை மலர, தலைவி தன்புறத் தொடர்ந்த நிலைமை 'முல்லைத் தொழுதகை', 'முல்லை முகை' என வரும் தொடர்களாற் குறிப்பது, தலைவி கற்பின் குறிப்பாகவுள்ளது. இவ்வமைப்பினைப் பல பாடல்களில் காண்கிறோம்.[85]

மாலையில் மலர்ந்த துன்பம் தரும் மலர்களுள், முல்லை,[86] பித்திகம்,[87] கொன்றை,[88] ஈங்கை,[89] கூவிளை,[90] தோன்றி,[91] பீர்க்கு,[92] குருந்தம்,[93] காயா,[94] தளவு,[95] பகன்றை,[96] முசுண்டை,[97] கோடல்,[98] புறவம்,[99] பிடவம்,[100] முதலியவற்றைச் சிறப்பாகக் காண்கிறோம்.

கோவலர் குழலிசையால் தலைவி பெறும் மாலைத் துன்பம் மிகக் கொடிது;

> 'பல்லான் நிரை வல்வாய்க் கோவலர்
> கொன்றையந் தீங்குழல் மன்றுதோறு இயம்ப
> உயிர்செலத் துனைதரு மாலை'[101]

என நுவலும் கருத்தமைப்பை (நற்.69, அகம்.74) இரு பாடல்களிற் காண்கிறோம்.

தலைவி மேனி பசலை உறுவதைப் பல பாடல்கள் காட்டுகின்றன.[102]

---

83. நற்.69. 84. குறு.155.
85. குறு.126,186,188,193,220.
86. குறு.108,221,234,240,387; ஐங்.454,476; அகம்.74,364.நற்.69.
87. நற்.97; குறு.94. 88. குறு.148,183; அகம்.364; ஐங்.458
89. குறு.110; ஐங்.456; அகம்.294.
90. குறு.110; அகம்.204. 91. அகம்.364; நற்.69.
92. ஐங்.452; குறு.98. 93. குறு.148.
94. குறு.183. 95. ஐங்.454.
96. ஐங்.456. 97. அகம்.264.
98. அகம்.204. 99. அகம்.364.
100. நற்.238. 101. நற்.364.
102. குறு.98,183; ஐங்.452, 454, 455, 459.

கொன்றை மலர் தலைவியின் பசந்த கண்களைப் போலப் பொலிகின்ற கொண்டதை ஐங்குறு நூற்றின் 458ஆம் பாடலிற் காண்கிறோம்.

வாடைக்காற்றால் வாடும் தலைவியைப் பல பாடல்களிற் காண்கிறோம்.[103]

கார் வரவைக் கண்டு தலைவியைத் துன்புறுத்தும் கான மஞ்ஞையை ஒருசில பாடல்களிற் காண்கிறோம்.[104]

பனி வருத்தலால் வருந்தும் முல்லையைத் தலைவிக்குக் காட்டல் ஐங்குறு நூற்றில் (457) மட்டுமே காணப்படுகிறது.

கூதிர்ப்பருவம் வந்தும் தலைவன் வாராமையை இரு பாடல்களிற் காண்கிறோம்.[105] இப்பாடல்கள் தலைவி உற்ற பெருந்துன்பத்திற்கு உரிய எடுத்துக்காட்டுகளாய் விளங்குகின்றன எனலாம்.

பிரிவில் செறிவளை நெகிழும் என்பதைப் பல பாடல்களிற் காண்கிறோம்.[106]

இரலையும் மடப்பிணையும் சேர்ந்து வாழும் காட்சிகள் தலைவியின் துன்பத்தைப் பெருக்கும் என்பதைக் கூறும் பாடல்கள் பல.[107] அவற்றுள்,

> 'வன்பரற் றெள்ளறல் பருகிய இரலைதன்
> இன்புறு துணையொடு மறுவந் துகள' (குறு.65.2-3)

என வரும் காட்சி ஈண்டு குறிக்கற்பாலது.

முல்லை முகை தலைவியைப் பார்த்துச் சிரிப்பதாக ஒருசில பாடல்களிற் காண்கிறோம்.[108]

பாம்பின் தலை போல் பிடவு முகைத்தலைத் தலைவியின் துயர் மேலும் தூண்டப் படுவதைக் காண்கிறோம்.[109]

தலைவன் மேனி முல்லை மணமுடையது என்பதை 'மணந்தவர் மல்லெல் நெடுந்தோளே; இவ்வே முல்லை நாறுமே'[110] எனத் தலைவி கூறுவதால் அறிகிறோம். இக்காதலைப் பற்றிய முல்லைக்குரிய நாடன் 'முல்லை நாடன்'[111] என்று வழங்கப்பட்டான் போலும்:

---

103. நற்.364; குறு.110, 240; அகம்.294; ஐங்.460.
104. குறு.194,391; அகம்.194.
105. அகம்.264; ஐங்.456.
106. குறு.190,289; ஐங்.455,475.
107. குறு.65,183,220,319; அகம்.74,194; நற்.69.
108. குறு.126,186,220.
109. குறு.190,391; நற்.238.
110. குறு.193.
111. குறு.186.

வாடை வாடையே '[illegible]' எனக் கூறுவதை ஒரு பாடலில் காட்டுகிறார்.[112]

வாடையினால் வாடைப் பல பெயர்களால் குறிக்கப்படுவதைக் காட்டுகிறார். அவற்றுள், '[illegible] நாடன்'[113] '[illegible] நாடன்'[114], 'ஊதை'[115], 'வாடை'[116] என வருவன குறிப்பிடத்தக்கன.

[illegible] வாடைக் கொடியவள் என்று [illegible] வாடையைக் குறுந்தொகையின் 209ஆம் பாடல் காட்டுகிறது.

வாடை வாடைப் பிரிவால் [illegible] பாடல்களில் காட்டுகிறார்.[117]

வாடைப் [illegible] காலத்தும் [illegible] காலத்தும் வாடையின் [illegible], தோழி [illegible] குறுந்தொகையின் [illegible] பாடல்களில் கூறப்பட்டுள்ளதைக் காட்டுகிறார்.[118]

வாடையின் [illegible], [illegible] கூறப்படுவதை '[illegible] போல'[119] என வரும் [illegible] குறிக்கக் காட்டுகிறார்.

வாடையின் [illegible] பல பாடல்களில் சித்திரிக்கப்படுகின்றன.[120] அவற்றுள்,

> '[illegible]
> [illegible]' (குறு.191)
> '[illegible]
> [illegible]' (அகம்.264)
> '[illegible]
> [illegible]' (அகம்.294)
> 'வாரா ராயினும் வரினும்
> யாரா கியரோ ....
> என்னா யினள்கொல் என்னா தோரே' (குறு.110)

என வருவன குறிப்பிடத்தக்கன.

---

112. [illegible].459.
113. குறு.186.
114. [illegible].193.
115. குறு.21,98,110.
116. அகம்.364.
117. குறு.186,190.
118. குறு.190,191.
119. குறு.24?4.
120. குறு.126, 190, 191; அகம்.264, 294; நற்.69.

'செய்பொருட்கு அகன்றோர், யாம் தமித்து வாட நல் யாமத்து ஒலிக்கும் நல்லோர்க்கு ஒரு மகிழ்வான ஆமோ!' என்றும் ஒரு புலம்பெனத் தலைவி.[121]

'ஆம், கார்ப்பருவமன்று. தவறு பெரியவர்', என வற்புறுத்தும் தோழியை தலைவி, 'கொன்றை பூத்தொடு பூத்த இப்பருவத்தைக் கார்ப்பருவமன்று என்கின், யான் காண்பது கனவோ மற்று இது வினவுவல்!' என்று கூறும் உரையாடற்போக்கினை ஒரு பாடலிற் காண்கின்றோம்.[122]

'தலைவர் மெய்ம்மையுடையவர்; சொற்பிழையார்; குறித்த பருவத்தில் தப்பாது வருவர்', என்ற தலைவியின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் பாடல்கள்,

> 'கானம் கார் எனக் கூறினும்
> யானோ தேறேன் அவர் பொய் வழங்கலரே'[123]

> 'நிலம்புடை பெயர்வ தாயினும் கூறிய
> சொற்புடை பெயர்தலோ இலரே'[124]

என வருவன அறிதற்குரியன.

முல்லை அரும்போடையும், மாம்பூப்பூப்பெருக்கும், நமக்கு விற்பனை உணர் ... னையும் கால வேறுபாட்டைத் தோற்றுவித்துப் பொருளை செய்யும் என்பது புலப்படுத்தும் கற்றை நற்றிணையின் 87ஆம் பாடலுக்கே உரித்து.

தலைவியின் அன்பையும் முல்லையுந்தாழையையும் பிரிவுத் துயரையும், காற்றலையும் மா, வாழை மரங்களுக்கும் உவமை கூறப்படுவதை,

> 'மறையினைத் தலைவரை மாலைக் காலம்'[125]

> 'வேர்வீழ் மாந்தளிர் அகத்தளிர் போல
> நடுக்கம் கொள நெஞ்சமொடு நெஞ்சை'[126]

> 'தலைவியை வாழை போன்ற மனைய
> புள்ளு வாடை மலைபுறம்'[127]

என வரும் அடிகளில் காண்கின்றோம்.

---

121. குறு.190.
122. குறு.148.
123. குறு.21.
124. நற்.289.
125. குறு.289.
126. நற்.381.
127. ஐங்.460.

'முல்லை மலரும் கையறு மாலையை நீந்தினமாயின், கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே'' எனக் குறுந்தொகைத் தலைவி கூறுவதால் பிரிந்தோர்க்கு மாலையும் இரவும் ஒரு சுமையாய் வருத்துவதைக் காண்கிறோம்.[128]

'குறித்த கார்ப்பருவத்தில் தலைவர் வரப்பெறும் மகளிர் உண்மையில் தவஞ் செய்தவராவர்'' என்று தலைவி கூறுவதை 'நோற்றோர் மன்ற தோழி' என வரும் குறுந்தொகைப் பாடலொன்றால் மட்டுமே அறிகிறோம்.[129]

'காம நோய் வளர்பிறை போல வளரும்', என்பதை 'வளர்பிறை போல வழிவழிப் பெருகி, இறைவளை நெகிழ்த்த எவ்வ நோய்'[130] என வரும் அடிகளில் காண்கிறோம்.

'தலைவரோடு சேர்ந்து வாழாத இல்லற வாழ்க்கை எல்லா வகையிலும் பயனற்றது', என்னும் கருத்தே தலைவியின் கூற்றுகளில் தலையாட்சி புரிகின்றது. இக் காரணம் பற்றியே தலைவியின் தனிமையைப் பற்பல பாடல்கள் உச்ச நிலையில் வெளிப்படுத்துகின்றன.

> 'வினையே ஆடவர்க்கு உயிரே; வாணுதல்
> மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்'[131]

என வரும் பாடலடிகளின் கருத்துக்கே முன்னோடித் தலைவி எனலாம்.

---

128. குறு.387.
129. குறு.344.
130. குறு.289.
131. குறு.135.

தோழி

தலைவிக்குடைமை

தலைவன் பிரிவால் வருந்தும் தலைவிக்கு உற்ற துணையாய் விளங்குபவள் தோழி. தலைவிக்குத் தோழியாய் விளங்கும் பெருமை செவிலியின் மகட்கே உரித்து என்பர்.

'தோழி தானே செவிலி மகளே'[1]

என்னும் தொல்காப்பிய நூற்பா இதனைப் புலப்படுத்தும். மேலும் தலைவியை நீக்கி உறவாகும் வாய்க்குள் தோழி முதல் இடம் பெறுவது தோழியின் இன்றியமையாமைக் காட்டும்.[2] தோழியின் இயல்பும் திறமும் முறையே 'சூழ்தலும் உசாத்துணை நிலைமையின் பொலிமே'[3] என்றும், 'முன்னுற உணர்தல் குறையுற உணர்தல், இருவரும் உள்வழி அவன்வர வுணர்தல், மதியுடம் படுத்தல் ஒரு மூவகைத்தே'[4] என்றும் கூறப்படுதல் காண்டற்குரியது.

நற்றிணையில்,

'தோள்மிசைப் பெருகுதல் நெஞ்சுறுத் தோளே
வன்புறை நெடுஞ்சி வந்தனன் இறந்தோடு
என்றிவை என்ன இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றும் தோழிமேன'[5]

என வரும் தோழி கூற்று நிகழ்விடங்கள் எண்ணத் தக்குரியன ஆகும்.

களவியலில் தோழிக்கு நிகழும் 32 கூற்றுகளைத் தொல்காப்பியத்தின் 112ஆம் நூற்பாவில் விளக்கக் காணலாம். கற்பியலில் 'பெறற்கரும் பெரும் பொருள் முடிந்த பின் வந்த' என்ற தொடக்கம் நூற்பா தோழியின் பல்வேறு கூற்று களைப் பகர்கிறது.[6] மேலும், புரிந்த குறையுற்ற தலைவனைப் புலவர் பலவாறு நயம்பட படைத்த பொருளுள் ஒன்று என்பதையும் அறிவோம்.[7]

சங்கத்தில் தோழி பெறும் இடத்தினைச் சிறப்பிக்கும் டாக்டர் வ.சு. மாணிக்கம், 'அகத் தொகையிற்ற 882 அகப்பாடல்கள் உள. 842 பாடல் – 95

---

1. தொல்.பொருள்.123.
2. தொல்.பொருள்.191.
3. தொல்.பொருள்.124.
4. தொல்.பொருள்.125.
5. தொல்.பொருள்.42.
6. தொல்.பொருள்.148.
7. தொல்.பொருள்.233.

விடுக்காது — தோழியிற்புணர்ச்சி என்னும் ஒரு வகைப்பேச வரவை. முதல், தோழியிற்றிகழ் காதலர்களின் களவொழுக்கம் நீளாது.[8] என்ற கருத்தினை ஈண்டு நினைக்கலாம். தோழியின் பல பிற நிலைகளில் தலைமகளோடு நிற்றல், மடல் கூறுதல், செலவழுங்குவித்தல், வாயில் மறுத்தல், உடன் போக்கு முதலியவற்றில் பெரிய முல்லைத் திணைப் பாடல்கள் தலைவிக்கு முதல் சொல்லும் நிலையிலேயே படைக்கப்பட்டுள்ளமை காணும் நிலை கருதற்குரியது.

தலைவன் தலைவி பண்பு நலன்களைச் சிறக்கச் செய்யும் பாத்திரப் படைப்பு தோழி என்பது மிகையாகாது.

<u>தோழி கூற்றுகளின் தொகை வகை</u>

முல்லைத்திணைப்பாடல்களில் காணலாகும் தோழியின் கூற்றுகள் பின்வருமாறு அமைகின்றன: கூற்றுகளின் மொத்த எண்ணிக்கை 53.

	நற்றிணை	குறுந்தொகை	ஐங்குறுநூறு	பரிபாடல்	கலித்தொகை	அகநானூறு	
	89, 99, 115, 181, 248, 266, 316, 361, 367	66, 210, 251, 275, 287, 350, 382,	423, 424, 431-440, 461-472, 496-500	12	101, 103.	4, 104, 184, 314, 394,	
மொத்தம்	9	7	29	1	2	5	53

மேற்கண்ட தலைவிக்குக் கூறியவை 30.[9] தலைவனுக்குக் கூறியவை 10.[10] பாணற்குக் கூறியவை 2.[11] தன்னுள் உரைத்த கூற்று 1.[12] வாயில்களோடு கூறியது 1.[13] பெற்றோரிய கூற்றுகளை மிகுதியாகப் பெறும் நூலாக ஐங்குறுநூறு 29 கூற்றுகளையும், நற்றிணை 9 கூற்றுகளையும் பெற்றுத் திகழ்கின்றன. தோழி கூற்றுகளில் பிறவைக் கூறுவன 16.[14]

8. மாணிக்கம், டாக்டர் வ.சு. தமிழ்க்காதல், பக்.56.
9. நற்.(6): 89,99,115,248,316,367; குறு.(6):66,251,275, 287,350,382. ஐங்.(24):431-440; 461-470, 496-499; கலி.(2): 101,103; அகம்.(1): 4.
10. நற்.(1): 266; குறு.(1): 210, ஐங்.(3):423,424,500; பரி.(1): 12; அகம்.(4); 104,184,314,394.
11. ஐங்.(2): 471, 472. 12. நற்.(1): 181.
13. நற்.(1): 361.
14. நற்.181, 266,361; குறு.210,275; ஐங்.423,424,496-500; அகம்.104,184,314,394.

<u>தோழிப் புலவர்கள்</u>

தோழி கூற்றுகளைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 20.[15]

தோழி கூற்றுகளுள் ஆசிரியர் பெயர் காணாப் பாடல்கள் 2.[16]

தோழி கூற்றுகளை மிகுதியாகப் பாடிய புலவர் பேயனார். இவர் பாடிய பாடல்கள் 29.[17]

இடைக்காடனார், நல்லந்துவனார், மருதனிளநாகனார் ஆகியோர் முறையே இரண்டிரண்டு பாடல்களைப் பாடியுள்ளனர்.[18] பெரும்புலவரான நக்கீரனார் ஒரு பாடலால் தோழியைச் சிறப்பித்துள்ளமை அறியத்தக்கது. (நற்.367).

<u>தோழி நிலைகளுக்கு உரிய கூற்றுகள்</u>

53 கூற்றுகளில் தோழி நிலைகளுக்கு உரைத்த 30 கூற்றுகளை,

1. பொருள்முற்றி மறுத்தந்தானைக்கேட்ட தோழி தலைவிக்குரைத்தது.[19]
2. பருவங்கண்டாற்றாளாய தலைவியைத் தோழி பருவமன்றென்று வற்புறுத்தியது.[20]
3. பிரிவிடையாற்றாளாய தலைமகளைத் தோழி, பருவங்காட்டி வற்புறுத்தியது.[21]
4. பருவங்கண்டு ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி மழைமேல் வைத்துப் பருவமறுத்தது.[22]
5. பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தது.[23] 6. வரைவு மலிந்தது.[24]
7. பகல் வருவானை வரைவு நீட்டித்தல் தோன்றத் தோழி தலைமகட்கு உரைத்தது.[25]

---

15. 1. இடைக்காடனார் நற்.316; குறு.251; 2. இளந்திரையனார் நற்.99; 3. இளம்புல்லூர்க் காவிதி நற்.89; 4. ஒக்கூர் மாசாத்தியார் குறு.275; 5. கச்சிப்பேட்டு இளந்தச்சனார் நற்.266; 6. கச்சிப்பேட்டு நன்னாகையார் குறு.287; 7. காக்கை பாடினியார் குறு.210; 8. காசிபன் கீரனார் நற்.248; 9. குறுங்கீரனார் குறு.382; 10. குறுங்குடி மருதனார் அகம்.4; 11. கோவர்த்தனார் குறு.66; 12. செல்லூர்க் கிழார் மகனார் பெரும்பூதங் கொற்றனார் குறு.338; 13. நக்கீரர் நற்.367; 14. நல்லந்துவனார் கலி.101,103; 15. நல்லழுதியார் பரி.17; 16. நன்பலூர்ச் சிறுமேதாவியார் அகம்.394; 17. பேயனார் ஐங்.423,424,431-440;461-472; 496-500; 18. மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் அகம்.314; 19. மதுரைப் பேராலவாயர் நற்.361; 20. மருதன் இளநாகனார் அகம்.104,1
16. நற்.115; 101.
17. ஐங்.423;424;431-440;461-472; 496-500.
18. நற்.301; குறு.251; கலி.101, 103; அகம்.104;184.
19. நற்.89.
20. நற்.99; குறு.66,251,382.
21. நற்.115.
22. நற்.248.
23. நற்.316.
24. நற்.367.
25. குறு.275.

8. ... பலவுங்காட்டித் தோழி, வலவர் எனச் சொல்லியது.[26] 9. தலைவன் பிரிவிடைக் கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.[27] 10. 'அவர் போன வரும் பொழுதெல்லாம் ஆற்றுகின்றேன்!' என்ற தலைவிக்கு ... 'ஆக்கம் நல்ல' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.[28] 11-20. ஆற்றாமைய தலைவியைத் தோழி பலவுங்காட்டி வற்புறுத்தியது.[29] 21. குறித்த பருவத்தின்கண் தலைவன் வந்ததைத் தோழி தலைவிக்குச் சொல்லியது.[30] 22. தலைவிக்கு அவன் தோழி, 'ஏறு தழுவின காட்டி வரைந்து கொள்வன்' என ஆற்றுவித்தது.[31] 23. அவர் ஏறு தழுவி நின்றமையைத் தோழி தலைவிக்குக் கூறியது.[32] என வரும் துறைகளில் காண்கிறோம்.

<u>தோழி தலைவனுக்குக் கூறிய கூற்றுகள்</u>

தோழி தலைவனுக்குச் சொல்லிய 10 கூற்றுகளே,

1. தலைவனைச் செலவுடன்பட்டது.[33] 2. பிரிந்து வந்த தலைவனை 'நன்காற்றுவித்தாய்' என்றுத் தோழி உரைத்தது.[34] 3. கார்ப்பருவத்தே பிரியக் கருதிய தலைவற்குத் தோழி தலைவனது ஆற்றாமை கூறிச் செலவழுங்குவித்தது.[35] 4. கார்ப்பருவத்து ... நின்னையும் நினைத்திலரெனத் தலைவன் கேட்பத் தோழி இயற்பழித்தது.[36] 5. வினைமுற்றி மீளும் (வந்த, புகுந்த) தலைவற்குத் தோழி சொல்லியது.[37] 6. தலைவன் ... எதிர்ப்பட்டதைத் தோழி புலவி மிகுதியுரைத்தது.[38] 7. பருவங்குறித்த தலைவனை இடத்தெடுத்த வந்த தோழி தலைவனை வரைவு கடாயது.[39] என வரும் துறைகளிற் காணலாம்.

தோழி பாணற்குச் சொல்லிய இரு கூற்றுகளே,

1. பருவ வரவின்கண் தூதாக வந்த பாணன் கேட்பத் தோழி சொல்லியது.[40] 2. பருவம் வரவும் தலைவன் வாராமையின் தூதாய் வந்த பாணற்குத் தோழி கூறியது.[41] என்றும்; வாயில்களோடு சொல்லியதை,

1. வாயில்களோடு தோழி உடன்று சொல்லியது.[42] என்றும்

---

26. குறுந்.287.
27. குறுந்.358.
28. ஐங்.431-440.
29. ஐங்.461-470; அகம்.4.
30. ஐங்.496-499.
31. கலி.101.
32. கலி.103.
33. நற்.266.
34. குறுந்.210.
35. ஐங்.423,424.
36. பரி.12.
37. அகம்.104; ஐங்.500; அகம்.314.
38. அகம்.184.
39. அகம்.394.
40. ஐங்.471.
41. ஐங்.472.
42. நற்.361.

2. தலைவன் மகிழ்ந்து உரைத்தவை, வினை முற்றிப் புறப்பட்ட தோழி மகிழ்ந்து உரைத்தவை[43] என்றும் பகுத்துக் காணலாம்.

தோழி தலைமகளுக்குக் கூறிய கூற்றொன்றில் பாடப் பெறவுள்ளது. நற்றிணையின் 89ஆம் பாடலில் 'பொருள் முற்றி மறுத்தந்தானெனக் கேட்ட தோழி தலைவிக்குரைத்தது' என்றும் 'தலைவி பருவங்கண்டழிந்த தன்மை அறிவிக்கும் தோழிக்குக் கூறியது எனலுமாம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இது தோழி தலைவிக்குக் கூறிய கூற்றாகக் கொள்வதே பொருத்தமுடைத்து.

தோழி தலைமகளுக்குக் கூறிய கூற்றுகளில் பருவங்காட்டி வற்புறுத்தல், 'பருவமன்று', என்று வற்புறுத்தியது என்னும் கூற்றுகள் முறையே 16, 6 பாடல்களைப் பெற்றுள்ளன.[44]

புறவணிப்பத்து (ஐங்.431-440) தோழி வற்புறுத்த பத்து (ஐங்.461-470) ஆகிய இரண்டும் தோழி கூற்றில் சிறப்பிடம் பெறுகின்றன.

தோழி தலைமகளுக்குக் கூறிய 10 கூற்றுகளில் 5 கூற்றுகள் (குறு.210, ஐங்500, அகம்.104, 184, 314) குறித்த பருவத்தே வந்த தலைவனை மகிழ்ந்து பாராட்டுவனவாய் அமைந்துள்ளன.

தலைமகனைச் செலவழுங்குவித்ததாக இரண்டு பாடல்கள் உள.[45]

பரிபாடலில் (12) தலைவி ஊடியிருத்தல், தலைமகன் பாசறை இருத்தல் ஆகியவை இடம் பெற்றில.

<u>தோழி பருவம் காட்டி வற்புறுத்தல்</u>

தலைமகன் வருகையை எதிர்நோக்கி இருக்கும் தலைமகளிடம், 'கார்ப்பருவம் வந்துவிட்டது. தலைவர் விரைந்து வருவார்', எனக்கூறி தேற்றும் கூற்றுகள் பல உள. அவை வருமாறு:

'புன்கண் மாலைப்பொழுதில் அலைக்கும் தண்ணா வாடை யானை உயிர்த்தாற் போல இன்னும் வருமோ! இனிது யாதொரு தீங்கும் செய்யாதனால்!' என உரைத்து தலைவன் வருகையால் வாடைத்துன்பம் நீங்குவதைப் புலப்படுத்துதல்.[46]

---

43. நற்.181.
44. நற்.69,115; குறு.275,287,358; ஐங்.461-470; அகம்.4; நற்.99,248,316; குறு.66, 251, 382.
45. ஐங்.423, 424. 46. நற்.89.

'தொச்சிலும் மௌவல் மலரக் கார் தொடங்கின்று காலை. காதலர் தவச்சேய் நாட்டார் ஆயினும், மிகப் பேரன்பினர்', எனல்.[47]

'செய்வினை முடித்த செம்மல் தேர்மணிகொல் ஒலிப்ப! முல்லை பூத்த கல்லுயரேறிக் கடவும் வலவ', எனல்.[48]

'பெருங்கலிவானம் ஏர்தரும் பொழுது காதலர் வருகுவர்கொல்லோ! வருவர்', எனக் கூறல்.[49]

'வருவேம்' என்ற தலைவர் கூறிய பருவம் வந்தன்றால்! புதுவை மாலைப் பல்லான் கோவலர் தம் குழல் முல்லை புகை வெளிப்படுத்தும்', எனல்.[50]

தலைவன் குறித்த கார் வரவை எதிர்நோக்கியிருக்கும் தலைவியிடம், 'கார்ப் பருவம் வந்தது. தலைவர் விரைவில் வருவார்', எனக் கூறி ஆற்றுவிக்கும் காட்சிகள் பலவற்றை ஐங்குறுநூற்றில் 'தோழி வற்புறுத்த பத்து' என்னும் பகுதியிற் காணக்கிடக்கும்.[51]

அவற்றுள், 'கார்தொடங் கின்றே, எல்லை காலம், நிற்புறந் தருவல் நல்லாய்' (ஐங்.461) 'நீயலம், தகைமெலிந்து வாட்டுற நல்லாய்' (ஐங்.462), 'கார்செய் காலம் பிற்பட ... முயங்க வருவர்' (ஐங்.465), 'துன்னல் மாலை பரலுக்குத் திரியே, வருதல் ... தெளித்திசின் மாதே' (ஐங்.466), 'பெயல்தொடங் கின்றே வானம், காண்குவம்' (ஐங்.469) என வருவன குறிப்பிடத்தக்கன.

தோழி பருவம் மயங்கல்

கார்ப்பருவம் வந்த பிறகும் தலைவன் வரவில்லை. தலைவியின் துயரம் கார் காலத்தாலும் மாலைக்காலத்தாலும் பெருகுகிறது. தலைவியின் துன்பத்தையும் நலத்தையும் காணும் தோழி, 'இது பருவம் அன்று', என்று பலவாறு ஆதல் சொல்லித் தேற்றுகிறாள்.

மழையில் மறந்த, கடல்முகந்த கமஞ்சூல் மாமழை பொய்தொழிந்து பிடவும் கொன்றையும் கோடலும் மடவவாகலின், காரென்று அயர்ந்த உள்ளமொடு மலர்ந்து விட்டன. 'இது அறிந்தோர் நாம் மறந்தெவ்வாறு பருவமன்று' மயங்காதே.[52]

'முல்லை மலரும் கார்வரு பருவம் வரவும்', என்றனர். மேகமே, நம்பின் மெய்யால் பேரார் உள்ளம் நடுங்க, பொய்யிடி அதிர்குரல் கொண்டனை. மயிலும் படப்பையும் போல வாய்மெய்த்த ஆடும். மருள்வேமோ நாம்!'[53]

---

47. நற்.115.
48. குறு.275.
49. குறு.287.
50. குறு.358.
51. ஐங்.461-470,
52. நற்.99.
53. நற்.248.

'மௌவல் அரும்பை ஈயும் பொழுதில் வருவேம்', என நன்னுதல் நீவிச் சென்றவர் வாரார், முல்லை அரும்ப தவறாது இடியிடித்துவிட்டது! மணிநிற எழிலி மடவது அம்ம!'[54]

'சான்றோர் கூறிய பருவம் வாராக் காலத்தில் வம்ப மாரியைக் காரென மதித்தே கொன்றை மலர்தலின், கொன்றை மடவ'[55]

'வானத்து முழக்குரல் கேட்டு, கானமாரி பெய்தென அதனெதிர் மஞ்ஞை ஆலுமாயின்', பிடவும் பூத்தன்றாகவே இதை, நீர்க்கவின் அயர்'.[56]

'முல்லை நகையொடு மலர்க்க வம்பமாரிபெய்யும். அது கார்ப்பருவமாயின் வாராரோ நம் காதலர்!'[57]

'தோழியே! இளையர் வினை முடித்தமையால், முல்லையொடு முல்லை மாலையை சூடி வந்தனர். அப்பணி நாளில் நமரும் பிரியாது வருவர்'.[58]

ஐங்குறுநூற்றில் 'புறவணிப்பத்து' (431-44) என்னும் பகுதியில் உள்ள பத்துப் பாடல்களும் 'நன்றே காதலர் சென்ற வாறே' என்ற தொடங்கிப் புறவின் அழகைப் பலவாறு சிறப்பிக்கின்றன. இப்பத்துப்பாடல்களும் தோழி கூற்றில் உள்ளன. தலைவன் சென்ற வழியைப் பாலை வழியாகக் கூறுவது மரபு. மாறாக, முல்லை வழியாகக் கூறுவது இப்புறவணிப்பத்துப் பாடல்களில் மட்டுமே காணப்படுகிறது.

'தலைவர் போன வழிபோகத்தோழி! ஏற்றேன்'! என்ற தலைமகட்கு 'அவர் போன வழி நன்று', என்று புறவின் தற்பொருள் கருப்பொருள் அழகினைப் பலவாறு கூறி ஆற்றல் சொல்வதைக் காண்கிறோம். அவற்றுள்,

'மணிநிற உருவின தோகையும் உடைத்தே' (ஐங்.431)
'கடிபுகு வனர்போல் மள்ளரும் உடைத்தே' (ஐங்.432)
'கார்ப்பெயற் செழிய காவும் உடைத்தே' (ஐங்.433)
'வாலிய மலர்ந்த முல்லையும் உடைத்தே' (ஐங்.437)

என வருவன குறிக்கத்தக்கன. இது போன்றவை மேலும் பல உள.[59]

இல்லற தலைவியின் இன்ப துன்பத்தில் பங்கேற்கும் தோழியின் சிறப்பை,
'Two souls with but a single thought
Two hearts that beat as one'

எனக் கூறலாம்.

---

54. நற்.316. 55. குறு.66. 56. குறு.251.
57. குறு.382. 58. நற்.367.
59. ஐங்.434, 435, 436, 438-440.

முல்லைச் சிறப்பும்

குறித்த பருவத்தில் தலைவன் வந்ததும் தோழி தலைமகட்கு மகிழ்ந்து கூறும் காட்சிகள் சில உள.[60]

'நிற்பிரிந் துறைநர்
தோள் தலைபாக வந்தனர்
போதவிழ் கூந்தலும் பூவிரப் புகவே' (ஐங்.496)

'தோன்றலை வெய்ய தொகுதியோ நின்றன
நீலவரி நெடுங்கண் வால்லைப் புற்றன
வரையக நாடன் வந்த மாறே' (ஐங்.498)

தோழி தலைமகட்குக் கூறிய கூற்றுகளில் காதும் கார், மாலை ஆகியவற்றின் கார் கால மழையே மிகுதியான பாடல்களில் சிறப்பிக்கப்படுகிறது.[61] அவற்றுள்,

'கல்மிசை அடுக்கம் புதையக் கால்வீழ்த்துத்
தளிதரு தண்கார்' (நற்.316)

'நீர்ப்பட வெழிலி வீசும்
கார்பெயல் தெறிய கானம் படர்ந்தே' (ஐங்.433)

என வருவன குறிப்பிடுதற்குரியன.

மலர்க்காட்சிகள் பல உள. அவற்றுள், கொன்றை,[62] முல்லை,[63] மௌவல், பிடவம்,[65] தளவம்,[66] குருந்து,[67] கோடல்,[68] தோன்றி,[69] குவளை,[70] நெய்தல்,[71] தோன்றி,[72] பீரம்,[73] களவீ,[74] இல்லம்[75] என்பன குறிப்பிடத்தக்க கொன்றையும் முல்லையும் (மௌவல்) முறையே எல்லைடங்களைப் பெறுகின்றன.

பிரிவுக் காலத்தில் பிழை நெகிழ்தலும் மாமை நிறம் பெறுதலும் குறு.350, ஐங்.467,498,470,471 ஆகிய பாடல்களில் கூறப்படுவதை அறிகிறோம்.

பிரிவுக்காலத்தில் தலைவி நல்லுதல் நீங்கிச்செல்வதை நற்றிணையின் 316ஆம் பாடல் கூறுகிறது.

தலைவியின் வாடைத்துன்பம் 'நல்கா வாடை' என நற்றிணையின் 89ஆம் பாடலில் சிறப்பிக்கப்படுகிறது.

கார் வந்து அகவும் மஞ்ஞை, (நற்.248, குறு.251, ஐ:431) முதலிய பாடல்களில் குறிக்கப்படுகிறது.

---

60. ஐங்.496-499. 61. நற்.99,248,316; குறு.251; 287; ஐங்.433; அகம்.4
62. நற்.99; குறு.66; ஐ:432,435,436,462,497; அகம்.4.
63. நற்.248,367; குறு.207,382; ஐங்.437; அகம்.7. 64. நற்.115,316.
65. நற்.99; குறு.251; ஐங்.435,461,499. 66. குறு.382; ஐங்.440,499.
67. ஐங்.436,439. 68. நற்.99. 69. நற்.115. 70. நற்.367.
71. ஐங்.435. 72. ஐங்.440. 73. ஐங்.464. 74. ஐங்.464.

தலைவியின் ஊர், 'முதிர் தேம் பெரியசெவ் சிறுகுடி மெல்லியல் நாட்டை' என நற்றிணையின் 367ஆம் பாடலில் சிறப்பிக்கப்படுகிறது.

தலைவன் தலைவியால் கொண்ட பெருமை, பல பாடல்களால் புலனாகின்றது. 'நலச்சேர் நாட்டார் ... நல்லள்'[76] 'நிறைந்த தகைமை நல்லள்'[77] 'தகைபெறும் வாட்டு நல்லள்'[78] 'கூந்தல் ... பூவை, வாரா தமையலோ விலரே'[79] 'உள்ளார் காதல ராயின் ... மறக்க விடுமோநின் மாமைக் கவினே'[80] என வருவன குறிப்பிடற்பாலன.

குறிஞ்சி உடல மகளிர் போல மெல்லிய ஏருடன், மகளிர் கழல 12 மாதங்கள் தாங்குவர் என்ற அரிய கருத்து, குறுந்தொகையின் 287ஆம் பாடலில் மட்டும் காணப்படுகிறது.

தோழி தலைமகளுக்கு உரிய கற்புகளில் விளை முதிர் வந்த தலைமகனை தோழியைப் பாராட்ட, அதற்குத் தோழி பலவாறு மகிழ்ந்த செய்தியைக் காண்கிறோம்.

'தலைவியை நன்கு காப்பாற்றினாய்!' என்ற தோழியைத் தலைவன் புகழ, 'என் செயல் ஒன்றும் இல்லை; எல்லாம் விருந்து வரக் கரைந்த காக்கையது செயலே!' என்கிறாள். அக்காக்கைக்கு நன்றி கூற விரும்பி 'தொண்டி முழுவதும் வெண்ணெல் சோற்றை ஏழு கலத்தில் கொடுத்தாலும் ஈடு ஆகாது!' என்றும் கூறுகிறாள்.[81]

'தலைவர் வருகையால் தலைவியின் கொன்றைப் பூப்போலப் பசந்த கண்கள் நீலமலர் போலத் தொல்கவின் பெற்றன' என்கிறாள்.[82]

வேந்தன் படைத்தலைவனாகச் சென்ற தலைவன் குறித்த பருவத்தே வந்த தலைவியின் கற்பின் மாண்பினைப் புகழ்ந்து மகிழ்ந்தமைக் காணும் தோழி,

'சீறூர் பலபிறக் கொழிய மாலை
இனிதுசெல் தலையால் ஏற்றே வாழிய!
பனிவார் கண்ணள் பலபுலந் துறையும்
ஒள்தொடி அரிவை கூந்தல்
பொலம்புனை புரவி வேந்தன் தேரே!'[83]

என்கிறாள்.

அகத்தொழில் முடித்த செம்மல் உள்ளமொடு காலம் நீட்டிக்காமல் செய்த அம்மாலை பொழுதில் நல் தேர் வந்து நின்றது. கடவுட்கற்பொடு குடிக்கு விளக்காகிய

---

76. நற்.115. 77. ஐங்.461. 78. ஐங்.462. 79. ஐங்.465.
80. ஐங்.470. 81. குறு.210. 82. ஐங்.500. 83. அகம்.104.

புதல்வற்பயந்த நன்னராட்டிக்கு எனக்கும் இனிது ஆகின்று சிறக்க நின் ஊர்!' எனத் தலைவியின் பண்பு நலம் கூறிப் பாராட்டுவதை ஒரு பாடலிற் காண்கிறோம்.[84]

குறித்த பருவத்தில் வாராமையின் தலைவி இறந்த பருவம் என்பது படச் சொல்லும் தோழி, 'கார் செய்காலை, நல்யாழின் செவ்வழி பிறப்ப, தலைவர் வாராமையின் எற்றினை எவன்கொல் என்று, கடவுட் கற்பின் மடவோள் பாணிடம் கூறி வருந்தும் காலை, தன்கொள் பனுவல் நீர வந்தனை! வாழ்க நின் கண்ணி!' என்று வாழ்த்துவதை ஒரு பாடலிற்பரக்கக் காண்கிறோம்.[85]

தலைமகனைச் செலவுடன்பட்ட தோழி, 'வருந்தாமை வினை முடிந்த வகை! யாம் மீள இங்கே உறைவோம். அதுவே நாமம் சால. பெரியதல்லவோ பெரியவர் நிலையே!' எனக் கூறினள்.[86]

தலைமகனைச் செலவழுங்குவிக்கும் தோழி, 'யாமே நிற்றுறந் தமைகலம்'[87] 'நாமநீர் மன்னரின் காதலம் புதல்வ வதுவை முலைக்கே'[88] எனக் கூறுவதையும் காண்கிறோம்.

இரவுக்குறியிடத்தே தலைமகனை வரைவு கடாவக் கூறும் தோழி, 'மாவல் தோன்றல், சிற்றில் மனையோளைப் பாவை அகலில் உள்ளுதற்கு ஒருநாள் வந்தனை சென்மோ! என்கிறாள்.[89]

முல்லை அகக்குறிப்பு இல்லாத அகநானூற்றின் 304ஆம் பாடல் புறநானூற்றில் காணும் வல்லாண் முல்லைப்பாடல் போல உள்ளது.

குறித்த பருவத்தில் வந்த தலைவனுடைய செம்மல் உள்ளத்தை இரண்டு பாடல்கள் ஒரே நிலையில் போற்றிப் புகழ்வதைக் காண்கிறோம். 'செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு',[90] 'அருந்தொழில் முடித்த செம்மல் உள்ளமொடு'[91] என வரும் தொடர்கள் மேற்கூறியவற்றைப் புலப்படுத்தும்.

தலைவியின் கற்பை, 'கடவுட் கற்பின் மடவோள்' எனக் கூறுவதை இரண்டு பாடல்களிற் காண்கிறோம்.[92] தலைவியின் புதல்வன் 'குடிக்குவிளக் காகிய புதல்வன்' என்று கூறுவதை ஒரு பாடலிற் காண்கிறோம்.[93]

---

84. அகம்.184. 85. அகம்.314. 86. நற்.206.
87. ஐங்.423. 88. ஐங்.424. 89. அகம்.394.
90. குறு.275. 91. அகம்.184. 92. அகம்.184,314.
93. அகம்.184.

தோழி பாணற்குச் சொல்லிய கூற்றுகள் இரண்டு உள.[94] குறித்த பருவத்தே வாராத தலைவன் பாணனைத் தூது விட, அறிந்த தோழி, வினை நெகிழ மேவி வாட, நம் பலர்க்குத் தலைவியைத் துறந்தார். அதனை உணராத இரவுபோதும் நாம வருந்துவேம (ஐங்.471) என்றதனை தலைவியின் பொய்படு மொழி கண்டு நாணுகின்றேன் (ஐங்.472) என்று கூறுவது மேற்கூறிய பாணற்குச் சொல்லிய கூற்றுகளால் புரிகிறது.

தோழி தன்னுள் மகிழ்ந்து கூறுவதாக ஒரு பாடல் உண்டு.[95] 'வைகறை மாலையில் தலைவர் தேர் வந்ததாகலின், தலைவியின் அழுதல் பசலையால் உண்ணப் படாது', என்பது அப்பாடற்கருத்தாகும்.

வாயில்களோடு உறழ்ந்து சொல்லியதாக ஒரு பாடல் உண்டு.[96] தலைவன் குறித்த பருவம் கடந்ததால் தலைவி வாடி வருமெய்த வாயில்களை நோக்கி, 'மாலை நடந்தன நெருந்தவை நேரே! என்றும் அம்படர் துயர் நீக்கி, விருந்தயர் விருப்பின் திருந்திழை வேலோ' என்றும் கூறி, 'வலை வேண்டா' என்கிறாள்.

தோழி கூற்றில் வேற்றுப் புலத்தொடு பெடையைப் புணர்ந்து மீண்டு வந்த பறவையின் சேவல் அதைப்போல பெடை தன் பிரிவொடு சென்று படர்வுறுவதே புணர்வதால் தழுவும் பிரிவு நல்லவன் புறத்தே மனையால் தனித்த வருந்துவதைக் கண்டு இரங்கி தம்மால் வருந்த 'பெயல் மாலையில்' துறக்கும் என்பது பழித்துத் தோழி இரங்கும் பாடலும் உண்டு யாகும்.[97]

தோழியின் கூற்றுகள் ஒப்பாடல்களில் பிற நிலைகளைக் காட்டும் முறைகள் அறிந்தும், உடன்கச்சொல்லி விளக்க வைக்கும் பாங்குடைய ஆகும்.

தோழி, தலைவன் தலைவி வாழ்வில் மிக்க அக்கறை கொண்டவள் ஆதலால், அவள் கூற்றுகளில் அன்பும் சிறப்பும் அவள் உரிமைக் கூற்றாகப் பெறுவதைக் காண்கிறோம்.

---

94. ஐங்.471, 472.
95. நற்.181.
96. நற்.361.
97. நற்.101.

செவிலி

செவிலியின் சிறப்பு

செவிலி, என்பாள், தாயெனப்படுபவள்; நற்றாய்க்கு ஒப்பானவள். இவள் சிறப்புகளைத் தொல்காப்பியர்,

'தாயெனப் படுவோள் செவிலி யாகும்'[1]

'தாய்த்தாய் முதல் செவிலியொ டொக்கும்'[2]

என்பர். தோழி யாவளெனத் தலைமகள் காதலொழுக்கத்தை வளர்த்த செவிலியின் மகளாவாள் இச்செவிலியே.[3] இதை 'தோழி தானே செவிலி மகளே' என்பதால் அறியப்படும். இறந்த காலத்தும் நிகழ்காலத்தும் எதிர்காலத்தும் தம் முன்னோர் வழி கொள்ளுமாறு நல்லவை கூறலும் அல்லவை கடிதலும் செவிலிக்குரியவை என்பதை,

'ஒழிந்தது வரூஉம் நிகழ்ந்தது வழிகொள
நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்
செவிலிக் குரிய ஆகும் என்ப'[4]

என வரும் தொல்காப்பிய நூற்பாவால் தெளியலாம். மேலும் நம்பி அகப்பொருள் 104, 111ஆம் பாடல்களில் செவிலித்தாயின் செயல், உரிமை முதலியவைகளைப் பலவாறு சிறப்பித்திருப்பதைக் காண்கிறோம். 111ஆம் நூற்பா,

'செவிலி நற்றாய் தோழி யாகி
அவை நீதி அறிவுமா சாரும்
கொளுத்தித் தலைவியை வளர்த்த தாயே'

எனக் கூறுவது அறிதற்குரியது.

நற்றாயொடு நிற்றற்கு உரியவளாக வரும் நம்பி அகப்பொருள் 48ஆம் நூற்பாவில் 'செவிலி நற்றாய்க் கொத்தொரு சிறப்பும்' எனக் கூறியிருத்தல் அறிதற்குரியது.

செவிலிக்குக் கூற்று நிகழும் இடங்கள் 13. இதனை, 'களவு நாணும் கற்பொடு படுப்பினும்'[5] என்னும் நூற்பாவால் அறிகிறோம். செவிலிக்குரிய 13 கூற்றுகள் நற்றாய்க்கும் உரிய.[6] எனக் கூறுவதால் செவிலியின் முக்கியத்துவமானது மேலும் சிறக்கிறது எனலாம். தலைமகள் கொண்ட வேட்கையைச் செவிலி, தலைமகளின் குறிப்பால் அறிந்து கொள்வாள் என்பதை அறிகிறோம்.[7]

---

1. தொல்.பொருள்.122.
2. தொல்.பொருள்.136.
3. நம்பி.48.
4. தொல்.பொருள்.161.
5. தொல்.பொருள்.113.
6. தொல்.பொருள்.114.
7. தொல்.பொருள்.205.

ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் நற்றிணை உரையில் 'கற்பின்கண் தாயும் செவிலியும் ஆகிய இருவரில் 'நம் காதலோனே' என்றும், களவின்கண் தன்னிடம் செவிலி தலைமகட்குச் சிறந்தாளாய் இருதலின், 'நம் மகள் விட்டுப்போ' என்றும் கூறும் என்ப கூறியுள்ளமையால், செவிலியின் பண்பு, அறிவு, கற்பு ஆகிய முதலியனும் சிறப்புகளைக் காணலாம்.[8]

கூற்றுத் தொகுப்பு

எட்டுத்தொகைப் பாடல்களில் காணும் செவிலி கூற்றின் மொத்த எண்ணிக்கை 13.[9] அவற்றுள் நற்றாய்க்குக் கூறியவை 11.[10] தலைவிக்குக் கூறியது 1.[11] தம்முள் உவந்து கூறியது 1.[12] மேற்கூறியவற்றுள் மிகுதியான கூற்றுகளைப் பெறும் நூல் ஐங்குறுநூறு. அதிலுள்ள மொத்த எண்ணிக்கை 10. செவிலி கூற்றுகளின் பிரிவைப் பற்றிக் கூறுவன 12.[13]

செவிலியும் புலவர்களும்

செவிலி கூற்றுகளைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 4.[14] செவிலி கூற்றுகளை மிகுதியாகப் பாடிய புலவர் பேயனார். பாடிய பாடல்கள் 10. நக்கீரனார் நெடுநல்வாடையைச் செவிலி கூற்றாய் அமைத்திருப்பது குறிப்பிற்குரியது.

செவிலி நற்றாய்க்குக் கூறிய கூற்றுகள்

13 கூற்றுகளில் செவிலித் தாய் நற்றாய்க்குக் கூறிய 11 கூற்றுகளை,

1. கடிநகர்ச் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்குரைத்தது.[15] 2. கற்புக் காலத்துக் கடிநகர் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்குச் சொல்லியது.[16] 3. கடிமனைச் சென்று வந்த செவிலி உவந்த உள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது.[17] என்னும் துறைகளில் காணலாம். ஐங்குறுநூற்றின் 410ஆம் பாடல் 'கடிமனைச் சென்ற செவிலி தலைமகனும் தலைமகளும் புதல்வனொடு பாடல் கேட்டிருந்தமை கண்டு நற்றாய்க்கு உவந்து சொல்லியது' என்னும் குறிப்பில் அமைந்துள்ளது.

---

8. துரைசாமிப்பிள்ளை, ஔவை சு., ஐங்குறுநூறு, பகுதி பக்.750-751.
9. குறுந்.(2): 167, 242; ஐங்.(10) 401-410; நெடுநல்.1.
10. குறுந்.167,242; ஐங்.401-409. 11. நெடுநல்.
12. ஐங்.410. 13. ஐங்.401-410; குறுந்.167,242.
14. குழற்றத்தனார் குறுந்.242, கூடலூர் கிழார் குறுந்.167; நக்கீரர் நெடுநல்.1. பேயனார் ஐங்.401-410.
15. குறுந்.167. 16. குறுந்.242.
17. ஐங்.401-409.

கற்புச் சிறப்பு

செவிலித்தாய் கூற்றில் வரும் 10 பாடல்கள் (401-410) ஐங்குறுநூறில் 'செவிலி கூற்றுப் பத்து' என்னும் பகுதியில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

செவிலி நற்றாய்க்குக் கூறும் கூற்றுகள் தலைவன் தலைவியரின் உயர்ந்த புதிய வாழ்க்கையைச் சுதாபத்திற்கேற்றவாறு எடுத்துக்கூறும் வகையில் சிறப்புடையன. மேலும் தொல்காப்பியரின் கற்பியல் என்னும் கைகோள், செவிலி கூற்றுகளில் காணும் குடும்ப வாழ்வில் நன்கு சித்தரிக்கப்படுவதைக் காண்கிறோம்.

ஐங்குறுநூறில் உள்ள செவிலி கூற்றுப் பத்து முழுவதும் 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' எனக் காட்டுவதைப் பார்க்கிறோம்.

கடிமனைச் சென்று வந்த செவிலி, புதல்வனை மையமாக வைத்து, நற்றாய்க்குக் கூறும் காட்சிகள் நினைக்குந்தோறும் இன்பம் தரும். நடுவன், மறியிடைப் படுத்த மான்பிணை போலப் புதல்வனோடு அவர்கள் துயிலும் காட்சியும்[18] புதல்வனை அணைத்துக் கிடந்த தாயின் புறத்தைத் தலைவன் தழுவி, நசையினன் இருக்கும் காட்சியும்[19] தந்தை பெயரன் சிறுதேர் உருட்டும் தளர்நடை கண்டு தாய் மகிழும் காட்சியும்[20] அரிவை, மகனுக்குப் பாலூட்ட, தலைவன் தலைவியின் புறமுதுகைத் தழுவி இருக்கும் காட்சியும்[21] தலைவன் முன் மகன் விளையாட தான் காதலியைத் தழுவி இருக்கும் காட்சியும்[22] அரிவை முன்னே மலைய நெடுந்தகை புதல்வனொடு இருந்த காட்சியும்[23] தந்தை தன் புதல்வனைப் புல்லிக்கொண்டிருக்க அப்புதல்வன் தாய் அவ்விருவரையும் தழுவ, இனிது மன்றவர் கிடக்கை எனக் கூறும் காட்சியும்[24] மேற்கூறிய உண்மையைப் புலப்படுத்தும். 'மனைக்கு விளக்கு மனைவி' என்பதை, 'மனைக்குவிளக்காயினள்' எனக் கூறுகிறது ஒரு பாடல்.[25] பாணரின் முல்லை இசையைக் கேட்டு மகிழும் குடும்பத்தை ஐங்குறுநூறில் 408ஆம் பாடல் கூறுகிறது. இவ்வாறே பாணர் இசைச்சிறப்பு ஐங்குறுநூறில் 407, 410ஆம் பாடல்களிலும் சிறப்பிக்கப்படுவதைக் காண்கிறோம். மாலையில் தலைவன் மார்பின்மேல் தன் புதல்வன் ஊர்ந்து விளையாடுவதால் ஏற்படும் மகிழ்ச்சிக்கு ஏற்ப, பாணன் இசைத்தலைக் கேட்டுச் செவிலி தன் உள்ளே மகிழ்வதை ஒரு பாடல் காட்டுகிறது.[26]

---

18. ஐங்.401. 19. ஐங்.402. 20. ஐங்.403.
21. ஐங்.404. 22. ஐங்.406. 23. ஐங்.408.
24. ஐங்.409. 25. ஐங்.405. 26. ஐங்.410.

தலைவி சமைத்த தீம்புளிப்பாகரைத் தலைவன் 'இனிது' என்று உண்டலின் தலைவியின் ஒண்ணுதல் முகம் நுண்ணிதின் மகிழும் காட்சியைச் செவிலி,

'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே'[27]

எனக் கூறியிருத்தல் ஈண்டு அறியற்பாலது. தலைவி தலைவனுக்கு உணவு படைத்து மகிழும் காட்சி முல்லைப்பாடல்களில் குறுந்தொகையில் 167ஆம் பாடலில் மட்டுமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தலைவன் எங்கே சென்றாலும் விரைவில் வந்துவிடுவான் எனத் தலைவன் தலைவியாற் கொண்ட அன்பினைப் புலப்படுத்தும் செவிலி,

'சீறூ ரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினும்
சேந்துவர லறியாச செம்மல் தேரே'[28]

எனக் கூறியுள்ளமை அறியற்பாலது.

புதல்வன் பெயர் 'தந்தை பெயரன்' என வழங்குவதும்[29] தலைவன், 'தெய்வம் பொறைய நாடுவோன்',[30] 'புறவணி நாடன்',[31] 'புறவு ஒடு கிழவோன்'[32] 'மென்புல வைப்பின் ஒரு கிழவோன்'[33] 'நெடுந்தகை'[34] எனப் பலவாறு புகழப்படுவதும் செவிலி கூற்றின் சிறப்பாகக் காண்கிறோம்.

செவிலி கூற்றால் காணும் தலைவன் தலைவியின் குடும்பம் இல்லற இன்ப வாழ்வின் முழுப்படி எனலாம். இக்காரணம் பற்றியே ஐங்குறுநூற்றில் முல்லைப்பாடல்கள் 'செவிலி கூற்றுப் பத்து' எனத் தொடங்குகிறது போலும்!

செவிலி கூற்றுப் பத்து வரிகளைக் கூர்ந்தால், மனையறத்தில் தலைவன் தலைவி பெறும் இன்ப வாழ்வில் ஒப்பாரற்றதோர் உண்மையான அன்பு, இனம் புரியாத இன்பத்தை உணர்த்திக் காட்டுவதைக் காண்கிறோம். இச்சிறப்பு, 'Marriage is something more serious than the pleasure of two people in each other's company... something more intimate, affectionate and realistic'[35]

எனக் கூறும், ரசல் வாக்கின் பொருளைக் காண்கிறோம்.

---

27. குறுந்.167. 28. குறுந்.242. 29. ஐங்.403.
30. ஐங்.404. 31. ஐங்.405. 32. ஐங்.406.
33. ஐங்.407. 34. ஐங்.408.
35. Bertrand Russell, Marriage and morals, p.63.

பாணன்

பாணன் சிறப்பு

முல்லைப் பாடல் தலைவன், 'பாணர் பெருமகன்'[1] என்று குறிக்கப்படுவதால், பாணர்க்குச் சமுதாயத்தில் இருந்த பெருமதிப்பு வெளியாகிறது. பாணர்தம் யாழிசைச் சிறப்பு, 'சீறியாழ்ப் பாண'[2] 'முல்லை நல்யாழ்ப் பாண',[3] 'கைவல் பாண',[4] 'பாணர் யாழ்',[5] 'பாணர் படுமலை'[6] எனப் பல பாடல்களில் குறிக்கப்படுவதைக் காண்கிறோம். தோழி பாணனிடம் தன் குடும்பத்தைக் காட்டிப் பேசுவதாய் ஒரு பாடல் உள்ளது.[7] பாணன் யாழிசையைத் தலைவி விரும்பிக் கேட்டு இன்புற்றதை இரண்டு பாடல்களில் காண்கிறோம்.[8] தலைவியின்பால் தோழிக்குள்ள உரிமையைப்போல தலைவன்பால் பாணனுக்கு உள்ள உரிமையை 'நினக்கியாம் பாணரு மல்லே மொழிந்து, நீயும் குடிமையை மை'[9] என்னும் அடிகள் புலப்படுத்தும். புறநானூற்றில் உள்ளவைகளுள் முல்லைப்பாடல்களில் பாணரைப் பற்றிய குறிப்புகள் பல உள.[10]

பாணர்களின் பண்டைச் சிறப்புகளை நோக்கின், 'தொடக்கக்காலத்தில் காவற் காடுகளில் வாழ்ந்த குறுநில மன்னர்களிடையே தோன்றி, பின்பு மூவேந்தர் பாராட்டத் திகழ்ந்தனரோ'' என்ற கருத்து வெளிப்படுகிறது. பாணர் தலைவன் 'பாண்பசிப் பகைஞன்'[11] எனக் கூறப்படுவதை ஒரு பாடலில் காண்கிறோம். ஐங்குறுநூற்றில் 'பாணன் பத்து' பாணனைச் சிறப்பிக்கிறது என்பது அறிதற்குரியது.[12]

மருதத்திணையில் பரத்தையர்த்தொழிலுக்குத் துணை நிற்பதாகப் பேசப்படும் பாணன், முல்லைப்பாடல்களில் அறிவுடையோனாக,[13] பேரன்பினனாய்[14] பேசப்பட்டுள்ளமை அறிதற்குரியது.

தலைமகன் பிரிவுக்காலத்துத் தலைவிக்குப் பின் நின்று கூறுவதற்கும் கூடலும் பிரிந்த ஒற்றாய்ப் பாட்டுத் தலைவி இருந்த நிலையை உணர்த்துவதாய் பாணர்க்குரிய தொழிலாகும். இதனை,

---

1. ஐங்.458. 2. ஐங்.472. 3. ஐங்.478.
4. ஐங்.473. 5. அகம்.374. 6. குறு.323.
7. ஐங்.359. 8. ஐங்.408,410. 9. ஐங்.430.
10. புறம்.178,320,324. 11. புறம்.180. 12. ஐங்.471-480.
13. ஐங்.474. 14. ஐங்.475.

'தலைப்பெயர்த்து மாறுதல் ஆற்றிலை உரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய'[15]

என்றும் தொல்காப்பிய நூற்பாவால் அறிகிறோம். நம்பி அகப்பொருள் பாணர்க்குரிய செயல்களை 'வாயில் வேண்டல்' முதலாகப் பலவற்றைக் கூறிக் காட்டுகிறது.[16] தலைவன் தலைவி, தோழி ஆகிய மூவர் கூற்றுகளிலும் பாணன் இடம் பெற்றுள்ளமை நினைவு கூர்தற்குரியது.[17]

கூற்றும் புலவரும்

முல்லைப்பாடல்களில் பாணன் கூற்றாக வருபவை 4.[18] அவற்றுள் தலைவனுக்குச் சொல்லியவை 3.[19] பாங்காயினர்க்குச் சொல்லியது 1.[20] பாணன் கூற்றாகப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 4. அவர்கள் முறையே ஒக்கூர் மாசாத்தனார் (அகம்.14), கரும்பிள்ளைப் பூதனார் (பரி.10), நல்லந்துவனார் (பரி.20), பேயனார் (ஐங்.480) என்பவர் ஆவர்.

கூற்றுக் குறிப்பு

4 கூற்றுகளில் பாணன் தலைவனுக்குச் சொல்லிய 3 கூற்றுகளை,

'தலைமகட்குத் தூதாய்ப் பாசறைக்கண் சென்ற பாணன் தலைமகனை நெருங்கிச் சொல்லியது'.[21] 'பருவங்கண்டு வற்புறை எதிரழிந்த தலைமகளை ஆற்றமை கண்டு தோழி தூது விடச் சென்ற பாணன், தலைமகற்குப் புனல் வரவும் வையை நீர் விழவணியும் உவப்பப்பட்ட செய்தியுங் கூறியது'.[22] என்றும் துறைகளில் காண்கிறோம்.

அகநானூற்றின் 14ஆம் பாடல் 'பாணன்தனக்குப் பாங்காயினோர் கேட்பச் சொல்லியது' என்னும் துறையில் அமைந்துள்ளது.

தலைவன் பாசறையிருப்பு, தலைவி ஆற்றியிருத்தல் ஆகியவை பரிபாடலில் இடம் பெற்றில. கார் கால வருணனையே உள்ளது என்பது அறிதற்குரியது.

தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் துயர் நீத்தற்பொருட்டுத் தலைவன் வரவினைத் தனக்குப் பாங்காயினோர் கேட்பக் கூறும் பாணன்,

'அரக்கத்தன்ன செந்நிலப் பெருவழிக் காயா மலரும் தம்பலப் பூச்சியும் பவளமொடு மணி மிடைந்தன்ன குன்றக்காட்டிடையே தோன்றும். இரலை மடப்பிணை

15. தொல்.பொருள்.167. 16. நம்பி.95.
17. ஐங்.477-479,473,474,476,471,472.
18. ஐங்.480; பரி.10,20; அகம்.14. 19. ஐங்.480; பரி.10,20
20. அகம்.14. 21. ஐங்.480. 22. பரி.10,20.

வைத் தழீஇப் புலவர்களும் • முல்லைக் கோவலர் குழலோசை மகிழ்ந்து விளையாடுவர். மதனுடை நல்லான் தீம்பால் பிலிற்ற இளங்கன்று பயிர் குரலையுடையவாய் மன்றுநிறை புகுதரும். அத்தகைய மாலையைத் தலைவர் உள்ளார் ஆயின் எதிர்வரு நிறைவுகொள்ளேவ யாங்காகுவங்கொல் பாண!' என்றனள் மனையோள். அம்மனையோள் சொல்லெதிர் சொல்லல் வல்லேன், செவ்வழிப் பண்ணை நல்யாழில் இசைத்து, வயவைக்கடவுள் வாழ்த்தி, தலைவர்பாற்செல நும் முனைநனை நல் புனைநெடுந்தேர் வரக் கண்டனென் யான் எனக் கூறல் கலை நலம் கொண்டதாகும்.[23]

தலைமகட்குத் தூதாய்ப் பாசறைக்கண் சென்ற பாணன் தலைமகனை நோக்கி, 'நின்னெதிர் காதலி தன்மனைப் புலம்பி, ஈரிதழ் உண்கண் உகுத்த, பூசல் கேட்டு மருளாயோய், நினக்கியாம் பாணரும் அல்லேம், நீயும் நுழைவையும் அல்லை' எனச் சிறந்த கூறி ஒரு பாடலிற் காண்கிறோம்.[24]

பாணன் கூற்றில் முல்லை நிலம், 'அரக்கத் தன்ன செந்நிலப் பெருவழி'[25] எனக் குறிப்பிடுதல் அறியத்தக்கது.

முல்லை நிலத்தே கற்றிக் காயா மலரும் செந்நிறத் தம்பலப்பூச்சியும் கலந்து காணப்படும் நிலையைக் கூறும் 'காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன், ஈயல் மூதாய் வரிப்பப் பவளமொடு, மணிமிடைந் தன்ன குன்றம்'[26] என்றும் அதனைக் கூறுவ, பிற பாடல்களிலும் காணப்படுகின்றன.[27] பாசறைத் தலைவனைப் பாணன் 'முனைநத் தநர்'[28] எனக் குறிப்பது அறியத்தக்கது.

பாணர், தலைவியின் துயர் தீர்த்தற்பொருட்டு செவ்வழிப் பண்ணை யாழில் இசைத்துக் கடவுளை வாழ்த்தி மெல்லத் தமது வேண்டுகோள்வர் என்பது அகநானூற்றின் 14ஆம் பாடலால் தெரிகிறது.

கடமையுணர்வை மறந்த தலைவனை அறிவுறுத்துவதாக ஐங்குறுநூற்றின் 480ஆம் பாடல் திகழ்கிறது எனலாம்.

தலைவன் தலைவியரின் இல்லற வாழ்வில் பாணருக்கு உரிய பங்கும் உரிமையும் எவ்வாறு பாசு உணர்வாய் உயர்ந்து விளங்குகிறது என்பதை இரண்டு பாடல்களில் காண்கிறோம்.[29]

---

23. அகம்.14.
24. ஐங்.480.
25. அகம்.14.
26. அகம்.14.
27. அகம்.304, 374.
28. அகம்.14.
29. அகம்.14; ஐங்.480.

பாகன்

<u>கருத்துச் சிறப்பு</u>

பாகனுக்குரிய உரிமையாக ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுவதொன்றைக் காணோம். பேராசிரியர் செய்யுளியலுள் 'பாணன் கூத்தன் விறலி, பரத்தை ... தொல்லெறி மரபிற் கற்பிற் குரியவர்'[1] என்னும் நூற்பா உரையில் 'தொல்லெறி மரபின் என்றதனாற் பாகரும் தூதரும் கூறவும் அமையும்' என்பர். 'நிறைய பண்பும் ஒழுக்கமும் விழையும் ... தோற்றம் சான்ற அன்னவை பிறவும், முன்னோர்க்கு உரிய வினை என்ப'[2] என்னும் நூற்பாவால் தேர்ப்பாகரும் தலைவன் ஏவல் வினையாளருள் ஒருவனே எனக் கொள்ளலாம். பாகற்குரிய இயல்பினை,

> 'செலவுறுக் குறித்த வாயில் வேட்டலும்
> வாயிலோர் விடுதலும் வலம்புரி தீர்த்தலும்
> வினைமுடித் தலைவன் வியம்பதி செய்தலும்
> இனையோர் தேற்றலும் பாகற் கியல்பே'[3]

என நம்பி அகப்பொருள் கூறுவதைக் காண்கிறோம்.

பாகன் கூற்றாக வருவது 1.[4] அஃதும், தலைவனுக்குச் சொல்லியதாகும். பாகனைப் பாடிய புலவர் இளநாகனார் ஆவர். அப்பாடல் வினைமுற்றி மீண்ட தலைமகற்குக் கூறும் முறையில் அமைந்துள்ளது.

'தலைவியை விரையச் சென்று காணுமாறு இன்றே தேரைச் செலுத்துவேன்', எனக் கூறும் பாகன், விரிந்துளை உடைய வம்பரி, காண்பார் முயலைக் கறவைப் பின்னே செல்லும்படி போந்த, வெள்ளிருக்கை அயலும் மாலை வெள்ளிறைப் பணைத்தோள் குயில் நுமர்போல், வாழ்கறி ண்ணை' என்பி நான் வேந்தன்போதுறு முடித்துவன் என்று வருந்தாதி. விதையர் கொன்ற கொல்லையில் ஈரிலை வரகின் கவைக்கதிர் கறித்த காமர் மடப்பிணை அலவரொடு வதியும் புறவிற்று நீ நயந்தோள் ஊரே' என மகிழ்ச் சொல்வதைக் காண்கிறோம்.[5]

பாகன் தலைவன் உள்ளத்திற்கு ஏற்றவாறு தேரினை விரையச் செலுத்துதல் உண்டு என்பதை, 'புல்லியற் கலிமா உடைமை யான' என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறிகிறோம்.[6]

தேரின் விரைவு 'கால்யாற் றொழுகைக் கரைபிறக் கொழிய'[7] எனக் கூறப்பட, ஐங்குறுநூற்று 465ஆம் பாடல் 'கார்செய் கானம் பிற்படக் கடவு' எனக் கூறுவது ஈண்டு ஒப்பு நோக்கற்குரியது.

---

1. தொல்.பொருள்.491.
2. தொல்.பொருள்.168.
3. நம்பி.102.
4. நற்.121.
5. நற்.121.
6. தொல்.பொருள்.192.
7. நற்.121.

உழையர்

கூற்றுச் சிறப்பு

உழையர் என்போர், 'இளையோர், ஏவலர்' எனக் கூறப்படுவர். தொல்காப்பியர் இளையோர்க்குரியனவாக,

> 'ஒற்றுப் பண்பும் கழிந்த வினையும்
> ஏவல் முறையும் விழவும் செப்பும்
> ஒத்திடைக் கண்ட பொருளும் நிறைச்சியும்
> தோற்றம் சான்ற அன்னவை பிறவும்
> இளையோர்க்கு உரிய கிளவி என்ப'[1]

எனக் கூறுவர்.

முல்லைத்திணைப்பாடல்களில் உழையர் கூற்றாக வருபவை 3.[2] அவற்றுள் தலைவற்குச் சொல்லியது 1.[3] தம்முள் சொல்லியவை 2.[4]

உழையர் கூற்றினைப் பாடிய புலவர் இருவர். ஒக்கூர் மாசாத்தியார் இரண்டு பாடல்களையும் (அகம்.324,384) கடுவன் மள்ளனார் ஒரு பாடலையும் (அகம்.354) பாடியுள்ளனர். உழையர் தம்முள்சொல்லிய கூற்றுகளை, வினைமுற்றிய தலைவன் கருத்துணர்ந்து சொல்லியது.[5] வரவு கண்டு சொல்லியது.[6] என்னும்துறைகளில் காண்கிறோம். உழையர் தலைவற்குச் சொல்லியதை, வினை முற்றிய தலைவற்குச் சொல்லியது.[7] என்னும் துறையில் காண்கிறோம்.

வினை முடிந்தமையால் மீண்டு போவதற்கு முனைகின்ற தலைவன் கேட்குமாறு, மின்னைப் பின்னலின் ஈனியன்ன பைம்பயிர்ப் புறவில், பறைக்கண் அன்ன நீர்ச்சுனை தோறும் மழைத்துளி படுதலால் பூமொட்டுகள் அவிழ்வன போல நீர்க்குமிழிகள் தோன்றி மறையும். அரவின் சிறுகண் போன்ற அறல்பட்ட நிலத்தே நெடுந்தகையின் தேர் உருளைகள், வரிசையாகச் செல்லும் பாம்புகளைப் போல ஓடிச் செல்லும். அத்தகைய முல்லை மலரும் இம்மாலைக் காலத்தில் திருந்திழையும், பணைத்தோளும், மடமொழியும் உடைய அரிவை விருந்தும் பெறுகுநள் போலும்!' என உழையர் தம்முள் மகிழ்ந்து கூறுவதை ஒரு பாடலிற்காண்கிறோம்.[8]

---

1. தொல்.பொருள்.188.
2. அகம்.324,354,384.
3. அகம்.354.
4. அகம்.324,384.
5. அகம்.324.
6. அகம்.384.
7. அகம்.354.
8. அகம்.324.

பாசறைக்கண் இருந்த வேந்தன் அருந்தொழில் முடித்தனனாக யான் பெருங் காதலொடு பெருந்தேரில் ஏறியதும், வந்தவாறும் அறிந்திலேன். தம்பட்டோடு முயல் உகளும் முல்லைப்புறவில் உள்ள சீறூரிடத்தே, மெல்லியல் அரிவை இல்லத்தின் முற்றத்தே தேரினை நிறுத்தி, 'இழிமின்' என்ற நின் மொழிகேட்டு மருட்சியும் கொண்டேன்! இத்துணை விரைவாக வருதற்கு, குதிரை உருவாக வான் வழங்கு இயற்கை வளி பூட்டினையோ? மனம் பூட்டினையோ? உரைமதி வாழியோ வலவ!' எனப் பாராட்டி நெடுந்தகை தன் வரை மார்பால் முயங்கி இல்லம் புக்கனன். திருந்திழை போல் விருந்தேற் பெற்றனள் என வினை முற்றிய தலைவனை வரவு கண்டு தம்முள் மகிழ்ந்த உழையரைக் கூறுகிறது மற்றொரு பாடல்.[9]

மன்னன் வாகை சூடிய பொழுது தலைவன் தலைவியால் விரைந்து செல்லல் வேண்டும் என்பது பட உழையர் கூறும் பாடல் ஒன்று உண்டு.[10]

உழையர் கூற்றில் தலைவன் 'நெடுந்தகை'[11] எனக் குறிப்பிட்டுள்ளமை அறிதற்குரியது.

தலைவன் வருகையால் தலைவி விருந்தயரும் பேற்றினை இரு பாடல்கள் குறிப்பிடுகின்றன.[12] புறவு, பைம்பயிர்ப் புறவு'[13] 'பறவைப் பல்லியம் புறவு'[14] 'முயல்பறழ் உகளும் முல்லையம் புறவு'[15] எனக் குறிக்கப்படுவதைக் காணலாம்.

பாகனை, 'மான்உருவான வளி பூட்டினையோ, மனம் பூட்டினையோ!' எனப் பாராட்டும் பகுதி தலைவன் பாகனுக்குக் கூறும் மற்றக் கூற்றுகளிற்காணாப் பகுதி எனலாம்.[16]

---

9. அகம்.384.
10. அகம்.354.
11. அகம்.324,384.
12. அகம்.324,384.
13. அகம்.324.
14. அகம்.354.
15. அகம்.384.
16. அகம்.384.

கண்டோர்

காதல் உணர்த்தோர்

கண்டோர்

கண்டோர்க்குரிய கூற்று மரபை,

'ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்ட என்ப'[1]

எனத் தொல்காப்பியம் கூறுகிறது. நம்பி அகப்பொருள், கண்டோர்க்குரிய செயல்களை,

'தீதுடைப் புலவி தீர்த்தலும் தலைவரல்
காதலிற் குறைத்தலும் கண்டோர்க் குரிய'[2]

எனக் கூறுகிறது.

கண்டோர் பேச்சு நிகழும் இடங்கள் தொல்.பொருள்.43ஆம் நூற்பாவில் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

காதல் உணர்த்தோர், கண்டோர் கூற்றாக இரு பாடல்கள் உள்ளன.[3] இப் பாடல்களை முறையே பேயனாரும் ஔவையாரும் பாடியுள்ளனர். தலைமகற்கு நன்மையும் இக்கூற்றுகளை, 'வினை பலவற்றிற்கும் பிரிந்தொழுகும் தலைமகன் பிரிவு மனைவயின் நீங்காத ஒழுகுகின்ற காதல் உணர்த்தோர் சொல்லியது; வினை முற்றி மறுத்தராநின்ற தலைமகனை இடைச்சுரத்துக் கண்டார் சொல்லியது' என்பதிலிருந்து காண்கிறோம்.

காதல் உணர்த்தோர்

தலைமகன் பிரிந்தொழுகும் செலவினை மறந்தொழிந்தமைக்குரிய காரணத்தைக் காதல் உணர்த்தோர்,

'புன்புல நாடன் மடமகள்
நலங்கிளர் பணைத்தோள் விலங்கிய செலவே'[4]

எனக் கூறுவதைக் காண்கிறோம்.

வினை முடித்து வரும் தலைமகனை இடைச்சுரத்து முன்னும் பின்னும் நோக்கி நின்றவர்களுள் ஒருவர், கான ஓமையத்த இருந்த முடிவை, பொன்செய் கொல்லனின் ஒலிபோல் தெளிர்ப்ப, பெய்ம்மணி நெடுந்தேர், முரம்பில் நேமி அதிரச் சென்றிக் உப்பலிக்குநாளே. இப்பொழுது இடைச்சுரத்திடையே எதிர் காண்பவருக்கு உரைத்ததை

1. தொல்.பொருள்.494.
2. நம்பி.99.
3. ஐங்.421; நற்.394.
4. ஐங்.421.

மார்பில் புதிய சாந்தம் நறுந்தண்பெயல் பிரோதிக்றனன். 'நோநோயால் வாடிய'
என மகிழ்ந்த காதலைத் தூண்டுகிறும்.[5]

நற்றிணையின் 394ஆம் பாடலுரை 'வல்சொல்லாற் குறை நயப்பித்த தோழி, தான் தவிர்க்கக் குறியமாம்' என்ற பாடபேதம் பெறினும் இடைச்சுரத்துக் கண்டார் கூற்றுக் கொள்வதே பொருத்தமுடைத்தாம்.

முல்லையின் தலைவன் 'புல்புல நாடன்'[6] என்ற குறிப்புத்தல் அறிதற்குரியது.

முயல்கள் புதலில் எப்பொழுதும் ஒதுங்கியிருக்கும் காட்சி, 'புதல் நெடுங்குழை விரியும்'[7] என வரும் தொடரால் கூறப்படுவதைக் காண்கிறும்.

---

5. நற்.394.
6. ஷ.421.
7. ஷ.421.

பரத்தை

பரத்தையிற்பிரிவு, தொல்காப்பியரால் அகத்திணையில் கூறப்படாது கற்பியலில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.[1] நம்பியகப் பொருள் இதற்கு மாறாக, களவியலில் கூறியுள்ளமை அறிதற்குரியது.[2] தொல்காப்பியர் இவ்வொழுக்கத்தை அகத்திணையில் கூறாமைக்குக் காரணம், அகத்திணை இயலில் இவ்வொழுக்கத்தைக் கூறலாகாது என்ற இடப்பண்பு நெறியேயாகும். மேலும், அகவொழுக்க வாயில்களுள் பரத்தை இடம் பெறாமையும் அறிதற்குரியது.[3] தலைவர்க்குரியதோர் மரபு கூறும் பரத்தையிற்பிரிவு, 'பூப்பின் புறப்பாடு ஈரறு நாளும், நீத்தகன்று உறையார் என்மனார் புலவர், பரத்தையிற் பிரிந்த காலை யான'[4] என்றும், பரத்தையிற்பிரிவிற்கு உரியோரை 'பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே'[5] என்றும் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

பரத்தையர்க்கு உரிய செயல்களை நம்பியகப்பொருள்,

'இறையோன் தன்னையும் கிழத்தி தன்னையும்
இகழ்தலும் தம்மைப் புகழ்தலும் பிறபொருள்
காத்தலும் பரத்தையர் கடனென மொழிப'[6]

என்று கூறுகிறது. கற்பில் கூற்று நிகழ்த்தற்கு உரியோருள் பரத்தை இடம் பெறுவதைக் காண்கிறோம்.[7]

முல்லைத்திணைப்பாடல்களில் பரத்தையின் கூற்றாக ஒரே ஒரு பாடல் மட்டும் காணப்படுகிறது.[8] இப்பாடலைப் பாடியவர், வில்லக விரலினார் ஆவர். இப்பாடல் 'கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் என்பது கேட்டுப் பரத்தை, அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது' என்னும் துறையின் உள்ளது.

தலைவனைப் புறம் போகாவாறு பிடித்துக்கொண்டாள் என்ற தலைவி கூறியதாக அறிந்த பரத்தை,

'பொய்கை யாம்ப லணிநிறக் கொழுமுகை
வண்டுவாய் திறக்குந் தண்டுறை யூரனொ
டிருப்பி னிருமருங் கினமே கிடப்பின்
வில்லக விரலிற் பொருந்தி யவன்
நல்லகஞ் சேரி னொருமருங் கினமே'[9]

என்கிறாள்.

---

1. தொல்.பொருள்.185.
2. நம்பி.60.
3. தொல்.பொருள்.191.
4. தொல்.பொருள்.185.
5. தொல்.பொருள்.220.
6. நம்பி.106.
7. தொல்.செய்.182.
8. குறு.370.
9. குறு.370.

தலைவர்கள் ஈருடல் ஓருடலாய் இருந்தமை 'வில்லக விரலிற் பொருந்தி' எனக் கூறல் அறியத்தக்கது. இத்தகைய பற்றினால் இருவரும் 'வில்லக விரலினர்' எனப் பெயர் பெற்றனர் போலும். சீவகசிந்தாமணியில் திருத்தக்க தேவர்

'விட்டிடத் தோன்றும் வில்லக விரல்போற்
பொருந்தினர் ஒருங்கெதிர் கொள்கென்ற'[10]

என்று குறிப்பிடுவது ஈண்டு நினைவு கூர்தற்குரியதாகும்.

---

10. சீவக. 2110.

ಪದ್ಯ ಭಾಗ

*உவமை நலம்

உவமையின் தன்மை

செய்யுளில் அழகு தந்து அச்செய்யுட் பொருளை நயம் விளங்குற உணர்த்தத் துணை செய்வது உவமை. உவமையாவது ஒப்புமையாம். கவிஞன் தான் சிறப்பிக்க எடுத்துக்கொண்ட பொருளின் வடிவம், வண்ணம் முதலிய தன்மைகளோடும், அப்பொருளின் செயலோடும் ஒப்புடைய பிறிதொரு பொருளைக் காட்டி விளக்க வருவதாகும். புலவர் தாம் விளக்க எடுத்துக்கொண்ட பொருளைப் பொருள் என்றும் உவமேயம் என்றும் குறிப்பர். பொருட் பொலிவிற்காக எடுத்தாளப்படும் ஒப்புப் பொருளை உவமை, உவமானம் என்று சொல்லுவர்.

உவமை மரபு

உவமையாக எடுத்தாளப்படும் பொருள் எப்பொருளை விட உயர்ந்த பொருளாக அமைதல் வேண்டும் என்பது மரபு. உவமையின் உயர்ந்தவை எப்பொருளும் போற்றும் பெருமையும் பொருந்திய சிறப்பான ஒத்த தன்மையுடன் இருத்தல் வேண்டும் என்பர். இவ்வுவமை மரபுகளைப் பற்றி இலக்கண ஆசிரியராகிய தொல்காப்பியர்,

'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை'[1]

'உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும்'[2]

என்று நூற்பாக்களில் தெளிவிக்கின்றார்.

உவமை உருபு

பொருளுக்கும் உவமைக்கும் இடையே ஒப்புமையைப் புலப்படுத்தும் அன்ன, போல, பொருவ, புரைய முதலிய உவம உருபுகள்[3] வெளிப்பட வருதலும் உண்டு. வெளிப்படையாக ஒப்புமை தன் விளக்கம் பெறுதலும். உருபு இடையே வாராவிடினும் உவமையும் பொருளும் நேரே இணைந்து அமைவதால் உவமை என்று உருபு மறைந்திருப்பதாகக் கொள்ளப்படும். உவமஉருபு வெளிப்பட வாராமல் அமையும் பொருள் உவமையைத் 'தொகை உவமை' என்பர். எவ்வுவமையும் புலவனுடைய சொல் திறத்தால் அவன் எடுத்தப் பொருளைச் சிறந்தப் பொருளோடு ஒப்பிட்டு வைக்கின்றது என்பது

---

* முல்லைத்திணைப் பாடல்களில் காணும் உவமை-பொருள் நல அட்டவணை இந்த இணைப்பு 3இல் தரப்பட்டுள்ளது.

1, 2. தொல். பொருள். உவம. 3, 8.

3. தொல். பொருள். உவம. 11.

கற்பனை உருவும் வகைத்தால் அமைந்த அழகு செய்த சிறப்புடைய காட்சி விளக்கும் உவமையணி என்று கொள்வர்.

முதல்சினை உவமை

பொருளின் முழுமையான உவமையைப் பொருத்திப் பாடுவதோடு, அப்பொருளின் அங்கங்களையும் சிறப்புடைமையும் உவமை நயம் தோன்றப் பாடுதல் உண்டு.

'முதலுஞ் சினையுமென் றிரு பொருட்கும்
நுதலிய மரபி னுரியவை யுரிய'[4]

என்று தொல்காப்பியர் உவமை என்பது முதல் பற்றியும் சினை பற்றியும் வரும் என்பது உணர்த்தப் படுகிறது. இதற்கு நியாயம் உரைத்தது விளக்கமாகப் பேராசிரியர் பின்வருமாறு குறிப் பிடுகின்றார். 'முதல் முதலொடு, முதலொடு சினை, சினையொடு சினை, முதலொடு சினை, சினையொடு முதல் வேற்றுமையாக்க உவமம் செய்தல் வரும், இவ்வகை செய்யுளால் மரபு பிறழாமல் செய்யப்படும் என்றும் கருதுவர்!'[5]

இவ்வாறு முதல் சினைப் பொருட்கள் என்பதன் அடிப்படையில் செய்யுளின் அமைப்பைக் காட்டுவதோடு அதன் சிறப்புகள் நன்கு புலனாகும்.

உவம வகை

பொருளான உவமைக்கு வினை, பயன், மெய், உரு என்கின்ற நான்கு வகையும் பகுத்துக் காட்டிப் பல பண்டைப் புலவர் மரபு ஆகும். இதனைத் தொல்காப்பியர் வரும் சூத்திரத்தில் நன்கு வரையறுத்துக் கொள்கின்றார்.

'வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்'[6]

என உவமையின் தொடக்கத்தில் கூறியுள்ளார். பொருளின் நான்மை விளங்க முதலில் அதனை வினை வகையில் உவமம் ஏற்று விளக்குதல் சிறப்புடைய தொழிலாகும் என்பர். எனவே, உவமை ஏற்பு விளக்கம் தொழிலும் வரும் நிலையில் என்பது வெளிப்படை. வினையின் விளைவுப் பயன் மீதும் பயன் பற்றும் வினை கருதப் பொருந்துவதாம். மெய், உரு என்பன பொருளின் புறத்தோற்றம். மெய்யானது பொருளின் புறவடிவம், உருவானது அது பெற்றுள்ள நிறமாம். எனவே, இவை பொருள் களின் வடிவமும் வண்ணமும் ஆகிய பண்புகளேயாம். இவை பற்றிய புலவர் ஒருவர் தந்துள்ளவை காண்போம்.

---

4. தொல். பொருள். உவம. 6.
5. தொல். பொருள். உவம. பேரா. 6 பக். 66.
6. தொல். பொருள். உவம. 1.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

7. [illegible]. 31.

[illegible] 325 [illegible]

[illegible]

[illegible]

[illegible] வில், வாள், வேல் [illegible]

[illegible]

[illegible] [8]

[illegible] [9] [illegible]

8. [illegible].400:1-4.　　9. [illegible]. 103:1.

பவளம் விளக்கப் பகுதியில் உருகும் பவளம் பற்றிய செய்தி நமக்கு அறிய காணப்படுகின்
றனவாம்.

உறுப்பு_விளக்கம்

மகளிர் அழகை, மயில், மீன் முதலியவற்றுடன் ஒப்புக் கூறுவதை பல பாடல் களில் காணலாம். மகளிர் சாயல், நடை அழகு பற்றி இலக்கிய ஒப்புக் கூறுவர். தலைவனைப் பிரிந்த தனிமையினால் ஒரு தலைவியின் நிலையைக் குறிப்பிடுகையில், அம்புபட்ட மயில் போல ஆடி நடுங்கிய எயிற்றுக் காயிப்புற்பட்டதைப் போல்காயினர் மகளிர் நடுங்குவர்.

'நெடுங்காமப் படுத்த சிறைப்பு புனம்போடு
நீடுநிழல்சேர் தெந்நு வொருவே திரந்து
மயில் கொண்டுமொழிமென ஒலித்த
மெய்ய மருங்குல் விருந்து' [10]

உலகம் நடையால் மயில் ஒத்தவாக மயில் எடுடு மெய் மைமையாதமொடு அம்புபட்ட மயில் போலத் தம்பூந்தச் சுவ அழகுடைய நிலைமை ஒப்பிடுமொரு விசை ஒப்புமை வேண் பருதச் காணலாம். இங்கே ஒரு ஒப்புமையொடு விசை ஒப்புமையும் கலந்த கூறப்படுதல் காணலாம்.

சோதூநுக் செய்தி கூறி வந்தொகைய பாடலில் தொகுத்த ஒருசெய்தி அவர்ந்றத் தருவ மயிர் நீரேர் குயிலைவையும் பற்பல வகையவில் வருவிந்நச் இரேபம் தலைதாமே. சேவடைச் குயிலை இலேசுர் நிறுத்தி சொதூவதலை,

'குயில, இருப்புவி தொகுநூக் வெருவிவிந் நிலைய
மாயவா முகிலோர் முறியி வோதலைஞ்
சுடுமொள் வெரிலே மொதூ உட்டள்' [11]

எவ் புலிஞ்சுர் வர லேந் திருமொடு வோருதாக் வோவ்ச உலறு எதிரா நல்லுத்தினை

பற்போராஞ்_ஊழை_நவி

மகளிர் கண், தோள், பல் முதலிய உறுப்புகளை குவளை, மூங்கில், முல்லையும் முதலியவற்றுடன் ஒப்புக்காட்டி வருகின்ற பகுதிகளில் பலவாம். சொல்லைநியுமையும், பிறக்கப் புவையும் போல்கிறமாற எக்க எடுத்த மொழிகின்றனர். மகளிர் மேனிக் சாயிலெருச் பல லோகிகளில் பிறகம் புருகே ஒப்புக்கின்றனர்.

---

10. முல்லை. 81-84. 11. கலி. 103: 56-58.

இயற்கைப் பொருள்களின் அழகினையும் வண்ணங்களின் அமைப்புக் கூறும் இடங்கள் பலவாகும். செந்நிறமான முல்லைநிலத்திலே வெண்மை முல்லைப் பூக்கள் பூத்து விளங்குகின்றன. இக்காட்சி செவ்வானத்தில் காணப்படும் நட்சத்திரங்களைப் போல உள்ளன.

'மழைவிளை யாடும் குன்றுசேர் சிறுகுடிக்
கறவை கன்றுவயிற் படரப் புறவிற்
பாசிலை முல்லை ஆசில் வான்பூச்
செவ்வான் செவ்வி கொண்டன்று
உய்யேன் போல்வல் தோழி யானே'[12]

காயாஞ் செடிகளிலிருந்து விழுந்த கருநீலப் பூக்களுடன் ஈயல் மூதாய் எனப்படும் செந்நிற இந்திர கோபப் பூச்சிகள் விரவிக் காணப்படும் காட்சி நீல மணியும் பவளமும் கலந்தவை போல உள்ளது என்னும் வண்ணமுறை உணர்த்துவது.

'காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் வரிப்பப் பவளமொடு
மணிமிடைந் தன்ன குன்றம்...'[13]

'மணிமிடை பவளம் போல அணிமிகக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்ப'[14]

(இவ்வாறு [ஒரு பொருள் மற்றொரு பொருளின் வண்ணத்திற்கு [illegible] [illegible] [illegible] வருவதைப் புலவர்கள் எடுத்தாளும் வகை [illegible] பல பலவாம்.)

வடிவ ஒப்பு வகைகள்

[illegible] [illegible] செம்பில் பொருத்த மணி [illegible] பூவோடு [illegible] [illegible] [illegible] பாராட்டியுள்ளார்.

'பூவோடு [illegible] [illegible]'[15] [illegible] [illegible] [illegible].

அழகும் நலமும் பயனும் [illegible] [illegible] சிறந்த [illegible] [illegible] பேசும் [illegible] [illegible] [illegible].

'[illegible] [illegible] [illegible]
பைம்புதல் [illegible] [illegible] [illegible]'[16]

12. குறு. 108: 1-5.
13. அகம். 14: 2-4.
14. அகம். 304: 13-15.
15. பெரும். 147.
16. அகம். 44: 18-19.

என்ற குடவாயிற்கீரத்தனார் என்பார் தலைவி ஒருத்தியைச் சிறப்பிக்கின்றார்.

[illegible]

'மாட மோங்கிய மல்லல் மூதூர்
ஆறுகிடந் தன்ன அகனெடுந் தெருவில்'[17]

[illegible]

'குன்றுகுயின் றன்ன ஓங்குநிலை வாயில்'[18]

[illegible]

புராண இதிகாச கதைகள்

[illegible]

[illegible][19]

[illegible][20]

17. நெடுநல். 29-30.
18. நெடுநல். 88.
19. [illegible] 101: 34-37.
20. [illegible] 105: 42-45.

பாங்குறப் பற்றப்பட்ட மதியோ நீல நிற வண்ணமுடைய திருமால் [illegible] [illegible] ஒட்டிய வகையாகக் கூட்டப்பட்டுள்ளது.

'பால்நிற வெள்ளை எருத்தத்துப் பாய்ந்தானை
நோனாது குத்தும் இளங்காரித் தோற்றங்காண்
பால்மதி சேர்ந்த அரவினைக் கோள்விடுக்கும்
நீல்நிற வண்ணனும் போலும்'[21]

[illegible] [illegible] [illegible] [illegible] போட்டுக் [illegible] [illegible] செய்தியும் வகையாக [illegible].[22] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] போலவும்,[23] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] போலவும்[24] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible], [illegible], [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] காட்டி [illegible].[25]

<u>உவமை வகைமை</u>

[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பாடலைப் [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] 'கன்றும் வெள்ளம்' என [illegible] பாடியுள்ளார்.[26] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] காட்சியும் [illegible].

'[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]'[27]

என வரும் அகப்பாடல் பகுதியில் [illegible] [illegible] [illegible].

21. கலி. 104: 35-38.
22. கலி. 103: 50-55.
23. கலி. 101: 27-32.
24. கலி. 101: 15-20.
25. கலி. 105: 11-18.
26. புறம். 387: 1-5.
27. அகம். 164: 1-3.

உள்ளுறை உவமம்

அகப்பாடல்களில் கருப்பொருள் மாந்தர்தம் பேச்சில் உடபொருள் அமைத்து பல இடங்களில் அமைக்கப் பெற்று வருகின்றன. [கருப்பொருள்களின் மேல் ஏற்றி உரைக்கப்படும் குறிப்பு உவமையை உள்ளுறை உவமை என்பர்.] ஏனைய உவமை நிலைபெற்ற வகையான் இந்த இடத்தே உவமப் போலி என்று தொல்காப்பியர் சுட்டுவர்.

> 'உள்ளுறை தெய்வமொழிந்ததை நிலனெனக்
> கொள்ளும் என்ப குறியறிந் தோரே'[28]

> 'உள்ளுறுத்து இதனொடு ஒத்துப்பொருள் முடிகென
> உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்'[29]

என்பன தொல்காப்பிய நூற்பாக்கள். உள்ளுறை உவமத்தின் பெயரிலே நயம் விளங்கும். நற்றிணைத்தொகையுள் அகப்பாடல்களுள் முல்லைத்திணைப் பாடல்கள் ஒரு சில விளக்குகின்றன.[30] அவற்றுள் நற்றிணை 59ஆம் பாடல், விளைவுற்ற பாடற்குச் சான்றாக அமைகின்றது. இப்பாடலில் கருப்பொருள் தன்மையைப் பற்றி தலைவன் வாயிலாக வெளிப்படுத்தப்படும் நயத்தின் சிறப்பு தலைமையை உணர்த்த பிரிவதைக் காணலாம்.

> 'உடும்பு கொன்று வரிநுணல் அகழ்ந்து
> நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி
> எல்லுமுயல் எறிந்த வேட்டுவன் சுவல்
> பல்வேறு பண்டத் தொடைமறந்து இல்லத்து
> இருமடைக் கள்ளின் இன்களி செருக்கும்
> வன்புலக் காட்டுநாட் டதுவே அன்புகலந்து
> நம்வயிற் புரிந்த கொள்கையொடு நெஞ்சத்து
> உள்ளினள் உறைவோள் ஊரே முல்லை
> நுண்முகை அவிழ்ந்த புறவில்
> பொறைதலை மணந்த நன்னாட் டிடையே'[31]

உடும்பு முதல் பலவற்றை வேட்டையாடிக் கொண்டு வந்த வேட்டுவன் தான் தன் இல்லத்தில் கொண்டு வந்த சேர்த்து, கள்ளுண்டு களிக்கும் வன்புலக் காட்டில் உள்ள ஊர் தலைவியின் ஊர் என வெளிப்படச் செப்பினான். இந்தக் காட்சியைத் தலைவியைப் பிரிந்த விரைவுடன் வரும் தலைவன் உரைப்பதாக அமையும்

28. தொல். பொருள். 47.
29. தொல். பொருள். 48.
30. நற். 59; 142; 367.
31. நற். 59; 1-10.

[illegible]
[illegible]
[illegible] காலம், இடம் முதலிய [illegible]
வேண்டும் என்பது தேற்றமாம்.

'[illegible] கூடாது. தாமே வந்து பொருந்தி அமைய வேண்டும். [illegible] [32] என்று [illegible] பாடலின் [illegible]

---

32. Lyon, P.H.B., The Discovery of Poetry, p.192.

பழக்க வழக்கங்கள்

பண்டைத்தமிழர் தம் பழக்க வழக்கங்கள் உள்ளதை உள்ளபடியே காட்டும் கண்ணாடியைப் போன்றவை. இச்சிறப்பைத் திரு பி.டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் 'A true mirror of the life' என்றும் 'Based on the actual customs and manners of the people' என்றும் கூறுவர்.[1]

எட்டுத்தொகைப் பாடல்களால் அறியலாகும் பழக்க வழக்கங்கள் பல. அவை அவர்களின் சிறப்புடைய பண்பாட்டையும் (Culture)அவர்களின் சிறப்புடைய நாகரிகத்தையும் (Civilization)தொன்றுதொட்டு நிலவி வரும் பேறுடையன. இத்தகைய சிறப்பமைந்த பழக்க வழக்கங்கள் எட்டுத் தொகை மக்களிடையே எவ்வெவ்வாறு சிறப்புற்றிருந்தன என்பதை இப்பகுதியில் காண்போம்.

அணிகள்

கிண்கிணி

இது எட்டுத்தொகைப்பாடல்களுள் இருபது பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது.[2] 'கிண்கிணி' என்பது காற்சதங்கை. அஃது, செல்வச்சிறுவர் காலில் தவளை வாயைப் போன்ற பிளந்த நிலையில் பொன்னால் செய்யப்பட்டு விளங்கும் என்பது,

> 'செவ்வாய்ச் சிறுவர் சீறடிப் பொலிந்த
> தவளை வாய பொலஞ்செய் கிண்கிணி'[3]

எனக் கூறுவதால் தெரிகின்றது. மகளிரும் சேவடிப்பொலிவதை அதனால் 'பொலஞ் செய் கிண்கிணி நலம்பெறு சேவடி'[4] எனக் கூறுகிறது. மேலும், 'கிண்கிணிச் சிறு'[5], 'கிண்கிணி களைந்த கால்'[6], 'கிண்கிணி...மிழற்ற'[7], 'ஒலிபெய் கிண்கிணி'[8], 'கிண்கிணி...அணைப்ப'[9], 'கிண்கிணி ஆர்ப்ப'[10], 'ஞெமலனி கிண்கிணி'[11], 'தெரியாக் கிண்கிணி'[12], 'பொலம் கிண்கிணி'[13] என வருவன அறியப்படுவன.

[illegible]

இது எட்டுப்பாடலொன்றில் குறிக்கப்பட்டுள்ளது.[14] தென்னை, பனை, ஆகியவற்றின் குரும்பை போன்ற வடிவம் கொண்ட அணி, 'குரும்பை மணிப்பூண்' என

---

1. Srinivasa Iyengar, P.T., History of the Tamils, p.63.
2. குறு.148:2; அகம்.254:3.
3. குறு.148:1-2.
4. அகம்.254:3.
5. [illegible].13.
6. புறம்.77:1.
7. சீவக.1014.
8. நற்.250:2.
9. பதி.55:20.
10. கலி.74:13.
11. கலி.81:6.
12. கலி.86:9.
13. கலி.96:17.
14. ஐங்.442:5.

வழங்கும். இவ்வணியை இளையர் குதிரைகளின் கழுத்தில் கட்டி மகிழ்வர். இதனை, 'குரும்பை மணிப்பூண் புதல்வன் தேரே'[15] என வரும் அடியால் அறியலாம். இதனை, நற்றிணை, 'குரும்பை மணிப்பூண் பெருஞ்செங் கிண்கிணி'[16] எனக் கூறுகிறது.

பொற்றாலி

இது முல்லைப் பாடலொன்றில் குறிக்கப்பட்டுள்ளது.[17] சிறுவர்களுக்கு அணியும் கழுத்து அணிகளில் பொற்றாலியும் ஒன்று. இது புலிப்பல் தாலிபோல் 'பொன்னுடைத் தாலி'[18] என வழங்கும்.

புலித்தொடர்

இது முல்லைப்பாட்டில் மட்டும் காணப்படுகிறது.[19] கிரேக்கர், சோனகர் எனப்படும் யவனர் தம் புலிச்சங்கிலியை இல்லத்தே தொங்கவிடும் வழக்கத்தை, 'யவனர் புலித்தொடர் விட்ட புனைமாண் நல்லில்'[20] என வரும் அடி புலப்படுத்துகிறது.

மணி விளக்கு

இது முல்லைப்பாட்டில் மட்டும் குறிக்கப்படுகிறது.[21] 'திருமணி விளக்கம்'[22] எனப்படும் இம்மணி விளக்கு, மன்னன் பள்ளியறையில் வைக்கப்படும் பளிங்கு விளக்கு என்பது தெரிகிறது. இதனை, நச்சினார்க்கினியர் 'அழகினையுடைய மாணிக்க மாகிய விளக்கு'[23] என்பர். பரிமேலழகர், 'பளிங்குமணி'[24] எனக் குறித்துள்ளார். சிலப்பதிகாரம் 'மாலை மணிவிளக்கம்'[25] என்று கூறுகிறது.

மெய்ப்பை

இது முல்லைப்பாட்டில் குறிக்கப்படுகிறது.[26] சட்டையை மெய்ப்பை என்பர். நச்சினார்க்கினியர் மெய்ப்பை என்பதற்கு 'அரச வரிசையாகிய சட்டை'[27] எனப் பொருள் கூறுவர்.

மன்னர் மெய்காவலராகிய யவனரும் மிலேச்சரும் சட்டை அணிந்து பணி புரிவர். இச்செய்தியை, '[illegible] போர்த்த'[28] 'மெய்ப்பை புக்க...யாக்கை'[29] எனவும் 'படம் புகும்'[30] எனவும் வரும் தொடர்கள் மெய்ப்பிக்கின்றன. 'மெய்ப்பை ... கொல்லன்'[31] என்ற சிலப்பதிகார அடி ஈண்டு நினைவுகூர்தற்குரியது.

15. ஐங்.442:5. 16. நற்.269:1 17. அகம்.54:18.
18. அகம்.54:18 19. முல்லைப்.61-62. 20. முல்லைப்.61-62.
21. முல்லைப்.63. 22-23. முல்லைப்.63. 24. குறள்.1273.
25. சிலப்.9:3. 26. முல்லைப்.60. 27. சிலப்.16:107.
28-30. முல்லைப்.53; 60-61,66. 31. சிலப்.16:107,110.

இதிகாச புராணச் செய்திகள்

இதிகாசக் கருத்துகளும் புராணக்கதைகளும் மக்கள் வாழ்வில் இடம் பெற்றுள்ள மையைக் காண்கிறோம். அவற்றுள் இராமாயணமும் மகா பாரதமும் குறிப்பிடத்தக்கன வாகும். இதிகாச புராணச் செய்திகளுடன் ஏறு தழுவற்காட்சிகளை இணைத்துப் பேசும் மரபை முல்லைக்கலிப் பாடல்களில் சிறப்பாகக் காண்கிறோம். அவற்றுள், வீமன் வஞ்சினம்,[32] சிவனும், அசுவத்தாமாவும்,[33] நூற்றுவரும் ஐவரும்,[34] மாயோனும் கஞ்சனும்,[35] சிவனும் கூற்றுவனும்[36] பேசும் செய்திகள் அறிதற்குரியனவாகும்.

திங்களும் அரவும்

முல்லைப்பாடல்களுள் மூன்று இடங்களில் குறிக்கப்பட்டுள்ளன.[37] வான நூற் புலமையால் சில மரபுகள் தோன்றின. அவற்றுள் திங்களைப் பாம்பு விழுங்கும் என்பது 'அரவுறுக மதி'[38] எனவும், 'அரவின் வாய்க் கோட்பட்டு'[39] எனவும், 'பால்மதி சேர்ந்த அரவு'[40] எனவும் கூறுதால் புலனாகிறது. இக்கோட்பாட்டைப் பல பாடல்கள் வலியுறுத்துகின்றன.[41] இது 'சந்திர கிரகணம்' எனப்படும்.

திங்களும் உரோகிணியும்

இவை நெடுநல்வாடையில் குறிக்கப்பட்டுள்ளன.[42] திங்கள் உரோகிணியுடன் சேர்ந்திருத்தலை நினைத்துக்கொண்டு, பிரிந்தவர் பெருமூச்சு விடுவர். இதனை,

> 'முரண்மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய
> உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா'[43]

என வரும் அடிகள் தெரிவிக்கின்றன. 'வான்மீன் மதியம் சகடணைய'[44] என்றும் சிலப்பதி காரம் அடி ஈண்டு நினைவு கூர்தற்குரியது.

உவமை

கள்ளும் பிரசமும்

இது முல்லைக்கலியில் காணப்படுகிறது. மிகுதியாகக் கள்ளுண்டவர் மெய் நடுங்க பிரசத்தை வெளியிடுவோர் என்பது,

---

32. கலி.101:18-20. 33. கலி.101:30-32. 34. கலி.104:57,59.
35. கலி.103:53-55. 36. கலி.101:22-26. 37.
37. கலி.104:37;105:45;நற்.114:5. 38. நற்.114:5.
39. கலி.105:45. 40. கலி.104:37.
41. சிறுபாண்.185:குறு.395:4; பரி.10:76;நற்.313:7.
42. நெடுநல்.162-163. 43. நெடுநல்.162:163. 44. சிலப்பு.1:50.

'... காழ்மை புடை கடுக்கையை, மெய்க்கு
நாறு செங்கு நறுங்க குழைத்தாய்'[45]

எனக் கலித்தொகை புலப்படுத்தும்.

<u>பாலும் தானியமும்</u>

இவை முல்லைப்பாடலொன்றில் குறிக்கப்பட்டுள்ளன.[46] 'பாலை விற்று உணவுக்குரிய தானியங்களைப் பெறுவர்', என்பதனை, 'பாலொடு வந்து கூழொடு பெயரும்'[47] என வரும் அடியால் காட்டலாம். 'நெய்யை விற்றுப் பசும்பொன் பெறாது, எருமையும் பசுவும் எருமை நாகினையும் வாங்குவாள்', என்ற செய்தியும் இங்கு குறிக்கத்தக்கதாகும். இதனை,

'நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்'[48]

என்ற அடிகளால் அறியலாம். 'உப்பு மாறி வெண்ணெல் தரீஇ',[49] என்ற அடி இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

<u>புளிச்சோறும் பாற்சோறும்</u>

முல்லைப்பாடலொன்றில் குறிக்கப்படுகிறது.[50] 'புளித்த தயிரில் வரகு, தினை, எனும் தானியத்தினைக் கொண்டு சமைத்த புளிச்சோற்றினையும் பாற்சோற்றினையும் விருந்தினர்க்கு அளிப்பர்' என்பது, 'புளிப்புளி வெஞ்சோறு',[51] 'பாலுடை அடிசில்'[52] எனக் கூறுவதால் புலனாகும். பால்சேர்த்து அட்ட நெய் கலந்த 'நெய்யுடை அடிசில்'[53] என்பதும் இதனை ஒத்ததாகும்.

<u>குறுமுயல் புலி</u>

உடும்பு கொல்லும் நாயும் ஒரு பகுதியைக் காத்திடும் பணியும் பாதுகாப்புடையது. பசுக்களோடு வெண்ணெல் வெற்றோட்டுப் பாத்திரங்களில் ஏற்றிக் கொண்டுபோய் என்பது முல்லைப்பாடலொன்றில் தெரிகிறது. இதனை,

---

45. கலி.115:1-2.
46. குறு.221:3.
47. குறு.221:3.
48. பெரும்பாண்.164:165.
49. [illegible]
50. அகம்.394:2-5.
51. அகம்.394:2.
52. அகம்.394:11.
53. புறம்.188:5.

'பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுவுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினும்'[54]

என வரும் அடிகளால் அறியலாம்.

[illegible]

[illegible] நிமித்தங்களைச் [illegible] பழமையான [illegible]. இதனைத் தொல்காப்பியம் 'மன்ற நிமித்தம்' எனக் கூறுகிறது. [illegible] உரையாசிரியர், 'மன்ற நிமித்தமாவது, ஆட்சி பெற்ற நிமித்தம், அது புள்ளி முதலாயினவாம்'[55] என்பர்.

[illegible]

இவை இரண்டு செய்யுட்களில் குறிக்கப்பட்டுள்ளன.[56] விருந்தினர் வரவைக் காக்கையும், பிற புள்ளும் தெரிவிக்கும். இதனை, 'விருந்துவரக் கரைந்த காக்கை'[57] எனவும்,

'... ... நம் வரவினைப்
புள்ளறி வுறீஇயின கொல்லோ தெய்வத்'[58]

எனவும் வருவனவற்றால் அறியலாம். விருந்து வரக் கரைந்த காக்கையை நிமித்தமாகக் கொண்டு பாடியதால் குறுந்தொகை பாடலாசிரியர் நச்செள்ளையார் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார் என்பர்.[59] [illegible] பாட்டொன்றில் [illegible], 'கரைந்த காக்கையே! [illegible]'[60] [illegible]. 'காக்கை கரவா கரைந்'[61] என்ற தொடர் [illegible].

[illegible]

இவை ஒரு செய்யுட்பாடலில் மட்டும் குறிக்கப்படுகிறது.[62] [illegible] '[illegible]', என்பது,

'[illegible]
[illegible]'[63]

---

54. குறு.210:2-4.
55. தொல்.பொருள்.நூ.39.
56. குறு.210:6; நற்.161:09.
57. குறு.210:6.
58. நற்.161:8-9.
59. குறு.210.
60. [illegible].391.
61. குறள்.527.
62. அகம்.34:14.
63. அகம்.34:14-15.

என வரும் அடிகளால் விளங்கும். ஈங்கு இலக்கியம் பெற்றுள்ள பத்துப் பொருட்களில் இதுவும் ஒன்று என்பர் அறிஞர்.[64] பகலில் மிகுதி வெளிப்படும் தன்மை உடையது.[65] திருத்தக்க தேவர் 'செந்தாரிப் பல்லி'[66], என்பர் அதனை அறிஞர்.

<u>பல்லி</u>

பல்லி ஒரு பாடலொன்றில் குறிக்கப்பட்டுள்ளது.[67] நெடுஞ்சுவரிடத்தே உள்ள பல்லியானது, பிரிந்தவர் தம் துன்பம் தீர அவர் தம் வருகையை ஒலியிட உணர்த்தக் கூறும். இதனை,

'வருவம் என்னும் பருவரல் தீரப்
படுங்கொல் வாழி நெடுஞ்சுவர்ப் பல்லி'[68]

என வரும் அடிகளால் அறிகிறோம். 'பல்லி ஒலித்த நல்ல நிமித்தம் ஒலியால் விலக்கிக்கொண்டது' என்பதை நற்றிணைப் பாடலொன்றில் காண்கிறோம்.[69]

<u>தேரை, தவளை</u>

இவை இரண்டு பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளன.[70] 'தேரை, தவளை ஒலித்துக் கார் வரவைக் காட்டும்', என்பது,

'வறிதின் கரந்த தேரை தெவிட்டக்
கார்தொடங் கின்றே'[71]

'புதலிடை, நாறவிர் பல்லிலை தவளை'[72]

என வரும் அடிகளால் தெரிகிறது.

<u>உடும்பு</u>

இது இரண்டு பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது.[73] அது முழுமையாக வலைக் கூடும் தன்மையுடைத்து என்பதனை,

'துணிவாவை செல்வம் தழுவா நாவர்
மணிவாவை புதம் கூடு'[74]

என்பதனால் அறிகிறோம். இக்குழுவினரை வலைவாய் பிரிந்த தனிமையில் இடையோர் ஒலித்த வெறிப்பயம் தரும் என்பது, 'கோவலர், தடக்கையால் உடும்பு கொல்லாரே'[75] என வரும் அடிகளால் தெரிகிறது.

---

64. [illegible]. 7.
65. சீவக.சிந்.992,1001.
66. சீவக.1036.
67. நற்.169:3.
68. நற்.169:2-3.
69. நற்.98:1-7.
70. ஐங்.468:1, நற்.42:4.
71. ஐங்.468:1-2.
72. நற்.42:3-4.
73. கலி.101:35; நற்.371:8.
74. கலி.101:34-35.
75. நற்.371:8-9.

<u>படைக் கலக்கல்</u>

இது முல்லைப்பாடலொன்றில் குறிக்கப்பட்டுள்ளது.[76] இடைக்கல் எருத்தல் இப்பத்திப்பொருட்டே என்பது,

'... ... நுதற்கோடு
வேளாண்மை செய்தன கண்'[77]

எனக் கலிதான் புலப்படுகிறது. 'புலவர் கூற்றுக் கலைக் குறிப்பிற்கு'[78] என்ற கம்பர் வாக்கு ஈண்டு நினைவு கூரற்பாலது. 'கன்னி கலைக்கலாம் மாதர் செய்கையும்... பொருத்திறம் வகுத்திருக்கின்ற'[79] என்றுரைக்கோவைகள் வாக்கும் ஈண்டு நினைவு கூரற்பாலது.

<u>விரிச்சி கேட்டல்</u>

இது முல்லைப்பாட்டில் மட்டும் குறிக்கப்பட்டுள்ளது.[80] பெருமுது பெண்டிர் முல்லைப் பூக்களை நெல்லுடன் தூவி, தெய்வத்திடம் நற்சொல் கேட்பர் என்பது,

'நெல்லொடு முல்லை தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப'[81]

எனக் கூறுதல் புலப்படுகிறது. நல்லச் சொல்லைச் சொல்லும் விரிச்சி கேட்கும் முது பெண்டிர், புறநானூற்றுப் பாடலொன்றில் பேசப்பட்டுள்ளனர்.[82] இவ்விரிச்சி கேட்டலை 'நற்சொல் வாக்கு' என்றும் வழங்குவர்.

<u>கோடிட்டெண்ணல்</u>

இது குறுந்தொகைப் பாடலொன்றில் குறிக்கப்பட்டுள்ளது.[83] மகளிர், பிரிந்த தம் தலைவர் வரும் நாளைச் சுவரில் கோடிட்டு எண்ணுவரென்றும் அந்நாள் கடந்தும் வாராமையைக் கண்டு வருந்துவர் என்றும் கூறுவது,

'வீங்கிழை நெகிழ விம்மி ஈங்கே
எறிகட் பேதுறல் ஆய்கோ டிட்டுச்
சுவர்வாய் பற்றும் படர்'[84]

என வரும் அடிகள் இதனை விளக்கும். இக்கருத்தினை, 'நாள்முறை தெரிந்தோர் தொகை'[85] 'நாள்முறை வகுத்த, திங்கள் தொகை'[86] என வரும் அடிகளும் புலப்படுத்தும்.

---

76. கலி.101:46. 77. கலி.101:45-46. 78. கம்ப.ஆர.காட்.32
79. சிலப்.3:237:239. 80. முல்லைப்.11. 81. முல்லைப்.8-11.
82. புறம்.280:6-7. 83. குறுந்.358:1-3. 84. குறுந்.358:1-3.
85. நற்.61:4. 86. நற்.289:9-10.

தெய்வம்

தெய்வ நம்பிக்கை மிகப் பழங்காலம் தொட்டு மக்களிடம் இருந்து வருகிறது என்பதற்கு அவர்தம் வணக்கத்தையும் நம்பிக்கையையும் போற்றும் பல பாடல்கள் சான்று தருகின்றன. அவற்றுள் இன்றியமையாதவற்றைக் காண்போம்:

தெய்வ வழிபாடு

இது பல் இடங்களில் குறிக்கப்படுகிறது.[87] மாந்தர் சிலர் நீர்த்துறை, ஆலமரம், மராமரம் ஆகியவற்றிடையே உறையும் தெய்வங்களை முறையாக வணங்கிய பின்பே தம் வினைகளைத் தொடங்குவர். குறிப்பாக, அவர்தம் ஏறு தழுவலில் இதனைச் சிறக்கக் காண்கிறோம். அப்பாடல் வருமாறு:

> 'துறையு மாலமுந் தொல்வலி மராஅமும்
> முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ'[88]

ஆலமர வழிபாடு சிவனையும் திருமாலையும் குறிக்க வந்தவையே. இதனை, 'ஆலமர் செல்வன்'[89] 'ஆல்கெழு கடவுள்'[90] 'ஆலமர் கடவுள்'[91] எனக் குறிப்பதால் அறிகிறோம்.

தெய்வ நம்பிக்கை

இது பல் இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.[92] ஒரு பெண்ணிற்கு உரிய கணவனைத் தெய்வத்தினாலே தருவாள் என்பதை, 'தெய்வத்தால் காட்டித் தீட்டனை'[93] எனவரும் அடியால் அறிகிறோம்.

மண நாளில் எருமைக்கொம்பு நட்டு வழிபடுவதை,

> 'எருமைப் பெடையோ டெமரீங் கயரும்
> பெருமனை'[94]

என்னும் அடிகளால் அறிகிறோம்.

நூலறிபுலவர் கடவுளை வணங்கிய பின் அரசர்க்குரிய அரண்மனையைக் கட்டத் திட்டமிடுவர் என்பதை நெடுநல்வாடையால் அறிகிறோம்.[95]

கடவுள் வாழ்த்து

இது பல் பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது.[96] கடவுளை வாழ்த்தி நல்வாழ்வு செல்வமும் பெற இசைப்பர் என்பதனை,

---

87. கலி.101:13-14. 88. கலி.101:13-14.
89. சிறுபாண்.97; கலி.81:9; 83:14; சிலம்பு.24:12:4.
90. முருகு. 256. 91. புறம்.198:9.
92. கலி.107:6-35. 93. கலி.107:33.
94. கலி.114:13-14. 95. நெடுநல்.76-78.
96. அகம்.14:16.

'செவ்வழி நல்யாழ் இசையினென் பையெனக்
கடவுள் வாழ்த்தி'[97]

என வரும் அடிகள் தெரிவிக்கும். செவ்வழிப் பண் மாலையில் இசைக்கும் பண் ஆகும். திருஞானசம்பந்தர் தெய்வப்பாடல்களுக்குத் திருநீல கண்ட யாழ்ப்பாணர் யாழிசைத்தது ஈண்டு நினைவு கூர்தற்குரியது.[98]

காமன் கோட்டம்

இது கலித்தொகையில் குறிக்கப்பட்டுள்ளது.[99] திருமால் மகனோடு காமன் வைத்ததும் கண்டு என்பதில் இக்காமன் கோட்டத்திற்குப் பலியாகப் பால் கொண்டு செல்வர் என்பதும் தெரிகின்றது.[100] காமன், பரிபாடலிலும்,[101] சிலப்பதிகாரத்திலும்[102] குறிக்கப்பட்டுள்ளான். இளங்கோ 'காமன் கடிய வேள் கோட்டம்'[103] குறிப்பிடுகின்றார்.

சூளுரை

இஃது இரண்டு கலிப்பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது.[104] 'சொல்லியும் செய்தியும் தவறுமாட்டேன்', என்பது, திருமாலின் சேவடியைத் தலையில் வைத்துப் பின்பு கையில் தொட்டுச் சத்தியம் செய்வதாகத் தெரிகின்றது. இதனை,

'மலையொடு மார்பமைந்த செல்வ அடியைத்
தலையில் தொட்டேன் சூள்'[105]

என வரும் அடிகள் புலப்படுத்தும். சூள், 'மெய்ச்சூள்' 'பொய்ச்சூள்'[106] 'கடுஞ்சூள்'[107] 'செறிதொடி. சூள்'[108] எனப் பலவாறு சிறப்பிக்கப்படுவதைக் காண்கிறோம்.

ஆயர் மனக்கொள்கை

முல்லைக்கலியில் குறிக்கப்பட்டுள்ளது.[109] 'கொல்லேற்றுக் கோட்டிற்கு அஞ்சுபவனை ஆயமகள் மறுமையிலும் புல்லுதல் செய்யாள்' என்பதும், ஏறுகொள் ஆயர், மாயோன் மார்பினைத் தீண்டத் தகாதவர் என்பதும் ஆயர்தம் மனத்தில் உள்ள கொள்கைகளாகும்.[110] இக்கொள்கைத் திறம் சிலப்பதிகாரத்திலும் பலவாறு கூறப் பட்டுள்ளதைக் காண்கிறோம்.[111]

---

97. அகம்.14:15-16.
98. திருத்.திருநீல.11.
99. கலி.108:4; 109:19.
100. கலி.109:19-20.
101. பரி.11:123; 19:48.
102. சிலம்பு.6:57; 7:1.1:10:96.
103. சிலம்பு.6:57.
104. பரி.12:64; கலி.108:56.
105. கலி.108:55-56.
106. பரி.12:63-64.
107. அகம்.110:5.
108. அகம்.266:21.
109. கலி.103.
110. கலி.103:63-64; 102:9-10.
111. சிலம்பு.17:6-12.

[illegible]

[illegible]

'... [illegible]
[illegible] '[112]

[illegible] '[illegible]'[113] [illegible]

[illegible]

'[illegible]
[illegible]'[114]
'[illegible]'[115]

[illegible] '[illegible]'[116] [illegible]

[illegible]

[illegible].[117] [illegible] '[illegible]'[118] [illegible] '.... [illegible]'[119] [illegible] '[illegible]'[120] [illegible] '[illegible]'[121] [illegible]

பாரதிதாசன் 'குடும்ப விளக்கு' [illegible] '[illegible]', '[illegible]', '[illegible] விளக்கு', 'மண விளக்கு', 'குடும்ப விளக்கு' என்ப் பலவாறு காட்டுகிறார்.[122]

[illegible]

[illegible].[123]

---

112. [illegible].105:60-62. 113. [illegible].18. 114. [illegible].105:64-6
115. [illegible].104:67. 116. [illegible].137.
117. [illegible].405:2;[illegible].164:1. 118. [illegible].405:2. 119. [illegible].164:1-2
120. [illegible].403:3. 121. [illegible].193.
122. பாரதிதாசன், குடும்ப விளக்கு, பகுதி.1-5., பக்.20,27,42,60,52.
123. [illegible].114:13;15;164:1;3;314:15;[illegible].442:3-4.

மகளிர் கற்பு, தெய்வத்தன்மை வாய்ந்தது என்றும் அருந்ததி கற்பினை ஒத்தது என்றும் பேசப்படுகிறது. இச்சிறப்பை, 'கற்பின்...அணங்குசால் அரிவை'[124] எனவும், 'கடவுட் கற்பொடு...நல்ல நாட்டு'[125] எனவும், 'கடவுட் கற்பின் மடவோள்'[126] எனவும், 'விளங்கிழை...அருந்ததி அனைய கற்பின்'[127] எனவும் வரும் அடிகள் தெளிவுபட விளக்குகின்றன. 'வானத்து அணங்கருங் கடவு அன்னோள்'[128] 'தீதிலா வடமீன் திறம்'[129] என வரும் அடிகள் மேற்கூறிய கருத்தினைப் புலப்படுத்தும்.

புளிச்சுவை விழைவும் ஒழிவும்

முல்லைப்பாடலொன்று கருவுற்ற மகளிர் தம் குழந்தையைப் பத்துத் திங்கள் தாங்கினர் என்ற அரிய செய்தியை 'முந்நாள் திங்கள் நிறைபொறுத் தசைஇ'[130] என்னும் அடியால் கூறுவதைக் காணலாம். மேலும், 'சூல் கொண்ட மகளிர் புளியைக் காய விரும்பி உண்பர்' என்பது, 'பசும்புளி வேட்கைக் கடுஞ்சூல் மகளிர்'[131] என்னும் அடியால் தெரியவரும். இப்பசும்புளி வேட்கையை ஐங்குறுநூற்றுப் பாடலொன்று 'புளிங்காய் வேட்கை' எனக் கூறுகிறது.[132]

முல்லை மணம்

இது பற்றி முல்லைப்பாடல்களில் குறிக்கப்படுகிறது.[133] மகளிர் நுதல் முல்லை மணம் பெறும் சிறப்பை 'நின்னுதல் நாறு முல்லை'[134] என்னும் அடியும், அந்நன்னுதல் மணத்தைப் புறவு பெறும் என்பதை 'நின்னுதல் நாறு நறுந்தண் புறவின்'[135] என்னும் அடியும் புலப்படுத்துகின்றன. தோள் முல்லை மணம் பெறுதலை,

'... ... ... தோளே
... முல்லை முகைநா றும்மே'[136]

என்னும் அடிகளால் அறியலாம். மகளிர் தோள் மணக்கக் காரணம், அவர்தம் முல்லை மணமேயாகும். இதனை, திரு. கி.வா. ஜகந்நாதன் அவர்கள், மேற்கூறிய குறுந்தொகைப் பாடலொடு,

'கந்தனை அணிபவர் கவலெறி கமழும்
... .
நந்தன வனத்தில நறுமலர் புறவம்' (கம்ப.நாட்டுப்.48)

124. அகம்.114:13;15. 125. அகம்.184:1-3. 126. அகம்.314:15.
127. ஐங்.442:3-4. 128. அகம்.16:17-18. 129. சிலப்.1:27.
130. குறு.287:3. 131. குறு.287:4-5. 132. ஐங்.51:3.
133. ஐங்.492:2;413:1;குறு.193:5-6. 134. ஐங்.492:2.
135. ஐங்.413:1. 136. குறு.193:5-6.

'மாண்மறிசுஞ் சிறுமேனி மயிர்சால் ஐம்புறமே' (அகம்.57)
என வரும் அடிகளை எடுத்துக்காட்டி, 'அவர் மேனி முல்லை மணம் உடையது என்ற கருத்து வழிவழியே புலவர்தம் இலக்கிய உலகத்தில் இருந்து வருகிறது'[137] எனப் புகல்வர்.

விருந்தோம்பல்

மகளிர் விருந்தோம்பலைப்போற்றி வாழும் பண்புடையவர் என்பது நான்கு முல்லைப்பாடல்களில் சிறப்பிக்கப்படுகின்றது.[138] அவற்றுள், 'விருந்தயர் விருப்பினள்'[139] என வரும் தொடர் குறிப்பிடத் தக்கது. விருந்தினர் இராப்பொழுதில் வரினும் அவ்வாறு கண்டு மகிழ்வர் என்பது, 'அல்கல் அயர்வு விருந்தெதிர் உவக்கும்'[140] என வரும் அடியால் புலனாகும். வள்ளுவர் விருந்தோம்பலின் சிறப்பை 'விருந்தோம்பல்' என்னும் அதிகாரத்தால் போற்றியிருப்பது ஈண்டு அறிதற்குரியது.[141]

விளையாட்டுகள்

அம்மனை_பந்து

இவை இரண்டு முல்லைப்பாடல்களில் குறிக்கப்படுகின்றன.[142] மகளிர் இல்லத்தே அம்மனையையும் பந்தையும் விளையாடிச்செல்வம் பறக்க விட்டும் மகிழ்வர்.[143] ஈது இலக்கியத்திற்குரிய பந்தைப் போன்றவற்றை ஒக்கும் என்பது அறிதற்குரியது.[144]

கழங்காடல்

ஒரே முல்லைப்பாட்டொன்றில் குறிக்கப்படுகிறது.[145] மகளிர் விளையாட்டுகளில் கழங்காடல் என்பது ஒன்றாகும். இதனை, 'வெண்கோடு மகளிர் ஆயர்த்தனர் ஆடும் கழங்கு'[146] எனக் கூறுவதால் அறியலாம். பெரும்பாணாற்றுப்படை, 'மகளிர்...முத்த வார்மணற் பொற்கழங் காடும்'[147] எனக் கூறுகிறது. இவ்விளையாட்டினை ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள், 'கழற்காய்களை முறையாக முன் வைத்து அவற்றையெடுக்குங்கால் கண்டு கூறும் ஒருவகைக் குறி'[148] என்பர். சிலப்பதிகாரம் குரவையாடல் மகளிரை 'கழங்காடு மகளிர்'[149] எனக் கூறுகிறது.

---

137. ரகுநாதன் சி.வா., முல்லை மணம், பக்.2,9,10.
138. நற்.142:9; 221:8; 361:9; 374:8;
139. நற்.361:9; 374:8.
140. நற்.142:9.
141. குறள்.81-90.
142. அகம்.34:12; 254:5.
143. அகம்.34:12-13; 254:5-7.
144. இலக்கியக்கருவூலம் 7.
145. நற்.334:8.
146. நற்.334:7-8.
147. பெரும்பாண்.335.
148. துரைசாமிப்பிள்ளை ஔவை சு., நற்றிணை மூலமும் விளக்கவுரையும், பக்.585.
149. சிலம்பு.27:245.

<u>தோணிக்கூத்து</u>

இதை முல்லைப்பாட்டொன்றில் காண்கிறோம்.[150] மகளிர் பலர் கூடி நின்று கையால் மாட்சிமைப்பட முற்றம் பிடித்தாரும் கற்ற 'தோணிக்கூற்று' எனப் பெயர் பெறும்.[151] புறமே முதநாரை 'மகளிர் கையால் தோளி' எனக் குறிக்க. பல ஒரு வகை வரிக்குறி என்றும் தோள் நோக்கி முழும் முடம் என்றும் கூறுவர். இந் தோணிக் கூற்றினை அடியார்க்கு நல்லார் 'தோள் வீச்சு' எனக் குறிப்பர்.[152] ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், 'திருவாசகத்தில் கூறப்பட்ட 'தோணோக்கம்' என்பதும் இதுவே போலும்' எனக் குறிப்பர்.[153] மகளிர் முடவர் ஆடுவர் இதனை உளையாடல் கூறும்.[154]

மேலும் மகளிர் தொழிலின் தலைமைக்கு உரிய எடுத்துச்செல்லல், நீர்நிலைக்குக் குடத்தைக் கொண்டு போதல், தாம் வீட்ட விறகினை வெட்டுதல் என்றும் ஒவ்வ தொழிலின் சிறப்பாகக் கூறப்படுவதும்,[155] உழவர் புலத்திலும் செல்வத்தால் பலர் குறையால் செய்த 'குவட்டி' என்ற வெட்டியில் விதைகளை எதிர்ச்செல்ல மாலையில் திரும்பும்போது அதில் முல்லை மலர்களைக் கொண்டு வருவர் என்பதும்,[156] இடக் கொழுத்தவர் வாய்வலைப் பார்க்கும் போதெல்லாம் முள்ளம் நெஞ்சுபடத் தம் பொருளைக் கேட்பர் என்பதும்,[157] முரசம், புறங்கொடாத புலியொடு போரிட்டு வென்ற காளையின் தோலால் செய்யப்படும் என்பதும்,[158] மாலையை மறந்திட்ட பூவைனால் சிறுமிச் செல்வர் என்பதும்,[159] பாலை மறந்திட்டு வேல்வேல் அழப்பர் என்பதும்[160] அறிகிறோம்.

பாட்டில் உள்ள சொற்கள் ஒரு பொருளை விளக்குவதோடு அப்பொருளை நம் நெஞ்சத்திலே நிலைபெறச் செய்தலும் வேண்டும் என்பர் திரு. அபர் குரோம்பி.[161] இத்தகைய பிறவாத் தன்மையுடைய படைப்புகள் பலவற்றை நாம் பழந்த இலக்கியங்களில் காண்கிறோம்.

---

150. குறு.364:5. 151. குறு.364:5.
152. சிலப்.5:13 அடியார்க்கு நல்லார் உரை, பக்.89.
153. குறுந்தொகை 364, ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரை, பக்.87.
154. குறு.364:4-6. 155. கலி.108:31-33.
156. நற்.155:1-3. 157. கலி.108:22-23.
158. குறு.334:1-2. 159. கலி.104:43-44.
160. கலி.110:17-18.
161. Abercrombie, L., The Idea of Great Poetry, p.70.

வரலாற்றுக் குறிப்புகள்

தொன்மைச்சிறப்பு

ஒரு நாட்டின் பண்டைச் சிறப்பும் வாழ்வும் அந்நாட்டு வரலாற்று மூலங்களை வேண்டி (Sources)அறியப்படுகின்றன. அவ்வாறு தமிழக வரலாற்றினை அறிய உதவும் வரலாற்று மூலங்களில் சங்க இலக்கியங்கள் குறிப்பிடத்தக்கவையாயும் தொன்மைச்சிறப்புடையனவாயும் விளங்குகின்றன. இச்சிறப்பினைத் திரு கே.கே. பிள்ளை அவர்கள், 'பழந் காலத்தமிழ் மக்கள் வரலாற்றிற்கு மூலம் சங்க இலக்கியமே' என்று தம் நூலில் போற்றுகின்றார்.[1]

சங்க இலக்கியங்களெனப் பெரிதும் கருதப்படும் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் வழங்குகின்ற வரலாற்றுக் குறிப்புகள் பல. அவற்றுள் முடியுடை வேந்தர்கள், மன்னர்கள், படைத்தலைவர்கள், நல்ல நகர்கள், துறைமுகப்பட்டினங்கள், போர்க்களங்கள், ஊர்கள் முதலியவை குறிப்பிடத் தக்கவையாகும். சங்க காலத்திலேயே வரலாற்று நோக்குடன் தொகுத்திட்டு என்பதற்குச் சேரர் குல முறையைப் பாடும் பதிற்றுப்பத்துப் பாடல் களும்[2] அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாடும் ஔவையாரின் பாடல்களும்[3] முல்லைக் கொடிக்குத் தேர் வழங்கிய பாரியைப் பாடும் கபிலரின் பாடல்களும்[4] சான்றுகளாய் விளங்குகின்றன. இவ்வாறு பல்லாற்றானும் சிறக்கும் சங்க இலக்கிய வரலாற்றுச் சிறப்பைத் திரு கே.என். சிவராசப்பிள்ளை அவர்கள், 'சங்க கால இலக்கியங்கள் பண்பட்ட நல்ல பழமையைத் தோற்றுவிப்பன என்பதும், அவற்றில் காணும் வரையறுக்கப்பட்ட குறிப்புகள் பண்டைத் தமிழரின் தனித்தன்மைச் சிறப்பியல்புகளைப் புலப்படுத்துவன என்பதும், வரலாற்றியல் பிற இலக்கியங்களும் உயர்வாகக் கருதப்படாத பலவற்றை ஐந்து அல்லது ஆறு தலைமுறையின் ஒரு நீண்ட கால வரலாற்றைக் கூறும் பதிவேடாய்த் (Record)திகழ்கின்றன' என்றும் கூறியுள்ளமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.[5]

சங்க இலக்கியத்தில் காணப்படும் பல்வேறு இடைக்காலப்பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் மிகுதியாக நற்றிணை,[6] குறுந்தொகை,[7] கலித்தொகை,[8] அகநானூறு,[9] பரிபாடல்[10] முதலிய நூல்களில் இடம் பெறுகின்றன.

---

1. பிள்ளை டாக்டர் கே.கே., தென் இந்திய வரலாறு, முதற்பகுதி, பக்.65.
2. பதிற்.11-90.
3. புறம்.87-95;97-101;103;104;206;231;232;235;315;390.
4. புறம்.105-109;111;115-120.
5. Sivaraja Pillai, K.N., The Chronology of the early Tamils, p.6-7.
6. நற்.161;367;381.
7. குறு.210.
8. கலி.103;104;105.
9. [illegible]

இனி, சங்க இலக்கியத்தின் முல்லைத்திணைப் பாடல்களாலும் இன்றியமையாமையைக் கருதி அவையும் பிற திணைப்பாடல்களாலும் அறியலாகும் குறிப்பிடத்தக்க வரலாற்றுச் செய்திகளைக் காண்போம்:

வஞ்சியும் முல்லையும்

காடும் காடு சார்ந்த இடமும் 'முல்லை நிலம்' எனப்படும். முல்லை நிலம் போர்த்தொழிற்கு ஏற்றிடமாயும் விளங்கியது. இதனை, நச்சினார்க்கினியர், 'மாயோன் மேய காடுறை உலகமும் கார் காலமும் முல்லைக்கு முதற்பொருளாதலால் பகைவயிற்சேறலாகிய வஞ்சிக்கு நிலமும் நீர்மையும் காலமும் வேண்டுதலானும், பன்மரக் காடாகிய மலைசார்ந்த இடம் [illegible] இது சிறந்ததென்க' என 'வஞ்சி தானே முல்லையது புறனே'[11] என்ற தொல்காப்பிய நூற்பா உரையில் [illegible].

பெரும்பூட்சென்னி

இவன் அகநானூற்றின் முல்லைப்பாடல்களுள் 44ஆம் பாடலில் சிறப்பிக்கப் பட்டவனாவான். இவன் [illegible] சோழ மரபினன்; 'சென்னி' என்பது இவன் பெயராம் பெரும்பூட்சென்னி எனத் திகழ்பவன்; 'பழையன்' என்ற சிறந்த படைத் தலைவனைப் பெற்றவன்; சேரனுடன் புரிந்த போரில் பழையன் உயிர் இழக்க, அத் துன்பத்தைப் போக்கச் சேரர்மீது சினந்து எழுந்தவன்; கழுமலம் என்னும் ஊரிடத்தே தேர்ப் படையை உடைய 'கணையன்' என்ற சேரர்தம் படைத்தலைவனையும் அவனைச் சார்ந்த மற்றோரையும் வெற்றி கொண்டவன்; அவ்வெற்றியால், 'கழுமலம் தந்த சென்னி' எனப் புகழப்படுபவன். இச்சிறப்பினைப் புலவர் குடவாயிற் கீரத்தனார்,

'... ... பழையன் பட்டெனக்
கண்டது நோனா னாகித் திண்டேர்க்
கணைய னகப்படக் கழுமலந் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி'[12]

என அகம் நூலில் புலப்படுத்தியுள்ளார்.

பாண்டியர்

மூவேந்தர்களுள் பாண்டியர்தம் பெயர்கள் இடம் பெறவில்லையாயினும், அவர்தம் படைச் சிறப்பும் [illegible] முல்லைக்கலியில் மிகுதியாக இடம் பெற்றுள்ளமை

11. தொல். பொருள். 64.
12. அகம். 44:11-14.

குறிப்பிடத் தக்கதாகும். பாண்டிய மன்னர்களின் குலப்பெயர்களுள் சிறப்பாகத் 'தென்னவன்'[13], 'வழுதி'[14], 'பொருப்பன்'[15], என்பவை குறிப்பிடப்பட்டுள்ளன. இவை முறையே 3,2,2 என இடங்களைப் பெற்றுள்ளன. இவற்றுள், 'தென்னவன்' என்ற பெயர், 'வாடாச்சீர்த் தென்னவன்'[16], 'உருமுறழ் முரசின் தென்னவன்'[17] 'தென்னவன் வையை'[18] என்றும், 'வழுதி' என்ற பெயர் 'கலிமா வழுதி'[19] 'பொலஞ் சொரி வழுதி'[20] என்றும், 'பொருப்பன்' என்ற பெயர் 'இலங்கை முரசின் பொருப்பன்'[21] 'தெற்கொள் பொருப்பன்'[22] என்றும் சிறப்பிக்கப்பெற்றுள்ளமை ஈண்டு அறிதற்குரியது. (இவற்றுள் தென்னவன் என்ற பெயர் சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் மிகுதியாக இடம் பெற்றிருப்பது அறிதற்குரியது.) இவற்றுள், 'திண்டேர்த் தென்னவன்'[23] 'தென்னவன் உயர்கடல்'[24] 'திருவீழ் மார்பின் தென்னவன்'[25], 'நெடுவேல் தென்னவன்'[26], 'மன்னர் முன்றிற் றென்னவன்'[27], 'தென்திசை யாண்ட தென்னவன்'[28], 'கோல் தென்னவன்'[29] என வருவன குறிப்பிடத்தக்கன.

வழுதி பெறும் சிறப்புகளுள் 'தானை வழுதி'[30] 'வேம்பின் வழுதி கடல்'[31], 'வழுதி கொற்கை'[32], 'வெல்போர் வழுதி'[33], 'பெரும்பெயர் வழுதி'[34], 'அப்போர் வழுதி'[35] என வருவன குறிப்பிடத்தக்கன.

பொருப்பன் பெறும் சிறப்புகளுள் 'ஒளிவாள் பொருப்பன்'[36], 'திண்டேர்ப் பொருப்பன்'[37], 'வேம்பின் பொருப்பன்'[38], 'தென்னம் பொருப்பன்'[39], 'தென்னம் பொருப்பின் தலை'[40] என வருவன குறிப்பிடத்தக்கன.

பாண்டியர் கடலிடத்தே பரந்த தொல்லிநத்தை ஆளும் உரிமை உடையவர்; கடல்கோளால் நாடு இழந்தும், வெல்லிற்றிச் சோழர், சேரர்தம் புலிப் பொறியையும் விற்பொறியையும் நீக்கிக் கயற்பொறி பொறித்த தொல்புகழ் உடையவர்; ஒரு மொழியாம் தம் ஆணையை உலகெலாம் ஒருசேரக் கேட்கச் செய்தவர். (இதனைச் சோழன் நல்லுருத்திரனார் முறையே,

---

13. கலி.104:4;79;பரி.20.97.
14. அகம்.204:2;பரி.10:127.
15. கலி.105:73;108:58.
16. கலி.104:4.
17. கலி.104:79.
18. பரி.20:97.
19. அகம்.204:2.
20. பரி.10:127.
21. கலி.105:73.
22. கலி.108:58.
23. மது.54:1.
24. கலி.57:8.
25. அகம்.13:6.
26. அகம்.138:7.
27. புறம்.388:13.
28. சிலம்பு.11:22.
29. சிலம்பு.18:44.
30. நற்.150:4.
31. அகம்.93:9.
32. அகம்.130:11.
33. அகம்.312:12.
34. அகம்.315:7;புறம்.3:13.
35. புறம்.51:4.
36. பரி.22:1.
37. கலி.35:25.
38. கலி.92:27.
39. புறம்.33:7.
40. சிலம்பு.20:31.

'... முந்நீர்ப் பரந்த தொன்னிலம்
ஒருங்கு கிழமை ...'[41]

என்றும்,

'மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
தொல்லிசை நட்ட குடி'[42]

என்றும்,

'... ... ... தென்னவற்
கொடுமொழி கொள்குவ ஏறுடை வேலே'[43]

என்றும் பாராட்டுவதைக் காண்கிறோம். மேலும், பாண்டிய மன்னர்கள் பகை அரசு பல அழித்தவர் என்றும்,[44] தொல் குடியாய் வில் குடியாய்ச் சிறக்க விளங்குபவர் என்றும்,[45] கடல் முத்துகளைப் பெறும் பேறுடையர் என்றும்[46] அருள் உரவோரிக்கும் நேயத்தாற் பாலும் நாடு பல கொண்டவர் என்றும் அறிகிறோம்.

புலவர் மதுரைக் காமக்கணி நப்பாலத்தனாரால் புகழப்படும் பாண்டியர், உலகு முழுமைக்கும் நிழல் செய்யும் வெண்கொற்றக் குடையையும் கடல் போன்ற பரந்த படையையும், செருக்குடைய குதிரையையும் பெற்றுத் திகழ்ந்ததை,

'உலகுடன் நிழற்றிய தொலையா வெண்குடைக்
கடல்போல் தானைக் கலிமா வழுதி'[47]

என வரும் பாடல் பகுதி உணர்த்துகின்றது. புலவர் ஏந்திய வறுமையுற்ற கைகள் நிரம்பு மாற பொன்னை வாரி வழங்கும் பாண்டியர்தம் வண்மைப் பண்பைப் பரிபாடல் போற்றுகின்றது.[48]

<u>நெடுமான் அஞ்சி</u>

இவன் முல்லைப் பாடலொன்றில் சிறப்பிக்கப்பட்டுள்ளான்.[49] அதியமான் நெடுமான் அஞ்சி, கடையேழு வள்ளல்களுள் ஒருவன்;[50] சேர மரபினன். 'தகடூர்' என்ற நகர புரியைத் தலைநகராகக் கொண்டவன்; தகடூரில் சேரமான் பெருஞ்சேரலிரும்பொறையுடன்

---

41. கலி.103:77-78.
42. கலி.104:1-5.
43. கலி.104:79-80.
44-46. கலி.105:1-7;72-75.
47. புறம்.204:1-2.
48. பரி.10:126-127.
49. நற்.381:7.
50. சிறுபாண்.103; புறம்.158:9.

போரிட்டவன்.[51] தர்மபுரியை அடுத்துள்ள ஊராம் கோட்டை என்பது அதியமான் கோட்டையாகும். இவன் பெயர் நூல்களில் 'அதிகன்,[52] அதியமான்,[53] அதியர் கோமான்,[54] நெடுமான் அஞ்சி,[55] நெடுந்தேர் அஞ்சி,[56] நெடுமிடல்,[57] அஞ்சி,[58] எழினி,[59] மழவர்;[60] என்றும் சாசனங்களில் 'அதிராசன், அதியரையன், அதிகேந்திரன், எழினியவனி' என்றும் வழங்குவதைக் காண்கிறோம்.[61] திரு.வெ. இராசகோபாலையங்கார் அவர்கள், அதியனின் இயற்பெயர் 'நெடுமிடல்' என்பர்.[62] அதியமான் இனிய அமிழ்தாம் நெல்லிக் கனியை ஔவைக்கு வழங்கியவன் என்பதையும்[63] அவன் 'நீலமணி மிடற்றினை உடைய சிவபெருமான் போல வாழ்க!' என்ற பெரு வாழ்த்தினை அவர்பால் பெற்றவன் என்பதையும் அறிகிறோம்.[64]

ஔவையாரால் பாராட்டப்படும் நெடுமான் அஞ்சி, பெரும்பெயர் மன்னரும், மிகச்சிறந்த கொடை வள்ளலும் விளங்கியதை அவர்தம் புறநானூற்றுப் பாடல்களில் (22) சிறப்பக் காண்கிறோம்.[65] நெடுமான் அஞ்சி சிறந்த செல்வம் யானைப்படையையும் குதிரைப்படையையும் ஒருசேரப் பெற்றமையையும் ஈர நெஞ்சம் கொடை உள்ளத்தால் புலவர்கட்குத் தேர்களைப் பரிசாக வழங்கும் நாளோலக்கச் சிறப்பினைப் பெற்றமையையும்,

'... ... ... ஒப்புமேவல்
அடுப்பட்ட யானை நெடுமான் அஞ்சி
ஈர நெஞ்சம் ஒருசேர் விரிந்த
தேர்வீசு இருக்கை'[66]

என்ற அடிகளில் ஔவையார் நயமுற வாழ்த்தக் காண்கிறோம். 'ஆதவன்' எனப்படும் பாண்டியன் நெடுஞ்செழியனின் '[illegible] சாசனத்தில்' 'திகழ்வேல் அதியன்' என்னும் பெயர்த்தொடர் காணப்படுகிறது.[67] மேலும், 'அதிகன்' என்ற பெயர் அதிகாரிகளையும் குறிக்கும் என்பது தெரிகிறது.[68]

---

51. புறம்.55. 52. சிறுபாண்.103. 53. புறம்.101:5.
54. புறம்.91:3, 392:1. 55. நற்.381:7.
56. குறு.91:6. 57. பதிற்.32:10. 58. புறம்.103:8; அகம்.372:9.
59. புறம்.392:2; 158:9. 60. புறம்.88:3; 90:11.
61. இராகவையங்கார் மு. இலக்கிய சாசன வழக்காறுகள், பக்.16-17.
62. [illegible] வரலாறு, வெ. ராசகோபாலையங்கார் பதிப்பு, பக்.37.
63. சிறுபாண்.100-101; புறம்.91:9-11. 64. புறம்.91:6-7.
65. புறம்.87-95; 97-101, 103, 104, 206, 231, 232, 235, 315, 390.
66. நற்.381:6-9.
67. பாண்டியர் செப்பேடுகள் பத்து பக்.57, 67.
68. குறுந்தொகை டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக்.696.

கண்டீரக்கோப்பெரு நள்ளி

இவன் முல்லைப்பாடலொன்றில் சிறப்பிக்கப்பட்டுள்ளான்;[69] நள்ளி என்ற பெயரால் புலவர் பாராட்டும் பெருஞ்சிறப்புடையவன்.[70] கடையெழு வள்ளல்களுள் ஒருவன்.[71] இவன் பெயர் பிரதிகளில் 'கண்டீரக்கோப்பெரு நள்ளி' எனவும், 'கண்டீரக் கோப் பெருநற்கிள்ளி' எனவும் 'நள்ளி' எனவும் காணப்படுவதாக டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.[72]

முட்டாது வழங்கும் நள்ளியின் கொடைச்சிறப்பை, 'நட்டோர் உவப்ப... முட்டாது கொடுத்த .. தடக்கை' என்றும்[73] கொடை வழங்கும் உவமைச் சிறப்பை 'மழைசுரந் தன்ன ஈகை ... நள்ளி'[74] என்றும் நள்ளியின் மலைபெறும் மழை, அருவி ஆகியவற்றின் சிறப்புகளை, 'மழை பொழியும் ... நெடுங்கோட்டு நளிமலை நாடன் நள்ளி'[75] 'கறங்குமிசை அருவிப் பிறங்குமலை நள்ளி'[76] 'பனிக்கயத் தன்ன நீணகர், நளிமலை நாட னள்ளி'[77] என்றும் தேர்ச்சிறப்பை, 'திண்டேர் நள்ளி'[78] என்றும், தலைமைச்சிறப்பை, 'வல்வில் இளையர் பெருமகன் நள்ளி'[79] என்றும் கூறுவதை அறிகிறோம். புறநானூற்றின் 151ஆம் பாடலிற் பேசப்படும் இளங்கண்டீரக்கோ, நள்ளியின் தம்பியெனக் கருதப்படுவான் என்பர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள்.[80]

'தோட்டி' என்னும் மலைநாட்டுத் தலைவனான நள்ளி வன்பரணர் பாராட்டும் பெரும்புகழ் உடையவன் என்பதைக் காண்கிறோம்.[81] நள்ளி, திண்ணிய தேரினை உடையவன் என்றும் அவனது கான நாட்டு மக்களாகிய இடையர், தம் பல் ஆனினங்களால் உண்டான நெய், பெருஞ் சிறப்புடையது என்றும் காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்னும் புலவர் கூறுவதை,

> 'திண்டேர் நள்ளி கானத் தண்டர்
> பல்லா பயந்த நெய்யின்'[82]

என வரும் அடிகளால் அறிகிறோம்.

---

69. குறுந்.210:1.
70. சிறுபாண்.107; குறுந்.201:1; அகம்.152:15; 238:14; புறம்.148:1; 149:1; 150:28; 158:16.
71. சிறுபாண்.107; புறம்.158:16.
72. புறநானூறு, டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக்.66-67.
73. சிறுபாண்.104-105. 74. அகம்.238:13-14. 75. சிறுபாண்.106-107.
76. புறம்.148:1. 77. புறம்.150:27-28. 78. குறுந்.210:1.
79. அகம்.152:15.
80. புறநானூறு, டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக்.279.
81. புறம்.148-150. 82. குறுந்.210:1-2.

பழையன்

பழையன் என்பான் முன்னைப் பாடலொன்றில் குறிக்கப்பட்டுள்ளான்.[83] சங்க இலக்கியத்தில் பழையனைப் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன.[84] பழையன் என்னும் சொல்லுக்கு உரையாசிரியர் பலவாறு பொருள் கூறியுள்ளனர். குறுநில மன்னன் என்று நச்சினார்க்கினியரும்,[85] திரு. ந.மு. வேங்கடசாமி நாட்டாரும்[86] கூறுவர். சோழ மன்னனும், மன்னனும் திரு. பொ.வே. சோமசுந்தரனாரும்,[87] ஔவை சு. துரைசாமிப்பிள்ளையும்[88] கூறுவர். ஊர்த்தலைவனென்று திரு ரா. நாராயணசாமி ஐயர் அவர்களும்[89] திரு பொ.வே. சோமசுந்தரனார் அவர்களும்[90] கூறுவார்கள். மேலும் இவன் சோழன் பெரும்பூட்சென்னியின் படைத்தலைவன் என்பதையும் அறிகிறோம்.[91]

பழையனோடு 'பேஎர்' 'போஒர்' என்ற ஊரைக் குறிக்கும் இரண்டு சொற்கள் இணைத்துப் பேசப்படுகின்றன. அவை முறையே 'பேஎர் கிழவோன் பழையன்'[92] 'பழையன்...போஒர்'[93] 'போஒர் கிழவோன் பழையன்'[94] என வருகின்றன. இவ்வூர் பற்றிய கருத்தும் அறிஞர்கள் வேறுபடுகின்றார்கள். திரு.கே.என். சிவராசப் பிள்ளை அவர்கள்[95] 'பேஎர்', 'போஒர்' என்ற ஊர்களின் தலைவனாகவே பழையனைக் குறிப்பிடுவர்.

திரு. பொ.வே. சோமசுந்தரனார்[96] அகநானூற்றின் 326ஆம் பாடலில் காணும் ஊர் பழையனின் ஊர் என்றும், அகநானூற்றின் 186ஆம் பாடலில் காணும் ஊர் ஊர் அல்ல என்றும் அது வேல்கோற்போர் என்ற பொருளை உடையது என்றும் கூறுவர்.[97] மேலும் பேஎர் என்பது போஒர் என்ற பாடம் என்றும் அது 'கொடையுடைய தேர், போர்த் தொழிலையே தனக்குரிமையாகவுடையோன்' என்ற பொருள்களைத் தரும் என்றும் கூறுவர்.[98] இவ்விரண்டும் ஓர் ஊராகக் கொள்வதே பொருத்தமுடைத்தாம். ஔவை

---

83. அகம்.14:11.
84. மதுரைக்.508; நற்.10:8; பதிற்.பதி.5:13; பதிற்.44:14; 49:8; அகம்.186:15; 251:10, 326:12.
85. பத்துப்பாட்டு உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக்.396.
86. சிலப்பதிகாரம் 27:124; கழகப்பதிப்பு, பக்.573.
87. அகநானூறு 186:15; கழகப்பதிப்பு பக்.219.
88. பதிற்றுப்பத்து 44:14; கழகப்பதிப்பு, பக்.204.
89. நற்றிணை 10:8, கழகப்பதிப்பு, பக்.20.
90. அகநானூறு 326:12, கழகப்பதிப்பு, பக்.69.
91. அகநானூறு 44:11, கழகப்பதிப்பு, பக்.176.
92. நற்.10:7-8. 93. அகம்.186:15-16. 94. அகம்.326:12.
95. Sivaraja Pillai, K.N., The Chronology of the early Tamils, p.76-78.
96-97. அகநானூறு கழகப்பதிப்பு, பக்.219, 220. 69-70.
98. நற்றிணை 10, கழகப்பதிப்பு, பக்.21.

சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் ஒப்போதர், இந்த 'கோசடி' என்ற வழிக்குறிக்க என்பர்.[99]

போஜர் பழையனின் ஊர் என்று கூறப்படுவது போல, மோகூரும் பழையனின் ஊர் என்று கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.[100] ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் 'மதுரைக்கு வடகிழக்கில் உள்ள திருமோகூர் இது போலும்' என்பர்.[101] மோகூர் பொய்க்காத மழையால் நீங்காத விளைபொருள்களைப் பெற்றிருந்தது என்பதை, 'மழைபொழுந் கூறும் பிழையா விளையுள், பழையன் மோகூர்'[102] என வரும் அடிகளால் அறிகிறோம். மோகூர் அவையில் அறிவுரை கூறும் நான்மொழிக் கோசர் இருந்தனர் என்பது அறியற்பாலது.[103] பழையன், மழையைப் போல அம்பும், முகிலைப் போலக் கேடயமும் உடையவன் என்பதை, 'மாரி அம்பின் மழைத்தோல் பழையன்'[104] எனக் கூறுவதால் அறிகிறோம்.

பழையன், சேரன் செங்குட்டுவனால் வாகை சூடப்பட்டவன் என்பது, 'பழையனுடைய காவல் மரமாகிய வேம்பினை அழித்தவன்' என்றும், 'மோகூரை அழித்துச் செய்தவன்' என்றும், 'முரசம் கொண்டவன்' என்றும் கூறுவதால் தெளிவாகிறது. இவற்றை, 'பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்' முழுமுதல் துமிய'[105] 'பழையன் காக்கும் ... வேம்புமுதல் தடிந்த'[106], 'மோகூர் ... அவிய மண்டி'[107] 'மோகூர் மன்னன் முரசம் கொண்டு'[108] எனக் கூறுவதால் அறிகிறோம்.

சோழர்க்கும் சேரர்க்கும் ஏற்பட்ட போரில் பழையன் பெரும்பூட்சென்னியின் படைத்தலைவனாய்ச் சென்று சேரர் படைத் தலைமைத் தலைவருள் நன்னனையும், மற்றைப் போர்களாகிய ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்னும் படைத் தலைவர்களையும் வென்றான் என்றும் அவர்தம் உடல்களைப் பருந்துகள் உண்ணும்படி செய்தான் என்றும், பின்பு விழுப்புண் பல பெற்ற அப்போர்க்களத்தே இறந்தான் என்றும் அறிகிறோம்.[109]

---

99. துரைசாமிப்பிள்ளை, ஔவை, சு., நற்றிணை, மூலமும் விளக்கவுரையும், முதல் தொகுதி பக்.51.
100. மதுரைக்.508.
101. துரைசாமிப்பிள்ளை ஔவை சு., பதிற்றுப்பத்து, 4, பக்.206.
102. மதுரைக்.507-508.
103. மதுரைக்.508-509.
104. அகம்.186:15-16.
105. பதிற்.பதி.5:13-14.
106. சிலப்.27:124-125.
107. பதிற்.49:8-9.
108. பதிற்.44:14.
109. அகம்.44:7-11.

'பழையன் மாறன்' என்ற பெயரில் ஒரு பாண்டிய மன்னன் வாழ்ந்தான் என்பதை அறிகிறோம்.[110] இவன் வம்பமோரியரொடு போரிட்டவனாகவும்[111] கிள்ளி வளவன் என்ற சோழனை வென்றவனாகவும்[112] கூறப்பட்டுள்ளான்.

<u>பூக்கோள்</u>

'பூக்கோள்' என்பது 'பூவைக் கொள்ளுதல்; தும்பை, வெட்சி முதலிய புறத்திணைக்குரிய பூக்களைத் தம் தொழிற்கேற்பச் சூடுதற்கு நல்ல நாளில் கைக் கொள்ளல்' என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் குறிப்புரை மூலம் அறிய முடிகிறது.[113]

இதனைப் 'போர்ப்பூ' என்றும் வழங்குவர். இருபெரு வேந்தர் தம்முள் மாறுபட்டு எழுந்த போர்க்களத்தின்கண்ணே, 'நம்மேல் வருகின்ற பகைவர்தம் படைகளை எல்லாம் நம் ஒரு படையால் புறமுதுகிட்டு ஓடச் செய்க!' என்றும், 'மறச்செல்வம் உடைய நம் வீரர்க்கே வெற்றி நிலை பெறுவதாக!' என்றும் நெடுமொழி கூறி, பின்பு தன் தானை முழுவதும் பூக்கோள் எனப்படும் பொற்பூவினை வீரர்க்கு வழங்குவர். முல்லைப்பாடலொன்றில் காணும் இவ்வழக்கினை மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்,

> 'இருபெரு வேந்தர் மாறுகொள் வியன்களத்
> தொருபடை கொண்டு வருபடை பெயர்க்குஞ்
> செல்வ முடையோர்க்கு நிறுவிய விறல்வெய்
> பூக்கோ ளேய தானை'...[114]

என வரும் அடிகளில் குறிப்பிடுகிறார். பாசறைக்கண் பூச்சூடும் மரபைப் புறநானூறு 'பாசறைப் பூக்கோள்'[115] எனக் குறிப்பிடுவது கொண்டு அறியலாகிறது.

<u>உறந்தை</u>

இது முல்லைப்பாடலொன்றில் குறிக்கப்பட்டுள்ளது.[116] மேலும் சங்க நூல்களுள் பல இடங்களிலும் குறிக்கப்பட்டுள்ளது.[117] இது சோழர் தலை நகரமாகும். உறந்தை, 'உறையூர்' என்றும் 'கோழி' என்றும் பெயர் பெறும். '[illegible]' என்றும் சிறக்க

---

110. அகம்.346:19. 111. அகம்.251:12.
112. அகம்.346:22.
113. புறநானூறு, டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக்.465.
114. அகம்.174:1-4. 115. புறம்.289:8-9.
116. அகம்.4:14.
117. சிறுபாண், 83, பட்டினப்.285, நற்.400:7; குறு.116:2; அகம்.6:5; 93:5; 122:21, 137:6, 226:14, 237:14; 369:14,385:4 புறம்.39:8; 58:9, 352:10, 395:19.

நாட்டு ஊரின் உறந்தை நகரை 'Urattur' என்று குறிப்பிடுகின்றார்.[118] உறையூர் என்னும் பதிப் பெயரால் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் மூலம் உறையூர் மூலங்கள் சாத்தனார் எனும் ஆசிரியர் பாடல் பெற்றமை அறிகிறோம்.[119] உறந்தையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர்களுள் 'சோழ வேந்தன் செங்கண் தித்தன்' என்பவன் முதல் மன்னனாவான்.

சங்க நூல்கள் உறந்தை நகரின் சிறப்பை, 'சோழர் உறந்தை'[120] 'செம்மல்...உறந்தை'[121], 'தண்ணிலை உறந்தை'[122], 'வலம்படு சோழர் உறந்தை'[123], 'வென்வேல் சோழர் உறந்தை'[124], 'அறம்கெழு நல்லவை உறந்தை'[125], 'உறந்தை, நீர்த்துறை பெரும் கோழி'[126], 'கோழி உறந்தை'[127] 'தித்தன் உறந்தை'[128], 'புனல்மலி புகார் உறந்தை'[129], 'காவிரி படப்பை உறந்தை'[130], 'தேர்வண் உறந்தை'[131] என்ற பல பாடல்களால் அறிகிறோம். உறந்தை நகர் நீதிக்கு புகழ்பெற்றதும் தெய்வச் சிறப்புடைய சான்றோர், 'அறங்கெழு ... உறந்தை...' என்ற நூலால் புலப்படுத்துகின்றது.[132] உறந்தையைச் சுற்றிலும் 'பிடவூர்' அம்பல், பேராவூர் (திருப்பேர்) பகுதிகள் இருந்தன எனலாம்.[133]

கொற்கை

இது பாண்டிய நாட்டுத் துறைமுகப் பட்டினமாகும்.[134] கொற்கை, முத்துக்குளிப்பு நடைபெறும் ஒரு துறைமுகமாகும். 'டாலமி கொற்கையின் நகரம், ... (Tyndis) என்று குறிப்பிடுகிறார்.[135] சங்க நூல்களில் பல இடங்களில் இடம்பெறுகின்றது. அவை வருமாறு: 'நெடுந்தேர் கொற்கை'[136], 'வளைகு கொற்கைத்துறைமுகம்'[137], 'வளைகு கொற்கை'[138], 'கொற்கை...கெழீஇ'[139], 'கொற்கை அம்பெரும் ... துறை'[140], '... கொற்கை.

118. Sivaraja Pillai, K.N., The Chronology of the early Tamils, p.173.
119. [illegible], ப.2488.
120. நற்.400:7. 121. சிறுபாண்.82-83.
122. நற்.300:14; புறம்.395:19. 123. புறம்.39:8.
124. அகம்.126:2. 125. நற்.23:5.
126. பட்டினப்.285:291. 127. நற்.6:5.
128. அகம்.122:21, 236:14. 129. அகம்.237:14.
130. நற்.385:4. 131. புறம்.58:9.
132. அகம்.4:14.
133. [illegible] பக்.
134. அகம்.210:2.
135. Srinivasa Iyengar, P.T., History of the Tamils, p.319.
136. நற்.8:9; மதுரை.128:2; அகம்.60:7. 137. நற்.18:4.
138. நற்.195:[illegible]; புறம்.40:4. 139. அகம்.210:3. 140. அகம்.258:4.

தொண்டி'[141], 'தொண்டி யன்ன பணைத்தோள்'[142], 'பனித்துறைத் தொண்டி'[143], 'தொண்டித் தண்ணற நெய்தல்'[144], 'தொண்டி யன்ன ...பொறி'[145], 'தொண்டி யன்னநின் பண்பு'[146], 'தொண்டித் தண்கமழ் புதுமலர்'[147], 'நறுமலர்..தொண்டி'[148] 'ஒட்டோர் தொண்டி'[149] 'இன்னொலித் தொண்டி'[150], 'முழங்கு..தொண்டி'[151], 'வளைகடல் முழவின் தொண்டியோர் பொருந'[152], 'வளங்கெழு தொண்டி'[153], 'தண்டொண்டியோ ரடுபொருந!'[154]

மேலும் 'அம்மூவனார்' என்னும் புலவர், 'தொண்டிப் பத்து'[155] எனப் பத்துப் பாடல்களால் ஐங்குறுநூற்றில் சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 'பொறையன் தொண்டி' என்றதொடர் மூன்று பாடல்களில் வருகின்றமைநோக்கற்குரியது.[156] பெரும் புலவர்களாகிய நக்கீரரும் பரணரும் தொண்டியைச் சிறப்பித்துள்ளமை நினைவு கூர்தற்குரியது.[157]

தொண்டி சேரர்க்கு மேற்குக் கடற்கரைத் துறைமுகமாய் விளங்கியதைப் போலச் சோழர்க்குக் கீழ்க்குக் கடற்கரையில் ஒரு துறைமுகம் அப்பெயரால் விளங்கியது என்பர். இதனை அடியார்க்கு நல்லார், 'வங்கம் பரப்பின் வங்க வீட்டத்துத் தொண்டியோர்'[158] என்ற சிலப்பதிகார அடிகளுக்குக் 'குணதிசைக்கண் தொண்டியென்னும் பதியிலுள்ள அரசரால்' என்ற உரை கூறி, 'தொண்டியோர் சோழ குலத்தோர்' எனக் குறியுள்ளமையால் அறியலாம். இதே கருத்தைத் திரு ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களும் கூறியுள்ளார்.[159]

இறையனார் அகப்பொருளில் தொண்டி பாண்டியர்க்கும் உரியது என்பதை 'மீனவன் தொண்டி', 'மாறன்..தொண்டி' எனக் கூறுமாற்றால் அறியலாம்.[160] எனவே, தொண்டி மூவேந்தர்க்கும் உரிமையுடைத்தாய் விளங்கியதைக் காணலாம்.

---

141. ஐங்.171:2-3.
142. ஐங்.171:3.
143. ஐங்.172:2;174:1.
144. ஐங்.173:2-3.
145. ஐங்.174:1-2.
146. ஐங்.175:4.
147. ஐங்.176:1-2.
148. ஐங்.177:3-4.
149. ஐங்.178:3; அகம்.290:12-13.
150. ஐங்.179:3.
151. ஐங்.180:3-4.
152. பதிற்.88:21.
153. அகம்.10:13.
154. புறம்.17:13.
155. ஐங்.171-180.
156. நற்.8:9; குறு.128:2; அகம்.60:7.
157. அகம்.290; குறு.128.
158. சிலப்.14:106-107.
159. சிலப்.14:106-107; பக்.374-375; சிலப்பதிகாரம் கழகப்பதிப்பு, பக்.337.
160. இறையனார் மேற்.11,147.

அருமன்

இவன் நக்கீரரின் பாடலொன்றில் குறிக்கப்பட்டுள்ளான்.[161] அருமன் ஊர்ப்பெருமக்களில் தலைச்சிறப்புடையவன்; 'சிறுகுடி' என்னும் ஊரினன். அருமனையும் அவனது சிறுகுடியும் பெரும் தொன்மைச் சிறப்பின நக்கீரர், 'ஆதி அருமன் பேரிசைச் சிறுகுடி'[162] எனவும், கள்ளில் ஆத்திரையனார், 'ஆதி அருமன் மூதூர்'[163] எனவும் போற்றிக் கூறியுள்ளனர். அருமனுடன் இணைத்துப் பேசும் சிறுகுடி பல பாடல்களில் காணப்படுகிறது.[164] 'அருமன்...சிறுகுடி' என வருவது போல 'வாணன் சிறுகுடி'[165], 'சிறுகுடி... பாணன்', 'பாணன் சிறுகுடி'[166], 'மறவர் சிறுகுடி'[167], 'சிறுகுடிப் பரதவர்'[168] 'சிறுகுடிக் குறவன்'[169] எனப் பலவாறு வருவதைக் காண்கிறோம். இச்சிறுகுடி மலையைச் சேர்ந்த ஊர் என்பது, 'குன்றுசேர் சிறுகுடி'[170], 'குன்றச் சிறுகுடி'[171] எனக் கூறுவதால் அறிகிறோம். கடல் துறையாக, புலால் நாறும் ஊராக, பல புதிய வருவாய்களைப் பெற்ற ஊராக, அருவிகளின் வளம் பெற்ற பதியாக, மன்றமாக, மூதூராக, பெரும்புகழுடைய ஊராக, காந்தள் வேலியை உடைய ஊராக விளங்குவதை முறையே 'துறைகெழு சிறுகுடி'[172], 'புலவுநாறு சிறுகுடி'[173], 'புலாலுண் மறுகிற் சிறுகுடி'[174], 'செழும்பல் யாணர்ச் சிறுகுடி'[175], 'ஆகெழு சிறுகுடி'[176], 'சிறுகுடி மன்றம்'[177], 'ஆதி அருமன் பேரிசைச் சிறுகுடி'[178], 'ஆதி அருமன் மூதூர்'[179] 'காந்தள் வேலிச் சிறுகுடி'[180] என வரும் தொடர்களால் அறிகிறோம்.

'அருமனுடைய சிறுகுடி இல்லங்களில் காக்கைப் பேடையானது தன் பிள்ளையைத் தழீஇயவாறு தெய்வத்திற்கு இடும் கருவைப் பொரிக்கறி கலந்த செந்நெல் வெண்சோற்றுப் பலியைக் கவர்ந்துகொள்க' எனத் தன் சுற்றத்தை அழைத்துக் கூறும் என்பதை நக்கீரர் தம் நற்றிணைப்பாடலில்,

---

161. நற்.367:6. 162. நற்.367:6. 163. குறுந்.293:4.
164. மலைபடு.156, நற்.338:8; 340:9; 367:6; குறுந்.95:3; 100:3; 108:1; 145:1; 184:2; 352:5; கலி.102:38; அகம்.54:14; 75:7; 103:7; 117:18; 140:1; 204:12; 269:22; 270:2; புறம்.70:13; 388:4.
165. அகம்.117:18; 204:12; 269:22; நற்.340:9.
166. புறம்.388:4.70:13 167. அகம்.75:6-7. 168. அகம்.140:1.
169. குறுந்.95:3. 170. குறுந்.108:1. 171. குறுந்.332:5.
172. குறுந்.145:1. 173. நற்.338:8. 174. அகம்.270:2.
175. மலைபடு.156. 176. அகம்.103:7. 177. கலி.102:38.
178. நற்.367:6. 179. குறுந்.293:4. 180. குறுந்.100:3.

'கொடுங்கண் காக்கைக் கூர்வாய்ப் பேடை
நடுங்குசிறைப் பிள்ளை தழீஇக் கிளைபயிர்ந்து
கருங்கண் கருனைச் செந்நெல் வெண்சோறு
சூருடைப் பலியொடு கவரிய குறுங்கால்
கூழுடை நன்மனைக் குழுவின இருக்கும்
மூதில் அருமன் பேரிசைச் சிறுகுடி'[181]

எனக் கூறுவதைக் காண்கிறோம். 'செல்வத்துப் பயனே ஈதல்'[182] என்பதைப் போலச் செந்நெல் பயன் ஈதல் என்பதை அருமன் தன் சிறுகுடிப் பண்பால் உணர்த்திக் காட்டியுள்ளமை ஈண்டு அறிதற்குரியது.

<u>பண்ணன்</u>

இவன் பல்வேறுபாடல்களில் குறிக்கப்பட்டுள்ளான்.[183] இவன் புறநானூற்றில் பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.[184] பண்ணன், சிறுகுடி என்னும் ஊர்க்கிழான் இவன். சிறுகுடி, காவிரி ஆற்றின் வடகரைக்கண் அமைந்திருந்த ஓர் ஊர் ஆகும். இதை, 'பண்ணன் காவிரி வடவயின்'[185] என வரும் அடியால் அறியப்படுகிறது. பண்ணன், பெரும்புகழும், நசைவேர் வாடாப் பண்பும், கொடைத்தன்மையும் சிறக்கப் பெற்றவன். இதனை, 'பெரும்பெயர்ச் சிறுகுடி கிழான் பண்ணன்'[186], 'நசைவேர் வாடாப் பிரித்துரி யானைப் பண்ணன்'[187], 'கைவள் ஈகைப் பண்ணன் சிறுகுடி'[188] என வரும் பாடற்பகுதிகள் தெளிவுபடுத்துகின்றன. இவன் வெற்றி உடைய வேற்படையால் மலை போன்ற பல யானைகளை அழித்தவன் என்பது, 'வெல்வேல் ... ஓச்சி மலைமலைந்த யானை, மண்டமர் ஒழித்த, கழற்கால் பண்ணன்'[189] என வரும் அடிகளால் தெரிகிறது.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், பண்ணனைத் தன் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, 'யான்வாழு நாளும் பண்ணன் வாழிய'[190] எனப் போற்றுமாற்றல் பேரரசர்கள் பெருமக்களையும் புகழ்ந்து போற்றி வாழ்த்தியதைக் காண்கிறோம். மாற்றூர் கிழார் மகனார் கொற்றங்கொற்றனார் என்னும் புலவர் பண்ணனைச் சிறப்பிக்குங்கால் பண்ணனுடைய தோட்டம் நல்ல இலைகளையும் புல்லிய சினைகளையும் உடைய நெல்லி

---

181. நற்.367:1-6. 182. புறம்.189:7. 183. அகம்.54:14.
184. புறம்.70:13;173:1;181:6;388:4;10. 185. அகம்.177:16.
186. புறம்.388:3-4. 187. அகம்.54:13-14 188. புறம்.70:13.
189. அகம்.177:13-16. 190. புறம்.173:1.

மரங்களை உடையது என்றும், அம்மரத்தின் பசுமையான காய்கள் பிறரால் பறித்துத் தின்னப் பெறுவன என்றும் பாராட்டுகின்றார்.[191] 'வல்லார் கிழான் பண்ணன்' என்ற ஒரு சிற்றரசன் புறநானூற்றின் 181ஆம் பாடலில் குறிக்கப்பட்டுள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

<u>வாணன்</u>

இவன் ஒரு பாடலொன்றில் குறிக்கப்பட்டுள்ளான்.[192] வள்ளல் பெருமகன், அருமன், பல்லவன் உவியாரிடம் ஊரிலைப்போல வாளுடைய வரும் 'சிறுகுடி' என்னும் பெயரிய ஊர், 'வாணன் சிறுகுடி'[193] எனப் பல பாடல் தொடர்களால் தெரியவருகிறது. சிறுகுடி, படப்பைச் சோலையைத் தழுவிய பூப்படுக்கைகளைக் கொண்டதாயும் நெல்லினையும் புதிய வளங்களை உடைய வயல்களைக் கொண்டதாயும் விளங்குவதை அகநானூறு புலப்படுத்துகின்றது.[194]

'வாணன் நாட்டு உழவர் நெற்பயிர்களை அரியும் காலத்து முழங்கு தண்ணுமையின் ஒலியானது பன்மலர் உடைய பொய்கையிடத்தே தங்கும் பறவைகளை ஓட்டும்'; என்றும், ஊரிடத்தே, நெற்பயிர் செறிந்த வயல்களையும் தழைத்த சோலைகளையும் உடையவன் என்றும் மதுரைக்காமக்கணி நப்பாலத்தனார் கூறுவதை,

> 'வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை
> பன்மலர்ப் பொய்கைப் படுபுள் ஓப்பும்
> காய்நெல் படப்பை வாணன் சிறுகுடி'[195]

என வரும் அடிகளில் தெற்றெனக் காண்கிறோம். மேலும், சிறுகுடி பொய்கையால் பொலியாத வளங்களை உடையது என்பது, 'பொய்கை சூழ்ந்த பொய்யா யாணர், வாணன் சிறுகுடி'[196] என வரும் அடிகளால் தெரிகின்றது.

<u>வேளாப் பார்ப்பான்</u>

இவன் ஒரு பாடலொன்றில் குறிக்கப்பட்டுள்ளான்.[197] வேளாப் பார்ப்பான் என்போர், பார்ப்பனர் இனத்தில் ஒரு சாரார் ஆவர். திரு.வே. இராசகோபால ஐயங்கார் அவர்கள், இப்பார்ப்பனனை 'யாகம் பண்ணாத பார்ப்பான்' எனக்

---

191. அகம்.84:13-15.
192. அகம்.204:12.
193. அகம்.117:10;204:12;269:22;நற்.340:9.
194. அகம்.269:21-23.
195. அகம்.204:10-12.
196. அகம்.117:17-18.
197. அகம்.24:1.

கூறுவர்.[198] இவ்வேளாப் பார்ப்பனர்கள் கூர்மையான அரத்தினால் சங்குகளை அறுத்து வளையல் முதலானவற்றைச் செய்யும் கலைத்தொழிலினர் என்பதை அவர் உரைக்கிறார், 'வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த வளை'[199] எனக் கூறுமாற்றல் அறிகிறோம்.

அழும்பில்

அழும்பில் என்னும் ஊர், மூன்று பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது.[200] மதுரைக்காஞ்சி, புறநானூறு, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களிலும் குறிக்கப்பட்டுள்ளதை அறிகிறோம்.[201] பத்துக்கும் மேற்பட்ட சாசனங்களில் அழும்பில் கூறப்பட்டுள்ளது என்பர் பேராசிரியர் மு. இராகவையங்கார்.[202] அழும்பில், வேளிர் மரபைச் சார்ந்த குறுநில மன்னர்களால் ஆளப்பட்ட மிக்க தொன்மைச் சிறப்புடையது. அழும்பில் மாவிறல்வேள் என்னும் குறுநில மன்னரால் ஆளப்பட்டமையை மதுரைக்காஞ்சி 'மாவிறல்வேள் அழும்பில்'[203] எனக் கூறுகிறது. திரு பொ.வே. சோமசுந்தரனார் அகநானூற்றுப் பாடலில் வரும் அழும்பில் 'பாண்டி நாட்டின் கண் உள்ள ஓர் ஊர்'[204] என்றும் இக்காலத்தில் 'அம்புக்கோயில்' என வழங்கப்படுகின்றது என்றும் கூறுவர். இவ்வூர் சோழ பாண்டிய நாடுகளுக்கு இடையே அந்நாடுகளைப் பிரிக்க அமைந்தது என்பர் பேராசிரியர் மு. இராகவையங்கார்.[205] 'அழும்பி லன்ன நாடிழந் தனரும்'[206], 'பெரும்பூட் சென்னி அழும்பில்'[207] எனவரும் அடிகளால் பாண்டியர், சேரர், சோழர் ஆகிய மூவேந்தர்க்கும் ஏற்பட்ட போர்களின் விளைவால் இவ்வூர் மாறிமாறி உரிமையுடைத்தாயிற்று எனக் கருதலாம். மேலும், டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் 'இப்பெயருள்ள ஊர் சோழ நாட்டிலொன்றும் சேர நாட்டிலொன்றும் உள்ளனபோல் தெரிகிறது' எனக் கூறுவது ஈண்டு அறிதற்குரியது.[208]

அழும்பில் என்னும் இவ்வூர்ப் பெயரால் சேரன் செங்குட்டுவனின் அமைச்சன் 'அழும்பில் வேள்'[209] எனப் பெயர் பெறுவதை அறிகிறோம். அழும்பில் என்னும் ஊரைப் போல நீங்காத புதிய வளமையினை உடையது படைவாயில். இதனை, 'அழும்பி லன்ன வளமு வாயில், தட்டு வாயில்'[210] என வரும் அடிகளால் அறிகிறோம்.

---

198. அகநானூறு (களிற்றியானை நிரை), வே. இராசகோபாலையங்கார் பதிப்பு, பக்.41.
199. அகம்.24:1-2.
200. அகம்.44:15.
201. மதுரைக்.345; புறம்.283:5; சிலப்பு.25:117; 28:205.
202. இராகவையங்கார் மு., இலக்கிய சாசன வழக்காறுகள், பக்.45.
203. மதுரைக்.344-345.
204. அகம்.44:15; பக்.170.
205. இராகவையங்கார் மு. இலக்கிய சாசன வழக்காறுகள், பக்.45.
206. மதுரைக்.345.
207. அகம்.44:14-15.
208. [illegible] சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக்.458

கழுமலம்

இது ஒரு பாட்டினால் குறிக்கப்படுகிறது.[211] இது சேர நாட்டின்கண் உள்ள ஓர் ஊராகும். கிரேக்க அறிஞர் தாலமியால் இவ்வூர் கர்மாரம் (Karmara) எனக் குறிக்கப்பட்டுள்ளது.[212] புலவர் சாத்தனார் 'நற்றேர்க் குட்டுவன் கழுமலம்'[213] எனக் குறிப்பிடுவதால் கழுமலம் சேர மன்னன் செங்குட்டுவனுக்கு உரியதாய் இருந்ததைக் காட்டுகிறது. சோழ மன்னர் வரலாற்றில் கழுமலம் மிகச் சிறந்த இடத்தைப் பெற்று விளங்கியது என்பதைக் குடவாயிற்கீரத்தனார் பெரும்பூட்சென்னியைக் 'கழுமலம் தந்த ... சென்னி'[214] எனப் போற்றுவதாலும், பொய்கையார் செங்கணானைக் 'காவிரி நாடன் கழுமலம்'[215] எனப் போற்றுவதாலும் அறிகிறோம்.

சேரரின் இக்கழுமல நாட்டிலே சோழ மன்னன், பெரும்பூட்சென்னி, கணையன் என்னும் சேரர் படைத் தலைவன் முதலாக அனைவரை வென்று கொண்டான் என்பதை முன்னமே பெரும்பூட்சென்னி என்னும் தலைப்பில் குறிப்பிட்டுள்ளோம். திரு மு. இராகவையங்கார் அவர்கள் இக்கழுமலம் பற்றி ஆராய்ந்ததால், இக்கழுமலம் சீகாழி அன்று என்றும் திருக்கோவலூர் நாட்டைச் சார்ந்த கழுமலம் அன்று உடையார்பாளையத் தாலுக்கா தென்மலியான கழுமலம் என்னும் ஊரே இதுவாக இருக்கலாம்[216] எனக் கூறுவது ஈண்டு அறியத்தக்கது.

குடவாயில்

இது ஒரு பாட்டினால் குறிக்கப்படுகிறது.[217] சோழ நாட்டின்கண் அமைந்த ஓர் ஊர். 'குடவாயில்' என்னும் ஊர் குடந்தை (கும்பகோணம்) என மறைமலை என்ற 'கலைக்களஞ்சியம்' கூறுகிறது.[218] குடவாயில் ஊரைப் பற்றிப் புலவர், குடவாயிற்கீரத்தனார் என்ற பெயர் பெறுவதைக் காண்கிறோம். இக்குடவாயிற் கோட்டச் சிறையில் சோழன் செங்கணான் சேரமான் கணைக்காலிரும்பொறையை வைத்திருந்தான் என்பது, புறநானூற்றின் 74ஆம் பாடலால் தெரிகிறது.

புலவர் குடவாயிற்கீரத்தனார் போற்றும் நல்குடவாயில் நீங்காத புது வருவாயினையும், மிகப் பழைய நெல்லினையும், பல குடங்களையும் உடைய நியம் பரப்பினையும், யானைகள் நீராடத்தகுந்த குளங்களையும், செறிந்த பசுமையான காவற்காட்டையும் உடையது என்பதனை,

---

211. அகம்.44:13.
212. Scoff, W.H., The Periplus of the Erythralan Sea, see.91, p.134.
213. அகம்.270:9. 214. அகம்.44:13-14. 215. களவழி 36:
216. இராகவையங்கார்.மு., இலக்கிய சாசன வழக்காறுகள், பக்.31-32.
217. அகம்.44:18. 218. கலைக்களஞ்சியம், பகுதி மூன்று பக்.748.

'... ... அசை யானைப்
பழம்பல் லெவ்வில் பல்குப் பரவைப்
பொங்கடி படிய மல்லல் பலவிளைத்
தண்டலை யாம்'...[219]

என வரும் அகநானூற்றுப் பாடற்பகுதியால் அறியலாம். திருஞானசம்பந்தர் 'பவர் பொருந்தும் வயல் ... படையாய்' என்க் குறிப்பிடுவது நமக்கு அறியத்தக்கது.[220]

நெருநெல்

இச் சொல் ஐம்பாடலொன்றில் பயிலப்பட்டுள்ளது.[221] நெருநெல் சோறுடைய ... தந்த நீர் வாரும் என்பர்.[222] நெருநெல் என்பது என்று ... நெல்லைக்கொண்டு பெரும்பிக்காய் உள்ளது ... நெல்லும் நெருநெல் என்பது ... போல் அமையலேஷ்டும் என்பது உணர்த்தப்பெறும். ... நெருநெல் ... பாடிய "... ... " ... ... பூம்பாடல் ... 'பூம்மெல் பலவையானர்' என அகநானூற்றுப் பாடல் தொடர் கொண்டு டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் தம் கட்டுரையில் பயில்கின்றார்.[223]

... ... நெருநெல் ... போன்ற ... பொருத்து ... ... தவிர் ... என்பது,

'நெருநெல் ... நெல்லொடு ...
... நெருநெர் பயில'[224]

என வரும் பாடற்பகுதியால் அறியலாம். இவ்வாறே, 'தடைத் தன்ன அமைந்த நெல'[225] 'குடநெல் நெல'[226] 'நெருநெல'[227] என வரும் அகச் சொல் அமைதியை அறியும் காட்டுரை அறியலாம். 'Loan-words have been called the milestones of Philology because in a great many instances they permit us to fix approximately the date of linguistic changes'

என்ற ஜெஸ்பர்சனின் மொழியியல் கொள்கை வரலாற்றுக் குறிப்புகளுக்கும் பொருந்தும் என்பது கருதத் தக்கது.[228]

219. அகம்.44:15-18. 220. சம்ப.தேவா.திரு.2.
221. நற்.161:5.
222. நாராயணசாமி ஐயர் அ. நற்றிணை நானூறு மூலமும் உரையும், பக்.220.
223. மாணிக்கம் டாக்டர் வ.சுப., புதிய நோக்குப் பெயர்கள், ... தமிழாசிரியர் மன்றம், ..., 1972, பக்.160
224. நற்.161:5:6.
225. நெடுநல்.30; மதுரைக்.389; நற்.300:3. 226. அகம்.336:5.
227. பெரும்பாண்.397; புறம்.239:14.
228. Otto Jespersen, Growth and structure of the English language, p.29.

*முல்லைத்திணைப் புலவர்கள்

மேலைநாட்டு முல்லைப்பாடல்கள்

முல்லைப்பாடல்களை மேலைநாட்டார் 'Pastoral' என்று வழங்குவர். நாட்டுப்புறம் எனப்படும் ஊர் கிராமிய வாழ்வைச் சித்திரிப்பதை (rural life) முல்லைப்பாடல் என்பர். முல்லைப்பாடல்களைப் பாடிய மேலைநாட்டுத் தியோகிரிட்டஸ், வெர்ஜில், ஸ்பென்சர், போப் ஆகியோர் தொன்மைச் சிறப்புடையவர். கிரேக்க நாட்டில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த தியோகிரிட்டஸ், 'கிரேக்க முல்லைப் பாடல்களின் தந்தை' எனப் போற்றப்படுகிறார். இவருடைய பாடல்கள் Idylls of Theocritus என்ற பெயர் பெறும். இவருடைய பாடல்களில் புல் வெளிகள், ஆயர்கள், செடி கொடி மரங்கள், ஆடுகள், இயற்கைக்காட்சி முதலியவை பாடு பொருளாக அமையும். வெர்ஜிலின் பத்துப் முல்லைப்பாடல்கள் Eclogues of Virgil என்று வழங்கப்படும். இவருடைய பாடல்கள் தியோகிரிட்டஸின் பாடல்களைப் போலவே அமையும் எனலாம்.

ஸ்பென்சர், ஆங்கில முல்லைப்பாடல்களைப் பாடியவருள் குறிப்பிடத்தக்கவர். இவருடைய 'The shepherds calender' என்னும் பாடல் குறிப்பிடத்தக்கது.

மற்றொரு புலவராகிய போப்பும் பாடிய முல்லைப்பாடல்கள் 'Pastorals of Pope' என்னும் பெயர் பெறும்.

இவ்வாறு தியோகிரிட்டஸால் தோற்றுவிக்கப்பட்ட முல்லைப்பாடல் இன்று மேலைநாட்டில் நிலையாக விளங்கக் காண்கிறோம்.

வடமொழியில் காளிதாசரின் மேகதூதம், ருது சம்ஹாரம் என்பவற்றிலும் 'காதாசப்தசதி' எனும் காதற்களஞ்சியத்திலும் கார் கால வருணனை, ஆற்றியிருக்கும் தலைவி நிலை ஆகியவை நன்கு சித்திரிக்கப்படுவதைக் காண்கிறோம்.

முல்லைத்திணைப் புலவர்கள்

முல்லைத்திணைப் புலவர்களின் மொத்த எண்ணிக்கை 77. அவர்கள் பாடிய பாடல்களின் மொத்தத்தொகை 237. இவற்றுள் ஆசிரியர் பெயர் காணாப்பாடல்கள் 6. பிற திணையைப் பாடாது, முல்லைத்திணையை மட்டும் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 32; பாடிய பாடல்களின் எண்ணிக்கை 52. இவர்கள் ஒரே பாடலாற்சிறப்புறும்

* முல்லைத்திணைப் புலவர்களின் முழு விவரம் பின்னிணைப்பு 10 பக் XXVIII-ல் தரப்பட்டுள்ளது.

புலவர்களின் எண்ணிக்கை 28. டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள்; அனியர் காலப் பாடல்கள் பலவற்றுக்கும் அவ்வாசிரியர்தம் தொடர் நயம் கொண்டே பெயரிட்டுள்ளார்.[1] அவை 'தடங்கடல் வாலியார்' (நற்.115), 'பும்மெல் பறவையார்' (நற்.161), 'நெருங்கவர்ப் பல்லியார்' (நற்.169), 'சிறைக் கிளையார்' (நற்.181), 'பொம்மலோதியார்' (குறு.101), 'சிறுபுல் மாலையார்' (குறு.114) என்பன. மேலும் கற்றும் வெள்ளைத்தார், காக்கை பாடினியார், பதுமலையார், வில்லக விரலினார் விழிக்கட்பேதை என்றும் புலவர்களுள்ளிட்டும் பாடல் தொடர் நயத்தால் பெயர் பெற்றவர்கள் என்பது ஈண்டு அறிதற்குரியது.

முல்லைத்திணைப் புலவர்களுள் பெண்பாற்புலவர்களாக ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், காக்கை பாடினியார், நப்பசலையார் ஆகிய நால்வர் இடம் பெறுகின்றனர். பொன் மணியார் என்ற புலவர் பெண்பாற்புலவராகவும்[2] ஆண்பாற் புலவராகவும்[3] குறிக்கப்பட்டுள்ளார் என்பது ஈண்டு அறிதற்குரியது.

முல்லைப் புலவர்களுள் ஆர்க்காட்டுக் கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார் (ஆர்க்காடு), ஆவூர் மூலங்கிழார் (ஆவூர்), இடைக்காடனார் (இடைக்காடு), இளம் புல்லூர்க்காவிதி (புல்லூர்), உம்பற் காட்டு இளங்கண்ணனார் (உம்பற்காடு), ஆகியோர் ஊர்களைச் சார்ந்த புலவர்களாய் விளங்குகின்றனர்.

இளங்கண்ணனார், கரட்கண்ணனார், கோவர்த்தனார், தாயங்கண்ணனார், பெருங் கண்ணனார் ஆகியோர் இயற் பெயர்களைப் பெற்றுள்ளனர்.

ஒக்கூர் மாசாத்தனார், ஒக்கூர் மாசாத்தியார், கழம்பிள்ளைப் பூதனார், கோவர்த்தனார், சித்தலைச் சாத்தனார், நல்லுருத்திரனார், பேயனார் ஆகியோர் தெய்வப் பெயர்களைக் கொண்டுள்ளனர்.

<u>முல்லைச் சிறப்புடைப் புலவர்</u>

இனி, முல்லைத்திணைப் புலவர்களுள் 1. பேயனார் (103), 2. நல்லுருத்திரனார் (17); 3. இடைக்காடனார் (8); 4. மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் (?

---

1. மாணிக்கம், டாக்டர் வ.சுப., புதிய சிறப்புப் பெயர்கள், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், நான்காவது கருத்தரங்கு மலர், 1972, பக்.165-166.
2. குறுந்தொகை, டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக்.137.
3. சக்திவேல், டாக்டர் சு., சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், பக்.57-58.

5. ஒக்கூர் மாசாத்தியார் (6); 6. ஔவையார் (5); 7. மருதனிள நாகனார் (5); 8. நப்பூதனார் (முல்லைப்பாட்டு) 9. நக்கீரனார் (நெடுநல்வாடை) ஆகிய ஒன்பதின்மர் தம் பாடல்களின் சிறப்பியல்புகளைக் காண்போம்:

பேயனார்

முல்லை பாடியோருள் முதல்வர்

பேயனார் அகப் பொருள் மட்டும் பாடிய புலவர். முல்லைத்திணையைப் பாடிய புலவர்களுள் முதலிடம் பெறுபவர் இவரே. இவர் பாடிய பாடல்களின் மொத்த எண்ணிக்கை 105.[4] இவற்றுள் 103 பாடல்கள் முல்லைத்திணைக்குரியவை என்பது குறிப்பிடத் தக்கது. அகப்பொருள் மட்டும் பாடிய புலவர்களின் பாடல்கள் பெறும் மொத்த எண்ணிக்கையுள் பேயனார்தம் பாடல்கள் இரண்டாமிடம் பெறுவதும் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

கூற்றுத் தொகுப்புகள்

பேயனார் பாடிய 103 முல்லைத்திணைப்பாடல்களில் அமையும் மாந்தர்தம் கூற்றுகளுள் தலைவன் கூற்றே முதலிடம் பெறுகிறது. அவை வருமாறு. தலைவன் கூற்றுகளின் மொத்த எண்ணிக்கை 48. அவற்றுள் தேர்ப்பாகனுக்குக் கூறுபவை 15.[5] தலைவிக்குக் கூறுபவை 19.[6] பாசறைக்கண் இருந்து சொல்பவை 9.[7] பாணனுக்குக் கூறுபவை 3.[8] தூதர் வார்த்தை கேட்டு இரங்குவது 1.[9] புறவு நோக்கிச் சொல்வது 1.[10] மேற்கூறியவற்றுள் தலைவன் தோழிக்குக் கூறும் கூற்று இடம் பெறாமை அறியத்தக்கது.

தலைவனுக்கு அடுத்த மிகுதியான கூற்றுகளை முறையே தோழி 29 கூற்றுகளையும்[11] தலைவி 14 கூற்றுகளையும்[12] செவிலி 10 கூற்றுகளையும்[13] பாணன் ஒன்றும்[14] காதல் உணர்ந்தோர் ஒன்றும்[15] பெறுகின்றனர்.

---

4. குறு.233;339;359;400. ஐங்.401-500; அகம்.234. இவற்றுள் குறுந்தொகையில் 339,359ஆம் பாடல்கள் முறையே குறிஞ்சித்திணைக்கும், மருதத்திணைக்கும் உரியதாகும்.
5. குறு.233;400; ஐங்.422;425;481-490;அகம்.234.
6. ஐங்.411-419;426-430;491-495.
7. ஐங்.442-450.
8. ஐங்.477-479.
9. ஐங்.441.
10. ஐங்.420.
11. ஐங்.423;424,431-440; 461-472;496-500,
12. ஐங்.451-460;473-476.
13. ஐங்.401-410.
14. ஐங்.480.
15. ஐங்.421.

இனி இவற்றில் கூற்று வகைகளைக் காண்போம்: தோழியின் 29 கூற்றுகளில் தலைவிக்குக் கூறியவை 24.[16] தலைவனுக்குக் கூறியவை 3.[17] பாணனுக்குக் கூறியவை 2.[18] தலைவியின் 14 கூற்றுகளில் தோழிக்குக் கூறியவை 7.[19] தன்மொழியாகக் கூறியவை 4.[20] பாணனுக்குக் கூறியவை 3.[21] தலைவி கூற்றில் தலைவனுக்குக் கூறும் கூற்று இடம் பெறாமை நினைவுகூர்தற்குரியது. செவிலியின் 10 கூற்றுகளில் நற்றாய்க்குக் கூறியவை 9.[22] தன்னுள் உவந்து கூறியது 1.[23] பாணன் கூற்றில் பாணன் தலைவனுக்குக் கூறியது 1.[24] காதல் உணர்ந்தோர் கூற்றில் காதல் உணர்ந்தோர் தலைவனைச் சொல்லியது 1.[25]

ஐங்குறுநூற்றில் முல்லை

ஐங்குறுநூற்றில் ஒரு பகுதியாகிய இவற்றும் 100 பாடல்கள் முல்லைத்திணையின் முதல், கரு, உரிப்பொருள்களை அழகுபடக் கூறுகின்றன. முல்லை நிலத்தினைக் குறிக்க முல்லை என்ற சொல்லை மேற்கொள்ளாது, புறவு என்ற சொல்லை இவர் 19 இடங்களில் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மாறாக, முல்லை என்ற சொல்லினை இவ்வாசிரியர் 13 இடங்களில் பூ (11) பண் (2) முதலியவற்றினைக் குறிக்கவே பயன் படுத்தியுள்ளார் என்பது ஈண்டு அறிதற்குரியது. முல்லைத்திணையின் பல்வேறு சிறப்புகள் பப்பத்துப் பாடல்களாகப் பத்துப் பிரிவுகளில் பேசப்படுகின்றன. அவை வருமாறு: செவிலி கூற்றுப்பத்து, கிழவன் பருவம் பாராட்டுப் பத்து, விரவுப்பத்து, புறவணிப்பத்து, பாசறைப்பத்து, பருவங்கண்டு கிழத்தியுரைத்த பத்து, தோழி வற்புறுத்த பத்து, பாணன் பத்து, தேர் வியங்கொண்ட பத்து, வரவுச் சிறப்புரைத்த பத்து. இப்பத்துப் பகுதிகள் முறையே தலைவன் தலைவி இல்லறச் சிறப்பு, கார் கால வருணனை, முதல் கரு உரிப் பொருட்சிறப்பு, முல்லைநில வருணனை, தலைவன் பாசறைப்புலம்பல், தலைவியின் கார் காலத் துயரம், தலைவியை ஆற்றுவித்தல், தலைவன் தலைவியால் ஊடல், தலைவன் தேரின் மீள், தலைவன் வரவைச் சிறப்பித்தல் முதலியவற்றினைப் புலப்படுத்தும். அவை

16. ஐங்.431-440, 461-470, 496-499.
17. ஐங்.423, 424, 500.
18. ஐங்.471,472.
19. ஐங்.453-457,459,475.
20. ஐங்.451,452,458,460.
21. ஐங்.473,474,476.
22. ஐங்.401-409.
23. ஐங்.410.
24. ஐங்.480.
25. ஐங்.421.

வெளிப்பட்ட பின்பு வரையாது சென்று வினை முற்றி மீளும் தலைவனையும்[26] மீண்ட பிறகு தலைவியுடன் உரையாடி மகிழும் தலைவனையும்[27] பேயனாரின் பாடல்களில் மட்டுமே காண்கிறோம்.

இனி, பேயனார்தம் பாடல்களின் சிறப்புகளைக் காண்போம்:

கார்_காலக்_காட்சி

நீரின்றி வறந்த உலகம் செழிக்க, மேகம் மழையைப் பெய்யும் கார் காலத்தைத் தொடங்கும். இதனைப் பேயனார்,

'வறந்த ஞாலந் தெளிர்ப்ப வீசிக்
கறங்குர லெழிலி கார்செய் தன்றே'[28]

என அழகுற அடிகளில் புலப்படுத்தியுள்ளார். 'வையகம் பனிப்ப... புதுப்பெயல் பொழிந்தென' என்ற நக்கீரர் வாக்கு, ஈண்டு ஒப்பு நோக்குதற்குரியது.[29]

கார்காலத் தொடக்கத்தைச் சிறப்பிக்கும் பாடல்கள் பல உள.[30]

மலர்க்_காட்சிகள்

'ஓவியம், பேசாக்கவிதை; கவிதையோ, பேசும் ஓவியம்'[31] என்ற கிரேக்க நாட்டுப் பழமொழிக்கேற்பப் பேயனார் தம் பாடல்களின் வாயிலாகப் பல பேசும் ஓவியக் காட்சிகளில் மலர்க்காட்சிகள் குறிப்பிடத்தக்கவை.

மகளிர்க்கு மலர் மங்கலப் பொருள்; நல்லழகுப் பொருள். இதனை உணர்த்த 'வாணுதலரிவை முல்லை மலைய'[32] என்ற பேயனார் பாடலடியில் முதற்கண் குறிப்பாக முல்லை மலரைப் பாடியிருப்பது ஈண்டு அறிதற்கும் போற்றுதற்கும் உரியது. பேயனார் பாடல்களில் 45 இடங்களில் மலர்கள் பேசப்பட்டுள்ளன. அவற்றுள் 12 இடங்களைப் பெறும் முல்லைமலர் முதல் இடத்தைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. பிற மலர்கள் பெறும் இடங்கள் வருமாறு: கொன்றை 11, தளவம் 6, பிடவம் 4, காந்தள் 2, குருந்து 2, தோன்றி 2, பீரம் 2, நெய்தல் 2, தாமரை 1, கருவிளை 1.

தலைவன் சென்ற வழியைத் தலைவிக்குக் கூறும் தோழி, 'நன்றே காதலர் சென்ற வாறே'[33] என்னும் அடி புறவணிப்பத்தைப் பகுதியின் முதல் அடியாகப் பெற்ற முறை

---

26. குறுந். 233. 27. ஐங். 411-420. 28. ஐங். 452:1-2.
29. நெடுநல். 1-2.
30. ஐங். 411:2; 413:3; 417:1; 453:3; 468:2; 403:3; 465:2; 499:2; 433:3.
31. Abercrombie, L., Principles of Literary Criticism, p.151.
32. ஐங். 408:2. 33. ஐங். 431:1.

வானிலும் நிலன் பெறுவதற்கும் முதல், கடும் பொழுதில் குறிப்பாக மலர்களின் அழகு மீண்டும் மீண்டும் மனம் பரப்புவதைக் காண்கிறோம்.[34] புறவுப் பத்துப் பாடல்களில் எல்லாப் பாடல்கள் பல மலர்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் கொன்றை மலர் முதலிடம் பெறுகிறது.

பேயனார் பாடிய 103 பாடல்களில் மலர்க்காட்சிப் பாடலாய் ஒன்று அமைவதால், அப்பெயர்பெற அமைந்தது 412ஆம் பாடலைக் காணலாம். 6 மலர்கள் அப்பாடலில் குறிக்கப்பட்டுள்ளமை அறியற்குரியது. அன்றியும், பிறவற்றுள்ளும் மலர்களால் அடுக்கிக் கூறும் அழகு பேயனார்க்கே உரித்து எனலாம். இவை, 'முல்லை யொடு தளவம்'[35] 'கொன்றையும் பிடவமும்'[36], 'கொன்றையொடு மலர்ந்த குருந்தம்'[37], 'தோன்றியும் தளவமும்'[38], 'தளவின் பைங்கொடி தழீஇ...முல்லை'[39] எனக் கூறுமாற்றான் புலனாகும்.

<u>உவமை நலம்</u>

மலர்களோடு அமைந்துள்ள உவமை நயம் பேயனார்க்கே உரியது எனலாம். இவர் ஏறத்தாழ 42 இடங்களில் உவமை நயத்தைக் குறித்துள்ளார் எனலாம். 'பொன்னென...கொன்றை'[40] 'மணியென...காயா'[41] 'நாமவுருவின...புறவின்'[42], 'கண்ணெனக் கருவிளை'[43], 'பொன்னென...பீரம்'[44], 'மதியுருவின் பகன்றை'[45], 'நிலவின் அன்ன ... முல்லை'[46], என வருவன உவமைச்சிறப்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாக விளங்குவனவாகும். பேயனார் வளமையுறவில் தம்மை மறந்த இன்பம் காண்பவர் என்பது கலைக்கிறங்குதலில் கொன்றை மலர்கள் பரவிக் கிடக்கும் காட்சியை, 'செல்வர் தாம் பொன் வைத்திட்டு வைக்கும் பேழையைத் திறந்தாற்போல உளது', எனக் கூறுமாற்றான் அறிகிறோம். இவ்விடத்தே,

> 'கலை கெண்டிய அகல்வாய்ச் சிறுகுழி
> கொன்றை யொள்வீ தாஅய்ச் செல்வர்
> பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன'[47]

என வரும் அடிகளில் காண்கிறோம்.

---

34. ஐங்.431-440.
35. ஐங்.422:2.
36. ஐங்.435:3.
37. ஐங்.430:3.
38. ஐங்.440:3.
39. ஐங்.454:1-3.
40. ஐங்.420:1-2.
41. ஐங்.420:1-2.
42. ஐங்.424:3-4.
43. ஐங்.464:1.
44. ஐங்.464:1-2.
45. ஐங்.456:2.
46. ஐங்.454:2-3.
47. குறு.233:1-3.

இயற்கை எழில்

'பழமையிலிருந்து விடுபடுவது ஒரு பாட்டிற்குக் காப்பாகாது. பழமையே எப்பொழுதும் புதுமையாய் விளங்குவது'[48] எனக் கூறுவர் ஜான் லிவிங்ஸ்டன் லோவிஸ் என்பவர். இக்கருத்தினை அடிப்படையாக்கிப் பார்க்கும்போது பேயனார் தம் படைப்புகளில் செம்மையாகக் கையாண்டுள்ளார் என்பது சாலவும் பொருந்தும். கார் காலத்தே, மயில் தன் நீல நிறத் தோகையை விரித்தாடும் காட்சியும்[49] அகவும் காட்சியும்,[50] ஆண்மானோடு புணர்ந்த பெண் மான் துள்ளித் திரியும் காட்சியும்,[51] கோவலர் குருந்தத்தை வீசக் காற்றும் முல்லைப் புதரிடத்தே ஒரு மரையும் காட்சியும்[52] என்றும் நெஞ்சை விட்டு அகலாப் பழமையும் புதுமையும் கலந்த படைப்புகளாகும்.

தலைவரின் இன்பக் காட்சி

பேயனார் தலைவரின் இன்பக் கிடக்கையில் ஒரு புதிய கோணத்தையும் மரபையும் உண்டாக்கியுள்ளமையைச் செவ்வி கூறும் சுற்றில் தெரியலாம். மான் பிணை மறிக்கிடையே படுத்திருந்த நிலைமை போலத் தலைவன் தலைவியிடையே புதல்வன் இருந்த கிடக்கை இன்பம் தருவது எனக் கூறலும் புதல்வனை அணைத்துக் கிடந்த தாயின் புறத்தைத் தழுவி அவள் கணவன் விருப்பத்துடன் இருந்த கிடக்கை இன்பம் தருவது எனக் கூறலும் ஈண்டு நினைத்தற்குரியனவாகும். இத்தகு காட்சிகளை,

'மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வன் நடுவண னாக நன்றும்
இனிது மன்றவர் கிடக்கை'[53]

'புதல்வற் கவைஇய தாய்புறம் முயங்கி
நசையினன் வதிந்த கிடக்கை..

'இனிதால் அம்ம பண்புமா ருடைத்தே'[54]

என வரும் பாடல்கள் தெளிவுபடுத்தும்.

---

40. John Livingston Lowes, Convention and Revolt in Poetry, p.86.
49. ஐங்.431:3.
50. ஐங்.413:2.
51. அகம்.234:10-11.
52. ஐங்.421:1-2.
53. ஐங்.401:1-3.
54. ஐங்.402:1-4.

இயற்கை உவமை நயம்

கற்புடைய மகளிர்க்கு அருந்ததியை உவமையாகக் கூறுவது நூல்களில் காணும் மரபுச்செய்தியாகும். சான்றாகப் புறநானூறு, 'வடமீன் புரையுங் கற்பின் மடமொழி'[55] எனக் கூறும். பேயனும் ... 'விசும்பு உயர்நிலை உலகத்து அருந்ததி அனைய கற்பின்'[56] எனக் குறிப்பிட்டதும் நினைவிற் கொள்ளத் தக்கதாகும்.

ஆற்றியிருக்கும் தலைவியின் அருமை

ஆற்றியிருக்கும் தலைவியின் அன்பு நிலையை, கொன்றைப்பூப் போன்ற பசலை பாய்ந்த கண்ணாலும் தலைவன் வருகையால் அக்கண்கள் பெற்ற இன்ப நிலையை குவளை மலர்போன்ற கண்ணாலும் கவிஞர் அழகும் குறிப்பாக ஐங்குறுநூற்றின் இறுதிப் பாடலாகிய 500ஆம் பாடலில் கவிஞர் தலைவியின் ஆற்றியிருக்கும் பண்பை முல்லைத்திணைத் திறவுகோல் எனப் பேயனார் முத்திரையிட்டுக் காட்டுவதைக் காண்கிறோம். இதனை,

> 'கொன்றைப் பூவிற் பசந்த உண்கண்
> குன்றக நெடுஞ்சுனைக் குவளை போலத்
> தொல்கவின் பெற்றன இவட்கே...'[57]

என வரும் அடிகள் சிறக்கின்றன. மேலும், 'புலம்பொடு... எழுநிலை மாடத்து... ஓர்ப்பனள் கிடந்தோள், 'அஞ்செவி நிறைய ஆலின ... நெடுந்தேர் பூண்ட மாவே'[58] என வரும் முல்லைப்பாட்டடிகள் நன்கு அறிவுறுத்துகின்றன.

இயற்கை இன்பத்தை அனுபவித்த 'கீட்ஸ்' என்னும் புலவரைப் பற்றிக் கூறும் ஹட்சன், கீட்ஸ், வொர்ட்ஸ் வொர்த், ஷெல்லி போன்ற புலவர்களைப் போல இயற்கையை நேசிக்கவில்லையாயினும் கீட்ஸ் அவ்வியற்கையில் பெற்ற உயர்ந்த இடத்தை அப்புலவர்கள் பெறவில்லை என்பதை 'No English Poets takes a higher place than keats'[59] என்று குறிப்பிடுவர். இக்கூற்று முல்லைத்திணைப் புலவர்களுள் பேயனுக்கு மிகப் பொருத்தமுடைத்து எனலாம்.

---

55. புறம்.122:8.
56. ஐங்.442:3-4.
57. ஐங்.500:1-3.
58. முல்லை.81-103.
59. Hudson, W.H., An Introduction to the study of literature, p.322.

3. நல்லுருத்திரனார்

முல்லைத்திணை மட்டும் பாடியவருள் ஒருவர்

நல்லுருத்திரனார் முல்லைத்திணை மட்டும் பாடிய புலவராவர்; கலித்தொகையில் முல்லைக்கலியைப் பாடியவர். பாடிய பாடல்களின் எண்ணிக்கை 17.[60] அவை வருமாறு. தலைவன் தலைவி கூற்றுகள் 6.[61] தலைவி தோழி கூற்றுகள் 4.[62] சுற்றத்தார் கூற்றுகள் 2.[63] தலைவன் கூற்று 1.[64] தலைவி கூற்று 2.[65] தோழி கூற்று 2.[66] தலைவன் தலைவி, தலைவி தோழி ஆகியோர் கூற்றுகள் ஒரே பாடலில் கலந்துவரல், சுற்றத்தார் கூற்று ஆகியவை முல்லைக்கலியில் மட்டுமே காணப்படுகின்றன. பேயனார் பிற திணைகளோடு மிகுதியான முல்லைத்திணைப் பாடல்களைப்பாடிய புலவர்களுள் முதலிடம் பெற்று விளங்குதல்போல நல்லுருத்திரனார் முல்லைத்திணைப்பாடல்களை மட்டும் பாடிய புலவர்களுள் முதலிடம் பெற்றுத் திகழ்பவர். இந்நல்லுருத்திரனார் பெயர் பற்றி வேறுபட்ட கருத்துகளும் உண்டு.[67] முல்லைக்கலியில் முல்லை என்ற சொல்லாட்சியை ஒற்றை எண் பெறும் பாடல்களில் மிகுதியாகக் குறிப்பிட்டுள்ளமை அறிதற்குரியது.[68]

கலிப்பாடல்களின் பொருட்போக்கு

நல்லுருத்திரனாரின் 17 பாடல்களும் களவு பற்றியனவாய் அமைகின்றன. முதல் ஏழு பாடல்கள் ஏறு தழுவல் பற்றியவை என்பது குறிப்பிடத்தக்கது. (101–107) பெரும்பாலும் களவியற்பாடல்களாய் இருப்பதால், முல்லைத்திணைக்குரிய ஆற்றியிருத்தல் ஒழுக்கம், வருந்தும் தலைவிக்குத் தலைவன் வரவைக் கூறித் தோழி ஆற்றுவித்தல், தலைவன் பாசறை இருத்தல், தலைவன் பாகற்குக் கூறல் முதலியவை இடம் பெறவில்லை என்பது ஈண்டு அறிதற்குரியதாகும். இது பிற முல்லைத்திணைப்பாடல்களின் அமைவும் மரபிற்கு மாறுபட்டதாகும். இவ்வாறு நல்லுருத்திரனார் அமைத்தமைபற்றிக் கூறும் டாக்டர்

---

60. கலி.101–117. 61. கலி.108;110;112;113;116;117.
62. கலி.104;105;107;115. 63. கலி.102;106.
64. கலி.109. 65. கலி.111;114. 66. கலி.101;103.
67. டாக்டர் உ.வே. சாமிநாதையர் தம் புறநானூற்றுப் பதிப்பில் சோழன் நல்லுருத்திரனார் புறநானூற்று 190ஆம் பாடலும் கலித்தொகையில் முல்லைக்கலியும் பாடியவராகக் குறிப்பர். பக்.340, 45. திரு.எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள், தம் சங்க இலக்கியப் பதிப்பில் சோழன் நல்லுருத்திரன் புறநானூற்று 190ஆம் பாடலும் நல்லுருத்திரனார் கலித்தொகையில் முல்லைக்கலிப் பாடல்களும் பாடியவராக வேறுபடுத்திக் காட்டுவர். பக்.664, 812.
68. கலி.101:49;103:6;105:54;107:6;111:4;113:25;115:5;117:11,12.

வ.சுப. மாணிக்கம் அவர்கள், 'நாடக வழக்கை விடுத்து, உலகியல் வழக்காகவே முல்லைக் கலியை அமைத்துள்ளார்' என்றும், 'அகத்திணைமரபு நலமாற்றக் கருதிக்கூறு வாயிலாகச் சிலர் பயன் கொள்வது போல, முல்லைச் சமுதாயத்தில் காதலாறுகளைக் காட்டுவதற்காக உருத்திரனார் முல்லைக்கலி பாடினார் போலும்'[69] என்றும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

<u>தனிச் சிறப்புகள்</u>

முல்லைக்கலியின் தனிச்சிறப்பு ஏறு தழுவற்பகுதியாகும். நல்லுருத்திரனார் இவ்வேறு தழுவுதலைச் சங்க நூல்களில் காணப் படைப்பாக அமைத்துள்ளமை எடுத்துக் குறிப்பிடத் தக்கதாகும். வீரமும் காதலும் பொதுவர் வாழ்வில் பின்னிப் பிணைந்திருந்தன என்பதற்கு அவர் காட்டும் கொல்லேறுகளும் அவற்றை அடக்கி ஆயமகளிரை மணக்கும் பொதுவரும் தக்க சான்றுகள். 'கொல்லேற்றின் கோட்டிற்கு அஞ்சும் பொதுவனை ஆயமகள் இம்மையேயன்றி மறுமையிலும் புல்லாள்' எனக் கூறுவது அவர் சமுதாயத்தில் இருந்த ஒரு மரபினை நல்லுருத்திரனார் திறம்படக் காட்டுகின்றார் எனலாம். இவ்வரிய கருத்தினைக்

'கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்'[70]

என வரும் அடிகள் தெற்றெனப் புலப்படுத்தும்.

<u>சமயமும் இறைவழிபாடும்</u>

ஆயரிடையே கடவுட்பற்று மிக்கிருந்தது ஆயர் நீர்த்துறை, ஆலமரம், மாமரம் ஆகியவற்றின்கீழ் உறையும் தெய்வங்களை வணங்குவர் எனக் கூறுதலால் தெரிய வரும்.[71]

ஏறுகள் பெறும் வண்ணங்களைத் தெய்வங்களுடன் இணைத்துக் காட்டியிருப்பது தனி வழக்காகும். பலராமனது வெள்ளை நிறம் போன்ற வெள்ளை ஏறும், திருமாலின் கரிய நிறம் போன்ற காரியும், சிவபெருமான் நிறம் போன்ற சிவந்த குரால் ஏறும், முருகன் நிறம் போன்ற சிவந்த ஏறும் தம் நெஞ்சை விட்டு அகலா வனப்பேறுகளாகும்.[72]

---

69. மாணிக்கம், டாக்டர் வ.சுப., தமிழ்க்காதல், பக்.412-413.
70. கலி.103:63-64. 71. கலி.101:13-14.
72. கலி.104:8; 10; 12; 14.

<u>முல்லை மக்களின் வாழ்க்கை</u>

முல்லை மக்கள் [illegible] இடம்,[73] மாலை நேரம்,[74] [illegible],[75] மேய்ச்சல் இடம்,[76] தோட்டம்,[77] [illegible][78] [illegible][79] [illegible].

[illegible] 6 [illegible][80] [illegible]

'[illegible]
[illegible]
[illegible]
[illegible]'[81]

[illegible]

[illegible]

'[illegible]
[illegible]'[82]

<u>[illegible]</u>

[illegible]

73. கலி.101:44-46; 103:63-64; 104:18-19; 105:68-69; 106:43-45.
74. கலி.117:12-15. 75. கலி.108:5-7; 109:[illegible]-8.
76. கலி.110:23-24; 116:16-17. 77. கலி.111:4-9.
78. கலி.108:60-63. 79. கலி.108:60-63.
80. கலி.108:110;113:113;116;117.
81. கலி.108:53-56. 82. கலி.110:10-11.
83. கலி.111:21-24.

கைவிட்டுவிடுவாரோ? 'கடல் சூழ்ந்த உலகமே பெறினும் அரிய நெறியையுடைய ஆயமகளிர் இருமணம் கூடுதல் இல்லை நெறியன்று', எனக் கூறுவதும்[84] இதனை உறுதிப்படுத்தும்.

உவமைச் சிறப்பு

ஏறத்தாழ 53 இடங்களில் உவமைச் சிறப்புகள் குறிக்கப்பட்டுள்ளன. உவமை நயச் சிறப்பை மக்களும் விலங்குகளும் உள்ள பொருள்களோடு ஒப்புக் காட்டுவதில் நிகரற்ற விளக்கலைப் பலவற்றுள் காண்கிறோம். அவற்றுள், அலைபோல் வெண்மை வாய்களை உடைய காரி.[85] அந்திவான் விசும்பு போலச் சிவந்த உடலில் புள்ளிகளைப் பெற்ற வெள்ளை.[86] சிவன் பிறை போல வளைந்த கொம்புடைய சேய்'[87] என வருவன குறிப்பிடத்தக்கன.

'வெள்ளேற்றின் கழுத்தில் பாய்ந்தானை அருகிருந்த இளங்காரி விடாது குத்தும் தோற்றம், திங்களை விழுங்க முயன்ற பாம்பினை விடுவிக்கும் நீலநிற வண்ணனைப் போன்றது'[88] எனக் கூறும் நயம், படிப்பவர்க்குச் சுவை பயப்பதாகும்.
'A poet has the gift to see the likeness in two things which on the surface are quite different'[89] என்பார் கூற்றிற்கு ஒப்ப இரு பொருள்களிடையே காணும் சிறப்பை உவமை நயத்தால் காட்டியிருப்பது நல்லுருத்திரனார் தம் பாடல்களின் தனிச்சிறப்பு எனலாம்.

பழமொழிகளும் அரிய சொற்களும்

நல்லுருத்திரனார் பழமொழிகளைக் கையாண்டு சிறப்பித்தலைப் பாடல்களில் காண்கிறோம். அவற்றுள் 'வெறுத்தகை பெற்றார்போல்'[90] 'கட்டுத்தீக் கவ்வல்'[91] 'இடுதேள் மருந்து'[92] 'ஆகலியாள் வெல்லெல்லும் தன்னை'[93] 'நெய்க்கடை பால்'[94] 'நெருப்புக்கை தொட்டவர்போல்'[95] என வருவன குறிப்பிடத்தக்கன. நல்லுருத்திரனார் பல அரிய சொற்களையும் கையாண்டுள்ளார். அவற்றுள், 'துடக்கிடல்', 'தவ்வாந்தனை உவக்கு', 'ஓரிப் புதல்வன்', 'காயா', 'தெரிபுதெரிபு' 'புதவப்புல்', 'புட்டில்', புரிபுரிபு', 'புனைபிடி' 'வெருவரு' என வருவன குறிப்பிடத்தக்கன.[96]

84. கலி.114:16-21. 85-87. கலி.103:11-16.
88. கலி.104:35-38.
89. Lyon, P.H.B., The Discovery of Poetry, p.167.
90. கலி.107:10. 91. கலி.108:49.
92. கலி.110:3. 93. கலி.110:5-6.
94. கலி.110:17. 95. கலி.115:11.
96. கலி.104:70; 111:21; 101:15; 114:2; 105:40; 108:23; 109:2; 117:8; 103:22; 114:12; 101:11.

ஆயர்களின் சிறப்பியல்புகள்

ஆயர் மகளிர்க்கு நீல ஆடையும் பொதுவர்க்குச் சுவர் ஆடையும் உரிய சிறந்த ஆடையாகக் கருதிச் செல்வத நிலைகுறித்தற்குரியன. அவற்றுள் 'புன்கஉர நீலம் புடைதாழ மெய்யசைஇ',[97] 'புன்கூர நீலத் தழீஇ',[98] 'அந்துவ ராடைப் பொதுவன்',[99] '... கருந்துவராடை .. அணி'[100] என வருவன குறிப்பிடத்தக்கன.
ஆயர் குடியைப் பாண்டியர்தம் தொன்மைச் சிறப்புடன் இணைத்துப் பேசுதலால் அவர்தம் தொன்மைச் சிறப்பின் பெருமையை அறியச் செய்கிறார். இதனை,

'... ... ... தென்னவன்
தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய
நல்லினத் தாயர்'[101]

எனக் கூறுவதால் அறியலாம்.

நல்லுருத்திரனார் காட்டும் நாடகக் கலை

நல்லுருத்திரனார் பிற்பகுதியை (108-117) நாடகச்சுவை மிகுதிப்பட அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, ஒரே வகையான உரைச்சுவையே பெய்துள்ளார் எனலாம்.[102] இம்முல்லைக்கலிப் பாடல்களைப் பற்றிக் கூறும் டாக்டர் மு.வ. அவர்கள், 'முல்லை நில மக்களின் ஏழ்மையும் எளிமையும் ஒரு புறமும், அஞ்சாமையும் வீரமும் மற்றொரு புறமும் காட்டும் தமிழ்ப்பாட்டுகள், அவர்களை ஒழுக்கத்தில் எளியராக்கி உயர்வில்லாத வகையில் காட்டும் பகுதிகளும் கலித்தொகையில் சில உள்ளன. ... ... உள்ள உள்ளவாறு கூறும் சிறந்த கலை என்ற உயர்ந்தோர் மாட்டு நிகழ்வதை எல்லோர்க்கும் பொதுவாக்கிக் கூறுவதே நல்ல இலக்கியமாகும். அவ்வகையில் இப்பகுதிகள் குறை உடையனவே ஆகும்[103] எனக் கூறுவர்.

அருமைத்தொழில் செய்வார், ஏவல் மாக்கள் முதலியோரிடையே நிகழும் காதற்பேச்சுக்களை உள்ளவாறு எடுத்துரைப்பது நாடகப்பாங்காகும். அவ்வகையில் நல்லுருத்திரனார் முல்லைக்கலியின் பிற்பகுதியை அமைத்துள்ளார் எனலாம்.

---

97. கலி.111:3.
98. கலி.115:14.
99. கலி.102:37.
100. கலி.108:12.
101. கலி.104:4-6.
102. கலி.109-117.
103. வரதராசனார், டாக்டர் மு., முல்லைத்திணை, பக்.28-31.

'If a sparrow come before my window, I take part in its existence and pick about the gravel.'[104]

என்ற பிராட்லேயின் கருத்திற்கு ஏற்பவே, நல்லந்துவனார் நெய்தல் வாழ்வில் இரண்டறக் கலந்த எளிமையும் இனிமையும் வாய்ந்த காட்சிகளைப் புலப்படுத்தக் காண்கிறோம்.

3. இடைக்காடனார்

இடைக்காடனின் ஊர்

இடைக்காடனார், இடையர்தம் காடாம் முல்லை நிலத்தைச் சார்ந்த வாழ்க்கையர் ஆவார். இடைக்காடு என்னும் ஊரில் வாழ்ந்தமையால் இவர் இப்பெயரினைப் பெற்றார் என்பர் அறிஞர்.[105] இவர் பரணர், கபிலர், ஔவையார் ஆகிய புலவரோடு இருந்தவராக மதிக்கப்படுகிறார் எனப் பாராட்டுவர் திரு கே.என். சிவராசப் பிள்ளை அவர்கள்.[106]

இடைக்காடனார், அகமும் புறமும் பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்கள் பத்து.[107]

இவற்றுள் முல்லைத்திணைக்குரியவை எட்டு.[108] இவர்தம் பாடல்களை அதிகம் பெற்ற நூல், அகநானூறு ஆகும். (5) எட்டுப் பாடல்களில் 5 பாடல்கள் தலைவன் கூற்றுகள் என அமைந்துள்ளன. அவற்றுள், தலைவன் தேர்ப்பாகற்குக் கூறியவை 4.[109] தோழி தலைவிக்குக் கூறியவை 2.[110] தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது 1.[111] தலைவி தூதை மீளச் சொல்லியது 1.[112] தலைவன் கூற்றுகளை அதிகமாகப் பாடிய புலவருள் இடைக்காடனார் இரண்டாமிடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

இடைக்காடனார் தம் முல்லைப்பாடல்களின் சிறப்புகளைத் திரு வே. இராச கோபாலையங்கார் அவர்கள் 'இவர் பாடியவையெல்லாம் முல்லைத்திணைக்குரியவேயாகும். பாலையாகிய 139ஆம் அகப்பாட்டும் நிலத்தால் முல்லையாதல் காண்க',[113] எனச் சிறப்புத்தன்மை கண்டு நிலைநிறுத்தியுள்ளார்.

---

104. Bradley, A.C., Oxford Lecture on poetry, p.233.
105. புறநானூறு, டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக்.24.
106. Sivaraja Pillai, K.N., The Chronology of the Early Tamils, p.238.
107. நற்.142,316; குறு.251; அகம்.139,194,274,284,304,374; புறம்.4
108. நற்.142,316; குறு.251; அகம்.194,274,284,304,374.
109. நற்.142; அகம்.274,284,374.
110. நற்.316; குறு.251; அகம்.304; அகம்.194.
111. அகம்.304. 112. அகம்.194.
113. அகநானூறு, வே. இராசகோபாலையங்கார் பதிப்பு, பக்.3.

<u>கருப்பொருள் வெளிப்பாட்டுத் திறன்</u>

முதல், கரு, உரிப்பொருள்களில் முதலும் கருவும் சிறப்பாகப் பாடப் பட்டுள்ளமையை இவர்தம் பாடல்களில் பரக்கக் காண்கிறோம். குறிப்பாக, கார் கால வருணனையை நிலப்பாகுபாட்டு முறை, இவர்தம் பாடல்களில் தனிச்சிறப்பாகும். (அகம்.304,3

கார்காலப் பெயலால் முல்லை நிலம் பெறும் வனப்பு, இயற்கையோடு இயைந்த விலங்குகளைப் பல இடங்களில் குறிப்பிடுகிறார்.[114]

முல்லை நிலம் செம்மையுற்ற விளங்குவதை 'வெள்ளிய தளை செல்லல்'[115] என்றும் 'செம்மண் உடைய செந்நிலம்'[116] என்றும் குறிப்பிடுவதால், முல்லைநிலத்தின் நிறம் நம் கண்முன் நிற்பதைக் காண்கிறோம். மேலும், அறல் ஒழுகிய நிலமாயும் நறுமணம் கொண்டதாயும், அழகுடைத்தாயும் விளங்குவதை 'நன்னெடும் புறவு',[117] 'காமர் புறவு'[118] என வரும் தொடர்களால் புலப்படுத்துவதைக் காண்கிறோம்.

<u>முல்லை மலர்ச் சிறப்பு</u>

இடைக்காடர் பாடலில் முல்லை மலர் தனிச்சிறப்பைப் பெறுகிறது எனலாம். அழகு, நிறம், வடிவு, மணம், மென்மை, கூர்மை முதலான நல்லியல்புகளைப் பெற்றதும் முல்லைமலர் கற்பின் அறிகுறியாக அமைவதை இடைக்காடர்,

'முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே'[119]

'... ... நறுமலர்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியற் குறுமகள் உறைவின் ஊரே'[120]

என இவ்விடங்களில் ஒரே நிலையில் புலப்படுத்தியிருப்பது நூலாசிரியரின் கோட்பாட்டையும் உறுதியையும் புலப்படுத்துவதைக் காண்கிறோம். இடைக்காடர் கற்பின் அறிகுறியாக முல்லை மலரைக் குறிப்பதைப்போல, ஐரோப்பாவிலும் கற்பின் அறிகுறியாக வெள்ளை அல்லி மலர் (Lily)வழங்கும் மரபு உண்டு என்றும் அக்கற்புமகள் 'லில்லிப் பெண்' என்றே அழைக்கப்பட்டாள் என்றும் அறிகிறோம். மேலும், இயேசுநாதரின் தாயாகிய மரியாளின் கரத்தில் அவளது கற்பின் தூய்மையைக் குறிக்க அல்லி மலர் வைக்கப்பட்டுள்ளது என்றும் அறிகிறோம்.[121]

---

114. அகம்.374:1-10; 274:1-3; 304:1-5.
115. அகம்.194:4.
116. அகம்.304:8.
117. அகம்.274:12.
118. அகம்.284:11.
119. நற்.142:10-11.
120. அகம்.274:12-14.
121. இராகவையங்கார், மு., தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, பக்.31.

நாட்டுப்புறங்களில் ஒழுக்கத்தில் தவறியவர்களை 'முல்லை மாறி' என்று கூறுவது ஈண்டு அறிதற்குரியது.

<u>இடையன் தோற்றம்</u>

இடைக்காடனார் காட்டும் இடையன்தோற்றக்காட்சி, சாகா வரம் பெற்ற நற்காட்சி எனலாம். 'ஒரு தனி மனிதன் வாழ்ந்த வாழ்வை மீண்டும் உயிர்ப்பித்துக் காட்டலே சிறந்த இலக்கியம்' எனக் கூறும் கேரட்டி[122] என்னும் ஆசிரியர் கருத்திற்கு இணையாக என்றோ கண்ட இடையன் காட்சியை இன்றும் மனக்கண்முன் நிற்கச் செய்கிறார் எனின், அவர்தம் பாடல் சிறப்புதான் என்னே! இனி, அவ்விடையனை எழில் காட்சியைக் காண்போம்:

செம்மறியாட்டுத் தொகுதியைப் பாதுகாவல் செய்யும் இடையன், தீக்கடையும் கோல், சுள்ளிப்பானையையுடைய உறி, தோற்படுக்கை ஆகியவற்றுடன் நிற்கும் காட்சியும், மழைத்துளிகள் அவனை ஒரு பக்கத்தே நனைக்கும் காட்சியும், கோலினைக் காலின் மருங்கே ஊன்றித் தனி நிலை இடையன் நிற்கும் காட்சியும், சீட்டியடிக்கையில் ஒலி வரும் குறுநரி புதரில் ஓடி மறைய, சிற்கை ஒலி எழுப்பும் காட்சியும் நம் இடையன் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் எனின் அது உண்மையன்றோ!

'உருத்தலைத் துருவின் தோடே மாரிப்பக்
கடைகோற் சிறுதீ ஞெகிழி மாட்டித்
நீக்கால் உறியர் பானையர் அதளர்
நம்பஃ அலரி பொருந்திற நலைப்பத்
தண்டுகால் ஊன்றிய தனிநிலை இடையன்
மடிவிடு வீளை கடிதுசென் றிசைப்பத்
தெறிமறி பார்க்கும் குறுநரி வெரீஇ
முள்ளுடைக் குறுந்தூ றிரியப் போகும்'[123]

<u>உவமை நயம்</u>

இடைக்காடனார் பாடல்களில் காணும் உவமைகள் சொற்பொருளழகும், புனை நயமும் பெற்றுத் திகழும் சிறப்புடையன. வரிப்பட்ட வானிடத்தே நிலவுடன் கலந்த செம்பவளம் போல காயாம்பூவும் தம்பலப்பூச்சியும் பரவிக் கிடக்கும் அழகினை இரண்டு இடங்களில் காட்டியிருப்பது அவர்தம் இயற்கை ஈடுபாட்டைப் புலப்படுத்தும். அப்பாடல்கள் வருமாறு:

---

122. Garraty, J.A., The Nature of Biography, p.28.
123. அகம்.274:4-11.

'குறுமொட்டு மூதாய் ....
மணிமண்டு பவழம் போலக் காயா'[124]

'மணிமிடை பவளம் போல அணிமிகக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்ப'[125]

இதே காட்சியை ஒக்கூர் மாசாத்தனாரும்[126] கவினுறக் குறிப்பிடுவர். நுங்கின்
கண்கள் சிதறியவைபோலப் பனிக்கட்டிகள் வீழ்வதை,

'நீர்செறி நுங்கின் கண்சிதர்ந் தவைபோற்
... தவ்வரல் ஆலி'[127]

என்றும் முயல்கள் நெல்லிக்காயைப் போன்ற குட்டி பெற்று விளங்குவதை,

'சிறுபுல் நெல்லிக் காய்கண் டன்ன
குறுமுகச் செவ்வி குறுமுயல்'[128]

என்றும் கவினுறுமை தவிர்ந்த வகைமை நயத்திலும் சிறந்த எடுத்துக்காட்டுகள் எனலாம்.

<u>ஒலியும் பொருளும் ஒன்றுப் புணர்தல்</u>

இடைக்காடனார் ஒலியும் பொருளும் ஒருசேரப் பொருந்தப் பாடுவதிலும் வல்லவர். கார்காலத்தே பாசறையில் உள்ள தலைவன் தன் நெஞ்சினை நோக்கி, 'நெஞ்சே! 'நமக்கு அருளாதார் ஆவர் ஆவர்!' என நம் நோய் அறியாது புலந்திருப்பாளே தலைவி!' எனக் கூறுவ மேற்கொளியதனைப் புலப்படுத்தும்.[129]

இடைக்காடனார் தலைவியை வர்ணிக்கும் போது கற்பில் ஒரு சில புதிய முறைகளைக் கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவற்றுள், 'முல்லை இல் பற்கள் போன்ற அரும்பை உடைய பொலிவுள்ள யாம் வருவேம்' என்று தலைவன் தலைவியின் நெற்றியைத் தடவிப் பிரிதல் ஒன்று, தலைவன் வாராமைக்கு பெய்யும் மழையை அறியாமையால் பெய்கிறது எனக் கூறல் மற்றொன்று.[130] இடைக்காடனார் பாடல்களைப் பலவாறு பாராட்டும் டாக்டர் மு.வ., குறிப்பாக அகத்தின் ஐந்நூற் பாடல் 374ஆம் பாடலைப் பாராட்டும்போது 'The adjectives and epithets employed are so appropplate that even the sound of the lines'[131] எனக் குறிப்பர், அகத்தின் மற்ற பாடல்களுக்கு இது ஒரு உரைகல் எனலாம்.

---

124. அகம்.374:12-13.
125. அகம்.304:13-15.
126. அகம்.14:2-4.
127. அகம்.304:2-3.
128. அகம்.284:1-2.
129. அகம்.304:16-21.
130. நற்.316:1-6.
131. Varadarajan,Dr,M., The Treatment of nature in Sangam Literature, p.36.

4. மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்

பெயர் விளக்கம் பாடல்கள்

இப்புலவர், ஊரால், பெற்றோரால் பெயர் பெற்றவர். அகம் புறம் பாடியவர். பாடிய பாடல்களின் எண்ணிக்கை 13.[132] இவற்றுள் முல்லைத் திணைப்பாடல்கள் 7.[133] இவர்தம் பாடல்களை மிகுதியாகப் பெற்ற நூல் அகநானூறு (5). இப்பாடல்களுள் தலைவன் தேர்ப்பாகற்கு உரைப்பவை 5.[134] நெஞ்சிற்கு உரைப்பதுபோலப் பாகற்குச் சொல்லியது 1.[135] நெஞ்சிற்குச் சொல்லியது 1.[136] தோழி தலைவிக்குக் கூறியது 1.[137] தலைவி தோழிக்குக் கூறியது 1.[138] தலைவன் கூற்றை மிகுதியாகப் பாடிய புலவர்களுள் இடைக்காடனார் போல இவரும் இடம்பெறும் பெருமை குறிக்கத்தக்கது.

முல்லைக்கொடியின் பெயர்கள்

மள்ளனார் முல்லையைப் பல பாடல்களில் சிறப்பித்துள்ளார். 'கொடி முல்லை'[139] 'தளை முல்லை'[140] 'பைந்தொடி முல்லை'[141] 'முல்லை முகைகொடி'[142] 'வால்வீ முல்லை'[143] எனச் சிறப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது. மள்ளனார், முல்லை அரும்புகள் மார்ச்சாரம் மாற்றிய பல், மகளிர் எயிற்றைப்போல பல்லும் என்று கூறுவதால் கூர்ந்து நோக்கும் ஆற்றல் உடையவர் என்பது தெரிகிறது.[144] இதனை,

'முகைவாய் திறந்த நகைவாய் முல்லை
கடிமகள் கதுப்பின் நாறி'[145]

என வரும் அடிகள் தெரிவிக்கின்றன.

கார்கால வருணனை

கார் காலம் 4 பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது.[146] கார் காலத்து மழை பொழிந்ததை, 'மின்னிடு ஒலித்த முழக்கம்'[147] 'வானத்துக் கடும்புறக் கொண்டு,

---

132. நற்.82,297,321; குறு.188,215; அகம்.33,144,274,244,314,344, 353, புறம்.388.
133. நற்.321, குறு.188; அகம்.144,174,244,314,344.
134. நற்.321; அகம்.244,344.
135. அகம்.144.
136. அகம்.174.
137. அகம்.314.
138. குறு.188.
139. நற்.321:3.
140. குறு.188:1; அகம்.244:4.
141. அகம்.144:3.
142. அகம்.174:5-6.
143. அகம்.314:19.
144. குறு.161.
145. அகம்.244:4-5.
146. அகம்.144,11-12; 174:7-8; 314:2; குறு.186:2.
147. அகம்.144:11-12.

முன்றுறையும்'[148] 'மாவிசும் பதிர முழங்கி'[149] எனச் சிறப்பித்துள்ளமையைக் காண்கிறோம்.

பார்ப்பன மகளிர்

அகப்பாடல்களில் ஒருவர்க்கு உரித்தாய் வரும் பெயர் குறிக்கப்பெறாதெனினும், ஆசிரியர்தம் பாடலொன்றில் பார்ப்பன மகளிர் மனை நோக்கி வருந்துமாற்றைக் குறித்துள்ளமையால் அப்பாடல் தலைவன் பார்ப்பனத் தலைவனாய் இருக்கலாகும் என ஊகிக்கலாம். இது வேறு எந்த முல்லைப்பாடலிலும் காணக் கிடைத்திலது.[150]

ஆற்றியிருக்கும் மகளிர் நிலை

தலைவியின் துயரைக் கூறும் மள்ளனார், 'பகலெல்லாம் முதுமரத்தே உறைந்த கூர்ந்த வாவல், இரவில் அம்மரம் புலம்பவிட்டுச் சென்றதுபோல உள்ளது' எனச் சுவைபட அமைத்துள்ளமையை,

'சேயுயர் சினைய மாச்சிறைப் பறவை
பகலுறை முதுமரம் புலம்பப் போகி'[151]

என வரும் அடிகளால் அறிகிறோம்.

பிரிவுக்காலத்தில் குறித்த பருவத்தில் தலைவன் வாராதொழியின் தலைவி, தலைவனை எவ்வாறு சொல்லி வருந்துவாள் என்பதை மள்ளனார், 'அறனில் அலரே எம்பால் அவர்க்கு அருள் மாறிய மாறே!' எனச் சில சொற்களால் வருந்திச் சொல்லித் துன்புறுவள்' எனக் குறிப்பிடுவது அவர்தம் அவல உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது எனலாம்.[152]

'தலைவன் 'வருவம்' எனக் குறித்த நாள் பொய்த்ததாயின் தலைவியின் மையுண்ட கண்களில் நீர் பெருகும்; முல்லை சூடிய கூந்தல் அழகிழக்கும்; மேனி பசலையாகும்; அணிகள் நெகிழும்' என்கிறார்.[153] ஆற்றியிருக்கும் தலைவியின் கற்பு, கடவுட்கற்பென போற்றப்படுவதை, 'கடவுட் கற்பின் மடவோள்'[154] என வரும் அடியால் அறிகிறோம். இக்கருத்தை மருதனிளநாகனார் அகநானூற்றின் 184:15ஆம் பாடலில் குறிப்பிடுவது அறியத்தக்கது.

---

148. அகம்.174:7-8.
149. அகம்.314:2.
150. நற்.321:4,6-7.
151. அகம்.244:2-3.
152. அகம்.144:7-8.
153. அகம்.144:2; 144:3-5. 174:9; குறு.108:3-4.
154. அகம்.314:5.

உவமைச் சிறப்பு

பிடவம் நிலவெனப் பூப்பதும், மாவடி பதிந்த பள்ளங்களில் உள்ள குழி, வானின் மீன் போல மின்னுவதும் இவர்தம் உவமை நயத்தைச் சிறப்பிக்கின்றன. இதனை

'..... .... நிலவெனத்
தொகுமுகை விரிந்த முடக்காற் பிடவின்'[155]

எனவும்,

'மாவடி மருங்கிற் பெயர்த்த குழி
வான மீனின் வயின்வயின் இமைப்ப'[156]

எனவும் வரும் பாடற்பகுதிகளிற் கண்டு மகிழலாம்.

5. ஒக்கூர் மாசாத்தியார்

பாடல் தொகை வகை

ஒக்கூர் மாசாத்தியார் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 8.[157] இவற்றுள் முல்லைத்திணைக்குரியவை 6.[158] இவர்தம் பாடல்களை மிகுதியாகப் பெறும் நூல் குறுந்தொகை (4).[159] முல்லைத்திணையைப் பாடியுள்ள பெண்பாற் புலவர்களுள் ஒக்கூர் மாசாத்தியார் மிகுதியான பாடல்களைப் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 6 பாடல்களில் 3 பாடல்கள் தலைவி தோழிக்குக் கூறுவன.[160] இரண்டு பாடல்கள் உழையர் தலைவற்குக் கூறுவன.[161] ஒரு பாடல் தோழி தலைவிக்குக் கூறுவதாகும்.[162] இவர் பாடல்களில் தலைவன் கூற்று இடம் பெறாமை குறிப்பிடத்தக்கது. சங்கப்பாடல்களில் உழையர் கூற்றாய் வரும் பாடல்களின் எண்ணிக்கை 3.[163] இவற்றுள் இரண்டு பாடல்களை[164] ஒக்கூர் மாசாத்தியார் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தலைவன் பிரிவுணர்த்தும் பாடல்

தலைவன் பிரிவு, வேந்தன் போர்த்தொழிற்பொருட்டும், பொருளின் பொருட்டும் நிகழ்ந்தமையை இவர் பாடல்களிற் காண்கின்றோம். இதனை, 'வேந்த னுறு தொழில்'[165] எனவும், 'பொருட்பிரிந் தோரே'[166] எனவும், 'வளநசைஇச் சென்றோர்'[167] எனவும் கூறுமாற்றால் அறியலாம்.

---

155. அகம்.344:2-3. 156. அகம்.144:16-17.
157. குறுந்.126,139,186,220,275; அகம்.324,384; புறம்.279. 27
158. குறுந்.126,186,220,275; அகம்.324,384. 159.குறுந்.126,186,22
160. குறுந்.126,186,220. 161. அகம்.324,384. 162.குறுந்.275.
163. அகம்.324,354,384. 164. அகம்.324,384.
165. அகம்.384:1. 166. குறுந்.220:7. 167.குறுந்.126:1.

<u>காரும் முல்லையும்</u>

கார்காலத்தில் உலவும் தலைவியை முல்லை மலர்களிடையே காட்டுவதே இவர்தம் தனிச்சிறப்பாகும். முல்லை மலர் 6 இடங்களில் குறிக்கப்பட்டுள்ளமை அறியத்தக்கது. முல்லை மலர், 'முல்லை மாலை'[168] 'முல்லையம் புறவு'[169], 'முல்லைத் தொகுமகை'[170] 'முல்லை மென்கொடி'[171] 'பூத்த முல்லை'[172] 'முல்லை யூர்ந்த கல்'[173] எனப் பலவாறு சிறப்பிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

<u>தலைவி வழிநோக்கல்</u>

முல்லை நிலத்தே முயற்குட்டிகள் துள்ளித்திரிதலையும், புதிய வரகு இரலை மேய்ந்த தாள்களைக் கூப்பயும் முல்லை நிலவளத்தைப் புலப்படுத்துகின்றன. இவற்றை,
'முயற்பறழ் உகளும் முல்லையம் புறவிற்'[174] எனவும்,

'... ... புனப்புல வரகின்
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை
இருவிசேர் மருங்கில் ...'[175]

எனவும் வரும் கவிதை வரிகள் அழகுபடக் காட்டுகின்றன. தானிச் செல்லும் முறைமை, இவர்தம் பாடலின் தனிச்சிறப்பாகும். 'Style will become for us a real index of personality' என்ற கருத்திற்கு ஒப்ப ஒக்கூர் மாசாத்தியார் பாடல்கள் விளங்குவதைக் காண்கிறோம்.

<u>உவமைச் சிறப்பு</u>

உவமைச் சிறப்பு அழகுபட அமைந்துள்ளமையைக் கிளியின் பார்ப்பு ஒத்த பசிய பயிர், பறையின் கண் போன்ற சுனை, குமிழிகள்போல் பொகுட்டு, பாம்புபோல் விரையும் தேர் எனக் குறிப்பிடுதல் கொண்டு அறியலாகும். இவ்வுவமைகளை,

'கிள்ளை ... பிள்ளைத் தா வி யன்ன
... ... பைம்பயிர்'

'பறைக்கண் அன்ன நிறைச்சுனை', 'மொக்குள் ... சால ... பொகுட்டு', 'பாம் பின்விரை ...தேர்'[177] என வரும் அடிகளிற் காணலாம். இப்பாடலை இவர்தம் உவமைப்பாடல் எனலாம். மேலும், முல்லையின் அரும்பு பற்களுக்கும், அரும்புகளின் மலர்ச் வெருகின் சிரிப்பிற்கும் ஒப்புக் கூறலை 3 பாடல்களிற் காண்கிறோம்.[178]

---

168. அகம்.224:15. 169. அகம்.384:5. 170. குறு.126:3-4.
171. குறு.186:2. 172. குறு.220:3. 173. குறு.275:1.
174. அகம்.384:4-5. 175. குறு.220:1-3.
176. Frye, N., Anatomy of Criticism, p.30.
177. அகம்.324:3-14. 178. குறு.126:3-4; 186:2-3; 220:3-5.

6. ஔவையார்

பாடல் தொகை வகை

ஔவையார் பாடிய பாடல்களின் தொகை 59.[179] அவற்றுள் முல்லைத்திணைக்குரிய பாடல்கள் 5.[180] இவற்றுள் தலைவன் பாணற்குச் சொல்லியது 1.[181] தோழிக்குக் கூறியது 1.[182] ஆற்றாமையிற் தலைவி பருவ வரவின்கண் கூறியது 1.[183] தலைவி தோழிக்குக் கூறியது 1.[184] தலைவனை இடைச்சுரத்துக் கண்டார் கூறியது 1.[185] இவர்தம் பாடல்களை மிகுதியாகப் பெற்ற நூல் நற்றிணை (3).

முல்லைப்பாடலிற்காணும் மலர்கள்

கொன்றை காயா மலர்களைப்பற்றிப் பேசும் ஔவையார், முல்லை மலர் பற்றிப் பேசாமை குறிப்பிடத்தக்கது. மேலும், கொன்றை மலரை மின்னலுக்கும் காயா மலரை மேகத்திற்கும் உவமைப்படுத்தும் பான்மை மற்ற புலவர்களிடமிருந்து இவரை வேறுபடுத்திக்காட்டுவதை அறிகிறோம். இதனை,

'காயாங் குன்றத்துக் கொன்றை போல
மாமலை விடரகம் விளங்க மின்னி'[186]

என வரும் அடிகள் தெரிவிக்கின்றன.

அஞ்சி

ஔவையார், கடையெழு வள்ளல்களுள் 'அஞ்சி' என்னும் கொடை வள்ளலைத் தம் பாடலொன்றில் குறித்துள்ளார். இரவலர்க்கு அஞ்சி வழங்கும் தேர்க்கொடையினை மழைக்கு ஒப்பாகச் சிறப்பித்துள்ளார். மேலும், தாம் அவ்வள்ளலிடம் கண்ட கொடை நுட்பமும் நாளும் வாழ்த்தும்,

'... நெடுமான் அஞ்சி
ஈர நெஞ்சத்து ஓடிச்சென் விளக்கத்
தேர்வீசு இருக்கை போல
மாரி இரீஇ மான்றன்று மாலை'[187]

என வரும் அடிகளில் பிரதிபலிக்கச் செய்துள்ளார்.

---

179. நற்.129,187,295,371,381,390,394; குறு.15,23,28,29,39,43,80,91,99,102,158,183,200,364,388; அகம்.11,147,273,303; புறம்.87-104,140,187,206,231,232,235,269,286,290,295,311,315,367,390,392.
180. நற்.371,381,394; குறு.99,183.
181. நற்.371.
182. குறு.99.
183. நற்.381.
184. குறு.183.
185. நற்.394.
186. நற்.371:1-2.
187. நற்.381:7-10.

கூறமைப்பு

'மகளிர்க்கு ஆடவர் உயிராய் விளங்குவதை போல, ஆடவரும் மகளிரை உயிரென போற்றி வாழவேண்டும்' என்பதை ஒளவையார் தம் பாடலொன்றில் உணர்த்துகின்றார். 'எங்களை நினைப்பீரோ!' என்று தோழி கேட்க, அதற்குத் தலைவன் 'எப்பொழுதும் உங்களையே நினைத்திருப்பேன்' என்ற கருத்தில். எ.கா.,

'உள்ளினென் அல்லெனோ யானே உள்ளி
நினைத்தனெ னல்லெனோ பெரிதே'[188]

எனக் கூறுவதால் தெளிவாகும்.

உவமைச் சிறப்பு

தலைவியின் துயர், கான் யாற்றின் இடைக்கரையில் வேர்களெல்லாம் அலைப்பட்டு, காற்றால் அலையும் மாமரத்தின் தளிர்க்குக் கூறப்பட்டுள்ளமை தனித்தொரு ஆற்றல் எனக் கூறும் சிறப்புடைத்து. எ.கா.,

'கரைபொரு திழிதரும் கான்யாற் றிகரை
வேர்கிளர் மராஅத் தம்தளிர் போல
நடுங்கல் ஆனா நெஞ்சமொடு இடும்பை'[189]

என வரும் அடிகளால் அறியலாம். மேலும் தலைவியின் துயர் தன்னைக் கசக்கிப்பிழிந்து போன்றது என்றும்[190] வாழைமரத்தின் முழுமுதல் அசையும் வண்ணம் புயல் தரும் இடியுடைய போன்றது என்றும்[191] கூறப்பட்டுள்ளதையும் காணலாம்.

ஒளவையாரின் உள்ளத்தில் விளங்கும் அநுபவம் படிப்பவரின் உள்ளங்களிலும் பொலிவுற அமைவது பாடல்களின் தனிச்சிறப்பு எனலாம். இச்சிறப்பை அபர்குரோம்பி
'The experience which lived in the auther's mind must live again in the readers mind'[192]
என்பார்கள்.

---

188. குறு.99:1-2.
189. நற்.381:3-5.
190. குறு.280:2-3.
191. ஐங்.460:3-4.
192. Abercrombie, L., Principles of literary criticism, p.34.

7. மருதன் இளநாகனார்

பாடல் தொகை வகை

மருதம் பாடும் பெரும்புலவர், பாடற்பொருளாற்பெயர் பெற்றவர். பாடிய பாடல்களின் மொத்த எண்ணிக்கை 79.[193] முல்லைத்திணைக்குரியவை 5.[194] இவர்தம் பாடல்களை மிகுதியாகப் பெறும் நூல் அகநானூறு (3). இவற்றுள் தலைவன் தேர்ப்பாகற்குச் சொல்லியவை 2.[195] தலைவி தோழிக்குக் கூறியது 1.[196] தோழி தலைவற்குக் கூறியது 1.[197] தோழி தலைவன் எய்தியவிடத்து மகிழ்ந்துரைத்தது 1.[198]

முல்லைக்காட்சி

முல்லையும் பிடவும் மட்டுமே இவர் பாடலில் சிறக்கின்றன. முல்லை மலர்கள் கள்ளிச்செடியின் உச்சி மறைய மலர்களை உதிர்த்துத் திகழும் காட்சியும், புதல், பிடவின் வெள்ளைப் பூக்களால் கண் குளிர்ந்ததைப்போல் திகழும் காட்சியும், மருதனிளநாகனார் பேசும் மலர்க்காட்சிகளாகும்.[199]

முல்லை நிலத்தே பிடவ மலர்கள் மணம் பரப்பும் காட்சியினை, 'வெண்பிடவு அவிழ்ந்த வீகமழ் புறவில்'[200] என வரும் அடியாற்கூறுவர்.

விலங்குகளின் அன்பு வாழ்க்கை

புலவர் காட்டும் விலங்குகளின் அன்பு வாழ்க்கையும் படிப்பதற்கு இன்பம் தருவன. அவற்றுள், கலைமான் தன் பெடையொடு நாள்தோறும் புல்லை மேட்ட நோக்கும் பெருங்காட்சியும்,[201] மறியொடு கூடிய பிணைக்கு இரலை அறுகம்புல்லினை அருந்தச் செய்து அவை உறங்குமிடத்தைக் காவல் செய்யும் காட்சியும்[202] முல்லைப் பூக்களை முச்சால் ஊதி நிரம்பிக் கலைமான் பிணையொடு உறையும் காட்சியும்[203] குறிப்பிடத்தக்கன.

---

193. நற்.21,39,103,194,216,283,290,302,326,341,362,392; குறு.77,160,279,367; கலி.66-100; அகம்.34,59,77,90,104, 121,131,184,193,206,220,248,255,269,283,297,312, 343,358,365,368,380,387; புறம்.52,55,138,139,349.
194. நற். 21; குறு.279; அகம்.34,104;184.
195. நற்.21; அகம்.34.
196. குறு.279.
197. அகம்.104.
198. அகம்.184.
199. அகம்.184:8-9; 34:1-2.
200, அகம்.184:7.
201. நற்.21:8;11-12.
202. அகம்.34:4-6;8.
203. அகம்.184:9-12.

மார், பெரும்பான்மையான புலவர்களால் 'திரிமருப்பு இரலை'[204] என்னுந்தொடரால் குறிக்கப்பட, மருதனிளநாகனார், 'திரிமருப்பு எழிற்கலை'[205] எனக் குறிப்பிட்டுள்ளமை நன்கு அறிதற்குரியது.

உவமைநயம்

இவர்தம் பாடல்களில் காணும் உவமை நயங்கள் தனிச்சிறப்புடையனவாகும். கானக்கோழி, உருக்கிய நறுநெய்யில் பாலைச் சிதறியது போல அழகிய புள்ளிகளை உடையது.[206] 'மழை வருதலை மறந்த கரிய ஏனல், புலி பாய்ந்த யானையைப் போலத் தோன்றும்'[207] 'காளையின் தலையிற்கைக்கும் கலைக்கோல் போல இரலையின் திரிந்த மருப்பு'[208] 'விசையினா துவரைப் பிளந்து, தோல் போர்த்த வெள்ளாட்டுக் குட்டியின் வயிறு'[209] 'மலையருவியின் ஒலிபோன்ற தேர் மணி ஒலி'[210] என வருவன குறிப்பிடத்தக்கனவாகும். உவமைநயம் இவர்தம் எல்லாப் பாடல்களிலும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பெண்டிர்க்குப் பெருமை தருவன

பெண்டிர்க்குப் பெருமையும் புகழும் தருவன இரண்டு என்கிறார் ஆசிரியர். ஒன்று கற்பு; மற்றொன்று புதல்வன். இவ்விரு கருத்தை,

> 'கடவுட் கற்பொடு குடிக்குவிளக் காகிய
> புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்
> நன்ன ராட்டி'[211]

என வரும் அடிகளால் இதை விளக்கும். இக்கருத்தினை ஐங்குறுநூற்றிலும் (442:4), குறுந்தொகையிலும் (252:4) காண்கிறோம்.

'ஒரு புலவன் எதைச் சொல்ல நினைக்கிறானோ, அதனை உண்மையாகப் புதுமையும் ஆர்வமும் உடையதாகச் செய்ய வேண்டும்'[212] என்ற ஹட்சனின் கருத்திற்கு விளக்கமாக மருதனிளநாகனார் பாடல்கள் விளங்குகின்றன எனலாம்.

---

204. ஐங்குறு.09; அகம்.14:6; 34:4; 154:8; 304:9; 314:6.
205. அகம்.184:11.
206. நற்.21:6-8.
207. குறு.279:5-6.
208. அகம்.34:3-4.
209. அகம்.104:8-9.
210. அகம்.184:17-18.
211. அகம்.184:1-3.
212. Hudson, W.H., An Introduction to the study of literature, p.10.

8. நப்பூதனார்

முல்லை நெடும்பாட்டுக் கவிஞர்

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார், பத்துப்பாட்டினுள் ஒன்றாகிய முல்லைப்பாட்டொன்றினையே பாடியுள்ளார். இது 'முல்லை' என்றும் வழங்கப்படும் பத்துப்பாட்டிற்கானும் ஏனைப்பாட்டுகள் இதனால் முதற்கண் அமைந்துள்ளமை சிறப்புச் செய்தியாகும். சுருக்கச் சொல்லி விளங்க வைக்கும் நிலையில் 103 அடிகளையுடைய இதனால் முதல் கரு உரிப்பொருள்களைக் கவினுறக் காட்டுவது தனிச்சிறப்பாகும். நப்பூதனாரின் முல்லைப்பாட்டு, 'முல்லைத் திணைக்குரிய எல்லாச் சிறப்புகளையும் ஒருசேரப் பெற்றுத் திகழ்கின்றது என்றும், குறிப்பாகக் கார் காலம், பாசறை, தலைவன், தலைவி, நிலை, உடையோர் முதலியவற்றால் முல்லையும் வஞ்சியும் ஒருசேரச் சிறக்கின்றன என்றும் டாக்டர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்[213] தம் நூலில் குறிப்பிடுகின்றார். 'நெல்லொடு, நாழி கொண்ட நறுவீ முல்லை, அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது, பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப, இன்னே வருவர் தாயர் என்போள்'[214] என வரும் அடிகளால் முல்லைப் பாட்டைப் பெருமுது பெண்டிர் கற்பு அமைகின்றது எனலாம். டாக்டர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் இதனைத் தோழி கூற்றெனக் கூறுவர்.[215]

முல்லையும் வஞ்சியும்

'வஞ்சி தானே முல்லையது புறனே'[216] என்பதற்கேற்ப, அகவொழுக்கமாகிய முல்லையும் புறவொழுக்கமாகிய வஞ்சியும் ஒருசேரப் பொலிவது இந்நூலுக்கு மட்டுமே உரிய சிறப்பாகும்.

முல்லைப்பாட்டில் முல்லைப்பொருளும் வஞ்சிப்பொருளும் நீண்டு செல்ல பொருந்தும் சொற்றொடர் அமைப்பு, தொல்காப்பியனார் காட்டும் 'மாட்டு' என்னும் இலக்கண முடிபாகும் எனப் போற்றுவர் திரு. மறைமலையடிகளார்.[217] மேலும், முல்லைப்பாட்டின் சிறப்பினைப் போற்றும் அடிகளார், 'முல்லைப்பொருள் ஒழுக்கம் உள்-ளும் அடியினை (புட்போ கன்னல் புலம்புறும் தைப்ப) புடையமர்ந்து நிற்ப, நடுவே வஞ்சிப்பொருள் புகுத்தப்பட்டுத் திகழ்வதும் நூ-லும் அடியினை (இன்றமிழ் வதிபுகு காலு மெழுந்த) தன் பொருள்

213-215. Meenakshisundaram, T.P., Mullai-p-pattu, p.48, p.18.
214. முல்லை. 8-11, 16.
216. தொல். பொருள். 64.
217. மறைமலை அடிகள், முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, பக். 33.

பொருந்தி, அஅ-ஆம் அடியில் (நூல்ப விரிந்தை போர்ப்பவள் கூடுதோள்) அம் முற்றைப் பெருந்தமயர்ப் பின்னும் அது பெறுதைபோல நிற்க. இடையே வேறு பொருள் தழுவி, க0௩-ஆம் அடியில் (வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே) பொருள் முதிர்ச்சி பெற்ற முடிந்த உத்தரப்பாவதாம் என்க; எனப் பாராட்டுதல் குறிப்பிடத்தக்கது.

கட்டமைப்புகள்

நப்பூதனார் முல்லைப்பாட்டின் கருத்துக்களைக் குறிப்பாக மூன்று பிரிவில் அமைத்துப் போற்றியுள்ளமையைக் காண்கிறோம். முதற்பகுதியில் மேகமானது வான் முழுதும் பரவி மழையைப் பொழிய, பெருமுது பெண்டிர் நெல்லொடு முல்லை மலர் தூவி தெய்வத்திடம் விரிச்சி கேட்டல், ஓர் இடைமகள் தாயைப் பிரிந்த கன்றுகளின் வருத்தத்தை நோக்கி, 'இப்பொழுதே உங்கள் தாய்மார் வருவர்' என, தலைவி நம்பிக்கை கொள்ளாது வருந்துதல் என்னும் நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.[218] இரண்டாம் பகுதியில் தலைவன் போர்ப்பாசறை, கான் யாறு தழுவிய பாடி, கூடாரங்களைச் சுற்றி ஐவயர் காவல் புரிதல், யவனர் புலிச்சங்கிலியும் மணிவிளக்கும் கூடாரத்தே தொங்கவிடல், வேந்தன் கனை வாளின் நினைந்த பல்யமையில் உறக்கமாத தலைவன் கையூன்றியிருத்தல் என்னும் வர்ணிச் செய்திகள் வருகின்றன.[219] மூன்றாம் பகுதியில் தலைவி தன் தனித் துயரால் வருந்துதல், தலைவன் ஏறி வரும் குதிரைகளின் ஆரவாரம் கேட்டு இன்புறல்[220] என்னும் நிகழ்ச்சிகள் வருகின்றன.

இயற்கைப்பொருட்காட்சி

'பாட்டென்பது இதழ் விரிந்த பூப்போல எதனையும் திறம்பட வெளிப்படுத்த வேண்டும்'[221] என்ற பின்யன் கருத்திற்கு ஏற்றவாறு நப்பூதனாரின் முல்லைப்பாட்டு விளங்குவதை இனிக் காண்போம்.

முல்லை நிலக் கார் காலத்தில் முப்பட்டுச் செழிப்புப் பெருவதியாய் விளங்குவதை, 'கான்யாறு தழீஇய அகநெடும் புறவு',[222] 'கானம் நந்திய செந்நிலப் பெருவழி'[223] என்றும், மாலைக்காலம் பெருமழையால் இலங்குவதைப் 'பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை'[224] என்றும், முல்லையின் தன்மையை 'நறுவீ முல்லை'[225] என்றும் நீண்டு நறுமணம் பரப்பும் பிடவமலரை 'சேண்நாறு பிடவம்'[226] என்றும், செழித்த இலைகளையுடைய

218. முல்லைப்.1-23.   219. முல்லைப்.24-79.
220. முல்லைப்.80-103.
221. Laurence Binyon, Landscape in English Art and Poetry, P.290.
222. முல்லைப்.24.   223. முல்லைப்.97.   224. முல்லைப்.6.
225. முல்லைப்.9.   226. முல்லைப்.25.

காயாவை, 'செறியிலைக் காயா'[227] என்றும், குவிந்த கோடல் முகைகளை, 'கோடல் குவிமுகை'[228] என்றும், திரட்சி பெற்ற தோன்றியை, 'தோடார்தோன்றி'[229] என்றும் கோணல் கோல் பெற்ற கோவலரைக் 'கொடுங்கோற் கோவலர்'[230] என்றும் திரண்ட கொம்புடைய பிடவை, '[illegible] பிடவு'[231] என்றும் கடல்போலப் பரந்த பாசறையைப் 'புணரியிற் பரந்த பாடி'[232] என்றும் கூறும் நப்பூதனாரின் கற்பனை நாட்டு உள்ள ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்துகின்றன. மலர்களில் ஏழு மலர்கள் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளன. மலர்களில் முல்லை மலர் மூன்றுமுறை இடம் பெற்றிருப்பது முல்லைப் பாட்டு முல்லை மலரின் பெயர் பெறுகிறது என்பதை எடுத்துக்காட்டுவதாய் உள்ளது. பிற மலர்கள் முறையே பிடவம், தளவம், காயா, கொன்றை, கோடல், தோன்றி என அமைந்துள்ளன. ஏழு மலரின் பெயர் மட்டும் குறிக்கப்பட்டமை முல்லைப்பாட்டின் தனிச் சிறப்பாகும்.

உவமைநயம்

உவமை நயச் சிறப்பில் நப்பூதனார் தனித்திறமை பெற்றுத் திகழ்வதை முல்லைப்பாட்டு நன்கு புலப்படுத்துகின்றது. ஏறத்தாழ 12 உவமைகள் இடம் பெறுகின்றன.

மாவலி மன்னன் வார்த்த நீர் தம் கையில் வீழ்ந்ததும் ஓங்கி உயர்ந்த திருமாலைப் போல மேகம் உலகத்தை வளைத்துக்கொண்டு மழை நீரை ஒழுகச் செய்கின்றது என்னும் நிகழ்வினைக் காட்டவே,

'நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி'[234]

என வரும் அடிகளின் நயத்தினைக் காண்கிறோம்.

துறவிகள் முக்கோலில் காவியுடையைத் தொங்கவிட்டாற்போல வீரர்கள் வில்லின் நுனியில் தூணியைத் தொங்கவிட்ட விதனை பாடி வைத்துள்ளார், இதனை,

'கற்றோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப நற்போர்
ஓடா வல்வில் தூணி நாற்றி'[235]

என வரும் அடிகளால் அறிக.

'கோடலின் முகைகள் அங்கை போல விரியும்', என்பதைக் 'கோடல் குவிமுகை அங்கை அவிழ'[236] எனவும், காயா மலர் அஞ்சனம் போல மலர்வதைச் 'செறியிலைக் காயா அஞ்சன மலர'[237] எனவும், கொன்றை பொன்போல விளங்குவதை,

---

227. முல்லைப். 93. 228. முல்லைப். 95. 229. முல்லைப். 96.
230. முல்லைப். 15. 231. முல்லைப். 99. 232. முல்லைப். 28.
233. முல்லைப். 1-5; 9, 24, 37-39, 51, 52, 71, 85, 93-96.
234. முல்லைப். 1-5. 235. முல்லைப். 37-39.
236. முல்லைப். 95. 237. முல்லைப். 93.

'முறியிணர்க் கொன்றை நன்பொன் கால'[238] எனவும், தோன்றிப் பூவின் சிறப்பியல்பைப் 'தோடார் தோன்றி குருதி பூப்ப'[239] எனவும், '[illegible] படர்ந்த [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] நடப்பர்' என்பதை,

'உதிரல் பூத்த [illegible] படாஅர்
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] போர்த்த [illegible] [illegible].'[240]

எனவும் [illegible] படம்பிடித்துள்ளார்.

<u>[illegible]</u>

'புலவன் தன் பாட்டால் பிறரை உணரச் செய்ய வேண்டுமாயின், தன்னுணர்வைத் தான் முதலில் பெறவேண்டும்' என்றும் [illegible] [illegible] தொடங்கவேண்டுமாயின், [illegible] [illegible] [illegible]'[241] என்றும் [illegible] [illegible] [illegible] [illegible] நப்பூதனார் முல்லைத் திணையைப் படைத்துள்ளமை [illegible] [illegible].

[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] '[illegible] [illegible] [illegible] [illegible]'[242] [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] '[illegible] [illegible] [illegible]'[243] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible], '[illegible] [illegible] [illegible] [illegible]'[244] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] 'There is no wasting of words over the description, the pictures are outlined with a few incisive strokes. In such pictures the poets do not present everything in detail but only the best of everything'[245] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

---

238. முல்லை.94. 239. முல்லை.96. 240. முல்லை.51-53.
241. Tucker, T.G., The Judgement and appreciation of literature, p.123.
242,243. முல்லை.23,24.
244. முல்லைப்பாட்டின் [illegible] [illegible], [illegible], 14.4.06, பக்.6.
245. Varadarajan, Dr. M., The Treatment of nature in Sangam literature, p.410.

9. நக்கீரர்

பாடல் தொகை வகை

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், அகமும் புறமும் பாடிய புலவராவர். அவர் பாடிய மொத்தப் பாடல்கள் 37.[246] அவற்றுள் அதிகமான பாடல்களைப் பெறும் நூல், அகநானூறு (17). அவர்தம் பாடல்களுள் முல்லைத்திணைக்குரியவை இரண்டு.[247] அவற்றுள் நற்றிணைப் பாடல் தோழி தலைவிக்குக் கூறும் கற்பின் அமைவது. நெடுநல்வாடை,

> 'கூதிர்நின் றன்றால் போதே ...
> மெல்லியல் மகளிர் நல்லடி வருட
> செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
> குறியவு நெடியவு முரைபல பயிற்றி
> இன்னே வருகுவ ரின்றை யோர்'[248]

என வரும் அடிகளால் செவிலி கற்பின் அமையும் எனலாம். முல்லைத்திணையை அதிகமான அடிகளாற்பாடிய புலவர்களுள் நக்கீரனார் மூன்றாமிடத்தைப் பெறுகிறார். (200) நல்லுருத்திரனார், 672 அடிகளையும், பேயனார் 464 அடிகளையும் பாடியுள்ளனர் என்பது ஈண்டு அறிதற்குரியது. நக்கீரனார் நற்றிணையில் அருமன் என்னும் பெருங்குடித் தோன்றலை, 'சூழில் அருமன் பேரிசைச் சிறுகுடி'[249] எனப் பாராட்டியிருப்பது அறிதற்குரியது.

நெடுநல்வாடையும் முல்லைப் பகுதியும்

'நெடியதாகிய நல்ல வாடை' என விரியும் நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆவன்.

நெடுநல்வாடை 188 அடிகளை உடையது. 'நனந்தலை உலகம்' என்ற முல்லைப் பாட்டு உலகினை முதற்கண் மங்கலமாகத் தொடங்குதல் போல, நெடுநல்வாடையும், 'வையகம் பனிப்ப' எனத் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. நக்கீரனார் நெடுநல் வாடையின் உள்ள கருத்துகளை மூன்று பிரிவில் அமைத்துள்ளமையைக் காண்கிறோம். முதற்பிரிவு (1-72) புறப்பெயல், கதிர் வாடையால் (வடந்தைத் தண்வளி) வருந்தும் உயிரினங்கள், செடி கொடிகள், ஆகியவைகள் கூறப்படுகின்றன. இரண்டாம் பிரிவு (73-168)

---

246. நற்.31,86,197,258,340,358,367;குறு.75,105,131;143,161, 266,280,386; அகம்.36,57,78,93,120,126,141,205,227,249, 253,200,310,340346,369,389;புறம்.56,189,395;முரு.1; நெடுநல்.1.
247. நற்.367;நெடுநல்.1. 248. நெடுநல்.72;151,153-155.
249. நற்.367-6.

அரசியின் அரண்மனை அமைப்பு, அந்தப்புர வருணனை, நந்தக்கட்டிற்சிறப்பு, தலைவியின் பிரிவுத்துயர், செவிலியர் தேற்றுதல் ஆகியவை விளக்கப்படுகின்றன. இறுதிப் பகுதி (169-188) மன்னன் பாசறையிருப்புக் கூறப்படுகிறது. முல்லைப்பாட்டில் தலைவன் பாசறையிருப்பு (24-79) முதலிலேயே விளக்கப்படுவது போல் நெடுநல்வாடையில் தலைவி அரண்மனையில் இருத்தல் (73-168) முதலிலேயே விளக்கப்படுவதைக் காணலாம். மேலும், முல்லைப்பாட்டில் தலைவன் தேர் திரும்புவதாக முடிவது போல, நெடுநல் வாடையில் தலைவற்குப் பாசறைத்தொழில் முடிவதாக அமைந்திருப்பது அறிதற்குரியது. 'வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்' (176) என அடையாளப்பூக் குறிமையின், அகமாகாதாயிற்று என்பர் நச்சினார்க்கினியர்.[250] திரு ரா. செயராமன் அவர்கள் 'அமைப்பால் முல்லை நோக்கால் பாடாண். எனவே, இது முல்லைப் பாடாண்'[251] என்பர்.

கருப்பொருட்காட்சி

நெடுநல்வாடையில் கூதிர் காலமும் வாடையும் நீண்ட இடத்தைப் பெற்றுள்ளன (1-72). கூதிர்காலமும் வாடையும் நெடுநல்வாடையில் மட்டுமன்றி, வேறு பல முல்லைப் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளன.[252] மாரியும் மழையாலும் வருந்தும் கோவலர், தம் இன நிரைகளை வேறு புலம் பரப்புவதை, பல் பறை கொட்ட நடுங்குவதை, விலங்குகள் மேய்தல் தொழிலை மறப்பதை, பறவைகள் தரையில் வீழ்வதை,

> 'வானம் புலம்பெயல் பொழிந்தென
> கோவலர் ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பி
> கவுள்புடையூஉ நடுங்க
> மாமேயல் மறப்ப மந்தி கூர
> பறவை படிவன வீழ'[253]

என வரும் அடிகளில் கூறக் காண்கிறோம்.

உவமை நயம்

நெடுநல்வாடையில் ஏறத்தாழ 16 உவமைகளைக் காண்கிறோம்.[254] இவற்றுள் உள்ளவாறே பாடும் தன்மை உவமைகளாவன. கற்பனையைச் சேர்த்துக் காட்டும் உவமைத்தாள்

---

250. பத்துப்பாட்டு, டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் பதிப்பு, பக்.445.
251. செயராமன் டாக்டர். ரா., முல்லைப்பாடல்கள், பக்.74.
252. அகம்.264; ஐங்.456; நற்.364; குறு.110.
253. நெடுநல்.2-10.
254. நெடுநல்.12,14,23,30,37,38,88,108-112,120,143,147,148.

நாம் நாடுகிறோம் என்கிறார் ஆபர் கிராம்பி.[255] இதனை நக்கீரனார் பல இடங்களில் உவமை நயத்தால் சிறப்பித்திருப்பதைக் காண்கிறோம். மலையைக் குளிர்செய்வது போலத் தோன்றும் கூதிர் காலத்தை, 'குன்றுகுளிர்ப் பன்ன கூதிர் பாநாள்' என்றும் பீர்க்கம் பூவின் நிறத்தை, 'பொன்போல் பீரம்' என்றும் ஆறு கிடக்கும் காட்சியை,

'ஆறுகிடந் தன்ன அகனெடுந் தெருவில்'

என்றும் கூறியுள்ளமை ஈண்டு நினைவுகூர்தற்குரியது.[256]

பல், கண், மோதிரம், மேனி ஆகியவை பெறும் உவமை யழகினை, 'முத்துறழ் முறுவல்' 'மழைக்கண்' 'வாளைப் பகுவாய்..விளக்கம்' 'தளிர் ஏர் மேனி' எனக் கூறுமாற்றால் அறிகிறோம்.[257]

தலைவன் பிரிவால் வருந்தும் தலைவியின் பொலிவற்ற நிலையை, நன்னுதல் உலறிய சின்மெல்லோதி, வறிதுவீழ்காது, மயிர்வார் முன்கை, மாசூர்ந்த அவிர்நூல் கலிங்கம் எனப் பலவாறு சித்திரிக்கப்படுவதையும் அத்தோற்றம் 'புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்'[258] எனக் கூறியிருத்தலும் ஈண்டு அறிதற்குரியது. இதனை மணிமேகலை, 'புனையா ஓவியம் போல்' 'புனையா ஓவியம் புறம்போந் தன்ன'[259] என மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. 'குன்றுகுயின் றன்ன ஓங்குநிலை வாயில்', 'வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு', 'வில்கிடந் தன்ன கொடிய பல்லயின்', 'வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ', 'மணிகண் டன்ன மாத்திரள் திண்காழ்', 'செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்' என அடுக்கடுக்காய் பல உவமைகள் இடம் பெற்றிருப்பதையும் அறிகிறோம்.[260]

<u>பாசறைக் காட்சி</u>

புண்பட்ட வீரர் பால் பேரன்பு கொண்ட அரசன் நடு யாமத்தே, மழை பெய்தலையும் பொருட்படுத்தாது முகமலர்ந்து ஆற்றுவிக்கும் பாசறைக்காட்சி ஓர் ஓவியக் காட்சி எனலாம். இதனை நக்கீரனார்,

----

255. Abercrombie, L., Principles of Literature criticism, p.86.
256. நெடுநல்.12,14,30.
257. நெடுநல்.37,38,143,148.
258. நெடுநல்.147.
259. மணி.16:131, 22:88.
260. நெடுநல்.88,108-112.

'களிறுகளம் படுத்த பெருஞ்செய் ஆடவர்
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வாள்தோள் கோத்த வன்கண் காளை,
சுவல்மிசை அமைத்த கையன் முகனமர்ந்து
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்'[261]

எனக் கூறுமாற்றல் அறிகிறோம்.

நல்ல செய்யுள் கருத்துகளையே நாம் மீண்டும் மீண்டும் கற்கிறோம் என்பதைத் திரு ஹட்சன் அவர்கள் ' We learn to appreciate through appreciation and to enjoy through enjoyment'[262]

எனப் போற்றிக்கூறுவர். இக்கருத்தை, நக்கீரரின் நெடுநல்வாடையில் யாண்டும் நீக்கமற ஒளி பரப்புவதைக் காண்கிறோம்.

---

261. நெடுநல்.171-172; 182-183; 186-187.
262. Hudson, W.H., An Introduction to the study of literature, p.127.

முடிவுரை

மனிதன் வேறு இயற்கை வேறு அன்று. மனிதனும் இயற்கையும் பெற்ற ஒன்றுபட்ட வாழ்வு, இன்று தேய்ந்து தொலைந்துவருகிறது. இவ்வாறாய்ச் சிதைந்து அப்பால் பட்டதொன்று. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பின் பெற்ற பொற்கால வாழ்வை — ஐந்திணைச்செல்வத்தை — அரிய விழுப்பம், அதற்குப் பெருந்துணையாய் விளங்குவன சங்க இலக்கியங்கள்.

சங்க இலக்கியங்களுள் முல்லைத்திணைப்புலவர்கள் முல்லைத்திணையின் முதல், கரு, உரிப்பொருள்களை முற்றும் கண்டு — சிந்தித்த நிறைவு பெற்ற உயர்ந்த உள்ளங்களைக் கொண்டவர்கள். சிலர், தனிச் செய்த சிறிய பொருள்களையும் எடுத்துச் செய்தனர். வேறு சிலர், வன்மை மென்மைக்குறைகளை விரும்பிப் போற்றினர். நவ்தோறும் நால் நயத்தை விளக்கிய பெருமை அவர்தம் படைப்புகளுக்கே உண்டு.

புலவர்தம் பாடுபொருள்கள், அவர்தம் சொந்த அனுபவமாய், நேரடி அனுபவமாய் விளங்கும் பெருமையுடையன. அவ்வனுபவமே பாட்டின் உயிராய் உருவெடுத்தது. அவ்வுயிர் திருவுருவே அகமும் புறமும்.

புலவர்தம் வருணனைகள் உயிரோட்டம் உடையன. வருணனையில் மரபுச் செய்திகள் இல்லை. முல்லை நில வருணனை அவர்தம் பேரறிவிற்கு ஓர் உரைகல். அவற்றின் தன்மை செம்மை வருணனைகள் உள்ளத்தை ஈர்க்கும். கற்றாரைக் காமுறச் செய்யும்; கவி நடம் புரியச் செய்யும்.

புலவர்தம் காரும் மாலையும் தரும் எழிலோவியங்கள் பலப்பல. காரும் மாலையும் இணைந்து வரும் பாடல்கள்தான் எத்தனை அழகு! அச்சமும் அமைதியும் கலந்த பெருமிதக்காட்சிகளாய் — காதற்காட்சிகளாய் — நினைக்குந்தோறும் திளைக்கும் பேறுடையன; வலியும் பொலிவும் பெறுவன.

மாயோனின் கடவுட்காட்சி வையம் போற்றிய இயற்கையோடு இயைந்த ஒருமைக் காட்சி. ஆயர்களின் ஆநிரைக் காட்சியும் அவர்தம் கோவலரும் பண்டை வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் சிறப்புடையன. ஆயர்க்கே உரித்தான 'ஏறுகோடல்'[1] காதற்களமாய், வீரக்களமாய் விளங்கும் காலக் கண்ணாடியின் மறுபக்கமாம்.

(புலவர்தம் செடி கொடி மரங்கள், தெரிந்தவற்றை உள்ளபடியே உள்ளவாறு கூறும் உண்மைப் பிரதிபலிப்புகள் (Realism)உரிப்பொருளாம் இலக்கியத்தின் பின்னணியாய், (Background of the theme)பிரிக்க முடியாததாய் (inseparable) தலைவன் தலைவியர் தம் இன்ப துன்பங்களில் பெரும்பங்கு வகிக்கும் பெருமைபெற்றவை.) மனிதன் எதையும் தனியாய் அனுபவிக்கவில்லை; பிறவற்றையும் அதில் பங்கு பெறச் செய்தான் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு, செடி கொடி மரங்கள்.

அன்பும் பண்பும் முல்லை மாந்தர்க்கு இரு கண்கள். அவர்தம் கற்பனை உணர்ச்சிகளின் பிறப்பிடம். ஆங்கிலக் கவிஞர்கள் Ode to Autumn, Ode to Nightingale, the Daffodils என்ற தனியாகப் பாடி, தனிப்பயன் கண்டார். ஆனால், முல்லைப் புலவர்களோ, மாந்தர் கற்புகளுள் மறைந்தும் இணைந்தும் இன்பம் கண்டார்கள். இயற்கைக்காட்சி, பிற உலகு காணத் தவிக்கக் காட்சி.

மாந்தர் படைப்பில் புலவர்கள் பெறும் அனுபவங்கள் பல. அனுபவம் இயற்கையோடு இயைந்தொன்றுதலில், 'நாடு, ஊர், இனம்' என்ற வேறுபாட்டிற்கு அங்கு இடமில்லை. இவ் வேறுபாடற்ற காதலரிடத்தும் மன ஒற்றுமைக்கும் சிறந்த எடுத்துக்காட்டானவர் முல்லைத்திணை மாந்தர்.

உவமை நலம், 'வினை, பயன், மெய், உரு' என நான்காய் விரியும் ஒரு திசைகாட்டி. முதல், கரு, உரிப்பொருட்களில் விரியும் நலத்தால் எத்தனை! 'பொருளோ! உவமையா!' என்ற மயக்க உணர்வு உவமைநலத்தின் சாறு எனக் கூறும் பெற்றவை. 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே' என்னும் கருத்தைப் பிரதிபலிப்பது உவமை நலம்.

உப்புப் பழையது; ஆனால், அதன் சுவையோ, என்றும் புதியது. இது பசித்த வழக்கத்தில் காணும் உண்மைச் செய்தி. பழமையின் ஒளி விளக்கு, பழக்கவழக்கம். (Illumination of the past)என்னெனில் கலையால் வினையும் பண்பும் நாகரிகமும் பழக்கவழக்கத்தில் எதிரொலிகளே.

உண்மை தவறாக் கோலோச்சுமிடம், அறிவியல்; உண்மை கற்பனையோடு இயைந்த கோலோச்சுமிடம், கலையியல். இவ் வரலாற்றுக் குறிப்புகள் தரும் உண்மைப் பாடம். மூவேந்தர்கள் இன்றில்லை; ஆனால், அவர்தம் புகழுடம்பும் அறநெறியும் மாயா வரம் பெற்றவை. அவர்தம் நாடும் ஊரும் அவற்றுள் இடம் பெறும் போர்களும் காலம்

காட்டும் வரலாற்றுப் பெட்டகங்கள். அன்றைய மக்கள் வாழ்வும் நாளை வாழ்வும் இன்றைய மக்கள் வாழ்வில் இணைந்த ஒரு தலைப்புகள். இதனாலேயே, ஒமர குபேரர்,

'வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு'

எனப் பாடிப் புகழ்ந்தார்.

புலவர்கள் எந்த நிலையோ எண்ணங்களையும் காட்சிகளையும் மனத்தகத்தே கொண்டவர்கள். கால வெள்ளத்தில் அவையாவும் சொல்லோவியமாய் உருவெடுப்பதை அவர்தம் பல்துறைகளில் சிறக்கக் காண்கிறோம். இது முல்லைத்திணைப் புலவர்களின் சிறப்பமைதி.

இந்த நூலில் என்னுடைய எண்ணங்களும் ஒப்பு நோக்கிய கருத்துகளும் பகுதி தோறும் சொல்லப்பட்டுள்ளன. முதலில், முதற்பகுதியின்கண், முல்லை நிலம் முல்லைப்பூவால் பெயர் பெற்றமை, 'நானிலத்துள் முல்லை முதல் நிலமாய் விளங்குதல், முல்லை நிலத்தைக் குறிக்க சிறப்பாகப் 'புறவு' என்ற சொல் வழங்கப்பட்டமை, கார் காலம் பெறும் இடங்கள், வகைகளின் தனி நிலை, மாலைக்காலம் பெறுமிடத்தின் தனிச்சிறப்புகள், மாயோன் முதன்மை, ஊர் பெறும் பெயர்களின் ஒப்பாய்வு, ஆநிரை மேய்த்தல், உழவு ஆகியவற்றில் பெறும் தொன்மைச் சிறப்பு, சங்க நூல்களுள் முல்லைக்கலியில் மட்டும் காணும் ஏறு தழுவல், முல்லைக்கலி பாடல்களுக்கும் பிற முல்லைத்திணைப் பாடல்களுக்கும் உள்ள வேறுபட்ட நிலைகள், ஏறுகளின் ஒப்பாய்வு, மலர்களில் முல்லை பெறும் ஒப்புயர்வற்ற நிலை, முல்லை மலர் தரும் வேறுபட்ட பொருட்கூறுகள், பிடவம், தளவம், தோன்றியினம் ஆகியவற்றின் சிறப்பியல்புகள், கொன்றை, குருந்தம் பெறும் தனி நிலைகள். காயாவின் வண்ண ஒப்பாய்வு, புதல் பிற மலர்களால் பெறும் அழகுக்காட்சி, முல்லைப்பாடல்களில் காணும் பிற நிலைகளின் செடி கொடி மரங்கள், மானினத்தில் இரலையினம் பெறும் ஒப்பாய்வு, முயல் வாழ்வியல், பிற நிலைகளில் காணும் விலங்கினங்கள், கானக் கோழியும் மஞ்ஞையும் பெறுமிடம், மஞ்ஞையின் தனிச் சிறப்பு, பிற நிலைகளில் காணும் பறவையினம் ஆகியவைகள் கூறப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதியில், கூற்றுகளின் தலைவன் கூற்றின் தனித்தன்மை, கூற்று மிகுந்து வரும் நூல்கள், பாடிய புலவர்கள், தலைவன் கூற்றுகளின் சிறப்பாய்வு; முல்லை நிலத்தலைவர்களாக ஆயர் இடம் பெறல், தலைவி கூற்றுகளின் பகுப்பாய்வு, கூற்று மிகுந்து வரும் நூல்கள், பாடிய புலவர்கள், தலைவி பெறும் பெயர்கள், கூற்றமையைத் தோழியிடம் கூறும் தனி நிலை, தோழி கூற்றுகளின் வகைகள். கூற்று மிகுந்து வரும் நூல்கள், பாடிய புலவர்கள், தலைவியை ஆற்றுவிக்கும் சொற்றிறம், செவிலி முதல் பரத்தை வரை உள்ள ஏழுவர் கூற்றுகளின் சிறப்பாய்வுகள் ஆகியவை இயம்பப்பட்டுள்ளன.

மூன்றாம் பகுதியில், உவமை நலம் பெறுமிடம், இதிகாசமும் புராணங்களும் பெறும் உவமை நிலை, பழக்க வழக்கங்கள் பெறும் பல்வேறு துறைகளின் சிறப்பாய்வு, வரலாற்றில் மன்னர்கள், குல முறை, ஊர்கள் பெறுமிடம், முல்லைத்திணைப் புலவர்களின் மொத்த எண்ணிக்கை, முல்லைத்திணை மட்டும் பாடிய புலவர்கள், பெண்பாற்புலவர்கள், ஐம்பது புலவர்களின் சிறப்பாய்வுகள், பத்துப்பாட்டில் நப்பூதனார், நக்கீரனார் பெறும் சிறப்பிடம் ஆகியவைகள் கூறப்பட்டுள்ளன.

'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும்' என்ற பாரதியின் வாக்கு, சங்க இலக்கியத்தில் காணும் முல்லைத்திணைப் பாடல்களின் வழியும் பொலிவும் பெற்று விளங்குகிறது என்பது உண்மையைத் தெளிவிக்கலாகும்.

பின்னிணைப்பு

பின்னிணைப்பு 1

TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY

From

Dr. V.N. Madhava Rao,
B.Sc.(Ag.), D.I.H.
Professor & Head,
Department of Horticulture,
Tamil Nadu Agrl. University,
Coimbatore-3.

To

Thiru J. Annamalai, M.A.,
Asst. Professor of Tamil,
Presidency College,
Madras-5.

-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X-X

Hort./FCT/73 Dt.2.5.73

Sir,

Sub:- Information on Mullai.

Ref:- Your letter dt. 17.4.73.

***

Mullai Plant belongs to the *Jasminum auriculatum*. I am enclosing a note which will give details of the clones (varieties).

Jasminum Auriculatum = PARI MULAI

Yours faithfully,

(Sd.) V.N. Madhava Rao,

FOR HEAD OF THE DEPT. OF HORTICULTURE.

கூற்றுவகைப் பாடல்கள் எண்ணிக்கை

எண்	கூற்று	நற்	குறு	ஐங்	பரி	கலி	அகம்	முல்லை	நெடுநல்	மொத்தம்
1	தலைவன்	13	6	45	—	1	26	—	—	91
2	தலைவி	6	29	14	—	2	5	—	—	56
3	தோழி	9	7	29	1	2	5	—	—	53
4	செவிலி	—	2	10	—	—	—	—	1	13
5	பாணன்	—	—	1	2	—	1	—	—	4
6	உழையர்	—	—	—	—	—	3	—	—	3
7	பாகன்	1	—	—	—	—	—	—	—	1
8	காதல் உணர்ந்தோர்	—	—	1	—	—	—	—	—	1
9	கண்டோர்	1	—	—	—	—	—	—	—	1
10	பரத்தை	—	1	—	—	—	—	—	—	1
11	பெருமைபெற்றார்	—	—	—	—	—	—	1	—	1
12	தலைவன்-தலைவி	—	—	—	—	6	—	—	—	6
13	தோழி-தலைவி	—	—	—	—	2	—	—	—	2
14	தலைவி-தோழி	—	—	—	—	2	—	—	—	2
15	கற்றறிந்தார்	—	—	—	—	2	—	—	—	2
	ஆக மொத்தம்	30	45	100	3	17	40	1	1	237

பின்னிணைப்பு 3

(உவமை – பொருள்) 

	உவமை	பொருள்	பாடல்
1.	அவிழ்வை	வேலின் நுனை	அகம். 64:5-6.
2.	அங்கை	கோடல் மலர்	முல்லைப். 95.
3.	அஞ்சனம்	காயா மலர்	முல்லைப். 93.
4.	அடர்பொன்	கொன்றைக் கடிதழ்	ஐங். 430:1-2.
5.	அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர் அசைவளிக்கு அசைதல்	ஊர்ப் பூசல் கேட்டுப் போர்த்த ஏறுகளோடு நடம் பெறு கோவலர்	முல்லைப். 51-54.
6.	அம்பு தைத்த மயிலின் நடுக்கம்	தலைவியின் நடுக்கம்	முல்லைப். 80-84.
7.	அமிழ்து	பெண்ணின் நோக்கு	பரி. 12:57-58.
8.	அமை	பணைத்தோள்	அகம். 114:14.
9.	அரக்குநிறம்	செந்நிலப் பெருவழி	அகம். 14:1.
10.	அரவின் வாய்க் கொட்பட்ட பால்மதி	நுடையவேக் கதுப்பின் கொண்ட வெண்கோடு	கலி. 105:44-46.
11.	அரவினால் பற்றப்பட்ட உவா மதி	உறையிற்றி எடுக்கப்பெற்ற வள்ளைப் பசு	பரி. 10:75-76.
12.	அரவு நக்கு மதியின் மறுவு	அதிர் வந்த கல்வேர் நாவிற்றின் மறுவு	அகம். 114:4-5.
13.	அரவு வெளுக்கு படம் விரித்தல்	காந்தள் விரிந்தமை	பரி. 20:98-99.
14.	அருந்ததியின் கற்பு	புதல்வன் தாய் கற்பு	ஐங். 442:4-5.
15.	அவைப்பொரு அழல்	வெண்மயிரின் உச்சி வயிர	அகம். 104:8-9.
16.	அழுதபொற்றகம்	நெருஞ்சிலையின் பூவிதழ்	ஐங். 500:2-3.
17.	அழும்பில் அவன்	உடையாரின் வளம்	அகம். 44:15-18.
18.	அன்னப்பேடை	மகளிர்	பரி. 12:27.
19.	அன்னம்	மகளிர்	பரி. 10:44.
20.	ஆண்மகளிர் தோள்	கடு வாய் திறப்ப மாரித்த படம்	நற். 238:1-4.
21.	ஆழி	மகளிர் கழங்கு	அகம். 334:8.
22.	ஆடுத்தல்	நகம் நெருக்கிடும்	நெடுநல். 30.
23.	ஆக்குரல்	ஏற்றின் முழக்கம்	கலி. 113:27-28.

24. இடிமுழக்கம்	முரச முழக்கம்	அகம். 354:2.
25. இரவே தம்மான் இவம் படுத்தல்	கோடுடைத் தலைக்கடை ஊது விளரி	அகம். 124:6-7.
26. இருபெரு வேந்தர் பொருகளம்	துப்பும் ஏறும் பொருத தொழூஉ	கலி. 105:49.
27. இரும்பு முறுக்கு	மானின் மருப்பு	அகம். 4:3-4.
28. இளமாங்காய் போழ்ந்த தோற்றம்	கண்ணின் தோற்றம்	கலி. 108:28.
29. ஈர்க்கப்பு	குருவியின் சிறிய பிள்ளை	நற். 181:4-5.
30. உலக்கை நறுநெய் பால் விதிர்த்தல்	நம்பல் பொறிக் கான வாரணம்	நற். 21:6-8.
31. உருத்திரன் எருமை ஏறிய கூற்றன் நெஞ்சைப் பிளந்த குடரைக் கவிக்கொள்ளல்	பொதுவனைச் சாடிச் சரியக் குத்திக் கோட்டிடைக் கொண்டு குலைப்பதன்	கலி. 101:24-27.
32. உலகியல் திறம்	ஏறுகள்	கலி. 101:15.
33. உருவமரம் உலைத்தல்	எருமைப்பால் குத்தல்	கலி. 106:22.
34. கவிழ்ந்த தோற்றம்	செக்கலின் உருவ நெருஞ்சியின் தோற்றம்	அகம். 194:4.
35. எயிறு என முகைக்கும்	முல்லை முகை அரும்பும்	குறு. 186:2-3.
36. எரி	மலர்	அகம். 84:11.
37. எருது வயலை உழுதல்	தலைவர் காமமாகிய கலப்பையால் உழுதல்	பரி. 20:54.
38. எருமைக்கடா ஏறும் கூற்றுவனைக் காலால் உதைத்துப் பிளந்த சினத்துடன் அவன் உயிர் வாங்கிய இறைவன்	காரி ஏற்றை வலிபடத் தழுவி வருந்தி அதன் மேலே தோன்றி நின்ற பொதுவன்	கலி. 103:42-45.
39. எழுகளிறு மிதித்த அதவப் பழம் குழைதல்	அலரால் தலைவி வருந்திய நிலை	குறு. 24:3-6.
40. ஏற்றின் கழுத்திட்ட மாலை	ஏற்றின் கழுத்தில் பாய்ந்து தழுவிய பொதுவன்	கலி. 103:34-35.
41. கந்த காம பானத்தினை நரத்தால் வரிவரைவிடப்பட்ட தும்பி வாய்	கட்கள்	பரி. 10:95-99.
42. ஒரு குழையவன் மார்பு ஒத்தாரி	செம்மறு வெள்ளை	கலி. 105:11-12.
43. ஓம கூட்டத்து அழல்	சாந்தமிழ்ப் பனித முதலியவற்றோடு அரைக்கப்படும் அகிற்சாந்து	பரி. 10:81-84.
44. ஓவியம்	இந்திர கோபம் பரந்த செந்நிலம்	அகம். 54:4.
45. கற்றுள் வெள்ளம் கடத்தல்	தடவளாத்த அவரம் நீந்தல்	அகம். 24:9-10.

46. கற்சுக் குரவோர் வரவிட்ட குடரைய வாய்புகுத்தபோட்டுக் கையால் அறுத்த கீறல்	சிவந்த ஏற்றைச் செயிறுயிர் கொம்புகளைப் பிடித்துக் கொண்டு தழுவும் பொதுவன்	கலி. 103:50-55.
47. கடல் முழக்கம்	மாலை மறையும் ஞாயிறு	குறுந். 240:5-7.
48. கடல் கிளர்ந்த வருதல்	வையையில் நீர் வரவு	பரி. 12:7-8.
49. கடல் பரப்பு	நாவலின் பரப்பு	அகம். 204:2.
50. கடலின் பெருக்கம்	கற்பு வெள்ளம்	குறுந். 387:5.
51. கடுபுலவர்	மள்ளர்	ஐங். 432:3.
52. கருத்தலை மகளிர்	நீர்கொண்டு எழும் பெருங்கல் வானம்	குறுந். 287:3-8.
53. கல்	கலைமான்	ஐங். 464:1.
54. கல்	நிலம்	நற். 161:2.
55. கலைச்சிப்பட முறைவக் குடல பிறைபிடித்தெடுத்த செந்நிறமாலை	ஏற்றின் குடர் தோய்ந்த கொம்புகளுடனே ஒடிகள் சுற்றிப் பிடித்த காட்சி	கலி. 103:25-27.
56. கலிச்சிபோல் மண்டிற்றல்	இரும்பொறைரெத்தி ஒலி முரசு	கலி. 105:13-14.
57. கதிர்	கை	அகம். 164:1.
58. கயல்	கண்	நற். 316:3.
59. குருக்கொல்லியின் நிறம்	நறுங்கல்லின் நிறம்	நெடுநல். 50.
60. களிற்றின் நடக்கை	மேகம் கால் வீழ்த்தல்	அகம். 334:5.
61. கவிதையினை எடுத்த வீழும் நீர்	மயூரகை மதில் சொரிதல்	பரி. 20:105-107.
62. களிற்றுக் குழும் நாகு	நாகும் நடக்கும் உடன் செத்த	கலி. 110:12-15.
63. காந்தட் போதில் மணம்	நிலவின் முடியின் மாட்சி	அகம். 4:15-17.
64. காந்தள்	மெல்விரல்	குறுந். 167:1.
65. காயாஞ் செம்மலின் கொம்பை	மலையிடமிருந்த மேகம் மீள்தல்	நற். 371:1-2.
66. கார்	கற்றல் கறுப்பு	பரி. 12:15.
67. கார்மழை முழக்கு	தேரின் மணி ஒலி	அகம். 14:20-21.
68. கார்ப் பிறநு	நிலவின் வருகை	ஐங். 492:5.
69. கால் கடுப்பு	புரவியின் கடுநடைச் செலவு	அகம். 224:4-5.
70. காலை	நிலவன்	நெடுநல். 182.

71. காய்பாத்த இரு கரு பாலின் தவிர்	நடுக்கம் நீங்கா நெஞ்சம்	நற். 381:3-5.
72. கானவர் கவைக்கொம்பு	திரி மருப்பு இரலை	அகம். 34:3-4.
73. கிளைப் பிளவின் நாவி	பைம்பயிர்	அகம். 324:3-4.
74. கிணைமாய்	துவர மலர்.	புறம். 240:1-2.
75. கிளைதொட்டுப் பெரும் வெள்ளம் இறைத்துக்குழம்பக் கரப்பப் போதல்	காம வெள்ளம் பெருகாமிருக்க தலைவன் பிரிவு வருத்தம் படப்படுமாய்க் குறைந்த தலைவியுடன் சேர ஆதல்	குறு. 99:4-6.
76. கூடலாயம்	தலைவியின் நலம்	அகம். 44:18.
77. குருவிக்கு	புதல்வன்	அகம். 184:1-2.
78. குடை விரிதல்	காந்தள் மலர் விரிதல்	பரி. 20:100.
79. குருதி	தோன்றிப்பூ	முல்லை. 96.
80. குருதி உரு	செம்மூதாயின் தோற்றம்	அகம். 74:4.
81. குவளை	உண்கண்	குறு. 167:3.
82. குழல்	ஊர்க்கோய்க் கொன்றைப்பழம்	ஐங். 458:1.
83. குழைபசந்த நிலை	தலைவி பசந்தாள் எனும் நிலை	குறு. 280:2-3.
84. குன்றின் நடுவே திறந்தாற் போன்ற தோற்றம்	கோபுர வாயில் நிலை	நெடுநல். 88.
85. குன்றுகளிப்பச் செய்தமை	கதிர்ப் பாயலின் குன்றுநிலை	நெடுநல். 12.
86. கொடியியல்	தலைவியியல்	பரி. 20:94.
87. கொடியியலார் கை குவிப்பு	கோடலின் குவிந்த முகை	பரி. 20:98.
88. கொம்பு தாழ்தல்	நலிதல் வருதல்	அகம். 374:5.
89. கொல்லேற்றுச் சினம்	உயர் கதம்	கலி. 105:56.
90. கொலைமலிந்த தன்மை	மாலை நலமீந்தம்	அகம். 364:13-14.
91. கொல்லேறு கூடை குவிந்த திங்கள்	வளைந்த கோட்டையுடைய சிவந்த ஏறு	கலி. 103:15-16.
92. கொன்றை	பசலை	குறு. 183:1-2
93. கொன்றைப் போது	நலனைப் பிரிக்கும் பொற்காசு	குறு. 148:1-3.
94. கோவலர் இரவில் கொளுத்திய வேரடிக் கட்டை அவிப்பாரின்றித் தானே வெந்த தன்மை	தலைவியின் தலைவன் காமத்தீயில் அழிந்த பட்டுடும் நிலை	நற். 289:7-9.

95. சங்குவளைக் கொழுந்து	பசுமை மலர்	அகம். 24:2-3.
96. சிறந்திறு	சக்கரத்தால் அடிக்கப்பட்ட நவி	அகம். 324:10-11.
97. சிப்பி நாவி	நரைகள் உலவும் தோற்றம்	அகம். 224:7-8.
98. சிலம்பிற் கட்ட பிணைவை காதலிராம் பொற்றுறை	காற்றில் செல்ல சிவந்த பிடியில் புரவி	பரி. 12:87-89.
99. சிறுபல்லிய ஒலி	தேரைக்குரல்	அகம். 154:2-3.
100. சுடர் விரிதல்	எரியும் நெற்றிச் சுட்டி	கலி. 101:21.
101. சுடுபொன்	கொண்டை	ஐங். 432:2.
102. சூர்பணிப்பு	நக்கரம் ஒலி	அகம். 304:3-4.
103. செங்காரான் நிறம்	நகையுடன் பிறைபோல காதல் புல்லைமுடிப்பு	ஐங். 454:1-3.
104. செந்நாற் கடிய ஒலைல் நிற கவனம் பற்ற நுதலை விற நாவாகக் கொள்ளிறவல்	மடர் பிடித்த கொம்புடை எற்றில் ஒர் நிற கூடி நட்டமை நிற கவனம் வாசல் வாற்றில் நிரோல்	கலி. 103:28-31.
105. செம்பிற்றல் நிறைற நல்ல	நெருக்கவர் நிலை	நெடுநல். 112.
106. செய்துவிட்ட தோற்றம்	செந்நில மலர்	அகம். 304:6.
107. செலுச்செய்த வாளி	மகளிர் கவி	பரி. 20:37-38.
108. செல்வாக் செல்வி	முல்லைப் பூ	குறுந். 108:2-4.
109. செல்வாம் பரப்பில் உருக்கல்	செந்நிலம் பரப்பில் முல்லை வெட்டு	குறுந். 108:2-4.
110. நட்டைப் பறை ஒலி	தேரையின் ஒலி	குறுந். 193:2-3.
111. நண்டலை மணம்	நலவியின் கந்தல் மணம்	அகம். 204:12-13.
112. நம்புறவின் நாற்றம்	நலவியின் நுதல் நாற்றம்	ஐங். 413:1-2.
113. நலைமகள் மாரியில் எழுந்த வாக்கு வட்டிலெழ நீர் எழும் காட்சி	நலவியின் மேல் போல்ற கல்வி நாட்டுதால் மாரியில் கண்டான புல்லிலெழுந்த எருவி எழுமு	பரி. 12:68-70.
114. நலவியின் நுதல் மணம்	முல்லை மலர் மணம்	ஐங். 402:2.
115. தவிசியல்	வீழி மை	அகம். 324:3.
116. நவிரின் தவட்சி	சமலின் நடக்கம்	அகம். 294:7-8.
117. தாமரை	புதல்வன்	ஐங். 424:3-4.
118. திங்களின் படக்கிற மறு	வெள்ளேற்றைத் தழுவிக்கிடந்த உயர்மகன்	கலி. 103:46-49

எண்	உவமை	பொருள்	இடம்
119.	[illegible]	[illegible]	[illegible]. 163.
120.	[illegible]	[illegible]	அகம். 224:13-14.
121.	[illegible]	[illegible]	கலி. 104:10.
122.	[illegible]	[illegible]	கலி. 101:3-4.
123.	[illegible]	[illegible]	நற். 99:1.
124.	[illegible]	[illegible]	பரி. 12:93.
125.	[illegible]	[illegible]	கலி. 101:30-32.
126.	[illegible]	[illegible]	கலி. 101:16-20.
127.	[illegible]	[illegible]	அகம். 304:7.
128.	[illegible]	[illegible]	அகம். 324:7-8.
129.	[illegible]	[illegible]	பரி. 20:58.
130.	[illegible]	[illegible]	கலி. 103:26-29.
131.	தே (தேன்)	மொழி	ஐங். 466:5.
132.	தேர்	[illegible]	பரி. 20:56.
133.	[illegible]	[illegible]	புறம். 102:5-6.
134.	[illegible]	[illegible]	அகம். 374:8-9.
135.	[illegible]	[illegible]	அகம். 4:9-11.
136.	[illegible]	[illegible]	நற். 130:3-6.
137.	[illegible]	[illegible]	ஐங். 436:2-3.
138.	[illegible]	[illegible]	நற். 248:1-3.
139.	[illegible]	[illegible]	[illegible]. 90:1-3.
140.	[illegible]	[illegible]	பரி. 10:39-40.
141.	நிரைபறை அன்னம்	[illegible]	அகம். 234:3-4.
142.	நிலவின் இளம்பிறை	தலைவியின் முகத்து நுதல்	ஐங். 443:2-3.

143. நிழல்	[illegible]	ஐங். 454:2-3.
144. நிழல் விரிதல்	பிடவு முகை விரிதல்	குறு. 344:2-3.
145. நிறம் ஒப்பு	நீலப் பளிங்கு	குறு. 344:9.
146. நீர்சேர நிறைந்த நீலமணி	கொடு கொட்டு எழுந்த கொடுஞ்செவி எழில்	[illegible]. 3-5.
147. நீர்த்துறையில் நெய்புரந்த வெண்டுகில் ஈரப்படுத்தல்	மழைமேகத்தின் வெள்ளிய தோகை	கலி. 103:38-39.
148. நீர்நிலை நிலவன்	நீர் பொதி மேகம்	குறு. 314:1-2.
149. நீலவு	நெருக்கமான மேகம்	ஐங். 465:1.
150. நீலமணி	செறிந்த மயிர்க்கற்றை	பரி. 10:29.
151. நீலமணி	பூவையர்	குறு. 134:3.
152. நீலமணி	கழுதின் கழுத்து	பொருநர். 23.
153. நுண்ணிய கல்	[illegible]	கலி. 108:40.
154. நுண்ணிய நீர்த்திவலை	[illegible]	குறு. 304:1-2.
155. நன்னொடு மின்னல்	[illegible]	குறு. 254:13-14.
156. நாற்றம் நறிய பாட்டன் [illegible] பொருந்த கண்	[illegible]	கலி. 104:59.
157. நெடுந்தேர்	[illegible]	நற். 161:5.
158. நெய்த்தோர் நிறம்	[illegible]	பரி. 10:12.
159. நெருப்பு நிறம்	[illegible]	குறு. 84:6.
160. நெல்லிக்காய்	[illegible]	குறு. 204:1-2.
161. நெல்லிக்காய் [illegible]	[illegible]	குறு. 54:15-16.
162. நேமியால் வாள் [illegible]	[illegible]	கலி. 105:9-10.
163. பகல் [illegible]	[illegible]	ஐங். 456:1-2.
164. பச்சை நெய் தோய்த்த தோற்றம்	[illegible]	குறு. 244:1-2.
165. பசந்த உக்கள்	கொன்றைப்பூ	ஐங். 500:1.
166. பனை	தோல்	குறு. 324:2.
167. பனை	தோல்	ஐங். 468:3.
168. பனை	தோல்	ஐங். 481:1.

169. பணை	தோள்	நற். 121:12.
170. பணை	தோள்	நெடுநல். 36.
171. பணை முழக்கம்	எழிலி முழக்கம்	குறு. 84:2.
172. பரதவர் தூம்பு எறிதல்	பொதுவர் செரு எறிதல்	கலி. 106:25.
173. பல்	முல்லை முகை	கலி. 108:15-16.
174. பல்	முத்த	கலி. 108:15-16.
175. பல்லிதழ்	கண்	ஐங். 244:9.
176. பல்லிதழ்	கண்	ஐங். 471:2.
177. பல்பொறிப் புலி	வச்சிரத்தோல் புலியின் கண்	கலி. 105:15-16.
178. பறை ஒலி	முழவு ஒலி	குறு. 364:2-3.
179. பறைக்கண்	உலை	குறு. 324:6.
180. பனிமலர்	[illegible]	ஐங். 477:1.
181. பாம்பின் செக்கர்	மலைக்கு விளக்கு புறவின் தாய்	ஐங். 405:1-4.
182. பாணர் நயம்படு முரற்கை	தலைவன் நயந்த காதலி பயம் தெரிந்த இல்புற புணர்ச்சி நகரல்	ஐங். 407:1-3.
183. பாணர் நரம்பு உளர் முரற்கை	புறவின் கணவயல் தாம்புறம் [illegible]	ஐங். 402:1-3.
184. பாம்பால் பற்றப்பட்ட மதி	நறவுடை [illegible] மகளிர் கையில் தாங்கியவை	பரி. 10:75-78.
185. பாக்குறை	தெவிட்டல்	குறு. 224:6-7.
186. பால்மதி சேர்ந்த மறுவினைப் போல் விளங்கும் தீயின் வண்ணன்	பானிற வெள்ளைப் பெருந்தொடைப் பாய்ந்தானை தோளைத் தூக்கித் [illegible] தோற்றம்.	கலி. 104:35-38.
187. பானிற வண்ணன்	வெள்ளை ஏறு	கலி. 104:8.
188. பிடவின் [illegible] மலர்க்காட்சி	கண்ணி	குறு. 34:1-2.
189. பிடிக் கூட்டம்	மேகக் கூட்டம்	குறு. 334:5-9.
190. பிடி தழுவிய மா	பெடையைப் புணர்ந்த தலைவன்	ஐங். 410:3-4.
191. பிடி தழுவல்	நுரை	கலி. 108:40.
192. பீலி ஒள்பொறி	கருவிளை மலர்	நற். 110:4.
193. புகை	பொன்கொழித்தவிர் காதுகள் [illegible]	குறு. 294:2-3.

194.	புரவி	பாடி	முல்லைப். 28.
195.	புனைபா முகம்	மகளிர் எழில்	நெடுநல். 147.
196.	புதல்வன் கல்லைத் தவிர் தோற்றம்	நெய் தடவிய தோற்றம்	குறுந். 294:6-7.
197.	புறக்கை நிறம்	வெள்ளைச் சிற்றி	குறுந். 394:9.
198.	புலவி கடிந்தமைப் பொலிகலைத் தொகுதிப் பகுதி	வையையில் போர்களைப் பரப்பும் வகை	பரி. 10:127-128.
199.	பூசத்தி, கறையில் விட்ட வெள்ளாடை	தா மயிர் கவரும்	குறுந். 34:11-13.
200.	புழுதி படிந்த வாலை	புழுதி படிந்த கலவை	நற். 279:5-6.
201.	புள்ளி வெண்	கவிமாலி விதை	குறுந். 64:2.
202.	புள்ளிக்	மா	பரி. 10:14.
203.	பு	கல்	முல்லைப். 23.
204.	பு	கல்	புறம். 469:5.
205.	புறாடி வந்தற்ற கலப்பு	காதற் கலவர் வந்த எதிர்ப்படல்	பரி. 10:35-36.
206.	பெய்கா லைக் கொட்டல்நிரை	பெய்யார் பரதி சத	கலி. 106:13-14.
207.	பெயர்த்த எதிரிய கொல்லையவர்	நீர் நிறைந்த பசலை பெற்றவன்	புறம். 458:1-4.
208.	பெரிய புலித்திறமும் பெரிய கவிற்றுத் திறமும் தங்கள் மாறுபட்டுப் பொருதல்	போரவர் எற்றடல் பொருத காட்சி	கலி. 103:56-57.
209.	பெருமை	கல்	கலி. 103:7.
210.	பொன்	கொன்றைப்பூ	முல்லைப். 94.
211.	பொன்	பீரம்பூ	புறம். 464:1-2.
212.	பொன்	கொன்றை மலர்	புறம். 420:1.
213.	பொன்	கொன்றை மலர்	நற். 221:3-4.
214.	பொன்	கொன்றை மலர்	நற். 242:3.
215.	பொன்	பீரப்பூ	நெடுநல். 14.
216.	பொன்	பூத்த நார்	புறம். 452:5.
217.	பொன் நிறை தொங்கவிடல்	கொன்றைப்பூ மலர்ந் தொங்கவிடல்	குறுந். 364:4-5.
218.	பொன் செய் கொல்லன் எழுப்பும் ஒலி	தேரையின் ஒலி	நற். 394:2-3.
219.	பொன் செய் புனை நிறை கட்டிய மகளிர் கருப்பு	கல்லுகள் நெருங்கிய புதப்பும் கொன்றை	ஐங். 21:1-4.

220. போர் பெய் பெரு வாள் திறத்தல் தோற்றம்	கலைக் கிளர்ந்தெழுந்த குழுவின் திரண்ட கொம்புடையவர்கள் காட்சி	புறம். 233:2-3.
221. போர	கண்	அகம். 354:13.
222. மலர் நீர்வார் கண்	கருவிளை மலர்	அகம். 294:4-5.
223. மகளிர் கூப்பிய கை	காந்தள் மலர	பரி. 20:98-99.
224. மஞ்ஞை	தலைவி	ஐங். 492:1.
225. மஞ்ஞை	தலைவி	ஐங். 413:2.
226. மட்டம் பெய்த மணிக்கலம்	நீட்டோரிப் பனை	குறுந். 193:1.
227. மடக்கண் மரை [illegible]	தலைவி தலைவரை வரவேற்கும் நேரம்	குறுந். 64:1-4.
228. மடமதர் உண்கண் பிடித்தல்	கயிற்றப் பிடித்தல்	பரி. 20:55.
229. மணி	கூந்தல்	நற். 374:6.
230. மணி	காயாம்பூ	ஐங். 420:1-2.
231. மணி	கருவிளை மலர்	நற். 221:1.
232. மணி	காயாம்பூ	நற். 242:4.
233. மணி	காயாம்பூ	கலி. 101:5.
234. மணி	தோலின் நிறம்	கலி. 102:25.
235. மணி நிறம்	தோகை நிறம்	ஐங். 431:3.
236. மணி நிறம்	குவளையின் நிறம்	நற். 316:1.
237. மணி நிறம்	ஈவின் நிறம்	நெடுநல். 111.
238. மணிக்கு பவளம்	காயாவுடன் [illegible] தோற்	அகம். 374:12-13.
239. மணிகட்டித்த பவளம்	காயாவின் பழம்பூவின் நவல் தோற்	அகம். 14:2-4.
240. மணிமிடை பவளம்	காயா, செம்மண் நவல் தோற்	அகம். 304:13-15.
241. மணிவரை மலர்வின் [illegible]	வெட்சிக்காரி	கலி. 103:11-12.
242. மத்தம் பிணித்த கயிறு	தலைவியின் நலம்பற்றிச் சுரக்கும் நெஞ்சு	கலி. 110:10-11.
243. மத்தள ஒலி	புலிவாய் [illegible]	நற். 130:3-6.
244. மதி	நல்லுதல்	நற். 316:5-6.
245. மதியுக கலைவை உள்ளுறைந்த தெய்வங்கள்	மலையின் பக்கம் வடக்கப் பெய்த நறவினை [illegible] போன்ற காயாம் பழம் மலர்	பரி. 10:73-78.

246. மயில்	சாவல்	பரி. 20:69.
247. மயிலை	பசி - புகை	நெடுநல். 98-99.
248. மயிலடி	நொச்சியிலை	நற். 115:5.
249. மயிலின் ஏறல்	விரிந்த மயிலின் பீலி	அகம். 194:15-16.
250. மயிலெருத்த	மாமேனாம் கழுத்து	கலி. 108:38.
251. மயிலெருத்த	காயாமலர்	குறுந். 183:5-6.
252. மரீ	கன்று	ஐங். 427:1.
253. மரீ	மக்கள்	ஐங். 423:4.
254. மழை நுடங்கல் ஒலி	தேரில் கட்டிய மணி ஓசை	அகம். 184:17-18.
255. மழையின் ஆரவாரம்	கோயிலின் ஆரவாரம்	நெடுநல். 99-100.
256. மழையின் பனிமாவி	பனிமூட்டத்துப் புகை	பரி. 10:122-125.
257. மழு	கல்	அகம். 114:14.
258. மழைநீர் சொரியும் ஒலி	யாழ் நரம்பின் ஒலி	அகம். 374:6-8.
259. மழை முழக்க இடி	ஏறு தழுவலின் பேரொலி	கலி. 101:10.
260. மள்ளர்	நல்லேறு	கலி. 106:9-10.
261. மா பிணையை தழீஇப் புணர்தல்	தலைவன் தலைவியை விரும்பிக் கலந்து புணர்தல்	ஐங். 419:3-4.
262. மா மலர்	மழைக்கண்	கலி. 108:46.
263. மாரி பெய்கை	கற்பின் நெறிக்கொடை ஒழுக்கை	நற். 381:7-10.
264. மாலை	மத்திகை	பரி. 20:61.
265. மான் மறி பிணை, கடுக்கை	தலைவன் புதல்வன் தலைவி, கடுக்கை	ஐங். 401:1-3.
266. மானின் மருண்ட நோக்கம்	மகளிர் கண்	அகம். 74:10.
267. மானின் மருண்ட பார்வை	தலைவியின் கண் நோக்கு	ஐங். 492:3.
268. மீன்	ஒளி	அகம். 234:10.
269. மின்னொளி	மேகங்களின் ஒளி	பரி. 12:11.
270. மீன் புக்க விசும்பு	வான்பொழி வெள்ளை	கலி. 103:13-14.
271. முக்கண்ணான் உரு	ஏரால்	கலி. 104:12.
272. முக்கோலின் காவியுடையிட்டு வைத்தல்	சில்லின் அடி தாக்கல்	முல்லை. 37-39.

273. முகைவாய் திறந்த முல்லையம்	குறுமகள் கதுப்பின் நாற்றம்	அகம். 244:4-5.
274. முத்து	நகல்	நெடுநல். 37.
275. முத்த	பனிநீர்	பரி. 10-13.
276. முரசு முழக்கம்	மேகத்தின் இடி முழக்கம்	குறு. 270:1-3.
277. முல்லைமுகை	பல்	குறு. 126:3-4.
278. முல்லை வெண்முகை	முறுவல்	குறு. 162:4.
279. முலை	குடம்	நெடுநல். 120-121.
280. முள்	பல்	ஐங். 495:5.
281. முளை	எயிறு	கலி. 104:18.
282. மேகத்தில் மின்னிக்க	பொன்னாலாய குதிரைச் சேணம்	அகம். 124:9.
283. மேகம் இல்லாத வானத்து மீன்	முட்டை வெண்மைத் தோற்றம்	அகம். 254:1-2.
284. மை	மடப்பிடி	பரி. 10:47.
285. யாழிசை	வண்டினங்கள் ஆர்ப்பு	முல்லைப். 8.
286. யாழிசை ஒலி	மலைத்தாரை வீழும் ஒலி	நற். 139:3-4.
287. யாழ்	தும்பி	பரி. 12:85-86.
288. யானைத் துதிக்கை	பாம்பு	முல்லைப். 69.
289. வச்சியமான்	நவ்வி	பரி. 20:84.
290. வம்பலர் வாயவிழ்ந் தன்னார்	இளைஞர்	பரி. 10:19-20.
291. வம்பு விரித்தல்	செம்புலப் புறவு	நற். 221:5.
292. வயல்	காரிகை	பரி. 20:53.
293. வரை	கவரிக் கயிற்சி	நெடுநல். 108.
294. வரை	மார்பு	அகம். 384:11-12.
295. வல்லோன் செய்கை	செந்நிலப் புறவு	அகம். 134:5-6.
296. வளர்பிறை போல வழிவழிப் பெருகல்	இறையோள் நெகிழ்ந்த நட்பும் விழுதல்	குறு. 289:1-2.
297. வலை உடைந்து கிடத்தல்	காந்தளின் வெள்ளிதழ் குதிரைக் குளம்பால் துவைபட்டுக் கிடத்தல்	நற். 161:6-7.
298. வளைவில்	இறகை	கலி. 117:3-4.
299. வாய்	தொட்டி	பரி. 20:50-51.
300. வாழைப்பூ உதிர்ந்த வெறுங் குலை	மானின் திரி மருப்பு	அகம். 134:10-12.

301. வாளைப் பகுவாய்	விரலை முடக்கு மோதிரம்	நெடுநல். 143:144.
302. வாக்கியம் ஒளிர்தல்	குன்றம் குறைப்பட்ட வடுப்பகைக்கலின் திறை சேதி	அகம். 144:15-17.
303. வாயல் பெய்த நல்லிசை	பாணர் பாடிய பழமை பண்பு	குறுந். 323:2-4.
304. வாவி உரு	முக்கட்ட செய்பு	அகம். 94:2-3.
305. விளம்பு வடிப்பு	கலிமாவின் வேகம்	நற். 361:3.
306. விசைத்த வாங்கு தகுதி	வெய்த உயிர்ப்பு	அகம். 224:3.
307. வித்தகர் தாளுறு பெய்வடை	பதினீ செவ்வாய் நடை	பரி. 10:24-26.
308. விரித்த குடை	காற்றில் விரிந்த மயிர்	பரி. 20:98-100.
309. விம்மக விரலின் பொருந்திய சேர்க்கை	துயிலில் தலைவன் மார்பினைச் சேர்ந்த சேர்க்கை	குறுந். 370:2-5.
310. விரிவின் கிடப்பு	கொடி	நெடுநல். 109.
311. விருப்புக்குறை நெஞ்சத்த எஃகு எறிதல்	குயிலின் குரல்	நற். 97:1-4.
312. வீரர் வாளாலும் அம்பாலும் மாறுபட்டுப் போர் செய் களிறுகள் ஒன்றோடு ஒன்று பொருத்த முட்டும் பொருது களம்	மைந்தரும் மகளிரும் நீராட்டயர்ந்ததால் புனல் தெளிவிழந்தல்	பரி. 10:107-111.
313. வெஞ்சின அரவின் பை அழுந்தல்	கோடல் முகை முதல் விரி தோற்றம்	அகம். 154:6-7.
314. வெருக்குப் பல்	முல்லை அரும்பு	குறுந். 240:3.
315. வெருகு சிரித்தல்	பூத்த முல்லை	குறுந். 220:3-5.
316. வெள்ளப் பெருக்கு	காதல் பெருக்கு	பரி. 12:34-35.
317. வெள்ளி	கதை	நெடுநல். 110.
318. வேங்கை நறவ	மேனியில் பரவிய சுணங்கு	அகம். 174:10-12.
319. வேய்	தோள்	கலி. 104:24.
320. வேல் நுதி	ஏறு மருப்பு	கலி. 104:34.
321. வேல் வல்லான் நிறம்	சிவந்த ஏறு	கலி. 104:14.
322. வேல் வலான் உடலகத்தாழ்ந்த வெண் குடர்	வெள்ளைச் சேய்	கலி. 105:17-18.
323. வேளாளர்	நலவர்	பரி. 20:63.
324. வைகு	தொழுவம்	பரி. 20:60.
325. வையை கடவுள் மடுத்தல்	மகளிர் திருமுகத்தே தப்பிப் போகின்ற பரத்தை	பரி. 20:41-42.

([illegible]) 

[illegible] (29) - நற்.42:12; 81:7; 321:7; 367:7; 374:9. குறு.323:6. ஐங்.404:1; 408:2; 413:4; 414:3; 420:5; 466:5; 482:1; 483:4; 492:5; 495:5; 497:4. பரி.12:44. அகம்.4:17; 34:10; 104:16; 114:15; 154:15; 254:8; 284:13: 324:2; 374:10; 384:7. பெரும்.166.

[illegible] (2) - கலி. 106:32; 40.

[illegible] (1) - கலி. 114:16.

[illegible] (1) - கலி.113:24.

[illegible] (13) - கலி.101:38; 103:64; 67; 70; 105:52; 107:20; 109:12; 110:9; 111:5; 22; 114:20. [illegible].13.

[illegible] (20) - கலி.101:34; 47; 102:30; 103:33; 37; 47; 71; 104:6; 20; 72; 105:7; 58; 107:20; 25; 108:9; 58; 110:1; 113:7; 10; 115:4.

[illegible] (2) - நற். 206:3. குறு. 221:4.

[illegible] (5) - நற்.142:4; 169:7. அகம்.94:4; 274:8; 304:1[illegible]

[illegible] (15) - நற்.69:4; 121:4; 242:10. குறு.65:1; 183:4; 220:2. அகம்.4:4; 14:6; 34:4; 74:9; 154:8; 194:6; 304:9; 314:6. [illegible].99.

[illegible] (2) - அகம்.194:13; 314:4.

[illegible] (24) - நற்.59:8; 121:6; 142:11; 364:8. குறு.233:7; 209:8; 344:6; 370:2. பரி.10:64; 20:14 ([illegible]) கலி.104:61; 76; 105:65; 106:43; 108:36; 44; 109:22. அகம்.94:14; 134:16; 254:20; 274:14; 284:13. 394:16

[illegible] (2) - ஐங்.459:5. அகம்.14:21.

[illegible] (1) - பெரும்.91.

[illegible] (11) - நற்.130:3; 316:1; 394:7. குறு. 314:2; ஐங்.411:1; 420:2; 433:2; 452:2; 455:2; அகம்.84:2. [illegible].5.

குருகு (57) – நற்.242:10. குறு.100:6; 275:3; 319:1; 344:3. கலி.101:9; 36; 41; 102:9; 27; 28; 29; 31; 32; 103:17; 23; 24; 28; 34; 36; 48; 58; 63; 65; 72; 104:18; 23; 31; 32; 42; 48; 60; 71; 73; 105:34; 44; 47; 51; 56; 106:9; 15; 22; 31; 36; 38; 43; 107:3; 4; 31; 108:48; 109:4; 113:28; 116:14; அகம்.64:11; 134:11; 234:11. நெடுநல்.4.

குருளை (1) – அகம்.104:11.

குரூஉ (7) – ஐங்.484:2; கலி.117:11; (காட்டு). அகம்.154:10; 164:4; 304:5; 394:13. முல்லைப்.101.

குரம்பை (2) – நற்.161:7; அகம்.4:15.

குரவம் (14) – நற்.242:4; 371:1. குறு.183:5; ஐங்.412:1; 420:2. கலி.101:5; 103:1; 52; 108:10; 43. அகம்.14:2; 304:14; 374:13. முல்லைப்.93.

குரல் (61) – நற்.99:8; 115:7; 242:5; 248:4; 289:6; 316:9. குறு. 21:4; 65:3; 66:5; 126:5; 148:5; 162:1; 186:1; 188:2; 233:4; 251:4; 382:5. ஐங். 411:2; 413:3; 417:1; 427:2; 433:3; 441:2; 448:4; 451:1; 452:2; 453:3; 454:3; 455:2; 461:2; 462:1; 465:2; 468:2;3; 476:1; 484:1; 491:1; 492:5; 493:3; 496:2; 497:3; 499:2. பரி.12:15; 20:10. கலி.103:24; 106:8; 109:1. அகம்.4:7; 14:20; 54:3; 134:2; 144:3; 194:16; 204:5; 234:13; 304:16; 314:7; 334:13; 364:9; 374:18; 394:4.

குரவர் (1) – அகம்.94:10.

குரலைக்கூட்டி (1) – குறு.210:1.

குவளை (26) – நற்.238:1; 321:3; 394:1. குறு.21:4; 183:7; 319:2. ஐங்.425:2; 430:3; (காய்) 435:3; 461:2; (காய்) 465:2; 499:2. பரி.20:10. (காய்) கலி.106:49; 108:27; 113:23; (காய்) 115:16. அகம்.4:7; 134:1; 164:7; 284:6; 314:5; 344:6; முல்லைப்.24; (காய்) 97. நெடுநல்.129.

குவவுக் (1) – அகம்.34:3.

குவிமுகிழ (5) – நற்.121:10; 381:3. பரி.10:30. கலி.113:23. முல்லைப்.24.

கூழையொக் (3) – ஐங்.404:4; 406:4; 407:4.

குடம் கட்டினர் (1) – கலி.107:2.

பின்னிணைப்பு 5

முல்லையும் பொருள்வகையும்

1. Arabian Jasmine – கொடி முல்லை

2. Trichotomus – flowering smooth Jasmine – கொடி முல்லை

3. Wild Jasmine – காட்டு மல்லிகை

4. Horned Jasmine – ஊசி மல்லிகை

5. Pointed leaved wild Jasmine

6. Indian birth – wort

7. Forest, Pastoral tract.

8. A melody – type of the forest tracts – முல்லைநிலப் பண்கள்

9. A secondary melody – type – சாதாரிப்பண்

10. Patient endurance of a lady love during the period of separation from her lover – பிரிவைப் பொறுத்த தலைவி இருத்தல்

11. Chastity – கற்பு

12. Chief characteristic – சிறப்பியல்பு

13. Victory – வெற்றி

14. முல்லைப் பாட்டு

15. முல்லைக் கலி

---

* Tamil Lexicon Vol. VI, P.3280.

பின்னிணைப்பு 6

முல்லைச் சிறப்புத் தொடர்கள் XXIV

1. குடுமை நெடுமகன்	நற்.266:3; குறு.221:4.
2. இருந்தேர் உழவர்	அகம்.314:4.
3. கவர்கோற் கோவலர்	அகம்.264:4.
4. காடுறை இடையன்	அகம்.394:13
5. கான்கெழு நாடன்	ஐங்.430:3.
6. கானத் தண்டர்	குறு.210:1.
7. குடம் சுட்டவர்	கலி.107:2.
8. குறும்பல் பொறைய நாடுகிழ வோன்	ஐங்.404:4.
9. குறும்பொறை நாடன்	அகம்.4:13
10. கொடுங்கோல், கல்லாக் கோவலர்	அகம்.74:15-16
11. கொடுங்கோற் கோவலர்	நற்.69:8; முல்லைப்.15; பெரும்.
12. கொல்லை உழவர்	அகம்.194:13.
13. கொல்லைக் கோவலர்	நற்.266:1; 289:7.
14. கோட்டினத் தாயர்	கலி.103:33; 105:58.
15. கோடுடைக் கையர் துளர்எறி வினைஞர்	அகம்.194:13.
16. கோவினத் தாயர்	கலி.103:37; 107:3.
17. கோற்றலைக் கோவலர்	அகம்.54:10.
18. தெறிகோல் மறவர்	அகம்.284:8.
19. நல்லாயர்	கலி.102:30.
20. நல்லினத் தாயர்	கலி.104:6; 113:10.
21. நல்வய லூரன்	ஐங்.459:5.
22. பல்லா தந்த கல்லாக் கோவலர்	நற்.364:9.
23. பல்லாக் கோவலர்	குறு.388:6.
24. பறிப்புற இடையன்	அகம்.94:4.
25. பால்நொடை இடையன்	நற்.142:4.
26. புல்லினத் தாயர்	கலி.103:47; 110:1; 113:7; 115:4.
27. புறவணி நாடன்	ஐங்.405:4; 424:1.
28. புறவொடு கிழவோன்	ஐங்.406:4.
29. புன்புல நாடன்	ஐங்.421:3.
30. முதைப்புனங் காவலர்	அகம்.94:10.
31. மென்புல வைப்பின் நாடுகிழ வோன்	ஐங்.407:4.
32. வன்கண் இடையன்	நற். 169:7.
33. வன்புல நாடன்	ஐங்.400:2.
34. வயமான் தோன்றல்	ஐங்.500:5.
35. வரையக நாடன்	ஐங்.498:5.

முல்லைத் தொடர்கள்

1. கருவிளை, ஒண்பூந் தோன்றியொடு	நற். 221:1-2.
2. குருக்கத்தியொடு, பிடவிகை	நற். 97:6-7.
3. குவளையொடு தொடுத்த நறுவீ முல்லை	நற். 307:8.
4. கொன்றை, குருந்தோ டலமரும்	குறு. 148:3-4.
5. கொன்றையும் பிடவமு முடைத்தே	ஐங். 435:3.
6. கொன்றையொடு மலர்ந்த குருந்தும்	ஐங். 436:3.
7. தங்கமழ் முல்லை தோன்றியொடுவிரைஇ	அகம். 94:5.
8. தளவம் முல்லையொடு தலைஇ	அகம். 264:15
9. தளவின் பைங்கொடி தழீஇ.....முல்லை	ஐங். 454:1-3.
10. நறவ் முல்லையொடு தோன்றி தோன்ற	அகம். 164:6
11. பனிப்பூந் தளவொடு முல்லை	கலி. 108:42.
12. பாங்கரும், முல்லையும்	கலி. 111:3-4.
13. பிடவும் கொன்றையும் கோடலும்	நற். 99:9.
14. போதவிழ் தளவொடு பிடவலர்ந்த	ஐங். 412:2.
15. பைங்கொடி அவரை....முல்லையொடுகஞல	குறு. 240:1-3.
16. பைங்கொடி முல்லை....தளவொடுகஞல	குறு. 382:1-3.
17. முல்லை இல்லமொடு மலர	அகம். 364:7.
18. முல்லை குருந்தொடு	கலி. 113:25.
19. முல்லை முகைவு முருந்த	கலி. 103:6; 108:15.
20. இல்லமொடு, பைங்காற் கொன்றை	அகம். 4:1-2.

பின்னிணைப்பு 8

வந்த தொடரே மீண்டும் வரும் இடங்கள்

1. இவள் மற்றவள் கிடக்கை	ஐங். 401:3; 409:3.
2. ஏற்றெமை நெஞ்ச இடம்பட்டு	கலி. 101:25; 103:45
3. கல்பயில் குரல மல்லிறை புதரும்	அகம். 64:14; 14:11.
4. கார்தொடங் கின்றே	ஐங். 411:2; 413:3; 453:3.
5. கார்தொடங் கின்றே காலை	நற். 242:5; ஐங். 468:2; 493:3; அகம். 364:9.
6. கானலம் புறவி	அகம். 314:8; 334:11.
7. கொம்பலர்ந் புறவி	அகம். 4:8; 124:10; 154:11.
8. கொல்லைக் கோவலர்	நற். 266:1; 289:7.
9. செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு	குறு. 270:5; 275:5.
10. நன்றே காதலர் சென்ற வாறே	ஐங். 431-440 (10)
11. நின்னே போல மஞ்ஞை யால	ஐங். 413:2; 492:1.
12. நுண்பஃ றுளைவ பொருதிற நுணைப்ப	அகம். 274:7; நற். 142:5.
13. புள்ளியற் கலிமா	ஐங். 481:4; 486:5; அகம். 64:2.
14. பைபுல் நல்யாற் செல்வழி	அகம். 314:12; 214:13.
15. பொற்பட்ட கலிமா	நற். 361:3; அகம். 114:16.
16. முல்லை சான்ற கற்பின் மெல்லியற் குறுமகள் உறைவின் ஊரே	அகம். 274:13-14; நற். 142:10-11.
17. முல்லை முகையும் முருக்க நிவந்தன பல	கலி. 103:6-7; கலி. 108:15-16
18. வன்புலக் காட்டுநாட் டதுவே	நற். 59:6; அகம். 94:12.
19. விருந்தயர் விருப்பினள்	நற். 361:9; 374:8.

பின்னிணைப்பு 9

திணைவழிப் பாடல்கள்

எண்	நூற்பெயர்	முல்லை	குறிஞ்சி	மருதம்	நெய்தல்	பாலை	மொத்தம்
1.	நற்றிணை	30	132	32	102	104	400
2.	குறுந்தொகை	45	147	48	71	90	401
3.	ஐங்குறுநூறு	100	100	100	100	100	500
4.	பரிபாடல்	3	3	2	-	-	8
5.	கலித்தொகை	17	29	35	33	35	149
6.	அகநானூறு	40	80	40	40	200	400
7.	முல்லைப் பாட்டு	1	-	-	-	-	1
8.	நெடுநல்வாடை	1	-	-	-	-	1
9.	குறிஞ்சிப்பாட்டு	-	1	-	-	-	1
10.	பட்டினப்பாலை	-	-	-	-	1	1
	மொத்தம்	237	492	257	346	530	1,862

ஐங்குறுநூற்றின் நெய்தல் திணைக்குரிய 129, 130ஆம் பாடல்களின் ஏடும் கிடைத்தில.

பின்னிணைப்பு 10

[illegible]

(பாடிய பாடல்கள்

எண்	பெயர்	பாடிய மொத்தப் பாடல்கள்	நற்.
1.	அகம்பன் மாலாதனார் (பாண்டிய நாட்டுப்புலவர்)	1	81(10)*
2.	அரிசில்கிழார் (ஊரால் பெயர் பெற்றவர் சோழநாட்டுப் புலவர்)	18	
3.	ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார் (ஊராலும் சிறப்பாலும் பெயர் பெற்றவர். சோழ நாட்டுப் புலவர்)	1	
4.	ஆவூர் மூலங்கிழார் (ஊரால் பெயர் பெற்றவர். சோழநாட்டுப் புலவர்)	11	
5.	இடைக்காடனார் (ஊரால் மரபால் பெயர் பெற்றவர். சோழநாட்டுப் புலவர்)	10	142(11) 316(10)
6.	இளங்கீரந்தையார் (இளம் என்னும் அடைபெற்ற புலவர்)	1	
7.	இளந்திரையன் (தொண்டைநாட்டுப் புலவர் - மன்னன்)	4	99(10)
8.	இளம்புல்லூர்க்காவிதி (ஊரால், தொழிலால் பெயர் கொண்ட புலவர் - பாண்டியநாட்டுப் புலவர்)	1	89(11)
9.	உம்பற்காட்டு இளங்கண்ணனார் (ஊரொடு தொடர்ந்த பெயர்கொண்ட புலவர்)	1	
10.	ஒக்கூர் மாசாத்தனார் (ஊரொடு தொடர்ந்த பெயரால், தெய்வத் தால் பெயர்கொண்ட புலவர்)	2	
11.	ஒக்கூர் மாசாத்தியார் (ஊரொடு தொடர்ந்த பெயரால், தெய்வத்தால் பெயர்கொண்ட புலவர்	8	

புலவர்கள்

(முல்லைத் திணைப் பாடல்களின் விளக்கம்)

பாடிய முல்லைத் திணைப் பாடல்கள்								
குறு.	நற்.	பரி.	கலி.	அகம்.	முல்லைப்.	நெடுநல்.	மொ. அடிகள்	மொ. மு. பாடல்கள்
							10	1
103(6)							6	1
				64(17)			17	1
				24(18)			18	1
251(7)				194(19) 274(14) 284,304 (13,21) 374(18)			113	8
148(6)							6	1
							10	1
							11	1
				264(15)			15	1
				14(21)			21	1
126,186 (5,4) 220,275 (7,8)				324(15) 384(14)			53	6

எண்	பெயர்	பாடிய மொத்தப் பாடல்கள்	நற்.
12.	ஒருசிறைப் பெரியனார்	3	121(12)
13.	ஓதலாந்தையார் (தொழிலால் பெயர் பெற்றவர்)	103	
14.	ஔவையார்	59	371(9) 381(10) 394(9)
15.	கங்குல் வெள்ளத்தார் (உவமைத் தொடரால் பெயர் பெற்றவர்)	1	
16.	கச்சிப்பேட்டு இளந்தச்சனார் (ஊரால், தொழிலால் பெயர்பெற்றவர் - தொண்டைநாட்டுப்புலவர்)	1	206(9)
17.	கடுவன் மள்ளனார் (மரபால் பெயர் பெற்றவர்)	4	
18.	கதக்கண்ணனார் (வழக்க ஒழுக்கத்தால் பெயர் பெற்றவர்)	2	
19.	கதப் பிள்ளையார்	5	
20.	கந்தரத்தனார் (தொண்டைநாட்டுப் புலவர்)	8	238(11)
21.	கபிலர் (பாண்டிய நாட்டுப் புலவர்)	235	59(10)
22.	கரும்பிள்ளைப் பூதனார் (தெய்வத்தால் பெயர் பெற்றவர்)	1	
23.	கருவூர்ப் பவுத்திரனார் (ஊரொடு தொடர்ந்த பெயரால் பெயர் பெற்றவர்) - சேரநாட்டுப் புலவர்)	1	
24.	கழார்க்கீரனெயிற்றியனார் (ஊரொடு தொடர்ந்த பெயர் கொண்ட புலவர்)	1	
25.	காக்கை பாடினியார்	12	
26.	காசிபன்கீரன்	1	248(9)
27.	காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார் (ஊரொடு தொடர்ந்த பெயரால், தொழிலால் பெயர் பெற்றவர் - சோழநாட்டுப் புலவர்)	1	

பாடிய முல்லைத்திணைப் பாடல்கள்								
குறுந்.	ஐங்.	பரி.	கலி.	அகம்.	முல்லைப்.	நெடுநல்.	மொ. அடிகள்	மொ.மு. பாடல்கள்
							12	1
21(5)							5	1
99(6) 183(7)							41	5
387(5)							5	1
							9	1
				354(14)			14	1
94(7)							7	1
64(5)							5	1
135(7)							18	2
							10	1
		10(131)					131	1
162(6)							6	1
				294(16)			16	1
210(6)							6	1
							9	1
					1(103)		103	1

எண்	பெயர்	பாடிய மொத்தப் பாடல்கள்	நற்.
28.	கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார் (ஊரொடு தொடர்ந்த பெயர் பெற்றவர் சோழநாட்டுப் புலவர்)	1	364(12)
29.	கிள்ளி மங்கலங்கிழார் (ஊரொடு தொடர்ந்த பெயரால் பெயர் பெற்றவர் - பாண்டியநாட்டுப் புலவர்)	4	
30.	குடவாயிற் கீரத்தனார் (ஊரொடு தொடர்ந்த பெயரால் பெயர் பெற்றவர் - சோழநாட்டுப் புலவர்)	18	42(12)
31.	குழற்றத்தனார் (வழக்க வொழுக்கத்தால் பெயர்பெற்ற புலவர்)	1	
32.	குறுங்கீரனார் ('குறு' என்றும் அடைபெற்ற புலவர்)	1	
33.	குன்றூர் மருதனார் (ஊரொடு தொடர்ந்த பெயர்கொண்ட புலவர்)	2	
34.	கூடலூர் கிழார் (ஊரொடு தொடர்ந்த பெயர்கொண்ட புலவர்)	4	
35.	கொல்லன் அழிசி (தொழிலால் பெயர்பெற்றவர்)	4	
36.	கொற்றங்கொற்றனார் (கொற்றன் என்றும் பெயர்பெற்ற புலவர்)	2	
37.	கோக்குளமுற்றனார் (ஊரொடு தொடர்ந்த பெயரால் பெயர் பெற்றவர் - சோழநாட்டுப் புலவர்)	2	
38.	கோவர்த்தனார் (தெய்வத்தால் பெயர்பெற்றவர்)	2	
39.	கோவூர் கிழார் (ஊரால் தொடர்ந்த பெயரால் பெயர் பெற்றவர் - சோழநாட்டுப் புலவர்)	17	
40.	சித்தலைச் சாத்தனார் (உவப்பால் தெய்வத்தால் பெயர்பெற்றவர்)	10	

ENGLISH

123. Abercrombie, L., — Principles of Literary Criticism, First Publish, Vora & Co., Publishers Private Ltd., Bombay, 1955.

124. Abercrombie, L., — The Idea of Great Poetry, Martin Secker (Ltd.), Ed.3, London, 1926.

125. Basil Worsfold, W., — Judgment in Literature, First Edition, J.M. Dent & Sons Ltd., London, 1951.

126. Bertrand Russel, — Marriage and Morals, George Allen Unwin Ltd., London, 1929.

127. Bradley, A.C., — Shakespearean, Tragedy, Macmillan & Co. Ltd., London, 1957.

128. Bradley, A.C., — Oxford Lectures on Poetry, Macmillan & Co. Limited, Ed. 2, London, 1909.

129. Chelliah, J.V., — Pattupattu, Ed.2, S.I.S.S.W., Publishing Society, Madras, 1962.

130. Douglas, W.C., — The Pastoral Elegy in English Oxford University Press, Madras, 1934.

131. Dubois, J.A. and Beauchamp, K., — Hindu manners, Customs and Ceremonies, Third Edition, The Clarendon Press, Oxford, 1906.

132. Edmund Blunden — Nature in English Literature, Second Impression, The Hogarth Press, London, 1949.

133. Elizabeth Drew, — Discovering Poetry, Oxford University Press, London.

134. Fergusson, J., — Tree and Serpent Worship, Ed.2, London, 1873.

135. Frank Kermode — English Pastoral Poetry, George G. Harrap and Co. Ltd., London, 1952.

136. Fyre, N. [illegible] — Anatomy of Criticism, New Jersey Princeton, University Press, Princeton, 1957.

137. Garratt, G.T., — The Legacy of India, First Published, The Clarendon Press, Oxford, 1937.

138. Garraty, J.A., — The Nature of Biography, Newyork, 1957.

139. Goethe, — The Story of a Man, Vol.I, Newyork, 1949.

140. Gopinatha Rao, T.A., — History of Sri Vaisnavas, University of Madras, 1923.

141. Haridas Bhattacharyaya, The Cultural Heritage of India, Vol. IV, Second Edition, The Ramakrishna Mission Institute of Culture, Calcutta, 1956.

142. Herford, C.G. English Pastorals, Blackie and Sons Ltd., London, 1906.

143. Hudson, W.H., An Introduction to the Study of Literature, George G. Harrap and Co. Ltd., London, 1968.

144. Hutton, J., Caste in India, Madras, 1961.

145. Ilakkuvanar, C., Tamil Language, Ed.1, S.I.S.S.W., Publishing Society, Madras, 1961.

146. Ilakkuvanar, C., Tholkappiyam with Critical Studies, Madurai, 1963.

147. Jain, S.A., Shakespeare's conception of Ideal womanhood, Madras, 1948.

148. John Livingston Lowes, Convention and Revolt in Poetry, Second Edition, Constable & Co. Ltd., London, 1930.

149. Kanagasabai Pillai, V., The Tamils Eighteen Hundred years ago, S.I.S.S.W., Publishing Society, Madras, 1959.

150. Krishnaswami Aiyangar, S., The Beginnings of South Indian History, Madras, 1918.

151. Laurence Binyon, Landscape in English Art and Poetry, London, 1931.

152. Lewis, C.S., The Allegory of love, Oxford, 1936.

153. Lyon, P.H.B., The Discovery of Poetry, 1941.

154. Manickam, V.Sp., The Tamil concept of Love in Ahattinai, Ed.1, S.I.S.S.W., Publishing Society, Madras, 1962.

155. Marineli Peter, V., Pastoral, Methuen & Co. Ltd., 1971.

156. Maurice Valency In Praise of love, The Macmillan Co., Newyork, 1958.

157. Meenakshi Sundaram, T.P., Mullai-p-pattu, First Published, Orient Longmans Private Ltd., Madras, 1958.

158. Meenakshi Sundaram, T.P., A History of Tamil Literature, Annamalai University, Annamalai Nagar, 1965.

159. Neelakanda Sastry, K.A., A. History of South India, Oxford University Press, Madras, 1955.

160. Neelakanda S stry, K.A., Foreign Notices of South India University of Madras, 1939.

161. Neelakanda Sastry, K.A., History of India, Part I, Second Edition, Madras, 1953.

162. Otto Jespersen, Growth and structure of the English Language, Basil Black well, Oxford, 1940.

163. Pal. B.P. and Krishnamurthy S.K., Flowering shrubs, Indian Council of Agricultural Research, New Delhi, 1967.

164. Panikkar, K.M., A Survey of Indian History, Second Edition, Asia Publishing House, Calcutta, 1954.

165. Panikkar, K.M., Geographical Factors in Indian History, Bombay, 1955.

166. Pillai, K.K., A Social History of the Tamils, Part I, University of Madras, 1969.

167. Pillai, S.K., The Ancient Tamils, Part I, Madras, 1934.

168. Purnalingam Pillai, M.S., Tamil Literature, Tinnevelly, 1929.

169. Purnalingam Pillai, M.S., Tamil India, First Edition, S.I.SS.W. Publiching Society, Madras, 1927.

170. Ramachandra Dikshitar, V.R., Studies in Tamil Literature and History, Uzac & Co., London, 1930.

171. Ramachandra Dikshitar, V.R., Origin and spread of the Tamils, Ed.1, S.I.SS.W. Publishing Society, Madras, 1971.

172. Richards, I.A., Principles of Literary Criticism, Twelfth impression, Routledge and Kegan paul Ltd., London, 1950.

173. Sethu Pillai, R.P., Words and their significance, University of Madras, 1953.

174. Shorip J.C., Poetic Interpretation of Nature, Cambridge, 1877.

175. Sivaraja Pillai, K.N., The Chronology of the early Tamils, University of Madras, 1932.

176. Somasundaram Pillai, J.M., Two thousand years of Tamil Literature Madras, 1959.

177. Srinivas Iyengar, P.T., History of the Tamils, Kumaraswamy Naidu and Son, Madras, 1929.

178. Srinivasa Pillai, K.S., History of Tamil, Madras, 1922.

179. Subramanian, N. Sangam Polity, Asia Publishing House, Madras, 1966.

180. Thaninayagam, S., Landscape and Poetry, Second Edition, Asia Publishing House, Madras, 1966.

181. Tucker, T.G. Judgment and appreciation of Literature, Second Edition, Melbourne University Press, Macmillan & Co. Ltd., Melbourne, 1926.

182. Varadarajan, M., The Treatment of Nature in Sangam Literature, Ed.2, S.I.S.S.W., Publishing Society, Madras, 1969.

183. Varadaraja Iyer, E.S., Tholkappiyam-Poruladikaram, Vol.I. Part I - II, Annamalai Nagar, 1948.

184. Vyankatacharya Upadhye, The Ritusamhara of Kalidas, Vaman Yashwant & Co., Girgaon, Bombay, 1916.

185. William Hazlitt, Lectures on English Poets, Reprint, J.M. Dent, & Sons Ltd., London, 1939.

186. Winchester C.T., Some Principles of Literary Criticism, Fourth Edition, The Macmillan Company, London, 1950.

PERIODICALS SEMINARS ETC.

187. Encyclopaedia Britannica, Vol. 4, London, 1777.

188. Everyman's Encyclopaedia, Vol. 3, London, 1931-32.

189. (a) Glimpse of Tamilology, Trichy, 1968.

190. Journal of Tamil Studies. Vol. I, No.1; Madras, April 1969, September, 1972.

191. Oxford Dictionary, Vol. III and X, Oxford, 1897, 1928.

192. Proceedings of the Second International Conference Seminar of Tamil Studies, Kualalumpur, Malaysia, April, 1966.

193. Tamil Culture, Vol. I, No.1; Vol.XII, Madras, July-September, 1966.

194. Tamil Lexicon, Vol. VI, Madras, 1936.

195. Tamilian Antiquary, Vol. 5, Trichy, 1909.



A CRITICAL STUDY OF MULLAI-T-TINAI IN SANGAM LITERATURE

A THESIS RE-SUBMITTED FOR THE DEGREE OF
DOCTOR OF PHILOSOPHY
OF THE
UNIVERSITY OF MADRAS

OCTOBER 1977

BY

J. ANNAMALAI, M. A.,
ASSISTANT PROFESSOR OF TAMIL
PRESIDENCY COLLEGE,
MADRAS - 600 005

[மனிதன் வேறு இயற்கை வேறு அல்ல. மனிதனும் இயற்கையும் பெற்ற ஒன்றுபட்ட வாழ்வு, இன்று தேய்ந்து தொலைந்தது. இவ்வாறாய்ச் சிதைந்து தப்பாற் பட்டதொன்று.] இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பின் பெற்ற பொற்கால வாழ்வை — இத்தனைச்செல்வத்தை — அரிய விழுப்பில், அதற்குப் பெருந்துணையாய் விளங்குவன சங்க இலக்கியங்கள்.

சங்க இலக்கியங்களைப் புனைந்தபுலவர்கள் புனைந்தனவின் முதல், கரு, உரிப்பொருள்களை மற்றும் கண்டு — சித்தரித்த நிறைவு பெற்ற உயர்ந்த உள்ளங்களைக் கொண்டவர்கள். சிலர், தனிச் செய்த சிறிய பொருள்களையும் எழுதச் செய்தனர். வேறு சிலர், வள்ளை மெய்யப்பதுகளை விரும்பிப் போற்றினர். நம்தொடும் நாள் நயத்தை விளக்கிய பெருமை அவர்தம் படைப்புகளுக்கே உண்டு.

புலவர்தம் பாடுபொருள்கள், அவர்தம் சொந்த அநுபவமாய், நேர்முக அநுபவமாய் விளங்கும் பேறுடையன. அவ்வநுபவமே பாட்டின் உயிராய் உருவெடுத்தது. அவ்வுயிர் நிறைவுக்கே அழகும் புறமும்.

புலவர்தம் வருணனைகள் உயிரோட்டம் உடையன. வருணனையின் மரபுச் செய்திகள் இல்லை. பல்லில நில வருணனை அவர்தம் பேரறிவிற்குச் சீர் உரைகள். அவற்றின் நுட்பம் செம்மை வருணனைகள் உள்ளத்தை ஈர்க்கும். கற்போரைக் காமுறச் செய்யும்; கவி நடம் புரியச் செய்யும்.

புலவர்தம் காலமும் மாலையும் தரும் எழிலோவியங்கள் பலப்பல. காலமும் மாலையும் இணைந்த வரும் பாடல்கள்தாம் எத்தனை அழகு! அச்சமும் அமைதியும் கலந்த பெருமிதக்காட்சிகளாய் — காதற்காட்சிகளாய் — திணைக்குத்தொறும் நிலாவும் பேறுடையன; வலியும் பொலிவும் பெறுவன.

மாபோரின் கடவுட்காட்சி கைபுனைந்தியற்றா இயற்கையோடு இயைந்த ஒரேக் காட்சி. அவர்களின் துய்மைக் காட்சியும் அவர்தம் கோலமும் பண்டை வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் சிறப்புடையன. அவர்க்கே உரித்தான 'ஏறுகோடல்' காதற்களமாய், வீரக்களமாய் விளங்கும் காலக் கண்ணாடியின் மறுமுகமாம்.

புலவர்தம் செடி கொடி மரங்கள், தெரிந்தவற்றை உள்ளபடியே உள்ளவாறு கூறும் உண்மைப் பிரதிபலிப்புகள் (Realism)உரிப்பொருளாம் இலக்கியத்தின் பின்னணியாய், (Background of the theme)பிரிக்க முடியாததாய் (inseparable) தலைவன் தலைவியர் தம் இன்ப துன்பங்களில் பெரும்பங்கு வகிக்கும் பெருமையுடையன. மனிதன் எதையும் தனியாய் அனுபவிக்கவில்லை; பிறவற்றையும் அதில் பங்கு பெறச் செய்தான் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு, செடி கொடி மரங்கள்.

ஐம்புலம் பண்பும் முல்லை மாந்தர்க்கு ஒரு கவின். அவர்தம் கற்பனை உணர்ச்சிகளின் பிறப்பிடம். ஆங்கிலக் கவிஞர்கள் Ode to Autumn, Ode to Nightingale, the Daffodils என்ற தனியாகப் பாடி, தனித்துவம் கண்டார். ஆனால், முல்லைப் புலவர்களோ, மாந்தர் கற்பனைகள் மறைந்தும் இணைந்தும் ஒன்றும் கண்டார்கள். இயற்கைக்காட்சி, பிற உலகு காணத் தவிடைக்கக் காட்சி.

மாந்தர் படைப்பில் புலவர்கள் பெறும் அனுபவங்கள் பல. அனுபவம் இயற்கையோடு இயைந்தொன்றுதலின், 'நாடு, ஊர், இனம்' என்ற வேறுபாட்டிற்கு அங்கு இடமில்லை. இவ் வேறுபாடற்ற காதலர்களிடமும் மன ஒற்றுமைக்கும் சிறந்த எடுத்துக்காட்டானவர் முல்லைத்திணை மாந்தர்.

உவமை நலம், 'வினை, பயன், மெய், உரு' என நான்காய் விரியும் ஒரு திசைகாட்டி. முதல், கரு, உரிப்பொருள்களில் விரியும் நலத்தால் என்னே! 'பொருளோ! உவமையா!' என்ற மயக்க உணர்வு உவமைநலத்தின் சாறு எனக் கூறும் பெருமையன. 'நிலவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே' என்னும் கருத்தமைப்பு உவமை நலம்.

உப்புப் பழையது; ஆனால், அதன் சுவையோ, என்றும் புதியது. இது பழக்க வழக்கத்தில் காணும் உண்மைச் செய்தி. பழமையின் ஒளி விளக்கு, பழக்கவழக்கம். (Illumination of the past)என்னும் கலையால் விளையும் பண்பும் நாகரிகமும் பழக்கவழக்கத்தின் எதிரொலிகளே.

உண்மை தனியரசாய்க் கோலோச்சுமிடம், அறிவியல்; உண்மை கற்பனையோடு இயைந்து கோலோச்சுமிடம், கலையியல். இவ் வரலாற்றுக் குறிப்புகள் தரும் உண்மைப் பாடம். மூவேந்தர்கள் அழியவில்லை; ஆனால், அவர்தம் புகழுடம்பும் அறநெறியும் மாயா வரம் பெற்றவை. அவர்தம் நாடும் ஊரும் அவற்றின் இடம் பெறும் போர்களும் காலம்

காட்டும் வரலாற்றுப் பெட்டகங்கள். அன்றைய மக்கள் வாழ்வும் நாளை வாழ்வும் இன்றைய மக்கள் வாழ்வில் இணைந்த ஒரு தலைப்புகள். அதனால்தான், ஒரு புலவர்,

'வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு'

எனப் பாடிப் புகழ்ந்தார்.

புலவர்கள் எந்நிலையோ எண்ணங்களையும் காட்சிகளையும் மனத்திலே கொண்டவர்கள். கால வெள்ளத்தில் அவையாவும் சொல்லோவியமாய் உருவெடுப்பதை அவர்தம் படைப்புகளில் சிறக்கக் காண்கிறோம். இது முல்லைத்திணைப் புலவர்களின் சிறப்பமைதி.

இந்த நூலில் எட்டுடைய எண்ணங்களும் ஒப்பு நோக்கிய கருத்துகளும் பகுதி தோறும் சொல்லப்பட்டுள்ளன. முதற்கண், முதற்பகுதியில், [முல்லை நிலம் முல்லைப்பூவால் பெயர் பெற்றமை, 'நானிலத்துள் முல்லை முதல் நிலமாய் விளங்குதல், முல்லை நிலத்தைக் குறிக்க பிறிதாகப் 'புறவு' என்ற சொல் வழங்கப்பட்டமை,] கார் காலம் பெறும் இடங்கள், வகைகளின் தனி நிலை, மாலைக்காலம் பெற்றிடத்தின் தனிச்சிறப்புகள், மாயோன் முதன்மை, ஆயர் பெறும் பெயர்களின் ஒப்பாய்வு, ஆநிரை மேய்த்தல், உறவு ஆகியவற்றில் பெறும் தொன்மைச் சிறப்பு, சங்க நூல்களுள் முல்லைக்கலியில் மட்டும் காணும் ஏறு தழுவல், முல்லைக்கலி பாடல்களுக்கும் பிற முல்லைத்திணைப் பாடல்களுக்கும் உள்ள வேறுபட்ட நிலைகள், ஏறுகளின் ஒப்பாய்வு, மலர்களில் முல்லை பெறும் ஒப்புயர்வற்ற நிலை, முல்லை மலர் தரும் வேறுபட்ட பொருட்குறிப்புகள், பிடவம், தளவம், தோன்றியினம் ஆகியவற்றின் சிறப்பியல்புகள், கொன்றை, குருந்தம் பெறும் தனி நிலைகள். காயாவின் வண்ண ஒப்பாய்வு, புதல் பிற மலர்களால் பெறும் அழகுக்காட்சி, முல்லைப்பாடல்களில் காணும் பிற நிலைகளின் செடி கொடி மரங்கள், மானினத்தில் இரலையினம் பெறும் ஒப்பாய்வு, இரலை வாழ்வியல், பிற நிலைகளில் காணும் விலங்கினங்கள், கானக் கோழியும் மஞ்ஞையும் பெறுமிடம், மஞ்ஞையின் தனிச் சிறப்பு, பிற நிலைகளில் காணும் பறவையினத் தொகுதிகள் கூறப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதியில், கூற்றுகளில் தலைவன் கூற்றின் தனித்தன்மை, கூற்று மிக்கு வரும் நூல்கள், பாடிய புலவர்கள், தலைவன் கூற்றுகளின் சிறப்பாய்வு; முல்லை நிலத்தலைவர்களாக ஆயர் இடம் பெறல், தலைவி கூற்றுகளின் பகுப்பாய்வு, கூற்று மிக்கு வரும் நூல்கள், பாடிய புலவர்கள், தலைவி பெறும் பெயர்கள், ஆற்றாமையைத் தோழியிடம் கூறும் தனி நிலை, தோழி கூற்றுகளின் வகைகள். கூற்று மிக்கு வரும் நூல்கள், பாடிய புலவர்கள், தலைவியை ஆற்றுவிக்கும் சொற்றிறம், செவிலி முதல் பரத்தை வரை உள்ள ஏனைய கூற்றுகளின் சிறப்பாய்வுகள் ஆகியவை இயம்பப்பட்டுள்ளன.

மூன்றாம் பகுதியில், உவமை நலம் பெறுமிடம், இதிகாசமும் புராணங்களும் பெறும் உவமை நிலை, பழந்தமிழ் வழக்கங்கள் பெறும் பல்வேறு துறைகளின் சிறப்பாய்வு, வரலாற்றில் மன்னர்கள், குடை முரசு, ஊர்கள் பெறுமிடம், முல்லைத்திணைப் புலவர்களின் மொத்த எண்ணிக்கை, முல்லைத்திணையை மட்டும் பாடிய புலவர்கள், பெண்பாற்புலவர்கள், ஐம்பது புலவர்களின் சிறப்பாய்வுகள், பத்துப்பாட்டின் நப்பூதனார், நக்கீரனார் பெறும் சிறப்பிடம் ஆகியவைகள் கூறப்பட்டுள்ளன.

'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும்' என்ற பாரதியின் வாக்கு, சங்க இலக்கியத்தில் காணும் முல்லைத்திணைப் பாடல்களின் வலிவும் பொலிவும் பெற்று விளங்குகிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.